2784

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL. LXIII NO. 3 and 4

March 26 and 27

1984

D
V2ll,31 N84
N84.63.3&4.1
136245

2445 / 30/1/85

வெளியீடு 31-12-84]
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
11 APR
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எண் 3

[Issued 31-12-84

2784

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 26, 1984 - தொகுதி LXIII எண் 3
Monday, the 26th March 1984 - Volume LXIII No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

ஒ
Y211,3 N84
N84.53.3 நி4.31
136245
சென்னை-600 009.

# உள்ளடக்கம்.

26—3—1984

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள். .. .. 551—585

2. தகவல் கோரல்—
(அ) அரசு ஊழியர்களுக்கு மார்ச் மாத ஊதியத்தை, அம்மாத இறுதிக்குள் வழங்குவது. .. .. .. 585—586
(ஆ) உறுப்பினர் பழைய விடுதியில் கொசுத் தொல்லை. .. .. .. 586
(இ) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் குறித்து .. .. .. .. 586

3. ஒத்திவைப்புத் தீர்மானம் —
மதுரை, திருச்சி சிறைகளிலுள்ள கைதிகளின் உண்ணா நோன்பு போராட்டம் .. .. 586—591

4. கவன ஈர்ப்புகள்—
(அ) செங்கோட்டை அரசு மேல் நிலைப்பள்ளி மாணவர்கள் போராட்டம் .. .. 591—594
(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு நூல் வழங்குவது .. .. 594—596

5. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—தொடர்ச்சி— 596—696
(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை ..
(ஆ) கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. ..
(இ) கோரிக்கை எண். 46—இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. .. ..

D 2 A 26—1

(ஈ) கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்

| | | |
|---|---|---|
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் | .. | 598-599, 668—694 |
| திரு. ந. சிவஞானம் .. .. | .. | 599—605 |
| திரு. வே. இரா. ஜெயராமன் .. | .. | 605—610 |
| திரு. பாபு ஜனார்த்தனன் .. | .. | 610—615 |
| திரு. எம். சின்னசாமி .. .. | .. | 615—620 |
| திரு. டி. மணி .. .. | .. | 620—625 |
| திரு. செ. செம்மலை .. .. | .. | 625—630 |
| திரு. செ. சிவசாமி .. .. | .. | 630—636 |
| திரு. எஸ். டி. உகம்சந்த் .. | .. | 636—641 |
| திரு. கே. தனுக்கொடித் தேவர் .. | .. | 641—646 |
| திரு. மு.ப. முனுசாமி .. .. | .. | 646—649 |
| திரு. ஏ. தங்கராசு .. .. | .. | 649—654 |
| திரு. நா சுந்தரராஜ் .. .. | .. | 654—668 |

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 696

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1984 மார்ச் 26, திங்கட்கிழமை

பங்குனி 13, ருத்ரோத்காரி-திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கு இவ்வைந்து".

நோயில்லாது இருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்;

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ள நிர்வாக ஆலோசனைத் திட்டம்.

417— (*வினா எண் 12231) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தொடங்கிய நிர்வாக ஆலோசனைத் திட்டத்தின் கீழ் 1979-ம் ஆண்டிலிருந்து இதுவரை அரசுக்கு வரப்பெற்றுள்ள ஆலோசனைகள் எத்தனை?

(ஆ) பரிசு வழங்கப்பட்ட ஆலோசனைகள் எத்தனை?

(இ) அவை என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 326;

(ஆ) 2.

(இ) (i) சேலம், அரசு வட்டார அச்சகத்தின் இளநிலை இயந்திரக் கம்மியர் திரு. வி. மாணிக்கம் அவர்கள் பட்டைகளை இணைப்பதற்கு கொக்கிகளைப் பயன்படுத்துவதற்கு பதிலாக

[1984 மார்ச் 26

பசையைப் பயன்படுத்தலாம் என்ற ஆலோசனைக் குறிப்பை
அளித்தார். இதன் விளைவாக ஆண்டொன்றுக்கு ரூ. 575
செலவு மிச்சம் ஏற்படுகிறது. எனவே, அவருக்கு ரொக்க
ஊக்கத் தொகை அளிக்கலாம் என்று எழுதுபொருள் அச்சுத்
துறை இயக்குநரின் பரிந்துரையின் பேரில் 'அவருக்கு ரூ. 200
மட்டும் இத்திட்டத்தின் கீழ் 1982-ம் ஆண்டு பரிசாக வழங்கப்
பட்டது.

(ii) ஒப்பந்தப் புள்ளி (Tender) கொடுக்கப்படும் பொழுது
செலுத்தப்படும் வைப்புத் தொகையை டெண்டர்கள்
பிரிக்கப்பட்டு அதே நாளில் அவைகளின் மீது முடிவு எடுக்கப்
படும்பொழுது அன்றே வைப்புத் தொகையை திரும்ப கொடுக்
கப்பட வேண்டும் என வழிமுறைகள் உள்ளன. ஒப்பந்தப்
புள்ளி பிரிக்கப்படும் நாளுக்கு சில தினங்கள் கழித்து
அவைகளின் மேல் முடிவு எடுக்கப்பட்டாலும் வைப்புத்
தொகையை திருப்பி கொடுப்பதில் மேற்கண்ட வழிமுறை
களை கடைப்பிடிக்க வேண்டும் என திருச்சி சிறை
கட்டிடங்கள் வட்ட கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு.
கே. ஆர். ஈஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ள ஆலோசனையை
அரசு ஏற்றுக் கொண்டு அவருக்கு ஊக்கம் தரும் வகையில்
தகுதி சான்றிதழ் (Merit Certificate) அளித்துள்ளது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த பரிசு இரண்டு பேர்களுக்கு வழங்கப்பட்ட
தாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இன்றைக்கு
நம்முடைய அரசினுடைய கோப்புகள் துரிதமாக நகருவதற்கு
அப்படிப்பட்ட ஆலோசனைகள் ஏதாவது வரப்பெற்று
இருக்கிறதா? அப்படிப்பட்ட ஆலோசனைகள் வருவதற்கு
வேண்டிய சாத்தியக் கூறுகளை ஏற்படுத்துவதற்கு அமைச்சர்
அவர்கள் முன்வருவார்களா? இன்னும் இந்தத் தொகையை
அதிகமாக கூட்டிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள்
முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட ஆலோசனை
களில் அப்படிப்பட்ட ஆலோசனைகள் இருக்கிறதா, இல்லையா
என்ற விவரக்குறிப்புகள் என்னிடம் இல்லை. ஆனால்
அதுபற்றி சிறந்த ஆலோசனைகளை எடுத்துச் சொல்லி,
அரசுக்கு வழிவகைகள் ஏற்படுத்துகின்ற சூழ்நிலையை ஏற்
படுத்துவார்களானால், அதுபற்றி அரசு ஏற்றுக்கொள்ளக்
கூடும். அந்த வகையில் அவரவர்கள் செய்கின்ற அத்தகைய
சிபாரிசுகளின் அடிப்படையில், சிக்கனம் ஏற்படுத்தவும் விரை
வாக காரியங்கள் நடைபெறவும், சிறப்பாக காரியங்கள்



1984 மார்ச் 26]

நடைபெறவும், அதிலே வீணாக்குதல், கெடுதல்கள் இல்லாது
தவிர்க்கும் முறையில், சிறந்த ஆலோசனைகளின் பேரில், அதனால்
நமக்கு ஏற்படுகின்ற வருவாயைக் கணக்கில் எடுத்துக் கொண்டு,
நாம் பரிசுத் தொகை வழங்கவும், அதிலே உச்சகட்டமாக
ஆயிரம் ரூபாய் வரையிலும் நாம் கொடுக்கலாம் என்று இப்
போது வைத்திருக்கிறோம். அதுவும், ஏற்கெனவே அரசுத்
துறையில் பணியாற்றுகின்றவர்கள் இப்படிப்பட்ட ஆலோசனை
களைத் தரலாம் என்று இருந்தது. அண்மையிலே அரசுத்துறை
யில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், பொதுமக்களாக இருப்பவர்
களில் கூட, ஆலோசனைகள் சொல்வார்களேயானால், அப்
படிப்பட்ட ஆலோசனைகள் கவனிக்கப்படும் என்று சொல்லப்
பட்டிருக்கிறது.

திரு. ந. சிவஞானம் : தனியார்களுக்கு கொடுப்பதற்கு
அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, இந்த ஆலோசனைகளை ஏற்கெனவே அரசுத்
துறையிலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் தரவேண்டும் என்ற
முறையிலே முதலிலே விதி இருந்தது. இப்போது பொது மக்
களில் யாரும் எந்தத் துறையைப்பற்றியும் எந்த ஆலோசனை
களையும் தரலாம் என்ற முறையிலே ஆக்கப்பட்டிருக்கிறது.
அப்படிப்பட்ட ஏற்பாடுகளை தனியார் துறைகளிலே அந்த்
அந்தத் துறைகளில் வைத்து இருக்கிறார்கள். அந்த அந்த
நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்கள் சிறந்த ஆலோசனை
களைச் சொல்லிய காரணத்தினால் அந்த நிறுவனங்களுக்கு பல
லட்சக்கணக்கான ரூபாய் லாபம் ஈட்டித்தருகிற நிலைமை வரு
கிறபோது அப்படி ஆலோசனை தந்தவர்களுக்கு இன்சன்டிவ்
தருகிற முறை பிற நாடுகளிலே ஜப்பான் போன்ற
நாடுகளிலே வைத்திருக்கிறார்கள், ஏராளமான ஆலோசனை
களை பெறுகிறார்கள், நல்ல ஆலோசனைகளைத் தருகிறவர்
களுக்கு ஏராளமான பரிசுகளைத் தருகிறார்கள். இங்கே
தனியார் நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கும் ஊக்
கம் தருகின்ற முறையிலே முயற்சிகளை மேற்கொள்வார்களா
னால் அவர்களுடைய அனுபவத்தை வைத்து அவர்கள் அனு
பவத்தின் அடிப்படையில் தருகின்ற ஆலோசனைகளை பெறு
கின்ற முயற்சிகளை மேற்கொள்வார்களானால் சிறந்த ஆலோ
சனைகள் வரக்கூடும். அரசுக்கும் நல்ல ஆலோசனைகள் வரு
மானால் மிக மிக நல்லது. ஆனால் நமக்கு இப்போது வருகிற
ஆலோசனைகள் மிகமிகக் குறைவு. சிறந்த ஆலோசனைகளும்
அவ்வளவாக வருவதில்லை என்று சொல்லப்படுகிறது. ஆண்
டிற்கு ஐந்து ஆலோசனைகள் வரையில்தான் தரலாம் என்று
வைத்து இருக்கிறார்கள். சிறந்த ஆலோசனைகளைப் பெறுகின்ற
முறையிலே எத்தனை பேர்கள் வேண்டுமானாலும் எத்தனை
ஆலோசனைகளை வேண்டுமானாலும் பெறுகிற அளவுக்கு

[1984 மார்ச் 26

அதற்கு வைத்திருக்கிற ஒரு வரைமுறையை நீக்கலாம் என்று நானே கருதிக் கொண்டிருக்கிறேன். ஆகவே அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளிலே அப்படிப்பட்ட முறை பரவலாக இருக்கிறது என்று சொன்னார்கள். அங்கே இருக்கிற ஏற் பாட்டின் மூலமாக பொதுமக்களும் மற்றவர்களும் விரிவாகச் சொல்கிறார்கள். உதாரணமாக ஜப்பான் நாட்டிலே உள்ள டயாட்டோ நிறுவனத்திற்கு ஒரு வருஷத்தில் ஐந்து லட்சம் ஆலோசனைகள் வருகின்றன. அதிலே 5 ஆயிரம் ஆலோசனை களுக்கு பரிசுகள் வழங்குவதாகச் சொன்னார்கள். அங்கே சஜஷன் பாக்ஸ் வைக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போல இங்கேயும் கட்டாயமாக தனியார் துறையிலும் அரசுத் துறையிலும் சஜஷன் பாக்ஸ் வைக்கக்கூடிய ஏற்பாடு களைச் செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்று அந்த முறையினை இந்த நாட்டிலும் உள்ளபடியே ஊக்கப்படுத்தவேண்டும். குறிப்பாக அரசு சார்பில் நடத்தப் படுகிற பொது நிறுவனங்களிலும் அரசுத்துறையும் தனியார் துறையும் சேர்ந்து நடத்துகின்ற கூட்டு நிறுவனங்களிலும் சிறந்த ஆலோசனைகள் வருமேயானால் சிக்கன நடவடிக்கை களை மேற்கொள்ளவோ நல்ல வருவாயை லாபத்தை ஈட்டித் தரவோ நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். ஜப்பான் நாட் டிலே எல்லா நிறுவனங்களிலேயும் சிறந்த ஊக்கத் தொகை அதற்காகத் தரப்படுகிறது. இந்த முறை மேல்நாடுகளிலேயும் இருக்கிறது. ஒரு தொழிலாளி சிறந்த ஆலோசனையைச் சொல்லி அதன்மூலமாக பல லட்சக்கணக்கான ரூபாய் அந்த நிறு வனத்திற்கு லாபம் வருமேயானால் அவனுக்கு பரிசு கொடுப்ப தோடு அவனுடைய படத்தை அங்கே போட்டு அவனுடைய ஆலோசனையினால் தான் இந்த நிறுவனத்திற்கு இவ்வளவு பெரிய லாபம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரியப்படுத்திவிடு கிறார்கள். இது மற்றத் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தருகிறமுறையில் அமைந்திருக்கிறது. அந்த முறை தமிழகத்திலே உள்ள பொது நிறுவனங்களாலும் கடைப் பிடிக்கப்படுமானால் சட்டமன்ற உறுப்பினர்களும் நானும் எடுத்துச் சொன்னதின் அடிப்படையில் மிக முனைப்போடு செயல்படுவார்களேயானால் தமிழகத்திலே தொழில் திறனும் தொழில் நுட்பத்திறனும் மேலும் வளருவதற்கு வாய்ப்புக் கள் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 448 மற் றும் 449 சேர்த்து எடுத்துக்கொள்ளப்பெறுகின்றன.



1984 மார்ச் 26]

பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு பங்கீட்டுக் கடை அமைக்கும் திட்டம்.

448 —(*வினா எண். 21476) திரு. மா. சின்னராசு : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :—

உணவுப் பொருள் விநியோகத்தில் பொது மக்களுக்கு ஏற் பட்டுள்ள சிரமங்களைக் குறைக்க ஒவ்வொரு ஐந்நூறு கார்டு களுக்கு ஒரு பங்கீட்டுக் கடை என்று அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தற்பொழுது கிராமங்களைப் பொறுத்த வரை சராசரியாக 500 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை வீதம் திறக்கப் பட்டுள்ளன. நகர்ப்புறங்களைப் பொறுத்த வரை ஒரு நியாய விலைக் கடையில் 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கக் கூடாதென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு 500 குடும்ப அட்டைகளுக்கும் ஒரு நியாயவிலைக் கடை அமைப்பதா னால் செலவு மிக அதிகமாகும்.

449—(*வினா எண். 21799) திரு. இரா. முத்தையா : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) வருவாய்க் கிராமம் ஒன்றுக்கு ஒரு நியாய விலைக் கடை என்னும் திட்டத்தை பெரிய கிராமங்களின் விஷயத்தில் தளர்த்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சு. புரலன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது கிராமப் பகுதியிலே 500 கார்டுகளுக்கு ஒரு கடையும் நகரப் பகுதியில் 2 ஆயிரம் அட்டை களுக்கு ஒரு கடையும் ஏற்படுத்தப்பட்டு விநியோகம் செய்யப் படுவதாகச் சொன்னார்கள். நகரப் பகுதிகளிலே 2 ஆயிரம் அட்டைகள் ஒரு கடைக்குப் போட்டிருப்பதால் அந்தக் கடை சிறியதாக இருப்பதால் அதிகமான கூட்டம் ஏற்படுவதால் வாங்குகிற பொருளை சரியாக எடை போட்டு வாங்குகிற நிலை இல்லாமல் இருக்கிறது. பொருள் குறைந்து போகிறது என்ற புகார்கள் ஏராளமாக வருகின்றன. தற்போதுள்ள சிறு கடை களை பெரிய கடைகளாக வைக்க அரசு ஆவன செய்யுமா ?

[1984 மார்ச் 26

(முற்பகல் 9-10).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப் புறங்களைப் பொறுத்த வரையில் 16,053 நியாய விலைக் கடைகளும், நகர்ப் புறங்களில் 1,956 நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தம் 18,009 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. கிராமப்புறங்களைப் பொறுத்த வரையில் சராசரி ஒவ்வொரு கடைக்கும் 500 கார்டுகளுக்கு கீழே சில இடங்களில் முன்னூற்றுச் சில்லரை, 400, 500, 600 என்று வைத்து இருப்பதற்கு காரணம் அவர்கள் சில தொலைவுக்கு நடந்து வந்து சில ஊர்களில் வாங்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக அங்கே எண்ணிக்கை குறைவாக இருக்கிறது.

நகர்ப்புறங்களைப் பொறுத்த வரையில் அப்படி தொலை தூரம் நடந்து சென்று வாங்க வேண்டிய நிலை இல்லாத அளவுக்கு நமக்கு கடைகள் இருக்கின்றன. அந்த கடைகளில் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று வந்து வாங்குகிறவர்களுக்கு அதிக கஷ்டம் இல்லாத அளவுக்கும், வந்து வாங்குகிறவர்களுக்கு அதிக நேரக் கேடு வராத அளவுக்கு அவர்களுக்கு என்று பல முறைகள் வகுக்கப்பட்டு அதனால் 2,000 கார்டுகளுக்கு போகலாம் என்று சொல்லியிருக்கிறோம். சில இடங்களில் 1,000 1,500, 1,600 என்று கார்டுகள் இருக்கின்றன. அப்படி 2,000 கார்டுகளுக்கு மேல் போகுமானால் அதை இரண்டாகப் பிரித்து ஒவ்வொரு கடைக்கும் 1,000 கார்டுகள் என்று வைக்கலாம் என்று சொல்லி இருக்கிறோம்.

கூடுதலாக கடைகளை நகர்ப்புறங்களில் வைக்கலாம் என்று விருப்பம் தான். நகர்ப் புறங்களில் ஏற்படுகிற இன்னொரு கஷ்டம் என்ன என்றால் அந்தக் கடைகளை பிரித்துத் தருவதற்கு போதுமான இடம் கிடைக்கவில்லை. இடத்தை வாடகைக்கு தர முன் வருவது இல்லை. அப்படி வந்தாலும் கூட நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வைக்கப்படும் கடைக்கு இடம் தேவை என்றால் இடம் தர மறுக்கிறார்கள். ஏன் என்றால் எண்ணெய் சொட்டும். அதனால் அந்தக் கட்டிடம் வீணாகப் போய்விடும் ஏராளமான கூட்டம் வந்து அங்கே க்யூவில் நிற்கும். எங்களுக்கு பிரைவசி இருக்காது, எங்களுடைய வீட்டுப் பெண்கள் வெளியே போய் வர முடியாத சூழ்நிலை இருக்கும். சில நேரங்களில் எங்களுடைய வீட்டுக்குள்ளேயே வந்து கூட்டம் உட்கார்ந்து விடும். இப்படிப்பட்ட நெருக்கடியின் காரணமாக சில இடங்களில் இந்தக் கடைகளுக்கு வாடகைக்கு இடம் கிடைப்பதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே அந்த அந்த தொகுதியில் ஒத்துழைப்புத் தருவார்களானால் இன்னும் சில பல கடைகளைத் துவக்கலாம். 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு 16 ஆயிரத்து சில்லறை கடைகள் இருந்தன. கடந்த 1 ஆண்டுக்குள் 17 ஆயிரத்து சில்லறை கடைகள் ஏற்படுத்தப்



1984 மார்ச் 26]

பட்டு இருக்கின்றன. தேவையான பொது இடங்களில் பொதுவாக திறந்து மக்களுக்கு நலன் செய்ய வேண்டும் என்பது தான் எங்களுடைய எண்ணம். ஆனால் சென்னையைப் பொறுத்த வரையில் க்யூ அதிகமாக இருக்கிறது என்று சொல்லி Staggering System கொண்டு வந்து ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்கள் வாங்க வேண்டும் என்றும் இப்படி 4, 5 நாட்களில் வாங்காதவர்கள் கடைசி நாளான 6-வது நாளில் குறிப்பிட்ட அந்த வாரத்தில் விட்டுப் போன பொருட்களை சேர்த்து வாங்கலாம் என்றும் நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்கு மேலும் சில நல்ல யோசனைகள் வருமானால் அதையும் ஆராய அரசு ஆயத்தமாக இருக்கிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது கிராமங்களில் 500 அட்டைகளுக்கு ஒரு கடை என்று சொன்னார்கள். கிராமங்களில் 3 கிலோ மீட்டர் அதற்கு மேலும் தூரம் நடந்து கூட போய் அந்த ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. குறைந்த பட்சம் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் போகாமல் கிராமங்களில் அந்தக் கடைகளை அமைத்துக் கொடுக்கவும், நகர்ப் புறங்களில் 2,000 கார்டுகள் என்று இருப்பதை குறைந்தபட்சம் அதனுடைய பாதி அளவுக்கு குறைத்து கடைகளை ஏற்படுத்துவதற்கும் அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்? இப்படி 2,000 கார்டுகள் இருப்பதால் பல பேர்களுக்கு மாத கடைசி வரைக்கும் அவர்களுக்கு சில பொருட்கள் கிடைக்காமலேயே போய்விடுகிறது. இதை நீக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் கூறியது போல் மாண்புமிகு உறுப்பினர் எண்ணத்தின் அடிப்படையில் சென்னையைப் பொறுத்த வரையில் 1,000, 1,500 கார்டுகள் என்ற அளவுக்கு இருந்தால் ஓரளவுக்கு சமாளிக்கலாம். அதில் இருக்கின்ற சங்கடம் இடம் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்குமானால் நகர்ப் புறங்களைப் பொறுத்த வரையில் 1,000, 1,500 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற அளவுக்கு கூடுமானவரை செய்யலாம் என்ற எண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த முயற்சியை மேற்கொள்ளலாம். கிராமப்புறங்களைப் பொறுத்த வரையில் அவர்கள் வந்து வாங்குகிற தொலைவை குறைக்க வேண்டும் என்றும் சில நேரங்களில் வெள்ளம் ஏற்படுமானால் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் துண்டித்து விடுகிற சூழ்நிலை ஏற்பட்டு ஒரு பகுதியில் வாழ்கின்ற மக்கள் அந்த இடத்திற்கு போக முடியாத சூழ்நிலை ஏற்படுமானால் அந்த இடத்தில் வைக்கலாம் என்று கருதுகிறோம். அந்த இடங்களில் வைக்க கார்டுகளின் எண்ணிக்கை குறைந்த அளவு 200, 300 என்று வருமானால் அங்கு ஒரு

[1984 மார்ச் 26

கடை ஏற்படுத்துவதற்கு, ஒரு கடையை இரண்டாகப் பிரிப்ப
தற்கு வசதி வாய்ப்புகள் ஏற்படக் கூடும். அப்படிப்பட்ட சூழ்
நிலை ஏற்படுமானால் தீவிரமாக அரசு ஆராய்ந்து மேற்
கொண்டு நடவடிக்கை எடுக்கும். இந்தக் கடைகளை எல்லாம்
நடத்துவதற்கு நமக்கு 5 கோடி ரூபாய் நிர்வாகச் செலவு ஆகி
றது: இதிலே மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று
சொன்னோம். இருந்தாலும் பாதியாவது ஏற்றுக்கொள்ள
வேண்டும் என்று பல மாநில அரசுகள் வற்புறுத்தியும் அவர்கள்
உங்களுடைய பொறுப்பு என்று சொல்லி விட்டார்கள். இருந்
தாலும் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற காரணத்
தால் இந்த செலவையும் கருதாமல் நாம் இந்த முயற்சியில் ஈடு
பட்டு வருகிறோம்.

**திரு. ரா. கு. பெருமாள் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்கள் 500 அட்டைகளுக்கு ஒரு கடை என்று
சொன்னார்கள். நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரை
யில் 500 அட்டைகள் உள்ள கடைகளும், 1,000 அட்டைகள்
உள்ள கடைகளும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அவ்
வாறு இருப்பதன் காரணத்தால், கிராமங்களில் உள்ள மக்கள்
வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே கிரா
மங்களில் தனித்தனியாக கடைகள் அமைப்பது என்று இல்லா
விட்டாலும் கூட பணிபுரிகின்ற அலுவலர்கள் ஒரு கிராமத்திற்கு
இரண்டு தினங்கள் என்ற அளவிலே கிராமங்களுக்கே சென்று
பொருட்களைக்கொண்டு போய் கொடுத்து பொதுமக்களுக்கு
உதவி செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்திலே
ஆயிரம் கார்டுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லி
அங்கே கடையை ஆரம்பித்து நடத்துவதற்கு இடத்தையும்
கொடுக்க உதவி செய்வார்களேயானால் அவ்வாறு அங்கே
ஏற்பாடு செய்யலாம். வேறு பல இடங்களில் பண்டங்களைக்
கொண்டுபோய் கொடுக்கின்ற முயற்சி ஏற்படுத்த முடியுமா
என்று கேட்டார்கள். அதுபற்றிய செயற்குறிப்பு அரசினி
டத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, 500 கார்டுகளுக்கு ஒரு நியாயவிலைக் கடை இருப்
பதாகச் சொன்னார்கள். இந்தக் கடைகளைப் பொறுத்த
வரையில் அவை மக்களுக்கு மிகத் தேவையான ஒரு கடை
யாகும். ஆனால் என்னுடைய தொகுதியிலே தொண்டியக்
காட்டிலே இருந்து 4 கிலோ மீட்டர் வரவேண்டி இருக்கின்றது.
நம்மங்குறிச்சியிலே இருந்து 5 கிலோ மீட்டர் வர வேண்டி இருக்
கின்றது. இதுபற்றி பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரி
களிடத்திலே எழுதிக் கேட்டதற்குப் பிறகும் கூட சர்க்கார்
அனுமதிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தால்
அப்படி அனுமதி கொடுக்காத இடங்களைப் பொறுத்த



1984 மார்ச் 26]

வரையிலே 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் என்ற அளவுக்கு
வராமல் வாரம் இரண்டு முறை அங்கே கொண்டுபோய் கொடுக்
கின்ற வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, நான் முதலிலே சொன்னபடி 5 கிலோ மீட்டர், 4
கிலோ மீட்டர் போக வேண்டிய அளவுக்கு இல்லாமல் பார்த்
துக்கொள்கின்ற வகையிலே கார்டுகளை ஒதுக்கி கடைகளுக்கு
கொடுக்க வேண்டும் என்றும் அப்படி கார்டுகளை ஒதுக்குகின்ற
போது ஒரு கணிசமான அளவுக்காவது கார்டு எண்ணிக்கை
வரவேண்டும். அதாவது ஒரு கடைக்கு குறைந்தது 300 கார்டு
என்ற அளவுக்காவது வேண்டும். அந்த முறையில் ஏற்படுத்த
வேண்டும் என்ற அளவுக்கு, பல இடங்களில் 600, 700 கார்டு
கள் என்று இருந்தால் அவற்றிலே இருந்து ஒரு 100 கார்டு
களைப் பிரித்து அண்மையில் கடைகள் இருக்கின்ற அளவுக்குக்
கொண்டுவரலாம். அதற்கான நடவடிக்கைகளைச் செய்தால்,
எல்லோரும் சென்று வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

ஆனால் கொண்டுபோய் கொடுப்பது என்றால் இப்போது
இருப்பதைவிட இன்னும் சங்கடங்களும், சீர்கேடுகளும்
அதிகமாகத்தான் ஆகும். ஆகவே கடைகள் வைப்பதற்கு
ஏற்பாடுகள் செய்வதுதான் நல்லது. அதற்கான அளவுக்கு
ஒத்துக்கொள்ளப்பட்டு வந்தால் உரிய மாவட்ட வழங்குதுறை
அதிகாரிகளைக் கண்டு அவரிடத்திலே சொல்லி அதற்கான
ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்:** தலைவர் அவர்களே,
கிராமங்களிலே இருக்கக்கூடிய நியாயவிலைக் கடைகளில் ஒரே
நபர் இருந்து அவர்தான் பில் போடவேண்டும், அவர்தான்
பணத்தை வசூலிக்கவேண்டும் என்று இப்படி ஒரு நபரே
எல்லா வேலைகளையும் செய்கின்ற காரணத்தால்தான் பொது
மக்கள் நீண்ட வரிசையில் நின்று பொருட்களை வாங்க
வேண்டும் என்ற வகையில் தாமதம் ஏற்படுகின்றது. எனவே
கிராமங்களில் இருக்கக்கூடிய நியாய விலைக் கடைகளில் கூடு
தலாக ஒருவரை வேலைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்
பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, இப்போதே இருக்கின்ற பொருளாதார நெருக்
கடியினைக் காண்கின்றபோது அதிகச் செலவு ஏற்படுகின்றது
என்பதைப் பார்க்கிறோம். இப்போது அந்தக் கடைகளில்
இருப்பவர்களுக்கே நாம் அதிகபட்சமாகச் சம்பளம் 150
ரூபாய்தான் தருகிறோம். அதுவே மிக, மிகக் குறைவு என்று
மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் சொல்லி இருக்கிறார்கள்.
ரேஷன் பொருட்களை மட்டும் கொடுப்பதன் காரணத்தால்,
அதாவது அவற்றை சப்ஸிடைஸ்ட் ரேட்டிலே தருவதன்
காரணத்தால் இலாபத்தை அங்கே நாம் எதிர்பார்க்க முடியாது.

நஷ்டம் தான் ஏற்படும். ஆகவேதான் நாம் ஒரு முயற்சியை
மேற்கொண்டிருக்கிறோம். வேறு பல பொருட்களையும் அங்கே
விற்கின்ற அளவுக்கு அதாவது சோப்பு, சீப்பு, கண்ணாடி
என்ற வகையிலே ஒரு நாற்பது, ஐம்பது பொருட்களை அங்கே
விற்பதற்கு ஏற்பாடு செய்தால் அதிலே ஓரளவுக்கு இலாபம்
ஈட்ட இயலும். அந்த வகையிலே அந்தப் பொருட்களையும்
சேர்த்து விற்கின்ற அளவுக்குச் செய்தால் மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் கூறுவது போல் ஒருவருக்கு பதிலாக இரண்டு
பேர், மூன்று பேர் கூட வைக்கலாம். ஆகவேதான் அரசு
அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

**திருமதி தா. இராசாம்பாள் :** தலைவர் அவர்களே, பச்சை
மலையில் உள்ள கிராமங்கள் சுமார் 100 சதுர மைல்கள்
பரந்து கிடப்பதால் அங்கே விசேஷமாக மேலும் இரண்டு
கடைகளைத் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா? நரிப்பாடி,
மண்மலைப் பாவேக்காடு ஆகிய மலை அடிவாரங்களில் கடை
கள் திறக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்பு
கிறேன். மலைவாழ் மக்களின் நலன் கருதி இந்தக் கடை
களைத் திறக்க அரசு முன்வருமா?

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் கூறுவது போன்று பச்சை மலைப் பகுதி நிலைமைகளை
யும், அங்கிருக்கின்ற ஊர்களின் நிலைமைகளையும் பற்றி இப்
போது எனக்கு தெளிவாக தெரிகின்ற நிலைமையில் இல்லை.
அதுபற்றி கோரிக்கையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
எழுதி தருவார்களேயானால், அந்த சம்பந்தப்பட்ட மாவட்ட
அதிகாரிகளுக்கு அனுப்பி எந்த அளவுக்கு நடவடிக்கை
எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அரசு ஆராய்ந்து தக்க
நடவடிக்கையை எடுக்கும்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவர் அவர்களே,
குடும்பங்களுக்கு கார்டுகள் வழங்கிய நேரத்திலே,
அதைப்பெறவேண்டிய நேரத்திலே எழுதி பெற்றுக்கொள்ள
தவறிய காரணத்தால், மீண்டும் வந்து கேட்கிறபோது, தற்
போது குடும்பக் கார்டுகள் புதியதாக வழங்கப்படுவதில்லை,
அரசாங்கத்திடம் தான் மனு போட்டு பெற வேண்டும் என்று
வட்ட, மாவட்ட கார்டுகள் வழங்குத்துறை அதிகாரிகள்
சொல்கிறார்களே, ஆகவே, உண்மையிலேயே பாதிக்கப்பட்டு,
குடும்பக் கார்டுகள் பெறாமல் இருக்கிறவர்களுக்கு குடும்பக்
கார்டுகளை வழங்குவதற்கு வாய்ப்பினை உருவாக்கித் தர
அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சரியான ஒரு
கணக்கெடுப்பு எடுக்கப்பட்டு, அந்த கணக்குகளின் அடிப்படை





யில்தான் ஆங்காங்கு குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.
அப்படி குடும்பக் கார்டுகள் எக்காரணம் கொண்டாவது ஒரு
வருக்கு கிடைக்கவில்லை ,ன்று சொன்னால், அல்லது
ஒரு பகுதி மக்களுக்கு கிடைக்கவில்லை என்று
சொன்னால், அப்படி கிடைக்கவில்லை என்பதை தக்க
ஆதாரங்களோடு எடுத்து நிரூபிப்பார்களேயானால், அந்த
இடத்திலேயே மீண்டும் பரிசீலித்து வழங்குவதற்கான
பொறுப்பை தான் அரசு தற்போது ஏற்றுக்கொண்டிருக்கிறது.
ஏனென்றால் குடும்பக் கார்டுகள் கிடைக்கவில்லை என்று
சொல்லி வேற்று பெயர்கள், மாற்றுப் பெயர்கள் எல்லாம்
கொடுத்து, ஒவ்வொருவரும் 5, 6 கார்டுகளை வைத்துக்
கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகை
யினால்தான் இத்தகைய கட்டுத் திட்டங்கள் வைக்கப்பட்டி
ருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்
சொன்னதைப் போன்று, உள்ளபடியே அவர்களுக்கு ஏற்
கெனவே வழங்கப்படவில்லை என்பதற்கான காரணங்களை
ஆதாரத்தோடு நிரூபிப்பார்களேயானால், அப்படிப்பட்ட
பிரச்னைகள் கவனிக்கப்படும்.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்களை மானிய
மாக தந்து, ஏழை எளிய மக்களுக்கு உணவு பங்கீட்டு முறை
யில் அரிசியை வழங்குகிற இந்த அரசுக்கு, 500 கார்டுகளுக்கு
ஒரு நியாய விலைக்கடைகளை ஏற்படுத்தினால், அதிகமான
அளவில் பொருளாதார நஷ்டம் ஏற்படுகிறதா? அப்படி நஷ்
டம் ஏற்படுகிறது என்றால், எவ்வளவு கோடி ஏற்படுகிறது?
அதைப் பொருட்படுத்தாமல், அரசு 500 கார்டுகளுக்கு ஒரு
நியாயவிலைக் கடையை ஏற்படுத்த முன் வருமா? கோவாப்பி
ரேட்டிவ் ஸ்டோர்ஸ் மூலமாக வழங்கப்படுகின்ற அந்த
உணவுப் பொருள்களை எல்லாம் மார்க்கெட்டிங் சொசைட்டி
மூலமாக வழங்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆயிரம் கார்டுகளுக்கே
ஆட்களைக் கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறபோது,
500 கார்டுகளுக்கு எப்படி முடியும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து நான்
ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது விளக்கமாக
எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்தக் கார்டுகளைப் பொறுத்
தவரையில் மக்களுக்கு பயன்படும்படியான அளவுக்கு ஒவ்
வொரு கடையிலும், கார்டுகளை ஒதுக்கீடு செய்ய வேண்டும்
என்பதுதான். தற்போது லாபம் ஏற்படுவதற்கு எந்த வகை
யிலும் வழி இல்லை. இந்தக் கடைகளை நடத்துவதற்காக
மாதம் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய்க்கு மேல் ஆகிறது.

நார்மல் பிரீயட்டாக இருக்குமானால், அதாவது சாதாரண
காலத்தில் 40, 45 கோடி அளவிற்கு நாம் சப்சிடி கொடுக்க
வேண்டியிருக்கிறது. வறட்சி காலத்தில் கிட்டத்தட்ட 110
கோடி ரூபாய்க்கு நாம் மானியம் தந்து பணியாற்ற வேண்டிய
அவசியம் வந்தது. மக்களுடைய இன்றியமையாத தேவை
களை நிறைவேற்றுவதற்காக நான் முதலிலே சொன்ன
கட்டுப்பாட்டின் அடிப்படையிலே முயற்சிகளை இந்த அரசு
எடுத்து வருகிறது.

**திரு. மு. ப. முனுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,
தர்மபுரி மாவட்டத்தில் இரும்பத்தூர் ஊராட்சியில் வைப்பம்
பட்டி கிராமத்தில் கார்டுகள் வழங்கப்படவேயில்லை. கேட்
டால், கீழ் மட்டத்தில் உள்ள அதிகாரிகள், அரசாங்கத்திட
மிருந்து எங்களுக்கு குடும்பக் கார்டுகள் கிடைக்கவில்லை என்று
சொல்லுகிறார்கள். அரசு அவர்களுக்கு குடும்பக் கார்டுகளை
வழங்கும் வகையில், கீழ் மட்ட அதிகாரிகளுக்கு அந்தக்
குடும்பக் கார்டுகளை அனுப்ப முன் வருமா என்று அறிய
விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி
ஒரு குறிப்பிட்ட ஒன்றியத்திற்கோ ஒரு கிராமத்திற்கோ
போய்ச் சேரவில்லை என்றால், கணக்கு எடுக்கப்போனவர்
கள் முதலிலே அந்த இடத்திற்கு போவதற்கு தவறியிருப்பார்
கள் என்று ஆகும். அப்படிப்பட்ட சூழ்நிலையை, யாருக்கு
குமே கிடைக்கவில்லை என்று நிரூபிப்பார்களேயானால், அப்
படிப்பட்ட இடங்களில் மறு பரிசீலனை செய்து குடும்பக்
கார்டுகள் வழங்க வாய்ப்பு ஏற்படும். அண்மையிலே 2, 3
ஆண்டுகளுக்கு முன்பு இதற்காக தனி முயற்சி எடுத்து கணக்
கெடுத்து சரி செய்ததினால் ஓரளவிற்கு இருக்கிறது. தமிழ
கத்திலே கிட்டத்தட்ட மக்கள் தொகை $4\frac{3}{4}$ கோடி என்றா
லும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கணக்கிட்டபோது $6\frac{1}{4}$
கோடி மக்களுக்கு கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மீதி
மக்கள் எங்கேயிருந்து வந்தார்கள் என்று தெரியவில்லை என்ற
காரணத்தால்தான், அந்தக் கார்டுகளை நீக்கிவிட்டு, மறுபடி
யும் ஒரு முறை அதை ஆராய்ந்து கச்சிதமாக எடுத்துக் கொண்டு
வருகிறோம். சில இடங்களில் தவறு இருப்பதால்
குறைபாடு இருப்பதால், அவற்றை ஆராய்ந்துந் தரவேண்டும்
என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதுபோல்
ஒரு கிராமமே கணக்கிலே எடுக்கப்படாமல் விடுபட்டிருக்கு
மானால், அதைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு
ஆயத்தமாக இருக்கும்.

**திரு. வே. இராஜசேகரன் :** பேரவைத் தலைவர் அவர்
களே, சென்னை நகரில் கொடுக்கப்பட்ட குடும்பக் கார்டுகள்
முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பதை நிரூபிப்





பதற்காக சர்ப்பரைஸ் விசிட் என்று விசேஷமான குழுவை நிய
மித்து வீடுகளுக்குச் சென்று அந்த கார்டுகளை மறுபரிசீலனை செய்
யக்கூடிய ஒரு நிகழ்ச்சி நடந்து வருகிறது. சென்னை நகரத்தில்
காலையில் கூலி வேலைக்குச் செல்பவர்களும், அரசு அலுவலகங்
களுக்குச் செல்பவர்களும் அதிகமாக இருக்கிற காரணத்தால்,
உணவுப் பங்கீட்டுத் துறை அதிகாரிகள் போய் சரி பார்க்கின்ற
நேரங்களிலே அந்த வீடுகள் பூட்டப்பட்டிருப்பதன் காரணமாக,
வீடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன என்று செய்தியைப் பதிவு
செய்து கொண்டு குடும்பக் கார்டுக்கு விநியோகிக்கக்கூடிய அந்த
ரேஷன் கடைகளிலே அந்தக் கார்டுகளுக்கு விநியோகம் நிறுத்தி
வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அவர்கள் வாங்கச் செல்லும்
போது உங்களுக்கு விநியோகம் செய்யக் கூடிய உத்தரவை அர
சிடமிருந்து மீண்டும் பெற்று வாருங்கள் என்று சொல்கிறார்கள்.
ஆகவே, அரசு அலுவலர்களும் கூலி வேலைக்குச் செல்லக்கூடிய
வர்களும் இருக்கிற பகுதிகளில் சரிபார்க்கும் அலுவலர்கள்
நேரத்தைக் கணக்கிட்டு மாற்று நேரத்தில் சரிபார்க்கும்
நிகழ்ச்சியைச் செய்யவேண்டும். நிறுத்தப்பட்டிருக்கிற கார்டு
களுக்கு......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செய்வார்களா என்று
கேள்வி கேட்க வேண்டும். வினா—விடை நேரத்தில் வேண்டு
கோள் கூடாது.

**திரு. வே. இராஜசேகரன் :** உத்தரவை அமைச்சர் பிறப்பிப்
பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்காங்கு சில இடங்களிலே
தவறுகள் நடைபெறுகின்றன என்று சிலபல புகார்கள் வருகின்
றன. அந்தக் கடைகளிலே இருப்பவர்கள் மூலமாகவும் வருகின்
றன; அறிந்தவர்கள் மூலமாகவும் வருகின்றன ; சில பேர்
களுக்கு இரண்டு தடவை கொடுக்கிறீர்களே என்கிற தோரணை
யில் சிலர் கேட்கிறபொழுது, புகார் வருகின்றது. அப்படிப்
புகார் அனுப்பப்படுகிறபொழுது, அந்த இடத்திலேதான் அதி
காரிகளை அனுப்பி, விசாரித்து, சரியா, இல்லையா என்று
விசாரிக்க முடியும். ஒரு புகார் வருகிற இடத்தில் எல்லா வீடு
களிலும் போய் பாருங்கள் என்று சொல்வது சரியாக இருக்காது.
அதிகாரிகள் போகின்ற காலத்தில் வீடுகள் பூட்டியே இருக்குமா
னால், பூட்டப்பட்டிருக்கும் வீட்டிலே கொடுப்பதற்கில்லை என்று
தான் முடிவுக்கு வருவார்கள். அதிகாரிகள் வருகிறார்கள் என்று
தெரிந்து கொண்டு அநேகம் பேர்கள் பூட்டிவிட்டுப் போய்
விடுகிறார்கள். இப்படிப்பட்டவைகளை எல்லாம் கூடுமான
வரையில் தவிர்ப்பதற்காக, புகார்கள் மீது நடவடிக்கை
எடுப்பதற்கு மற்றவர்களும் உதவி செய்வார்களானால்—
அதிலே நியாயப்படி நடக்க வேண்டுமென்பதுதான். நியாய
மற்ற முறையில் யாருக்கும் போகக்கூடாது என்ற நோக்கத்தை
வைத்திருக்கிறோம். அதற்கான நடவடிக்கைகளை அரசு
தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ரெவின்யூ கிராமத்தில் இரண்டாவது கடையைத் திறப்பதற்கான கஷ்டங்களையும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதே நேரத்தில் அந்த ரெவின்யூ கிராமத்தில் உள்ள மக்கள் அதிக தூரம் நடந்து சென்று நியாய விலைக் கடைகளில் பொருள்களை வாங்கச் சங்கடங்கள் இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். எனவே, இந்தச் சங்கடங்களையும் கஷ்டங்களையும் போக்குவதற்கு, இருக்கிற கடைகளிலே, வாரத்திலே ஒரு சில நாட்களில் மொபைல் ஷாப், அதாவது, நடமாடும் நியாயவிலைக் கடைகளாக மாற்றுவதற்கு அரசு முன் வருமா? அப்படிப்பட்ட ஆலோசனையை மத்திய அரசு, நமது அரசுக்கு, ஏதாவது வழங்கி உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே கூறியபடி, அந்தக் கடைகளுக்கு ஆகும் செலவில் பாதியையாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்று மத்திய அரசைக் கேட்டு, மத்திய அரசு அதற்கு இணங்கவில்லை. நடமாடும் கடைகளை வைப்பது என்றால், இன்னும் கூடுதலான செலவுகளை ஏற்படுத்துவதற்குத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழிவகை கூறுகிறார்கள். அதிலே எப்படி செம்மைப்படுத்தலாம் என்ற அளவுக்குத்தான் அரசு சிந்தித்து அதற்கான முடிவை எடுப்பதற்கு ஆயத்தப் பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வருவாய் கிராமத்திற்கு ஒரு கடை என்கின்ற வீதத்திலேதான் கிராமங்களிலே கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. சில கிராமங்கள் 300 மக்களைக் கொண்ட கிராமங்களாக இருக்கின்றன. சில கிராமங்கள் 2,000 மக்கள் கொண்ட கிராமங்களாக இருக்கின்றன. அதைப் போக்குவதற்கு கார்டு அடிப்படையில்—ஏற்கனவே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு விதியை உருவாக்கினார்கள்—அதைப் பின்பற்றியாவது பெரிய கிராமங்களில் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஒரு கடை என்ற வகையில் அரசினுடைய செலவைக் குறைத்து, இருக்கிற கடைகளைக் கொஞ்சம் மாற்றியமைத்து, பெரிய கிராமங்களிலே இருக்கிற கடைகளை விரிவாக்குவதற்கான முயற்சியை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் வருவாய் கிராமங்கள் 12,600 இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே 16,053 கடைகள் வைத்திருக்கிறோம் என்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று சில வருவாய் கிராமங்களிலே இரண்டு கடைகள், மூன்று கடைகள் வைத்திருக்கிறோம். அவர்கள் சொல்வது போல குறிப்பிட்ட





கிராமங்களிலே அதிகமான மக்கள் இருக்காலம். சில கிராமங்களிலே மக்கள் குறைவாக இருக்கலாம். இன்னும் சொல்லப் போனால், வருவாய் கிராமங்கள் சிலவற்றில் மக்களே இல்லாத நிலைமை கூட இருக்கின்றன. 60, 70 கிராமங்கள் அவ்வாறு இருக்கின்றன. ஒரு குடும்பமும் இல்லாத வருவாய் கிராமம் கூட இருக்கின்றது. ஆனால், கூடுதலாக வைக்க வேண்டிய இடத்தில், அவசியத்திற்கேற்ப வைத்திருக்கிறோம். 12,600 கிராமங்கள் இருந்தாலும், 16,053 கடைகள் வைத்திருக்கிறோம். நான் முதலிலே சொன்னபடி, தேவைப்படுகிற இடத்தில், அவசியப்படுகிற இடத்தில், அந்தந்த கார்டுகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் அந்தக் கடைகளை வைக்க அரசு முயலும்.

(முற்பகல் 9-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 450, 451, 452 ஆகியவை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

## திரைப்படத் தொழில் ஊழியர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கும் திட்டம்.

453—*(வினா எண். 17093)—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மாநகரில் உள்ள சினிமாத்துறை ஊழியர்களும், துணை நடிகர்களும் தங்களுக்கு நியாயமான ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டு அரசுக்குக் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : உற்பத்தி, வினியோகம் மற்றும் விளம்பரம் உள்ளிட்ட திரைப்படத் தொழில் வேலைக்கு குறைந்த அளவு ஊதியம் முதன் முறையாக 24-11-1982 முதல் நிர்ணயிக்கப்பட்டது. திரையரங்குகளில் வேலைக்கு குறைந்த அளவு ஊதியம் 1977-ல் நிர்ணயிக்கப்பட்டு 16-2-1983 முதல் திருத்தியமைக்சப் பட்டுள்ளன. துணை நடிகர் அல்லது பிற எத்தகைய நடிகருக்கும் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்படவில்லை. குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென்று கோரிக்கை ஏதும் அவர்களிடமிருந்து வரவில்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தத் துணை நடிகர்களுடைய குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு அரசிடம் அவர்கள் கோரிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்று அமைச்சர்

அவர்கள் சொன்னார்கள். துணை நடிகர்கள் அநேகமாக சாதாரண தொழிலாளர்கள் மட்டத்திலே தான் இருக்கிறார்கள். ஒரு மாதத்தில் அவர்களுக்கு பல நாட்கள் வேலையில்லாமல் இருக்கக் கூடிய நிலைமையிருக்கிறது. சாதாரண தொழிலாளர்களுடைய அந்தஸ்திலேயே அவர்கள் இருப்பதால், அவர்களுக்கும் இந்த குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு, அவர்களையும் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு ஏதாவது முயற்சியினை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே திரையரங்குகளில் வேலை செய்பவர்களுக்கு மட்டும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், புரட்சித் தலைவர் அரசு ஏற்பட்ட பின்னர், முதன் முதலாக உற்பத்தி, விநியோகம் மற்றும் விளம்பரம் செய்பவர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் ரமணி சொல்வதுபோல், இந்தத் துணை நடிகர்களுக்கு எல்லாம் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பது என்பது மிகச் சிரமமாக இருக்கும் என்று இந்த அரசு கருதுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்தக் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி, ஒருதடவை ஊதியம் நிர்ணயித்து விட்டால், மறுபடியும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அதைத் திருத்தியமைப்பது என்ற முறையில் அரசு சில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதே மாதிரி ஒரு நிர்ணயிப்பு செய்ய வேண்டுமென்று மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியயவைகளின் தொழிலாளர் நல அமைச்சர்கள் சேர்ந்து அதிலே தீர்மானித்திருக்கிறார்கள். இரண்டு வருஷ காலத்திற்குள் அல்லது 50 புள்ளி விலைவாசி ஏறினால், திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற முடிவுகள் உள்ளன. அந்த முடிவின்படி, இந்த ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரையரங்குகளில் உள்ளவர் களுக்கு 16-2-1983-ல் தான் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. உற்பத்தி, விநியோகம், விளம்பரம் ஆகியவைகளில் உள்ளவர் களுக்கு 24-11-1982-ல் தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 24-11-1982 அன்று நிர்ணயிக்கப்பட்டதும், 16-2-1983-ல் நிர் ணயிக்கப்பட்டதும், இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகவில்லை. சட்டத்திலே 5 ஆண்டுகள் என்றிருக்கிறது. அமைச்சர்கள் மா நாட்டிலே நாங்கள் எல்லாம் கூடி, 50 புள்ளி விலைவாசி உயர்ந்து விட்டால் அல்லது 2 ஆண்டுகள் ஆகிவிட்டால் குறைந்தபட்சம் கூலியை மாற்றியமைக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துள் ளோம். அதை இந்த அரசு கூடுமானவரை பின்பற்றி வருகிறது.





**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாண்டுகள் அல்லது ஐம்பது புள்ளிகள் உயர்ந்தால் குறைந்த பட்சக் கூலியைத் திருத்தியமைக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். 1982 நவம்பரில் விலைவாசி 496 ஆகவும், 1983 டிசம்பரில் 559 ஆகவும் இருக்கிறது. எனவே, இப்படி ஐம்பது புள்ளிகளுக்கு மேலே உயர்ந்திருப்பதால் இதை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுதான் சொன்னேன், கூடுமானவரையில் இதையும் பின் பற்றிச் செயல்பட்டுக் கொண்டு வருகிறோம் என்று.

**குடவாசல் ஒன்றியப் பகுதியிலுள்ள ஊர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.**

454 —*(வினா எண். 18087) **திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம் விளாகம், நல்லிச்சேரி, செகந்நாதபுரம், பல்லவநத்தம், அபிசேகமங்கலம், கடகம்பாடி, நெம்மேலி, அதம்பாவூர், அதம்பாவூர்ப்படுகை, தேதியூர், வில்லியநல்லூர் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் உப்பு நீராக உள்ளதால் நல்ல குடிதண்ணீர் வழங்கவேண்டி அரசுக்கு முறையீடு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட அனைத்துச் சிற்றூர்களுக்கும் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடகம்பாடி நீங்கலாக மற்ற அனைத்துச் சிற்றூர்களிலும் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. கடகம்பாடியில் குடிக்கத் தகுதியான நீர் ஏற்கெனவே உள்ளது.

**தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரை விநியோகம் செய்ய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் திட்டம்.**

455 —*(வினா எண். 18208) **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சேலம் மாவட்டம் தாரமங்கலம் பேரூராட்சியில் குடிநீரைச் சேமித்து விநியோகம் செய்ய ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டிக்கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1984 மார்ச் 26

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, மேட்டூர் அணையிலிருந்து சேலம் நகருக்குக் குடிதண் ணீரை எடுத்துச்செல்லும் வழியில் தாரமங்கலத்திற்கும் அந்தத் தண்ணீர் வினியோகிக்கப்பட்டு வருகிறது. கடந்த முப்பதாண்டுக் காலமாக அப்படி அந்தத் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந் தாலும் ஒரு மணி நேரம்தான் காவேரி நீர் தாரமங்கலத்திற்கு விநியோகம் செய்யப்படுகிறது. ஆனால் இன்றைக்கு ஏற்பட் டிருக்கின்ற மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகக் கூடு தலான தண்ணீர் வசதி தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இப்பொழுது நேரடியாக விநியோகிக்கப்படுகின்ற அந்த முறையை மாற்றி, ஒரு ஓவர் ஹெட் டேங்க் கட்டி அதில் தண்ணீரைத் தேக்குவதன் மூலம் குடிதண்ணீரை ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் கூடுதலாக விநியோகிக்கலாம். ஆகவே, அந்தப் பகுதியின் குடி தண்ணீர்ப் பிரச்னையைப் போக்கும் வகையில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் குடிநீர் வழங்கும் திட்டத் தின்கீழ் இப்பஞ்சாயத்திற்கு விநியோகிக்கப்பட்டு வரும் குடிநீர், பொதுக் குழாய்கள் மூலமாகவும், வீட்டு இணைப்புகள் மூலமாக வும், எந்தவித தடங்கலும் இன்றி விநியோகிக்கப்பட்டு வரு வதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் உத்தேசம் இப்பஞ்சாயத்தால் கைவிடப்பட்டு விட்டது. எனினும், உலக வங்கி கடனுதவித் திட்டத்தின்கீழ் சேலம் குடிநீர்த் திட்டம் அபிவிருத்தியடைந்த பின் தாரமங்கலம் பஞ்சாயத்திற்கு அதிக அளவு குடிநீர் வழங்க இயலும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கொடுக்கப்படுகின்ற வரையில் தற்போது உள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூடுதலாகக் குழாய்க் கிணறுகளை அமைத்துக் தருவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பஞ்சாயத்தால் பெறப் படும் நீர் 41 பொதுக் குழாய்கள் மூலமாவும், வீட்டு இணைப்புகள் மூலமாகவும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இடை யிலே, அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஆலோசனை இப்பொழுது அரசிடத்தில் இல்லை.



1984 மார்ச் 26]

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து தாரமங்கலம், ஓமலூர், சூரமங்கலம், ஆத்தூர் வரையில் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலை யிலுள்ளது ? அதன் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் தரப்படும்.

வேதாரண்யம் ஒன்றியப் பகுதிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

456 —*(வினா எண் 19193) திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேதாரண்யம் ஒன்றியத்திற்குக் குடிநீர் வழங்க கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்பொழுது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

(ஈ) இத்துடன் வேறு பகுதிகள் ஏதும் இணைக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) நடந்து கொண்டிருக்கும் ஆய்வு வேலைகள் முடிந்த பின்னரே மதிப்பீடு நிர்ணயம் செய்ய முடியும்.

(இ) திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப் பட்டதும், செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(ஈ) இத் திட்டத்தில் வேதாரண்யம், ஒன்றியத்திலுள்ள 216 குடியிருப்புகளும் சேர்க்கப்பட்டு தண்ணீர் வழங்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தில் இரண்டாவது கட் டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட ஊராட்சி ஒன்றியம் அது. எனவே, அங்கே நிலத்தடி நீர் இல்லாத காரணத்தால், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, வெளியிடங்களிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற திட்டம் பற்றி ஆய்வு நடப்ப தாகத் தெரிகிறது. ஆகவே, அந்த வேலைகளை விரைவில் முடித்து குடிதண்ணீர் வழங்குவதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிரச்சினையின் முக்கியத்துவத்தை யும், கொடுக்கப்படக்கூடிய குடியிருப்புக்களின் எண்ணிக்கை அதிக

மாக இருப்பதையும் மனத்திற்கொண்டு, எவ்வளவு விரைவிலே இந்தத்திட்டத்தை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொள்ளும்.

(முற்பகல் 9·40)

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப்போல தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்திலும், திருத்துறைப்பூண்டி பேரூராட்சியிலும் குடிநீர் இல்லாமல் இருக்கிற நிலை இருப்பதால் அவைகளையும் சேர்த்து கவனிப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவைகளும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? அல்லது வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியத்திற்கு மட்டும் தனியாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கொடுத்த பதிலில் விரிவாகச் சொல்லி இருக்கிறேன். அதற்கு மேலே சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

**சென்னை இராதாகிருஷ்ண நகர்த் தொகுதியிலுள்ள பகுதிகளுக்கு மேல்நிலைத் தொட்டி மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம்.**

457 —(*வினா எண் 21564) **திரு வே. இராஜசேகரன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை இராதாகிருஷ்ண நகர்த் தொகுதி 21-வது வட்டம் மீனாம்பாள் நகர், பாரதி நகர், ஜீவா நகர், சிசிரந்தபாளையம், மோசபுரம், சுதந்திரபுரம், முதலிய பகுதிகளுக்கு மேல்நிலைத் தொட்டி மூலம் தண்ணீர் வழங்கும் திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) மேற்கண்ட பகுதிகளில் மேல்நிலைத் தொட்டி மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம் இல்லை.

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வே. இராஜசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டம் இல் லையென்று சொன்னார்கள். ஆனால் அதற்காக ஒரு திட்டத்தை வகுத்து ஒரு லட்சத்து 48 ஆயிரம் ரூபாயில் மீனாம்பாள் நகர் பக்கத்தில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சியினுடைய சுகாதார நிலையம் அருகில் அதற்காக இடம் பார்க்கப்பட்டு, அந்தத்





திட்டத்திற்கான காண்ட்ராக்ட்டும் விடப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்படி ஒரு திட்டம் இல்லை யென்று கூறுகிறார்கள். இதிலே எது உண்மை என்று அறிய விரும்புகிறேன். ஏழை மக்கள், அரிசன மக்கள், மாநகராட்சி சுகாதாரத் தொழிலாளர்கள் வாழக்கூடிய கேள்வியிலே கண்ட அந்த இடங்களில் மேல்நிலைத் தொட்டி கட்டுவது மாற்றப்பட்டு, கீழ்நிலைத் தொட்டி கட்டுவதற்கு இடம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடத்தில் கேட்கப்பட்டிருப்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி மேல்நிலை நீர்த்தேக் கத் தொட்டி கட்டுவதைப் பற்றி. நான் அதைத்தான் இல்லை யென்று சொன்னேன். ஆனால் விரிவான ஒரு பதிலை உறுப் பினர் அவர்களுக்கு கொடுக்கலாம் என்று கருதுகிறேன். 21 ஆம் வட்டம் பகுதிக்கு குடிநீர் வசதி செய்ய கீழ்நிலைத் தொட்டி ஒன்றை நிறுவி அதிலிருந்து நீரேற்றம் செய்து விநியோகிக்க சென்னை மாநகராட்சியால் 1977 ஆம் ஆண்டு ஒரு திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ்வேலையில் விநியோகக் குழாய் அமைப்பின் பாதி பகுதி சென்னை மாநகராட்சியால் முடிக்கப் பெற்று, மற்றொரு பகுதி 1978-ல் அமைக்கப் பெற்ற சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தால் நிறைவு செய்யப்பட்டது. விநி யோகக் குழாய்கள் அதாவது டிஸ்ட்ரிபியூஷன் லைன்ஸ். இத் திட்டத்தில் கீழ்நிலைத் தொட்டி கட்டுவதற்கு தேவையான நிலத்தைப் பெறுவதில் தீர்வு காண இயலாமல் இருந்தது. முதன் முதலில் இந்த கீழ் நிலைத் தொட்டி கட்டுவதற்காக ஒதுக்கப் பட்ட நிலத்தில் சென்னை மாநகராட்சியால் ஒரு குழந்தை நல காப்பகம் கட்டப்பட்டது. அதற்கு மாறாக கே.என்.எஸ். டெப்போ அலுவலகம் அருகில் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமாக உள்ள நிலத்தை சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் பெற நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலே குறிப் பிட்ட குடிசைவாழ் பகுதிகளுக்கு குடிநீர் வசதி தற்போது இரும் புத் தொட்டிகள் வைக்கப்பட்டு, லாரிகள் மூலம் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. எனவே கீழ்நிலைத் தொட்டி கட்டுவதற்கு அந்த இடம் விரைவிலே பெறப்பட்டு, அங்கே கட்டி முடித்துவிட்டால் ஏற்கெனவே டிஸ்ட்ரிபியூஷன் லைன்ஸ் இருக் கிறதால் விரைவிலே தண்ணீர் கொடுக்க இயலும்.

**திரு. வே. இராஜசேகரன் :** மாண்புமிகு தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேல்நிலைத் தொட்டி கீழ்நிலைத் தொட்டியாக மாற்றப்பட்டு அதற்காக குடி நீர் வடிகால் வாரியம், மாவட்ட ஆட்சித் தலைவர், மாநக ராட்சி என்று பல்வேறு................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது இல்லை ; 1977 ஆம் ஆண்டிலேயே மாற்றிவிட்டார்கள்.

திரு. வே. இராஜசேகரன் : 1977 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டத் திட்டம் 1984 ஆம் ஆண்டிலும் மாநிலத்தினுடைய தலைநகரான சென்னையில் தண்ணீர் இல்லை. ஏழு ஆண்டுகள் காத்திருக்கிற துர்பாக்கிய நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கூட குடிசைப் பகுதிகள் என்று சொன்னார்கள். அந்தக் குடிசைப்பகுதி மக்களுக்கு இன்னும் எத்தனை ஆண்டுகளில் அல்லது எத்தனை மாதங்களில் கீழ்நிலைத் தொட்டி மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய உத்தரவிடுவார்கள் ? மேலும் அங்கே பதிக்கப்பட்ட பிளாஸ்டிக் குழாய்கள் பல இடங்களில் உடைந்தும், துரு பிடித்தும், உபயோகமற்ற நிலையில் பழுதடைந்து இருக்கின்றன. மேல்நிலைத் தொட்டியோ, அல்லது கீழ்நிலைத் தொட்டியோ கட்டுகிறபோது அங்கே பதிக்கப்பட்டுள்ள உடைந்து போன குழாய்களையும் மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா ? தன்னிறைவுத் திட்டம் என்று பேசுகிறபோது சென்னை நகரிலேயே குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பதில் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ப்ளாஸ்டிக் குழாய் துருப் பிடிக்கிறது என்றால் என்ன செய்வது ? கேள்வியை பொறுப் போடு கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். ஏழு ஆண்டுக் காலமாக அங்கே இருப்பவர்கள் தண்ணீர் இல்லாமல் தவிக்கிறார்கள் என்ற தொனியில் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இல்லை. அங்கே இருக்கக் கூடியவர்களுக்கு தொட்டி வைத்து, இரும்புத் தொட்டிகள் வைத்து லாரிகள் மூலம் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அந்தப் பகுதியில் குழாய்கள் வைத்து அண்டர்-க்ரவுண்ட் டாங்க் வைத்து பப்ளிக் பவுண்டன் மூலம் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதுதான் அந்தத் திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் வந்த சிக்கல், அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் குழந்தைகள் நலக் காப்பகம் கட்டப்பட்டு விட்டது. அந்த அண்டர்-க்ரவுண்ட் டாங்க்கை இன்னொரு இடத்தில்—அதற்கு மாற்று இடத்திற்கு வகை செய்ய ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். ஏற்பாடு செய்து கட்டிய பிறகு கொடுக்கவேண்டும். ஆனால் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைப்பதுபோல் அந்தப்பகுதியில் இருப்பவர்களுக்கு குடிதண்ணீர் இல்லை, குடிதண்ணீர் கொடுக்கப்படவில்லை என்ற எண்ணத்தோடு சொல்லவேண்டாம் என்பதையும் அங்கே இரும்புத் தொட்டிகள் வைத்து குடிநீர் கொடுக்கப்படுகிறது என்பதையும் அதில் ஏதாவது சிரமங்கள் இருக்குமானால், அதைப் பற்றி அவர்கள் சொல்வார்களானால் அது கவனிக்கப்படும். 15 தொட்டிகள் இருக்கின்றன. அதில் நான்கு தொட்டிகளில் தண்ணீர் வருகிறது. 11-ல் தண்ணீர்



வரவில்லை என்று போன் மூலம் சொன்னால் கூட எம்.டி.யிடம் அதைக் கவனியுங்கள் என்று சொல்கிறோம். அந்த டிப்பார்ட்மென்ட் ரொம்ப எஃபிஷியன்ட்டாக பங்க்ஷன் செய்துகொண்டு வருகிறது என்று எல்லோரும் பாராட்டினார்கள். சென்ற வறட்சி ஏற்பட்ட காலத்தில்கூட எல்லா மக்களும் பாராட்டக் கூடிய வகையில் வறட்சி நிவாரணப் பணிகள் நடந்தன என்பதை நீங்கள், உறுப்பினர்கள் எல்லாம்கூட பாராட்டியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தமிழ்நாடு மாநில்க் கூட்டுறவு வங்கியின் கிளைகளை விரிவுபடுத்தும் திட்டம்.

458—(வினா எண். 18700) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியின் கிளைகளை மற்ற மாவட்டங்களிலும் விரிவாக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் கிளைகள் சென்னையில் மட்டும்தான் இருக்கின்றன. இது தமிழ்நாடு அரசாங்கத்தைச் சேர்ந்த வங்கியாக இருப்பதால். இந்த வங்கியில் முதலீடு செய்பவர்களுக்கு அதிக வட்டி கிடைக்கிறது. ஆகவே இதேபோல் மற்ற மாவட்ட தலைநகரங்களிலும் இந்த வங்கியை அமைப்பதற்கு இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இங்கே தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி செய்கிற பணியைத்தான் மாவட்ட அளவில் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் செய்துகொண்டிருக்கின்றன. சென்னையில் மட்டும்தான் அதற்கு கிளைகள் உண்டு. இதை மாவட்ட அளவில் திறந்தால் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் பாதிப்பிற்கு உள்ளாகும்.

### சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டும்திட்டம்.

459—(*வினா எண் 21494) திரு. இ. கணேசன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆறாவது திட்டத்தில் வீடுகள் கட்ட தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) மத்திய அரசு உதவி உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நெசவாளர் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் 5,000 புதிய வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் சேலம் மாவட்டத்தில் 518 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 442 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 76 வீடுகள் கட்ட வேலை துவங்கப்பட்டுள்ளன.

(இ) நேரடியாக மத்திய அரசு உதவியில்லை. ஆனால் மத்திய அரசு நிறுவனமான '' ஹட்கோ '' மூலம் கடன் பெறப் படுகிறது.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகக் குறைவான அளவில் இருப்பதால் கைத்தறி நெசவாளர்களுக்கு இப்போது கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. ஆகவே அதிகமான தொகை ஒதுக்கீடு செய்து போது மான அளவிற்கு கைத்தறி நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான்ஏற்கனவே சொன்னேன். இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 'டார்கெட்' 5,000 வீடுகள். ஒரு வீடு கட்ட ரூ. 8,000 என்றிருந்தது இப்போது ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டு 5,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவ்வளவுதான் ஒதுக்கீடு.

திரு. இ. கணேசன் : தலைவர் அவர்களே, தமிழக அரசு கொடுப்பது போல் மத்திய அரசும் மானியமாக சுமார் ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத் துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, மாநில அரசு ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்கிறது. அதேபோல் மைய அரசும் ஓரளவிற்கு கணிசமான தொகை மானி யமாக நெசவாளர் பெரு மக்களுக்கு வீடுகட்டும் திட்டத்தின்கீழ் தரவேண்டும் என்று மையஅரசை இந்த அரசு கேட்டுக் கொண்டி ருக்கிறது. தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 9-50.)

திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் நெசவாளர்களுக்கு 5,000 வீடுகள்





கட்டப்படும் என்று சொன்னார்கள். எந்தெந்த மாவட்டங் களில், எத்தனையெத்தனை வீடுகள் கட்ட உத்தரவிடப் பட்டுள்ளன ? எத்தனை கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலே எத்தனை இடங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்கள் தான் இருக்கின் றன. வேறுகேள்வி போட்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வளவு என்பதைத் தெரிவிக்கலாம்.

திரு. தி. கா. நல்லப்பன் : : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு ஹட்கோ திட்டத்தின் மூலமாக கட்டும் வீடுகளுக்கான கடன் கூட்டுறவு சங்கத்தில் அவர்கள் தொகை செலுத்தியபின்தான் தரப்படுகிறது. அதனால் மானியத் தொகை கொடுக்கப்படுவது காலதாமதம் ஆவதாகச் சொல்லப்படுகிறது. இதை விரைவுபடுத்த அரசு முன்வருமா ? இத்திட்டத்தின்கீழ் இதற்காக தொகை எவ்வாறு ஒதுக்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வீட்டிற்கு ஆகும் மதிப்பீடு 12,000 ரூபாய். இதில் 9,700 ரூ. ஹட்கோவிடமிருந்து கடனாகப் பெறப்படுகிறது. 1,000 ரூ. அரசு மானியமாகத் தருகிறது. மீதமுள்ள 1,300 ரூ. அதனால் பயன் அடையும் விவசாயி கள் செலுத்த வேண்டும். இதுதான் இப்போது நடை முறையிலுள்ள திட்டம்.

கூலி நெசவாளர்கள் நிறைந்த ஊர்களில் தொழிலியல் நெசவாளர்க் கூட்டுறவுச் சங்கங்கள் துவங்கும் திட்டம்.

460—*(வினா எண். 21526)—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூலி நெசவாளர்கள் நிறைந்த ஊர்களில் அரசே Industrial Co-operative Society-கள் துவங்க பரிசீலிக்குமா ?

(ஆ) ஆம் எனில், தமிழ்நாட்டில் எத்தனை நெசவாளர்க் கூட்டுறவுத் தொழிற்சங்கங்கள் துவக்க செயற்குறிப்பு உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) கூலி நெசவாளர் மற்றும் தறியற்ற நெசவாளர்கள் உள்ள பகுதிகளில், சாத்திய முள்ள இடங்களில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் துவங்கத் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப் பட்டு வருகின்றன.

(ஆ) நடப்பு ஆண்டில் (1983-84)-ல் இதுவரை 13 தொழி லியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிதாக துவக்க செயற் குறிப்பு உள்ளது.

[1984 மார்ச் 26

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த கூலி நெசவாளர்களின் இன்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சொசைடி துவக்குவதற்கு, அந்தக் கூலி நெசவாளர்களுடைய பர்சன்டேஜ் அளவிலோ அல்லது கொள்கை அளவிலோ எங்கே நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே துவக்கலாம் என்ற அளவிலோ அல்லது வேறு எந்த முறையில் இந்தக் கொள்கையை அரசு அனுசரிக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். கூலி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் பகுதிகளில், சொந்தமாக தறிகள் இல்லாமல் இருக்கும் நெசவாளர்கள் வாழும் பகுதியில், அவர்களை கூட்டுறவு அமைப்பில் கொண்டுவரவேண்டும் என்ற வகையில் இந்தக் கூட்டுறவு இன்டஸ்டிரியல் வீவர்ஸ் சொசைடி ஆரம்பிக்கப் படுகின்றன. தமிழ்நாட்டில் 146 இடங்களில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 146 சொசைடிகள் ஆரம்பிக்க இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கூலி நெசவாளர்கள் அதிகமாக உள்ள பரமக்குடி, எமனேஸ்வரம் போன்ற பகுதிகளில் ஏற்கனவே இப்படிப்பட்ட சொசைடிகள் உள்ளனவா, அல்லது புதிதாக ஆரம்பிக்க அரசிடம் திட்டம் அல்லது செயற்குறிப்புள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், டபிள்யூ புதுப்பட்டி, வி. துரைசாமிபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய 3 இடங்களில்தான் புதிதாக கூட்டுறவு முறையில் இத்தகைய சொசைடிகள் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைந்து இருக்கும் இன்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சங்கங்களுக்கு அரசு ஒதுக்கும் பணம் கட்டிடங்கள், தறிகள் ஆகியவற்றிற்கே சரியாகிவிடுகிறது என்றும், நூல் சாயம் வாங்கி தொழில் நடத்த நிதி வசதி போதுமானதாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, இவற்றிற்கு அதிகமான பணம் வழங்கவும், இவைகள் உற்பத்தி செய்யும் துணிகளை வாங்கும் கோவாப்டெக்ஸ் மூலம் உடனடியாக பில் (பணம்) வழங்கவும் அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இந்த இன்டஸ்டிரியல் கோவாப்பரேடிவ் சொசைடிகளைப் பொறுத்தவரையில், அவைகள் உற்பத்தி செய்வதை முன்னுரிமை கொடுத்து வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டு, அதற்கான பணமும் அவ்வப்போது பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து அவர்களுக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லாமல் அரசு பார்த்துக் கொள்ளும்.



1984 மாாச் 26]

### கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கி மூலம் 1982-83-ல் I.R.D.P. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை.

461—(*வினா எண். 21579)—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் கூட்டுறவு மத்திய வங்கியின் மூலம் 1982-83-ல் I.R.D.P. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) 1982-83-ல் வழங்கிய குறுகிய காலக் கடன் தொகை எவ்வளவு ?

(இ) இவ்வங்கியின் 1982-83-ல் லாபம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ரூ. 31.60 இலட்சம்.

(ஆ) ரூ. 476.67 இலட்சம்.

(இ) ரூ. 34.06 இலட்சம்.

### திருமங்கலத்தில் இயங்கிடும் கூட்டுறவுத்துறை துணைப் பதிவாளர் அலுவலகத்தை உசிலம்பட்டிக்கு மாற்றும் திட்டம்.

462—*(வினா எண். 22655)—திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் உசிலம்பட்டியிலுள்ள கூட்டுறவுத் துணைப்பதிவாளர் அலுவலகம், திருமங்கலத்திற்கு மாற்றப்பட்டு கூட்டுறவுத் துறை துணைப்பதிவாளர் அலுவலகம் உசிலம்பட்டி இருப்பு திருமங்கலம் என்று இயங்கி வருவது உண்மையா ?

(ஆ) அதை உடனடியாக உசிலம்பட்டிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) உசிலம்பட்டியில் தகுந்த மாற்றுக் கட்டிடம் கிடைத்தவுடன் மாற்றப்படும்.

### சத்துணவுத் திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்ற மகளிர் எண்ணிக்கை.

463—(*வினா எண். 16198)—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச சத்துணவுத் திட்டத்தின் வாயிலாக வேலை வாய்ப்புப் பெற்ற மகளிர் எவ்வளவு பேர் ?

(ஆ) அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணிகளின் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** (அ) குழந்தைகள் நல அமைப்பாளர், சமையலர், உதவியாளர், பள்ளிச் சத்துணவு அமைப்பாளர் ஆகிய பதவிகளில் பெண்கள் மொத்தம் 1,63,555 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(ஆ) சத்துணவு மையங்களை நடத்தும் முழு பொறுப்பும் பள்ளிச் சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் சமையல் வேலையிலும், அதற்கு உதவியாளர்களாகவும் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவரவர்களே, குழந்தைகள் நல மையத்திலும் பள்ளி சத்துணவு மையத்திலும் பிரிவு வாரியாக எவ்வளவு பேர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவரவர்களே, பாலர் பள்ளிகளில் குழந்தைகள் நல அமைப்பாளர்களாக 27,846 பெண்களும் குழந்தைகள் நல உதவியாளர்களாக 55,692 பெண்களும் புதிதாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதில் ஆதிதிராவிடர் மற்றும் பல்வேறு ஜாதியினர் இடம்பெற்றிருக்கிறார்கள். பள்ளிகளில் சமையல் மற்றும் பல பணிகளில் 63,541 சத்துணவு அமைப்பாளர்களும் சத்துணவு உதவியாளர்களாக 16,476 பேர்களும் பணியாற்றுகிறார்கள். ஆக மொத்தம் 1,63,555 பேர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள்.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவரவர்களே, சத்துணவு பற்றிய ஆலோசனை குழுக் கூட்டம் அடிக்கடி நடத்தப்பட வேண்டுமென்பது அரசின் தீர்மானம். ஆனால் அடிக்கடி கூட்டம் நடத்தப்படவில்லை என்ற குறைபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படி ஆலோசனைக் குழுக் கூட்டம் நடக்கும்போது இந்த சத்துணவு மையத்தின் பொறுப்பில் இருக்கிற அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள் கூட அழைக்கப்பட்டு அவர்கள் மத்தியில் ஆலோசனை வழங்கப்படுகிறதா? அப்படி ஆலோசனைகள் வழங்கினால்தான் அவற்றைச் செயல்படுத்த அமைப்பாளர்கள் முனைப்பாக ஈடுபடுவார்கள் என்பதை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவரவர்களே, இந்த சத்துணவுக்கு ஆலோசனைக் குழுக்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை அவ்வப்போது கூடி, சத்துணவுத் திட்டத்தைச் செம்மையாக நடத்த வழிவகைகளைச் சொல்லுகின்றன. அத்தகைய ஆலோசனைக் கூட்டங்களில் சத்துணவு அமைப்பாளர்கள் கலந்துகொண்டு, கூட்டங்களில் என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அதை குறித்துக்கொண்டு வந்து, அதன்படி செயல்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆலோசனைக் குழுக் கூட்டம் எந்த இடத்திலாவது நடக்கவில்லை என்று தெரிவித்தால் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.





**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** தலைவரவர்களே, இந்த சத்துணவு மையத்தில் பணிபுரியும் அமைப்பாளர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு ஜாப் செக்யூரிட்டியும் இல்லை. அதனால் நேற்றைக்குக்கூட அவர்கள் சென்னையில் ஊர்வலம் வந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சத்துணவு மையத்தில் வேலை செய்யும் அமைப்பாளர்களுக்கு ஜாப் செக்யூரிட்டியுடன் அதிக சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவரவர்களே, இது நிரந்தரமான வேலை அன்று. அவர்களுக்கு சம்பளம் என்று தரப்படவில்லை. ஆனரோரியம் என்றுதான் தரப்படுகிறது. இதை ஒரு சமூக நலப் பணியாக ஏற்றுச் செய்ய வேண்டும். இதைப் போன்றுதான் இன்றைக்கு முதியோர் கல்வித் திட்டத்தில் கூட மத்திய அரசு செயல்படுத்துகிறது.

**டாக்டர் கே. சமரசம் :** தலைவரவர்களே, சத்துணவுத் திட்டம் ஏற்பட்ட பிறகு நடைமுறையில் இன்னும் சில மாறுதல்கள் தேவை என்று அரசுக்கு குறிப்பு அனுப்பி வைத்திருப்பது தெரியுமா ? அதன்படி அரசாங்கம் சில மாறுதல்களைச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் உயர்மட்டக் குழுவைக் கூட்டி, பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :** தலைவரவர்களே, உயர்மட்டக் குழுக் கூட்டம் இந்த மாதம் 31-ந் தேதி நடைபெற இருக்கிறது. அதிலே என்ன ஆலோசனை சொல்கிறார்களோ அதைப்பெற்று, எதை எதை செயல்படுத்த முடியுமோ அவைகளைப் பரிசீலனைசெய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10-00.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. நா. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இது நாள் வரை முறைகேடாக நடந்தவர்களில் எத்தனை பேர்களை தற்காலிகமாகவும், நிரந்தரமாகவும் வேலை நீக்கம் செய்திருக்கிறீர்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

[1984 மார்ச் 26

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

### அறக்கட்டளைகட்கு உள்ள நிலங்களைச் சத்துணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தும் திட்டம்.

464—(* வினா எண். 22763)—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறக்கட்டளைகட்கு உள்ள நிலங்களை சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்த அரசு முயற்சி எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அத்தகைய நிலங்கட்கு விதிவிலக்கு அளித்து சத்துணவுத் திட்டத்திற்காக மாற்றிக்கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) மற்றும் (ஆ) : அறக் கட்டளைகட்கு உள்ள நிலங்களைச் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்தும் கருத்துரு அரசு பரிசீலனையில் ஏதும் இல்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறக்கட்டளையிலே இருக்கின்ற நிலங்களைச் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சமூகத்தில் ஏழ்மையில் நிலையில் உள்ள குழந்தைகளுக்கு உதவவேண்டுமென்ற நோக்கத்தோடு தான் இந்தச் சத்துணவுத் திட்டம் குழந்தைகளுக்காக கொண்டு வரப்பட்டது. ஆகவே இந்தத் திட்டத்தை அமைச்சரவர்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்வாரா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அறக்கட்டளைகள் பற்றிய கருத்து ஒரு நல்ல கருத்துதான். எனவே மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, நாட்டிலே இருக்கின்ற பல அறக்கட்டளைகளில் இருக்கின்றவர்கள் அந்தச் சொத்துக்களைத் தாங்களே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட அறக்கட்டளைகளை அரசே எடுத்து, அதிலே வருகிற வருமானத்தைச் சத்துணவுத் திட்டத்திற்குப் பயன்படுத்துமா ? அறநிலையத் துறையின் மூலமாக சத்துணவுத் திட்டத்திற்கு ஏராளமான நன்கொடைகள் வந்ததாக அறிகிறேன். அந்த நன்கொடைகளிலிருந்து சத்துணவுத் திட்டத்திற்காக கட்டடங்கள் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 26]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறக்கட்டளைகளில் தவறுகள் நடைபெறுமேயானால், அவற்றைச் சுட்டிக்காட்டினால், அந்தத் துறை அதன்மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கும். அற நிலையத்துறையின் மூலம் ரூ. 58.40 இலட்சம் நன்கொடைகள் வழங்கப்பட்டன. இது குறித்து ஒரு வழக்கு உயர்நீதிமன்றத்தில் இன்னும் முடிவு ஆகாத நிலையில் இருப்பதால், அந்தத் தொகை யூ.கோ. பாங்கில் வைப்பு நிதியில் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல ஊர்களில் கட்டிடங்கள் இல்லாத காரணத்தினால், கோயில்களை சத்துணவு மையங்களாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசிற்குத் தெரியுமா ? எனவே கோயில்களுக்குச் செல்லக் கூடிய பக்தர்கள் சங்கடப்படுகிறார்களே, அதை மாற்றி சத்துணவு மையங்களைத் தனியாகக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, ஆலயங்கள் கட்டப்படுவது மக்களுடைய தேவைக்காகத்தான். தேவைப்படுகின்ற போது, ஆபத்துக் காலங்களில் அவைகளை உபயோகிப்பதில் தவறில்லை. அதுவும் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்பார்கள். ஆகவே தெய்வம் உலவுகின்ற இடத்தில் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதிலே தவறில்லை.

### நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டம்.

465—(* வினா எண். 19147)—திரு. மு. அப்பாதுரை :
திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் :
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டத்தில் விதவைகளுக்கு முன்னுரிமை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டம் அரசு மருத்துவ மனைகளில் செயல்படுத்தப்படுவதில்லை, ஆகவே விதவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு இடமில்லை.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு மருததுவமனைகளில் நியாய விலையில் இட்லி, தோசை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுவதில்லை என்றும் விதவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதற்கு இடமில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். ஆனால் இன்றைக்கு தனியார்கள், வெளிச் சந்தைகளில் அரசு

மருத்துவ மனைகளில் எக்கச்சக்கமாக கடைகளை வைத்துக் கொண்டு விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அதைத் தடுத்து, இப்படிப்பட்ட விதவைகளுக்கு முன்னுரிமை அளித்து, இட்லி, தோசை போன்றவைகளை விற்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த, இனிமேலாவது நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத் துறையின் மூலமாக அந்த இயக்குநரிடமிருந்து பெறப்புட்ட அறிக்கையின்படி ஒவ்வொரு மருத்துவமனையிலும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சிற்றுண்டிசாலைகள், மற்றும் பெட்டிக் கடைகள் உள்ளன. இப்படி இட்டிலி தோசைக் கடைகள் வைப்பதால், கொசு ஈ, போன்ற பூச்சிகளின் தொல்லைகள் மிகுதியாக இருக்கும் என்றும், அதனால் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது, வியாதிகள் பெருக வாய்ப்பு இருக்கின்றது என்றும் தெரிவித்திருக்கிறர்கள். அதைப் போலவே இந்த இட்லி தோசைகளைச் சாப்பிடக் கூடாது என்று ஒரு கட்டுப்பாட்டை இந்த வியாதியின் காரணமாகக் கூடி மருத்துவர்கள் சொல்லியிருக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட மனத்தூண்டுதல்களின் காரணமாக, சாப்பிட்டால் நல்லது என்று கூட அந்த வியாதியினால் பாதிக்கபுட்டவர்கள் நினைக்கலாம். அந்த அடிப்படையின் காரணமாக, மனத்தூண்டுதல் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையிலேதான், மருத்துவ மனைகளில் இப்படிப்பட்ட இட்லி, தோசைக் கடைகள் வைக்கக் கூடாது என்று இயக்குநர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா வியாதிக்கும் இட்லி, தோசை சாப்பிட வேண்டாம் என்று மருத்துவர்கள் சொல்லவில்லை. ஆனால் இன்றைக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய இந்தப் பெட்டிக் கடைகளுக்கு, அதிலே முன்னுரிமைகள் கொடுத்து, அந்த விதவைப் பெண்களுக்கு, இந்த மாதிரி லைசென்ஸ் கொடுத்து, அந்த அடிப்படையில் தொழில் செய்வதற்கு இனிமேலாவது முன் முயற்சி எடுப்பீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகள், இட்லி, தோசைக் கடைகளை அரசு அலுவலகங்கள், கல்லூரிகள் போன்ற இடங்களிலே வைத்துக் கொள்ளலாம் என்று அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே கூட அவர்கள் தங்களுக்கு வேண்டிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மருத்துவமனைகளைத் தேர்ந்தெடுத்து, வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவர்களால் ஒரு சுகாதாரக் கேடு விளைவிக்கின்ற அளவிற்கு இருக்கக் கூடாது என்று அரசு இதை ஏற்படுத்தக் கூடாது என்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட்லி தோசை விற்பதின் மூலமாக மனத்தூண்டுதல் ஏற்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அரசு தலைமை மருத்துவமனை போன்ற இடங்களில், இதைவிட நோயாளிகளுக்குக் கெடுதலை உண்டாக்கக்கூடிய அளவிற்கு கேன்டீன்கள் நடத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கின்ற அரசு மருத்துவமனைகளில் கேன்டீன்கள் நடத்தப்படுகின்ற விவரம் என்னிடத்தில் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட கசுாதாரக் கேடுகளை விளைவிக்கின்ற கேன்டீன்களை நடத்தினால் நிச்சியமாக அவர்கள் அப்புறப்படுத்தப்படுவார்கள்.

## ஆதரவற்ற விதவைகளின் குழந்தைகட்கு உதவியளிக்கும் திட்டம்

466. (*வினா எண் 20521)—திரு. சி. கணேசன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதரவற்ற விதவைகளின் பள்ளிப்படிப்புப் பருவத்தில் இருக்கும் குழந்தைகட்குப் பாதுகாப்புக்கும் படிப்புக்கும் ஊர்ஜிதம் செய்யும் வகையில் உதவியளிக்க, அரசிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) மற்றும் (ஆ) ஆதரவற்ற விதவைகளின் பள்ளிப் படிப்பு பருவத்திலிருக்கும் குழந்தைகளுக்கு பாதுகாப்பிற்கும் படிப்பிற்கும் ஊர்ஜிதம் செய்யும் வகையில் உதவியளிக்க அரசிடம் திட்டம் ஒன்றும் பரிசீலனையில் இல்லை. ஆனால் விதவைகளின் பள்ளிப்படிப்பு பருவத்திலிருக்கும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் படிப்பிற்காக ஒரு திட்டம் ஏற்கெனவே நடைமுறையிலுள்ளது.

2. அரசு ஆணை எண் 1242, சமூகநலம், நாள் 17–7–79-இன்படி தனியாரால் நடத்தப்படும் தொண்டு நிறுவனங்களுக்கு 50 விதவைகளின் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பாதுகாப்பிற்காக மாதத்திற்கு ரூபாய் 36 அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இத்திட்டத்தை மறு பரிசீல்னை செய்து மேலே கூறப்பட்ட 50 குழந்தைகளை அரசால் நடத்தப்பெறும் சேவை இல்லங்களில் சேர்த்து அவர்களுக்கு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூபாய் 36 வீதம் அளிக்க அரசு ஆணை நிலை எண் 888, சமூக நலத்துறை, நாள் 24—11—1981-ல் ஆணை வழங்கப்பட்டு, அதன்படி விதவைகளின் 50 குழந்தைகள் சேவை இல்லத்தில

சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மேலே கூறப்பட்ட 50 எண்ணிக்கை மாநிலத்திலுள்ள எல்லா சேவை இல்லங்களுக்கும் கீழ்க்கண்டவாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| சேவை இல்லம், தாம்பரம் .. .. | 30 |
| சேவை இல்லம், கடலூர் .. .. | 5 |
| சேவை இல்லம், தஞ்சாவூர் .. .. | 5 |
| சேவை இல்லம், திருநெல்வேலி .. .. | 5 |
| சேவை இல்லம், சேலம் .. .. .. | 5 |
| | 50 |

3. அரசு ஆணை நிலை எண் 1231, சமூக நலத்துறை, நாள் 1—4—1982-இன்படி அரசு சேவை இல்லங்களில் உள்ள விதவைகளின் குழந்தைகளின் பாதுகாப்பிற்கும், படிப்பிற்கும் அரசு சேவை இல்லத்தில் ஐந்தாவது வகுப்பு வரை படிக்கும் ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு ரூபாய் 482 வீதம் கீழ்க்கண்டவாறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன :—

1. உணவுச் செலவு ஒரு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு— ரூபாய் 36.

2. உடைச் செலவு ஒரு வருடத்திற்கு ஒரு குழந்தைக்கு— ரூபாய் 35.

3. புத்தகச் செலவு ஒரு வருடத்திற்கு ஒரு குழந்தைக்கு— ரூபாய் 15.

4. இது தவிர, பள்ளிகளில் படிக்கும் விதவைகளின் குழந்தைகளுக்கு (ஒன்று முதல் பிளஸ் 2 வகுப்பு வரை) இலவசப் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும், அரசு ஆணை எண் 355, சமூக நலத்துறை, நாள் 8—6—1978 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 389, சமூக நலத்துறை, நாள் 10—6—81-இன்படி கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.—

1. துவக்கப்பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு— ரூபாய் 15.

2. இடைநிலைப் பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு— ரூபாய் 40.

3. உயர்நிலைப் பள்ளியில் பயிலும் விதவைகளின் குழந்தைக்கு ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு— ரூபாய் 60.

4. பிளஸ் 2 வகுப்புகளில் படிக்கும் விதவைகளின் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு வருடத்திற்கு— ரூபாய் 100.



**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதரவற்ற விதவைகளினுடைய குழந்தைகளுக்கு படிப்பு உதவித் தொகை மற்றும், உதவித்தொகைகளைப் பற்றி இந்த விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்காக மனுச் செய்கின்ற தகுதியுள்ள அத்தனை பேர்களுக்கும் இது வழங்கப்படுகின்றதா? இது குறிப்பிட்ட ஒருசில, 50 மாணவர்களுக்கோ, அதற்கு குறைந்த எண்ணிக்கை உள்ளவர்களுக்கோ என்ற அளவில்தான் வழங்கப்படுகிறது. ஆகவே இதை எந்த முறையில் தேர்ந்தெடுக்கிறார்கள் இதற்கு எப்படிப்பட்ட சிபாரிசுகள் செய்யப்படவேண்டும்?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணை எண் 1242 சமூகநலன், நாள் 17—7—1979-ன்படி தனியாரால் நடத்தப்படும் தொண்டு நிறுவனங்களுக்கு 50 குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களின் பாதுகாப்பிற்காக மாதத்திற்கு ரூபாய் 36 அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் இந்தத் திட்டம் மறு பரிசீலனை செய்யப்பட்டு இன்றைக்கு 50 குழந்தைகளும், அரசால் நடத்தப்படுகின்ற சேவை இல்லங்களில் சேர்த்து, அவர்களுக்கு பாதுகாப்பிற்கும் படிக்கின்ற அளவிற்கும் புத்தகத்திற்கும், ஆடைக்கும் மற்றும் உணவுக்கும் உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. இதையும் தவிர, இன்றைக்கு பள்ளிகளில் படிக்கும் 1-ம்வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படிக்கும அந்தக் குழந்தைகளுக்கு புத்தகங்கள் வழங்குவதற்காக ஆக உதவிகள் செய்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தகவல் கோரல்.

### (அ) அரசு ஊழியர்களுக்கு மார்ச் மாத ஊதியத்தை அம்மாத இறுதிக்குள் வழங்குவது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் தெலுங்கை தாய் மொழியாகக் கொண்டு கணிசமான பேர்கள் இருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான அரசு ஊழியர்களிலும், தெலுங்கை தாய் மொழியாகக் கொண்டவர்கள் பெரும்பான்மையினர் இருக்கிறார்கள். அதில் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்கேவன்ஜர்ஸ் போன்றவர்கள். அவர்களுக்காகத்தான் தெலுங்கு வருடப் பிறப்பை முன்னிட்டு

வரும் 2 ஆம் தேதி கூட நாம் விடுமுறை அளித்திருக்கிறோம். இந்த நிலையில் இந்த மாதச் சம்பளம், மாநில அரசு ஊழியர்களுக்கு எப்போதும் தருவது போல இந்த மாதமே வழங்கப் படாமல், ஏப்ரல் 4 ஆம் தேதி வழங்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். பண்டிகையினை முன்னிட்டு மார்ச் 31 ஆம் தேதியே சம்பளம் கொடுத்தால் வசதியாக இருக்கும்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிதியாண்டின் இறுதி மார்ச் 31 ஆம் தேதி, சம்பளம் கொடுக்க முடியாது. மார்ச் மாதமே கொடுத்தால் இவ்வாண்டு அவர்களுக்கு 13 மாத சம்பளம் என்றாகி நட்டம் தான் வரும். ஏப்ரல் மாதம் சம்பளம் வாங்கினால்தான் வேலையில் உள்ளவர்களுக்கு லாபம். இதெல்லாம் நிர்வாகப் பிரச்னை. நீங்கள் மீனவர்கள் சப்ஜெக்ட்டிலே தான் அத்தாரிட்டி ; உட்காருங்கள்.

(ஆ) உறுப்பினர் பழைய விடுதியில் கொசுத் தொல்லை.

**திரு. ஏ. டி. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய சட்டசபை விடுதியிலே கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதை தங்களின் கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடிந்தால் நான் வந்து விரட்டப் பார்க்கிறேன்.

(இ) பேசின்பிரிட்ஜ் அனல்மின் நிலையம் குறித்து.

**திரு. என். ஏ. பூங்காவனம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலுள்ள, பேசின் பிரிட்ஜிலே இருக்கிற ஒரு அனல் மின் நிலையத்தை மூடிவிடப் போவதாகவும், அங்குள்ள தொழிலாளர்கள் எல்லாம் வெளியேற்றப்படப் போவதாகவும் தொழிலாளர்கள் மத்தியிலே ஒரு........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூடியபிறகு எழுதிக் கொடுங்கள், வேண்டுமானால் ஒத்திவைப்புத் தீர்மானமாக கொண்டு வரலாம். இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### மதுரை திருச்சி சிறைகளிலுள்ள கைதிகளின் உண்ணா நோன்பு போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, டி. மணி, என். பழனிவேல், கே. ஆர். சுந்தரம்,





மு. அப்பாதுரை, செ. சிவசாமி, எம். ஆறுமுகம், இரா. கருப்பையா, சோ. அழகர்சாமி, என். எஸ். வி. சித்தன், இல. பலராமன், எல். இளையபெருமாள் ஆகியோர் :

'' மதுரை மற்றும் திருச்சி சிறையிலுள்ள கைதிகள் கால வரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளன. இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே குறிப்பாக மதுரையிலே இருக்கக்கூடிய சிறைக் கைதிகள் தங்களுக்கு ஏற்கனவே வழங்கப் பட்டு வந்த பரோலில் வீட்டுக்குச் செல்கிற அந்தச் சலுகை சம்பந்தமாக மாற்றம் ஏற்படுத்தியிருப்பது குறித்து உண்ணா விரதம் இருந்து வருகிறார்கள். இதற்கு முன்னாலேயெல்லாம் வீட்டிலேயிருந்து யாருக்காவது உடம்புக்கு சரியில்லை அல்லது வேறு ஏதோ அவசர நிலைமை என்று தந்தி வந்தால், ஜெயில் சூப்பிரண்டென்டெண்டிடம் அதைக் காட்டி, அத சூப்பிரன்டென்டெண்டினுடைய அனுமதி பெற்று அவருடைய பொறுப்பிலே உடனடியாக வீட்டுக்கு அனுப்பப்பட்டு வந்தார்கள். இப்போது அதில் புதிய நிலையை எடுத்திருக்கிறார்கள். இப்போது, அப்படி வீட்டிலிருந்து ஏதாவது வந்தால் போலீசுக்கு அனுப்பி, போலீசுடைய அனுமதி இருந்தால்தான் செல்லலாம் என்று சமீபத்திலே ஒரு முறை அனுஷ்டிக்கப்பட்டு வந்ததன் விளைவாக, பலர் பரோலில் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆகவே, நிராயுதபாணியாக ஜெயிலிலே இருக்கிற அவர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு ஆயுதம் இந்த உண்ணாவிரதம் தான்.

ஆகவே அவர்கள் அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தி உண்ணா விரதம் இருக்கிறார்கள். முதலிலே 1,500 பேர்களும் உண்ணா விரதம் இருந்தார்கள். அதற்குப் பிறகு சிறை அதிகாரிகளுடைய கெடுபிடி காரணமாக பலர் பலவந்தமாக சாப்பிட வைக்கப்பட்டு, உண்ணாவிரதத்தை நிறுத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனாலும் கூட இன்னும் சிலர் தங்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரையில் கடைசி வரையில் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்திருப்பதால், உடல் பலவீனம் ஏற்பட்டு அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டு, உயிருக்கு ஆபத்து ஏற்படுகிற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். இதேபோன்று அண்மையிலே திருச்சியிலே கூட இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அங்கே இருக்கிற சிறை அதிகாரிகள் கடுமையான முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிலைமை

யில் அரசாங்கம் முன்பு இருந்த தாராள நிலைமைகளை மாற்
றாமல் முன்பு எப்படி இருந்ததோ அதேமாதிரி அவர்களை விடு
தலை செய்யவும் உறவினர்களுக்கு உடம்பு அசௌகரியம் என்று
தந்தி வந்தால் அவர்களை அந்த ஜெயில் சூப்பிரிண்டென்டெண்டே
அனுமதி கொடுத்து அனுப்பிவைக்கிற முறையை—பழைய
முறையை—கொண்டுவரக்கூடிய நிலையை ஏற்படுத்தவேண்டு
மென்ற விவரங்களையெல்லாம் விவாதிப்பதற்காக இந்த
அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான்
கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சிறைச் சாலைகள் எல்லாம் இன்றைக்கு சித்திர
வதைக் கூடங்களாகவும் கொடுமைகளின் இருப்பிடங்களாகவும்
இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே பல முறைகள்
நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சென்னை, வேலூர்,
கடலூர், சேலம், மதுரை, திருச்சி, கோவை ஆகிய மத்திய
சிறைச்சாலைகளிலே உள்ள கைதிகள் பெரிதும் கொடுமைப்படு
த்தப்படுகிறார்கள் என்பதைப் பேசியிருக்கிறோம். உணவு அவர்
களுக்கு சரியாக தருவதில்லை. கைதிகளுக்கு வரும் அரிசி,
பருப்பு, எண்ணெய் மற்றவைகள் மறைந்து விடுகின்றன. அதி
காரிகளும் ஒப்பந்தக்காரர்களும் அந்தத் தவறுகளைச் செய்கி
றார்கள். போதுமான சுகாதார வைத்திய வசதிகள் கொடுக்
கப்படாமல் இருக்கிறது. குளிப்பதற்கு தண்ணீர் கிடையாது.
தலைக்கு எண்ணெய் கிடையாது. பல்பொடி கிடையாது.
போன்ற சாதாரண வசதிகள் கிடையாது. இது
களுக்குக்கூட சிகிச்சை வசதி கிடையாது. சிறிய நோய்
கோரிக்கைகளை நிறைவேற்றாத காரணத்தினால் பல
சிறைக் கைதிகள் காலவரையற்ற உண்ணாவிரதத்தை நடத்திக்
கொண்டிருக்கிறார்கள். சாதாரண சுகாதார வசதிகள்கூட
கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதனால் வேலூரிலே ஆயுள்
தண்டனை கைதி ஒருவர் மரணம் அடைந்ததைப் பார்க்கிறோம்.
சிறைச்சாலைகளிலே இட நெருக்கடிகள் இருக்கின்றன.
மத்திய சிறைச்சாலைகளில் இப்படிப்பட்ட நிலைமைகள்
இருக்கிறபோது சப்ஜெயிலில் 3 பேர்கள் அடைக்கக்கூடிய
நிலையிலே 30 விசாரணைக் கைதிகளை அடைக்கக்கூடிய
நிலையைப் பார்க்கிறோம். அது மட்டுமல்லாமல் திருச்சி, மத்
திய சிறைச்சாலையிலே—பழைய சிறைச்சாலையாக இருப்ப
தால்—அங்கே இருக்கின்ற கொட்டடிகள் பல எப்போது இடிந்து
விழுமோ என்ற அச்ச நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு பாழ
டைந்த நிலையில் இருக்கின்றது.

கைதிகள் பரோலில் செல்வதைப் பொறுத்தமட்டில் ஏற்க
னவே இருந்து வந்த சட்டவிதிகள் மாற்றப்பட்டு காவல் நிலை
யத்தின் ஒப்புதலைப் பெறவேண்டுமென்ற நியதியை இப்போது
ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதன் மூலமாக இன்றைக்கு ஆயுள்
தண்டனை கைதிகள் ஒருமாதம், 10 தினங்கள் உறவினர்களுடைய





திருமணத்திற்காகவோ தங்களுடைய தந்தை அல்லது அப்படிப்
பட்டவர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய ஈமச் சடங்குகளிலே
கலந்துகொள்ள முடியாத நிலையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.
ஆகவே அங்கே இருக்கிற கைதிகள் அவர்களுக்கு இருக்கிற ஒரே
ஆயுதமான உண்ணாவிரதத்தைக் கடைப்பிடித்து தமிழகத்திலே
மத்திய சிறைச்சாலைகளிலே நடத்திவருகிறார்கள். மாண்பு
மிகு சட்ட அமைச்சர் அவர்கள் பல்வேறு முறைகளிலே பதில்
அளிக்கிறபோது அவைகளை நிவர்த்தி செய்கிறோம் என்ற
வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைய தினமும்
அந்த வாக்குறுதியைக் கொடுத்துவிடாமல் அந்தக் குறை
பாடுகளை களையவேண்டுமென்றும் இந்த நிலை தமிழகத்தின்
அனைத்து சிறைச்சாலைகளுக்கும் சென்றுவிடாத அளவுக்கு
விவாதிக்க வேண்டுமென்பதால் இந்த அவையினுடைய இதர
அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர்
அவர்களே, சிறைவாசிகள் விடுப்புக் கோரிவரும் விண்ணப்பங்
களையும் சான்றிதழ்களையும் எவ்வித விசாரணையுமின்றி அப்
படியே ஏற்றுக்கொண்டு காப்பு விடுப்பு வழங்கவேண்டுமென்று
தெரிவித்து 13-3-84 பிற்பகல் முதல் 21 சிறைவாசிகள் உண்ணா
விரதம் இருந்து வந்தார்கள்.

14-3-84 முதல் 279 சிறைவாசிகளும் இதில் சேரவே மொத்
தம் 300 சிறைவாசிகள் உண்ணாவிரதம் இருந்து வந்தார்கள்.
நடைமுறையில் உள்ள அரசு ஆணைப்படி சிறைவாசிகளின் நெருங்
கிய குடும்ப உறுப்பினர் நோய்வாய்ப்பட்டு நிலைமை கவலைக்கிட
மாய் இருக்கும் காலங்களில் அவர்களைக் காணவும், திருமணம்
மற்றும் இறப்பு, போன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும்
அதற்கான சான்றுகள் பெற்று தகுதியின் அடிப்படையில் அவ
சரகால் காப்பு விடுப்பு சிறைவாசிகளுக்கு சிறைக் கண்காணிப்
பாளரால் வழங்கப்பட்டு வருகிறது. சமீப காலமாக அவ்வாறு
விடுப்பில் செல்லும் சிறைவாசிகள் விடுப்பு நிபந்தனைகளை மீறு
வதும், விடுப்பு முடிந்து குறிப்பிட்ட தேதிகளில் சிறைக்குத்
திரும்பாமை போன்ற குற்றங்களில் ஈடுபடுகின்றனர். மேலும்
விடுப்பில் செல்லும் ஒருசில சிறைவாசிகள் சட்டத்துக்குப் புறம்
பான செயல்களில் ஈடுபடுவதும் சம்பந்தமில்லாத பிரச்சினை
களில் அவர்களது ஊர்களில் தலையிட்டு பொதுமக்கள் மற்றும்
சொந்தக்காரர்களை மிரட்டுவதுபோன்ற செயல்களில் ஈடு
படுகிறார்கள். அவ்வாறு அவசரகால காப்பு விடுப்பில் விடப்
பட்ட ஆயுள்தண்டனை சிறைவாசிகள், கொலை, கற்பழிப்பு,
திருட்டு போன்ற குற்றங்களில் ஈடுபட்டு அதற்கு வழக்குகளும்
நடந்து வருகின்றன. எனவே சிறைவாசிகளுக்கு விடுப்புக் கோரி
வரும் விண்ணப்பங்களையும், சான்றிதழ்களையும் கவன
மாக பரிசீலனை செய்து அவைகளில் கூறப்பட்டுள்ள காரணங்கள்
உண்மையா என அறிய சம்பந்தப்பட்ட நன்னடத்தை அலுவலர்
மூலம் விசாரணைகள் செய்யப்பட்டு தகுதியான நேர்வுகளுக்கு
அவசரகால காப்பு விடுப்பு வழங்கப்பட்டு வருகிறது.

சிறைவாசிகளை விடுப்பில் அனுமதிக்க 2-7-82 நாளிட்ட அரசு ஆணை விதி எண் 3-ன்படி விடுப்பு உரிமையாக கேட்க முடியாது. அது அவர்களுக்குக் கொடுத்த ஒரு சலுகையாகும். அந்த சலுகையை அரசு தொடர்ந்து பரிவோடு கடைபிடிக்கும். விதி எண் 6 எந்த அடிப்படையின் கீழ் அவசரகால விடுப்பு வழங்கலா மென்று கூறுகிறது.

(முற்பகல் 10-20)

விதி எண் 11-ன் படி சிறைக் கண்காணிப்பாளர் தனது விருப்பத்தின் பேரில் சான்றிதழ்கள் நன்னடைத்தை அலுவலரிடமிருந்தோ அல்லது காவல் துறையிடமிருந்தோ உண்மைதானா என்று அறிந்து விடுப்பில் விடுவிக்க அதிகாரமுள்ளது.

இச்சிறைவாசிகளை மதுரை மத்திய சிறை கண்காணிப்பாளர் நேரில் சந்தித்து உண்ணாவிரதம் இருப்பது சிறை விதிகளுக்கு புறம்பானது என்பதை எடுத்துக் கூறி, உணவு சாப்பிடுமாறு அறிவுறுத்திய பின்னரும் தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்து வந்தார்கள்.

15-3-84 அன்று முதல் முதலில் உண்ணாவிரதம் இருந்த 21 சிறைவாசிகளைத் தொடர்ந்து சுமார் 400 சிறைவாசிகள் உண்ணாவிரதம் இருந்து வந்தார்கள். உண்ணாவிரதம் இருந்த சிறைவாசிகளில் பெரும்பாலோர் 16-3-84 அன்று மாலை 5-30 மணியளவில் 65 சிறைவாசிகளைத் தவிர மற்ற அனைவரும் நிபந்தனைகள் எதுமின்றி தங்களின் உண்ணாவிரதத்தை கைவிட்டு விட்டனர். 46 சிறைவாசிகள் மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். அவர்களில் 7 பேர் உண்ணாவிரதத்தை அங்கேயே கைவிட்டனர். 16-3-84-ல் 39 சிறைவாசிகள் அரசு இராஜாஜி மருத்துவ மனையிலும் உண்ணாவிரதம் இருந்தனர். சிறையில் இருந்த 26 சிறைவாசிகளில் 6 சிறைவாசிகள் அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு 16-3-84 அன்று இரவு மாற்றப்பட்டனர். மீதி 20 சிறைவாசிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். 19-3-84 அன்று நிலவரப்படி 45 சிறைவாசிகள் தான் அரசு இராஜாஜி மருத்துவமனையில் உண்ணாவிரதம் இருந்தனர். 20-3-84 காலையில் இருந்து மேலே குறிப்பிட்ட 45 சிறைவாசிகளும் உண்ணாவிரதத்தை முடித்து விட்டனர். தற்போது யாருமே உண்ணாவிரதம் மேற்கொள்ளவில்லை.

மதுரை மத்திய சிறையில் சிறைவாசிகள் உண்ணாவிரதத்தால் சிறைவாசிகள் மத்தியிலோ, மக்கள் மத்தியிலோ எவ்வித பதட்ட நிலையும் எழவில்லை. சிறைவாசிகள் 20-3-84 காலையே உண்ணாவிரதத்தை முடித்து விட்டனர். சிறைவாசிகளின் உடல் நிலை திருப்திகரமாக உள்ளது.





திருச்சி மத்திய சிறையில் 16 சிறைவாசிகள் 18-10-83 முதல் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த 50 கோரிக்கைகளை முன் வைத்து உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினர். மேலும் சில சிறைவாசிகளும் சேர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டனர். ஆனால் 31-10-83 அன்று எல்லோரும் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். பின்னர் 28-1-84 முதல் 8 சிறைவாசிகள் சிறைக் கண்காணிப்பாளரின் மீது சில குற்றச்சாட்டுகளைக் கூறி அவைகளை விசாரிக்க ஒரு உயர் மட்டக் குழு அமைக்கக் கோரி உண்ணாவிரதம் தொடங்கினர் அவர்களுடன் மேலும் 9 சிறைவாசிகள் சேர்ந்து கொண்டனர். இச்சிறைவாசிகள் அனைவரும் 2-2-84 அன்று உண்ணாவிரதத்தை கைவிட்டனர்.

உண்ணாவிரதம் இருந்த சிறைவாசிகள் நல்ல முறையில் கவனித்துக் கொள்ளப்பட்டார்கள். எச்சிறைவாசியும் அபாய நிலைமையை அடையவில்லை. சிறைக் கண்காணிப்பாளர் சிறைவாசிகளைப் பழி தீர்த்துக் கொள்கிறார் என்ற குற்றச்சாட்டும் பல சிறைவாசிகளின் நிலைமை மோசமாக உள்ளது என்ற புகாரும் உண்மைக்குப் புறம்பானதாகும். திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் தற்சமயம் எவரும் உண்ணாவிரதமோ, மோசமான நிலைமையிலோ இல்லை. மேலே கூறிய உண்ணாவிரதத்துக்குப் பிறகு திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் எவரும் உண்ணாவிரதம் இருக்கவில்லை. அங்கு நிலைமை மிகவும் திருப்திகரமாக இருக்கிறது என்ற காரணத்தாலும் சிறைவாசிகளின் பிரச்சினையைப் பொறுத்த வரைக்கும் தொடர்ந்து பரிவோடு அவர்கள் பிரச்சினையை தீர்க்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற உத்தரவாதம் அரசு சார்பில் கூறுகிற காரணத்தாலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை கைவிடலாம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக நான் வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சரின் விளக்கத்திற்குபின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை யென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) செங்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் போராட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், இரா. கருப்பையா, மற்றும் ரா. உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்வது குறித்த் '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை.

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு 1983-84-ம் ஆண்டிற்கு பிற்பட்ட நலத்துறையால் வழங்கப்பட்ட உதவித் தொகையை பட்டுவாடா செய்கையில், சிறிய தொகை பிடித்தம் செய்து கொண்டு அளிக்கப்பட்டதாக விசாரணை அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. அவ்வாறு மூன்று மாணவர்களிடத்திலும் பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 55 ஆகும். இரு மாண வர்களிடத்தில் ரூ. 20 வீதமும் மற்றொரு மாணவரிடத்தில் ரூ. 15-ம் பிடித்தம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

2. அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் 12-12-1983-லிருந்து 16—12-1983 வரை தற்செயல் விடுப்பில் சென்ற போது, உதவித் தலைமை ஆசிரியரும் விடுப்பில் இருந்ததால் மூத்த பட்டதாரி ஆசிரியரிடம், இப்பணி ஒப்படைக்கப்பட்டதென்றும் தலைமை ஆசிரியர் விடுப்பிலிருந்து திரும்பி வந்தபோது மீதி பணம் அவரிடம் கொடுக்கப்பட்டு 4-1-1984-ல் கருவூலத்தில் செலுத்தப்பட்டதாகவும் விசாரணையில் தெரியவருகிறது. உத விப் பணம் குறைவாகப் பெற்றதாக எந்த புகாரும் மாணவ ரோ, பெற்றோரோ தன்னிடம் புகார் செய்யவில்லை என்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

3. மாணவர்கள் வேலை நிறுத்தம் 20-2-1984-ல் செய்துள்ளனர். அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒரு நபர் பள்ளிக்கு அருகாமையில் சாராயக்கடை திறப்பதற்கு ஆட்சேபித்ததால் அவரது தூண்டுதல் பேரில் தனக்கு எதிராக நடவடிக்கைகள் நடைபெறுவதாக தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார். மேலும் பள்ளியின் சில ஆசிரியர்கள் மாணவர்களைத் தூண்டி குழப்பங்களை ஏற்படுத்துகிறார்கள் என்றும் தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

4. மாணவர் படிப்பு உதவித்தொகை பணத்தைப் பிரித்துக் கொடுத்த ஆசிரியர் திரு. இராமநாதன், தான் சரியாகவே பணம் கொடுத்ததாகவும் கொடுத்த பணத்திற்கு ரசீதுகள்





பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ஆயினும் மாணவர்களிடம் 20, 20, 15 என்று பணம் பிடித்ததற்கான காரணங்களை நன்கு விசாரித்து அதற்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

5. தற்போது பள்ளி நல்ல முறையில் சுமூகமாக நடைபெற்று வருகிறது.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில், மாணவர்கள் எதற்காக வேலை நிறுத்தம் செய்தார்கள் என்பதற்கான காரணம் சரியாகச் சொல்லப்படவில்லை. மாணவர்களின் உபகாரச் சம்பளத்திலிருந்து தலைமையாசிரியரும் மற்றும் இரண்டு ஆசிரியர்களும் கையாடல் செய்துவிட்ட காரணத்தால் அந்த மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்தார்கள். பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தில் கலந்து, பெற்றோர்களும் ஆசிரியர்களும் முடிவு செய்து தலைமை ஆசிரியரையும், அந்த ஆசிரியர்களையும் விடுப்பிலே செல்லும்படி சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு ஸ்ட்ரைக் நின்று விட்டது. ஆனால், விடுப்பிலே சென்றவர்கள் மறுபடியும் வந்த காரணத்தினால் அந்த ஸ்ட்ரைக்கை ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல், உபகாரச் சம்பளம் கைப்பற்றப்பட்டது பற்றிய காரணமும் சரியாகச் சொல்லப்படவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் நீடித்துக்கொண்டே போகுமேயானால், இதுபோன்ற நிலைமைகள் மற்ற பள்ளிக்கூடங்களிலேயும் நடப்பதற்கு ஏதுவாகும். எனவே, இதைப்பற்றி துரித நடவடிக்கை எடுத்து, விரைவில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கடுமையான தண்டனை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாணவர்களிடத்தில், 20, 20 15 என்று ஆக மூன்று மாணவர்களிடத்திலும் பிடித்தம் செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூ. 55 ஆகும். பிடித்ததற்கான காரணங்களை நன்றாக விசாரித்து, அதற்குப் பொறுப்பானவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 20, 20, 15 என்று 55 ரூபாய் மாணவர்களுடைய உதவித் தொகையிலேயே கையை வைத்திருக்கிறார்கள் ஆசிரியர்கள் என்ற பெயரால். ஆகவே இது ஒரு கடுமையான குற்றம். இதற்காக அங்கேயுள்ள மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல், நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று கூறி வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இவ்வளவு நாட்களுக்குப் பிறகும் கூட, அரசு நடவடிக்கை எடுக்கும் என்று தான் அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆகவே, இம்மாதிரியான முறையில் கடுமையான குற்றங்களைப் புரிந்து

இருக்கின்ற பொறுப்பான ஆசிரியர் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் திருப்தி ஏற்படும் வகையில் இந்தப் பிரச்னை தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய சென்டிமெண்டை உணர்ந்து விரைவில் தக்க நடவடிக்கையெடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

## (ஆ) செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு நூல் வழங்குவது

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் ப. வெங்கடசுப்பிரமணியம், மற்றும் செ. செம்மலை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத்தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

***திரு. செ. செம்மலை :** தலைவர் அவர்களே, ''தாரமங்கலம் தொகுதி மற்றும் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு பாவு நூல், ஊடை நூல் கிடைக்காததால், நெசவாளர்கள் படும் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கடந்த இரண்டு மாதங்களாக பாவு நூலுக்குத் தேவையான பருத்தி, பஞ்சாப் மாநிலத்திலிருந்து புழுத் தொல்லையால் சரிவர தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை. மேலும் தமிழகத்தில் வெள்ளம் ஏற்பட்டதால் பருத்தி உற்பத்தி பாதிக்கப்பட்டது. இருப்பினும் காஞ்சிபுரம் கோ-ஆப்-டெக்ஸ் நூல் கிடங்கு மூலம் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள சங்கங்களுக்கு கீழ்க்கண்டவாறு 60 மற்றும் 80-ம் நெம்பர் நூல் வழங்கப்பட்டுள்ளது.

60 எண் (பேல்களில்).

| | தேவை. | மாதாந்திர விற்பனை. (பிப்ரவரி 1982). | இருப்பு. |
|---|---|---|---|
| பாவு | 50 | 45 | .. |
| ஊடை | 50 | 70 | 45 |



80 எண் (பேல்களில்).

| | தேவை | மாதந்திர விற்பனை. | இருப்பு. |
|---|---|---|---|
| பாவு .. | 30 | 35 | 42 |
| ஊடை .. | 15 | 11 | 12 |

மேற்கண்ட விவரத்திலிருந்து 80-ம் எண் நூல் பொறுத்த வரை தற்போது தட்டுப்பாடு இல்லை. 60-ம் எண் பாவு நூல் நூற்பாலை மூலம் நூல் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாரமங்கலம் தொகுதியில் 16 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவைகளில் தற்பொழுது ரூ. 32.5 இலட்சம் மதிப்புள்ள துணிகள் இருப்பில் உள்ளன. பொதுவாக தமிழ் நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் மற்றும் வெளிச்சந்தையிலும் தீபாவளி, மற்றும் பொங்கல் பண்டிகைக்குப்பின் உள்ள காலம் கைத்தறித் துணியின் விற்பனையில் ஒரு மந்த காலமாகும். எனவே கைத்தறித் துணிகள் விற்பனை ஆகாமல் சங்கங்களில் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தாரமங்கலம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள உறுப்பினர்களுச்கு நூல் வழங்குவதில் சற்று இடர்பாடு இருந்து வந்தபோதிலும் தற்போது கூலி கொடுக்கும் பொருட்டு மாநிலச் சங்கத்திடமிருந்து வரவேண்டிய நிலுவை பேரில் குறுகிய காலக்கடன் பெறவும் சரக்கீட்டுக் கடன் பெறவும் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தமிழகத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள கைத்தறித் துணிகள் தேக்கத்தைக் குறைப்பதற்காக 7—3—1984 முதல் 13—3—1984 வரை சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டு வருகிறது. இச்சிறப்புத் தள்ளுபடியை பயன்படுத்தியும் 1984-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் நடைபெற இருக்கும் அகில இந்திய கைத்தறி இருவார கண்காட்சிகளிலும் கணிசமான அளவு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கைத்தறித் துணிகள் விற்று தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தாரமங்கலம் பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் இதன் மூலம் துணிகள் தேக்கம் ஓரளவு குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் மாநிலச் சங்கம், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்த துணிகளுக்கு கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்கவும், தேங்கியுள்ள துணிகளை கொள்முதல் செய்யவும் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1984 மார்ச் 26

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரிபேட் காலங்களில் 1978 ஆம் ஆண்டு வரையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பேங்க் பாஸ் மூலமும், ஹோல்சேல் மூலமும் விற்பதற்கு அனுமதிக்கப்பட்டு வந்தது. அந்தக் காலங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் துணி தேங்காமல் அதிகமாக விற்பனை ஆகி வந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ. 1978 ஆம் ஆண்டுக்குப் பிறகு, அப்படிப்பட்ட விற்பனை நிறுத்தப்பட்டு விட்டதால் தான் இப்படிப் பிரதம கூட்டுறவுச் சங்கங்களிலேயும், கோவாப்டெக்ஸ் நிறுவனங்களிலேயும் அதிகமான அளவிற்குத் துணி தேக்கம் ஏற்பட்டு, அதன் காரணமாக நெசவாளர்களுக்குப் பாவு கிடைப்பதிலேயும் சிரமங்கள் ஏற்பட்டு வேலையின்றி தவிக்கிறார்கள். ஆகவே, 1978 ஆம் ஆண்டு இருந்த அந்த முறையை, அதாவது பேங்க் பாஸ் மூலமும், ஹோல்சேல் மூலமும் விற்கின்ற முறையை அமல்படுத்துவதற்கு அமைச்சரவர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த ரிபேட் மூலம் வருகின்ற சலுகை நெசவாளர்களுக்குக் கிட்டாமல், நேரடியாக கன்ஸ்யூமர்களுக்குக் கிட்டாமல், ஹோல்சேல் மெர்ச்சன்ட்ஸுக்கு அந்த இலாபம் கிடைக்கும் விதத்திலே அந்த சிஸ்டம் இருந்ததால் தான் 1978 ஆம் ஆண்டில் அது மாற்றி அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வைப் புரிந்து கொண்டு, மீண்டும் அது பற்றி யோசிக்கலாம்.

5. வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

" மானியக் கோரிக்கை எண். 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,57,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

திருமதி நா. இராசாம்பாள்: தலைவரவர்களே, பொதுவில் ஐந்து ஏக்கருக்கு உட்பட்ட நில உடைமையாளர்களைச் சிறு விவசாயிகள் என்றிருப்பதைத் தவிர்த்து தரம்-வருமானம் அறிந்து பாகுபாடு செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,57,01,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "



1984 மார்ச் 26]

(முற்பகல் 10-30)

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, ஏழை, எளிய, சிறு நில உடைமையாளர் ஆகியோருக்கு நிலவரியிலிருந்து விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,57,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, காலம் தவறி பெய்த மழை காரணமாக பயிர்களுக்கு நோய் விழுந்ததால் மேனிக் குறைவும், பயிர்களுக்குச் சேதமும் ஏற்பட்டுள்ளதால் தமிழகம் பூராவும் நில வரியை ரத்து செய்ய வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,57,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. மு. அப்பாதுரை: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பருவ மழை காலம் தவறி பெய்ததால் நெல்லை மாவட்டத்தில் விவசாய விளைபொருட்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் நிலவரியை இந்த ஆண்டு ரத்து செய்ய வேண்டும் என்பதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,57,01,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

(ஆ) கோரிக்கை எண். 41–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 41 —இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, வட சென்னையில் மழைக் காலங்களில் தேங்கும் மழைத் தண்ணீர் ஓட்டேரி கால்வாய் மூலம் செல்லுவதால் அதனை தூர்வாரி சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண். 41 —இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்தின் காரணமாக பாதிக்கப்பட்டு குடிசை இழந்தவர்களுக்கு ரூ. 200 நிவாரணம் என்பதற்குப் பதிலாக ரூ. 1,000 வழங்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 10,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஏ. டி. கருப்பையா: தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றங்கள் பெரும் வெள்ளப் பாதிப்புகள், தடுப்பு நடவடிக்கைகள் முன் கூட்டியே எடுக்காதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண். 46-இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,50,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு ஒதுக்கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 24,50,31,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண். 11-மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,59,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு ஒதுக்கப்பெற வேண்டும்."



திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, வீடு, நிலமற்ற கிராமப் புறங்களில் வாழும் ஏழைகளுக்கு வீட்டு மனை நிலப்பட்டா கிடைக்க வழிவகை செய்வது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,59,53,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களை ஒழுங்காக நடத்தாதது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,59,53,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்கள், இன்னும் உள்ள ஏழை மக்களுக்கும் மனைப் பட்டா கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 28,59,53,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் மொழிந்துள்ள மானியக் கோரிக்கைகள் சம்பந்தமாக அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற குறிப்புகளை **நான் படித்ததாக அவையிலே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கைகள் மீது சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். பொதுவாக, இந்த ஆண்டு இயற்கைச் சீற்றத்தால், தமிழகத்தில் உணவு உற்பத்தி பாதிக்கின்ற அளவுக்கு, பொருளாதாரம் பாதிக்கின்ற அளவுக்கு மட்டுமல்ல,

** 697—771 ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பெற்றுள்ளது.

[திரு. ந. சிவஞானம்] [1984 மார்ச் 26

பல்வேறு உயிர்ச் சேதங்கள் நாட்டிலே ஏற்பட்டு, பல்வேறு இடர்ப்பாடுகளுக்கு நாடு உட்பட்டு, பல்வேறு கஷ்டத்திற்குத் தமிழகம் உள்ளாகியிருக்கிறது. குறிப்பாக, புயல் என்றாலும், வெள்ளம் என்றாலும், தீ என்றாலும், இன்னும் மற்ற பல்வேறு இயற்கைச் சீற்றங்கள் என்றாலும், அரசாங்கம் முன்னறிவிப்பாக மக்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். புயல் என்றால், சாதாரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே இருந்து, பல்வேறு தாலூகா, மற்றும் அங்கே இருக்கிற ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு முன்னறிவிப்பு போகும். ஆனால் இந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்படும் என்ற எச்சரிக்கைகூட, கொடுக்கப்படவில்லை. வெள்ளப் பாதிப்புத் தடுப்பு நடவடிக்கையாக, முன்னெச்சரிக்கையாக எந்தவிதத் தகவலும் கொடுக்கப்படவில்லை. குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கும் ஆணையர்களுக்கும் முன்னறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும். அந்த அறிவிப்பைக் கொடுத்திருந்தால், குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் வெள்ளச் சேதம் குறைந்திருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இயற்கையின் சீற்றத்தால், இன்றையதினம் பல்வேறு கஷ்டங்களை தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, மதுரை, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களிலுள்ள மக்கள் அனுபவித்தனர். அங்கெல்லாம் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் சில எடுக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்திலே வெண்ணாற்றின் அருகில் தான் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அங்கு வெள்ளத் தடுப்பு நிவாரண நடவடிக்கை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெண்ணாற்றில் அதனுடைய கொள்ளளவை விட, ஏறத்தாழ 4, 5 மடங்கு அதிகமாக, ஏறத்தாழ 50,000 கியூசெக்ஸ் வரையில் தண்ணீர் அங்கே வந்துள்ளது என்பது அரசுக்கு நிச்சயமாகத் தெரியும். ஆகவே, அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக, அந்த வெண்ணாற்றிற்கு அருகிலே இருக்கிற முதலைமுத்துவாரித் திட்டம் என்ற பெரிய திட்டத்தை வெள்ள நிவாரண நடவடிக்கையிலே அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தத் திட்டத்தால்தான் வறட்சியால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கு நிவாரணம் கிடைக்கும். ஆகவே, அந்த முதலைமுத்துவாரித் திட்டத்தை வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செங்கிப்பட்டிக்கு அருகே பெரிய உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. அதனால் அரசாங்கத்திற்குப் பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த இழப்பு மிகப் பெரிய இழப்பு. ஆகவே, ஆச்சான்பட்டிக்கு அருகிலே இருக்கிற செங்கிப்பட்டி ஏரிக்கரை உடைப்பைச் சீர்படுத்தி தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 26] [திரு. ந. சிவஞானம்]

அடுத்து, இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்பிலிருந்து மக்களைப் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, புயல் புகலிடங்கள் மக்களுக்குக் கட்டித் தரவேண்டும். குறிப்பாக, தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களிலேதான் புயல் அதிகமாக பாதிக்கும். அந்த மாவட்டங்களில் மக்கள் பாதுகாப்புக்காக, மக்கள் தங்குவதற்காக, பல இடங்களிலே பாதுகாப்பு இல்லங்கள் கட்டியிருக்கிறார்கள், அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். செஞ்சிலுவை சங்கமாக இருந்தாலும், இன்னும் சமூக நலச் சங்கங்களாக இருந்தாலும், பல்வேறு இடங்களில், தஞ்சை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் கட்டியிருக்கிறார்கள். அவை போதாது. தஞ்சை மாவட்டம் பூராவும் கட்ட வேண்டுமென்று கேட்கிறேன்.

அடுத்து, ஏழை மக்கள் வெள்ளத்தின்போது பள்ளிக்கூடங்களில் தான் தங்குகிறார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களை ஆர். சி. சி. கட்டிடமாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். ஏழை, எளிய மக்கள் தங்குவதற்கேற்ப, ஆர். சி. சி. கட்டிடமாகக் கட்டித் தர வேண்டும். தற்போது, பள்ளிகளில் இருக்கிற கூரையை எடுத்துவிட்டு, ஷெட்டுகளை எடுத்துவிட்டு, ஆர். சி. சி. போட்டு கட்டி, மாவட்ட மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

பாதிக்கப்பட்ட மக்கள் குடிசைகளை இழந்தால் ரூ. 200 கொடுக்கிறார்கள். 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட தொகை அது. இப்பொழுது விலைவாசி எந்த அளவு உயர்ந்திருக்கிறது ? ரூ. 200 போதுமா ? போதாது. குறைந்தது ரூ. 500-வது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் வெள்ள நிவாரண வேலையிலே ஈடுபட்ட நேரத்திலே நாங்கள் எல்லாம் ரூ. 200 போதாது, ரூ. 500-வது கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறோம். ஆகவே, பாதிக்கப்பட்ட குடிசைகளின் சொந்தக்காரர்களுக்கு, இருக்கிற விலைவாசி உயர்வைக் கருத்தில் கொண்டு, ரூ. 500-வது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியில் அமைச்சர் பதில் அளிக்கும்போது அதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இறந்தவர் குடும்பங்களுக்கு ரூ. 1,000 கொடுக்கிறார்கள். அதுவும் எப்போதோ நிர்ணயித்த தொகை. அதுவும் போதாது. ஆகவே, அந்த ரூ. 1,000-ஐ ரூ. 5,000 ஆக, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அளிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி வந்தபோது, வறட்சி நிவாரணக் குழுக்களை ஏற்படுத்தி, குடிநீர் திட்டமாக இருந்தாலும், வேலை வாய்ப்பாக இருந்தாலும், நல்ல திட்டங்களைத் தீட்டி, செய்தார்கள். அதே

போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும், சட்டமன்ற – பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட வெள்ள நிவாரண குழுக்களை அரசாங்கம் நியமிக்க வேண்டும். வறட்சி நிவாரணக் குழு அமைக்கப்பட்டதே தவிர, வெள்ள நிவாரணக் குழு அமைக்கப் படவில்லை ஆகவே, பல்வேறு வேளைகளில் அரசுக்கு ஆலோசனை சொல்ல, மாவட்ட அளவில் வெள்ள நிவாரணக் குழுக்களை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

அடுத்து சாதாரண மக்களுக்கு நல்ல குடியிருப்பு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இது குறித்து அறிவித்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் ஏழை எளிய மக்களுடைய குடிசைகள் தாழ்வான பகுதிகளில் இருக்கின்றன. அவைகளை மேட்டுப் பகுதிகளுக்கு மாற்றி புதிய வீடுகளை அவர்களுக்கு கட்டிக் கொடுக்க வேண்டும். அரசாங்கம் அந்த சாதாரண மக்களுக்கு நிரந்தரமான அடிப்படையில் நல்ல வீடுகளை மேடானப் பகுதிகளில் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உழவனுக்கு உழக்கு கூட மிஞ்சாது என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் இப்போது நிலவரி என்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. ஐந்து ஏக்கர் வைத்திருக்கிற ஒருவருக்கு 5,000 ரூபாய் வரையில் கூட நிலவரி பாக்கி இருக்கிறது. அதைப்போல கூட்டுறவுச் சங்கக் கடன்களும் இருக்கின்றன. நிலத்தை விற்றாலும் அவர்களால் அந்த பாக்கியை கட்டுவதற்கு இயலாது. ஆகவே விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில் நிலவரியையும், கூட்டுறவுச் சங்கக் கடன்களையும் மற்ற கடன்களையும் ரத்து செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து நிலச் சீர்திருத்தச் சட்டத்தை எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் பூரணமாக ஆதரிக்கிறோம். சமீபத்திலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு எல்லா கட்சி உறுப்பினர்களும் ஒருமனதான ஆதரவைக் கொடுத்தோம். அதன்மீது அரசாங்கம் சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே அதை விரைந்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இயற்கைச் சீற்றத்தால் பல்வேறு கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே வருங்கால விவசாயத்தை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் போர்-வெல் பைப்புகள் அதிகமாக போட வேண்டும். அதற்காக நீண்ட கால கடன்களை அரசு வழங்க வேண்டும். அந்தக் கடன்கள் மக்களுக்கு போய் சேரவேண்டுமென்ற அடிப்படையில் அதை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து இப்போது இருக்கிற நிலைமையில் குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். இயற்கைச் சீற்றத்தினால் வேளாண்மை செலவுகள் அதிகமாக உயர்ந்து விட்டன. நெல், கரும்பு, பயறு எதுவானாலும் வேளாண்மை செய்த விவசாய மக்களுக்கு இழப்பு அதிகமாகி இருக்கிறது. இதன் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாய மக்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்திலும், திருச்சி மாவட்டத்திலும் இப்போது இரண்டாவதாக பெய்த மழை விவசாயத்தை அடியோடு நாசம் செய்து விட்டது. இதன் காரணமாக எல்லா விவசாயிகளும் நஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். அதற்கான மானியத்தை ஏக்கருக்கு குறைந்தது ஆயிரம் ரூபாய் என்ற அளவில் கொடுப்பதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அமைச்சர் அவர்களும் விவசாயி தான். அவர்கள் சாதாரண ஏழை, எளிய மக்கள் பயன்படுகிற அளவிற்கு காரியங்களை ஆற்றுவதை அறிவோம். அதைப்போல ஏழை விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறிய விவசாயிகளுக்கு, கடுமையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த மானியத்தை கொடுக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். ஏற்கெனவே இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு போய் சேரவேண்டிய குத்தகை போய் சேர முடியவில்லை. ஆகவே குத்தகைதாரர்களுக்கு, அடிமட்டத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு பாதுகாப்பாக குத்தகையை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வருகிற காலத்தில் அந்த குத்தகை எடுக்கிற ஏழை, எளிய விவசாயிகளை விட்டு போகாமல், வேறு இடத்திற்குச் செல்லாமல் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்டப் பிரிவினை. நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பெரிய மாவட்டமாக இருப்பதால் நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றனவென்பதால் மாவட்டங்களைப் பிரித்து இருக்கிறார்கள். அதில் விரைவான நடவடிக்கை இந்த அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் திருச்சிக்கும், தஞ்சைக்கும் இடைபட்ட ஒரு இடத்தில் மாநிலத்தின் தலைநகர் வரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். விரைவாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தத் திட்டம் நிறைவேறினால்தான் தமிழகத்தின் தலைநகர் மாநிலத்தின் நடுநாயகமான இடத்தில்

விளங்கும். திருச்சிக்கும், தஞ்சைக்கும் இடையிலே தமிழகத்
தின் தலைநகரை அமைக்க பூர்வாங்க நடவடிக்கைகளை இந்த
அரசு எடுக்கவேண்டுமென்று வேண்டி விரும்பி கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து குடிமராமத்து வேலை : இந்த வேலை பல மாவட்
டங்களில் நடைபெறவில்லை. இப்போது என். ஆர். இ. பி.
என்ற திட்டம் இருக்கிறது. ஆகவே வருவாய்த் துறை
மூலமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றி, ஏழை மக்களுக்கு
வேலை வாய்ப்பு கிடைக்க, ஏ.பி.சி. என்று இருக்கிற எல்லா
வாய்க்கால்களையும் தூர் எடுத்து வருகிற காலத்தில் அந்த
வேலைகள் நடைபெறுவதற்கு அரசு முயல வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

நில உடமை மேம்பாட்டுத் திட்டம் பற்றி சொல்ல விரும்பு
கிறேன். பல இடங்களில் கூட்டுப் பட்டா இருக்கிறது. பல்வேறு
இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. இதுபோன்ற
சங்கடங்களை நீக்கி, ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டா முறை
கொண்டுவரப்பட வேண்டும். அதற்காக முழு மூச்சாக அரசு
செயல்பட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்
கிறேன்.

ஒரத்தநாட்டில் சர்வே பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க உத்தர
விட்டு இருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் அமல் படுத்தப்
படவில்லை. ஆகவே, அந்தப் புதிய சர்வே பயிற்சிப் பள்ளியை
உடனடியாக ஆரம்பிக்க அரசு கவனம் செலுத்த வேண்டும்.
ஏனோதானோ என்று ஆணை பிறப்பித்தும் அதை ஆரம்பிக்கா
மல் இருப்பது சரியல்ல. ஆகவே, அதை உடனடியாக ஆரம்
பிக்கவேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவோணம் பகுதியை துணை வட்டமாக அறிக்கவேண்டும்.
இது மிகமிக பின்தங்கிய பகுதி. தஞ்சை மாவட்டத்தில் மிகவும்
பின்தங்கிய பகுதியாக இது இருப்பதால், திருவோணம் பகுதியை
துணை வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று வேண்டி
விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்
அலுவலக வளாகத்தில் இடம் காலியாக உள்ளது. வேறு
துறையைச் சேர்ந்த அலுவலகங்கள் எல்லாம் வாடகைக் கட்டி
டத்தில் பல்வேறு இடங்களில் இருப்பதால் இந்த இடத்தில்
அவைகளை அமைத்துத்தர நம்முடைய அரசு வழிவகைகளைச்
செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம நிர்வாகப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், இந்த
அரசாங்கம் எல்லாக் கிராமங்களுக்கும் வில்லேஜ் அட்மினிஸ்டி
ரேஷன் ஆபீசர் என்று நியமனம் செய்து இருக்கிறார்கள்.
இன்னும் நியமனம் செய்ய இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்





லாம் அடிப்படையாக செய்து கொடுக்கவேண்டிய ஒன்று அவர்
கள் பணிகளைச் செய்வதற்கு ஒரு தனியான பணிமனையாகும்.
அதைச் செய்து கொடுத்தால்தான் அவர்களால் பணியை
நன்றாகச் செய்ய முடியும். ஆகவே, அதைச் செய்து கொடுக்க
அரசு விரைவான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

சாதாரணமாக வருவாய்த் துறைதான் சாதாரண மக்
களுக்கு உதவும் ஒரு முதுகெலும்பு போன்ற துறையாகும்.
அந்தத் துறை நன்றாக இருந்தால்தான் சரியான முறையில்
இயங்கினால்தான் மக்களுக்கு நல்ல பலன் கிடைக்கும். ஆகவே
அந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவராக
இருந்தாலும் சரி, கோட்டாட்சித் தலைவராக இருந்தாலும்
சரி, வட்டாட்சியராக இருந்தாலும் சரி அவர்கள் நாணயமான
முறையில், நேர்மையான வகையில் பணியாற்றினால்தான்
அந்தத் துறை சரியான முறையில் நல்ல முறையில் செயல்பட
முடியும். ஆகவே, அப்படிப்பட்ட பதவிகளுக்கு நாணயமான,
நேர்மையான அதிகாரிகளை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை
மாவட்டத்தில் வெள்ளத்தால் மதகுவால் இரண்டு இடங்களில்
பூதலூரில் உடைந்துள்ளது. அதை வெள்ள நிவாரண
நடவடிக்கைகள் மூலம் சீர்திருத்திக்கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஜே. இரா. ஜெயராமன் ; மன்றத்தின் மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்
களால் இந்த அவை முன் வைக்கப்பட்டுள்ள வருவாய்த் துறை
மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற
விரும்புகிறேன். வருவாய்த் துறை என்பது அரசுக்கு அச்சாணி
போல் இருந்து கொண்டு, ஆணிவேராக இருந்துகொண்டு,
செயல்பட்டு வரும் ஒரு துறையாகும். இந்தத் துறையைப்
பொறுத்தவரையில், ஆங்கிலேயர் காலத்தில் வரி வசூலிக்கும்
துறையாக இருந்து இன்றைக்கு மாவட்ட அளவில், கிராமப்புற
மட்டத்தில் இருந்து, சட்டம் ஒழுங்குப் பிரச்னைகள், சமுதாய
கலவரங்கள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஆகியவை வந்த
நேரத்தில் தன்னை அதிலே ஈடுபடுத்திக்கொண்டு நல்ல பல
பணிகளைச் சிறப்பாக செய்து வருகின்ற ஒரு அமைப்பாக
இந்தத் துறை இருந்து வருகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னால் தமிழகத்தில் வறட்சி
காரணமாகவும், பருவ மழை பொய்த்து விட்ட காரணத்தா
லும், தமிழகத்தில் தொடர்ந்து வறட்சி நிலவியதன் காரணமாக
வருவாய்த் துறை சிறப்பாகவும், சீராகவும் நல்ல பல திட்டங்
களைத் தீட்டி அந்த பாதிப்புகளைச் சமாளித்து இருக்கிறது
வறட்சி என்று வந்த நேரத்தில் போர்க்கால நடவடிக்கை

[திரு. வெ. இரா. ஜெயராம்] [1984 மார்ச் 26

எடுத்து, நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்து, தமிழக அரசு, அவற்றை நல்ல முறையில் சிறப்பாக நிறைவேற்றி செயல்பட்டு வந்து இருக்கிறது என்று கூறினால் அது மிகை யாகாது.

கிராம நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், முன்பு இரண்டு பேர் அந்தப் பணிகளைச் செய்து வந்தார்கள். கிராம முன்சீப், கிராம கர்ணம் என்று இருவர் அந்தப் பணியைச் செய்து வந்தனர். இப்போது வி.ஏ.ஓ. என்று ஒரு அதிகாரியை அந்த கிராம நிர்வாகத்தை கவனித்துக்கொள்ள அரசு நியமித்து இருக்கிறது. சில கிராமங்கள் சிறியவையாகவும், சில கிரா மங்கள் பெரியதாகவும் இருக்கின்றன. சில கிராமங்களுக்கு நிறைய உட்கிராமங்கள் இருக்கின்றன. அவைகள் அதன் காரணமாக பெரிய கிராமங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பெரிய கிராமங்களை சிறிய சிறிய கிராமங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக வி.ஏ.ஓ.வைப் போட அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அதைப்போன்று மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் ரீஃபார்ம்ஸ் கமிட்டி, பரிந்துரைக்கு ஏற்ப, திரு. ஆம்புரோஸ் நிர்வாகக் கமிட்டியின் பரிந்துரைக்கு ஏற்ப மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏறத்தாழ 13 மாவட்டங் களைப் புதிதாக உருவாக்கியிருக்கிறார்கள். குறிப்பாக என் னுடைய தேனி, பெரியகுளம், திண்டுக்கல் கோட்டங்களையும் நிலக்கோட்டை, உசிலம்பட்டியில் சில பகுதிகளையும் இணைத்து புதிய அண்ணா மாவட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று வட்டங்களைப் பிரிக்கும்போது தேனியைத் தலைநகராகக் கொண்டு ஒரு தனி வட்டத்தை ஏற்படுத்த வேண்டும். ஏனென்றால் வருஷ நாடு போன்ற பகுதிகளில் இருந்து குமணந்துருக்கு வரவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 40 கிலோ மீட்டர், 50 கிலோமீட்டர் வரவேண்டும். இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே தேனியைத் தலை நகராகக் கொண்ட ஒரு தனி வட்டத்தை ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிக்கும்போது இப்போது தொழில் துறையை ஏற்படுத்த வேண்டுமென்றால் 'நோ இன்டஸ்டிரீயல் டிஸ்டிரிக்ட்' என்று புதிதாக ஒரு முடிவை மத்திய அரசு அறிவித் திருக்கிறது. அந்த நிலைமைகளுக்கு ஏற்ப சிலபல மாவட்டங்களை ஏற்படுத்த வாய்ப்பு இருந்தால் அதையும் கருத்திற்கொண்டு, செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 26] [திரு. வே. இரா. ஜெயராமன்]

இயற்கைச் சீற்றங்களைப் பொறுத்தவரையில் 1982 ஆம் ஆண்டில் பருவமழை பொய்த்த காரணத்தால் 1983-84-ல் பெரிய வறட்சி ஏற்பட்டது. மத்திய அரசுக்கு தமிழக அரசு 217.13 கோடி ரூபாய் வேண்டுமென்று கோரிக்கை வைத்தது. ஆனால். மத்திய அரசு 68.36 கோடி ரூபாய்தான் அனுமதித்தது. இருந்தபோதிலும் நம்முடைய அரசு போர்க்கால அடிப்படை யில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து துயர் தணிப்புப் பணி களைச் சிறப்பாக செய்தது. ஏற்கனவே இருந்த குழாய்க் கிணறுகளைத் தவிர, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 22,000 குழாய்க் கிணறுகளைப் போட்டுக் கொடுத்தது குறிப் பிடத்தக்கது, பாராட்ட வேண்டிய ஒன்று.

அதே நேரத்தில் இந்த வறட்சி நிவாரணப் பணிகள் நடக்கும் போது எந்தவிதமான ஒழுங்கீனங்களும் நடக்காமல் பார்த் துக்கொண்டது. பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த அளவுக்கு கடமை உணர்வோடு பணியாற்றிய அதிகாரிகளைப் பாராட்டுவது நம்முடைய கடமையாக இருக்கிறது. வறட்சி நிவாரணப் பணிகளைச் சிறப்பாகச் செய்ததன் மூலம் நிரந்தரமான சொத்துக்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு அரசாங்கமும் அதிகாரிகளும் தங்களை ஆட்படுத்திக் கொண்டார்கள்.

அது மட்டுமல்ல, கடந்த டிசம்பர். பிப்ரவரி, மார்ச் மாதங் களில் ஏற்பட்ட மழைச் சேதங்களைப் போக்குவதற்கு மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் பாதிக் கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று சிலபல நல்ல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். வைகைப் பகுதியில் பல நூற்றாண்டுகளில் இல்லாத அளவுக்கு பெருமழை ஏற் பட்டு மிகப்பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி களை நேரடியாகப் பார்வையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டு மென்று கூறி இருக்கிறார்கள். அதாவது வைகை அணைக்கு மேலே புதிய அணை ஒன்றை கட்ட வேண்டுமென்று சொன் னார்கள். வெள்ளம் வீணாகாமல் தடுத்து நிறுத்த வருஷ நாட்டில் அந்த அணையைக் கட்ட வேண்டும். அதோடு அந்த அணையிலிருந்து இடதுபுற கால்வாய் ஒன்று வெட்டி நீர் ப்ரப்புப் பகுதிக்கும், வலதுபக்க கால்வாய் ஒன்று ஏற்படுத்தி வறண்ட ஆண்டிப்பட்டி பகுதிக்கும் பாசன வசதியை ஏற் படுத்தி, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்ததுபோல, அந்த இரண்டு தொகுதிகளுக்கும் பயன் அளிக்கின்ற வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்ததாக மத்திய நிவாரணக் குழு தமிழ்நாட்டுக்கு வந்து, மாநில அரசு நிறைவேற்றி வந்த சிலபல நிவாரணப் பணி களைப் பார்வையிட்டு, சென்ற பின்னால், உடனடி நிவாரண மாக 37.54 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். அது

மட்டுமல்லாமல் பிரதமர் நிதியிலிருந்து 5 கோடி ரூபாயும், மத்திய அரசு மானியமாக 16 கோடி ரூபாயும் அளித்திருக்கிறார்கள். 29-1-1984 முதல் 2-2-1984 முடிய சேதங்களை ஆய்வு செய்த அந்தக் குழு, நம்முடைய அரசு நிறைவேற்றியிருக்கிற நிவாரணப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசைப் பராட்டியிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அதற்கடுத்து, மார்ச் முதல் வாரத்தில் முகவை, நெல்லை, மதுரை, மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த மலைப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட அந்த கிராமங்களை உடனடியாக அமைச்சரவர்கள் சென்று பார்வையிட்டார்கள். இந்த நேரத்தில் சேதங்கள் ஏற்பட்டு, உடைமைகளை இழந்தவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தருகின்ற அதே நேரத்தில், மலை சாதி மக்கள் முன்பு வாங்கியிருந்த கடன்களை ஒத்தி வைக்கவேண்டும் அதே போல நிலவரியையும் ஒத்திவைக்கவேண்டும். கூட்டுறவுக் கடன்களை பொறுத்தவரையில், குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்றித்தர வேண்டும். இதிலே மத்திய ரிசர்வ் வங்கியானது, சில நெறிமுறைகளை வைத்திருக்கிறார்கள். குறுகிய காலக் கடன்களை நீண்டகால கடன்களாக மாற்ற வேண்டுமென்றால், இது இப்படி இருந்தால் தான்— இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டாலும் கூட, மழைச் சேதங்களைப் பொறுத்தவரையில், இது ஒத்துவராது என்பதால் மாற்றுவதில் சில சங்கடங்கள் இருப்பதாக கூட்டுறவுத் துறை கருதுகிறது. இவற்றையெல்லாம் ஒரு தனிக் கண்ணோட்டத்தில் பார்த்து, குறுகிய காலக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நில ஒப்படையைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே நம்முடைய வருவாய்த் துறையானது, வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைகளை ஒப்படைக்கின்ற பணியானாலும் சரி, உபரியாக பெறப்பட்டு, கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விநியோகிக்கும் பணியானாலும் சரி, இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்மையாக இருக்கின்ற ஒரு துறை எது என்றால், தமிழகத்தினுடைய வருவாய்த்துறை தான்.

அடுத்து தமிழகத்தில் 20 அம்சத் திட்டம் சிறப்பாக செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, முக்கியமான சில முன் உதாரணமாக, சில சட்டங்களை தமிழக அரசு கொண்டு வந்திருக்கிறது, குறிப்பாக, ''கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ஆக்ட்'', ''அப்-டேடிங் ஸ்கீம்'' ஆகியவையாகும். மற்றும் இந்த நல்ல நேரத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர்; மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு





வருகிறார்கள். குறிப்பாக மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடந்த மாதத்தில் ஏற்பட்ட மழைச்சேதங்களின் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்த துரித நடவடிக்கைகளை நான் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்போல அவருக்கு உறுதுணையாக இருந்த வருவாய்த் துறை அதிகாரிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்த் துறை அதிகாரிகளும், இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்திருந்தால், இன்றைய தினம், வைகை அணையும், குடகனாறு அணையைப் போல் உடைந்து போயிருக்கும். அந்த நிலைமை ஏற்பட்டிருந்தால், இன்றைக்கு மதுரை நகரமே இல்லாமல் இருந்திருக்கும். அந்த வகையில் துரிதமான நடவடிக்கைகளை காலாகாலத்தில் எடுத்ததால் அணையும் காப்பாற்றப்பட்டிருக்கிறது. மழைச் சேதங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியளித்திருக்கிறார்கள்.

அடுத்து மாவட்ட வளர்ச்சி மன்றத்தைப் பொறுத்தவரையில், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், இன்றைய தினம், அங்கே ஒரு ரெக்கமண்டேடிவ்பாடியாக இருக்கிறதே தவிர, அங்கே முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் தாக்கீது அனுப்பினால் அனைத்துத் துறையைச் சார்ந்த அதிகாரிகளும் வர வேண்டும். ஆனால் சில அதிகாரிகள் வர மறுக்கிறார்கள். குறிப்பாக போக்குவரத்துத் துறையில் இருக்கின்ற சில அதிகாரிகள் வர மறுக்கிறார்கள். அதே போல, மருத்துவத் துறையிலே இருக்கின்ற சில அதிகாரிகள் வர மறுக்கிறார்கள். ஆகவே மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு அனைத்து அலுவலர்களும் கட்டாயம் வந்து, பங்கேற்கவேண்டுமென்று அரசு அறிவுறுத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்படுத்தப்படுகின்ற புதிய மாவட்டம் அண்ணா மாவட்டம் என்ற பெயரோடு, பெரியகுளம், திண்டுக்கல் வருவாய்க் கோட்டங்களுடன், உசிலம்பட்டியின் ஒரு பகுதியும், நிலக்கோட்டையின் சில பகுதிகளையும் இணைத்து, அதை அண்ணா மாவட்டமாக, புதிய பொலிவோடு, வளமான ஒரு மாவட்டமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேனியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டாரம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும், அதுபோல பெரிய கிராமங்கள் பிரிக்கப்பட்டு அதிலே தனித்தனி நிர்வாக அதிகாரிகளை போட்டு, மக்களுக்கும் வருவாய்த்துறைக்கும் ஒரு இணைப்புப் பாலமாக இருக்க வேண்டுமென்றும் வேண்டி

விரும்பிக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அளித்துள்ள இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல்-11-00)

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நிலவரித்துறை, இயற் கைச் சீற்றங்கள் குறித்து துயர் தணிப்பு, இழப்பீடுகளும் ஒதுக் கீடுகளும் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய மானியக் கோரிக் கைகளில் சற்றொப்ப 75 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு இருக் கிறது. இந்த மானியங்களில் திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நாட்டிலே மிகப்பெரிய பிரச்சனையாக பேசப்படுபவை இந்த மாவட்ட பிரிவினைகள் குறித்துத் தான். பல்வேறு வகையிலே பிரிக்கப்பட்டு 16 மாவட்டங்கள் இன்றையதினம் இருந்தாலும், இன்னும் பல்வேறு மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற அளவிலே கருத்துக்கள் பல் வாறாக வரப்பெற்று, தற்போது அது நிபுணர் குழுவிடத்திலே விடப்பட்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், இதிலே நீண்ட நெடுங்காலமாக, சுய மரியாதை இயக்கக் காலத்திலே யிருந்து பணியாற்றி வந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர் கள் திராவிட இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த நேரத் தில், நம்முடைய இன்றைய வருவாய்த்துறை அமைச்சர் அவர் கள், மாணவர்கள் இயக்கத்தின் தலைவராக, பொறியியல் கல்லூரியிலிருந்து நேரிடையாக திராவிட இயக்கத்தின் பணிக் காக வந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் உள் ளத்தை நன்று அறிந்தவர்கள் அவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் இறுதிக் காலத்திலே தன்னுடைய காஞ்சியிலே பல அலுவலகங்களையும், பல மாடிக் கட்டிடங்களையும் ஏற் படுத்தி, அதை ஒரு மாவட்டமாக ஆக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அப்படிக் கருத் துக் கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மாவட்டம், இன்றைய தினம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயராலே பிரிக்கப்படாமல் இருப்பது, ஏற்படுத்தப்படாமல் இருப்பது வன்மையாக கண்டிக்கக்கூடியது மட்டும் அல்ல, உள்ளபடியே பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ணத்திற்கும் உள்ளத்திற்கும் நன்றி தெரிவிக்கின்ற கடமையாக ஆகாது. அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரமும், அதனோடு ஒட்டிய வட்டங்களான திருத்தணி, காஞ்சி, அரக்கோணம்





சூணாம்பேடு, வந்தவாசி, செய்யாறு ஆகியவைகள் அனைத்தை யும் சேர்த்து அந்தப் பகுதிக்கு பேரறிஞர் அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டவேண்டும் என்கிற அண்ணா அவர்களின் அவாவை, திராவிட இயக்கத்தில் நீண்ட காலமாக பணியாற்றி வந்த நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஏதோ ஒரு சூழ்நிலை காரணமாகவோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ, அவர்கள் அந்த மாவட்டத் திற்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைக்காமல் இருப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வருத்தத்தையும, கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்படி ஒரு மாவட்டத்தை பிரித்து அண்ணா அவர்கள் பெயராலோ வைக்கவில்லை என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பெயராலே அந்த மாவட்டம் அமைக்கப்பட வேண்டும் என்று ஒரு போராட்டத்தை நடத்த வேண்டிய கட் டாயத்திற்கு ஆளாக்கக்கூடிய அளவிற்கு இந்த அரசு செய் யாது என்று நினைக்கிறேன்.

அதற்கு அடுத்து, நல்ல நிர்வாகத்தோடு நடைபெற்றுக் கொண்டிருந்த, இந்த வருவாய்த்துறையின் கிராம அதிகாரி களுடைய நிர்வாகம், 1980-லே நீக்கப்பட்டு, நவம்பர் மாதம் 14 ஆம் தேதி அந்த வருவாய்த்துறை கிராம அதிகாரிகள் எடுக்கப்பட்டு, சென்ற ஆண்டு, இந்த ஆண்டும் அந்த கிராம அதிகாரிகள், வில்லேஜ் அட்மினிஸ்டிரேட்டிவ் ஆபிசர் என்ற அளவிலே ஓரளவிற்கு நிரப்பப்பட்டாலும், இன்னும் பல இடங்களிலே, பல கிராமங்களிலே அந்த கிராம அதிகாரிகள் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக அந்த இடங்களை நிரப்பி, கிராம நிர்வாகம் செம்மையாக நடப்பதற்கு வருவாய்த்துறை துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் வளர்ந்து வரக்கூடிய சூழ்நிலைகளைப் பார்க்கிற போது கிராமங்களெல்லாம் வில்லேஜ் என்ற நிலை யிலிருந்து மாறி டவுன் பஞ்சாயத்து என்று வளர்கிற நிலை மையைப் பார்க்கிறபோது ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு நகரமாக ஆகக்கூடிய அளவுக்கு, பஞ்சாயத்துக்களாக ஆகக் கூடிய அளவிற்கு இருக்கிற காரணத்தால், வெள்ளைக்காரன் காலத்தில் உருவாக்கப்பட்ட வில்லேஜ், வில்லேஜ் அட்மினிஸ்ட் ரேஷன் என்ற நிலைமையை மாற்றி, அவைகளை ஃபர்ஸ்ட் மெயின் வில்லேஜ், செகண்ட் மெயின் வில்லேஜ், தேர்ட் மெயின் வில்லேஜ் என்று மாற்றி அமைப்பதற்கு உரிய ஒரு புதிய சிந்தனையை வருவாய்த்துறை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1984 மார்ச் 26

ஒவ்வொரு கிராமத்திலும், ஹேம்லட்டுகள், மதுராக்கள் பல்வேறு முறைகளிலே வளர்ந்திருக்கின்றன. ஜனத்தொகையில் மட்டும் அல்ல, பல்வேறு முறைகளிலும் வளர்ச்சிகள் ஏற்பட்டு வளர்ந்திருக்கிற காரணத்தால், ஹேம்லட்டுகளையும் மதுராக்களையும் தனி கிராமமாக ஏற்படுத்துகின்ற அளவுக்கு வளர்ந்திருக்கிற காரணத்தால்,, அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

இன்றையதினம் புதிய முறையில் மாற்றங்களைக் கொண்டு வர எப்படி சர்வேக்களை செய்து நிலங்களை அளக்கிறார்களோ, அது போல, கிராமங்களையும், மதுராக்களையும் மெயின் வில்லேஜ்களாக மாற்றுவதற்கு இந்த அரசு புதிய சிந்தனையை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சிப் பணிகள் என்ற பெயராலே இன்றைய தினம் பல்வேறு திட்டங்களைச் செய்திருந்தாலும், அவைகள் எல்லாம் மழை பெய்து விட்டகாரணத்தால் அரைகுறையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். குடிதண்ணீர் கிணறுகள் எடுக்கும் பணி அரைகுறையாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அதேபோல வறட்சி நிவாரணத்திலே இராட்சத கிணறுகளை எடுத்தார்கள். அந்த இராட்சதக் கிணறுகளைக் கொண்டு பல்வேறு கிராமங்களுக்கு ஓவர் ஹெட் டேங்குகள் மூலம் தண்ணீர் கொண்டு செல்வதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இன்றைய தினம் அவை முடிக்கப்படாமல் இருக்கின்றன. அதேபோல் பாசன பணிகள் அரை குறையாக இன்றைய தினம் நின்று கொண்டிருக்கின்றன. அதேபோல் முடிக்கப்பட்ட சாலைகள் என்று இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. பல சாலைகள் இன்றையதினம் பழுதடைந்ததாக இருக்கின்றன. அவைகளை மீண்டும் சரி செய்யவேண்டும். வறட்சி காலங்களில் அங்கே இருக்கிற கிராம மக்களுக்கு வேலை தரவேண்டும் என்ற அடிப்படையில் அவர்கள் பசி பட்டினியோடு இருக்கக்கூடாது என்று அவசர காலமாக அந்த வேலைகள் எடுத்துக் கொண்டாலும் இன்றைய தினம் மெய்ன்டெனன்ஸ் இல்லாத காரணத்தால் கிராமங்களில் இருக்கின்ற சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவைகளை மெயின்டனன்ஸ் செய்வதற்கு இந்த அரசு ஏதாவது ஒரு வழியில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தில் கடுமையான வறட்சியினால் நாங்கள் பாதிக்கப்பட்டோம். அப்படி பாதிக்கப்பட்ட நேரத்தில் பல்வேறு பணிகள் எடுத்து இருக்கிறார்கள். எல்லாவற்றையும் நான் குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவில்லை. குறிப்பாக இப்போது இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையில் வறட்சி நேரத்தில் பணியாற்றினார்கள் என்பதை சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சென்ற முறை வறட்சியால் பாதிக்கப்பட்டோம் என்று சொன்னால் இந்த முறை மழை



1984 மார்ச் 26] [திரு. பாபு ஜனார்த்தனன்]

பொழிந்து நாங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறோம். என்ன காரண ணமோ தெரியவில்லை வட ஆற்காடு மாவட்டத்தை இந்த ஆட்சி புறக்கணிக்கிறது என்று சொன்னால் கூட அது மிகையாகாது. சென்ற முறை வறட்சியால் பாதிக்கப்பட்டோம். இதே நாளில் சென்ற வருடத்தில் 11 மில்லி மீட்டர் மழைதான் சாதாரண காலங்களில் பெய்து இருக்கிறது. ஆனால் இப்போது கடுமையான இடி இடித்து மழை பெய்த காரணத்தால் 157 மில்லி மீட்டர் மழை வட ஆற்காடு மாவட்டத்தில் பெய்து இருக்கிறது. அந்த நவரை போகம் பாதித்துஇருக்கிறது விவசாயிகள் போட்ட பயிர்கள் நாற்றுகள் எல்லாம் நாசம் ஆகியிருக்கின்றன. விவசாயிகள் போட்ட கடன் போன்ற திட்டங்கள் இதை எல்லாம் வாங்கிய அவர்கள் இன்றையதினம் தத்தளித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களுக்கு கொடுக்கின்ற சலுகை தஞ்சை மாவட்டம் போன்று நல்ல முறையில் இருக்கின்ற காலால் மடை பாய்கின்ற நிலை உள்ள மாவட்டங்களுக்கு கொடுக்கின்ற சலுகைகள். அவர்களுக்கு கொடுக்கவேண்டாம் என்று நான் சொல்லவில்லை, ஆனால் வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் உழைப்பினால் தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக நெல்லை உற்பத்திச் செய்கின்ற இந்த மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட நேரத்திலும் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம். அதேபோல் மழை பெய்த பிறகு இன்றையதினம் விவசாயிகளுக்கு நல்ல முறையில் சலுகைகள் இல்லை. மற்ற விவசாரங்களும் இல்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக சொல்லவேண்டுமானால் இப்போது நவரை மழை பெய்து விட்ட காரணத்தால் மாவட்டத்தில் அதை பயிர் செய்தவர்கள் கடலக்காய் கைக்கு வராத காரணத்தால் நல்ல முறையில் அந்த விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு எல்லாம் உதவி செய்ய இந்த அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மழை பெய்தபிறகு இந்த வெள்ளநிவாரண நிதி போதாது என்று அரசு 128 கோடி கேட்டது, 10 கோடி ரூபாய் அளவில் இந்திய அரசு கொடுத்து இருக்கிறது. இதற்கு முன்பு எல்லாம் இதைப் பற்றி கண்டனமாக தீவிரமாக அந்த அறிக்கையில் இருக்கும். இன்றையதினம் இந்த அறிக்கையில் மத்திய அரசை நாங்கள் கேட்ட தொகை கொடுக்க வில்லை. அதை நாங்கள் வற்புறுத்துகிறோம் என்றோ அல்லது வேறுவகையில் மத்திய அரசை கேட்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இந்த அறிக்கையில் அதைப்பற்றி எதுவும் இல்லை. 128 கோடி ரூபாய் கேட்டோம் 10 கோடி ரூபாய் தான் தந்தார்கள் என்று அறிக்கையில் சொல்லி சமர்ப்பித்து இருக்கிறார்களே தவிர வேறு வேகமான முயற்சி மத்திய அரசை தட்டிக் கேட்டோம் அல்லது நியாயமான கோரிக்கை என்ற அளவில் இதில் குறிப்பிடப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. பாபு ஜனார்த்தனன்] [1984 மார்ச் 26

இன்னும் பல்வேறு திட்டங்கள் தீ விபத்து ஏற்பட்டால் 200 ரூபாய் கொடுக்கிறீர்கள் என்று எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். ஒரு காலத்தில் அதாவது வெள்ளைக்காரன் காலத்திலிருந்து அதை கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றினார்கள். இன்றையதினம் நடைமுறையில் தீ விபத்துக்கு 200 ரூபாய் கொடுப்பது போதாது என்பதை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல் நிலம் அற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் ஒப்படைப்புப் பணி மிகவும் நிதானமாக இருக்கிறது. எல்லா தாலுக்கா அலுவலகத்திலும் இருந்த அசைன்மெண்டு தாசில்தார்களை எடுத்துவிட்டார்கள். அந்த அசைன்மெண்டு தாசில்தார்களை ஆங்காங்கே நியமித்து இந்த நில ஒப்படைப்புப் பணியை துரிதப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் பல்வேறு திட்டங்கள் பில் முத்தாப்பட்டா, சுரேத்தியம், என்னுடைய தொகுதியில் மரம் ஏறுபவர்களுக்கு நவாப் காலத்திலும், பிறகு வெள்ளைக்காரன் காலத்திலும் பல முத்தாப் பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு பிறகு பல்வேறு விவசாயிகள் வாங்கியிருக்கிறார்கள். சுரேத்திரியம் போன்ற நிலங்கள் வாங்கப்பட்டு பிறகு அது பட்டா மாற்றம் செய்ய முடியாமல் இருக்கிறது. அதேபோல் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு என்னுடைய தொகுதியில் ஹைவேஸ்-ல் இருக்கின்ற எல்.ஜி.ஜி. எஸ்.-க்கு ஒப்படைக்கப்பட்ட ஒரு ஆக்கிரமிப்பு நிலத்தை ஒரு சிலர் அதிலே குடிசைகள் போட்டுக் கொண்டு யாருக்காக ஒதுக்கப்பட்டதோ அவர்கள் அடையமுடியாத நிலை இருக்கிறது. இப்படி பல்வேறு இடங்களில் அந்த குறிப்பிட்ட ஒப்படைக்கப்பட்ட இடத்தை பல்வேறு துறையினர் ஆக்கிரமிப்பு செய்தவர்களை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய நகர்புறத்தில் இருக்கின்ற ஆக்கிரமிப்புப் பற்றி சொல்லவேண்டுமானால் வெளி மாநிலத்தவர்கள்— அதை மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கூட ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு பொது கருத்தாக சொல்லியிருக்கிறார்கள்—தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டு இன்னும் கொஞ்சம் காலம் போனால் இங்கே தமிழர்கள் இல்லையோ என்ற நிலையை உருவாக்கக்கூடிய அளவுக்கு இங்கே பிரச்னைகள் இருக்கின்றன. பல்வேறு மாநிலத்தவர்கள் ஏறக்குறைய பல்வேறு இடங்களை பிடித்துக்கொண்டு அங்கே தமிழர்கள் அல்லாதவர்கள் மிக உயர்ந்த நிலையிலும் தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் இங்கே வாழ முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஒரு கட்டுப்பாடு விதிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் வருவாய்த் துறை அலுவலகங்கள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. அதற்கு எல்லாம் சொந்த கட்டிடங்கள் தேவை. வருவாய்த்துறை இலாகா ஊழியர்களுக்கு ஓவர் டைம்



1984 மார்ச் 26] [திரு. பாபு ஜனார்த்தனன்]

தரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு பணிவோடு கொண்டு வருகிறேன். அந்த துறையில் இருக்கிற ஊழியர்கள் இரவு பகலாக வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஓவர் டைம் தருவதற்கு ஒரு புதிய சிந்தனையை அரசு சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்ட கிராம சாவடிகள் இன்றையதினம் குட்டிச்சுவராக பலயிடங்களில் இருக்கின்றன. அவைகளை புதுப்பித்து ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிராமச் சாவடி அமைப்பது முக்கியமானது.அதை நல்ல முறையில் செய்ய வேண்டும். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை பொறுத்தவரையில் முன்பு 100 டிவிஷன்கள் இருந்தன. இன்றைய தினம் 150 டிவிஷன்களாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்த வருவாய் அலுவலகத்தை எந்த எந்த வகையில் விரிவுபடுத்தவேண்டுமோ அந்த வகையில் விரிவுபடுத்தியும் புதிய அலுவலகங்கள் திறக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நில உச்ச வரம்பு சட்டத்தை கொண்டு வர மத்திய அரசோடு போராடுவதற்கு இந்த அரசு ஒரு பெரிய தீர்மானத்தை நிறைவேற்றினால் அதற்கு எல்லாக்கட்சிக்காரர்களும் ஏகமனதாக உதவுவார்கள். அந்த நில உச்சவரம்புச் சட்டத்தை பற்றி சரியாக இந்த அறிக்கையில் தெரிவிக்கவில்லை என்பதை தெரிவித்து நான் அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 11.10)

திரு. எம். சின்னசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வருவாய்த் துறை நாட்டினுடைய முதுகெலும்பாக இருந்து வருகிறது. வெள்ளைக்காரரின் சின்னமாக இருந்த ரெவின்யூ. போர்டை இந்த அரசு எடுத்தது மிகவும் புரட்சிகரமான செயல் அதைப்போலவே குட்டிராஜாக்களாக இருந்த பகுதிநேர கிராம அதிகாரிகளை ஒழித்து இன்றைய தினம் முழு நேர அதிகாரிகளாக இளைஞர்களை நியமித்து கிராமப்புறங்களிலே நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கும் பொது மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கும் நல்ல ஒரு புரட்சிகரமான திட்டத்தை மாண்புமிகு புரட்சித தலைவர் அவர்கள் அரசு கொண்டுவந்திருக்கிறது. இந்தியவிலேயே வேறு எந்த மாநில அரசும் செய்யாத அளவுக்கு இந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது.

பகுதி நேர கிராம அதிகாரிகளை ஒழித்ததன் விளைவாக மற்ற மாநிலங்கள், குறிப்பாக ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சர் திரு. என்.டி.ஆர். அவர்கள் நம்முடைய நிலைமைகளைப் பார்த்து அங்கேயும் அந்த அதிகாரிகளை ஒழித்து இதுபோன்ற சீர்திருத்தத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள் என்று சொன்னால்

[திரு. எம். சின்னசாமி] [1984 மார்ச் 26

நம்முடைய மாநிலம் இந்த வருவாய்த்துறையிலே மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் எந்த அளவுக்கு வழகாட்டியாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது உள்ளபடியே நாம் பெருமைப்பட வேண்டும்.

மாவட்ட நிர்வாகம் எளிமையாக நடப்பதற்கும் மக்களுடைய குறைகள் விரைவில் தீர்க்கப்படுவதற்கும் திரு. அம்புரோஸ் அவர்கள் தலைமையில் ஒரு நபர் குழு நியமிக்கப்பட்டது. அந்த குழு 184 பரிந்துரைகளை அரசுக்குக் கொடுத்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளிலே 134 பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. எஞ்சிய பரிந்துரைகளைப் பொறுத்வரைக்கும் மற்றத் துறைகளைக் கலந்து கொண்டு ஆணை பிறப்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த விளக்கக் குறிப்பிலே தெரிவித்து இருக்கிறார்கள். அப்போதுதான் இந்த நிர்வாகத்தை இன்னும் எளிமைப்படுத்துவதற்கும் பொதுமக்களுடைய குறைகளை அவ்வப்போது தீர்ப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

தாசில்தாரைப் பொறுத்தவரையில் அவர் செக்கண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் ஆக இருக்கிற காரணத்தினால் பல்வேறு பணிகளை அவர் கவனிக்க வேண்டியிருக்கிறது. தாலுக்காக்கள் மிகப் பெரிய தாலுக்காக்களாக இருக்கின்றன. தாசில்தாருடைய பணிகளைக் குறைக்கின்ற வகையில்—மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒரு பி. ஏ. உதவியாளர் இருப்பதைப்போல—தாசில்தாருக்கும் ஒரு உதவியாளரை நியமிக்கவேண்டும். அப்படி நியமித்தால் பொதுமக்களோ மற்றவர்களோ கோரிக்கைகளைக் கொடுப்பதற்கும் கோரிக்கைகள் என்ன என்று பார்த்து விரைவிலே நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பும் ஏற்படும் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள கரூர் தாசில்தாருக்கு ஒரு ஜீப் கொடுத்திருக்கிறார்கள். அது மிகவும் மோசமாக இருப்பதால் தாசில்தார் தன்னுடைய பணிகளைச் சரிவர செய்ய முடியவில்லை. அரசாங்கத்திற்கு எழுதியபோது, இந்த ஆண்டு ஜீப் கொடுப்பதற்கில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனித்து, எல்லாத் தாசில்தார்களுக்கும் புது ஜீப்களை—எப்படி போலீஸ் துறைக்குக் கொடுத்திருக்கிறார்களோ, அதைப்போல—கொடுத்தால்தான் அவர்கள் தங்கள் பணிகளை விரைவில் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்கும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இருப்பதைப் போல, ஆர்.டி.ஓ. அலுவலகத்திலேயும், தாலுக்கா அலுவலகத்திலேயும் பி.ஆர்.ஓ.க்களை—அதாவது பொதுமக்கள் தொடர்பு அதிகாரிகளை ஏற்படுத்தினால்தான் பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகளையும், குறைகளையும் சொல்வதற்கும், எந்த எந்த



1984 மார்ச் 26] [திரு. எம். சின்னசாமி]

இடங்களில் தங்கள் கோரிக்கை மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன என்பதை அறிந்து கொள்ளவும், அதன்மீது என்ன மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

மாவட்ட ஆட்சித் தலைவரோ அல்லது வருவாய்த் துறை அதிகாரியோ மாதத்திற்கு ஒரு முறை அந்தந்த தாலுக்கா அலுவலகங்களில் அமர்ந்து மக்களின் கோரிக்கைகளைக் கேட்க வேண்டும். மறுபடியும் அடுத்த மாதம் அங்கே வந்து, சென்ற மாதம் கொடுக்கப்பட்ட கோரிக்கைகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரத்தையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது பொதுமக்களுக்கு வருவாய்த்துறையின் மீது நல்ல நம்பிக்கை ஏற்படும் என்ற யோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிர்க்கா அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், அதாவது வருவாய் ஆய்வாளர்களுக்குப் பல்வேறு இடங்களில் வீடுகள் இல்லை, சரியான அலுவலகங்கள் இல்லை, அதையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்திலே மாவட்டங்கள் பெரிதாக இருப்பதால், நிர்வாகத்தை எளிமையாக நடத்துவதற்காக இன்றைக்குப் புது மாவட்டங்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், உத்தரப் பிரதேச மாநிலத்திலே நம்முடைய தாலுக்கா அளவில் இல்லையென்றாலும், நம்முடைய ரெவின்யூ டிவிஷன் அளவிற்குத்தான் மாவட்டங்கள் இருப்பதால்—சிறு மாவட்டங்களாக இருப்பதால் நிர்வாகம் அங்கே எளிமையாக நடப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாநிலத்தில், உத்தரப் பிரதேசத்தில் எப்படி மாவட்டங்களைப் பிரித்து இருக்கிறார்களோ அதே அடிப்படையில் இங்கேயும் பிரிக்க வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சியைப் பொறுத்த வரையில் அது பெரிய மாவட்டமாக இருப்பதால் அந்த மாவட்டத்தை இன்றைக்கு இரண்டாகப் பிரிப்பதாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதையடுத்து, மாவட்டத்தின் தலைநகராகப் பெரம்பலூரை அறிவித்திருக்கிறார்கள். பெரம்பலூர் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது ; அதே நேரத்தில் பிற்பட்ட பகுதியாகவும் இருக்கிறது. மேலும், அது அமைய இருக்கின்ற இரண்டாவது மாவட்டத்திற்கு நடு நாயகமாக இருப்பதால் நிச்சயமாக நான் அதை வரவேற்கிறேன்.

[திரு. எம். சின்னசாமி] [1984 மார்ச் 26

ஆனால், திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இராமநாதபுரம் மாவட்டம் எப்படிப் பெரிய மாவட்டமாக இருக்கிறதோ, அதைப்போல மூன்று மாவட்டங்களாக அமையும் அளவிற்கு நிலப்பரப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, திருச்சி மாவட்டத்தைப் மூன்றாகப் பிரித்து, மாவட்டத்தினுடைய தலைநகரமாக ஆகின்ற அளவிற்குத் தகுதியும், மற்ற சில வசதிகளும் பெற்றிருக்கின்ற கரூர் நகரத்தை மூன்றாவது மாவட்டத்தில் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரவர்களுக்கும், இந்தத் துறையைப் பொறுப்பேற்று இருக்கின்ற மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய வேண்டுகோளை கரூர் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மூன்றாவது மாவட்டத்தைப் ஏற்படுத்தி, அந்த மாவட்டத்திற்குக் கரூரைத் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்ற வேண்டுகோளை அந்த மக்களின் சார்பில் இன்றைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல, திருச்சிராப்பள்ளி மாவட்டம்—ஸ்ரீரங்கம் மாவட்டத்தையும், திருநெல்வேலி மாவட்டத்தில்—நம்முடைய துணை சபாநாயகர் அவர்களின் தொகுதியான சேரன்மாதேவி வட்டத்தையும், சேலம் மாவட்டத்தில் பரமத்தி—வேலூர், கொல்லிமலை வட்டங்களையும் ஏற்படுத்துவது பற்றிய செயற்குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்போல கரூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, அரவக்குறிச்சியைத் தலைநகராகக் கொண்ட தனித் தாலுக்காவை அமைக்க வேண்டுமென்று நானும், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும் பல்வேறு நேரங்களில் சொல்லியிருக்கிறோம். அமைச்சரவர்கள் நிச்சயமாகப் பிரித்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அது பற்றி இந்த விளக்கக் குறிப்பில் காணப்படவில்லை. அதையும் மற்ற வட்டங்களை ஏற்படுத்துகின்றபொழுது சேர்த்துப் பிரிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், கரூர் வட்டத்தைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ 50 மைல் சுற்றளவு கொண்ட ஒரு தாலுக்காவாக இருக்கிறது. அதனால் அங்கே உள்ள தாசில்தாரால் சரியாகக் கவனிக்க முடியவில்லை. பொது மக்களும் 50 மைல் சுற்றளவில் இருந்து தாலுக்கா அலுவலகத்திற்கு வரவேண்டி இருக்கிறது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்த வரையில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி பணியானாலும் சரி, வெள்ளப் பணியானாலும் சரி, இந்த அரசு போர்க்கால நடவடிக்கையைப்போல எடுத்து, மாற்றுக் கட்சியைப் சார்ந்தவர்களும் குறை சொல்ல முடியாத அளவிற்கு நிவாரணப் பணிகளை நல்ல முறையில் செய்திருக்கிறது.



1984 மார்ச் 26] [திரு. எம். சின்னசாமி]

(முற்பகல் 11-20)

வறட்சிப் பணி காலத்திலும் சரி, வெள்ளப்பணிக் காலத்திலும் சரி பார்வையிடுவதற்காக வந்த மத்திய குழு கூட அந்தப் பணிகள் சிறப்பாக நடந்திருப்பதாகப் பாராட்டி இருக்கிறார்கள். மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் கூட வெள்ள நிவாரணப் பணியை வந்து பார்த்துவிட்டு அரசின் பணிகளைப் பாராட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். வறட்சிக் காலத்தில் குடிநீர் வழங்குவது, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருத்துவமனைகளுக்கு போதிய மருந்துகள் வழங்குவது, சிறு உழவர்களுக்கு உரம் பூச்சி மருந்து போன்றவற்றைக் குறைந்த விலையில் கொடுப்பது போன்ற பணிகளைச் சிறப்பாகச் செய்ததற்காகப் பாராட்டுகிறேன்.

அதைப்போல நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கி இருக்கின்றன என்றபோது, வறட்சி ஏற்பட்ட நேரத்தில் அதை வாங்கி நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு வேட்டியும், சேலையும் இலவசமாகக் கொடுத்ததை நான் பாராட்டுகிறேன். இந்தியாவிலே மற்ற மாநிலங்களுக்கு இந்தப் பணி ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது.

மத்திய அரசைப் பொறுத்த வரையில் வெள்ள நிவாரணப் பணிக்காக ஒதுக்கிய தொகையை செலவு செய்ததற்குப் பிறகு தான் மீதித் தொகையைக் கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் கிடைக்கின்ற நிதியினைச் சரியாகச் செலவு செய்தது என்ற பாராட்டை மத்திய அமைச்சர்களே தெரிவித்திருக்கிறார்கள். எனவே, மத்திய அரசு உடனடியாக எல்லாத் தொகைகளையும் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, வருவாய்த்துறையிலே பொதுவான காரியங்களுக்காக நிலத்தை கையகப்படுத்தும்போது நட்ட ஈட்டுத் தொகை வழங்குவதில் வீணான கால தாமதம் ஏற்படுகின்றது. என்னுடைய தொகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே இருந்து பாலம் கட்டுகிறார்கள். அந்தப் பாலத்திற்கும் அதை ஒட்டி இருக்கின்ற பாதைக்கும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 4 ஆண்டுக்காலம் ஆகின்றது. ஆனால், நிலச் சொந்தக்காரர்களுக்கு இன்னும் பணம் கொடுக்காத நிலைமை இருக்கின்றது. ஆகவே, அவர்களுக்கு விரைவாக நட்ட ஈட்டுத் தொகையினை வழங்குவதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கென்த் தனியாகத் தாசில்தார் போட்டு நிச்சயமாக விரைந்து அந்தப் பணியைச் செய்து முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுமனை வழங்குவதைப் பொறுத்த வரையில் ஏழைகளுக்கும், போர் வீரர்களுக்கும், நிலமற்ற ஏழைகளுக்கும், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் வீட்டுமனை கொடுப்பது பற்றி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். 1937-லே இருந்து 1965 ஆம் ஆண்டு வரை பல்வேறு காலக் கட்டங்களில் நடைபெற்ற மொழிப் போராட்டத்தில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், தமிழ் மொழிக்காக நடைபெற்ற போராட்டத்தில் ஈடுபட்ட அத்தனை பேர்களையும் இந்த வீட்டுமனை வழங்குகின்ற பட்டியலிலே இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கரூர் நகரத்தில் படிக்கட்டுத் துறையில் கடந்த 10 ஆண்டு காலமாக இருந்து வருகின்ற மக்கள் தங்களுக்கு இடம் வேண்டும், வீட்டுமனை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் குறிப்பிட்ட இடத்தைத் தனி நபர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அந்த நிலத்தை எடுத்துத் தருவதற்குரிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே திருமுக்குடி என்ற ஊர் இருக்கின்றது. அங்கே புறம்போக்குப் பகுதியில் இருக்கின்ற மக்கள் 100 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறார்கள். அவர்களும் பட்டா கேட்கிறார்கள். அதையும் சீக்கிரமாகக் கொடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து விடைபெறுகிறேன்.

*திரு. டி. மணி : தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின் மீது சில விவரங்களை நான் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக கோடிக்கணக்கான விவசாயிகள் இருக்கின்ற நம்முடைய மாநிலத்தில் நிலச்சீர்திருத்தம் "என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வராமல், ஏழை விவசாயிகளுக்கும், நில மற்ற விவசாயிகளுக்கும் நிலம் வழங்காமல் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

ஏற்கனவே நம்முடைய மாநிலத்தில் இந்த அரசாங்கம் முன்னால் கொண்டு வந்திருந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலமாக பினாமி நிலங்களை எடுத்து முழுமையாக நிலச் சீர்திருத்தச் சட்டத்தை கொண்டுவருவதின் மூலம்தான் பிரச்சனைகளுக்கு தீர்வு காணமுடியும்.

குறிப்பாகத் தமிழகத்தில் 150 இலட்சத்திற்கு அதிகப்படியான சாகுபடி நிலங்கள் உள்ளன. அரசாங்கத்தின் கணக்குப்படி 1981 ஆம் ஆண்டு முடிய நிலவுடைமைச் சட்டத்தின் மூலமாக 80 ஆயிரம் ஏக்கர் நிலம் தான் இதுவரை வினியோகம் செய்யப்





பட்டுள்ளது. அதுமட்டுமல்ல. இந்த பினாமி நிலங்களை எடுத்தாலே 2 இலட்சம் ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பினாமி நிலச் சட்டத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் மீண்டும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவோம் என சொன்னீர்கள். அந்தச் சட்டத்தைக் கொண்டு வரக் காணோம். தற்போது அமலில் இருக்கும் 18 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கண்டிப்பாக அமல்படுத்தினாலே 20 இலட்சம் ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று சொல்லப்படுகின்றது. 1977-லிருந்து ஆட்சியிலிருக்கும் இந்த மாநில அரசாங்கம் இந்தச் சட்டத்தை ஏன் இன்னும் கொண்டுவரவில்லை. இந்தச் சட் சட்டத்தை ஓரளவு அமுலாக்கினால் மட்டுமே இப்படிப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

குத்தகைதார விவசாயிகளைப் பொறுத்த மட்டில் ஏற்கனவே நம்முடைய மாநிலத்தில் 1983 நவம்பர் முடிய 4,39,474 பேர்கள் தான் குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது 4,36,511 ஏக்கர் நிலங்களாகும். இது சாதாரணமாக, நடைமுறையில் சரியான கணக்கு என்று தோன்றவில்லை. சுமார் 15 இலட்சத்துக்கு அதிகமான குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பதிவு செய்யப்படாததால் எந்த விதப் பாதுகாப்பும் இல்லாத நிலைமை இருக்கிறது.

விவசாயிகளிடமிருந்து கோவில் நிலங்களைப் பதிவு செய்வதில் பல்வேறு காரணங்களால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கோவில் நிலங்களைக் குத்தகைதாரர்களுக்குப் பதிவு செய்து தரும் ஏற்பாட்டைச் செய்து தர வேண்டும்.

கடந்த 1983-84-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்றபொழுது தெளி வாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உழுபவனுக்கே நிலம் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவை இன்னும் அமலாக்கப்படவில்லை. ஆனால், ஆண்டுகள் பல ஓடி னாலும், அதற்கும் முன்னால் சொல்லப்பட்ட அந்த நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேறமுடியவில்லை. ஆகவே, உழுபவனுக்கே நிலம் தரக்கூடிய அந்த ஏற்பாட்டைச் செய்யக் கூடிய சட்டம் கொண்டு வரவேண்டுமென்றும் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று ஏராளமான ஏக்கர், ஆயிரக்கணக்கான ஏக்கர் வைத் திருக்கிற தனியார் தோட்ட முதலாளிகள் இன்னும் இருக்கிறார் கள். அந்தத் தோட்ட முதலாளிகள் 50-க்கும் மேலான புறம் போக்கு நிலங்களை வைத்திருக்கிறார்கள். பல்வேறு மாவட் டங்களில் குறிப்பாக, நீலகிரியை எடுத்துக் கொண்டாலும் சரி,

அது போன்று கொடைக்கானல் பிரதேசமானாலும் சரி, இது போன்று நிலங்களைக் குவியலாக வைத்திருக்கிற பெரிய முதலாளிகள் இருக்கிறார்கள். அது போன்று கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் ஆம்பாடி, காந்திமதி, சிவலோகம், வைகுண்டம் ஆகிய பகுதிகளில் இப்படிப்பட்ட ரப்பர் தோட்ட முதலாளிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள், 50 ஏக்கர்களிலிருந்து 200, 300 ஏக்கர்களுக்கு மேலாக அரசு புறம்போக்கு நிலங்களை வைத்திருக்கிறார்கள். அந்தப் புறம்போக்கு நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 18 தான் வரியாக வசூலிக்கப்படுகிறது. ஏற்கனவே ரப்பர் அதிகப்படியான வருவாய் தருகிறது. அந்தப் பகுதியிலே சுற்றியிருக்கிற சிற்றாறு ஒன்றிரெண்டிலே அணை கட்டும் போது, ஆதிதிராவிட நிலமில்லாத ஏழை விவசாயிகள், 200-க்கு அதிகமானவர்கள் நிலமிழந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலேயிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, மேலே குறிப்பிட்ட தோட்ட முதலாளிகளின் கைவசமுள்ள புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குக் கொடுத்தாலே அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண முடியும்.

அதே போன்று தோவரச்சன் விளை என்று சொல்லப்படுகின்ற இடத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள், நூறு ஆண்டுகளுக்கு மேலாக கைவசம் வைத்து அனுபவித்து வரும் நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்ற சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அந்த நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே கலியன் கிராமத்திலே விலியயிலா என்று சொல்லப்படுகின்ற பகுதியிலே 1948-லே அரசுப் புறம்போக்கு பாரஸ்ட் நிலங்களிலே விவசாயம் செய்தவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் சுமார் 100 ஏக்கர்கள் வைத்திருக்கிறார்கள். முன்னாள் இராணுவ வீரருக்கும் அவர்களுக்கும் அங்கே இருக்கிற பிரச்னை காரணமாக, அந்த நிலங்களுக்குப் பட்டா கொடுக்காத ஒரு நிலை இருந்து வருகிறது. அரசு புறம்போக்கு நிலத்திற்கு அருகாமையில் பாரஸ்ட் நிலங்கள் என்று சொல்லக்கூடிய பல பகுதியில் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலங்களிலே, நீண்ட காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். விவசாயிகள். அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்றால், மத்திய அரசைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

சமீபத்திலே இரண்டு தினங்களுக்கு முன்னாலே, பத்திரிகைகளிலே ஒரு செய்தியைப் படித்தேன். கேரள மாநிலத்தில் 1977-க்கு முன்னாள் சுமார் 50,000 ஏக்கருக்கு அதிகமான பாரஸ்ட் நிலங்களை கையகப்படுத்தி மத்திய அரசாங்கம் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப் போவதாகத் தெரிகிறது.



அதே மாதிரி தமிழ்நாட்டிலும் பாரஸ்ட் நிலங்களில், பல ஆண்டுகள், 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலத்திலே கைவசம் வைத்திருக்கிற ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலம் கிடைக்க மத்திய அரசாங்கத்திடம் அந்தத் தகவலைச் சொல்லி, நாம் அவர்களுக்குப் பட்டா கொடுக்கின்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாவட்ட நிர்வாகச் சம்பந்தப்பட்ட வரையில் டி.டி.சி. யிலிருந்து முதல் கூட்டம் ஆரம்பமாகிறது.

(முற்பகல் 11-30)

ஆனால் டி.டி.சி. கூட்டங்கள் எந்த அளவிற்கு நடக்கின்றன என்றால் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை சில மணி நேரங்கள் தான் நடக்கிறது. அது போதுமானதாக இருக்காது. மாவட்டத்தில் வருகிற அனைத்துப் பிரச்னைகளையும் குறித்து முடிவெடுக்கவேண்டியிருப்பதால் அந்த டி.டி.சி. கூட்டங்களை ஒரு நாள் முழுவதும் காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் நடைபெறுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டும். பல்வேறு துறைகளில் இருக்கிற மாவட்ட அதிகாரிகள் குறிப்பாக பாரஸ்ட் அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள், மற்றும் முக்கியமான இலாக்காக்களில் பணியாற்றுகின்ற அதிகாரிகளும் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளாத ஒரு நிலை இருக்கிறது. அதில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அந்த மாவட்டக் கூட்டங்களில் அந்த அதிகாரிகள் கலந்துகொள்ளக்கூடிய அளவில் நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வீட்டு மனை கொடுக்கிற காரியத்தில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. வீட்டு மனை கொடுப்பது மாவட்ட நிர்வாகத்தில் வருகின்றது. ஒவ்வொரு வட்டத்திலும் தாசில்தார்கள் எந்த அளவிற்கு இருக்கிறார்கள் என்றால், நான் விளவன்கோடு தாலுக்காவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 3,000 வீட்டு மனைகள் மக்களுக்கு வேண்டுமென்று மனுக்களை கொடுத்தேன். அந்த மனுக்கள் இதுவரையில் பைசல் ஆகவில்லை. காரணம் ஒரு வருடத்தில் இரண்டு தாசில்தார்கள் என்று மாற்றி விடுகிறார்கள். அதுபோல நான்கு வருடத்தில் நான்கு ஆர்.டி.ஓக்களை மாற்றியிருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தில் நான்கு வருடத்தில் நான்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களை மாற்றி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலை இருந்தால் எந்த வேலையும் சரிவர நடக்காது. குறிப்பாக ஒரு மாவட்டத்தின் பொறுப்பிலே இருக்கிறவர்கள் இரண்டு ஆண்டுகளும், ஆர்.டி.ஓ.க்கள் இரண்டு ஆண்டுகளும், தாசில்தார்கள் இரண்டு ஆண்டுகளும் ஒரே இடத்தில் பணிபுரிந்தால்தான் வசதியாக இருக்கும். அப்போதுதான் பிரச்னைகளுக்கு, குடி மனைப் பட்டா பிரச்சினையாக இருந்தாலும், விவசாயிகளுடைய பிரச்னையாக இருந்தாலும், புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா கொடுக்கிற பிரச்னையாக இருந்தாலும், எல்லாவற்றிற்கும் தீர்வுகாண முடியும்.

[திரு. டி. மணி] [1984 மார்ச் 26

அதைப் போல இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே எங்களுடைய பகுதியில் நிலவரித்துறை சம்பந்தமாக பட்டாக்கள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் அந்தப் பட்டாக்கள் எந்த நிலையில் இருக்கிறதென்றால் குறிப்பாக நில அளவை செய்வது பல கிராமங்களில் முடியவில்லை. முடிவடைந்த பல பகுதிகளில் இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன. நான் உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், நானும் என்னுடைய சகோதரனும் குடியிருக்கிற எங்கள் குடும்பத்தின் சுருக்கமான நிலத்திற்குகூட பட்டா கொடுக்கவில்லை. அதை வேறு இன்னொரு நபர் பெயரில் கூட்டுப் பட்டா என்று போட்டு விட்டார்கள். அப்படிப்பட்ட நிலை பல மாவட்டங்களில் இருக்கின்றன. எங்கள் குமரி மாவட்டத்திலேயும் இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்கிற அளவிலே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல கிராம நிர்வாகத்தை சீரமைக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். கிராம நிர்வாகத்தில் காலதாமதம் இருக்கிறது. குறிப்பாக சான்றுகள் பெற வேண்டுமென்று அந்தத் துறைக்குச் சென்றாலும் அதற்கான முறையான நடவடிக்கைகளை அவர்கள் செய்வதில்லை. காரணம் காலாகாலத்தில் அவர்கள் வருவதில்லை. சமீபத்தில் கிராம அதிகாரிகளை நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதில் கூட குமரி மாவட்ட மக்கள் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை. 500 பேர்கள் நேர்முகத் தேர்விலே கலந்துகொண்டிருக்கிறார்கள். அந்த குமரி மாவட்டத்திலே எந்த ஒருவரும் அந்த கிராம அதிகாரி பணியிலே போடப்படவில்லை.

அதைப் போல் தாலுக்கா அளவிலே இருக்கிற பிரச்னைகளுக்கு தீர்வு காண்கிற முறையிலே அதிகப்படியான அதிகாரிகளை— நியமிக்க வேண்டும். தரிசு நிலங்களை வழங்குவதற்கு அசெஸ்மெண்ட் அதிகாரிகள்—தனித் தாசில்தார்கள் ஈடுபடுத்தினால்தான் அவற்றில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

அதைப் போல இயற்கை சீற்றங்கள் துயர் துடைப்பு பணிகள் குறித்து சொல்லுகிறபோது, கடுமையான வறட்சியை கடந்த இரண்டு ஆண்டுகளில் சந்தித்தோம். மத்திய அரசிடம் நாம் கேட்டுக்கொண்டது மிகக் குறைவான தொகையை கேட்டுக் கொண்டோம். அவர்களும் கம்மியான தொகையைத்தான் கொடுத்தார்கள். அந்த வறட்சி நிவாரணப் பணிகள் எங்கள் பிராந்தியத்திலே நடக்கிறபோது ஒரு குளத்தை தூர் வார்கிறபோது ஒரு ஏக்கர் நிலத்திற்கு 5,000ரூபாய் ஒதுக்கினால் எந்த அளவிற்கு அந்தப் பணியை சரியாக செய்ய முடியும் என்பதை அரசாங்கம் எண்ணிப் பார்க்கவேண்டும். அதிகப்படியான நிவாரணத்தை மத்திய அரசிலேயிருந்து பெற்று மாநிலத்திலே பல மாவட்டங்களில் நடைபெற்ற வறட்சிப் பணிகளுக்கு அதிகமான தொகையை வழங்கினால் தான் அந்தப் பணிகளை சரியாக செய்ய முடியும்.



1984 மார்ச் 26] [திரு. டி. மணி]

அடுத்து இயற்கை சீற்றத்தின் காரணமாக லட்சக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மத்திய அரசிடம் நாம் கோரியிருக்கிற தொகை போதாது என்பது தான் என்னுடைய எண்ணம். குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் இந்த மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அவர்களுடைய பிரச்சினைகளை தீர்வுகாண மீண்டும் விவசாயம் செய்ய நாம் மானியமாக, இலவசமாக பணம் கொடுத்தால் தான் அவர்களுடைய பொருளாதாரத்தை சீர்செய்ய முடியும். ஆகவே மத்திய அரசிடம் 500கோடி ரூபாய் தேவை என்று கோரிக்கை வைத்து, அதற்கு அடுத்த கட்டமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போதுமான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உயிர் இழந்தவர்களுக்கு நாம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம். அது போதுமானதாக இல்லை. 5,000 ரூபாயாக வழங்கவேண்டும். அதைப்போல வீடு இழந்தவர்களுக்கு 200 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை 500 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பாக நிலவுடைமை உச்ச வரம்புச் சட்டத்தையும், பினாமி நில ஒழிப்புச் சட்டத்தையும் அமலாக்குவதற்கும், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு நிலம் வழங்கவும் அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. செ. நெம்மலை: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் கொண்டு வரப்பட்டிருக்கும் வருவாய்த்துறை மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகிய கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

வருவாய்துறையைப் பொறுத்தவரையில், வரி வசூல் செய்வதற்காக மட்டுமே, ஆரம்பிக்கப்பட்ட துறை என்பது மாறி இன்றைக்கு அந்தத் துறை நிர்வாகத்தை கவனித்துக் கொள்ளவும், அதே சமயத்திலே, வளர்ச்சிப் பணிகள், வெள்ளத் தடுப்பு, வறட்சிப் பணிகள் மற்றும் சமூக நலத் திட்டங்களைத் செயல்படுத்தவும் பொறுப்புள்ள ஒரு துறையாக அது இருக்கிறது என்பதை நாம் எல்லாம் நன்றாக அறிவோம்.

அதிலும் குறிப்பாக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னாலே இந்தத் துறையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பிலே, இந்தத் துறை நல்ல பல சீர்திருத்தங்களை அடைந்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்து, இந்த துறையைப் பொறுத்த

வரையில் மாண்புமிகு டாக்டர் முதல்வர் புரட்சித் தலைவர் மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் பொறுப்பில் இருக்கும் இந்த காலம் ஒரு பொற்காலம் என்று சொல்லலாம். காரணம் அம்ரோஸ் தலைமையில் அமைக்கப்பட்ட தனி நபர் குழு அளித்த 184 பரிந்துரைகளில் 134 பரிந்துரைகளை இன்றைக்கு இந்த அரசு நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இந்த ஒரு சான்றே அந்தத் துறை எந்த அளவிற்கு சீர்திருத்தத்தை கையாண்டு வருகிறது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைகிறது என்று சொல்லிக் கொள்வேன்.

அதே போன்று வருவாய் சீர்திருத்தக் குழு மாவட்டங்களை பிரிக்கவேண்டுமென்ற வகையில் பரிந்துரைத்ததற்கேற்ப புதிதாக எட்டு மாவட்டங்களை பிரிக்கவும் அறிவிப்பு வந்துள்ளது. மேலும் மூன்று மாவட்டங்களைப் பிரிக்க ஆய்வு நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இப்படி புதிய மாவட்டங்களை உருவாக்குவதன் மூலம் நிர்வாகம் சிறப்பாகவும், செம்மையாகவும் நடப்பதற்கு ஏதுவாக இருக்கும். இப்படிப்பட்ட சிறிய மாவட்டங்கள் ஏற்படுத்துவதன் மூலம் மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மக்களோடு நேரடியாக தொடர்பு கொள்ளவும், பிரச்சினைகளை உடனுக்குடன் கவனித்து பரிகாரம் செய்வதற்கும் பயனுள்ள வகையில் நிலைமைகள் ஏற்படவும் ஏதுவாகும்.

அதேபோல், இன்று புதிய மாவட்டங்களை உருவாக்குவதன் மூலம் போதிய புதிய அலுவலகப் பிரிவுகள் துவக்கப்பட்டு, பல்வேறு அலுவலகங்களை அந்தந்த மாவட்டங்களில் துவக்குவதன் மூலம் அங்கே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் புதிய வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு கரூர் சின்னசாமி அவர்கள் சொல்கிறபோது வடமாநிலங்களில் இப்படிப்பட்ட சிறிய மாவட்டங்களை ஏற்படுத்தியதன் மூலம் மத்திய அரசு தாராளமான முறையில் உதவிகளை அளித்துள்ளது என்றும், அதன் காரணமாக அங்கே நிறைய தொழில் வளம் பெருகியிருக்கிறது என்றும் சுட்டிக் காட்டினார்கள். இங்கே பெரிய மாவட்டங்களாக இருப்பதால் மத்திய அரசின் உதவி தாராளமாகக் கிடைக்காதது மட்டும் அல்ல தொழிற் முன்னேற்றத்தைப் பொறுத்த அளவில் அது பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே சிறிய மாவட்டங்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாவட்டங்களின் நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சில பொறுப்புகளை வைத்துள்ளார்கள். அவர்களுக்கு ஒரு சில அதிகாரங்கள் தான் கொடுக்கப்பட்டி-





ருக்கின்றன. அந்த அதிகாரங்களை இன்னும் கூடுதலாகக் வேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம், உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன், புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சில சங்கடங்கள் இருக்கின்றன.

(முற்பகல் 11-40)

இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருக்கிற அதிகாரங்களைப் பொறுத்த வரையில், தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களை மட்டும்தான் அவர்கள் நத்தம் நிலமாக மாற்றி, பட்டா கொடுக்க முடியும். 'அன் அஸஸ்ட் வேஸ்ட்' என்று சொல்லக் கூடிய தீர்வை ஏற்படாத தரிசு நிலங்களை அவர்கள் வில்லேஜ் சைட்டாக மாற்றி, பட்டா கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் இல்லை. அந்த உத்தரவை வழங்க சென்னையில் இருக்கும் கமிஷனர் ஃபார் லான்ட் அட்மினிஸ்ட்ரேஷனிடம் வரவேண்டியிருக்கிறது. அதைப் போன்று 'கிரேசிங் லான்ட்' இருக்கிறது. அதையும் மாற்றி, பட்டா வழங்க வேண்டுமென்றால் சென்னையிலிருக்கிற சி. எல். ஏ. இடம் வர வேண்டும். இதனால் பெருமளவுக்கு காலதாமதம் ஏற்படுகிறது. ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா காலா காலத்தில் கொடுக்க முடியவில்லை, காரணம் அந்த நிலங்களை மாற்றி பட்டா கொடுக்க வேண்டுமென்றால் சென்னையிலிருந்து சி.எல்.ஏ. உத்தரவு போட வேண்டும். எனவே, ஏழை எளிய மக்களுக்கு சிறு விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய பலன் தாமதமாகக் கிடைக்கிறது. ஆகவே பொது நலன் கருதி, இப்படிப்பட்ட நிலங்களை பட்டா கொடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று வருவாய்த்துறையிலிருந்து வேறு ஒரு துறைக்கு பொது நலனுக்காக நிலங்களை மாற்றம் செய்ய வேண்டுமென்றால், அதற்குக் கூட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இல்லை. மாற்ற வேண்டிய நிலத்தின் விலை மதிப்பீடு செய்து நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டிற்கு மேல் மதிப்பீடு சென்றால் அதை மாற்றம் செய்ய முடியாது. இந்த மதிப்பீட்டை பொறுத்தவரையில் ஆர்.டி.ஓ.வுக்கு 5,000 ரூபாய் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 50,000 ரூபாய் என்றும், வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் மதிப்பீடு சென்றால் சென்னைக்கு வந்து உத்தரவு பெற்றுத்தான் செய்ய முடியும். அதனால் பல இடங்களில் காலதாமதம் ஏற்படுகிறது. பொது நலன் கருதி கல்வித் துறையின் மூலமாக ஒரு பள்ளிக்கூடம் அல்லது மருத்துவ துறையின் மூலமாக ஒரு மருத்துவமனை அமைப்பதற்கு வருவாய்த் துறையிலிருந்து நிலத்தைப் பெற இன்றைக்கு சென்னைக்கு வந்து உத்தரவு பெற வேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதால் அந்த பொது நலனுக்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தை செலவழிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. காலதாமதம் அந்த அளவுக்கு ஏற்படுகிறது. எனவே

இந்த மதிப்பீட்டுத் தொகையை ஆர்.டி.ஓ.வைப் பொறுத்தவரையில் கொஞ்சம் உயர்த்திக் கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பொறுத்த வரையில் மதிப்பீடு அளவே இல்லாமல் எந்த நிலத்தை வேண்டுமென்றாலும் பொது மக்கள் நலனைக் கருதி, மாற்றிக் கொடுக்கும் உத்தரவைப் போடுகின்ற அதிகாரத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேப் போன்று இன்றைக்கு 'லான்ட் என்குரோச்மென்ட் ஆக்ட்' இருந்தாலும், நில ஆக்கிரமிப்பை அகற்ற இந்தச் சட்டத்தின் மூலம் இந்தத் துறைக்கு அதிகாரம் இருந்தாலும் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. யாராவது ஒருவர் நில ஆக்கிரமிப்புச் செய்து, பொதுக் காரியத்திற்காக அந்த ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்றால் முடியவில்லை. அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று தடை உத்தரவு வாங்கும் சூழ்நிலை இருக்கிறது. கோர்ட்டிலே இந்தத் துறைக்கு நோட்டீஸ் கொடுக்காமல் கூட தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. அதனால் எவ்வளவோ நல்ல காரியங்கள், அரசு போடுகின்ற திட்டங்கள் பாதியிலே நிற்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எதிர்காலத்திலே இந்த நிலை ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென்று பார்த்து, எந்த ஆக்கிரமிப்பு என்றாலும் பொது நலனைக் கருதி, அதை அகற்றுவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கும் வகையில் சட்டப்பூர்வமான மாற்றங்களை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று மாவட்ட ஆட்சித் தலைவர் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து வழக்கு மன்றங்களுக்கு செல்கிறார்கள். இப்படிப்பட்ட வழக்குகள் நிறைய தேக்க நிலையில் இருக்கின்றன. இதற்கு சாரணம் மாவட்ட அளவில் இருக்கிற அரசு வழக்குரைஞர் அத்தனை வழக்குகளையும் சரியாக கவனிக்க முடியவில்லை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயே அவருக்கு உதவியாக வழக்கறிஞர் தகுதியுள்ளவர்களைக் கொண்ட ஒரு தனிப்பிரிவை ஏற்படுத்த வேண்டும். இப்போது அந்த ஏற்பாடு இல்லை. நிலுவையில் இருக்கிற வழக்குகளை துரிதமாக நடத்தி முடிக்கவும், மேல்முறையீடுகள் தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக எடுக்கவும், கோப்புகள் மீது துரித நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் தனியாக ஒரு வழக்குப் பிரிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒரு நபர் குழுவான ஆம்புரோஸ் குழுவும் இந்த பரிந்துரையை செய்திருக்கிறது. துரித நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உதவியாக இருக்கும் என்பதால் இந்தக் கருத்து வரவேற்கக்கூடிய ஒன்றாகும். எனவே இப்படிப்பட்ட ஒரு வழக்குப் பிரிவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விரைவிலே ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போன்று இன்றைக்கு மற்றொரு பெரிய அபாயகரமான நிலைமை வந்துகொண்டிருக்கிறது. நகரப்புறங்களிலுள்ள விவசாய நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றம் செய்து, விற்கக்கூடிய அபாயகரமான நிலைமைதான் அது. இன்றைக்கு நாம் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்ற, ஏழை எளிய மக்களுக்கு பட்டா கொடுக்கிறோம். அதே நேரத்தில் நகரப் பகுதிகளில் நல்ல விளைநிலமாக இருப்பவற்றை வீட்டுமனைகளாக மாற்றி, கொள்ளை இலாபம் அடிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. நகர்ப்புற நில உச்சவரம்புச் சட்டத்திலும் அவர்கள் சிக்காமல் தப்பித்துக் கொள்கிறார்கள். ஏழை விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு அந்த விளைநிலங்களை வாங்கி, 'ரியல் எஸ்டேட் ஏஜெண்ட்' என்ற பெயரில் பினாமியாக இருந்து, 3 சென்ட், 5 சென்ட், மனைகளாகப் பிரித்து, நல்ல விலைக்கு விற்று, கொள்ளை இலாபம் அடிக்கிற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்கும் இலாபம் இல்லை. வாங்கி வீடு கட்டுகின்றவர்களுக்கும் இலாபம் இல்லை. குறுக்கே இருக்கிற ஏஜெண்டுகளுக்கு தான் இப்படிப்பட்ட இலாபம் போகிறது. எனவே விவசாய விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றி விற்கின்ற நிலைமையை சட்டப்பூர்வமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில், நிலத் தீர்வை, தண்ணீர்த் தீர்வை என்று நாம் தள்ளுபடி செய்து கொண்டே போகிறோம். வருவாய் என்ற பெயரிலே வருவாய் வரக்கூடிய நிலைமை தற்போதில்லை. நாம் ஒன்றை மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மரங்களை 2-சி பட்டாக்கள் மூலம் கொடுக்கிறோம். அதிலே புளியமரம் அதிக வருவாயை கொடுக்கக்கூடியது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் புளிய மரங்கள் நிறைய வளர்கின்றன. சிட்டத்தட்ட 10 முதல் 12 கோடி ரூபாய் அதன் மூலம் வருமானம் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். பரிச்சார்த்த முறையில் நல்ல பலன் தரக்கூடிய புளிய மரங்களை பொது ஏலத்தில் விற்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அப்படி படிப்படியாக பலன் தரக் கூடிய மரங்களை, 2-சி பட்டாக்களிலிருந்து மாற்றி பொது ஏலத்திலே கொண்டுவந்தால் நிறைய வருவாய் வரும்.

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் புதியதாக மூன்று மாவட்டங்களைப் பிரிப்பதாக அறிவித்தார்கள். சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது ஏற்கனவே தர்மபுரி மாவட்டம், சேலம் மாவட்டம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும், இன்று சேலம் மாவட்டம் பெரிய பரப்பளவில், அதிகமான மக்களைக் கொண்ட மாவட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தை இரண்டாக

பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பிரிக்கிற போது, நாமக்கல்லை தலைநகராகக்கொண்டு ஒரு மாவட்டமாக அமைக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல்லை இரண்டு தாலுக்காவாகப் பிரித்து பரமத்தியிலே அந்த அலுவலகத்தை மாற்ற வேண்டுமென்று ஏற்கனவே அந்த திட்டம் இருந்தாலும், இன்னும் அது பிரிக்கப்படாத நிலைமையில் இருக்கிறது. பரமத்தியிலே தனியாக ஒரு தாசில்தார் அலுவலத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் தாலுக்காவைப் பொறுத்த வரையில் அது இரண்டாக பிரிக்கப்பட வேண்டும். சேலத்தில் ஒரு தனி அலுவலத்தையும், வாழப்பாடியிலே ஒரு அலுவலகமும் எற்படுத்தித்தர வேண்டுயென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அடுத்து மலைசாதி மக்கள் அதிகமாக வாழ்கின்ற கொல்லி மலைப்பகுதியை ஒரு தனித் தாலுக்காவாக அமைத்து, அங்கே உள்ள மக்களுக்கு நல்லமுறையிலும் நிர்வாகச் சீர்திருத்தம் நடைபெறுகின்ற முறையிலும் அந்த தாலுக்காவை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற மான்யக் கோரிக்கையை வரவேற்று, வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன், வணக்கம்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வருவாய்த்துறை மான்யக் கோரிக்கையில், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ரெவின்யூ போர்டை 1980-ஆம் ஆண்டு டிசம்பரில் ஒழித்தீர்கள். மக்களிடத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. தற்போது மாநில அளவில் சிறப்பு ஆணையர், வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர், இவர்களிடம் தற்போது ஒப்படைக்கப் பட்டுள்ளது. இவ்வளவு சீர்திருத்தங்கள் செய்தும் இன்னும் அதன் பழைய தொடர்பான அணாயட்டம் போடுவது, அண்ணவாரி சர்டிபிகேட், என்று விவசாயிகள் பல சிக்கலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

பஞ்சம், வறட்சி, வெள்ளம் பாதிப்பு காலங்களில் அழிவு சக்தி வயலுக்கு வயல் வேறுபடுவதில்லை. ஒரு கிராமம் அழிந்த கணக்கில் வரும்போது அதன் உட்பிரிவுகள், வயல், வரப்பு, நாத்தங்கால் இவைகள் விளைந்திருக்கிறதா என்று கணக்கெடுத்துச் சொல்வது, இவைகள் பலவிதமான முறைகேடுகளுக்கு உள்ளாக்குகிறது. எந்த கிராம உத்தியோகஸ்தரும் தலத்துக்கு] ஒலம், புலத்திற்குப் புலம் போய் விளைந்த





தானியத்தைக் கணக்கு பார்த்து எழுதுவதில்லை. இப்படிப்பட்ட நிலைகள் இருப்பதால், அதனை மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் நல்ல நோக்கத்துடன் செய்யும் பல விஷயங்கள் விவசாயிகளுக்கு பயன் அடையாமல் போய்விடுகிறது. இதெல்லாம் ரெவின்யூ போர்டின் பழைய கொடுமைகள். இவைகளைக் களைந்தெறிய வேண்டும்.

(முற்பகல் 11-50).

உதாரணமாக முந்தைய வறட்சிக்காலத்தில் கூட்டுறவு இலாகா வறட்சி என்று கணக்கெடுத்த கிராமங்களை ரெவின்யூ இலாக்கா இல்லை என்று கணக்கெடுத்ததால் அந்தப் பகுதி மக்கள் பயன்அடையாமல் செய்து விட்டார்கள். இது மிகவும் பாவமான, பாதகமான செயலாகும். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ரெவின்யூ இலாகாவிற்கும் பொதுப்பணித்துறைக்கும் இணைப்பு இருக்கவேண்டும். எந்த வேலையை யார் செய்வது என்பதிலே சிக்கல்கள் தோன்றி பல இடங்களில் வேலையே நடைபெறாமல் இருக்கிறது. இவைகள் எல்லாம் சீர்செய்யப்பட வேண்டும்.

தற்போது மாநிலத்தில் '16 மாவட்டங்களும் 54 கோட்டங்களும், 166 வட்டங்களும், 1,067 பிர்க்காகளும், 16,543 வருவாய் கிராமங்களும் உள்ளன.

பெரிய மாவட்டங்களைப் பிரிக்கும் முறையில் புதிதாக 8 மாவட்டங்கள் அமைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நீண்டநாள் பிரச்சினை சிக்கல் இல்லாமல் தீர்ப்பதற்காக 3-ஆக பிரிக்கப்பட்டுள்ளது. அறிவிப்புகளை ஆறப்போட்டு விடாதீர்கள். தாமதம் பல சங்கடங்களை உண்டாக்கிவிடும். எனவே உடனடியாக அமல்படுத்தி, அறிவிப்புகளை கொடுக்கவேண்டும். முடிந்தால் சித்திரை மாதம் புதிய மாவட்டங்களை ஆரம்பித்து, அறிவிக்கப்பட்ட தலைநகரங்களில் மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் கூட்டங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திரு. எஸ். பி. அம்ப்ரோஸ் தலைமையில் ஒரு நபர் கமிஷன் நிர்வாகத்தைச் சீரமைக்க 184 பரித்துரைகளை முன் வைத்ததில், இதுவரையில் அரசு 134 பரிந்துரைகள் மீது தான் ஆணை பிறப்பித்துள்ளது. மீதமுள்ள 50 பரிந்துரைகளையும் உடனே பரிசீலித்து ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காலம்

பொற்காலம் என்று சொல்லப்பட்டது. ஆனால் மாற்றுக் குறைந்த பொற்காலமாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைய பத்திரிக்கைச் செய்தி மேலும் 50 கோடி கேட்டிருப்பதாக தகவல் வந்துள்ளது. ஏற்கனவே வெள்ள நிவாரணத்திற்கு 127 கோடி ரூபாய் மத்திய அரசை கேட்டுள்ளது. இது ஜனவரி மாதத்தில் ஏற்பட்டது. ஆக மொத்தம் 177 கோடி கோரியுள்ளது. இதிலே கூட கணக்குகள் சரிவர எடுக்கவில்லை என்று கருதுகிறேன். தற்போது உள்ள உண்மையான நிலை 200 கோடிக்கு மேல் நிலையான சொத்துக்கள் அழிந்திருக்கின்றன.

விவசாய அழிவு இதில் சேரவில்லை. விவசாய விளை பொருள் மட்டும் ஆயிரம் கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் மான்யக் குறிப்பில் 19-வது பக்கத்தில் சேதமடைந்த பயிர்களின் மதிப்பு ரூ. 102.54 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகளுக்கு நிவாரணம் 0.53 கோடி என்று மறு பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உங்கள் கணக்குப்படியே 102.54 கோடி சேதமடைந்த விவசாயிகளுக்கு 53 இலட்சம் நிரவாணம் கொடுப்பதனால், இது என்ன நியாயம். இதிலிருந்தே விவசாயிகளுக்காக வேண்டி நீங்கள் இல்லை என்பதை நிரூபிக்கிறீர்கள்.

எங்கும் அழிவு ஏற்பட்டுள்ளது. மேலும் பூச்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். நல்ல அறுவடை ஆகி இருந்த இடங்களிலெல்லாம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல், வரி வசூலிக்க தனி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், நிர்வாக அமைப்பை முடுக்கி விடுமாறு அண்மையில் அரசு மாவட்ட ஆட்சியாளர்களை கேட்டுள்ளது. 1983-84-ஆம் ஆண்டு, நிதியாண்டு முடிவடையும் வரை, இயன்ற அளவில் வரிகளை வசூலிக்க முனைப்பான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து என்ன புரிகிறது என்றால் அழிவு ஏற்பட்டுள்ள அந்த விவசாயிகளை காப்பாற்றுவதற்குப் பதிலாக குறியீட்டை அடையும் நோக்கத்தோடு, அதிகாரிகள் விவசாயிகளை துன்புறுத்தல்கள், சொடுமைகள் செய்ய பச்சைக்கொடி காண்பிக்கிறீர்கள். இது விவசாயப் பொருளாதாரத்தையே பாதிக்கும். விவசாயம் செய்யும் விவசாயிகளின் ஆர்வத்தை மழுங்கடித்துவிடும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிலைமையில் மத்திய அரசு வெள்ள நிவாரணத்திற்கு ரூ. 5 இலட்சத்தை கொடுத்திருப்பதாக பத்திரிக்கையில் பார்த்தேன். "கொடுமை, கொடுமை என்று கோவிலுக்குப் போனாலும், அங்கு ஒரு கொடுமை அம்மணத்தோடு ஆடிக் கொண்டு நின்றதாம்" அதுபோல மத்திய உதவி மக்களைத் திரட்டியிருக்கிறது. எனவே மக்கள் போராடி அதிகத் நிவாரணத்தொகையைப் பெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



ரோடுகளும் பாலங்களும் அழிக்கப்பட்டுள்ளன. வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலைமை மாறுவதற்குள் இப்படிப்பட்ட ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிட்டது. மீண்டும் வெள்ள ஆபத்து. 1978-79-ல் ஏற்பட்ட கால்வாய்கள் இன்னும் அடைக்கப்படவில்லை. மீண்டும் அதே இடங்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. போட்ட திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

பழைய காலத்தில் ரூ. 80 நிவாரணத் தொகையாக கொடுக்கப்பட்டது. தற்காலத்தில் 200 ஆனது. இதுவும் 1978 வெளியிடப்பட்டது. இப்போது 6 ஆண்டுகள் ஆகி விட்டன. விலைவாசி விஷம்போல் ஏறிவிட்டது. ரூபாயில் மதிப்பு 17 காசாக குறைந்துவிட்டது. இன்னும் அதே நிலை என்றால் சமாளிக்க முடியாது. ஆகவே தான் ரூ. 200 லிருந்து 500 ஆக மாற்றிக்கொடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போது பெய்த மழையின்போது, எங்கள் மாவட்ட கலெக்டர் புத்திசாலித்தனமாக இரண்டு ஹெலிகாப்டர்களை வாங்கி, அரசிடமிருந்து பெற்று உடனடியாக நிவாரண வேலைகளைத் துவங்கினார்கள். இருந்தாலும், மேலிருந்துதான் பார்க்க முடிந்தது. தண்ணீரால் சூழப்பட்ட இடங்கள் என்று நினைத்து, பாதிக்கப்படாத இடங்களில் சோற்று மூட்டைகள், உணவுப் பொட்டலங்கள் இவைகளைப் போட்டு விட்டார்கள். இதனால் சில சிக்கல்கள் ஏற்பட்டன. பாதிப்பு வேலைகளை உடனுக்குடனே நடத்துவதற்கு கலெக்டர்களுக்கு முழு அதிகாரம் கொடுக்க வேண்டும். அமைச்சர்களின் அனுமதிக்காக காத்து இருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, பரமக்குடியில் பாலமலைப் பகுதியில், குடிசை வாழ் மக்கள் பற்றியும், குடிசை போட்டுக் கொடுப்பது பற்றியும், பிரமாதமாகச் சொல்லப்பட்டன. சாதனைக் குறிப்பிலே 12 ஆம் பாராவில் பொது இடங்களில் குடிசைகளைப் போட்டு, ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலமற்ற ஏழைகளை வெளியேற்றக்கூடாது என்றும், அந்த ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தப்படுகிறது என்று சொல்லியும், பாலமலைப் பகுதியில் உள்ள ஏழை மக்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகியும், கொடுத்த பட்டாக்களுக்கு இன்னும் அங்கீகாரம் அளிக்கவில்லை. எந்த உதவியும் செய்யவில்லை. அந்த ஏழை மக்களின் வீடுகள் தண்ணீரால் சூழப்பட்டிருக்கின்றன.

தேங்கியிருக்கும் தண்ணீரைக் கூட அப்புறப்படுத்த கமிஷனர் ஏற்பாடு செய்யவில்லை. அந்தப் பகுதி மிகப் பள்ளமான பகுதி. அதை நிரந்தரமாக மேடிட்டுக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அங்கே வீடுகள் கட்டப்பட்டதற்குப் பின்பு தற்போது 9-வது கலெக்டர் வந்திருக்கிறார். அவரும் அங்குள்ள நிலைமைகளைப் புரிந்துக் கொண்டு வேலையைத் துவங்குவதற்குள் மாறினாலும் மாறிவிடுவார் என்ற நிலைமை இருக்கிறது. கடந்த இரவு கூட எனக்குப் போன் மூலம் தகவல் வந்தது. அங்கே தண்ணீரும் அப்புறப்படுத்தப்படவில்லை, எந்த நிவாரணமும் கொடுக்கப்படவில்லை என்று.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட 1977-78 பட்ஜெட் விவாதத்தில் '' அந்தப்பகுதி தேவைப்பட்டால் மேடிட்டுக் கொடுக்கப்படும் '' என்று இந்த சபையில் அறிவித்தார்கள். வருடம் பல ஓடி விட்டது. சபைக் குறிப்பில் அப்படியே இருக்கிறது. ஆனால் வேலை தான் நடைபெறவில்லை. ஏழையின் தண்ணீர் துடைக்கப்படவில்லை.

அடுத்து நிலச் சீர்திருத்தம். கடந்த காலத்திலும் சரி, நிகழ் காலத்திலும் சரி, எப்படி எப்படி நிலச் சீர்திருத்தங்கள் கொண்டு வந்தாலும் சட்டத்தின் ஓட்டைகளை உபயோகப்படுத்திக் கொண்டு பலர் தப்பித்து விடுகிறார்கள். கிராமப்புற நிலமாக இருந்தாலும் சரி, நகர்ப்புற நிலமாக இருந்தாலும் சரி, தப்பித்துக் கொள்பவன் எப்பொழுதும் தப்பித்துக் கொண்டேதான் இருக்கிறான். அரசும் பார்த்துக் கொண்டேதான் இருக்கிறது.

உதாரணமாக தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெரியவரும் அவரைப் போன்ற அரசியல் நிலப் பிரபுக்களும். உழும் விவசாயிகளை வெளியேற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். இதனைத் தடுத்து நிறுத்த அரசிடம் ஆயுதமில்லை. இது தொடர்கதையாகவே உள்ளது. இதற்கு தக்க நடவடிக்கையை எடுக்க அரசு முயல வேண்டும்.

அடுத்து நிலம் ஒப்படை செய்வது குறித்து, இதிலே மிகப் பெரிய மோசடிகள் நடந்துள்ளன. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் அதில் முதல் ஸ்தானம் வகிக்கிறது. இங்கே கொடுக்கப்பட்ட குறிப்புப் புத்தகத்தில் பாரா 67 இல் 1984 ஜனவரி முடிய 2,30,695 நில ஒப்படைப்புகள் சம்பந்தமாக ஆய்வு செய்யப்பட்டன. 1,30,400 இனங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன என்று இருக்கிறது. ஆனால் உண்மையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 18,359 இனங்களில் 17,897 இனங்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதில் மீதி பிழைத்தது 462 இனங்கள் மட்டும்தான். இதிலிருந்து ரெவின்யூ டிபார்ட்மெண்ட் எப்படி எல்லாம் சித்து விளையாடி இருக்கிறது என்பது புலனாகும். இவர்களிடத்தில் அணா மட்டம் போட வேண்டும் என்று சொன்னால், அவர்கள் ரூபாய் மட்டம் போட்டு



விடுகிறார்கள். (மணியடிக்கப் பெற்றது). இன்னும் மாநில அளவில் 1,00,295 இனங்கள் பரிசீலிக்காமல் விடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கும் திட்டம். ' வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கும் ' திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகிறது. செய்யட்டும் வரவேற்கிறோம். ஆனால் வளர்க்கப்படும் கன்றுகள் தளிர்விட்டு வளர்ந்து வரும் காலத்தில் சரியான பராமரிப்பு கிடையாது. முதலில் கன்றுகளை நட்டுவிட்டு முன் அடைப்பு போடப்படுகிறது. பிறகு பாதுகாப்பு இல்லாமல் விட்டு விடுவதால் அது அழிந்து விடுகிறது. ஆடு மாடுகள் கூட தின்று விடுகின்றன.

காலையில் நாம் சட்டமன்றத்திற்கு வரும் வழியில் கூட அரசு தோட்டத்தில் உள்ள வளர்ந்த மரங்களை பெரிய அறுவாள் கொண்டு அறுத்து அறுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி தினமும் நடக்கிறது. எல்லோரும் பார்த்துக் கொண்டு தான் போகிறார்கள். எந்தவித நடவடிக்கையும் இல்லை. அவைகளை எல்லாம் பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படித்தான் ரோட்டு ஓரங்களில் உள்ள மரங்களும், காடுகளில் உள்ள மரங்களும்கூட அழிக்கப்படுகின்றன.

அடுத்து, நம்முடைய மாநிலத்தில் ஆர்.டி.ஓ. ஆபீஸ் அமைப்பு இருப்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது தேவைதானா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். தாலுக்கா மட்டத்திலே தாசில்தார் அலுவலராக இருக்கிறார். மாவட்ட அளவிலே கலெக்டர் இருக்கிறார். இடையிலே ஆர்.டி.ஓ. வேறு எதற்கு ? இப்படி ஆர்.டி.ஓ. அலுவலகம் இருப்பதால், எந்தப் பெட்டிஷன் போட்டாலும் 4 கை மாற வேண்டியிருக்கிறது. ஆகவே தேவையில்லாத சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இது தேவைதானா என்பதை அரசு சிந்திக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல டவுன் பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்துக்களுக்கு சர்வே செய்யப்படுவதைப் போல, கிராம நத்தத்திலுள்ள வீடுகளும் சர்வே செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா கொடுக்கப்படுகிறது. அதை வைத்துப் பல சலுகைகளைப் பெற முடிகிறது. லோன்கள் வாங்க முடிகிறது. ஆனால் பரம்பரையாக சொந்த வீடு கிராமத்தில் உள்ளவர்கள், அதை வைத்து லோன் வாங்க முடிவதில்லை. காரணம் மொத்தமாக நத்தத்தில் இருப்பதால் சொந்தம் கொண்டாட முடிவதில்லை. நத்தம் சர்வே செய்யப்படாமல் இருப்பதால் ஒருவர் இடத்தை மற்றவர் ஆக்கிரமிக்கவும் முடிகிறது. அதனால் கலகம், சண்டை சச்சரவுகளோடு சில நேரங்களில் கொலைகள் கூட கிராமங்களில் நடந்து விடுகின்றன. இதனால் கிராம ரோடுகளைக் கூட சிலர் ஆக்கிரமித்து விடுகிறார்கள். யாரும் கேட்க முடியவில்லை.

[திரு. செ. சிவசாமி] [1984 மார்ச் 26

ஆகையினால் தற்போது சர்வே நடந்து கொண்டிருக்கிறது. நத்தமும் சர்வே செய்யப்பட்டு, சொந்த வீட்டுக்காரர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சியில் கிணறுகள் ஆழப்படுத்தி கொடுக்கப்பட்ட ரூபாயில் பெரும்பகுதி பங்குபோடப்பட்டுள்ளது, ஆழப்படுத்தவும் இல்லை. அகலப்படுத்தவும் இல்லை. லோன் வாங்குபவர்களுக்கு 60 சதவீதமும், அலுவலக செலவிற்காக 40 சதவீதமும் என்று பங்கு போடப்பட்டுள்ளது. ஆனால் ஒரே நபர்கள் பல கிணறுகளுக்கும் அல்லது ஒரே குடும்பத்தில் உள்ள பலபெயர்களால் ஒரே கிணற்றுக்கும் லோன் போடப்பட்டு, பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதே தவிர, நான் கண்ட வரையில் எங்கும்

(நண்பகல் 12·00)

ஆழப்படுத்தப்படவில்லை. லோன் வாங்கி கல்யாணம் செய்திருக்கிறார்கள். கலெக்டருடைய நோட்டீசுக்குக் கொண்டு போகப்பட்டது. அவர்கள் ஒரு சிலரை மட்டும் இடமாற்றம் செய்திருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கின்றன.

அடுத்து வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பல விஷயங்களைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். ஆனால் பெரும் பகுதி அமுல்படுத்தாமல் கிடப்பில் போடப்படுகின்றது. இவைகளை அமுல்படுத்தினால் மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்பட முடியும்.

அடுத்து தாலுக்கா அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் இல்லை. எல்லாத் தாலுக்கா அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டிடங்கள் வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு தமிழகத்தில் மிகக் கடுமையான வறட்சி நிலவிய நேரத்திலே அந்த வறட்சியை எதிர்நோக்கிய அந்த மக்களுக்கு துயர் இல்லாமல் செய்வதற்காக தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, செம்மையாக அந்தப் பணிகளை எல்லாம் செய்து முடித்தார்கள். அதற்காக சென்ற ஆண்டு 217 கோடி ரூபாய் வரையில் செலவுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசு சுமார் 68 கோடி ரூபாய் வரையில் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அதற்கு மேற்பட்ட அதிகமான தொகையை தமிழக சர்க்கார் செலவு செய்திருக்கிறார்கள். எனவே அந்த அதிகத் தொகையை மத்திய அரசு வழங்க வேண்டும்.



1984 மார்ச் 26] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

அதே நேரத்தில் சென்ற ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகளில் செய்யப்பட்டு இருக்கிற பல்வேறு பணிகளைப் பாதுகாக்கும் அளவிலே பல நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். வறட்சிப் நிவாரணப் பணிகள் நடைப்பெறுகின்ற நேரத்தில் போடப்பட்ட ஆழ் குழாய்க் கிணறுகளை பாதுகாக்க தக்க நடவடிக்கைகளையும் அதற்காக தனியாக நிதியையும் ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் தமிழக மக்களுடைய துயர் துடைப்பதற்காக. நம்முடைய, மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு வருவாய்த்துறை, அமைச்சர் அவர்களும் எடுத்து இருக்கின்ற அந்தப் பணிகளுக்கு என்னுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட நேரத்தில் அந்த மக்களுக்கு இலவசமாக வேஷ்டிகள் புடவைகள் வழங்க வேண்டும் என்ற ஒரு அருமையான திட்டத்தை நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களுக்காக அறிவித்திருக்கிறார்கள்- அந்த திட்டத்தின் பலன் எல்லாம் இன்றைக்கு கிராம மக்களுக்குச் சென்று அடைந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நேரத்தில் இன்னும் ஒரு சில இடங்களில் வேஷ்டிகளும் சேலைகளும் வழங்கப்படாமல் இருக்கின்றன அப்படி வழங்கப்படாமல் இருக்கின்ற பகுதிகளுக்கும் விரைவிலே வேஷ்டி சேலைகளை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய மதுராந்தகம் நகராட்சியில் 1,700 புடவைகளும், 1,700 வேஷ்டிகளும் தேவை என்று சொல்லியிருக்கிறோம். மதுராந்தகம் ஒன்றியத்தில் 9,000 வேஷ்டிகளும் 9,000 புடவைகளும் லத்தூர் ஒன்றியத்தில் 2,200 புடவைகளும், 2,200 வேஷ்டிகளும் தேவை என்று மாவட்ட ஆட்சி தலைவருக்கு கோரிக்கை சமர்பித்து இருக்கிறார்கள். எனவே அந்தத் துணிகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் வறட்சி நிவாரணத்தில் செய்யப்பட்டு இருக்கின்ற எல்லாப் பள்ளிகளுக்கும் இன்றைக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் சிறிது அளவிலே செய்யப்பட்டு இருக்கின்ற வேலைகளுக்கு இதுவரையில் மதுராந்தகம் ஒன்றியத்திலே பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. இன்றைக்கு வறட்சி நிவாரணத்தில் தூர் வாரும் பணிகளுக்கும், குளம் குட்டைகளுக்கும், சிறிய சாலைகளுக்கும் இன்னும் ஹைவேஸ் மூலமாக போடப்பட்ட சிறிய பணிகளுக்கும் இது இது போன்று செய்யப்பட்ட பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை. எனவே அந்த வரையில் வேலைகள் செய்தவர்களுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி சென்னையில் குடிநீர் பஞ்சத்தைப் போக்குவதற்காக அரசு பல சிறப்பான திட்டங்கள் எல்லாம் செய்திருக்கிறார்கள் சென்னையில் பல பகுதிகளிலும் சுமார் 15 ஆயிரத்திற்கும் மேற்

பட்ட இரும்புப் பீப்பாய்களை அமைத்து, அதன் மூலமாக குடிநீர் பஞ்சத்தைப் போக்கியிருக்கிறார்கள். இன்று அந்த இரும்பு பீப்பாய்கள் எல்லாம் கேட்பாரற்று, அவைகளில் துரு பிடிக்கின்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டு இருக்கின்றன. எனவே அரசு அவைகளை கைப்பற்றி பாதுகாக்கின்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது ஏற்பட்டு இருக்கின்ற வெள்ள நிவாரணத்திற்கு அரசு செம்மையான முறையில் பணிகளைச் செய்து கொண்டு வருகிறது. வெள்ளத்தால் துயர் அடைந்திருக்கிற அந்த மக்களுக்கு அவர்களுடைய துயரைப் போக்குவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. என்னுடைய மதுராந்தகம், செங்கற்பட்டு தொகுதிகளில் பல கிராமங்களில் குடிசைகள் இடிந்திருக்கின்றன. அங்கே மழை குறைவாக பெய்திருக்கிறது என்ற காரணத்திற்காக பணம் பட்டுவாட செய்யப்படுவதில் சில காலதாமதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதை போக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே இன்றைக்குத் தவறிப் பெய்திருக்கின்ற பெருமழையின் காரணமாக பல விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பயிர்களுக்கு எல்லாம் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த விவசாயிகளுக்கு உரத்தை இலவசமாகவும் குறைந்த விலையிலும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதைப்போலவே விதை நெல்லை இலவசமாக வழங்க வேண்டும். நீண்டகால வட்டியில்லாக் கடன்களை அளித்து, அந்த விவசாயிகளின் வாழ்விலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகம் செம்மையான முறையிலே இயங்க வேண்டும் என்ற முறையிலே புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற மாவட்டங்களை சிறிய மாவட்டங்களாகப் பிரிக்க வேண்டுமென்ற அருமையான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் காரணத்தினால் தமிழகத்திலே தொழில் வளம் நல்ல முறையிலே வளர வகை செய்கிறது. நிர்வாகம் நல்லமுறையிலே நடைபெறுவதற்கு வழிவகை செய்கிறது. அதைப்போலவே சிறிய வட்டங்களாக அமைக்கவேண்டும் பெரிய வட்டங்களாக இருக்கின்ற பல வட்டங்களை சிறிய வட்டங்களாகப் பிரிக்காவிட்டால் மக்களின் பல்வேறு பிரச்சினைகளை சமாளிக்க முடியாத நிலைமை இருக்கும். மதுராந்தகம் மிகப் பெரிய வட்டமாக இருக்கிறது. அதைப் பிரிக்கவேண்டுமென்று பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும் அந்த வட்டத்தைச் சேர்ந்த இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும், புரட்சித்தலைவர் அவர்களிடத்திலேயும் அன்றுமனுக்களைச்சமர்ப்பித்திருக்கிறோம். இந்த மாமன்றத்திலே வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 16—3—1982 அன்று மதுராந்தகம் வட்டத்தினை இரண்டாகப் பிரிப்பதற்காக ஒரு உறுதிமொழியை அளித்து





இருக்கிறார்கள். மதுராந்தகம் வட்டம் 530 மைல் சுற்றளவையும் 3 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணம் பரப்பளவைக் கொண்டதாக இருக்கிறது. இவ்வளவு பெரிய வட்டத்தின் நிர்வாகத்தைச் செய்வதற்கு ஒரு தாசில்தாரால் முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு விரைவிலே அதை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த வட்டத்திலே பணியாளர்கள் எல்லாம் ஏற்கெனவே போடப்பட்ட அளவிலேதான் இருக்கிறார்கள். சர்வேயர்கள் குறைவான அளவில் இருப்பதால் பலவித சிக்கல்கள் இருக்கின்றன. அந்த வட்டத்திலே ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பணியாளர்களை அதிகமாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல பதவிகளை புதிதாக ஏற்படுத்தியிருந்தாலும் பதவிகளில் அதிகாரிகள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். அதையும் பார்க்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மதுராந்தகம் வட்டத்திலே மட்டும் சுமார் 5,000-க்கு மேற்பட்ட வீட்டு மனைப்பட்டாக்களுக்கான மனுக்களைச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். நான் 1980 ஆம் ஆண்டிலிருந்து இது வரையிலே நடந்திருக்கின்ற ஜமாபந்தியிலே எல்லாம் கலந்துகொண்டிருக்கிறேன். அன்றைக்கு யார் எல்லாம் அதற்காக மனுக்களைக் கொடுத்தார்களோ அவர்கள்தான் மீண்டும் மனு கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது என்றால் மனுக்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப் போதுமான பணியாளர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். சர்வேயர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். பெரிய தாலுகாவாக அது இருப்பதால் அவர்கள் அந்தப் பணிகளைச் சரியாகச் செய்ய முடியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அந்தக் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்திலே கள்ளக்குறிச்சி வட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று அந்த வட்ட மக்கள் அந்தத் தொகுதியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் பலமுறை இந்த அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை இரண்டாகப் பிரித்து கள்ளக்குறிச்சி வட்டமாகவும் சங்கராபுரம் வட்டமாகவும் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுராந்தகத்திலே இருக்கிற வட்ட அலுவலகம் மிகவும் பாழடைந்த நிலையிலே இருக்கிறது. அதை சீர் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனைப் பட்டாக்களை வழங்குவதற்கு அவர்களுடைய மாத வருமானம் ரூ. 250-க்குக் குறைவாக இருக்கவேண்டுமென்று அரசு நிர்ணயித்து இருக்கிறது. மாத வருமானம் 250 ரூபாய் என்று சொன்னால் இன்றைக்கு இருக்கின்ற விலைவாசியிலே

ஒருவருக்கு மாதத்திற்கு 500 ரூபாய்க்கு குறைவாக மாத வரு
மானம் வந்தால் அவர்களால் குடும்பத்தை நடத்த முடியாத
சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சட்டத்தை மாற்றி மாதம் 500-க்கு
குறைவாக இருக்கின்றவர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப்
பட்டாக்கள் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கி
றேன். நிலப்பட்டா கோரி மாவட்ட ஆட்சித் தலைவர், தாசில்
தார் ஆகியோரிடம் மனுக்களை சமர்ப்பித்திருக்கிறார்கள்.
அவைகள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இன்றைக்கு பல்வேறு கிராமங்களிலே
சட்டம் ஒழுங்கு நிலைமைகள் இருப்பதற்குப் பல்வேறு காரணங்
கள் இருக்கின்றன. பட்டிகள், பவுண்ட்கள் சரியாக பராமரிக்
கப்படாமல் இருக்கின்றன. அதனால் பல கிராமங்களிலே பல
பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே அவைகளை சரி செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுராந்தகம் வட்டத்
திலே செய்யூரிலே உள்ள பட்டியை சீர்செய்ய வேண்டுமென்று
அரசுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் வட்ட ஆட்சியருக்
கும் கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறோம். ஆகவே, அப்
பட்டியை சீர்செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கி
றேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தை நல்ல முறையிலே செய்ய
வேண்டுமென்று கருதி 1980 ஆம் ஆண்டு ஒரு புதிய சட்டத்தை
வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.
எப்படியெல்லாம் உச்ச வரம்புச் சட்டத்தை மீறியிருக்கிறார்கள்
என்பதையெல்லாம் 1982-83 ஆம் ஆண்டும் 1983-84 ஆம்
ஆண்டும் நான் வருவாய்த் துறை மானியத்தின்மீது பேசுகின்ற
போது பேசியிருக்கிறேன். அந்த விவரங்களுடன் மேலும் ஒரு
சில விவரங்களை நான் இன்றைக்குச் சொல்ல விரும்புகிறேன்.
இன்றைக்கு இருக்கின்ற நிலச்சுவான்தார்கள் எல்லாம் சீர்திருத்
தச் சட்டத்திலிருந்து தப்பிக்கவேண்டுமென்ற காரணத்திற்காக
அந்தச் சட்டத்திலே இருக்கிற ஒரு சில தவறுகளை தங்களுக்குச்
சாதமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மதுராந்தகம் பல
ஜமீன்தார்களைக் கொண்டிருக்கக் கூடிய பெரிய தாலுகாவாக
இருக்கிறது. சுமார் 400, 500 ஆயிரம் ஏக்கர் என்று பலர்
வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பினாமியாக அவர்கள் வைத்
துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் அமைச்சர் அவர்
களுக்கும் அரசுக்கும் தெரியப்படுத்தி இருக்கிறேன். இதே
மாமன்றத்திலே அந்த விவரங்களையெல்லாம் நான் தந்திருக்
கிறேன். அதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

மதுராந்தகம் தாலுக்காவில் சிறுநல்லூர், கொளம்பாக்கம்,
விழுதமங்கலம், சீவாடி, நரியூர் போன்ற கிராமங்களில் இது
போன்ற நில உச்ச வரம்பு சட்டங்கள் மீறப்பட்டு இருக்கின்றன.
அவைகளை எல்லாம் சரியான முறையில், இருக்கின்ற சட்டங்கள்





மூலம் எடுத்துக் கொண்டாலே சுமார் 10 ஆயிரத்திற்கு மேற்
பட்ட ஏக்கர்கள் வரை அரசு கையகப்படுத்த முடியும் என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

1878 ஆம் ஆண்டு செட்டில்மெண்ட்டு படி ஊழிய இனாம்,
சர்வீஸ் இனாம் இதன் மூலம் கிராமத்தில் எந்தத் தொழிலுக்காக
இனாம் ஒப்படைக்கப்பட்டதோ அவர்களுடைய சொந்த இனா
மில் அவர்கள் அனுபவிக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆனால்
1895 ஆம் ஆண்டு The Madras Heriditary village officers
Act (III of 1895) மூலமாக அந்த நிலங்கள் எல்லாம் யாருமே
விற்கவோ, வாங்கவோ முடியாது என்று சட்டம் இருந்தாலும்,
1963 ஆம் ஆண்டு மைனர் இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலமாக
ஒப்படைக்கப்பட்ட பிறகு அந்த அந்த நிலங்களுடைய பட்டாக்
களை எல்லாம் அந்த கிராமத்தில் உள்ள ஒருசில மிராசுதாரர்கள்
தங்களுடைய பெயருக்கு பட்டாக்கள் போட்டுக் கொண்டிருக்கி
றார்கள். இதைப்பற்றி நான் விரிவாக ஏற்கெனவே நம்முடைய
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் குறிப்புக்களைக் கொடுத்
திருக்கிறேன். அப்படி கொடுத்ததன் காரணமாக அந்த
கிராமத்தில் வாழ்கின்ற ஏழை சர்வீஸ் இனாம்தாரர்களுக்கு அதில்
செய்பவர்களுக்கு அந்த நிலங்கள் எல்லாம் கிடைக்காத நிலை
இருக்கிறது. இதற்கு எங்களுடைய மதுராந்தகத்தில் உள்ள சிறு
நல்லூர் என்ற கிராமத்தை உதாரணமாகச் சொல்கிறேன்.
அங்கே வெட்டி மானியம் சர்வே நம்பர் 68,55,18 உள்ளது.
அந்த வெட்டி மானியத்தை எல்லாம் அந்த கிராமத்தைச்
சேர்ந்த பெரிய மிராசுதாரர்கள் அவர்களே அங்கே கர்ணமாகவும்
முன்சீப் ஆகவும் இருந்தார்கள். அவர்கள் தங்களுடைய
பெயருக்கும், தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பெயருக்கும்
பட்டா போட்டுக் கொண்டார்கள். 1980 ஆம் ஆண்டு இந்த
பதவிகளை அரசு ஒழித்த பிறகு தான் அவர்களுக்கு
தெரிய வந்திருக்கிறது. தாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிற
அத்தனை நிலங்களையும் இன்றைக்கு அந்த கிராமத்தைச் சார்ந்த
மிராசுதார்கள் பெயருக்கு தான் பட்டாக்கள் போடப்பட்டு
இருக்கின்றன. அவர்களுக்கு இனாம் ஒழிப்புச் சட்டம்தெரியாது.
அவர்கள் எல்லாம் அதை அனுபவித்துக் கொண்டு வந்தா
லும் அதனுடைய பட்டாக்கள் இன்றைக்கு பெரிய மிராசுதாரர்
கள் பெயரில் இருக்கிறது. அவைகளை மாற்றுவதற்கு அரசு
தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இனாம் நிலங்கள்
எல்லாம் ஒழிக்கப்பட்டாலும், அதை எல்லாம் யார் எல்லாம்
அனுபவிக்கிறார்களோ அவர்கள் எல்லாம் மீண்டும் மனுக்கள்
கொடுக்கலாம் என்று ஒரு சட்டத்தை கொண்டு வந்து அதன்
மூலமாக விசாரணைச் செய்யவேண்டும் என்று கேட்டு வாய்ப்பு
அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி. வணக்கம்

*திரு. கே. தனுஷ்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய வருவாய்த்
துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக்
கோரிக்கையின் மீது நான் சார்ந்து இருக்கின்ற அகில இந்திய

பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக நன்றி தெரிவித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெள்ள நிவாரணம் பற்றி சொல்லியிருக்கிறார்கள். போன வருடம் வறட்சி, இந்த வருடம் வெள்ளம் என்ற முறையில் தமிழ்நாட்டு விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது தெரியும். இன்றைக்கு இருக்கின்ற வெள்ளத்தினுடைய அரசுக்கும் ஒரு நிலையைப் பார்க்கும்பொழுது புள்ளி விவரக் கணக்கு பூர்வ மாக மத்திய சர்க்காருக்கு கொடுத்திருக்கின்ற கணக்குப் படி பார்த்தால், அது போதாது என்ற நிலைமைதான் இருக்கிறது. காரணம், என்னுடைய தொகுதியிலேயே அழியப்பட்டிருக்கின்ற நிலையைப் பார்க்கின்றபொழுது, கிட்டத்தட்ட பத்து கோடி ரூபாய், விவசாயிகளுக்குச் சேதம் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கு இருக்கிறது. ஆகவே, இந்த வெள்ள நிவாரண நிதியை மத்திய சர்க்காரிடம் இன்னும் கூடுதலாக நிதி பெற வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

கிராமப்புற விவசாயிகளுக்கு இன்னும் சரியான பட்டா வழங்கும் தன்மை நிறைவேற்றப்படவில்லை. முந்தைய அரசு பட்டா புத்தகங்களை அங்கேயுள்ள விவசாயிகளுக்குக் கொடுத் தது. ஆனால் கொடுக்கப்பட்ட அந்தப் பட்டாக்கள் பெரும் பகுதி விவசாயிகளுக்குப் போய்ச் சேரவில்லை. ஆகவே, இந்த நிலைமையை மாற்றி, நேரடியாக அவர்கள் தங்களு டைய சொத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள் ளும் வகையில் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று இந்த நேரத் தில் கேட்டுக் கொள்கிறேன்.

நிலப்பட்டாவைப் பொறுத்தவரையில் இந்த நிலைமை யிருக்கும் பொழுது, கிராமங்களில் நத்தம் புறம்போக்குகளில் அந்த நிலங்களுக்குப் பட்டா வழங்காத காரணத்தால் அது யாருடைய நிலம் என்று தெரியாத நிலைமை இருக்கிறது. என்னுடைய பகுதியில் பெரும்பகுதி வறட்சி ஏற்படும் நேரத்தில் மற்ற மாவட்டங்களுக்குச் செல்வரானால் அவர்கள் திரும்பவும் ஐந்தாறு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களு டைய இல்லத்திற்கு வருகின்றபொழுது அவர்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே, நத்தம் புறம்போக்கு நிலங் களைப் பொறுத்தவரையில், அதை அரசு மறுபரிசீலனை செய்து—சர்வே செய்து, யார் யாருடைய நிலம் என்று பார்த்து நேரடியாகப் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நிலத் தீர்வையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு சமஸ் தான காலத்திலிருந்து போடாத வரிகளைக் கூட வசூல் செய்வதாகக் கேள்விப்படுகிறேன். என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் ஒரு ஆண்டு வறட்சி, ஒரு ஆண்டு வெள்ளம் என்று பகுதி பகுதியாக ஆண்டுதோறும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருவதால்—90-வது பசலி என்று





நினைக்கிறேன். இந்த பசலிக்கு முன்பிருந்த நில வரிகளை அரசு முழுவதும் ரத்து செய்து, இந்த 90-வது பசலிக்கு மறு பசலி ஆரம்பிக்கும் நேரத்தில் அவர்களுக்கு நில வரி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம் என்னவென்றால், அங்கே வறட்சிப் பகுதியாக இருக்கிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் மிகப் பெரிய வறுமையைச் சுமந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியும். அந்த மக்களுக்கு நம்முடைய அரசு முன்னுரிமை வழங்கியும், விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கியும் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு கொண்டு வந்திருக்கின்ற நல்ல காரியங்களை வரவேற் கின்ற அதேநேரத்தில் அரசு அலுவலர்களாகப் பணிபுரிகின்ற வட்டாட்சித் தலைவர்கள் மிகவும் மோசமான நிலையைக் கையாண்டு வருகிறார்கள் என்பதை இந்த அரசுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன நோக்கத் தோடு அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வருகிறதோ அந்த நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல் அதிகாரிகளாகப் பணி புரிகின்றவர்கள் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் காலந்தாழ்த்திக் கொண்டு வருகிறார்கள். இது ஏன் என்று தெரியவில்லை.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சமீபத் தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்று வரையில் எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்று நேற்று தகவல் வந்திருக்கிறது. அங்கே, ஒரு லிட்டர் அரிசிகூட கொடுக்கவில்லை, ஒரு துணிமணி கொடுக்கவில்லை. வீடு இடிந் தவர்களுக்கு ஆறுதல்கூடச் சொல்லவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் குடியிருந்த வாடகை வீட்டில் சுற்றுப் புறத்தில் உள்ள இரண்டு சுவர்களும் விழுந்து விட்டன. அந்த வீட்டைப் பற்றி வட்டாட்சித் தலைவரிடத்தில் கோரியிருந்தேன், பார்வையிடுமாறு நான் கேட்டிருந்தேன். ஆனால் இன்றுவரையில் பார்வையிடவில்லை என்று தகவல் வந்திருக்கிறது. இந்த அவல நிலை ஏன்? அரசுக்குக் கெட்ட பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இது செய்யப்படுகிறதா?

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

இப்பொழுது அவர்கள் சொல்கிறார்கள், அரசு எங்க ளுக்குத் தகவல் கொடுக்காத காரணத்தால் நாங்கள் எதைச் செய்வது என்று கேட்டு, நிதி நிலை இல்லை என்று தட்டிக் கழிப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்த நிலை யைப் போக்குவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த

நிவாரணமும் கிடைக்கவில்லை என்ற தகவல் கிடைத்திருப்பதால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இன்றைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு நிலவரி வஜா செய்யவேண்டும். அதேநேரத்தில் அடுத்த ஆண்டு அவர்கள் செய்கின்ற விவசாயத்திற்கு அரசு முழுமையாக உதவவேண்டும். விதை, பூச்சிமருந்து, உரம் போன்றவற்றை அரசு மானியமாகவோ, இனாமாகவோ கொடுத்து அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டும். போன ஆண்டு வறட்சி இந்த ஆண்டு வெள்ளம் என்று இப்படி அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலைமையிலே எவ்வாறு அவர்களால் வாழ்க்கையை நடத்த முடியும்? ஆகவே அந்த மக்கள் முன்னேறுகின்ற வகையிலே இந்த அரசு முழுக்கவனம் செலுத்தி உரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1970-ஆம் ஆண்டிலே மத்தியிலே இருந்து ஒரு குழு வந்தது. அந்தக் குழு வந்து பார்த்து இராமநாதபுரம் மாவட்டதை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று அன்றைக்கு ஒரு அறிக்கை வைத்துவிட்டு போனார்கள். அவ்வாறு அவர்கள் சொன்ன காரணத்தால் தான் ஓரளவுக்காவது அந்த மாவட்டம் முன்னேற்றப் பாதைக்கு வர முடிந்தது. ஆகவே மத்திய குழு வற்புறுத்திய அந்த வகையில் அந்த இராமநாதபுரம் மாவட்டத்தை நிரந்தர வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உழுபவர்களுக்கே நிலம் சொந்தம் என்ற வகையில் அரசு வைத்திருக்கின்ற அறிக்கையைப் பார்க்கின்றபோது அதை நான் வரவேற்கிறேன் ஆனால் அதே நேரத்தில் உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் மற்ற தொழில்களைப் பொறுத்தவரையில் அவரவர்களுக்குச் சொந்தம் என்று ஆக்க வேண்டும். இன்றைக்கு நகரப்புறங்களில் எத்தனையோ பேர் வீடுகளைக் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். இன்னும் எத்தனையோ தொழில்கள் எல்லாம் நடக்கின்றன. அவர்களுக்கும் இது போன்ற உரிமையை வழங்க, அதாவது உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் உரிமையை வழங்க இந்த அரசு நிலைமைகளைக் கொண்டுவந்தால் அதை உண்மையிலேயே நாங்கள் வரவேற்கிறோம். ஆகவே நான் என்ன சொல்கிறேன் என்றால், கிராமத்திலே ஒரு 5 ஏக்கர் நிலத்தை ஒருவர் வைத்திருக்கின்றார் என்றால் அந்த நிலத்தை, உழுபவனுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் ஏற்பாடுகளைச் செய்துவிட்டால் அந்த நிலத்தின் சொந்தக்காரன் என்ன நிலைமைக்கு ஆளாவான் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிச் செய்கின்றபோது நகரத்திலே வாழ்கின்றவர்களுக்கும் அதேமாதிரி





செய்கின்ற வகையிலே அதாவது நகர்ப்புற மக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் இணைந்த வகையிலே ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து இங்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்கள் நெஞ்சில் நிலையாக இருக்கின்ற தலைவர் அவர்களின் பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பு வந்ததற்காக நான் இந்த அரசை முழுமையாகப் பாராட்டி நன்றிகடன் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அந்த மாவட்டம் சிவகங்கையைத் தலைநகராகப் பெற்றிருக்கின்ற காரணத்தால், ஒரு நிபுணர் குழு வந்து பார்வையிட்டு எந்தெந்த இடங்களை அந்த மாவட்டதிலே சேர்க்கலாம் என்ற வகையில் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கின்ற நிலையில், நாங்கள் வணங்கும் தெய்வமான திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் பிறந்த இடமான கமுதி தாலுக்காவையும், அவர் தொகுதியாகிய முதுகளத்தூர் தாலுக்காவையும், அவர்களுடைய எஸ்டேட் இருக்கின்ற திருத்துறைத் தாலுக்காவையும் உள்ளடக்கிய மாவட்டமாக அது இருக்க வேண்டும் என்ற வகையில் அவற்றையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நஞ்சை ஓரமாக இருக்கின்ற புஞ்சை நிலங்களில் தண்ணீர் பாய்ச்சுவதில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. தண்ணீர் நஞ்சைக்குப் போய், பிறகு புஞ்சைக்குப் போகின்றபோது அதற்கு தண்ட வரி போடுகிறார்கள். ஆகவே நஞ்சை நிலத்தைப் பொறுத்தவரையில் தண்ணீர் எவ்வளவு ஏக்கருக்குப் பாயும், எவ்வளவு ஏக்கர் நிலம் பயனடையும் என்பதை எல்லாம் கணக்கில் எடுத்து நஞ்சை ஓரமாக இருக்கின்ற புஞ்சை நிலங்களையும் நஞ்சை நிலங்களாக மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நமது அரசு ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கின்றது. அதுதான் கிராம உத்தியோகஸ்தர்கள் வேலை நீக்கம். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் வயதான நேரத்தில் அந்த கிராம உத்தியோகத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருந்தவர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்டவுடன் அவர்களுடைய குடும்பம் நிர்கதியாக நிற்கின்றது. அந்த மாதிரி நிலைமையில் இருப்பவர்களுக்கு நம்முடைய அரசு மனிதாபிமானத்தோடு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோர் பென்ஷன் என்ற ஒரு நல்ல காரியத்தை செய்திருக்கிறீர்கள். ஆனால் அவர்கள் இறந்து போனால்தான் அடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற வகையிலே திட்டம் இருக்கின்றது. ஆகவே ஒருவர் இறந்துபோனதற்குப் பிறகு அடுத்தவர்க்குக் கொடுப்பது என்பதை மாற்றி உண்

மையிலேயே கஷ்டப்படுகின்றவர்களுக்கு முன்னுரிமை அளித்து வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் பொது இடங்களை ஆக்கிரமித்து, சாலைகளின் இரு பக்கமுள்ள நிலங்கள் எங்களுக்குத்தான் சொந்தம் என்று விவசாயிகள் ஒரு நிலைமையை உண்டாக்கி வருகிறார்கள். காரணம் சர்வே நடத்திய பின்னால் ஊன்றிய கல்கள் காணோம். ஆதலால் இந்த மாதிரி ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, சாலை ஓரங்களில் உள்ள நிலங்களை சர்வே செய்து, ஏற்கனவே எந்த நிலை இருந்ததோ, அந்த நிலையில் பதிவு செய்ய சர்வே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறுகின்ற நேரத்தில், மாற்றுத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு, என்னுடைய தொகுதியில் இதுவரையிலும், வெள்ள நிவாரணப் பணி எதுவும் செய்யவில்லையென்ற முறையில் எனக்கு ஒரு மகஜர் அனுப்பியிருக்கிறார்கள், அந்த விவசாயிகள், மக்களின் மகஜரை, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடம் சமர்ப்பிக்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஒரு கட்டு தாள்களை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரிடம் அளித்தார்).

திரு. மு. ப. முனுசாமி : வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நான் சார்ந்திருக்கும் என்னுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது மாநிலத்தில் மாவட்டங்களைப் பரவலாக, அதிகமாகப் பிரிக்க நமது அரசு முன் வந்திருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தைப் பிரிவினை செய்யும்போது முன்னால் 4 வட்டங்களாக இருந்தன ; தனி மாவட்டமாக மாறியபோது 8 வட்டங்களாக மாறியும்கூட, ஏற்கனவே இருந்த கோட்டங்கள்தான் இருக்கின்றனவே தவிர, அவற்றை விரிவாக்க அரசு முன்வரவில்லை. அதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். பல வட்டங்கள் பெரிய வட்டங்களாக இருந்துங்கூட, காவேரிப்பட்டணம், காரியமங்கலம், வேப்பனப்பள்ளி இப்படிப்பட்ட பிர்காக்களைத் தனி வட்டமாக ஆக்க வேண்டுமென்று, அந்தந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் அரசிடம் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டும் கூட இன்னும் அரசு கவனிக்கவில்லை என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராம நல ஊழியர்களை நியமனம் செய்யும்போது பல வருவாய் கிராமங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்களால் பணி செய்ய முடியாத நிலைமையிலே இருக்கும்போது, இன்று





அளிக்கப்பட்டிருக்கும் நமது மானியக் கோரிக்கையில், இன்னுங்கூட, மார்ச் மாத முடிவிற்குள் அவர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்று சொல்லப்படடிருக்கிறது. அது சந்தேகத்திற்குரியதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட்டாட்சியர்களை 6 மாதத்திற்குள், 1 வருடத்திற்குள் மாற்றி விடுகிறார்கள். அவர்கள், வந்து, அந்தந்த வட்டத்தில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. எப்படிப்பட்ட பணிகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிந்து கொள்ளாமல் போகக்கூடிய வாய்பினை இந்த மாறுதல் அவர்களுக்கு அளிக்கிறது. அதனால், மக்களுக்குக் கஷ்டங்களும் சிரமங்களும் ஏற்படுகின்றன. பொதுமக்களும் எந்தவிதமான நன்மையும் அடையமுடியாமல் போய்விடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மாறுதலை அரசு அனுமதிக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கோள்கிறேன்.

எங்கள் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திலே கூட அப்படிப்பட்ட வட்டப் பிரிவினை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார். ஆனால், இதுவரையில் அரசு கவனிக்கவில்லை. வட ஆற்காடு மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியையும், ஏலகிரி மலைப் பகுதியையும் பிரித்து, தனி வட்டமாக ஆக்கி, மலை வாழ் மக்களின் நலனை மேம்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அது இன்னும் கவனிக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் ஜம்னாபுத்தூரை தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்டிருக்கிற நிலைமையைப் போக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 10,000 என்று சொல்லி இருக்கிறார். இந்த ரூ. 10,000-ல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதைச் செய்ய முடியும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30.)

அதை அமைச்சர் அவர்களுடைய உரையில் 20 லட்சம் ரூபாயாக மாற்றி அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இயற்கை சிற்றத்தாலோ, தீ விபத்தாலோ வீடுகள் எரிந்துவிட்டால் ஏழை விவசாயிகளாக இருந்தாலும், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கிற பாமர மக்களாக இருந்தாலும் 200 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்போது இருக்கிற விலைவாசியில் மூங்கில் வாங்குவதற்கும், சுவர் கட்டுவதற்கும் மற்றவற்றிற்கும் அந்த 200 ரூபாயில் முடியாது என்பதால் அதை ஆயிரம் ரூபாயாக அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. ப. முனுசாமி] [1984 மார்ச் 26

அதைப்போல, ஆதிதிராவிடர்களுக்கு மனைப்பட்டா வழங்
கப்படுகிறது. என்னுடைய தொகுதியில் தண்டுகராநல்லி என்ற
கிராமத்தில் 16 பேர்களுக்கு அரசாங்கம் மனைப்பட்டாக்கள்
வழங்கி இருக்கிறது. ஏதோ காரணத்தினால் வருவாய்த் துறை
யைச் சார்ந்தவர்கள் அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று
போலீஸ் மூலமாக நடவடிக்கையெடுக்க முன் வந்திருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட நிலைமையிருந்தால் மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அதைத் தடை செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சென்னையிலே வெள்ளத்தால் பாதிக்கப்
பட்டவர்களுக்கு அரசு 200 ரூபாய் கொடுத்ததை அங்கேயுள்ள
சில அதிகாரிகள் 200 ரூபாய்க்கு கையெழுத்தை வாங்கிக் கொண்டு
50 ரூபாய் தான் கொடுத்துக்கொண்டு வருகிறார்களாம். அப்
படிப்பட்ட நிலைமை இருப்பதை மாற்றி, விட்டுப்போன 150
ரூபாயை கொடுப்பதற்கு தக்க நடவடிக்கையெடுத்து அவர்க
ளுக்கு அந்தப் பணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற இடங்களில் அர
சாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரே ஒரு நாள் 5 கிலோ
அரிசி,, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் கொடுத்து வருகிறது.
அடுத்து வருகிற வாரத்தில் அவர்களுக்கு உண்ண உணவில்லை.
ஆகவே அப்படிப்பட்ட நிலையைப் போக்கவேண்டுமென்றால்,
அரசாங்கம் குறைந்தது மூன்று மாதக்காலத்திற்காவது மானிய
விலையில் அவர்களுக்கு உணவு கிடைக்கச்செய்ய முன் வர
வேண்டும் என்பதை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்திலே ஒவ்வொரு பிர்க்காவிலும் குலுக்குச்
சீட்டுப் போட்டு எடுத்துதான் வீட்டு மனை இடங்களை கிராமப்
பகுதிகளில் அறிவிக்க இருக்கிறார்கள். இப்படி திருவுளச் சீட்டுப்
போட்டு வழங்கும் முறையை கடைபிடித்தால் அரிசன மக்களுக்கு
இன்னும் 20 ஆண்டுகள் ஆனாலும் அவர்களுடைய தேவையை
பூர்த்தி செய்ய முடியாது. இந்தத் திட்டத்தை குறைந்த அள
வில் தான் ஒவ்வொரு ஆண்டும் நாம் நடைமுறைப்படுத்தி வருகி
றோம். அந்த நிலைமையை மாற்றி அவர்கள் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்த நம்முடைய அரசு அதிகமான நிதியை ஒதுக்கி
அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மனித உழைப்பு என்று அவர்களுக்கு வேலை
கொடுத்து வருகிறோம். இயற்கை சீற்றங்கள் ஏற்படுகிற
நேரங்களில் 20 நாட்கள் அல்லது 50 நாட்கள் என்று பாதை
போடவும், கட்டடம் கட்டவும் அவர்களுக்கு வேலை கொடுக்கி
றோம். அதற்குப் பிறகு அவர்களுக்கு எந்தவிதமான வேலை
வாய்ப்பும் இல்லாமல் போகிறது. ஆகவே வறுமைக் கோட்
டிற்கு கீழே இருக்கிறவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பிற்கு



1984 மார்ச் 26] [திரு. மு. ப. முனுசாமி]

அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். இப்படிப்பட்ட நிலையில் நாம் இன்றைக்கு வருவாய்த்
துறையின் மூலம் அந்த விவசாயிகளுக்கு மனித உழைப்பு நாட்கள்
எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளதோ அதற்குத்தான் உதவி செய்
கிறோம். அவர்களுக்கு நிரந்தரமாக, வருஷம் பூராவும் கூலி
கிடைக்கும் வகையில் வழி வகை செய்ய வேண்டும். அதற்கான
முறையில் நிதி அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால் அந்த ஏழைகள்
வாழ முடியாது. ஆகவே, இந்த வறுமைக் கோட்டிற்கு கீழே
உள்ள அத்தனை மக்களுக்கும் உதவி செய்யும் வகையில், மனித
இழப்பு நாட்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு உதவி
என்று இல்லாமல், அவர்களுக்கு நிரந்தரமான முறையில் ஒரு
வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அவர்களுக்கு அந்த வகையில் வேலை வாய்ப்பு கிடைக்க நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் என்னுடைய எண்ணத்தை
நான் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மத்திய அரசிடம் நாம் கேட்டு இருந்த தொகை வரவில்லை,
வந்த பின்தான் நாம் வளர்ச்சிப் பணிகளைத் துவங்குவோம்
என்று சொன்னால், இன்றைக்கு நாட்டிலே நிலவும் பசி பட்டினி
மேலும் அதிகரித்து விடும். ஆகவே, அந்தத் தொகையை கால
தாமதம் இன்றி பெற நாம் விரைந்து நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும். நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அளித்
துள்ள கொள்கைக் குறிப்பில் வருவாய் நிர்வாக சீர்திருத்தம்
சம்பந்தமாக அளிக்கப்பட்ட 184 பரிந்துரைகளில் அரசு 134-ஐ
ஏற்றுக் கொண்டுள்ளது என்றும், படிப்படியாக ஆணைகள் வெளி
யிடப்படும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அப்படிச் சொல்லி
யிருப்பது ஒரு சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே, அந்த
134 பரிந்துரைகளும் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற
வகையில் ஒரு உறுதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த
அவையில் அளிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்த
தலைவருக்கு நன்றி கூறி, உரையை முடித்துக் கொள்கிறேன்,
நன்றி, வணக்கம்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்
அவை முன் வைத்து இருக்கும் மானியக் கோரிக்கைகளான
நிலவரி, இயற்கைச் சீற்றங்கள், இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்,
ஆகியவற்றின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல
விழைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆட்சிப்
பொறுப்புக்கு வந்த பிறகு, மாண்புமிகு வருவாய்த் துறை
அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இருக்கும் இந்த வருவாய்த்
துறை, இந்த மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருக்கும்
மக்களுக்கு பல்வேறு நன்மைகளைச் செய்து வருகிறது. குறிப்
பாக இந்த அரசாங்கம், மக்களுக்காக இருக்கும் அரசாங்கம்.

அரசாங்கத்திற்காக இருக்கும் ஆட்சி என்ற முறையில், இந்த
நிர்வாகத்தைச் சீர் செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்,
பெரிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரித்து, அதன்
மூலம் நிர்வாக வசதியை பெருக்கியிருக்கிறார்கள்.
பிரிக்கப்படுகிற மாவட்டங்களின் தலைநகர்களுக்கு, அப்படி
களுக்கு, இந்த நாட்டிற்காக உழைத்த பெரிய மாவட்டங்
பெயரையும், தியாகம் செய்த தலைவர்கள் தலைவர்கள்
பாக, அறிஞர் அண்ணா, தந்தை பெரியார் பெயரையும் குறிப்
பெயரையும் வைத்ததோடு மட்டுமல்லாமல், போன்றவர்களின்
பெயரையும் வைத்த பெருமை இந்த அரசுக்கு உண்டு என்பதை வள்ளலார்
நான் இங்கே சொல்லிக் கொள்கிறேன். இந்த மாவட்டப் பிரி
வினை நிர்வாகத்தை செம்மைப் படுத்தும் வகையில் அமைந்
துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட
ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் பணியாற்றும் நிர்வாக
அமைப்பு செம்மைப் படுத்தப்படுவதோடு மட்டும் அல்லாமல்,
கோட்டாட்சித் தலைவர், வட்டாட்சித் தலைவர் ஆகியோர்
தலைமையில் இயங்கும் நிர்வாகத்தையும் செம்மைப்படுத்த
நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இன்றைக்கு அரசாங்க அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்
களில் செயல்படுவதால், நிறைய செலவு ஏற்படுகிறது. அதைத்
தவிர்க்கும் வகையில் அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாகசொந்தக்
கட்டிடங்களை ஏற்படுத்தும் வகையில் இன்றைக்கு 54 கோட்ட
ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் உள்ளவற்றில், தற்போது
51 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன ;
இதில், நடப்பு ஆண்டில் 9 இடங்களில் புதிதாக கோட்ட வளர்ச்சி
அலுவலகங்கள் கட்டப்பட்டு, அவைகள் அதில் இயங்கி
வருவதும் அடங்கும். இன்னும் 3 கோட்டாட்சி அலுவலகங்கள்
தான் கட்ட வேண்டியிருக்கிறது. அதுவும் விரைவில் நிறை
வேற்றப்படும் என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்காக அரசை
நான் பாராட்டுகிறேன்.

(பிற்பகல் 12-40)

அதே நேரத்தில் இந்த ஆண்டு திருப்பூர் கோட்டாட்சி அலுவல
கத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க அனுமதி வழங்கப்பட்டிருப்
பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் போன்று தென்னாற்
காடு மாவட்டத்தில் கடலூரில் கோட்டாட்சி அலுவலகம் இந்த
ஆண்டிலேயே, விரைவிலேயே கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கு என்று
அலுவலகம் இணைந்த குடியிருப்புகளைக் கட்டிக் கொடுக்கும்
திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில்
தற்போது 1,097 பிர்க்காக்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கி
றார்கள். இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ள 958 குடியிருப்பு
களில் 609 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்றும்





சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் மீதம் இருக்கிற 119
பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கும் விரைவிலேயே கட்டிடம்
கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த ஆண்டில்
15 குடியிருப்புகளை அலுவலகத்தோடு சேர்த்துக் கட்டுவதற்கு
ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன்,
வரவேற்கிறேன்.

அதே மாதிரி கிராமங்களில் இருக்கிற கிராமச் சாவடிகளும்
கால் நடைப் பட்டிகளும் என்ற தலைப்பில் இந்த ஆண்டு 15
இலட்சம் ரூபாய் பராமரிப்புக்கு செலவு செய்ய இருக்கிறார்கள்.
அது மட்டுமல்ல, கிராமச் சாவடிகள், கால் நடைப் பட்டிகள்
பராமரிப்பு என்று மட்டும் இல்லாமல் இந்த ஆண்டு புதிதாக
கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் கிராமச் சாவடி
கள், கால்நடைப் பட்டிகள் கட்டுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தி
யிருக்கிறார்கள். அதையும் நான் பாராட்டுகிறேன், வரவேற்
கிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடக்கும் போது அதற்கு
ஒரு கோரம் என்று வைத்திருக்கிறார்கள். கோரம் இருக்க
வேண்டும் என்று சொல்லுகின்ற நிலைமையைத் தவிர்க்க
வேண்டும். வருகை தருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அர
சாங்க அதிகாரிகளை வைத்து கூட்டத்தை நடத்த வேண்டும்.
கோரம் இருக்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதால் தான்
கூட்டங்கள் நடத்த முடியாமல் தள்ளி வைக்க வேண்டிய சங்க
டங்கள் ஏற்படுகின்றன. கோரம் இல்லாமல், வருகின்ற
சட்டமன்ற உறுப்பினர்களையும் அரசாங்க அதிகாரிகளையும்
வைத்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை நடத்த வேண்டு
மென்ற கருத்தை என்னுடைய ஆலோசனையாகத் தெரிவிக்க
விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த அரசு வந்த பின்னால் தான் தீயில் எரிந்த
வீடுகள், புயலால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு எல்லாம் 50
ரூபாய் என்று இருந்ததை 200 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்
கள். அந்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. அந்த நிலைமை
யில் இப்போது வந்திருக்கிற வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட
வர்களுக்கு இந்த அரசு போதுமான உதவிகளை செய்திருக்
கிறது. சிறந்த முறையில் ஏற்பாடுகளைச் செய்த இந்த அரசை
யும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும்
அரசாங்க அதிகாரிகளையும் நான் பாராட்ட கடமைப் பட்டிருக்
கிறேன்.

இன்றைக்கு மட்டுமல்ல, எப்போது வெள்ளம் வந்தாலும்
வறட்சி வந்தாலும், வேறு பாதிப்பு வந்தாலும் இந்த வருவாய்த்
துறை தான் இந்த அரசுக்கு ஆணிவேராக இருக்கிறது. எந்த
நேரத்திலும் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்த
வருவாய்த் துறை தான் பணியாற்றுகிறது.

வருவாய்த் துறையில் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் மக்க ளுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றுகிறார்கள் ; மக்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறார்கள் என்பதற்காக நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போன்று கடலோரப் பகுதிகளில் இருக்கிற மக்க ளுக்கு புயல் அபாயம் ஏற்பட்டாலும் வெள்ள அபாயம் ஏற் பட்டாலும் அவர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்புக்கு வழி வகைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு நிரந்தரமான பாது காப்பு அளிக்க வேண்டும். அந்த வகையிலே தான் 110 புயல் பாதுகாப்பு இல்லங்களை ஏற்படுத்த ஆணையிடப்பட்டிருப்ப தாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இவற்றில் 68 புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டி முடிக்கப் பட்டு விட்டதாகவும், சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் ஒரு பக்கத்தில் வரகனாறு ஓடுகிறது. அந்தப் பகுதியில் சுமார் 20 கிராமங்கள் வெள்ளம் வரும்போது எல்லாம் பாதிக்கப்படுகின்றன. வெள்ளம் வரும்போது அந்த மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறு கிறார்கள். அதைத் தவிர்க்க அந்தக் கிராமங்களில் நான்கு இடங்களிலாவது புயல் பாதுகாப்பு இல்லங்களைக் கட்ட வேண் டும். கல்குளம், ஆடூர்நகரம், கொத்தவால்சாவடி, குண்டிய நல்லூர் ஆகிய நான்கு இடங்களில் இந்த புயல் பாதுகாப்பு இல்லங் களைக் கட்டித்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்தப்படியாக, வீட்டுமனை வழங்கும் திட்டத்தில் இந்த அரசு இந்த ஆண்டு மட்டும் 1,64,160 பட்டாக்கள் வழங்கி யிருக்கிறது. குறிப்பாக இந்த அரசு ஏழை மக்கள் மீது, தாழ்த் தப்பட்ட மக்கள் மீது எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதைக் காட்டுவதற்காகத்தான் ஆதி திராவிட மக்களுக்கு மாத்திரம் 79,350 பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். பழங்குடியினருக்கு 39,028 பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள். இப்படி பார்க்கிறபோது, இந்த அரசாங்கம் ஏழை எளியவர் களுக்கு எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு, இந்த இலாக்கா எவ்வளவு அக்கறையோடு பணியாற்றுகிறது என்பதை என் னைப் போன்றவர்கள் பாராட்டியாக வேண்டும்.

அது மட்டுமல்லாமல், இந்தப் பட்டா செய்து தருகிற விஷயத்தில் இன்னும் நாம் கொஞ்சம் வேகமாகச் செயல்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எப்படி என்றால், கிராமப் பகுதியில் இருக்கின்ற நத்தங்களில் இன்னும் பட்டா தருவது இல்லை. பல ஆண்டுகாலமாக ஏழை எளியவர்கள் அதிலே குடியிருந்து வருகிறார்கள். அந்த நத்தத்தை டிரான்ஸ்பர் செய்துதான் அங்கே பட்டா செய்து தரவேண்டிய நிலைமை





இருக்கிறது. ஆகவே அந்த நிலைமையை மாற்றுகிற வகையில், ஓடை புறம்போக்காக இருந்தாலும், நத்தம் புறம்போக்காக இருந்தாலும், குட்டை புறம்போக்காக இருந்தாலும், குளம் புறம்போக்காக இருந்தாலும், அவைகள் பயனற்ற முறையில் இருக்கின்றன. அங்கே இருக்கிற ஆய்வாளர்கள் எல்லாம், சிபாரிசு செய்து படிப்படியாக மாவட்ட வருவாய்த்துறை அலுவலகத் திற்குப் போய்ச் சேருவதற்கு பல ஆண்டுகளாகிறது. அதைத் தவிர்க்கிற வகையில் பல ஆண்டுகாலமாக குடியிருக்கிற மக்களாக இருந்தாலும், ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாம் குடியுரிமை வழங்க வேண்டும். அவர்களுக்கு மனைப் பட்டா வழங்கவேண்டும். எனவே 'அசைன்மென்ட் தாசில்தார்' என்று ஒரு கோட் டாட்சித் தலைவருக்குக் கட்டுப்பட்டு இருக்கின்ற இரண்டு தாலுக்காக்களைச் சேர்த்து ஒரு கோட்டாட்சித் தலைவருக்கு கட்டுப்பட்டு இருக்கின்ற இடத்தில், 'அசைன்மென்ட் தாசில் தார்' என்று ஒன்று ஏற்படுத்தி, அவர்களுக்கு பட்டா வழங்கவேண்டும். காரணம் அங்கே இப்போது இருக்கின்ற தாசில்தாருக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. அந்த வகையில் அவர்கள் பட்டா தருவதில் கவனம் செலுத்த முடிவ தில்லை. ஆகவே 'அசைன்மென்ட் தாசில்தார்' என்று ஒன்று ஏற்படுத்தி அவர்களுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குப் பின்னால், திருச்சி மாவட்டத்தில், திருச்சி தாலுக் காவை இரண்டாகப் பிரிக்கவேண்டும் என்று பல நாட்களாகக் கோரி வருகிறார்கள். எனவே அதை இரண்டாகப் பிரித்து, ஸ்ரீரங்கத்திற்குத்தனியாக ஒரு தாலுக்காவை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பின்னால், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்வ ராயன் மலைப் பகுதியில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா செய்து தரவில்லை. அதை ஏற்கனவே சர்வே செய்திருக்கிறார்கள். அந்த சர்வே சரியில்லாமல் திரும்பவும் அவர்களுக்கு சர்வே செய்து அவர்கள் பயிர் செய்கின்ற இடத்தில் பட்டா செய்து தரவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள் கிறேன்.

அதற்குப் பின்னால், என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியில் உள்ள நெய்வேலிக்கு 20 கிராமங்களை, நெய்வேலி நிர்வாகத் திற்குத் தந்து இருக்கிறார்கள், அப்படி 20 கிராமங்கள் தந்தாலும், இப்போது நிலம் கொடுத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இன்னமும் தரப்படவில்லை. அவர்களுக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டு, வேலைவாய்ப்புத் தரவேண்டும். அதே அடிப்படையிலேதான் நெய்வேலி நிர்வாகம் 20 கிராமங் களைக் கொண்ட ஒரு [illegible] அங்கே நம்முடைய சர்க்காரின் மூலம் அவர்களுக்குப் பொதுவான வசதிகளைச் செய்து

தந்திருக்கிறார்கள். மத்திய அரசு நிர்வாகமாக இருந்தாலும், இந்த மாநில அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் நிர்வாகத் தொடர்பு ஏற்படுகிற வகையில், அங்கே இருக்கின்றவர்களுக்கு ஒரு வருவாய்த்துறை ஆய்வாளரை ஏற்படுத்தினால்— அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் பலவிதமான சர்டிபிகேட்டுகள் வேண்டும்— ஆகவே அவர்களுக்குத் தனிச் சான்றிதழ் வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் நெய்வேலிக்குத் தனி தாசில்தார் ஏற்படுத்த வேண்டும். நெய்வேலியில் கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சான்றிதழ் வாங்கவேண்டும் என்றால் பல தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். இந்தச் செலவைக் கூட ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே நெய்வேலியில் தனி தாசில்தார் ஒருவரையும், ஒரு ஆய்வாளரையும் ஏற்படுத்தித்தந்தால் நல்லதாக இருக்கும். இந்த அரசாங்கத்திற்கு வருமானம் வரக்கூடிய நல்ல வாய்ப்புகள் இருக்கிறது என்பதைச் சொல்லி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் இங்கே மிக முக்கியமானது நில வரி, மற்றும் நிர்வாகம் குறித்த மானியக் கோரிக்கைகள். இந்த நேரத்தில் நான் ஒன்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன். நாம் எவ்வளவு பெரிய சீர்திருத்தங்களை செய்தாலும், [illegible] ஒழித்தோம்; அதற்குப் பதிலாக நில வரி [illegible] நியமனம் செய்திருக்கிறோம். அதுபோல், கீழ் மட்டத்தில் கிராமத்திலே இருக்கிற கர்ணம், மணியக்காரர்களை ஒழித்து விட்டு, அதற்குப் [illegible] என்று சொல்லக்கூடிய கிராம அதிகாரிகளை நியமனம் செய்திருக்கிறோம் என்றெல்லாம் நாம் சொல்லுகிறோம். [illegible] பெருமை [illegible] இருக்கலாம், [illegible]

[illegible] (பக்கம் 56)

[illegible] அல்லது அரசினுடைய சாதனையாக வேண்டுமானால் கருதிக் [illegible] [illegible] பாதிக்கப்பட்டவர்களுக்கு, [illegible] சீர்திருத்தத்திலே அல்லது பொது மக்கள் [illegible] சாதாரண மக்களுக்கு [illegible] இருக்கிறது [illegible] சிந்தித்துப் பார்க்க வேண்டும். [illegible] மூலமாக [illegible] கிறார்களே தவிர, வேறு ஒன்றும் மாற்றம் இல்லை. [illegible] மந்திரி கிராமங்களிலே கணக்குப் [illegible] [illegible] அரசாங்கத்தில் [illegible]

[illegible]



செய்யப்பட்டவர்கள் அல்லது தேர்வாணைக் குழுவின் மூலமாக நியமனம் செய்யப்பட்டவர்கள் அங்கே வந்திருக்கிறார்கள் என்பதைத் தவிர, வேறு ஒன்றும் புதியதாக மாற்றம் இல்லை.

அவர் 5 ரூபாய் சன்மானம் கேட்டால், இவர் 50 ரூபாய் சன்மானம் கேட்கிறார்கள். அதுதான் வித்தியாசம். காரணம் இவர்களுக்கு 500 ரூபாய் சம்பளம், அவர்களுக்கு 100 ரூபாய் சம்பளம். இதிலேதான் மாறுதல் வருகிறதே தவிர நடைமுறையில் வேறு ஏதாவது மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். நிச்சயமாக நான் சொல்வேன் மாறுதலே ஏற்படவில்லை என்று. அதற்குக் காரணமாக இந்த அரசாங்கத்தை மட்டும் குற்றம் சொல்லி விட முடியாது. நாம் ஏற்படுத்தியிருக்கிற அணுகு முறையில், ஆட்சி முறையில் ஏற்பட்டிருக்கிற கோளாறுதான் இதற்குக் காரணம். வெள்ளைக்காரன் விட்டுச் சென்ற ஒரு முறையை சீதனமாக எடுத்துக் கொண்டு, அந்த சீதனத்தையே தொடர்ந்து வைத்துக் கொண்டு, இந்த முறையில்தான் ஆட்சி நடத்த வேண்டும், அதுவும் செம்மையாக நடத்த வேண்டும் என்று சொன்னால் நிச்சயமாக முடியாது. டாட்டன் என்று சொல்லக்கூடிய ஒரு வெள்ளைக்காரன் இந்த முறைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக இந்த ராஜ்யத்தை இன்னின்ன வகையில் ஆட்சி நடத்த வேண்டும் என்று சொல்லி சென்றிருக்கிறான். அதைத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் தொடர்ந்து நடத்தினால், ரெட்-டேப்பிசம் தான் வளரும். ரெட்டேப்பிசம் வளர்ந்தால் லஞ்சம் வளரும், லஞ்சம் வளர்ந்தால் மக்களுடைய அதிருப்திதான் வளரும். ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சொன்னால், நான் ஒன்றைச் சொல்வேன்.

ஒரு புதிய கமிட்டியை அதற்காக நியமனம் செய்யுங்கள். அதில் அமைச்சர் அவர்களுடைய தலைமையில், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், நான்-கெசடட் ஆபீசர்கள், பொது மக்கள், விவசாயிகள், ஆகிய அனைவரையும் கொண்டிருக்கிற ஒரு குழுவை அமைத்து, இந்த அரசாங்கத்தை செம்மையாக நடத்தவும், மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் விரைவாக தடையில்லாமல் கிடைப்பதற்கு வழி செய்வதற்கும், ஆராயும் வகையில் முடிவு எடுக்க வேண்டும். அப்படி ஒரு குழுவை அமைத்தால்தான் அது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு பழைய கிராம அதிகாரிகளையும், கணக்குப்பிள்ளைகள், மணியக்காரர்கள் ஆகியோரையும் அனுப்பி விட்டு, அந்த இடங்களில் சென்ற ஆண்டு 5,246 பேர்களை நியமித்தீர்கள். பழைய அதிகாரிகளிலேயே பலர் மீண்டும் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தார்கள் என்பதற்காக அவர்களிலும் சிலரை நியமனம் செய்தீர்கள். இப்போது புதிதாக 7,000 பேர்களை நியமனம் செய்திருப்பதாக இந்த அறிக்கை

யிலே கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, மொத்தமாக எத்தனை பேர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள் என்ற விவரம் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பேட்டிலே இல்லை. அமைச்சர் அவர்கள் அதைச் சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். கடந்த ஆண்டிலே எஸ்.எஸ்.எல்.சி. பெயிலானவர்கள் 23 ஆம் தேதி அன்று பரீட்சை எழுதியிருப்பதாக செய்தி வந்தது. எத்தனை ஆயிரம் பேர்கள் பரீட்டை எழுதினார்கள். எத்தனை ஆயிரம் பேர்கள் அதில் பாஸ் ஆவார்கள்: எத்தனை ஆயிரம் பேர்களுக்கு அவர்களில், வேலை கிடைக்கும் என்று திட்டவட்டமாகத் தெரியவில்லை. என்றாலும் அரசாங்கம் ஒரு தார்மீக உணர்வோடு அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு அவர்களை பரீட்சை எழுத அனுமதித்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். பரீட்டை எழுத விரும்பி வந்தவர்களை பரீட்சை எழுத அனுமதித்திருக்கிறீர்கள். பாராட்டுகிறேன்.

ஆனால், அதற்குப் பதிலாக பரீட்சையிலே பாஸ் செய்தாலும், பெயில் ஆனாலும், 3 ஆண்டு காலத்திற்குள் நீங்கள் பரீட்சையை எழுதி தேர்வு பெறவேண்டும், அதற்குள்ளாக வேலையிலே சேர்ந்துவிடுங்கள். ஆனால் 3 ஆண்டு காலத்திற்குள்ளாக கண்டிப்பாக தேர்வில் தேறவேண்டும் என்ற முறையில் உத்தரவுகளை நீங்கள் பிறப்பிப்பீர்களேயானால், இன்னும் 2 ஆயிரம் 3 ஆயிரம் பேர்கள் தாம் அவர்ளில் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கும். அவர்களும் உங்களைப் பாராட்டுவார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்ததன் மூலமாகவாவது அப்படி ஒரு முயற்சியை அரசு எடுக்குமேயானால், 2 அல்லது 3 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்ததாக அது அமையும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்கு அரசாங்கம் ஒரு உத்தரவு அனுப்பியிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. சம்பா விளைச்சல் எங்கெங்கே அதிகமாக இருக்கிறதோ அங்கேயெல்லாம் நில வரி வசூல் செய்யவேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால் சம்பா பயிர் விளைந்த இடத்தில்தான் மீண்டும் புயல் வந்தது, வெள்ளம் வந்தது. பாதிக்கப்பட்டிருப்பவர்கள் அதே விவசாயிகள்தாம், சம்பா நெல்லை விளைவித்ததினால் அவர்கள் பணத்தை எல்லாம் சேமித்து வைத்துள்ளார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. விளைச்சலை எங்கேயெல்லாம் ஏற்படுத்தினார்களோ அங்கேயெல்லாம் அடுத்த ஒரு மாதத்தில் அடுத்த புயல் காரணமாக வெள்ளம் காரணமாக, விவ்சாயிகள் பாதிக்கப்பட்டு விட்டார்கள். ஆகவே, எங்கேயுமே நிலவரி வசூல் செய்ய வேண்டாம் என்று உத்திரவை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அதேபோல நில உடைமை மேம்பாடு திட்டம் என்பதில் அமைச்சர் அவர்கள் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிற ஒரு திட்டம். அதற்காக மாவட்டங்கள்தோறும் மாநாட்டை நடத்தி, அந்த மாநாட்டிலே கலந்துக் கொள்ள வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்களுடைய கையெழுத்தையிட்டு அழைப்பிதழை அனுப்பினார். பலர் அதில் கலந்துக் கொண்டனர், சிலர் அதில் கலந்துக் கொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதன் மூலமாக நீங்கள் எதிர்பார்த்த பலன் என்ன ? எதைச் சாதிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்கள்? எதைச் சாதிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்களோ அதை இதன்மூலம் நிறைவேற்ற முடியவில்லை. பல்வேறு குறைபாடுகள் தீர்ந்தபாடில்லை. சொல்லலாம், புதிதாக ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கும். அதிகாரிகளுக்குப் புரமோஷன் கொடுத்து இருக்கிறோம், புதிய அதிகாரிகளை நியமனம் செய்திருக்கிறோம் என்று அதைச் சொல்லி திருப்தியடைய முடியுமே தவிர நிச்சயமாக எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்பதுதான் பொதுமக்களுடைய , விவசாயிகளுடைய உணர்வாக இருக்கிறது.

சீக்கிரமாக செட்டில்மெண்டை உருவாக்கி அதன்மூலமாக எதிர்பார்த்த பலனைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களுடைய 20 அம்சத் திட்டத்திலே இது 17-வது அம்சமாக இருக்கிறது. வேறு சில மாநிலங்களிலே இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றுகிற நேரத்திலே செட்டில்மெண்ட் மூலமாக நிறைவேற்றி பலனைப் பெற்றிருப்பதாக நாம் அறிகிறோம். இங்கே இதை நீங்கள் பரிசீலனை செய்து கோளாறுகள் இருக்குமேயானால், தவறுகள் இருக்குமேயானால், சங்கடங்கள் இருக்குமேயானால் நிவர்த்தி செய்து செட்டில்மெண்ட் மூலமாக செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசன நலத் துறை மூலமாக வீட்டு மனை நிலங்களை அளிப்பதற்குப் போதுமான சர்வேயர்கள் அங்கே இல்லை என்ற குறைபாடு அந்த இலாகாவிலே இருக்கிறது. நீங்கள் டெபுடேஷன் மூலமாகவாவது சர்வேயர்களை அந்த இலாகாவிற்கு அனுப்பி அதன்மூலமாக விரைவாக சர்வே செய்து அந்த நிலங்களை அவர்களுக்கு ஒப்படைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை, வெள்ளம், வறட்சி, கடந்த காலத்திலே நாம் ஏதாவது ஒன்றைத்தான் அனுபவித்து இருக்கிறோம். ஒரு ஆண்டு வறட்சி ஏற்படும் அடுத்த ஆண்டு மாறி வெள்ளம் ஏற்படும். ஆனால் சென்ற ஆண்டு கடுமையான வறட்சி செப்டம்பர், அக்டோபர், நவம்பர் ஆகிய

[திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச் 26

மாதங்களிலே மழை பெய்யாமல் கடுமையான வறட்சி ஏற்
பட்டது. தொடர்ந்து அளவுக்கு அதிகமான மழை. இரண்டும்
ஒரே நேரத்திலே இருந்ததால் அதைச் சந்திக்கவேண்டிய
சங்கடம் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, விவசாயிகளுக்கும்
உண்டு, பொதுமக்களுக்கும் உண்டு. வெள்ளம் வந்ததற்குப்
பிறகு எத்தனை தீவிரமாக வேலை செய்தாலும் பாதிக்கப்பட்ட
வர்களுக்கு வேண்டுமானால் நிவாரணம் அளிக்கலாமே தவிர
முழுமையான நிவாரணம் அளித்ததாக இருக்காது. இங்கே
குறிப்பிட்டார்கள், அமைச்சர் அவர்கள் சுற்றிப்பார்த்தார்கள்,
மத்தியில் இருக்கிற இராணுவ அமைச்சர் வந்து பார்த்தார்கள்
என்று. உள்ளபடியே சொல்லவேண்டுமானால் மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும் நம்முடைய கூட்டுறவுத்
துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்களும்
தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் ஆற்றிய பணிகளை நான்
பாராட்டியிருக்கிறேன். ஆனால் அதே நேரத்திலே எதிர்பார்த்த
காரியங்கள் நடைபெறுகிறதா என்றால் இல்லை.

வறட்சி நேரத்திலே கோடிக்கணக்கான ரூபாய்களைச்செலவு
செய்து கண்மாய்களையும், ஊரணிகளையும், பாதைகளையும்
சரியாக ஒழுங்காகச் செப்பனிட்டு இருப்போமானால் இந்த
வெள்ளத்திலே இவ்வளவு அதிகமான அளவுக்கு பாதிப்பு ஏற்
பட்டிருக்காது. அதிலே ஏற்பட்ட தவறுகளின் காரணமாக
முறையாக வேலைகள் நடைபெறாததன் காரணமாகத் தான்
இந்த அளவுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான்
மட்டுமல்ல, பெரிய பொறியாளர்களே உண்மையை ஒப்புக்
கொண்டிருக்கிறார்கள். நான் எதற்காகச் சொல்கிறேன்
என்றால், நாம் போடுகிற திட்டங்கள் அல்லது செயல்படுகின்ற
முறைகள் முழுமையாக செயல்படுத்தப்படுவதற்கான வழிமுறை
களை நாம் பார்க்கவேண்டும். நம்முடைய ஆணையர்கள்
மாவட்டத்திற்கு ஒருவர் விதமாக வறட்சியாக இருந்தாலும் சரி
வெள்ளமாக இருந்தாலும் சரி ஒருவரை நியமனம் செய்கிறோம்.

(பிற்பகல் 1-00)

பேரர்டு மெம்பராக இருக்கக்கூடிய அல்லது கமிஷனராக இருக்கக்
கூடிய அதிகாரிகளை நியமனம் செய்கிறார்கள். இவர்கள்
என்றைக்கோ ஒரு நாள் போய் பார்த்து, மாவட்ட ஆட்சித்
தலைவர் அலுவலகத்தில் உட்கார்ந்து பார்த்துவிட்டு சரி ஒரு
4 கண்மாய்களைப் போய் பார்ப்போம், 4 குளங்களைப் பார்ப்
போம் என்று சொன்னால் அவர் முன்னால் போனால் அவருக்குப்
பின்னால் 50, 60 ஜீப்புகள் வரும். இது தான் சாதனை.
நான் ஒன்றைச் சொல்வேன் டெபுட்டி செகரட்டரி அந்தஸ்த்தில்
பெரிய செகரட்டரி அந்தஸ்த்தில் வேண்டாம், டெபுட்டி
செகரட்டரி அந்தஸ்த்தில் ஸ்பெசல் கலெக்டர் என்ற முறையில்
வறட்சி ஏற்பட்டாலும், வெள்ளம் ஏற்பட்டாலும் ஒருவரை
முழு பொறுப்போடு அந்த மாவட்டத்தில் உட்கார வைத்து



1984 மார்ச் 26] [திரு. நா. சுந்தரராஜ்]

இதை செயல்படுத்துங்கள் என்று சொல்லி நீங்கள் நியமனம்
செய்தால் அவருக்கு முழு பொறுப்பும் ஏற்பட்டு நிச்சயமாக
காரியங்கள் ஆற்றுவதற்கு வழி ஏற்படும். இல்லை என்று
சொன்னால் சென்னையிலிருந்து வருகின்ற அதிகாரிகளை
ஏமாற்றுவது கீழே இருக்கிறவர்களுக்கு சிரமம் இல்லை. காரணம்
இப்படி வேலை நடந்துகொண்டிருக்கிறது. சென்டிரல் டீம்
ஒன்று வந்தது. 4 இடத்தை காண்பித்தார்கள். நான் அந்தத்
தொகுதியில் தான் இருக்கிறேன். நானும் பின்னால் தான்
போனேன். முதல் நாள் வரை யாரும் அங்கே வேலை செய்ய
வில்லை. சென்ட்ரல் டீம் வருகிற அன்று 500 பேர் வேலை
பார்த்தார்கள். அவர்களிடம் சொன்னார்கள் 500 பேர் வேலை
செய்கிறார்கள், 4 நாட்களாக வேலை செய்கிறார்கள் என்று
சொன்னார்கள். அவரும் நம்பிப்போனார்கள். மறுநாள் அதே
ஊரில் அதே கண்மாயில் யாரும் வேலை செய்யவில்லை. கடைசி
வரை அந்த நிலைமை இருந்தது. அந்த நிலையில் வெள்ளம்
வந்தது. மீண்டும் மழை வந்தது. இது தான் நிலை. ஏமாற்றக்
கற்றுக்கொண்டிருக்கிறார்கள் திறமையாக. இதை சொல்கிற
நேரத்திலே எங்கே நடந்தது என்று கேட்பார்கள். எங்கே
நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லவேண்டிய
அவசியம் இல்லை. காரணம் உங்களுக்கு மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்களே தகவல் கொடுத்து இருப்பார்கள். அதைப்
போல நான் இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும் என்றால்
சிலயிடங்களில் அன்றைக்கு யார் யார் வறட்சியின்போது வேலை
செய்தார்களோ வெட்டாத குளத்திற்கு பில் வாங்கவேண்டும்
என்று அதை வெட்டாமல் வைத்து திடீர் என்று மழை வந்த
பின்னால் நாங்கள் எல்லாம் வெட்டி விட்டோம் பணம் தாருங்
கள் என்று கேட்டிருக்கிறார்கள். மீண்டும் அதே நபர்களுக்கு
வெள்ளத்திற்கு வேலை கொடுத்து வேலை பாருங்கள் என்று
சொன்னார்கள். ஆக இப்படி நடந்திருக்கிறது. ஒரு சில நபர்கள்
ஆதிக்கம் இருக்கிறது. நாம் இங்கே நில ஆதிக்கம், பண ஆதிக்கம்,
பொருளாதார ஆதிக்கம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம்.
இங்கே ஒரு செக்ஷன் காண்டிராக்ட் ஆதிக்கம் செய்துகொண்
டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் காண்டிராக்ட் ஆதிக்கம்
இருக்கிறது. இந்த ஆதிக்கத்தை ஒழிக்காமல் நீங்கள் என்ன
காரியம் செய்ய முடியும். ஆகவே நான் ஒன்றை பணிவோடு
சொல்வேன். உழைக்கும் மக்கள் குழுவை நியமனம் செய்யுங்கள்
ரெவின்யூ கிராமமாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து கிராமமாக
இருந்தாலும் சரி அன்றாடம் உழைக்கும் மக்களை வைத்து
குழு அமையுங்கள். அதை ஒரு கூட்டுறவு சங்கமாக அமையுங்கள்.
அவர்களுக்கு எந்த வேலை வந்தாலும் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சியின்போது அங்கே
வெட்டாத குளத்திற்கு பணம் வாங்கியதாகச் சொன்னார்கள்.
அது இல்லை. வறட்சி குழுவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
மாவட்ட அளவில் உள்ள அந்தக் குழுவில் அங்கம் வகிக்கிறார்,
தன்னுடைய அங்கம் வகிக்கிறபோது வெட்டாத குளத்திற்கு

பணம் வாங்கினார்கள் என்று அப்போது மாவட்டக் குழுவில் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். சொன்னதாக எனக்கு வந்த அறிக்கையில் இல்லை. சொல்லாமல் இருந்தாலும் பாதகம் இல்லை. வெட்டாத குளத்திற்கு பணம் கொடுத்ததில் மாண்பு மிகு உறுப்பினருக்கு எவ்வளவு சங்கடங்கள் இருக்கிறதோ அதை விட அதிகமான சங்கடங்கள் இந்த அரசுக்கு இருக்கிறது. அப்படி வெட்டாத குளத்திற்கு ஏன் கொடுக்கக் கூடாது என்று சொன்னால் ஒரு தரம் கொடுத்து விட்டால் பிறகு அப்படியே அவர்கள் முயற்சி செய்வார்கள். தவறு செய்கிறவர்களை உடனே தடுத்து நிறுத்தாவிட்டால் மீண்டும் தவறு செய்ய வழி வகைகள் இருக்கும். நான் இந்த அவையில் சொல்லியிருக் கிறேன் குழுக்களை போடுகிறபோது வறட்சி நிவாரணப் பணி களில் எங்கேயாவது தவறுகள் நடந்தால் அரசு அதற்கு பொறுப்பு ஏற்கவேண்டும், அதிகாரிகள் அதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும், தவறாக நினைக்காவிட்டால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் போடப்பட்டுள்ளவர்கள் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று இரு முறை நான் பேசியிருக்கிறேன். நம் முடைய சட்டமன்ற குறிப்பேட்டில் அது பதிவு ஆகியிருக்கிறது. அப்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் எங்கேயாவது வெட்டாத குளத்திற்கு பணம் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கு இந்த அரசு எந்த அளவுக்கு பொறுப்பு ஏற்கிறதோ அந்த வகையில் நமது சட்டமன்ற உறுப்பினரும் பொறுப்பு ஏற்கவேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல் வதிலே எனக்கு உடன்பாடு தான். மாவட்ட அளவில் உள்ள குழு வில் சொன்னாரா என்று கேட்கிறார். நம்முடைய போலீஸில் ஒரு முறை இருக்கிறது. என்ன முறை என்றால் ஒரு பெரிய கொலைக்காரனை யாராவது 2, பி.சியோ, ஏட் கான்ஸ்டபிளோ பிடித்தால் மறுநாள் பத்திரிகையில் எப்படி செய்தி வரும்? டி.எஸ்.பி. மேற்பார்வையில், இன்ஸ்பெக்டர் முன்னிலையில் ஒரு திருடன் ஓடிக்கொண்டு இருக்கும்போது பிடித்தார்கள் என்று வரும். நான் எவ்வளவு தான் சொன்னாலும் எங்கள் பெயரைப் போடுவார்களா உங்களுடைய டிபார்ட்மெண்டில். சுந்தர ராஜ் சட்ட மன்ற உறுப்பினர் சொன்னார் அதன் காரணமாக நாங்கள் நடவடிக்கை எடுத்தோம் என்று சொல்வார்களா? சொல்ல மாட்டார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத்தலைவர் அவர்களே, அப்படி செய்ய வேண்டும் என்று எப்போதும் இந்த கவர்ன்மெண்டு கருதவில்லை. [illegible] அதாவது தவறு நடக்கிறபோது நீங்கள் சொன்னால் உதவியாக இருக்கும். அது மட்டும் அல்ல, உங்களுடைய மாவட்ட அளவில் உள்ள குழுவில் பேசியதை அப்படியே எழுதி [illegible] வந்திருக்கிறது. [illegible] என்ன பேசினார்களோ அப்படியே வந்திருக்கிறது.



சிலர் பாராட்டி பேசி இருக்கிறார்கள், சிலர் இருக்கிற குறை களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எந்த இடத்தில் வெட்டாத குளத்திற்கு பணம் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லியிருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவர் அப்போது கேட்டு இருப்பார்கள் எந்த குளம்? யாருக்கு கொடுக்கப் பட்டது? என்ற கேள்வியைக் கேட்டிருப்பார்கள். நான் நல்ல எண்ணத்தில் சொல்கிறேன். யாராவது இப்படி தவறு செய்து அவர்கள் தப்பித்து விட்டால் அந்த தவறு செய்தவர்கள் மீண்டும் தவறு செய்வார்கள். அதைப் பார்த்துக்கொண்டு இருப்பவர்கள் அவர் மட்டும் வெட்டாமல் பணம் வாங்கிக் கொண்டார், நாம் மட்டும் ஏன் வெட்டி பணம் வாங்கவேண்டும், நாமும் வெட்டாமல் பணம் வாங்கலாம் என்ற முயற்சியில் ஈடுபடுவார்கள். அது இல்லாமல் தடுக்கத்தான் இப்படிக் குழுக்கள் போடப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : குழுக்கள் போடப்பட்ட நோக் கத்தை அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் நடை முறை என்ன? காண்ட்ராக்ட்டிற்கு விட்டு விடுவார்கள். வேலை நடந்து விடும்; வேலை முடிந்த பிறகு குழுவைக் கூட்டுவார்கள். அங்கே பேசியதற்குப் பிறகு எதைச் சாதிக்க முடியும்? இதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவை மாற்றுத் தலைவரவர்களே, நான் இதைச் சொல்வதற்குக் காரணம், சுந்தரராஜ் அவர்கள் கூறுவதை நான் மறுத்துப் பேச வேண்டு மென்று அல்ல. நாம்—என்னையும் சேர்த்துச் சொல்கிறேன். இந்தச் சட்டப் பேரவையிலுள்ள உறுப்பினர்கள் ஒரு விளக்கத் தைப் பெற வேண்டுமென்பதற்காகத்தான் சொல்கிறேன். நான் இங்கே பேசும்பொழுது என்ன தெரிவித்தேன் என்றால், நீங்களும் பொறுப்பு ஏற்க வேண்டுமென்று தெரிவித்தேன். அதற்கு மட்டுமல்ல, அந்தக் குழு உறுப்பினர்களுக்கு, யார் ஒப்பந்தக்காரர், எந்த வேலை, எவ்வளவு மதிப்பீடு என் பதைக் கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் நீங்கள் கேட்டு வாங்க வேண்டும். கொடுக்காவிட்டால் அரசுக்குத் தெரி விக்க வேண்டுமென்று விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு விவரமாகச் சொன்ன பிறகு கூட அந்தத் தவறு நடந் திருக்கிறது என்றால், அந்தத் தவறு இல்லை என்று மறுக்க வில்லை, இவ்வளவு விவரமாக நான் சொன்னதற்குப் பிறகும் தவறு நடக்கிறது என்றால், அதை என்னால் தடுக்க முடியவில்லை என்றால், என்னால் முடியவில்லை என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, நீங்கள் ஒத்துழைப்பு தர வில்லை என்று சொல்லக் கூடாது.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, அமைச்சரவர் களின் கருத்திலோ, நல்லெண்ணத்திலோ, அல்லது அவர் களுடைய பெருந்தன்மையிலோ எனக்குக் கருத்து வேறுபாடு

இல்லை. ஆனால், நடைமுறையில் இருக்கின்ற கோளாறுகள், சிக்கல்கள், நடைமுறையில் இருக்கின்ற எண்ணங்கள் ஆகியவற்றில்தான் மாறுபாடு இருக்கின்றது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

சட்டமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பி, அவர்கள் மூலம் காரியங்களை நிறைவேற்ற வேண்டுமென்றால், முன்கூட்டியே தெரிவித்து எங்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுச் செய்திருக்க முடியும். அப்படியில்லாமல் எதை வேண்டுமானாலும் செய்யலாம். பிறகு சட்டமன்ற உறுப்பினரிடத்தில் சொல்லிக் கொள்ளலாம் என்ற உணர்வு இருப்பதால்தான் இப்படி நடக்கிறது.

எத்தனைபேர் இதைப்போல பில் வாங்கினார்கள், அல்லது பில் வாங்க முயற்சித்தார்கள் என்று அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால், புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கேட்டால், என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ளலாம். எங்களுக்குச் சொல்லா விட்டாலும் நீங்களாவது தெரிந்து கொள்ளலாம். ஆகவே, இதுதான் இருக்கின்ற சூழ்நிலை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பட்டுவாடாவில் எவ்வளவு சிக்கல்? அரசின் நிதி ஆதாரங்களைப் பற்றி மக்கள் சந்தேகிப்பது மட்டுமல்ல, விமர்சனம் செய்கின்ற அளவிற்கு சாதாரண மக்கள்கூட வந்திருக்கிறார்கள் என்றால் என்ன நிலைமை? 1981–82 ஆம் ஆண்டில் வறட்சி வேலை நடந்தது. எல்லாவிதமான சடங்குகளும், ரெக்காரிடிலிருந்து அனைத்தும் முடிந்து, வேலையும் முடிந்தது. ஆனால் ஐந்து இலட்சம் ரூபாய் இன்றுவரையில் பட்டுவாடா ஆகவில்லை. அரசாங்கம் கொடுக்க வேண்டிய பாக்கியைப் பற்றி சென்ற கூட்டத் தொடரிலேயும் சொன்னேன். எல்லா இடங்களையும் சொன்னேன். ஆனால், இதுவரையில் கொடுக்கப்படவில்லை. வறட்சி நிவாரண வேலைகளிலே ஒரு சிலர் வேண்டுமானால் பெரும் பணம் சம்பாதித்திருக்க முடியும். ஆனால், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல, இன்றைக்கு வெள்ள நிவாரண வேலையிலும் இன்றுவரையிலும் ஒன்றரை லட்சம் ரூபாய் பாக்கியிருப்பதாக புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் பாக்கியிருப்பதாக— சொல்லப்படுகிறது. எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் தன்னுடைய மாவட்டத்தில் பல இலட்சக் கணக்கான ரூபாயை அரசாங்கம் கொடுக்கவில்லை என்று தெரிவித்தார்கள். ஆகவே, இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது? திட்டம் போடும் நேரத்தில் அல்லது எஸ்டிமேட் போடும் நேரத்தில் ரெஸ்ட்ரிக்ட் செய்து, இத்தனை இலட்சம் ரூபாய்க்குத்தான் இந்த வேலை என்று சொல்லி



பணம் ஒதுக்கப்படுவதில் ஏற்பட்ட தவறா அல்லது வேறு யார் இதற்குக் காரணம்? தனி மனிதன் இவ்வாறு கொடுக்கவில்லை என்றால் அரசாங்கம் ஜப்தி செயயும். ஆனால், இப்படி அரசாங்கமே கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வது, எனவே, அரசாங்கம் இதுபற்றித் தீவிரமாகக் கவனம் செலுத்தி, அவன் வேலை செய்திருக்கிறானா என்பதுபற்றி சான்றிதழ் பெற்று அவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்குக் குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுப்பதற்கு முயற்சி செய்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். அப்படிக் கட்டுகின்றபொழுது, ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் தங்கள் குடும்பத்தோடு வசிக்கத் தக்க அளவில் கட்ட வேண்டுமே தவிர கடை வீதியிலே புறம்போக்கு நிலம் இருக்கிறது என்றால், அங்கே நீங்கள் கட்டிக்கொடுத்தால் அவர்கள் எப்படிக் குடியிருக்க முடியும்? உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், பொன்னமராவதி பகுதியில் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குக் குவார்ட்டர்ஸ் கட்டி ஒன்றரை ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்றுவரையில் அங்கு சென்று அவர்கள் குடியிருக்க மறுக்கிறார்கள்? கேட்டால், என் மனைவியோடு கடை வீதியிலே எப்படி இருப்பது என்று கேட்கிறார்கள்.

அடுத்து, கிராமச் சாவடியைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால், வட்டச்சாவடி என்று சொல்கிறோமே, அது 1977 ஆம் ஆண்டு அடித்த புயலின்போது பாதிக்கப்பட்டது.

(பிற்பகல் 1-10)

பிறகு சமீபத்திய மழையால் பாதிக்கப்பட்டது. அதை எல்லாம் ஒட்டு மொத்தமாகச் சீர்திருத்தம் செய்து புதுக் கட்டிடம் கட்டுவதற்குரிய வகையில் அரசு நிதி ஒதுக்கிக் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை. ஃபாரஸ்ட் இலாக்காவிற்கும், ரெவின்யூ இலாக்காவிற்கும் கடுமையான மோதல் இருக்கின்றது. இப்படி நிலங்களைப் பொறுத்த வரையில், ஃபாரஸ்ட் இலாக்காவிற்கும், ரெவின்யூ இலாக்காவிற்கும் நடக்கின்ற சண்டை சொல்லி முடியாது. நான் உங்களைச் சொல்லவில்லை. மன்னிக்க வேண்டும். இலாக்காவிலே ஏற்பட்டிருக்கின்ற மோதல்களைச் சொல்கிறேன். ஃபாரஸ்ட் இலாக்கா நிலத்தை ரெவின்யூ இலாக்காவிற்குக் கொடுக்க மறுக்கின்றது. என்னுடைய தொகுதியிலே கூட அந்த மாதிரி நிலைமை இருக்கின்றது. ஆகவே காவல் துறையினர் ஃபாரஸ்ட் இலாக்கா அதிகாரிகளைக் கைது செய்வதா, அல்லது ரெவின்யூ இலாக்காவிலே இருக்கக் கூடிய அதிகாரிகளைக் கைது செய்வதா என்று தடுமாறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது.

கேரள மாநிலத்திலே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். கேரளாவிலே 50 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட ஃபாரஸ்ட் நிலங்களில் சாதாரண விவசாயிகள் ஒரு ஏக்கர், ½ ஏக்கர் என்று நிலத்தை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, காட்டு இலாக்காவிற்கும், வருவாய்த்துறைக்கும் சொல்ல முடியாத சண்டை நடக்கிறது என்று சொன்னார்கள். அது முற்றிலும் மாறானது. அது வேறு அரசு, இது வேறு அரசு அல்ல. இரண்டும் ஒரே அரசு தான். இலாக்கா வேறு, வேறாக இருந்தாலும் அரசு ஒன்றுதான், அமைச்சரவை ஒன்றுதான், முதலமைச்சர் ஒருவர் தான். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை இருப்பதற்கு நியாயம் இல்லை. ஆனால் கீழே இருக்கின்றவர்களுக்குள்ளே ஒரு சில இடங்களிலே மாறுபட்ட கருத்துக்கள் வருவது என்பது இயற்கை. அப்படிப்பட்ட நிலைமை எல்லா இடங்களிலும் இருக்காது. ஒரே கட்சி எம். எல். ஏ.க்களுக்குள்ளாக மாறுபட்ட கருத்து வருவதில்லையா? அந்த மாதிரி ஒரு சில இடங்களில் இருந்திருக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, நான் சொல்வது அரசாங்கத்தினுடைய அதிகாரிகள், அதாவது அரசாங்கத்தினுடைய சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கின்ற இலாக்கா அதிகாரிகள் பற்றித்தான். ஆனால் இங்கே இருக்கக் கூடிய எம். எல். ஏ.க்களின் விவகாரங்களை எல்லாம் பேசி அதற்கு நியாயம் கற்பிக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிகாரிகளின் மனோபாவத்தைச் சொன்னேன். இதை நான் மட்டும் சொல்லவில்லை. உங்களுடைய ஆளும் கட்சி உறுப்பினர்களை வேண்டும் என்றாலும் கேட்டுப் பாருங்கள். ஃபாரஸ்ட் இலாக்காவிலே இருப்பவர்கள் அணுகுகின்ற முறை அப்படி இருக்கின்றது. அந்த அணுகுமுறை வித்தியாசத்தைத் தான் சொன்னேன். காட்டிலே தான் அவர்கள் அதிகமாக வாழ்கிறார்கள். மக்களை அவர்கள் சந்திக்கத் தயாராக இல்லை. ஏதோ காட்டிலே உள்ள நிலங்கள் எல்லாம், எங்களுக்குக் கிடைத்த நிலங்கள், அவற்றை நாங்கள் தரமாட்டோம் என்று சொல்வது போன்ற நிலைமை இருக்கின்றது.

கேரளாவிலே 50 ஆயிரம் ஏக்கருக்கு மேல் உள்ள நிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு, அதாவது ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்று வைத்து விவசாயம் செய்யும் விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்று நீண்ட நாள் கோரிக்கை இருந்தது. அதற்கு மத்திய அரசால் அனுமதி அளிக்கப்பட்டு, அவர்களாலே பட்டா கொடுக்கப்பட்டு, ஃபாரஸ்ட் நிலங்கள் பல ரெவின்யூ புறம்போக்காக மாற்றப்பட்டு பட்டா





வழங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் தமிழ் நாட்டிலே ஏராளமானவர்கள் மலை மேலே வாழக் கூடியவர்கள் இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம் போன்ற இடங்களில் இப்படி பல பேர் இருக்கிறார்கள். அந்த மக்கள் எல்லாம் ஃபாரஸ்டிலே இருக்கக் கூடிய நிலங்களில் உழுது கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்று வெளியேற்றப் படுகின்ற நிலைமை இருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்குப் பட்டா கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசின் மூலமாகத்தான் அதைக் கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும் கூட அந்த அனுமதியைப் பெற்று கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பக்கத்து மாநில மக்களுக்கு ஏற்பட்ட நன்மை இங்கு உள்ள மக்களுக்கும் ஏற்பட வேண்டும். அப்படி இந்த மாநில மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற வகையிலே நீங்கள் முயற்சி செய்தால் நிச்சயமாக உங்களோடு சேர்ந்து நாங்களும் உதவத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாவட்டங்களைப் பிரித்திருக்கிறீர்கள். மற்ற மாநிலங்களிலே மாவட்டங்கள் சிறியதாக இருப்பதன் காரணத் தால் அவற்றுக்கு மத்திய அரசு பல்வேறு வகையிலே உதவிகளைச் செய்து, அந்த வகையிலே அந்த மாவட்டங்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைத்து அவற்றின் மூலமாக அவர்கள் தொழில் வளத்தைப் பெருக்கி மாவட்ட மக்கள், மற்றும் தொகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற நிலைமைகள் இருப்பதன் காரணத்தால், நம்முடைய மாநிலம் அதிலே பின்தங்கி விடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி நீங்கள் மாவட்டங்களை நல்ல முறையில் பிரித்திருக்கிறீர்கள் என்பதற்காகப் பாராட்டுகிறேன். அதிலே என்னுடைய பெயர் வைக்கவில்லை, அவர் பெயர் வைக்கவில்லை என்று பல்வேறு சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். தேசியத்தைப் பெரிதாக நினைத்து தேசியத்திற்காகவும், நாட்டின் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்ட தலைவர்களின் பெயர்களை வைத்திருப்பதற்காக நான் மனதாரப் பராட்டுகிறேன். காரணம் இந்த உள்ளம்தான். இந்த நாட்டினுடைய சூழ்நிலையை, இந்த நாடு பல்வேறு வகையாக, சுக்கு நூறாக போகச் செய்ய வேண்டுமென்று அன்னிய சக்திகள் எல்லாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், இந்தத் தேசத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களை நினைவு கூர்ந்து அவர்களுடைய பெயரால் மாவட்டங்கள் வைத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதைப் போலவே, புதிய மாவட்டங்கள் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அம்பேத்கார் பெயரிலும், காயிதேமில்லத் பெயரிலும், இன்னும் ஒருவர் பெயரிலும் அமைக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். பாராட்டு

கிறேன். ஆனால், அதே நேரத்திலே ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு வெறும் மாவட்டங்களைப் பிரிப் பதன் மூலமாக பிரச்னை தீர்ந்து விடுமா என்றால் இல்லை. புதிதாக ஆர். டி. ஒ. அலுவலகங்கள் ஆரம்பிக்க வேண்டும். ஆர். டி. ஒ. டிவிஷன் ஆரம்பிக்க வேண்டும், தாலுக்காக்கள் ஆரம்பிக்க வேண்டும், பிர்காக்கள் ஆரம்பிக்க வேண்டும். ஆனால், எப்படி நீங்கள் ஆரம்பித்தாலும் தயவு செய்து, மையப் பகுதி யாக, மையமாக வைத்துக் கொண்டு, இந்த மாவட்டங்களைப் பிரிப்பதுதான் சரியாக இருக்கும். ஒன்றை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். திருச்சியை எடுத்துக் கொண்டால், திருச்சியிலிருந்து 2 மைல், 3 மைல் தூரத்திலே புதுக்கோட்டை வந்து விடும். நம்முடைய குளத்தூர் தொகுதியினுடைய எல்லை, 2½ மைல் தூரத்திலே வந்துவிடும். திருச்சி நகருக்குப் பக்கத்திலேயே வந்துவிடும். ஆனால், திருச்சியினுடைய எல்லை, கரூரைத் தாண்டி கிட்டத்தட்ட 50 மைல், 60 மைல் தாண்டிப் போகும். ஒரு பக்கத்திலே 60, 70 மைல் தாண்டிப் போய், மறு பக்கத்திலே 2, 3 மைலில் ஒரு மாவட்டத் தலைநகரம் முடியு மானால், அந்த மாவட்ட மக்களுக்குச் சிரமம் ஏற்படும். ஆகவே, மையப் பகுதியாகப் பார்த்து ஒரு மாவட்டத்துத் தலை நகரை உருவாக்கினால் அந்த மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

அதைப் போன்று மிக மிக முக்கியமான கோரிக்கை எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா, மாவட்டங் களை இரண்டாகப் பிரிக்கும் போது செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அது ஒரு பெரிய மாவட்டமாக இருக்கிறது என்று சொன்னார். உண்மை தான். அது போல் புதுக்கோட்டை மாவட்டம் சிறிய மாவட்ட மாக இருக்கிறது. 5 சட்டமன்ற உறுப்பினர்கள்தான் அம் மாவட்டத்தில் இருக்கிறோம். அவ்வளவு சிறிய மாவட்டம். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சகோதரர் கருப்பையா அவர்கள் மணப்பாறையிலிருந்து சில பகுதிகளை, புதுக்கோட்டையிலே சேர்க்க வேண்டுமென்று அல்லது திருமயத்திலே சேர்க்க வேண்டுமென்று சென்ற முறை சொன்னார். அதை நினைவு கூர்ந்து, மணப்பாறை பகுதி, மற்றும் யார், யார் சேர விரும்புகிறார்களோ, அவர்களைச் சேர்த்துக் கொள்ளுங்கள். புதுக்கோட்டையைப் பெரிய பரப்புள்ள மாவட்டமாக ஆக்குங்கள். பெரிய மாவட்டம் என்றால், பிரிக்கக் கூடிய அளவுள்ள மாவட்டம் அல்ல. நிர்வாக வசதி உள்ள மாவட்டமாக மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல நீண்ட நாள் கோரிக்கை—திருமயம் தாலூ காவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று பல தடவை சொல்லி விட்டேன். அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பதாகவும் நிறை வேற்றுவதாகவும் சொன்னார்கள். இதுவரையில் நிறைவேற வில்லை. ஆகவே, திருமயம் தாலூகாவை இரண்டாகப் பிரித்து பொன்அமராவதியைத் தலைநகரமாக ஆக்கித்தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்னொன்று. டி. டி. சி. பிரச்னை. இந்த டி. டி. சி. என்பது ஒரு ரெக்கமண்டேட்டரி பாடி. இன்றைக்கு நான் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், புதுக்கோட்டையிலே டி. டி. சி. கூட்டம் நடந்து கிட்டத்தட்ட 2½ ஆண்டு காலம் ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். அதற்கு வேறு யாரும் பொறுப்பு அல்ல. நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் தான் பொறுப்பு. அது நானாக இருந்தாலும், நண்பர் திருமாறனாக இருந்தாலும் சரி, நாங்கள் தான் பொறுப்பு. காரணம், அங்கே கோரம் கிடைக்காது. அந்த மாவட்டத்தில் இருக்கக் கூடிய 5 சட்டமன்ற உறுப்பினர்களில், ஒரு அமைச்சர், மாண்புமிகு திருநாவுக்கரசு. இருக்கக் கூடிய 4 பேரிலே கோரம் வேண்டும் என்றால் 3 பேர் வரவேண்டும். 3 பேரிலே 2 பேர் வரவில்லை என்றால், முடிந்து விடும்—கூட்டம் நடக்காது. ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகும். காரணம் அதிகாரிகள், பயணத்திற்குச். செலவு செய்து வருவார்கள். டி. ஏ. கொடுக்க வேண்டும். பெட்ரோல் செலவு செய்து அவர்கள் வந்து, கூட்டம் நடைபெற வில்லை என்றால், அவர்கள் திரும்பிப் போகிற நேரத்தில் அரசாங்கத்திற்கு எவ்வளவு வீணான செலவு. ஆகவே, தயவு செய்து நான் கேட்டுக்கொள்கிறேன். டி. டி. சி. தீர்மானம் நிறைவேற்றி, அமல்படுத்த வேண்டுமென்ற நிலை அரசாங்கத் திடம் இல்லை. அது வெறும் ஒரு ரெக்கமண்டேட்டரி பாடிதான். அதனுடைய அமைப்பு அப்படி. ஆகவே, அதற்குக் கோரம் தேவையில்லை. எத்தனை பேர்கள் இருந்தாலும் நடத்த வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு). பொதுவாகத்தான் கேட் கிறேன்.

கடைசியாக முக்கியமான பிரச்னை. கர்ணம், மணியம் இல்லாததன் காரணமாக, தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. அதிலே இருக்கிற புதிய சிக்கல், என்னவென்றால், டூசி மரங்களை வெட்டியிருக்கிறார்கள். ஜமாபந்திக்குப் போகிற ஆபீசர்கள் டூசி ஒன்றுக்குத்தான் கை யெழுத்திட வேண்டும். மற்றவற்றிற்கெல்லாம் பாக்சிமெலியைப் போட்டு விட்டு, ஜமாபந்தியைப் பார்த்தாயிற்று என்று போவார் கள். ஆனால், டூசி சரியாக இருக்கிறதா என்று பார்த்துவிட்டு கையெழுத்துப் போட வேண்டும். எந்த ஊரிலே டூசி மரங்கள் சரியாக இருக்கின்றன ? கிட்டத்தட்ட பாதி மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு விட்டன. யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்? புதிய வி. ஏ. ஓ.க்கள் வருவார்கள். அவர்கள் வாங்குகின்ற போது, டூசி மரங்கள் அனைத்தும் சரியாக இருக்கின்றன என்று தான் வாங்குவார்கள். ஆகவே, சிக்கல் எங்கே ஆரம்பமாகப் போகிறது பாருங்கள். இல்லாத மரத்திற்கு மேல் அதிகாரியும் கையெழுத்துப் போட்டு விட்டார். (குறுக்கீடு).. புதிய மரம் வளர்த்து, டூசி எப்பொழுது வாங்குவது ? இருக்கிற டூசி போயிற்றே. ஆகவே இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்,

[திரு. நா. சுந்தரராஜ்] [1984 மார்ச் 26

(பிற்பகல் 1-20)

காரணம் இந்த நாட்டினுடைய மிகப்பெரிய சொத்து
காடுகளில் இருக்கிற மரங்கள் தான். இதைப் பாதுகாக்கிற
பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு. ஆகவே இதிலே
மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்
கொள்வது, உங்களுடைய திறமையிலே நான் சற்றும்
குறைவு காணவில்லை. இந்த ரெவின்யூ இலாக்காவை யார்
வைத்திருந்தாலும் அவர்கள் அதிகப்படியான பாராட்டை எதிர்ப்
பார்க்க முடியாது. 24 மணிநேரம் உழைத்தாலும் அவர்கள் அதிக
மாக பாராட்டை எதிர்ப்பார்க்க முடியாது. காரணம், இந்த
இலாக்காவின் தன்மை அப்படி. எனக்கு நன்றாக தெரியும்.
ஏனென்றால் என்னுடைய உறவினர் ஒருவர் அமைச்சராக இருந்த
தாலே இதைச் சொல்கிறேன். அவர் எத்தனை மணிக்கு படுப்பார்
கள், எத்தனை மணிக்கு எழுந்திருப்பார்கள் என்று தெரியாது.
எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே
உங்களுடைய உழைப்பிற்கு நன்றி. தொடர்ந்து உழையுங்கள்.
அதேநேரத்தில் இதுபோன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு
முழுமனதோடு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்
பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்
கையில் பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச்
சொல்லி இருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகிறபோது அவர்கள்
தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறை
யில் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறபோது, இந்த அரசு
திறமையாக காரியங்களைச் செய்தாலும், இன்னமும் திறமையாக
செய்யவேண்டுமென்றும், மக்களுக்குச் சேரவேண்டிய பயன் விரை
வாகப் போய்ச் சேரவேண்டுமென்ற முறையில் தான் தங்கள் உள்ள
உணர்வுகளை சொன்னார்கள் என்று தான் நான் எடுத்துக்கொள்
கிறேன். இந்த அரசும் அதற்காக தீவிரமான நடவடிக்கையை
எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதையும், பல்வேறு உறுப்பினர்
கள் குறிப்பாக கடைசியாகப் பேசிய இந்திய காங்கிரஸ் பேரியக்
கத்தின் சார்பிலே பேசிய நம்முடைய மாண்புமிகு சுந்தரராஜன்
அவர்கள் அதைத் தான் தெளிவாகச் சொன்னார்கள் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது இயற்கை இடர்பாடுகளைப் பற்றிச்
சொல்லுகிறபோது இரண்டு ஆண்டுகளாக நாம் சந்தித்திருக்கிற
வறட்சியைப் பற்றி பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த சட்டப்
பேரவையில் வெள்ளை பேப்பரை வைத்து அதன்மூலமாக உங்க
ளுடைய கருத்துக்களைச் சொல்லி, நானும் இந்த அரசினுடைய
எண்ணங்களைச் சொல்லி அதன்மூலம் தீவிரமாக நடவடிக்கை
எடுத்துக்கொண்டோம். இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வறட்சி
இருந்தாலும் அதன் கொடூரத்தன்மை மக்களிடத்திலே தாக்குகிற
போது அந்தக் கொடூரத்தன்மை குறைந்தது என்பதும், அதற்காக



1984 மார்ச் 26] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை நீங்கள் பாராட்ட
கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அண்மையில் பெய்த மழை காலம் தவறி பெய்த மழை என்று
சொன்னார்கள். காலம் தவறி மழை பெய்யவில்லை; ஆனால்
மழை பெய்வதற்கு பதிலாக குழாயிலிருந்து தண்ணீர் ஊற்று
வதைப் போல விடாமல் ஊற்றிக்கொண்டிருந்தது என்பது தான்
உண்மை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன் நடவடிக்கையாக
முன்னேற்பாடுகளை செய்திருந்தால் இவ்வளவு சங்கடங்கள்
வந்திருக்காது என்று இங்கே தெரிவித்து இருக்கிறீர்கள். இங்கே
கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே தமிழ்
புத்தகம் பக்கம் 16-ல் பத்தி 37-ல் மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்
என்பதை தெளிவாகச் சொல்லி இருக்கிறேன். அண்மை காலத்தில்
பெய்த மழையின் காரணமாக இரண்டு முறை இந்த மாமன்
றத்தில் அதைப்பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய
கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நாம் கருத்துக்களை
பரிமாறிக் கொண்டிருக்கிறோம் என்பதையும், எடுக்கப்பட்ட நட
வடிக்கைகளை இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன்.
மீண்டும் அதைப்பற்றி சொல்லத் தேவையில்லை என்றே கருது
கிறேன். அவ்வளவு விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட
தால்தான் உயிர்ச் சேதம் மிகக்குறைவாக ஏற்பட்டது என்பதும்,
வெள்ளச் சேதத்திற்கு பிறகு வருகிற நோய்கள் வராமலே
தடுக்கப்பட்டது என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

வெள்ளம் வருகிறது என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்
அதற்கு முன்னாலேயே அறிவிப்பு தரலாம். வெள்ளம் வரவில்லை.
மேலே இருந்து மழை பொழிகிறது, வெள்ளம் வருகிறது. ஆகவே,
முன் அறிவிப்பு வானம் தான் கொடுக்கவேண்டும். எனவே, ஒரு
இடத்தில் மழை பெய்து விட்டது என்று சொன்னால், அதன் கார
ணமாக ஆற்றில் வெள்ளம் வருகிறது, காட்டாற்றில் வெள்ளம்
வருகிறது, காவிரியில் வெள்ளம் வருகிறது. அது எங்கிருந்து
எப்போது வருகிறது என்று நம்மால் சொல்லமுடியாது. காவிரி
யில் தண்ணீர் திறந்து விடுகிறார்கள் என்று சொன்னால் முன்
னறிவிப்புக் கொடுத்து விடலாம். அல்லது திருச்சியில் மழை
பெய்கிறது என்று சொன்னால் அந்தத் தண்ணீர் வேதாரண்யம்
வர இரண்டு நாட்கள் ஆகும் என்றால் முன்னறிவிப்புக் கொடுக்க
லாம். ஆனால் மழை அப்படி ஒரு இடத்தில் பெய்யவில்லை.
தஞ்சை மாவட்டம் முழுவதும், திருச்சி மாவட்டம் முழுவதும்,
பெய்தது. ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் பெய்யவில்லை.
48 மணி நேரம் 58 மணி நேரம் விடாமல் தொடர்ந்து பெய்து
இருக்கிறது. ஒரு வருஷத்தில் எந்த அளவிற்கு மழை பெய்யுமோ
அந்த அளவிற்கு மழை ஒரே நாளில் பெய்து இருக்கிறது. இப்படி
மழை பெய்ததால் எந்த விதமான முன்னறிவிப்பும் கொடுக்க
முடியவில்லை என்று சொல்லாவிட்டாலும், அவர்களையெல்லாம்

காப்பாற்ற முடியவில்லை என்று சொல்லாவிட்டாலும், முடிந்த அளவிற்கு அந்த அதிகாரிகள் தங்கள் திறமையைப் பயன்படுத்தி, அனுபவத்தைப் பயன்படுத்தி எந்த அளவிற்கு அவர்களுக்கு பாது காப்பையும், உதவியையும் செய்ய முடியுமோ அதைச் செய்து, காப்பாற்றியிருக்கிறார்கள், சேதத்தைத் தவிர்த்து இருக்கிறார் கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாலே மழை பெய்தது. புதுக்கோட்டை, தஞ்சை, தென்னாற்காடு மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் மழை பெய்தது. அதற்குப் பிறகு பிப்ரவரியில் மழை பெய்தது. டிசம்பர் மாதம் பெய்த மழை யிலேயே ஏரி, வாய்க்கால்கள் நிரம்பிவிட்டன. அதற்குப்பிறகு அங்கே மழை பெய்து இருக்கிறது. அளவுக்கு அதிகமாக மழை பெய்ததாகக் கணக்குச் சொல்கிறது. இதன் காரணமாக ஆயிரக் கணக்கான ஏரிகள், வாய்க்கால்கள் இருந்தாலும், அவற்றில் சில உடைபட்டு இருக்கின்றன. போர்க்கால நடவடிக்கை எப்படி எடுக்கப்படுமோ அதற்குச் சரிசமமான நடவடிக்கை அங்கே எடுக் கப்பட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் ஒப்பந்தக்காரர்கள் தேர்வில் சில தவறுகள் நடந்தன என்று சொன்னார்கள். நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒப்பந் தக்காரர்கள் தவறு செய்யக்கூடாது என்பதில் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எந்த அளவிற்கு அக்கறை இருக்கி றதோ, அந்த அளவிற்கு அதிகமாக அக்கறை இந்த அரசுக்கு இருக் கிறது என்று சொல்லாவிட்டாலும், குறைவாக இல்லை என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன். ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் தவறு செய்து விட்டால் அதனால் வருகிற கெட்ட பெயர் உங்களை விட இந்த அரசுக்கு அதிகம். உங்களை விட அரசை நடத்துகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அதிகம் என்பது உங்களுக்கு நன் றாகத் தெரியும். ஆகவே, மக்களுக்காக செலவழிக்கும் பணம் மக்களுக்குப் போய் அடையவேண்டும். அந்த வேலை திறம்பட செய்யவேண்டும், நன்றாகச் செய்யவேண்டும் என்ற அக்கறை உங்களுக்கும் எனக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி எங்காவது தவறு நடந்தால் பாதகம் இல்லை என்று சொல்லவில்லை, நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கெங்கே தவறு நடந்தது என்று நீங்கள் மாவட்ட கமிட்டி கூட்டத்திலே சொல்லாமல் இருந்தாலும், நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் மாண்புமிகு உறுப்பினர் ராஜமாணிக் கத்திற்குத் தெரியும். நான் ஒரு முறை அவர் பேசும் போது சொல்லியிருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு 15 நாள், 20 நாள் அவகாசம் தருகிறேன். எங்கெங்கே நடந்தது என்று



ரகசியமாக எனக்கு எழுதித் தாருங்கள். நானே அதைக் கையெ ழுத்துப் போட்டு வாங்கிக்கொள்கிறேன். நானே அதை விசாரித்து உங்களுக்கு பதில் எழுதுகிறேன். அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை எழுத்து மூலமாகத் தெரிவிக்கிறேன். என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டப்பேரவையிலே இதைப் பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இதற்கு முன் னாலே எந்த அமைச்சராவது, எந்த அமைச்சரவையிலாவது இப்படி த்தானே அதை வாங்கி கையெழுத்துப்போட்டு, அதை விசா ரித்து, தானே எழுத்து மூலமாக பதில் எழுதியது உண்டா என்று பார்த்தால், இதற்கு முன்னாலே எந்த அமைச்சரும் அதைச் செய்யவில்லை என்று சொன்னால் நீங்கள் தவறாகக் கருதக் கூடாது என்பதை நான் இங்கே பணிவாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அதற்குப் பிறகு யாருமே என்னிடம் எழுதிக்கொடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசு அவர்கள், 'நல்ல அறிவிப்பு தான், என்னுடைய தொகுதியில் இப்படி தவறு நடந்திருக்கிறது, எழுத்து மூலம் கொடுக்கிறேன்' என்று சொன்னார்கள். அதைப்போன்று மற்றவர்களிலும் ஒன்றிரண்டு பேர் எழுதிக் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால் யாரும் கொடுக்க வில்லை. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அது பழைய கதை. புதிதாக என்ன ஏற்பாடு என்று கேட்பார்கள். நான் அதையே இப்போதும் சொல்கிறேன்.

இன்றைக்கு வேண்டுமானாலும் சரி, 1981 ஆம் ஆண்டு வறட்சியானாலும் சரி, 1982 ஆம் ஆண்டு வறட்சியானாலும் சரி, 1983, 1984 வெள்ளமானாலும் சரி, எங்கே தவறு நடந் தது அல்லது நடக்கிறது என்று நீங்கள் என்னிடம் எழுதிக் கையெழுத்து போட்டு கொடுக்க'. சங்கோஜமாக இருந்தால் —பயப்படுகிறீர்கள் என்று சொல்ல மாட்டேன்—இங்கே சொல் லுங்கள். இந்த அவையிலேசொல்வதற்கு, அவையிலே பதில் சொல் வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் காட்டுகின்ற குற்றச்சாட்டுக்களை அவையின் மூலமாகப் பெற்றுக்கொண்டு, அவையின் மூலமாக பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன். நம்முடைய விதிகளின்படி அவையிலே சொல்லப்படுவதற்கு அவையிலேதான் பதில் அளிக்க வேண்டும்.

அவையிலே நீங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுக்களைக் கேட்டு, அது சம்பந்தமாக யார், யார் மீது என்னென்ன நட வடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அவையிலேதான் தெரி விக்க வேண்டும். இப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்று

சொல்லி, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நானும்
முயற்சி, செய்து அதிலே முற்றிலும் வெற்றியா, தோல்வியா
என்று புரியாத நிலையில் இந்த வெள்ள நிவாரணப் பணி
களில் நீங்கள் ஒப்பந்தக்காரர்களை நியமினும் , செய்யப்
கூடாது என்று அதிகாரிகளுக்கு உத்தரவு போடப்பட்டி
ருக்கிறது.

அது மட்டுமல்ல, இருக்கிற, எஞ்சினியர்கள் குறைந்த
வேலையாக இருந்தால், ஒப்பந்தங்களைச் கொடுக்கிறபோது
அவர்களே நாமினேஷன் கொடுக்க அதிகாரம் இருக்கிறது.
அந்த அதிகாரத்தை ஒரு உத்தரவு மூலம் ரத்து செய்திருக்
கிறோம். அவர்களுடைய அதிகாரம் நீக்கப்பட்டிருக்கிறது.
யார் வேண்டுமானாலும் ஒப்பந்தக்காரர்கள் டெண்டர் போட
வேண்டுமென்று இப்போது உத்தரவு போட்டிருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைவிட நாங்கள் அதிகமாக என்ன செய்ய முடியும் என்று
நீங்கள் சொல்கிறீர்கள்? இதைவிட திறமையாக எதையாவது
செய்யமுடியும் என்றால், செய்யவேண்டுமென்றால் சொல்லுங்கள்
பரிசீலனை செய்கிறோம். அதற்குக் காரணம் என்னைவிட,
இந்த அரசை விட பலருக்கு திறமை அதிகமாக இருக்கலாம்.
உங்களுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் அந்த திறமை
வெளிப்படாமல் இருக்கலாம். உங்கள் திறமையை வெளிப்படுத்
துவதற்கு இதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, உங்
களுடைய ஆலோசனைகளைச் சொல்லுங்கள் என்பதை இந்த
நாட்டு மக்களின் சார்பிலே, இந்த சமுதாய மக்களின்
சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு அமைச்சரவர்கள்
டெண்டர் மூலமாகத்தான் ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று
உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள்; பாராட்டுகிறேன்.
ஆனால் அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. எப்படி நிலங்
களுக்கு பினாமி இருக்கிறார்களோ அதைப்போன்று டென்
டருக்கும் பினாமி இருக்கிறார்கள். ஒரேஒரு நபர் தன்னுடைய
தம்பி, மகன், மாமன், மச்சான், பக்கத்து வீட்டுக்காரன்,
வீட்டு வேலைக்காரன் பெயர்களில் எல்லாம் டெண்டர் போடு
கிறார்கள். அதை நீங்கள் கவனிக்க வேண்டும். இன்றைக்கு
தமிழ்நாட்டில் சிலர்தான் இந்த டெண்டரில் ஆதிக்கம் செலுத்திக்
கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுக்க நீங்கள் நடவடிக்கை
எடுப்பீர்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தவறு நடப்ப
தாகச் சொன்னால், விசாரித்து நடவடிக்கை எடுக்கலாம்.
(குறுக்கீடு) நேரம் இல்லை; வாக்குவாதம் வேண்டாம்;
நானே பதில் சொல்லிவிடுகிறேன். நாமினேஷன் முறையில்
கொடுத்தால் ஆளும் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்தார்கள்



என்று சொல்கிறீர்கள். டெண்டர் முறையில் கொடுத்தால்
ஒரு குடும்பமே, அண்ணன் தம்பி, அக்காள், தங்கை, பெரியப்பா
மகன், சின்னப்பா மகன் என்று சொல்கிறீர்கள். இப்படி இருந்தால்
நாங்கள் என்ன செய்வது? அதற்காகத்தான் மாற்று யோசனை
என்ன என்று கேட்டேன். உங்களுடைய திறமையைப் பயன்
படுத்தி நல்ல மாற்று யோசனையைச் சொன்னால் அதை
நாங்கள் ஏற்று நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

இன்றைக்கு இருக்கிற முறைதான் மிகச் சிறந்த முறை,
இதைவிட சிறந்த முறை உலகத்திலே இல்லை; இந்த முறை
என்னால்தான், இந்த அரசால்தான் கண்டுபிடிக்கப்பட்டது,
நீங்கள் இதை எல்லாம் பின்பற்ற வேண்டுமென்று நான்
சொல்லவில்லை. இந்த முறையைக் கூட நல்ல முறையில்லை
என்று சொன்னால் நான் பின்பற்றத் தயார். எந்த முறை,
நல்லது என்று சொல்லுங்கள். இப்போதும் சொல்லலாம்.
நான் வறட்சி, வெள்ளத்தைப்பற்றி இந்த அளவோடு தெரி
வித்துக்கொள்கிறேன். அதற்குப் பிறகு கிராம நிர்வாகத்தைப்
பற்றிச் சொன்னார்கள். அப்படி கிராம நிர்வாகத்தைப்
பற்றிச் சொல்கிறபோது, அவரவர்கள் தங்கள் கருத்துக்களைச்
சொன்னார்கள். அதைக் கலைத்தது நல்லது என்று சொன்
னார்கள். கலைத்தது நல்லதாக இருந்தாலும் அதற்கேற்ற
படி பலன் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஒரு நல்ல
காரியத்தைச் செய்ய வேண்டுமென்று முயற்சிக்கிறோம். இந்த
மாமன்றத்தில் பரம்பரை கிராம அதிகாரிகளை கலைத்ததை
மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் உட்பட எல்லோரும்
ஆதரித்து தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள், மகிழ்ச்
சியைத் தெரிவித்தார்கள். ஆனால் நடைமுறைப்படுத்தும்
போது சில சிக்கல்கள் வந்துவிட்டன. உடனே உச்ச நீதி
மன்றத்துக்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திற்குப் போகக்
கூடாது என்று சொல்வதற்கு இந்த ஜனநாயக ஆட்சியில் வழி
இல்லை. நல்ல நோக்கத்தோடு ஒரு காரியத்தைச் செய்யும்
போது, இருக்கின்ற சங்கடத்தினால், உடனடியாக கிராம
நிர்வாகம் நல்ல முறையில் வரமுடியாமல் போனதற்கு
காரணம், உடனடியாக கிராம அதிகாரிகளை நியமிக்காமல்
போனது, கிராம நிர்வாகம் சிறிது பழுதாகியிருக்கக் கூடும்
என்றால், அதற்கு இந்த அரசுதான் காரணமல்ல என்பது
உங்களுக்கு நன்றாகத் தெரியும். உச்ச நீதிமன்றத்திற்குச்
சென்றுவிட்டார்கள். உச்சநீதிமன்றத்திற்குப் போனபிறகு,
அங்கு வழக்காடி, அதைச் சீக்கிரம் கொண்டுவருவது என்பதில்
எவ்வளவு சிரமங்களும் சங்கடங்களும் இருக்கின்றன என்பது
உங்களுக்கு தெரியும். இப்படி அவர்கள் உச்சிக்கே போய்விட்
டார்கள். உச்சிக்குப் போனபிறகு அதிலே வழக்காடி சீக்கிரமாகக்
கொண்டுவருவதில் உள்ள சிரமங்கள் உங்களுக்குத் தெரியும். அவ்
வளவு சிரமங்களையும், சங்கடங்களையும் ஏற்று, உச்ச நீதி
மன்றத்தின் தீர்ப்பை விரைவிலே வாங்கி, அதை நடைமுறைப்
படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 மார்ச் 26

கிறேன். உச்ச நீதிமன்றம் என்ன தெரிவித்ததோ, அதைத்
தான் நாம் செய்திருக்கிறோம். அதை மீறமுடியாது. உச்ச
நீதிமன்றம் தீர்ப்பு சொல்லிவிட்டால், அதற்குப்பிறகு தீர்ப்பு
கூறுவது யார்? அதை மக்கள் தான் சொல்லவேண்டும். உச்ச
நீதிமன்றத் தீர்ப்பின்படிதான் நாம் இங்கே கொண்டுவந்திருக்
கிறோம்.

பரம்பரை கிராம அதிகாரிகளை ஏன் நீக்கினோம் என்று
நான் பலமுறை பேசியிருக்கிறேன். என்னைவிட நீங்கள் எல்லாம்
தீவிரமாகப் பேசியிருக்கிறீர்கள். ஆனால் நன்மை ஏற்படும்
என்று தான் சொல்லியிருக்கிறோம். ஆகவே மீண்டும்
இப்போது தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. அப்படி நியமிக்
கிறபோது, உச்ச நீதிமன்றம் எங்களுக்குக் கொடுத்திருக்கிற அறி
வுரைப்படி, 5,276 பேர்களை நியமித்திருக்கிறோம் என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன். அது என்ன அடிப்படையைப்
பொறுத்தது என்றால், கல்வித் தகுதி அடிப்படையில், தமிழில்
40 மார்க்குகள் வாங்கியிருக்க வேண்டும். ஆங்கிலத்திலும்
40 மார்க்குகள் வாங்கியிருக்கவேண்டும். மற்றவைகளில் 35
மார்க்குகளை வாங்கவேண்டும். அவர்கள் அதில் தேறியிருக்க
வேண்டும் என்று கொடுத்தது. அப்படி இருந்தவர்கள்
எல்லோரும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஓய்வுபெறும்
வயதை அடையாதவர்களாக இருக்க வேண்டும். உடல்நலம்
நன்றாக இருக்க வேண்டும். யாராவது டாக்டரிடம் சென்று உடல்
நலம் சரியாக இல்லை என்று யாரையும் தள்ளியதாக இல்லை.
எல்லோரும் உடல்நலம் நன்றாக உள்ளவர்களாக இருக்கிறார்கள்.
எல்லோரும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.
காலத்தில் அவர்கள் தண்டனை ஆகியவற்றை மனதில் கொண்டு
உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், இதைச்செய்திருக்கிறது
என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி அவர்கள் செய்கிற
குற்றத்தைப் பார்க்கும்போது, அரசு பணத்தைக் கையாடல்,
ஆவணங்களை உத்தரவின்றி திருத்துதல், பொய்ச் சான்றிதழ்
வழங்குதல், அரசு 2-சி மரங்களை வெட்டுதல், அதிகாரத்தில்
துஷ்பிரயோகம் செய்வது இப்படிப்பட்ட குற்றங்கள் மட்டும்தான்,
அதில் எடுத்துச் கொள்ளப்பட்டது. வசூல் மையத்திற்குத்
தாமதமாக வருதல்,—அது எடுக்கப்படவில்லை; வசூல் மையத்
திற்கு வராமல் இருப்பது,—அது எடுக்கப்படவில்லை; வசூலில்
தீவிரம் காட்டவில்லை—அதுவும் எடுத்துக்கொள்ளப்படவில்லை;
சாதாரண உத்தரவுகளை அவர்கள செய்யத் தவறியது—
இப்படிப்பட்ட குற்றங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட
வில்லை, இதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள். இப்படிப்பட்ட
தகுதி உடையவர்களை நாம் எடுத்துக் கொண்டிருக்
கிறோம். ஏனென்றால் எல்லாம் மனிதாபிமானம் உடைவர்
கள், யாரையும் பழிவாங்கக்கூடாது என்பது எண்ணம்.
தகுதி உடையவர்கள் விடுபடக் கூடாது என்று இப்போது
எடுக்கப்பட்டு இருக்கிறவர்கள் 5,226 பேர்களும் ஒரே



1984 மார்ச் 26] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

(பிற்பகல் 1-40)

மாதிரியாக இருக்க வேண்டும் என்ற முறையில் குற்றங்கள் செய்த
வர்கள், ஒரே குற்றம் என்றால், ஒவ்வொருவருக்கு குற்றத்தை
எடுத்துக்கொள்வது, அளை நீக்குவது என்ற முறையில் அது
செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அதற்குப் பிறகு, புதிதாக போடப்பட்டு இருக்கிற மற்றவர்
களுக்கு எல்லாம் இன்றைக்கு அரசு உத்திரவு போட்டு அறிவித்து
இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக
எவ்வளவு பேர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறோம் என்று
உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றால்,—இன்றைக்கு உயர்
நீதிமன்றத்திலே ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது—அதையும்
இந்த அரசு பரிசீலனை செய்திருக்கிறது. முதலிலே 40 மார்க்
தமிழிலும், 40 மார்க் ஆங்கிலத்திலும் ஒரே நேரத்தில் எடுத்து
பாஸ் செய்ய வேண்டும். உயர்நீதிமன்றம் என்ன போட்டிருக்
கிறது என்றால், எல்லா பாடத்திலேயும், 35 மார்க் வாங்கினால்
போதும். ஒரு முறையோ, பல முறையோ, எத்தனை முறையோ
தேர்வு செய்து, வெற்றி பெற்றால் போதும், எடுத்துக் கொள்ள
லாம் என்று சொல்லியிருக்கிறது. அதையும் இந்த அரசு ஏற்றுக்
கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
இவைகளை கருத்தில் கொண்டு அரசு தக்க நடவடிக்கைகளை
எடுத்து வருகிறது.

புதிதாக இன்றைக்கு இந்த அரசு 7,123 பேர்களை, நாம்
அல்ல—தேர்வாணைக்குழு இன்றைக்கு நியமித்திருக்கிறது என்
பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு இன்றை
க்கு பயிற்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த சர்வே பயிற்சி,
நில அளவைப் பயிற்சி அவர்களுக்கு இன்றைக்கு 12-3-84, இந்த
மாதம் முதல் 10-4-84 வரைக்கும் ஒரு மாத காலம் அவர்களுக்கு
பயிற்சி தரப்படுகிறது. அதற்குப் பிறகு 11-4-84 முதல்,
25-5-84 வரை, 6 வார காலம் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்
படும். அதற்குப் பிறகு எல்லா இடங்களுக்கும் அவர்களைப்
போட்டு உங்களுடைய குறைகள் எல்லாம் நிவர்த்தி செய்யப்படும்
என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல், இன்றைக்கு அவர்கள் இல்லாவிட்டாலும்,
எல்லாக் கிராமங்களிலும் கிராம ஊழியர்கள் இருக்கிறார்கள்.
அந்தக் கிராம ஊழியர்களும், இன்றைக்கு நல்ல முறையில் அவர்
களுக்கு பல குறைகள் இருந்தாலும், அந்தக் குறைகளை போக்கிக்
கொண்டு வருகிறது—அவர்களுக்கு போதிய பணம் இல்லை என்று
சொல்கிறார்கள்,. பகுதி நேர ஊழியர்களாகவும் இருக்கிறார்கள்.
அவர்களுடைய குறைகளையும் இந்த அரசு கவனத்தில் கொண்டு,
பல்வேறு உதவிகளைச் செய்யும் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். கிராம ஊழியர்களைப் பற்றி நான் சில கருத்துக்
களைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு). நான் ஏதாவது

ஒரு பொருள் பற்றிச் சொன்னால், அதைப் பேசி முடித்ததற்குப்
பிறகு நீங்கள் சொன்னால் நல்லது. கிராம ஊழியர்களுக்கு
இன்றைக்கு சைக்கிள் வாங்குவதற்கு 600 ரூபாய் பணம்
கொடுக்கப்படுகிறது. இதெல்லாம் முதலிலே கொடுக்கப்பட
வில்லை. பண்டிகை முன் பணம் 200 ரூபாய் கொடுக்கப்
படுகிறது. கதர் ஆடை வாங்குவதற்கு கடன் வசதிகள் செய்து
கொடுக்கப்படுகிறது. இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் எத்தனை
கிராம ஊழியர்கள் இருக்கிறார்கள் என்றால், 29,265 பேர்கள்
இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.
இன்னமும் கிராமக் காவலர்களில் பெரும்பாலானவர்கள்
ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் தான் என்பதையும், பின்
னாலே தள்ளப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள்—அவர்
களுடைய கோரிக்கைகளை கவனித்து இந்த அரசு எல்லாவித
மான நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த கிராம அதிகாரிகள் விஷயத்தில், எஸ்.எஸ்.
எல்.சி. பெயில் ஆனவர்களையும் எடுத்துக் கொள்ளவேண்டும்
என்று ஒரு கோரிக்கையோடு உயர்நீதிமன்றத்திற்குப் போனார்
கள். அது என்ன ஆயிற்று? இரண்டாவது எஸ்.எஸ்.எல்.சி.
பெயில் ஆனவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்ய வேண்டும்
என்ற பழைய சலுகை கூட அரசாங்கம் அறிவித்து, அதற்காகக்
கூட அவர்கள் எழுதியிருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் பாஸ்
செய்தால் அதற்கான இடம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதா
என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, பாஸ் ஆனவர்கள் மட்டும்தான்
இதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்களே ஒழிய,—பாஸ் ஆனவர்
களைப் பற்றி, நான் இரண்டாவது தரம் சொல்லியிருக்கிறேன்—
40, 40 மார்க் வாங்கியிருக்க வேண்டும். இல்லாவிட்டால், இப்
போது உயர்நீதிமன்றம் கொடுத்த ஆணைப்படி, இதை அரசு
பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று
நான் சொல்லிக் கொள்கிறேன். இங்கே பேசுகிற போது, பல்
வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். கிராமச் சாவடிகளைப்
பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் தங்கராசு
அவர்கள் இன்று அரசு என்ன செய்திருக்கிறது என்பதைப் பற்றி
நன்றாக தெரிந்தே சொன்னார்கள். கிராமச் சாவடிகள் தேவை
யாக இருக்கிற போது, இன்றைக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்
மூலமாக அதிலே ஆங்காங்கு பழையதாக இருக்கிறதே, அவை
களைச் செய்து தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்
கொண்டு இருக்கிறது. இன்றைக்கு நாடு பூராவும், 1,496
கிராமச் சாவடிகள் இருக்கின்றன. பல பழுது பட்டிருக்கின்றது.
பல பாதிக்கப்பட்டிருக்கிறது. பல மிகவும் மோசமாக





இருக்கிறது. ஆகவே, மீண்டும் எல்லா கிராமச் சாவடிகளையும்
கொண்டு வருவதற்கு இந்த அரசு எல்லாவிதமான நடவடிக்கை
களையும் எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல அடுத்து கால்நடை பட்டி பற்றிய விவரம். கால்
நடை பட்டி பற்றி பெரும்பாலும் இங்கே பேசுகிறபோது, எங்
கெங்கே விவசாயம் நடக்கிறதோ, அங்கங்கே இந்தப் பட்டி நிச்சய
மாக தேவை என்று சொன்னார்கள். இதைப் பொறுத்த வரையில்
இன்றைக்கு 2,731 பட்டிகள் இருக்கின்றன. அந்தப் பட்டிகளும்
சில இடங்களிலே சரியாக இல்லை. சில இடங்களிலே நன்றாக
இருக்கின்றன. சரியாக இல்லை என்றால், ஒரே நாளில் சரியாக
இல்லாமல்போகவில்லை. தொன்று தொட்டு அப்படிப் போனது.

தொன்று தொட்டு, தொன்று தொட்டு அதை யாரும் கவனிக்
காமல் விட்டு விட்டார்கள். அதை இந்த அரசு கவனித்து தக்க
நடவடிக்கைகளை எடுத்து ஒழுங்கு செய்யும் என்பதை தெரி
வித்துக் கொள்கிறேன். இந்தப் பட்டிகளை சரி செய்வதற்காக 15
இலட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன். விரைவிலே அவைகள் எல்லாம் சரி
செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மனைப் பட்டா கொடுப்பதைப் பற்றிச் சொன்னார்
கள். பல்வேறு பட்டா வளர்ச்சித் திட்டங்களானாலும் சரி,
பட்டா கொடுப்பதில் கால தாமதம் ஆகிறது என்று சொன்னார்
கள். அதே போல மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்கள்
சரியாக நடப்பதில்லை என்றும் சொன்னார்கள். அப்படிச்
சொல்கிற போது சிலர் சொன்னார்கள், வளர்ச்சி மன்றக் கூட்டங்
கள் நடக்கிறது; ஆனால் கோரம் இல்லாததால் சரியாக
நடக்கவில்லை என்று சொன்னார்கள். எப்படி இருந்தாலும் சரி,
கூடுமான வரையில் வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் அடிக்கடி
நடப்பதற்கு, உரிய காலத்தில் நடப்பதற்கு என்ன தடங்கல்கள்
இருந்தன? ஏன் சரியாக நடக்கவில்லை என்பதற்கான
அறிக்கையைப் பெற்று, தேவையான உத்தரவுகளை இந்த
அரசு கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தப் பணிகளை மேலும் விரைவு படுத்த, இந்தப் பணிகள்
இன்னும் சற்று சரியாக நடைபெற, 1-4-1984 முதல் இந்த அரசு
மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மற்றவர்களுக்கும்
இரண்டு திட்டங்களை அறிவுறுத்தியிருக்கிறது. ஒன்று, மனுநீதித்
திட்டம், இரண்டு, குறை தீர்க்கும் நாள்.

இவைகள் முதலிலேயே இருந்தன என்றாலும் அதிலே சில
மாற்றங்களைச் செய்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். மனுநீதித் திட்டம் என்றால் இது வரையில்
தாலுக்கா அளவிலே தாசில்தார்கள் தாம் மனுக்களைப் பெற்று

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 மார்ச் 26

வந்தார்கள். அது கூடாது என்று சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி, வருவாய்க் கோட்ட அதிகாரி ஆகியோர் மட்டுமே, அதாவது ஆர்.டி.ஓ. டி.ஆர்.ஓ., கலெக்டர் இவர்கள் மட்டுமே இந்த மனுக்களைப் பெற வேண்டும் என்று இந்த அரசு உத்திரவு போட்டிருக்கிறது. முதல் கட்டமாக இந்த அதிகாரிகள் நேரிடையாக மனுக்களை வாங்க வேண்டும், இரண்டாவது கட்டமாக, இது சம்பந்தப் பட்ட அதிகாரிகள், அதை சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அனுப்ப வேண்டும், மூன்றாவது கட்டமாக, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குறை தீர்க்கும் நாள். திங்கட்கிழமை, திங்கட் கிழமை குறை தீர்க்கும் நாள் என்று வைத்து, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட வருவாய் துறை அதிகாரிகள், கோட்ட வருவாய்த் துறை ஆகியோர் மக்களிடத்திலிருந்து மனுக்களைப் பெற வேண்டும் என்றும், பெற்ற உடனேயே, அந்த மனுக்களின் மீது '' குறை தீர்க்கும் நாள் அன்று வாங்கப் பட்டது '' என்று எழுத வேண்டும் என்றும் அறிவுறுத்தி இருக்கி றோம். அவைகள் பதிவு செய்யப்படுகின்ற ஏடுகளில் கூட, '' குறை தீர்க்கும் நாள் அன்று வாங்கப்பட்டது '' என்று மார்ஜி னில் சிவப்பு இங்கால் எழுத வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதன் மூலமாக இங்கே தீவிரமாக எடுத்துச் சொல்லப்பட்ட குறைகளை எப்பொழுது வேண்டுமானாலும் உறுப்பினர்களும் அதை பயன்படுத்திக்கொள்ள முடியும், பொது மக்களும் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதற்காக 1-4-84 முதல் இத் திட்டங்களை தீவிரமாக எடுக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்து, அதில் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகிற போது பலர் சொன்னார்கள். வீட்டு மனைப் பட்டா பற்றி. வீட்டுமனைப் பட்டாக்கள் பல இடங் களில் இருக்கிறது என்றால், பல இடங்களில் வீட்டு மனைப் பட்டாக்களே கொடுக்கக் கூடாது என்றும் சிலர் சொன்னார்கள். 30 ஆண்டுகளாக 40 ஆண்டுகளாக கொடுக்கவேயில்லை என்று சிலர் சொன்னார்கள். அது மட்டும் அல்லாமல், வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு, வட்ட ஆட்சியருக்கு அதிகமான வேலை இருக் கிறது. அந்த வேலையை குறைக்க வேண்டும் என்று சிலர் சொன்னார்கள். அதை நம்முடைய அருமை சகோதரர் தங்க ராஜன் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். 2, 3 வட்டத்திற்கும் சேர்த்து ஒரு ஆர். டி. ஓ.; 3, 4 வட்டத்திற்கு சேர்த்து ஒரு ஆர். டி. ஓ. என்று இருப்பதை விட, ஒவ்வொரு தாலுக்காவிற்கும் பட்டா கொடுப்பதற்கு மட்டும் தனியாக ஒரு வட்டாட்சியரை போட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தார் கள். ஆனால் இன்றைக்கு அந்த வீட்டு மனைப் பட்டா



1984 மார்ச் 26] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

கொடுப்பது என்பது மத்திய அரசினுடைய 20 அம்சத் திட்டத் திலே வருகிறது. அந்த 20 அம்சத் திட்டத்தின் மூலமாக 1982-83-ல் 80 ஆயிரம் வீட்டுக்கு பட்டா கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசு தன்னுடைய எண்ணத்தை, கருத்தை எழுத்து மூலமாக மாநில அரசுக்கு தெரிவித்தது.

(பிற்பகல் 1-50)

ஆனால் இந்த மாநில அரசு வழங்கியது என்னவென்றால் அதை விட ஒரு மடங்கு கூட கொடுத்திருக்கிறது. 1,49,844 வீட்டு மனைப் பட்டாக்கள் சென்ற ஆண்டு, 1982-83 இல் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி சென்ற ஆண்டு அதிகமாகக் கொடுத்ததால் மத்திய அரசு நீங்கள் இந்த ஆண்டு நன்றாக கொடுத்திருக்கிறீர்கள் என்று பாராட்டியிருக்கிறது. பாராட்டியிருப்பது மட்டுமல்ல. இந்த ஆண்டு 1983—84 ஆம் ஆண்டு ஒன்றரை லட்சம் வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக் கிறது. 1983 ஆம் ஆண்டு 1984 ஜனவரி 31 ஆம் தேதி வரை—இன்னும் ஜனவரி போய் பிப்ரவரி இருக்கிறது. அது போய் மார்ச் இருக்கிறது அந்தக் கணக்குகள் என்னிடம் வரவில்லை—ஒன்றரை லட்சம் கொடுக்க வேண்டுமென்று சொன் னார்கள், ஆனால் ஒரு லட்சத்து 60 ஆயிரம் வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுத்திருக்கிறோம். மீதியிடங்களில் கொடுப் போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதே மத்திய அரசின் இலக்கை நாம் தாண்டிவிட்டோம். என்றா லும் இன்னமும் அதிகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டா கொடுப் பதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லாமல் விரைவில் கொடுப் போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பேசுகின்றபோது குத்தகைதாரர்பற்றிச் சொன்னார் கள். குத்தகைதாரர்கள் பற்றி இன்று நேற்றல்ல, பல வரு டங்களுக்கு முன்னதாக வந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். முதன்முதலாக 1952 ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டத்திலே பண்ணையார் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதற்குப் பிறகு தென் ஆற்காடு மாவட்டத் திற்கு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. 1956 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டம் செய் யப்பட்டது. முதலில் வெளியேற்றக் கூடாது, அதற்காக சட்டம். பிறகு எவ்வளவு வாரம் கொடுக்க வேண்டுமென்று சட்டம் கொண்டு வரப்பட்டது. 1956 இல் பார்க்கிறபோது எப்படிக் கொடுக்கவேண்டுமென்றால் 33-1/3; 66-2/3 அல்லது 40:60 என்று இருந்தது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் 75:25 என்று கொண்டு வரப்பட்டது. 75 யாருக்கு என்றால் நிலச்சுவான்தாருக்கு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயில் நிலங்கள் பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு
வந்ததற்குப் பிறகுதான் கோயில் உள்பட பொது பொறுப்புக்
கழகங்கள் தங்களுக்குச் சொந்தமாக சாகுபடி செய்ய வேண்டு
மென்றால் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்துக்
கொள்ளக்கூடாது என்று கொண்டு வந்தது—எந்த அரசு என்
றால் இந்த அரசுதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.

இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சி
யால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் இங்கே
நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்
டிருக்கிறார்கள். இந்த அரசு அதை ஏற்றுக்கொண்டு வெள்ள
மாக இருந்தாலும் சரி, வறட்சியாக இருந்தாலும் சரி, இயற்
கையின் சீற்றமாக இருந்தாலும் சரி பாதிக்கப்பட்டவர்களுக்கு
எல்லாம் நிலவரி, தண்ணீர் வரி, உள்ளூர் வரி, உள்ளூர் மேல்
வரி இப்படி எந்த வரியாக இருந்தாலும் தள்ளுபடி செய்
வதற்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

குத்தகைபற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்
திரு. உத்திராபதி கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவிப்பார்கள்
என்று நினைத்தேன், தெரிவிக்கவில்லை. அந்தச் சட்டம்
இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் கொண்டு வந்தது. வெள்
ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டால் விளையவில்லை.
விளையாவிட்டால் என்ன செய்வது? எப்படி இந்த அரசு
போட்டிருக்கிறது என்றால் நார்மல் விளைச்சலைவிட குறை
வாக விளைந்தால் அந்த விளைச்சலில்தான் பங்கு. 100
கலம் விளைகிறது என்றால் அதிலே 75 கலம் தான் விளைந்
திருககிறது என்றால் அந்த 75 இல்தான் 25:75. ஆகவே
சட்டத்திலே இப்போது பாதுகாப்பு இருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பல சீர்திருத்தங்களை
குத்தகைதாரர்களுக்காக இந்த அரசு கொண்டுவந்து இருக்
கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த குத்தகை
தாரர்கள் பிரிச்சினை வருகிறபோது 75க்கு 25 அமுலில்
கொண்டு வந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். பல இடங்களில் அது அமுலில் இருக்கிறது என்
பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். திருவாடுதுறை மடம்
போன்ற பல இடங்களில் அதை அமுல்படுத்தவில்லை. ஹைக்
கோர்ட்டுக்கு போய் ஸ்டே வாங்கி வைத்துக்கொண்டு இது
வரை அது அமுலுக்கு வரவில்லை. அதை மாண்புமிகு அமைச்
சர் அவர்கள் கவனத்திற்குப் பல முறை கொண்டு வந்திருக்
கிறோம். அரசு தரப்பில் ஆஜராகி ஸ்டே வெக்கேட் செய்யப்
பட்டு அமுல் நடத்த முறையான நடவடிக்கைகள் எடு





வில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்
திற்குக் கொண்டுவருகிறேன். குத்தகைதாரர்களைப்
பொறுத்தவரைக்கும் ஏற்கெனவே எழுதி வைத்ததைத்தான்
கொடுப்பேன் என்று சொல்கிறார்கள். சட்டத்தைப்பற்றி
கவலை இல்லை என்று சொல்லி சிவந்திபுரம், கோட்டூர்புரம்
ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது.
இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை
எடுப்பார்களா என தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.
சுருக்கமாக ஒரு வார்த்தையில் சொல்கிறேன். எப்படி நட
வடிக்கை எடுக்கிறோம் என்றால் உங்களுக்கு குத்தகைப் பத்திரம்
இருந்துவிட்டால் எந்தக் கேள்வி முறையும் இல்லை. கொடுத்து
தான் ஆகவேண்டும். வெளியே அனுப்ப முடியாது.
ஆனால் குத்தகை பத்திரம் இல்லாதவர்கள், இன்றைக்குப் பல
லட்சம்பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்களும் ஏற்றுக்
கொள்வீர்கள், இந்த அரசும் ஏற்றுக்கொள்ளும் என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி யார் யாருக்குக்
குத்தகைப் பத்திரம் இல்லையோ, அந்தக் குத்தகைப் பத்திரம்
இருக்கிறதா, இல்லையா, என்பதை விசாரிப்பதற்கு மக்கள்
குழு போடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். மக்கள் குழு எல்லாவற்றிற்கும் போட்டு
இருக்கிறீர்கள். இதற்குக் கூடவா போட்டு இருக்கிறீர்கள்
என்று சொல்லக்கூடாது. போட்டு இருக்கிற குழுவும் சரியாக
இயங்கவில்லை என்று சொன்னால் அதற்கும் பதில் சொல்லத்
தயாராக இருக்கிறேன். குழு, தர்மபுரியில், திருச்சி மாவட்
டத்தில், தஞ்சை மாவட்டத்தில், மதுரை மாவட்டத்தில் திரு
நெல்வேலி மாவட்டத்தில் போடப்பட்டிருக்கிறது. எங்கே
அதிகமாக இந்தக் குத்தகைதாரர்கள் இருக்கிறார்களோ
அங்கே எல்லாம் குழு போடப்பட்டிருக்கிறது. இப்படிப் பல
மாவட்டங்களில் விசாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். குழுவில் போடப்பட்டு இருப்பவர்கள் யார் யார்
என்றால் விவசாயக் கூலியாக இருக்கிற ஆதி திராவிடர்
ஒருவர், குத்தகை செய்கிற ஒரு நபர், மற்றும் பொதுத் தொண்டு
செய்கிறவர்கள் 3 பேர். இப்படிப் போடப்பட்டு இருக்கிறபோது
அந்த அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களும் எல்லா இடங்களிலும்
போடப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் இந்தக் குழு போகிறபோது தன்னிச்சை
யாக இந்தக் குழு தன்னந் தனியாக அவர்களுக்குக் குறிப்பிட்டு
இருக்கிற வட்டத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்,
விசாரணை செய்யலாம். இந்த நிலம் குத்தகைதானா?
இதற்குக் குத்தகை எழுதிக் கொடுக்கவில்லையா? யார் பயிர்
செய்கிறார்கள்? முதலாளி ஏன் எழுதிக் கொடுக்கவில்லை என்
பதை எல்லாம் நன்கு எழுதி, இன்னார்தான் குத்தகை செய்
கிறார்கள் என்பதை எழுதி அவர்கள் சம்பந்தப்பட்ட வட்ட
ஆட்சியர் இடத்தில் அவர் கொடுக்கலாம். சம்பந்தப்பட்ட

வட்ட ஆட்சியர் அதைத் தள்ளிவிடமுடியாது. ஏன் என்றால்
அதிகாரம் அற்ற குழு அதைத் தள்ள வேண்டும் என்றால்
சரியான காரணத்தை அவர்கள் தீர்ப்பில் என்றால்
வேண்டும். அந்தச் சரியான காரணம் அந்தத் தீர்ப்பில் எழுதியாக
னால் தான் அதற்குப் பிறகு தான் அதைத் தள்ள முடியும் எழுதி
பது அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்
தெரிவித்துக் கொள்கிறேன். என்ன செய்வது, என்பதைத்
உறுப்பினர்கள் ஏழைகள் தானே, எப்படி அவர்கள் சட்டமன்ற
எல்லாம் போவது என்றால் தனித் தனியாகப் அங்கே
ஒரு கிலோ மீட்டருக்கு—நான் சொல்வது சரியாக போகலாம்.
என்று நினைக்கிறேன். அவர்களுக்கு எல்லாம் வேண்டிய இருக்கும்
வுக்குப் பணம் கொடுக்கப்படுகிறது என்பதை நான் அள
கொள்கிறேன். தெரிவித்துக்

அது மட்டும் அல்ல, ரயில் பாதையில் பயணம் செய்தால்
முதல் வகுப்பில் போகலாம் என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன். ஒரு நாளைக்கு அவர்களுக்கு 20 ரூபாய் படி
யாகக் கொடுக்கப்படுகிறது. வீட்டிலிருந்து கிளம்பி மறுபடியும்
வீட்டுக்கு வருவதற்கு ஒரு நாளைக்கு மேல் போனால் இன்
னொரு 20 ரூபாய் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இவைகளை நீங்கள் பயன்படுத்திக்
கொண்டு இந்தக் குத்தகை பயிர்கள் செய்வதை விசாரணை
செய்து இந்த அரசுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்த குத்தகை வார நிர்ணயம் சம்பந்தமாக மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 60க்கு 40 சட்டம்
வருகிறபோது அப்போதே முதலாளிகளும் குத்தகை விவசாயி
களும் களத்துமேட்டில் கண்டு முதல் செய்து வாரத்தைப் பிரித்
துக்கொள்வதற்கு எழுதி முடித்துவிட்டார்கள். 75க்கு
25 சட்டம் வருவதற்கு முன்னாலேயே ஏற்கெனவே உள்ள
வாரச் சட்டம் பிரகாரம் எழுதிவிட்டார்கள். ஆனால்
இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கண்டு
முதலில் வாரத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லி அதில்
சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். யார் அதை நிர்ணயம்
செய்வது? இது விவசாயிகளுக்குப் பாதகமாக வராதா?

(பிற்பகல் 2-00)

களத்து மேட்டிலே வாரதாரர்களும், நிலச் சொந்தக்காரர்களும்
நெல்லைப் பிரித்துக் கொள்ள வேண்டுமென்று அறிவித்திருக்கின்றீர்
கள். இதற்கு முன் வாரச் சிட்டிலே 75-25 என்று, 60-40-ஐ
ஒப்பிட்டுப் பிரித்திருக்கிறார்கள். தற்போது நீங்கள் மேலும்
விவரத்தைக் கொடுப்பது முன்புள்ள வாரச் சிட்டைப் பாதிக்கும்
அல்லவா?





மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலிலே 60 — 40 என்று இருந்தது; இன்றைக்கு 75 —25 என்று இருக்கிறது. முதலில் வைக்கோலில் பங்கு இல்லை; இப்பொழுது வைக்கோலில் பங்கு இருக்கிறது. நெல்லுக்குப் பிறகு பயிர்போட்டால், நெல் விளைந்த இடத்தில் போட்டால் உங்களுக்குச் சொந்தம் என்று சட்டம் இருக்கிறது. இதைக் கொடுக்காவிட்டால் 6 மாதம் ஜெயில், 1,000 ரூபாய் அபராதம், இரண்டும் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதைவிட என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள், யோசித்துச் செய்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக அமைச்சரிடத்தில் ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது வந்திருக்கின்ற பிரச்சினை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக குத்தகை நிவாரணம் கொடுக்க வேண்டும் என்பது. அமைச்சரவர்கள் சொல்கிறார்கள், 75 —25 இருக்கிறது, ஆகவே, அந்த அடிப்படையில் விளைச்சலில் 25 கொடுத்தால் போதும் என்று. ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்தின்படி குத்தகை என்பது ஏற்கனவே ஒருமுறை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. களத்திலே 75 — 25 என்று பிரிக்கின்ற முறை கிடையாது. ஆகவே, ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட குத்தகையைக் கொடுத்தாக வேண்டுமென்பது சட்டம், அதைத் தவணையில் கொடுப்பதற்குப் புதிய மசோதாவை அமைச்சரவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, வெள்ளத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்பது தான் கோரிக்கை. அதை எப்படி நிறைவேற்றுவதற்கு உத்தேசித்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அது பற்றி சட்டமுன்வடிவை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதை நன்றாகப் படித்துப் பாருங்கள். நான் மிகவும் யோசித்து, வருவாய்த்துறை அதிகாரியை வைத்துக்கொண்டு, சட்டச் செயலாளரை வைத்துக் கொண்டு செய்த அந்தச் சட்டம் எல்லாவிதமான, சகல வல்லமை படைத்தது என்று சொல்லவில்லை. அதைப் படித்துப் பாருங்கள். அதில் ஏதாவது குறையிருக்கிறது என்றால், அரசு சார்பில் திருத்தங்கள் கொண்டு வருவதற்குத் தயார். ஏனென்றால், விவசாயக் குத்தகைதாரர்களுக்கு எவ்வளவு பாதுகாப்புத் தர வேண்டுமென்று நீங்களெல்லாம் சொல்லுகிறீர்களோ அதைப்போல அவர்களுக்கு நானும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதில் ஏதாவது தவறு இருந்தால், அவர்களுடைய எண்ணங்களின்படி பாதுகாப்பு இல்லை என்றால் அதற்குத் திருத்தம் கொண்டு வருவதற்கும் அரசு தயாராக இருக்கிறது.

[திரு. எஸ். டி. சே மசுற்தரம்] [1984 மார்ச் 26

இப்பொழுது சொல்வது, 75 —25 என்று இன்றைக்கு இருந்
தாலும், விளையாமற்போனால், எந்த சதவீதம் விளைய
வில்லையோ அதற்குத் தக்கவாறு தர வேண்டும். 20 கலம்
உங்களுக்கு, அவர்களுக்கு ஏழரை கலம் என்று எழுதியிருப்பார்
கள். அப்படியென்றால் 27½ கலம் விளைந்திருக்க வேண்டும்.
அப்படி விளையாமல் 20 கலம்தான் விளைந்திருக்கிறது என்றால்
உங்களுக்கு 15 கலம்; அவர்களுக்கு 5 கலம். 15 கலம் தான்
விளைந்திருக்கிறது என்றால், அந்தப் பதினைந்தில் 75-25 ;
10 கலம்தான் விளைந்திருக்கிறது என்றால் அந்தப் பத்தில்
75 —25 என்பதற்காகத்தான் சட்டம்...............

திரு. சோ. அழகர்சாமி : இவ்வளவுதான் விளைந்தது
என்று தீர்மானிப்பது யார்? நிலச்சுவான்தாரர்களா அல்லது
விவசாயத் தொழிலாளர்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அது சிக்கலான
பிரச்னை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். இல்லை
யென்று சொல்லவில்லை. (குறுக்கீடு) வெள்ளத்தால் பாதிக்
கப்பட்ட இடம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. 75 —25
என்று உங்களிடத்திலே கேட்பார்கள். அப்படி 75 —25 என்று
கேட்க முடியாமல் இருக்கப் பாதுகாப்பு இருக்கிறது. வெள்ளத்
தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்.
75 —25 என்று கேட்பார்கள், அப்படிக் கேட்க முடியாமல்
இருக்கப் பாதுகாப்பு இருக்கிறது. அதுவரையில் இன்றைக்குப்
பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரி
வித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற
பொழுது, இப்போது பலயிடங்களில் உடனடியாகப் பணம்
கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான், உடனடியாக
எங்கெங்கே கொடுக்கப்படவில்லையோ, அங்கே சம்பந்தப்பட்ட
அதிகாரிகளிடத்தில் சொல்லி, குறிப்பாக வறட்சி நிவாரண
வேலை செய்தவர்கள் யாருக்காவது கொடுக்காமல் இருந்தால்
உடனடியாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்யப்பட்ட
வேலைகளுக்கு எல்லாம் தேவையான பணம் கொடுக்கப்பட்டிருக்
கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கொடுக்
கப்படவில்லையென்றால் —இன்றைக்கு தேதி 26 —31-ஆம்
தேதிக்குள்ளாக அந்தப் பணத்தைக் கொடுக்க முடியுமா,
இல்லையா என்ற நிலைமை இருக்கின்றது என்பதைத் தெரிவித்
துக் கொள்கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பணம் கொடுப்
பதில் குறைகள் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதிலே சங்கடங்கள் ஏதேனும் இருந்தால்
தெரிவியுங்கள்.



1984 மார்ச் 26] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அடுத்து கூட்டுறவுக் கடன்பற்றிச் சொல்லி இருக்கிறீர்கள்.
இந்த அரசைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கும் சங்கடம்
இல்லாமல், கூட்டுறவுத் துறைக்கும் சங்கடம் இல்லாமல் இது
பற்றி எப்படிப் பரிசீலிப்பது என்பதை அரசு ஆழ்ந்து யோசித்துக்
கொண்டிருக்கிறது. இது நிதி சம்பந்தப்பட்ட பிரச்சினையாக
இருப்பதன் காரணத்தால் நீங்கள் கேட்ட மாத்திரத்திலே
என்னாலே அறிவிப்பு செய்ய முடியவில்லை. ஆகவே அதைச்
செய்ய வேண்டும் என்று நீங்களும் கண்டித்துக் கேட்க மாட்டீர்
கள் என்பதை உறுதிப்படுத்திக்கொள்கிறேன்.

வறட்சி காரணமாக சென்ற ஆண்டு மாநிலம் பூராவும்
10 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோம். தற்போது
பெய்த மழை காரணமாகக்கூட —சுமாராக அந்தக் கணக்கு
எவ்வளவு என்பது என்னிடத்திலே இல்லை —கிட்டத்தட்ட 10
கோடி ரூபாய்க்குக் குறையாமல் தள்ளுபடி செய்ய வேண்டிய
நிலைமை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலம் வறட்சியாலே பாதிக்கப்பட்டபோது 26.96
இலட்சம், அதாவது கிட்டத்தட்ட 27 இலட்சம் வேஷ்டிகள்
கொடுக்கப்பட்டிருக்கின்றன. சேலைகள் 32.09 இலட்சம், அதா
வது 32 இலட்சத்திற்கும் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்
றன. மொத்தமாக 59 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேஷ்டி
சேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளின் உத்தேச
மதிப்பு 10 கோடி ரூபாய்.

அடுத்து அருமைச் சகோதரர் திரு. தங்கராசு அவர்கள்
பேசுகின்றபோது புயல் பாதுகாப்பு இல்லங்கள் வேண்டும் என்று
சொன்னார்கள். அவர்கள் கேட்ட இடத்திற்கு இதற்கு முன்பு
ஒரு புயல் பாதுகாப்பு இல்லம் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றது.
இப்போது மீண்டும் ஒரு புயல் பாதுகாப்பு இல்லம் கட்டுவதற்கு
இந்த அரசு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. மொத்தம் 110
புயல் பாதுகாப்பு இல்லங்களில் 68 முடிந்துவிட்டன; 42 முடியும்
தருவாயில் இருக்கின்றன. இந்த 110 புயல் பாதுகாப்பு இல்
லங்களைப் பொறுத்தவரையில் எங்கெங்கு தேவையோ அங்
கங்கு கட்டுவார்கள்; தேவையான இடங்களில் கட்டுவார்கள்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்ப்புற வரியைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 30
இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டிருக்கின்றது. அக்ரிகல்
சர் இன்கம் டாக்ஸைப் பொறுத்தவரையில் நெல் போட்டவர்
களுக்கும், மற்ற பயிர் போட்டவர்களுக்கும் வரி போடுவார்கள்.
ஆனால் இன்றைக்கு தோட்டப் பயிருக்கு மட்டுமே வரி இருக்க
வேண்டும் என்ற வகையில் நாம் வரியைக் குறைத்திருக்
கிறோம்.

அடுத்து சுமாராக ஒருவருக்கு 20 ஏக்கர் நிலம் இல்லை என்றா
லும் கூட, இரண்டு போகம், மூன்று போகம் என்று வரும்
போது 20 ஏக்கர் வந்துவிடும். அப்படி 20 ஏக்கர் பயிர் செய்
பவர்களுக்குக் கூட வரி தள்ளுபடி செய்திருக்கிறோம். அப்படி
தள்ளுபடி செய்திருப்பதன் காரணத்தால் இன்றைக்கு 26
ஆயிரம் பேர் வரிவிதிப்பிலிருந்து நீக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த அரசு மத்திய அரசுக்கு நிலம் கொடுப்பதன் மூலமாக
சில தொழிற்சாலைகள் வரவேண்டும் என்று சொன்னார்கள்.
இந்த அரசைப் பொறுத்தவரையில் 5,683 ஏக்கர் நிலத்தை
மத்திய அரசுக்குக் கொடுத்து இருக்கின்றது. அதாவது ஏறக்
குறைய 5 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள அந்த நிலங்கள்
எல்லாம் அவர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் நிலப்பட்டாக்களைப் பொறுத்தவரையில் மத்
திய அரசு எப்படித் தர வேண்டும் என்று சொன்னதோ அந்த
அளவுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே பல மாவட்டங்களைப் பிரிக்கவேண்டும்
என்று சொன்னார்கள் அவற்றை எந்தெந்த வகையிலே
பிரிக்கவேண்டும் என்பதைப் பற்றி பரிந்துரை செய்வதற்காகத்
தான் ஒரு குழு போடப்பட்டிருக்கின்றது. அதுபற்றி இந்த
அவையிலே ஆளுநர் உரையின் மூலமாக அறிவிக்கப்பட்டிருக்
கின்றது என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். அதைப்
பற்றி கண்காணித்து அரசுக்கு சிபாரிசு செய்வதற்காகத்தான்
மூன்றுபேர் கொண்ட குழு போடப்பட்டு இருக்கின்றது.
இரண்டாம் செயலாளர் திரு டி. வி. அந்தோணி, ஐ.ஏ.எஸ்.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய்த்துறை நிர்வாக
ஆணையாளர் திரு. ஏ. பத்மநாபன், ஐ.ஏ.எஸ்., மற்றும்
நிலச் சீர்திருத்த ஆணையாளர் திரு என். ஹரி பாஸ்கர் ஆகி
யோரைக்கொண்ட குழுவை நியமித்திருக்கிறோம் என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10)

இங்கே பேசுகிறபொழுது பலபேர் புதிதாக சில வட்டங்
களைப் பிரிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அந்த வட்
டங்களைப் பிரிக்கிறபொழுது திருச்சி வட்டத்தை இரண்டாகப்
பிரிப்பதைப் பற்றி, அரசு திருச்சி,ஸ்ரீரங்கம் என்பதைப் பிரிப்பது,
அம்பாசமுத்திரம், சேரன்மாதேவி, நாமக்கல்லில் பரமத்திவேலூர்
இராசிபுரத்திலே கொல்லிமலை, பெரிய குளத்திலே தேனி, கரு
ரிலிருந்து அரவக்குறிச்சி, அரூரிலிருந்து பாப்பிப்பட்டி, மதுராந்
நகம், காவிரிப்பட்டினம், திருமயம் இவையெல்லாம் அரசினுடைய
பரிசீலனையில் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்
கிறேன்.



அதே போல் இன்னொன்றும் சொல்ல வேண்டும். இந்த
வரியை எல்லாம் தள்ளுபடி செய்வதற்கு எல்லாவிதமான நட
வடிக்கைகளையும் இந்த அரசு எடுத்தாலும் சிலவற்றைச் சொல்
கிறபொழுது, நெசவாளர்களுக்கு இந்த அரசு சில வழிவகை
களைச் செய்ய வேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறது.
சேதம் அடைந்த வீடுகளுக்கு அவர்களுக்குத் தறியெல்லாம் இருப்
பதால், முதலில் ரூ. 250 கொடுத்தார்கள். மானியமாக ரூ. 250
கொடுத்தார்கள். அதை ரூ. 300 ஆகக் கொடுக்கலாமா என்
பதைப்பற்றியும், சேதம் அடைந்த தறிக்கு ரூ. 150 முதலில்
கொடுத்தார்கள். இப்பொழுது ரூ. 200 கொடுக்கலாமா என்
பதைப் பற்றியும் இந்த அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது என்
பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப் பல்வேறுவித
மான பணிகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றைச் சொன்னார்கள், நிலவுடைமை மேம்பாடு திட்டம்.
அது எப்படி நன்றாக நடைபெறவில்லையென்று சொன்னார்கள்.
நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலவுடமை மேம்
பாடு திட்டம் எப்படி நடைபெற வேண்டுமென்பதற்காக, அதிலே
நானே கைப்பட எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்
அழைப்புகள் கொடுத்தேன். நானே அழைபபுகள் கொடுத்தால்,
அதற்குப் பிறகு போக்குவரத்திற்குப் பணம் இல்லாமல் போய்
விடுமே என்று நினைப்பார்கள் என்று கருதி, அமைச்சர் கை
யெழுத்து போட்டால் செல்லுமோ, செல்லாதோ என்று நீங்கள்
சந்தேகப்படுவீர்கள் என்று கருதி. அரசுச் செயலாளர் மூலமாக,
சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத்திற்கு வருகிறபொழுது
எப்படிச் போக்குவரத்து வசதிகள் தரப்படுகின்றனவோ, பணமும்,
சிட்டிங் ஃபீஸ் அவ்வளவும் உண்டு என்று நான் செயலாளர்
மூலமாக ஒரு கடிதம் எழுதினேன். நானே இரண்டு கடிதம்
எழுதினேன். எல்லோரும் வரவில்லை. ஆனால், நம்முடைய
அருமைச் சகோதரர் திரு. கருப்பையா அவர்களும் மற்றவர்
களும் வந்து அதைச் சிறப்பித்தார்கள். அந்தக் கூட்டம் எப்படி
நடைபெற்றது என்றால், இரண்டு நாட்கள் நான் விடவில்லை.
திருப்பித் திருப்பிக் கேட்டேன், யார், யாருக்கு என்ன குறை
என்று கேட்டு, கேட்டு, அவை இன்றைக்கு நடைமுறைப்படுத்தப்
பட்டிருக்கின்றன. நடைமுறைப்படுத்துவதற்கு எல்லாவிதமான
முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1,30,000
சதுர கிலோ மீட்டர்களில் ஒதுக்கப்பட்ட காடுகள் பற்றிச்
சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.சுந்தர
ராஜ் அவர்கள் சொல்கிறபொழுது பாரஸ்டினுடைய நிலத்திலே
யிருந்து அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று சொன்
னார்கள். இரண்டாவது சொன்னார்கள், காட்டை வளர்க்க
வேண்டுமென்று. ஆகவே, அரசு அதை யோசித்துக் கொண்
டிருக்கிறது. பெரும்பாலும் காட்டுவளம்தான் நாட்டினுடைய

வளம். காட்டு வளத்தைப் பெருக்கினால்தான் நாட்டு வளம்
பெருகும். காட்டு இலாகா இவ்வளவு கண்டிப்பாக இல்லா
விட்டால் மரத்தையே வெட்டிக் கொண்டு போய் விடுவார்கள்.
காட்டு இலாகா இவ்வளவு கண்டிப்பாக இருந்தாலும் கூட,
பல இடங்களிலே இலட்சக்கணக்கான மரங்களை வெட்டி விட்
டார்கள் என்ற தகவல் அரசுக்கு வந்திருக்கிறது என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வந்தாலும் காட்டு இலா
காவினரும் மற்ற இலாகாவினரும் ஒத்துழைப்பு தரவேண்டுமென்
பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலவுடமை மேம்பாடு திட்டம் இன்றைக்கு 16 மாவட்டங்
களில் 13 மாவட்டங்களில் நடக்கின்றன. அந்த 3 மாவட்டங்கள்,
சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி ஆகியவை நீலகிரி மாவட்டத்
தில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்றார்கள். சரியாக செய்ய
வில்லை என்றார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கு
நடைபெறவில்லை. ஏன் நடைபெறவில்லையென்றால், அங்கே
குறைபாடு இருந்தாலும்—திருவிதாங்கூர் சமஸ்தானத்திலிருந்து
பிரிக்கிறபோது 50 ஆண்டுகாலத்திற்குள் நிலவுடைமை மேம்பாடு
திட்டம் நடந்ததால் தான் அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.
தேவைப்பட்டால் அரசு அதை கவனிக்கும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன். இவையெல்லாம் செய்வதற்கு, நிலவுடைமைப்
பதிவுத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு எவ்வளவு
பணம் வேண்டுமென்றால் ரூ. 3,577 இலட்சம் தேவைப்படு
கிறது.

பட்டா பாஸ் புத்தகம்; நில உடைமைப் பதிவேடு கொடுப்
பதற்கு 1,170 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது.
கிராம நத்தம் போன்றவைகளை வளர்ப்பதற்காக 1,166 இலட்
சம் ரூபாய் தேவைப்படுகிறது. மொத்தமாக 6,470 இலட்சம்
ரூபாய் தேவைப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
மாண்புமிகு திரு. சுந்தரராஜன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள்
கொடுக்கப்பட்டிருப்பவைகளை பூராவும் படித்துப் பார்க்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். படித்துப் பார்த்தால்
இதிலே என்னென்ன செய்கிறோம் என்பது உங்களுக்குத் தெரி
யும். இவைகள் உங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது
என்றே நினைக்கிறேன். இவைகளின் நோக்கங்கள் இதிலே இருக்
கின்றன. இவற்றை உங்களுக்குக் கொடுப்பதற்கு காரணம் இருக்கி
றது. அச்சிட்டுக் கொடுப்பதிலே எல்லாம் சரியென்று
நான் சொல்லவில்லை. இதை நீங்கள் படித்துப் பாருங்கள்.
என்னென்ன விடுபட்டு போயிருக்கின்றன என்பதை பாருங்கள்.
அதற்குப் பிறகு என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள்.
அவற்றை நான் திருத்தச் செய்கிறேன். இவைகளை எல்லாம்
உங்களுக்குக் கொடுப்பதற்கு என்ன காரணம்? ஏதோ நாங்கள்
செய்கிறோம், அதை நீங்கள் கேட்டுக்கொண்டு போகவேண்டும்
என்பதல்ல. உங்களுடைய உதவிகளையும், ஆலோசனைகளை
யும் கேட்டு திருத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்





உங்கள் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இலட்சக்
கணக்கான ரூபாய் செலவு செய்கிறோம் என்பதால் நல்ல முறை
யில் அவற்றை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் உங்களுக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நில அளவு பணி முடிக்கப்பட்ட கிராமங்கள் 4,420;
29,839 சதுர மீட்டர்கள் அதிலே அடங்கி இருக்கின்றன என்
பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே அளிக்கப்பட்ட
உட்பிரிவுகள் 39 இலட்சத்து 44 ஆயிரத்து 264; புதுப்பிக்கப்பட்ட
கற்கள் 14 இலட்சத்து 61 ஆயிரத்து 95 என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இதைச் சொல்வதற்கு காரணம், இதனாலே
மக்களுக்கு பயன் இல்லை; இதிலே நூறு அல்லது ஆயிரம்
பேர்களுக்கு வேலை கொடுத்தீர்கள் என்பதை மட்டும் வேண்டு
மானால் சொல்லிக் கொள்ளலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்
திரு. சுந்தரராஜன் அவர்கள் சொன்னார்கள். அதுமட்டுமல்
லாது இதற்காக செலவு செய்யப்படும் 6,407 இலட்சம் ரூபாய்
மக்களுடைய வரிப்பணம் வீணாகக்கூடாது என்று எண்ணிக்
கொண்டிருந்தேன். அது வீணாக வில்லை; நாம் திறம்பட
செய்தோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேண்டு
மானால் திரு. கருப்பையா அவர்கள் வெளியே வருகிறபோது
அவரிடத்தில் கேட்டுப்பாருங்கள். அதை ஆய்வு செய்வதற்காக
இரண்டு நாட்கள் நாங்கள் எல்லாம் எவ்வளவு அதிகமாக முயற்சி
எடுத்துக் கொண்டோம் என்பதைக் கேட்டுப் பாருங்கள்.
அவர்கள் கேட்ட கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் அமைதியாகத்
தெரிந்த பதில்களைச் சொன்னேன். தெரியாதவற்றிற்கு உடனடி
யாக பக்கத்திலே இருக்கிற அதிகாரிகளைச் சொல்லச்சொன்னேன்.
அவர்களுடைய தேவைகளைக்குறித்துக் கொள்ளவும் சொன்னேன்.

இன்றைக்கு நில உடைமை மேம்பாடு திட்டத்தை
செய்தது மட்டுமல்லாமல், பட்டா பாஸ் புத்தகம் கொடுத்
திருக்கிறோம். அதற்கு நில உடைமை பதிவேடு என்று பெயர்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இதைச் சொல்
வதற்குக் காரணம் அந்தக் குழுவிலே மாண்புமிகு திரு. அழகர்சாமி
அவர்கள் இருந்தார்கள் என்று நினைக்கிறேன். அவரைக் கேட்
டுப் பாருங்கள். அதிலே இருந்த உறுப்பினர்கள் யார் சொன்
னதையும் தள்ளிவிட வில்லை. அவர்கள் சொல்லாவிட்டாலும்
நான் கிண்டி, கிண்டி கேட்பேன்; இது எப்படி? சரிதானா? சரி
இல்லையா? சொல்லுங்கள்; நாம் இலட்சக்கணக்கான
பணம் செலவழிக்கிறோம்; ஆகவே, நீங்கள் சொல்லவேண்டு
மென்று கேட்பேன். நம்முடைய சகோதரிகளைக் கேட்டால்
அவர்கள் சொல்வார்கள்; கோலம் போட்டாலும் ஒழு
காகப் போட வேண்டும்? போடுவதற்கு முன் கற்றுக்கொண்
போடவேண்டுமென்று சொல்வார்கள்; அதைப் போல நா
கள் ஒழுங்காகப் போடுகிறோம்; தெரியாததை உங்கள் மூ
மாக கற்றுக்கொண்டு போடுகிறோம்; அவசரக் கோலத்தி
அள்ளித் தெளிப்பதைப் போல இருக்கக் கூடாது என்பதற்கா
கவனமாகச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறே

இது குறித்தவைகளை நான் எல்லோரிடத்திலும் காண்பிக்க [illegible]யாது; வேண்டுமானால் அந்த உறுப்பினர்கள் வந்து பார்க்கட்டும்; இதிலே ஏதாவது திருத்த வேண்டுமென்றால் திருத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அங்கே நம்முடைய அழகர்சாமி அவர்கள் கூட சிலவற்றில் கொஞ்சம் மெதுவாக இருந்தார்கள். அவரை கிண்டி கிண்டி ஏன் சொல்லவில்லை என்று கேட்பேன். அவர்கள் சொல்வார்கள் சில நேரங்களில் இதை செய்து முடிக்கிறபோது சங்கடங்கள் ஏற்படுமே என்று; இப்படி அதிகாரிகள் நினைத்தால் கூட நான் அதிகாரிகள் பக்கம் பேசாமல் அழகர்சாமி அவர்கள் பக்கம் தான் பேசி இருக்கிறேன். இது அழகர்சாமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். உண்மை தானா? நான் இதைச் சொல்வதற்குக் காரணம், 60 கோடி ரூபாய் வீணாகப் போய்விடுமோ என்று சுந்தரராஜன் அவர்கள் சொல்கிறபோது, பொதுமக்களுடைய பணம் வீணாகப் போய் விடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதற்காகத் தான் அவர்களை நான் சாட்சிக்கு அழைக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே நான் தவறான ஒரு கருத்தைச் சொல்லி சாட்சிக்கு அழைக்கவில்லை சரியான கருத்தைச் சொல்லக் கூட சாட்சியை அழைக்க வேண்டிய நிலைமை நாட்டிலே இருக்கிறது. நல்ல கருத்தைச் சொல்லக்கூட சாட்சியை அழைத்து அதை ஏற்றுக் கொள்கிற நிலைமை இன்றைய சமுதாயத்தின் அணுகுமுறையாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்து, அதனாலே தான் அவர்களை சாட்சிக்கு அழைத்தேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 2-20]

எடுத்த எடுப்பிலேயே அதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. சனவரி மாதம், பிப்ரவரி மாதம், மார்ச்சு மாதம், ஏப்ரல் மாதம் என்று எப்போது வரி கட்ட வேண்டும் என்று முதல் பக்கத்திலேயே சொல்லப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு என்ன இருக்கிறது என்றால், புகைப்படம். வரிசை எண். குறிப்பு எண், கிராமத்தின் பெயர், மாவட்டத்தின் பெயர், பட்டா எண், தனிப் பட்டாவா, கூட்டா என்பது எல்லாம் போடப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்லாமல் திரு. அழகர்சாமி அவர்கள் மிகத் தெளிவாக கண்டிப்பாகச் சொன்னார்கள். அவர்களுக்கு வேறு இடத்தில் நிலம் இருந்தால் என்ன செய்வது, அதையும் இதிலே எழுத வேண்டும் என்றார்கள். வேறு இடத்தில் இருந்தாலும், இதிலே எழுதப்பட வேண்டும். ஆகவே, வேறு மாவட்டத்தில் இருந்தாலும் எழுத வேண்டும். இதன் மூலமே அவருக்கு எவ்வளவு நிலம் சொந்தமாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அது மட்டுமல்லாமல், இந்தப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு பல கிராமங்களுக்குச் சென்று பதிவு செய்து கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் பல லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவு செய்து இதை பிரின்ட் செய்கிறோம். இந்தப் புத்தகத்தைப் பிரின்ட் செய்த





பிறகு வேஸ்டாகிவிடக்கூடாது என்பதால் முதலில் 1,000 புத்தகம் பிரின்ட் செய்து இருக்கிறோம். 400 புத்தகத்தை பல்வேறு இடங்களில் பதிவு செய்து கொண்டு வரச்சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் நாம் நடைமுறையில் பதிவு செய்கிறபோது, அது சரியாக வருகிறதா, இடம் போதுமா, போதவில்லையா, பதிவு செய்யப்பட்டவை படிக்க முடிகிறதா, மக்களுக்கு அவை உதவிகரமாக இருக்கிறதா, என்பதற்காக எழுதிக்கொண்டு வரச் சொல்லியிருக்கிறேன். இதற்காக நாம் செலவழிக்கிற பணம், நேரம், இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிறபோது, இதைப் பாராட்ட வேண்டும் என்று நான் சொல்லவில்லை, எத்தகைய முயற்சிகளை நாங்கள் எடுத்து வருகிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

2-ம் பக்கத்திலே நிலங்களைப் பற்றிய முழுவிவரம் தரப்படுகிறது. அதனுடைய புலன்கள், புலன் எண், அந்த இடத்திற்கு உள்ளூரில் வழங்கப்படுகிற பெயர், நஞ்சையா, புஞ்சையா, பரப்பளவு எவ்வளவு, கூட்டு பட்டா உண்டா—கூட்டு பட்டா எதற்காகப் போட வேண்டும் என்றால் சில இடங்களில் கிணறு இருக்கும், அதில் இருந்து நிலங்களுக்கு தண்ணீர் வர வேண்டியிருக்கும், அவற்றைப் பதிவு செய்யாவிட்டால் நாளைக்குப் பிரச்னை வரலாம் — இவற்றையெல்லாம் குறிப்பிட வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போல் தீர்வை —நஞ்சை வரி எவ்வளவு, புஞ்சை வரி எவ்வளவு, கூடுதல் தண்ணீர் தீர்வை எவ்வளவு, ஊராட்சி வரி எவ்வளவு, ஊராட்சி மேல்வரி எவ்வளவு என்பது எல்லாம் இருக்கிறது. இவைகள் எல்லாம் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டன என்று வைத்துக் கொள்ளுங்கள் — வெள்ளம் வந்து விட்டது, வறட்சி வந்து விட்டது — அவைகளையும் இதிலே குறிப்பிட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கடன் வாங்கியது பற்றியும் இதிலே குறிப்பிட்டு எழுத வேண்டும். எந்த நிலத்தின் மீது எவ்வளவு கடன் வாங்கப்பட்டது, அதில் திருப்பிச் செலுத்திய தொகை எவ்வளவு போன்ற விவரங்களும் எழுதப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரிஜிஸ்டர் ஆபீசில் கூட வில்லங்கம் சர்ட்டிபிகேட் வாங்க இது பயன்பட வேண்டும். வில்லங்க சார்ட்டிபிகேட் வாங்குவதில் மிகச் சங்கடம் இருக்கிறது என்று சொன்னார்கள். இதற்காக திரு. அழகர்சாமி அவர்கள் கமிட்டியில் 3 நாள் பேசினார்கள். ஆகவே, அந்த வில்லங்க சர்டிபிகேட் வாங்குவதிலே உள்ள சிரமங்களைக் குறைப்பதற்காக இதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறது. இவ்வளவு முயற்சிகளையும் அரசு எடுத்துள்ளபோது இது நன்மை செய்யுமா என்ற வினாவை எழுப்புகிறபோது நான் வேதனைப்படவில்லை, இது குறித்த விவரங்கள் உங்களுக்கு எட்டவில்லை, அந்த விவரங்களை உங்களுக்கு எட்ட வைக்க எங்களால் முடியவில்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு உறுப்பினர்[illegible] ஒவ்வொரு புத்தகம் வழங்கினால் நல்லது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே வரைபடங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி பல்வேறு விவரங்கள் இதிலே அடங்கியுள்ளது. நில உடைமை மேம்பாட்டுத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறவேண்டும் என்பதற்காக அதிகாரிகள் அல்லும் பகலும் உழைத்து, அரசாங்கத்தின் எண்ணத்தைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்குப் பாடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நில உடைமை மேம்பாட்டுத் திட்டத்திலே வருவாய்த் துறையில் உள்ள அதிகாரிகள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கும், இயற்கை இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட அரசாங்க அதிகாரிகள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கும், நிச்சயமாக பாராட்டுத்தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். அவர்களை நீங்களும் பாராட்டுவீர்கள் என்று கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர் சொன்னார்கள். பல இடங்களில் வருவாய்த்துறை அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் இல்லை. வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. புதிய கட்டிடம் வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். பல இடங்களில் புதிதாக கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. சில இடங்களில் பெரிதாகக் கட்டப்பட்டு இருக்கின்றன. திரு. பாலன் அவர்கள் கூட கேட்டார்கள். இது என்ன பெரிதாக மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டிடம்போல் கட்டப்பட்டு இருக்கிறதே என்று. (கேட்டீர்களா, இல்லையா—சிரிப்பு)

அதனால் வட்டாட்சி அலுவலகத்தை 27 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டிக்கொண்டிக்கிறோம். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 16 மாவட்டங்கள் இருக்கின்றன. 16 மாவட்டங்களுக்கும் சொந்தக் கட்டிடம் இருக்கிறது. கோட்டாட்சி அலுவலகத்தைப் பொறுத்தவரையில் 54 கோட்டாட்சிகள் இருக்கின்றன; 51 கோட்டாட்சிகளுக்கு கட்டிடம் இருக்கிறது. மூன்றுதான் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவைகளுக்கும் விரைவிலே கட்டிடம் கட்டப்படும்.

அதைப்போன்று 166 வட்டாட்சிகள் இருக்கின்றன. 156 வட்டாட்சிகளுக்கு அலுவலகம் கட்டப்பட்டுவிட்டது; மீதம் இருப்பது 10. அவைகளுக்கும் விரைவிலே கட்டிடம் கட்டப்படும். அவைகளுக்கு கூட கட்டப்பட்டிருக்கும். இன்னும் கட்டப்படாமல் இருப்பதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியும். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கடந்த 3, 4 ஆண்டுகளில் 38 புதிய வட்டாட்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனால்தான் இன்னும் 10 பாக்கி இருக்கிறது, அவைகளுக்கும் விரைவில் கட்டிடம் கட்டப்படும்.



அடுத்தப்படியாக, பிர்க்காவைப்பற்றிச் சொன்னார்கள். சிலர் விவரமாக எங்கள் தொகுதியில் இத்தனை பிர்க்காக்கள் இருக்கின்றன; இத்தனை கட்டிடங்கள் இருக்கின்றன; இத்தனை தேவை என்று சொன்னார்கள். முன்னாலே ஏறத்தாழ 780 பிர்க்காக்கள்தான் இருந்தன. இன்றைக்கு அது 1,096 ஆக உயர்ந்திருக்கிறது. அவற்றில் 958-க்கு கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிர்க்கா அலுவலகங்கள் எத்தனையோ கட்ட வேண்டியிருக்கிறது. படிப்படியாக அது கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ரெவின்யூ போர்டை கலைத்ததற்கு என்ன காரணம் என்று இங்கே கேட்டார்கள். ரெவின்யூ போர்டு என்று இருக்கும் போது அங்கே 4, 5 கமிஷனர்கள் இருப்பார்கள். அரசுக்கு ஏதாவது ஒரு அறிக்கை அனுப்ப வேண்டுமென்றால் அந்த 4, 5 பேர்களும் சேர்ந்து ஆலோசனை செய்து, அதன் பிறகுதான் அனுப்புவார்கள். அதனால் பெருமளவுக்கு காலதாமதம் ஏற்பட்டது. ரெவின்யூ போர்டை கலைத்த பிறகு, இன்றைக்கு நிலைமை அப்படி இல்லை. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக இலாகா பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனித் தனியாக அவர்கள் ஆலோசனை செய்து, நடவடிக்கை எடுக்கலாம். சந்தேகம் வந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்கலாம். அதிலும் சந்தேகம் என்றால் அவரே நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று விசாரணை செய்து, உண்மை நிலைமையைத் தெரிந்து கொள்ளலாம். எல்லா விவரங்களையும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவரே தெரிந்துகொண்டு, பின் அரசுக்கு சிபாரிசு செய்யலாம். இதனால் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. ரெவின்யூ போர்டை ஒழித்ததற்கான காரணம் இதுதான்.

அது மட்டுமல்ல. பிர்க்காவைப்பற்றிச் செரல்லும்போது இன்றைக்கு பிர்க்கா இன்ஸ்பெக்டர்கள் தான் எல்லாமே செய்ய வேண்டும். ஆனால் அவர்களுக்கு என்று தனியாக அலுவலகம் கிடையாது. ஆகவேதான் அலுவலகத்தோடு சேர்ந்த குடியிருப்புகளை அவர்களுக்குக் கட்டிக்கொடுக்கிறோம். எல்லோருக்கும் இன்னும் கட்ட முடியவில்லை; விரைவிலே, படிப்படியாக எல்லோருக்கும் கட்டிக்சொடுக்கப்படும. இப்படி பல்வேறு விஷயங்களை இன்றைக்கு இந்த அரசு செய்து வருகிறது.

கடைசியாக நில சீர்திருத்தம் பற்றி இங்கே சொன்னார்கள். நிலச் சீர்திருத்தம் பற்றி எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு, எந்த அளவுக்கு இதிலே தீவிரம் காட்ட முடியுமோ அந்த அளவுக்கு தீவிரம் காட்டி, நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

திரு. மு அப்பாதுரை : துணைத் தலைவரவர்களே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு அமைச்சரவர்கள் தலைமையில் 'பேத்துவாரக் கமிட்டி' ஒன்று இருக்கிறது. இரண்டாண்டுகளாக அந்தச்

கமிட்டிக் கூட்டம் நடைபெறவில்லை. இப்போது வெள்ளத்தால் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதையும் அந்த கமிட்டியில் இணைத்து உடனடியாக கமிட்டிக் கூட்டத்தை நடத்தி, ஆலோசனை பெற்று உரிய நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அமைச்சரவர்கள் முன் வருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியும். பல்வேறு கட்டங்களில் பல திட்டங்கள் வந்திருக்கின்றன. பல திட்டங்கள் காங்கிரஸ் ஆட்சியில் வந்தது, அதன் பிறகு, தி.மு.க. ஆட்சியில் வந்தது, அதற்குப் பின்னால் அண்ணா தி.மு.க. ஆட்சியில் வந்தது. இப்படி பல காலகட்டங்களில் பல திட்டங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வந்திருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சியில் விடுபட்டதை தி.மு.க. ஆட்சியில் செய்தார்கள். தி.மு.க. ஆட்சியில் விடுபட்டதை அண்ணா தி.மு.க. ஆட்சியில் செய்கிறது. இப்போது செய்வதிலே ஏதாவது விடுபட்டால், எதிர்காலத்திலே நாங்கள் செய்வோம்; விரைவிலே பல சட்டங்கள் வரும்.

நிலச் சீர்திருத்தம் பற்றிச் சொல்லும்போது, அது சம்பந்தமாக என்னென்ன செய்ய இருக்கிறோம் என்பதை வெளியிலே சொல்லக் கூடாது. ஆனால், விரைவிலே பல சட்டங்கள் வரும் என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களை மனதில் வைத்து வருவாய்த் துறை அதிகாரிகளுடனும் மற்றவர்களுடனும் பேசி, மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட சிலவற்றிற்கு நான் பதில் சொல்லி விட்டிருந்தாலும், குறிப்புகளைப் பார்த்து, எதை செய்ய முடியுமோ அதை செய்வோம் என்று சொல்லி, உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2.30)

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண். 1 —நிலவரித்துறை.

திருமதி தா. இரர்சாம்பாள், திருவாளர்கள், சு. பாலன், மு. அப்பாதுரை, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 1 —நிலவரித் துறை பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 13,57,01,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 41—இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

திருவாளர்கள் சு. பாலன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஏ. டி. கருப்பையா ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 41 —இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண். 46 --இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்.

திரு. சு. பாலன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 46 —இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 24,50,31,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 11 —மாவட்ட நிர்வாகம்.

திருவாளர்கள் த. வேணுகோபால், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. உத்திராபதி ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

''மானியக் கோரிக்கை எண். 11 —மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,59,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27 —3 —1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.31 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

151. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆறாம் ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

96. கோரிக்கை எண். 1 —நில வருவாய்த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

97. வருவாய்த் துறையின் 1984-85 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).





இணைப்பு

(599-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

வருவாய்த் துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

1984-85

1. முன்னுரை.

1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வருவாய் வாரியம் நீக்கப்பட்டதையடுத்து, வருவாய்-நில நிருவாகப் பணிகள் மாநில அளவில் சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையாளர், நில நிருவாக ஆணையாளர், நிலச் சீர்திருத்த ஆணையாளர் ஆகிய மூன்று ஆணையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. நில அளவை, நிலவரி ஏற்பாடு தொடர்பான பணிகள் நில அளவை-நிலவரி ஏற்பாட்டு இயக் குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2. வருவாய் நிருவாகத் துறை, மாவட்ட வருவாய் நிருவாகத்திற்கும், பொது நிருவாகத்திற்கும் பொறுப்பு வகிக் கிறது. இத்துறையிடம் வரி விதித்தல், வசூலித்தல், செஸ்வரி, அது தொடர்பான வரி விதிப்புகள், வேளாண் வருமான வரி, நகர்ப்புற நிலவரி, அரசுக்கு வரவேண்டிய கடன்கள், வருவாய் ஆவணங் களைப் பராமரித்தல் ஆகிய பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிலத்தைக் கையகப்படுத்தல், உரிமை மாற்றம் செய்து கொடுத்தல், நிலங்கள், வீட்டுமனைகள் ஆகியவற்றை ஒப்படை செய்தல், நிலப் பட்டாக்களை வழங்குதல் ஆகிய பணிகளுக்கு நில நிருவாகத் துறை பொறுப்பு வகிக்கிறது. நிலம் குத்தகை தொடர்பான சீர்திருத்தங்களைச் செயல் படுத்தும் பணிக்கு நிலச் சீர்திருத்தத் துறை பொறுப்பு வகிக்கிறது. தமிழ்நாடு மாநிலத்திலுள்ள கிராம-நகர்ப் பகுதி களின் வரை படங்களைத் தயாரித்துப் பராமரித்து வருவ தற்கு நில அளவை-நில ஆவணங்கள் துறை பொறுப்பு வகிக்கிறது.

3. மாவட்ட அளவில், வருவாய் கோட்ட அதிகாரிகள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிருவாக அதிகாரிகள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும் உதவி புரிகின்றனர். இந்த அதிகாரிகள் நில நிருவாகம், நிலச் சீர்திருத்தம், வருவாய் நிருவாகம் தொடர்பான பணிகளுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னர், வாலாயமான பராமரிப்பு, அவசர நிலை நிவாரணப் பணிகள் ஆகியவற்றை கவனிப்பதோடு மட்டுமல்லாமல், பல்வேறு வளர்ச்சிப் பணி களையும் மாவட்ட நிருவாகம் கவனித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாநிலத்தில், 16 மாவட்டங்களும், 54 கோட்டங்களும், 166 வட்டங்களும், 1,097 பிர்க்காக் களும், 16,543 வருவாய்க் கிராமங்களும் உள்ளன,

[1984 மார்ச் 26

4. நில அளவை மற்றும் நிலவரி ஏற்பாட்டுத் துறை, வேளாண்மைப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் தேவை யான வகையில் முதலில் நில அளவை செய்தல் அல்லது மீண்டும் நில அளவை செய்தல் பணியை மேற்கொள்கிறது. இத்துறை, மாவட்ட வரைபடங்களையும், வட்ட வரைபடங்களையும், கிராம வரைபடங்களையும் ஒவ்வொரு நில அளவை புலம் குறித்த (அவற்றின் உட்பிரிவினைகளைக் காட்டி) திட்ட வரை படங்களையும் தயாரிக்கிறது. நகர்ப் பகுதிகளில் செய்யப்படும் நில அளவைகளில் தனி நபர்களின் சொத்துக்களின் நாற்புற எல்லைகள் புலப்படும் வகையில் நகரம், வளர்ச்சி வட்டாரங்கள், வார்டுகள் ஆகியவற்றின் வரைபடங்களைத் தயாரித்தளிக் கிறது. விற்பனை வாரிசுரிமை, கொடை, பரிவர்த்தனை, நீதி மன்றத் தீர்ப்பாணை முதலியவற்றால் ஏற்படும் மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, நாளது வரையிலானதாக ஆவணங்களைப் பராமரிப்பதற்கும் இத்துறை பொறுப்பு வகிக்கிறது.

5. நில அளவை மற்றும் நிலவரி ஏற்பாட்டுத் துறை இயக்கு நருக்கு, நில அளவை தொடர்பாக, நில அளவை மற்றும் நில ஆவணங்கள் கூடுதல் இயக்குநர் ஒருவர் உதவி புரிகிறார். மூன்று வட்டார துணை இயக்குநர்களும் உள்ளனர். இவர்களின் கீழ் நில அளவை மற்றும் நில ஆவணங்களை குறித்த 16 உதவி இயக்குநர்களும் 12 தனி உதவி இயக்குநர்களும் உள்ளனர். தலைமையிட அலுவலகத்தில், துணை இயக்குநர் தலைமையில் மைய நில அளவை அலுவலகம் ஒன்றும் உள்ளது. வரைபடங்கள் வரைவதற்கு இரு உதவி இயக்குநர்களும், ''போட்டோ சிங்க்'' அச்சகத்தைக் கவனித்துக் கொள்ள பணி மேலாளர் ஒருவரும், இவருக்கு உதவி புரிகின்றனர். இந்த அலுவலகம், துறையின் வரை படங்களைத் தயாரிப்பதிலும், அச்சிடுவதிலும், வெளியிடு வதிலும், கருவிகளையும், பொருட்களையும் வாங்குவதிலும் ஈடுபட்டுள்ளது. நவீன தொழில் நுட்ப முறைகளை மேற் கொண்டு, இத்துறையின் வரைபடங்கள், நில வரைபடங்கள் ஆகியவற்றை வரையும் பணியின் தரத்தை மேலும் மேம் படுத்தும் பொருட்டு வரைபடங்கள் வரையும் நவீன மேஜைகள், வரைபடக் கருவிகள் ஆகியவை இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளன

### II. கிராம நிருவபகம்.

6. வருவாய் நிர்வாகத்திற்கு கிராமமே அடிப்படை அமைப்பாகும். பகுதி நேர கிராம அதிகாரிகள் முறை மிகவும் பழமையானது. வளர்ச்சிப் பணிகளுக்கும், சமூக நலப் பணிகளுக்கும் கிராமங்கள் முன்னோடியாக இருப்பதால் கிராம நிர்வாக முறையை தற்காலத் தேவைகளுக்கும், நிருவாகத் தேவைக்கும் ஏற்றவாறு மாற்றியமைத்து வலுப் படுத்த அரசு கருதியது. எனவே, முழு நேர கிராம நிருவாக அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்காக 1980 ஆம் ஆண்டு தமிழ் நாடு பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவி நீக்க அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/80) கொண்டு வரப்



1984 மார்ச் 26]

பட்டது. அது முறைப்படி 1981 ஆம் ஆண்டு சட்டமாக்கப் பட்டது. இச்சட்டத்தால் 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் நாளிலிருந்து பகுதி நேர கிராம அதிகாரிகளின் பதவிகள் நீக்கப்பட்டன.

7. அவசரச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட முன்னாள் கிராம அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந் தனர். உச்ச நீதிமன்றம், தமிழ்நாடு பகுதி நேர கிராம அதிகாரி கள் பதவிகளை நீக்குவதற்காக இயற்றப்பட்ட தமிழ்நாடு அரசு சட்டம் செல்லும் என்று தீர்ப்பளித்து, ரிட் மனுக்களைத் தள்ளுபடி செய்தது. முன்னாள் கிராம அதிகாரிகளின் குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி பெற்று, ஓய்வு பெறும் வயது அடையாமல் இருப்பவர்களைப் பொறுத்த வரையில் அவர்களின் உடல் நிலைத் தகுதி மற்றும் பணிக் காலத்தில் அவர்கள் அனுபவித்த தண்டனைகள் ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு தகுதியானவர்களைக் கிராம நிர்வாக அதிகாரிகளாக நியமிக்க உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ் வாறே மாவட்ட தகுதிகாண் குழுக்களும், மாநிலக் குழுவும் 5,246 முன்னாள் கிராம அதிகாரிகளை கிராம நிர்வாக அதிகாரி களாகத் தேர்ந்தெடுத்துள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரி கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், தங்களது பணிகளையும் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்ற நில அளவை, மற்றும் கிராம நிர்வாகம் ஆகியவற்றில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டும் முன்னாள் கிராம அதிகாரிகள் 30 பேர் தற்போது மாநிலக் குழுவினால் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

8. கல்வித் தகுதியின்மை மற்றும் பெற்ற தண்டனைகள் காரணமாக தேர்வு செய்யப்படாத முன்னாள் கிராம அதிகாரிகள் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். அவற்றில் சில வழக்குகள் முடிவுற்றுவிட்டன. மற்றும் சில நிலுவையில் உள்ளன.

9. மாநில குழுவினால் நிரப்பப்பட்ட பணியிடங்கள் போக மீதமுள்ள பணியிடங்களுக்கு, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக் குழு நபர்களைத் தேர்ந்தெடுத்து பட்டியலை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பிவிட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் 1984 மார்ச் திங்களில் ஆரம்பமாயிற்று.

10. பகுதி நேர கிராமப் பணியாளர்களான கிராம காவலர் கள், கிராமப் பணியாளர்கள், பாசனக் காவலர்கள் ஆகியோர், பணியில் தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தனியாக விதி முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அவை தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கிராமப் பணியாளர்கள் பணி விதிகள் ஆகும். இவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறு வதற்கான வயது 60 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## III. மாவட்ட வருவாய் நிருவாகம் குறித்த ஒரு நபர் குழு.

11. மாவட்ட வருவாய் நிருவாகத்தைச் சீரமைக்க வேண்டு மென்ற கிராம மக்களின் நெடுநாள் கனவு நனவாக, மாவட்ட வருவாய் நிருவாகத்தின் திறனை உயர்த்தி நிருவாகத்தைச் சீரமைக்கவும் பொதுமக்களின் நலன் கருதி குறைகளை விரை வில் தீர்த்து வைக்கவும் அரசு பலவகையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

12. திரு. எஸ். பி. அம்புரோஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு, 184 பரிந்துரைகளைக் கொடுத் துள்ளது. அவை பெரும்பாலும் தற்போதுள்ள நடைமுறைகளை எளிமைப்படுத்துவது, பயனற்ற பணியை நீக்கிவிடுவது, கோட் பாடுகளை வகுத்துக் கொண்டு பணிகளை விரைந்து முடிப்பது, வருவாய் அதிகாரிகளுக்கு வசதிகள் செய்து கொடுப்பது, வரு வாய்த்துறை அலுவலகங்களுக்குத் திடீரெனச் சென்று பதிவேடு களைச் சோதனையிடுவது, மாவட்ட ஆட்சியாளர்களும் மாவட்ட வருவாய் அதிகாரிகளும் நேரடியாகச் சென்று பணி களைப் பார்வையிடுவது, வட்ட அலுவலகங்களிலும், கோட்ட அலுவலகங்களிலும் சில பதவிகளை ஏற்படுத்துவது, வட்டாட்சி யர்களுக்கு ஜீப் வழங்குவது, மாவட்ட ஆட்சியர்களும் கோட் டாட்சியர்களும் சுற்றுப் பயணத்தில் அதிக காலத்தைக் கழிப் பதைக் குறைப்பது, நிலவரி முறையில் நடைமுறை மாற்றங் கள் செய்வது, நிலத்தை கையகப்படுத்தும் முறையில் நடைமுறை மாற்றங்கள் செய்வது, மாவட்ட ஆட்சியர்களுக்கும், மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கும், கோட்டாட்சியர்களுக்கும், வட் டாட்சியர்களுக்கும் நிதி சம்பந்தமாகவும், நிருவாகம் சம்பந்த மாகவும் அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பது ஆகியவை தொடர்பானவையாகும். அரசு இப்பரிந்துரைகளைக் கவன மாகப் பரிசீலித்து, 134 (நூற்று முப்பத்தி நான்கு) பரிந் துரைகள் மீது ஆணைகள் பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந் துரைகள் அந்தந்த துறைகளுடன் கலந்தாலோசித்து பரிசீலிக் கப்பட்டு வருகின்றன. இவை குறித்து நாளடைவில் ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

## IV. வருவாய்த்துறை ஆட்சி வரம்பு.

13. நிர்வாக அமைப்பில் கிராமத்திற்கு மேலாக பிர்க்கா இடம் பெறும். வருவாய் ஆய்வாளர், பிர்க்காவுக்குப் பொறுப்பு வகிக்கிறார். அவர் ஆரம்ப நிலையில் மேற்பார்வை செய்யும் அலுவலர் ஆவார். அவர் கிராம நிருவாக அதிகாரிகளின் பணி யையும், பயிர்த் தணிக்கையையும் மேற்பார்வை செய்வதோடு நிலவரி தொடர்பான வசூலையும் கவனித்து, கிராம அளவில் வருவாய்க் கணக்குகளை செவ்வனே பராமரிப்பதையும் உறுதி செய்கிறார். மக்கள் தொகை, நிலப்பரப்பு ஆகியவற்றை அடிப் படையாகக் கொண்டு ஒரே சீரான பணிப் பங்கீட்டினைக்கொண்ட நிர்வாக அமைப்புகளை ஏற்படுத்துவதற்காக பிர்க்காக்களின் எல்லைகளை திருத்தி அமைக்குமாறு மாவட்ட வருவாய் நிருவாகம் குறித்த ஒரு நபர்க் குழு—திரு. அம்புரோஸ் குழு— கருத்து தெரிவித்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் இம்மாநிலத்



தில் 774 பிர்க்காக்கள் இருந்தன. அரசு 1979-80 ஆம் ஆண்டில் கூடுதலாக 250 பிர்க்காக்களை ஏற்படுத்தவும், 1980-81 ஆம் ஆண்டில் மேலும் 73 பிர்க்காக்களை ஏற்படுத்தவும் அனுமதி யளித்தது. 1977-78 ஆம் ஆண்டில் 774 ஆக இருந்த பிர்க்காக்களின் எண்ணிக்கை 1980-81 ஆம் ஆண்டில் 1,097 ஆக உயர்ந்துள்ளது.

14. வருவாய் நிருவாக அமைப்பில் வட்ட அலுவலகம் அதி முக்கியமான இடத்தை வகிக்கிறது. இவ்வலுவலகம் நில ஒப் படை, பட்டா மாற்றுதல், பட்டா வழங்குதல், ஆக்கிரமிப்பு களை முறைப்படுத்தல், குடிமை பொருள்களை வழங்குதல், ஆகியவை தொடர்பாக தங்களுடைய குறைகளைத் தீர்க்குமாறு, குறிப்பாக கிராம மக்கள் அணுகும், முதல் நிலை வருவாய் அலு வலகமாகும். குறிப்பாக மாவட்டத்தில் எவ்வளவு துரிதமாக வட்ட அலுவலகங்களில் பணி நிறைவேற்றப்படுகிறதோ அதைப் பொறுத்தே வருவாய் நிர்வாகத்தின் பணித்திறன் அமையும். தற்போதுள்ள வட்ட அலுவலகங்களில் வேலைப் பளுவைக் குறைக் கவும், மற்றும் திறமையை மேம்படுத்தவும், துணை வட்டங் களை, வட்டங்களாக நிலை உயர்த்தும் பணி 1977-78-ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்போது இம்மாநிலத்தி லுள்ள எல்லா துணை வட்டங்களும் வட்டங்களாக தரம் உயர்த் தப்பட்டுள்ளன.

15. 1978-79 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூர் வட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, கோத்தகிரியில் ஒரு வட்டம் புதிதாக ஏற்படுத்தப்பட்டது.

16. கிராமங்கள், பிர்க்காக்கள், வட்டங்கள் ஆகியவற்றை சீரமைத்ததால், வருவாய்க் கோட்டங்களையும், சீரமைப்பது அவசியமெனக் கருதப்பட்டது. எனவே, அரசு 1978-79 ஆம் ஆண்டில் நாகர்கோயிலில் ஒன்றும், 1979-80 ஆம் ஆண்டில் அருப்புக்கோட்டையிலும், குன்னூரிலும் இரண்டும், ஆக மூன்று புதிய வருவாய்க் கோட்டங்களை ஏற்படுத்தவும் 1982-83 ஆம் ஆண்டில் தாராபுரத்தில் ஒன்றும் 1983-84 ஆம் ஆண்டில் கட லூரிலும் திருப்பூரிலும் இரண்டும் ஆக மேலும் மூன்று கோட்டங் களை ஏற்படுத்தவும் அனுமதியளித்தது. இதனால், இம்மாநிலத் திலுள்ள வருவாய்க் கோட்டங்களின் எண்ணிக்கை 48 லிருந்து 54 ஆக உயர்ந்துள்ளது.

17. நிருவாகச் சீர்திருத்தக் குழுவும் இம்மாநிலத்திலுள்ள பெரிய மாவட்டங்களைச் சீரமைக்கவும், இரண்டாகப் பிரிக்க வும், பரிந்துரைத்தது. மிகப் பெரிய மாவட்டங்களில் ஒன்றான கோயம்புத்தூர் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு, 'பெரியார்' என்னும் புதிய மாவட்டம் 1979-80இல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

18. மாவட்ட நிருவாகத்தை மேலும் செம்மையாக்கும் பொருட்டு, அரசு இம்மாநிலத்திலுள்ள சில பெரிய மாவட்டங் களைப் படிப்படியாகப் பிரிக்க முடிவு செய்துள்ளது. இதன்படி, இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தைத் தலைமையிட மாகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டமாகவும், சிவகங்கை

யைத் தலைமையிடமாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டமாகவும், விருதுநகரைத் தலைமையிடமாகக் கொண்ட காமராஜர் மாவட்டமாகவும், பிரிக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியைத் தலைமையிடமாகக் கொண்ட திருநெல்வேலி மாவட்டமாகவும், தூத்துக்குடியைத் த்லைமையிடமாகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டமாகவும் இரண்டாகப் பிரிக்கப்படும். வட ஆர்க்காடு மாவட்டம், வேலூரைத் தலைமையிடமாகக் கொண்ட வட ஆர்க்காடு மாவட்டமாகவும், திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்ட சம்புவராயர் மாவட்டமாகவும் பிரிக்கப்படும். மதுரை மாவட்டம், மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட மதுரை மாவட்டமாகவும், திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டமாகவும் பிரிக்கப்படும். தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்ட தஞ்சாவூர் மாவட்டமாகவும், திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்ட வள்ளியம்மை மாவட்டமாகவும் பிரிக்கப்படும். தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென் ஆர்க்காடு மாவட்டமாகவும், விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட வள்ளலார் மாவட்டமாகவும் பிரிக்கப்படும். திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்ட திருவள்ளுவர் மாவட்டமாகவும், திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்ட திருச்சிராப்பள்ளி மாவட்டமாகவும் பிரிக்கப்படும்.

19. புதிதாக அமைக்கப்படும் மாவட்டங்களின் பரப்பளவு அவை உள்ளடக்கும் வட்டங்கள் அவற்றில் ஏற்படுத்தப்படவேண்டிய வசதிகள் போன்றவற்றை அதற்கென அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு ஆராய்ந்து அறிந்து அரசுக்கு ஒரு திங்களுக்குள் பரிந்துரை செய்யும். பரிந்துரை செய்யப்பட்ட குறிப்புகளை அரசு தக்கபடி ஆராய்ந்து ஏற்ற வகையில் முடிவெடுத்து அந்த முடிவுகளை படிப்படியாக நிறைவேற்றும்.

20. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஸ்ரீரங்கம் வட்டத்தையும், திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன்மாதேவி வட்டத்தையும், சேலம் மாவட்டத்தில் பரமத்தி-வேலூர், கொல்லிமலை வட்டங்களையும் ஏற்படுத்துவது பற்றிய செயற் குறிப்புகளை அரசு பரிசீலித்து வருகிறது.

## V. இயற்கைச் சீற்றங்கள்.

### (அ) வறட்சித் துயர்தணிப்பு.

21. தமிழ்நாட்டில் 1982 ஆம் ஆண்டில் தென்மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவ மழையும் பொய்த்துவிட்டன. இதன் காரணமாக மாநிலத்தில் கடுமையான வறட்சி நிலவியது.

22. வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கும் பொருட்டு துயர் தணிப்புப் பணிகளை பெருமளவில் செயல்படுத்த ரூ. 217.73 கோடி அளவில் திட்டங்கள் தயாரித்து நிதியுதவி கோரி இம்மாநில அரசு, மத்திய அரசுக்கு அறிக்கைகள் அனுப்பியது.





23. 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மத்தியக் குழு தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டது. இக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் பல்வேறு துயர் தணிப்புப் பணிகளுக்குச் செலவிட ரூ. 68.36 கோடியை உச்சவரம்பாக மத்திய அரசு அனுமதித்தது.

குடிநீர்ப் பணிகளுக்கும், வேலை வாய்ப்புப் பணிகளுக்கும் மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட தொகை அப்பணிகளின் முன்னேற்றம் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு :

1. மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு.

| மாவட்டத்தின் பெயர். | | குடிநீர்ப் பணிகளுக்கு (தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் அமைத்த துளைக் கிணறுகள் நீங்கலாக.) | வேலை வாய்ப்பு பணிகளுக்கு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1 | செங்கற்பட்டு .. | 84.086 | 265.00 | 349.086 |
| 2 | வடஆர்க்காடு .. | 165.985 | 407.00 | 572.985 |
| 3 | தென் ஆர்க்காடு .. | 53.032 | 248.40 | 301.432 |
| 4 | தருமபுரி .. | 80.600 | 108.00 | 188.600 |
| 5 | பெரியார் .. | 42.548 | 63.85 | 106.398 |
| 6 | கோயம்புத்தூர் .. | 43.774 | 103.00 | 146.774 |
| 7 | நீலகிரி .. | 22.710 | .. | 22.710 |
| 8 | சேலம் .. | 100.760 | 148.04 | 248.800 |
| 9 | மதுரை .. | 69.942 | 154.75 | 224.692 |
| 10 | திருச்சிராப்பள்ளி .. | 71.340 | 275.76 | 347.100 |
| 11 | தஞ்சாவூர் .. | 32.720 | 68.17 | 100.890 |
| 12 | புதுக்கோட்டை .. | 45.360 | 258.33 | 303.690 |
| 13 | இராமநாதபுரம் .. | 80.660 | 330.00 | 410.660 |
| 14 | திருநெல்வேலி .. | 46.318 | 94.00 | 140.318 |
| 15 | கன்னியாகுமரி .. | 41.962 | 15.70 | 57.662 |
| | மொத்தம் .. | 981.797 | 2,540.00 | 3,521.797 |

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| பொதுச்சுகாதாரம் .. .. .. | 230.00 |
| காடு வளர்ப்பு .. .. .. .. | 150.00 |
| வேளாண்மை இடுபொருட்கள் .. | 464.00 |
| தனியார் பாசனக் கிணறுகளை ஆழப் படுத்த நிலவள வங்கிகள் மூலம் கடனுதவி | 500.00 |
| குறைந்த விலையில் வழங்குவதற்காக வைக்கோல் கொள்முதல் செய்தல். | 165.00 |
| கால்நடை வளர்ப்பு .. .. .. | 135.00 |



2. முடிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் வேலை வாய்ப்பு பணிகளைக் குறிக்கும் விவர அடவணை.

| மாவட்டத்தின் பெயர். | தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தால் தோண்டப்பட்ட துளைக் கிணறுகளின் எண்ணிக்கை. | ஆழப்படுத்தப்பட்ட குடிநீர் கிணறுகளின் எண்ணிக்கை. | முடிக்கப்பட்ட ஊரணிகள் மற்றும் குட்டைகள் பணிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| செங்கற்பட்டு .. .. | 1,962 | 3,567 | 2,013 |
| வட ஆற்காடு .. .. | 2,026 | 4,348 | 1,620 |
| தென் ஆர்க்காடு .. | 2,694 | 1,297 | 2,139 |
| தருமபுரி .. .. | 1,357 | 2,441 | 242 |
| பெரியார் .. .. | 1,311 | 1,011 | 41 |
| கோயம்புத்தூர் .. | 1,017 | 265 | 140 |
| நீலகிரி .. .. .. | .. | .. | .. |
| சேலம் .. .. .. | 2,174 | 1,679 | 256 |
| மதுரை .. .. | 3,260 | 794 | 260 |
| திருச்சிராப்பள்ளி .. | 1,506 | 2,148 | 1,109 |
| தஞ்சாவூர் .. .. | 586 | 763 | 555 |
| புதுக்கோட்டை .. | 588 | 529 | 1,474 |
| இராமநாதபுரம் .. | 1,045 | 436 | 1,499 |
| திருநெல்வேலி .. | 1,810 | 509 | 119 |
| கன்னியாகுமரி .. .. | 390 | 473 | 38 |
| மொத்தம் .. | 21,726 | 20,260 | 11,505 |

2. முடிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் வேலை வாய்ப்பு பணிகளைக் குறிக்கும் விவர அட்டவணை — தொடர்ச்சி.

| மாவட்டத்தின் பெயர். | | அமைக்கப்பட்ட இறந்த இணைறு கள் எண்ணிக்கை. (5) | முடிக்கப்பட்ட பாசனப் பணி களின் எண்ணிக்கை. (6) | முடிக்கப்பட்ட சாலைப் பணி களின் எண்ணிக்கை. (7) | அமைக்கப்பட்ட கசிவு நீர்க் குட்டைகளின் எண்ணிக்கை. (8) |
|---|---|---|---|---|---|
| செங்கற்பட்டு | .. | 9 | 1,703 | 289 | 25 |
| வட ஆர்க்காடு | .. | 114 | 2,625 | 338 | 42 |
| தென் ஆர்க்காடு | .. | 9 | 1,304 | 113 | 39 |
| தருமபுரி .. | .. | 56 | 405 | 60 | 50 |
| பெரியார் .. | .. | 10 | 292 | 25 | 20 |
| கோயம்புத்தூர் | .. | 2 | 234 | 19 | 28 |
| நீலகிரி .. | .. | 23 | .. | .. | .. |
| சேலம் .. | .. | 36 | 557 | 48 | 63 |
| மதுரை .. | .. | 16 | 1,418 | 90 | 37 |
| திருச்சிராப்பள்ளி | .. | 19 | 1,524 | 218 | 32 |
| தஞ்சாவூர் .. | .. | 12 | 531 | 19 | 4 |
| புதுக்கோட்டை | .. | 1 | 1,945 | 167 | 5 |
| இராமநாதபுரம் | .. | 24 | 1,672 | 152 | 16 |
| திருநெல்வேலி | .. | .. | 464 | 15 | 15 |
| கன்னியாகுமரி | .. | 8 | 185 | 12 | .. |
| மொத்தம் | .. | 339 | 14,859 | 1,565 | 376 |



24. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மருத்துவ மனைகளுக்கு மருந்துகளும், நோய் தடுப்பு ஊசிகளும் வழங்க அரசு ரூ. 230 இலட்சம் அனுமதித்துள்ளது, வறட்சி காலத்தில் 29,74,411 காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. 6,42,865 டைபாய்டு தடுப்பு ஊசிகள் போடப்பட்டன; 3,03,155 நீர் நிலைகளில் குளோரின் மருந்து தெளிக்கப்பட்டது.

25. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் சிறு உழவர் களுக்கும் ஓரளவு நிலம் வைத்துள்ள உழவர்களுக்கும் குறைந்த விலையில் விதைகள், பூச்சிக் கொல்லி மருந்து, இரசாயன உரங்கள் ஆகியவற்றை வழங்க அரசு ரூ. 464 இலட்சம் அனுமதித்துள்ளது.

26. வறட்சி நிலவியதால் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு பாதிப்பு ஏற்பட்டு வாங்கும் சக்தி திடீரெனக் குறைந்துவிட்டது. அதனால் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் கைத்தறி துணிகள் எதிர்பாராத அளவில் தேங்கிக் கிடந்தன. ஆதலால் மாநிலம் முழுவதிலும் கிராமப் பகுதிகளில் 14—4—1983 முதல் நிலமற்ற விவசாயத் தொழிலாளரின் குடும்பத்திற்கு ஒரு ஜனதா வேட்டியும், ஒரு ஜனதா சேலையும் இலவசமாக விநியோகிக்க அரசு ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியது. இதுவரை 24,62,559 ஜனதா வேட்டிகளும், 27,94,389 ஜனதா சேலைகளும் இலவசமாக விநியோகிக்கப்பட்டுள்ளன. நகராட்சிகள், நகரியங்கள், மாநகராட்சிகளின் எல்லையில் வசிக்கும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயன்கிட்டும் வகையில் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

27. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன—(1) மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் உள்ளூர் குழு ஒன்றும்,(2) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட அளவிலான குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

28. உள்ளூர் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட பகுதியின் அரசியல் கட்சிகள் உட்பட பொதுமக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர்.

29. மாவட்ட அளவிலான குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். இக்குழுக்களின் கூட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டப்படி நடந்து வந்தன.

30. வறட்சி துயர் தணிப்புப் பணிகள் செயற்படுத்தப்படுவதை ஆராயவும், பணிகள் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், பணிகளை நிறைவேற்றும் அமைப்புகளுக்கு உத்திரவுகள் பிறப்பிக்கவும் வறட்சி துயர் தனிப்புத்திட்டம் தொடர்பான கொள்கை பற்றி அரசுக்கு ஆலோசனை நல்கவும், அரசு தலைமைச் செயலாளரை தலைவராகவும் அரசின் இரண்டாம் செயலாளர் மற்றும் ஏனையச் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்நிலைக் குழு ஒன்றையும் அரசு அமைந்திருந்தது. இக்குழு பல தடவைகள் கூடி வறட்சி நிலைமையை ஆராய்ந்தது.

31. மத்திய அரசு வேலை வாய்ப்புப் பணிகளைப் பொறுத்த வரை 10 மாவட்டங்களுக்கு மட்டுமே மனித வேலை நாட்களை நிர்ணயித்திருந்தது. தஞ்சாவூர், செங்கற்பட்டு மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு மனித வேலை நாட்கள் அப்போது இந்திய அரசால் அனுமதிக்கப்படவில்லை. மாநில அரசு இம் மாவட்டங்களிலும் வேலை வாய்ப்புப் பணிகளை மேற்கொண்டது. இம்மாவட்டங்களிலும் மனித வேலை நாட்களை பகிர்ந்தளித்து வேலைவாய்ப்புப் பணிகளை மேற்கொண்டதை ஏற்பு செய்யுமாறும், குடிநீர் பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டது. மத்திய அரசு தற்போது இம்மூன்று மாவட்டங்களுக்கும் மனித வேலை வாய்ப்பு நாட்களை அனுமதித்துள்ளது.

32. 1983 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் மத்திய அரசு மற்றொரு குழுவை அனுப்பி வைத்தது. இக்குழுவின் உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைப் பார்வையிட்டு முடிக்கப்பட்ட வறட்சி நிவாரணப் பணிகளை ஆய்வு செய்தனர். இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்து மத்தியக் குழு பாராட்டியது. இரண்டாவது மத்தியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் குடிநீர் வழங்கும் திட்டங்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு ரூ. 9.18 கோடி கூடுதல் உச்சவரம்பை நிர்ணயித்தது.

33. வறட்சி நிவாரண உச்சவரம்புத் தொகை ரூ. 77.54 கோடி என்று மத்திய அரசு நிர்ணயித்தது. இதுவரை ரூ. 57.85 கோடியை விடுவித்துள்ளது. நமது மாநிலத்தின் மார்ஜீன் தொகையான ( Margin moncy ) ரூ. 17.18 கோடியை கணக்கில் கொண்டு மத்திய அரசு தற்போது விடுவித்துள்ள ரூ. 57.85 கோடியில் ரூ. 40.38 கோடி கடனாகவும் ரூ. 17.47 கோடி மானியமாகவும் அமைந்துள்ளது.



34. 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டில் வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தின் கீழ் இனம் வாரியாக செலவிடப்பட்ட ரூ. 114.28 கோடிக்கான விவரம் பின்வருமாறு :—

அட்டவணை.

| பணிகள்/திட்டங்கள் குறித்த விவரம். (1) | 31—12—1983 அன்றுள்ளபடி செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| I. குடிநீர் வழங்கல்— | |
| 1. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மூலம் புதிய துளைக் கிணறுகள் அமைத்தல். | 4,579.00 |
| 2. பொதுக் கிணறுகளை ஆழப்படுத்துதல். | 373.41 |
| 3. உள்ளாட்சி மன்றங்களின் மேல்நிலைத் தொட்டிகளில் நீர் வழங்கும் பணிகளுக்கு மின் கம்பித் தொடர்புகள் அமைக்க. | 250.00 |
| 4. ஏரிகளின் அருகில் திறந்த வெளிக் கிணறுகள் அமைக்க. | 312.64 |
| 5. குடிநீர் வழங்கலை அதிகரிப்பதற்காக நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு நிதியுதவி. | 155.42 |
| 6. சென்னை மாநகரில் குடிநீர் வழங்கல். | 1,036.00 |
| 7. மதுரை மாநகரில் குடிநீர் வழங்கல் .. | 30.00 |
| 8. லாரிகள், டிராக்டர்கள் மூலம் குடிநீர் கொண்டு செல்லுதல். | 150.77 |
| 9. சிறிய கிணறுகள் மற்றும் உறைக் கிணறுகள் அமைத்தல். | 10.00 |
| 10. திறந்த வெளிக் கிணறுகளில் டீசல் என்ஜின்கள் அமைத்தல். | 1.64 |
| II. வேலை வாய்ப்பை நோக்கமாகக் கொண்ட திட்டங்கள்— | |
| 1. நீர்பாசன வேலைகள் .. | 1,731.35 |
| 2. புதிய மண்சாலைகள் அமைத்தல் | 272.36 |
| 3. பொதுமக்கள், கால்நடைகள் பயன்படுத்தும் ஊரணி, குடிநீர்க் குட்டைகள் ஆகியவற்றை பழுது பார்த்தல் | 495.16 |
| 4. வனப் பாதுகாப்பு .. .. .. | 154.31 |
| 5. கசிவு நீர்க் குட்டைகள் அமைக்க .. | 274.89 |

III. இதர பணிகள்—

| | | |
|---|---|---|
| 1. | பொதுச் சுகாதாரம் .. | 229.39 |
| 2. | வைக்கோல் வாங்கி சலுகை விலையில் விநியோகம் செய்ய | 36.90 |
| 3. | கால்நடைகளுக்கு வைத்திய உதவி | 134.97 |
| 4. | விவசாய இடுபொருட்கள் .. .. | 487.84 |
| 5. | தஞ்சை மாவட்டத்தில் 5,000 வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைத்தல் .. .. .. | 300.00 |
| 6. | தனியார் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த உழவர்களுக்கு நிலவள வங்கிகள் மூலம் கடனுதவி. | 412.00 |
| | மொத்தம் .. | 11,428.05 |

35. வறட்சித் துயர் தணிப்பு ஏற்பாடுகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் துயரங்களைப் போக்குவதோடு குடிநீர் ஆதாரங்கள்: சாலைகள் மேம்பாடு: பாசன நீர் நிலைகள், கசிவு நீர் குட்டைகள் முதலியன போன்ற நிலையான சொத்துக்கள் மாநிலத்திற்கு ஏற்படவும் வகை செய்கிறது.

(ஆ) புயல் மற்றும் வெள்ளம்.

(i) நிவாரணம் மற்றும், மறுவாழ்வு :—

36. வறட்சியைப் போலல்லாது, புயலும் வெள்ளமும், மக்களுக்குக் குறிப்பாக தாழ்வான பகுதிகளிலும், கடற்கரை அருகிலுள்ள கிராமப் பகுதிகளிலும், ஆறுகள், பெரிய கால்வாய்கள் ஆகியவற்றின் கரைகளின் அருகேயும் வசிக்கும் நலித்த பிரிவினைச் சேர்ந்தவர்களுக்கு சொல்லவொண்ணாத் துயரத்தை எற்படுத்துகிறது. தமிழ்நாடு அரசு இதனை எப்போதும் விழிப்புடன் கவனித்து வருகிறது. மாநில அரசு இத்தகைய அழிவுகளைத் தடுப்பதற்கு விரிவான திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டம், அழிவு ஏற்பட்ட பின்னர் மறுவாழ்வு அளிப்பதைப் போன்று அழிவு ஏற்படுவதற்கு முன்னர் செய்ய வேண்டியதையும் வலியுறுத்துகிறது.

37. 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்களில் மாநில அளவில் கூட்டம் ஒன்று நடைபெற்றது. எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பற்றி விவாதிப்பதற்காக இக்கூட்டத்தில் கடற்கரையோர மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர்களும், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களும், காவல் துறை, இராணுவப்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர். 1983 அக்டோப



இறுதிக்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் எதிர்பாரா அழிவைத் தடுக்கும் திட்டம் தற்போதைய நிலைக்கேற்ப தயாரிக்கப்பட்டது. வெள்ளம் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ள எல்லா மாவட்டங்களிலும், அது குறித்து என்னென்ன தடுப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது என்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இன்றியமையாப் பொருள்களைச் சேகரித்து வைக்குமாறு எல்லா மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு எடுத்த நடவடிக்கையினால் நிருவாகப் பணியாளர்கள் விழிப்புடன் இருக்க முடிந்தது. புயல், வெள்ளம் ஆகியவை ஏற்பட்டபோது நிலைமையைச் சமாளித்துப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய காலத்தில் துயர் தணிப்புப் பணியை அளிக்க முடிந்தது.

(ii) புயல் பாதுகாப்பிடங்கள் :—

38. புயல், வெள்ளம் முதலியவற்றால் பாதிக்கப்படும் அல்லாது அச்சுறுத்தப்படும் கடற்கரைப்பகுதிகளிலுள்ள மக்களுக்கு பாதுகாப்புக்கு வகைசெய்யும் பொருட்டு, அரசு இதுவரை 110 புயல் பாதுகாப்பிடங்களைக் கட்டுவதற்கு அனுமதியளித்துள்ளது. இவற்றில் 68 புயல் பாதுகாப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

39. புயல் பாதுகாப்பிடங்களில் பெரும்பான்மையானவை மாவட்டங்களின் கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. இங்கு அரசுக்கு அல்லது உள்ளாட்சி மன்றங்களுக்கு சொந்தமான பள்ளிக் கட்டிடங்கள் போன்ற நிலையான கட்டிடங்கள் இல்லை. புயல் பாதுகாப்பிடங்களில் முக்கியமான சுகாதார முதலுதவி வசதிகள், பொது சமையலறை, மளிகை சாமான்களையும், உணவு தானியங்களையும் சேமித்து வைப்பதற்கான வசதிகள், குளியலறை, கழிப்பறை வசதிகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளன. இவை வெள்ளத்தின் போதும் பயன்படுகின்றன. மழை இல்லாத காலங்களில், இப்பாதுகாப்பிடங்கள், அரசு அல்லது மற்ற தொண்டு முகவரமைப்புகள், மருந்தகங்கள், தையல் வகுப்புகள் முதலியவற்றை நடத்துவதற்கான சமூகப் பணி சமுதாயப் பணி நிலையங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு மாவட்ட ஆட்சியர்கள் வரையறுக்கும் குறைந்த அளவு வாடகையைச் செலுத்துவதன்பேரில் அனுமதி வழங்கப்படுகிறது.

(iii) வெள்ளம் :

40. 1981, 1982, 1983 ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்தது. 1983 டிசம்பரில் தமிழ்நாடு ஸ்ரீலங்கா கடற்கரைக்கு அப்பால் வங்கக் கடலில் தீவிரக் காற்றழுத்த மண்டலமொன்று உருவாகி, தஞ்சாவூர் மாவட்டம் அதிராமப்பட்டினத்திற்கருகே கரையைக் கடந்தது

[1984 மார்ச் 26

விளைவாக இம்மாநிலத்தில் பல மாவட்டங்களில் பரவலாக
கனத்த மழை பெய்தது. ஏறத்தாழ ஒருவார காலம் தீவிரம்
தணியாது பெய்த இப்பெருமழை குறிப்பாகக் கடற்கரை மாவட்
டங்களில் பெரும் சேதத்தை விளைவித்தது. சில பகுதிகளில் ஒரு
பருவத்தில் பெய்யக்கூடிய மொத்த மழை 2 அல்லது 3 நாட்
களில் பெய்தது.

41. 1—10—1983 முதல் 14—12—1983 வரையும்
14—12—1983 முதல் 28—12—1983 வரையும் பெய்த மழை
பற்றிய புள்ளி விவரம் வருமாறு :—

| மாவட்டங்கள். | 1-10-1983 முதல் 14-12-1983 வரை. | | 14-12-1983 முதல் 28-12-1983 வரை. | |
|---|---|---|---|---|
| | இயல்பான மழையளவு. | பெய்த மழையளவு. | இயல்பான மழையளவு. | பெய்த மழையளவு. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (மி. மீட்டரில்). | | | |
| சென்னை .. .. | 1,386 | 1,147 | 35 | 342 |
| செங்கற்பட்டு .. | 2,060 | 1,259 | 30.7 | 162.5 |
| வட ஆர்க்காடு .. | 1,160 | 1,157 | 11 | 157.5 |
| தென் ஆர்க்காடு .. | 760 | 336 | 22.3 | 332.3 |
| தஞ்சாவூர் .. .. | 4,669 | 2,682 | 65.1 | 638.1 |
| திருச்சிராப்பள்ளி .. | 1,849 | 1,404 | 18.6 | 321.1 |
| புதுக்கோட்டை .. | 746 | 357 | 37.0 | 262.5 |
| இராமநாதபுரம் .. | 1,938 | 1,779 | 24.6 | 218 |
| மதுரை .. .. | 2,063 | 1,853 | 25 | 144.4 |
| திருநெல்வேலி .. | 1,339 | 1,135 | 41.3 | 64.6 |
| கன்னியாகுமரி .. | 325 | 128 | 34 | 27 |
| கோயம்புத்தூர் .. | 895 | 799 | 6.6 | 81.5 |
| நீலகிரி .. .. | 1,341 | 905 | 22.3 | 119.3 |
| பெரியார் .. .. | 302 | 260 | 9 | 140 |
| சேலம் .. .. | 558 | 371 | 9.5 | 152 |
| தருமபுரி .. .. | 561 | 211 | 7 | 106 |



1984 மார்ச் 26]

42. மேற்சொன்ன புள்ளி விவரங்கள், மிகவும் பாதிக்கப்பட்ட தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலும், 14—12—1983 ஆம் நாளிலிருந்து 28—12—1983 ஆம் நாள் வரையிலான கால அளவில் இராமநாதபுரம் மாவட்டத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளிலும் பெய்த மழையின் அளவை எடுத்துக் காட்டுகின்றன. பெருவாரியான நிலப் பரப்பளவில் உள்ள பயிர்கள் நீரில் மூழ்கின. பாலங்கள், சாலைகள், சிறு பாலங்கள் ஆகியவற்றிற்குப் பெருவாரியாகச் சேதமேற்பட்டது. ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் முதலியவற்றில் உடைப்பேற்பட்டது. கால்நடைச் சேதங்கள் தவிர பலர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கான குடிசைகள் முழுமையாகவோ அல்லது ஓரளவோ சேதமடைந்தன. தனியார் மற்றும் பொது சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| பாதிக்கப்பட்ட கிராமங்களின் எண்ணிக்கை .. | 5,893 |
| பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை .. | 43.30 இலட்சம் |
| உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை .. .. | 110 |
| இழந்த கால்நடைகளின் எண்ணிக்கை .. .. | 16,300 |
| பாதிக்கப்பட்ட நிலங்களின் மொத்த பரப்பளவு. | 2.2 லட்சம் எக்டேர் |
| சேதமடைந்த பயிர்களின் மதிப்பு .. .. | ரூ. 102.54 கோடி |
| சேதமைடந்த குடிசைகளின் எண்ணிக்கை .. | 7.10 இலட்சம் |
| குடிசைகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு .. | ரூ. 25.80 கோடி |
| சாலைகள், ஏரிகள், பாசனவாயில்கள் முதலியவை போன்ற பொதுச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு .. .. .. .. | ரூ. 87.54 கோடி |

43. துயர்தணிப்பு நடவடிக்கைகள் போர்க்கால வேகத்தில் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தஞ்சாவூரில் தங்கி, அம்மாவட்டத்தில் துயர் தணிப்புப் பணிகளை மேற்பார்வையிட்டார். நிலச் சீர்திருத்த ஆணையர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துயர் தணிப்புப் பணிகளை மேற்பார்வையிட்டார். தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் நீரினால் சூழப்பட்ட மக்களுக்கு ரொட்டியும், உணவுப் பொட்டலங்களும் அளிப்பதற்காக விமானப்படை, கப்பற்படை ஆகியவற்றைச் சேர்ந்த ஹெலிகாப்டர்கள் பயன்படுத்தப்பட்டன. இராணுவப் பொறியாளர்கள், நீரால் சூழப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் முக்கியமான

சாலை இணைப்புகளை ஏற்படுத்தி முக்கியமான பொருள்களைக் கொண்டு செல்ல இயலும் வகையில் மயிலாடுதுறை—திருத்துறைப்பூண்டி — முத்துப்பேட்டை — பட்டுக்கோட்டை சாலையில் 3 அவசரகால பாலங்களை (Bailey Bridges) உருவாக்கினர்.

44. தமிழ் நாடு முதலமைச்சர் ஹெலிகாப்டரில் சென்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். மத்திய பாதுகாப்பு அமைச்சரும் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஹெலிகாப்டரில் சென்று பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்கள் அளிப்பதில் மாநில அரசு உரிய நேரத்தில் எடுத்த நடவடிக்கைகளைப் பாராட்டினார். வருவாய்த்துறை அமைச்சரும், மற்ற அமைச்சர்களும், வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சென்று பார்வையிட்டு, தேவையான மாவட்டங்களிலெல்லாம் துயர் தணிப்புப் பணிகளுக்கு வழிகாட்டினர்.

45. முழுவதும் சேதமடைந்த குடிசை ஒவ்வொன்றிற்கும் ரொக்கமாக ரூ. 200-ம், பகுதி சேதமடைந்த குடிசை ஒவ்வொன்றிற்கும் ரூ. 50-ம், பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், புடவைகள், வேட்டிகள் முதலியவையும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது. உயிரிழந்தவரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் முதலமைச்சரின் பொது துயர் தணிப்பு நிதியிலிருந்து ரூ. 1,000 வழங்கப்பட்டது. போதுமான மருந்துகளுடனும் உயிர்காக்கும் மருந்துகளுடனும் இயல் மருத்துவக் குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் 28,42,813 பேர்களுக்கு தடுப்பூசி போட்டனர். 3,04,259 நீர்நிலைகளில் குளோரின் கலக்கப்பட்டது.

46. உடனடி நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளுக்காக இதுவரை மொத்தம் 37.54 கோடி ரூபாயைக் கீழ்க்கண்டவாறு செலவிட மாநில அரசு ஒப்புதலளித்துள்ளது :—

| | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| கருணை மானியம் .. .. .. .. | 10.21 |
| வேளாண்மை— | |
| விவசாயிகளுக்கு நிவாரணம் .. .. .. | 0.53 |
| மருத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரம்— | |
| மருத்துவ உதவி மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் .. .. .. | 1.00 |



| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| சீரமைப்புப் பணிகள்— | |
| நீர்ப்பாசனம் .. .. | 8.00 |
| சாலைகள் மற்றும் மீனவர் குடியிருப்புகளுக்காகப் போடப்பட்ட சாலைகள் .. | 12.50 |
| சென்னை மாநகராட்சி (சாலைகள்) .. .. | 2.00 |
| பொதுப்பணித்துறைக் கட்டிடங்கள் (பள்ளிக் கட்டிடங்கள் உட்பட). | 1.00 |
| நகராட்சி (சாலைகள்) .. .. .. .. | 2.00 |
| குடிநீர் வழங்கலைச் சீரமைத்தல் .. .. .. | 0.30 |
| மொத்தம் .. | 37.54 |

47. உடனடி இடருதவியாக, இந்தியப் பிரதம மந்திரி 5 கோடி ரூபாயை வழங்கினார்கள். இதனோடு, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக இந்திய அரசு 10 கோடி ரூபாய் அனுமதி வழங்கியுள்ளது.

48. வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களைத் தோராயமாக மதிப்பீடு செய்த பின்னர் தமிழகத்தில் வெள்ள நிலை பற்றிய முதல் அறிக்கையொன்று 7-1-1984 அன்று மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டது.

49. மத்திய நிபுணர் குழுவொன்று தமிழகத்துக்கு வருகை தந்து 29-1-1984 முதல் 2-2-1984 வரை தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதத்தைப் பற்றி மதிப்பிட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகவும், திறம்படவும், மாவட்ட நிருவாகம் அளித்த துயர் தணிப்புப் பணிகள் பற்றி இக்குழு பாராட்டியது. சாலைகள், கால்வாய்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட உடைப்புகளைப் பொறுத்தமட்டில் போர்க்கால வேகத்தில் மேற்கொள்ளப்பட்ட பழுது பார்ப்புப் பணிகளையும் சாலைப் போக்குவரத்து சீரமைக்கப்பட்டதையும் பார்வையிட்டு திருப்தியடைந்தது.

50. தமிழகத்தில் வெள்ளத்தால், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்கள், மாநில அரசினால் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள், மேலும் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் குறித்த விவரங்களுடனும், துயர்தணிப்புப் பணிகளுக்காக ரூ. 128 கோடி மத்திய அரசு உதவி கோரியும், இறுதி அறிக்கையொன்று 3-2-1984 அன்று மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டது.

51. இம்மாநிலம் 1983 டிசம்பரில் பெய்த பெரு மழையினாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட நிலைமையைச் சமாளித்து, மீண்டும் சாதாரண நிலையை அடைந்தபோதும், வெள்ளத்திலிருந்தும் மழையிலிருந்தும் காப்பாற்றப்பட்ட சம்பா, தாளடிப் பயிர்கள் மாவட்டங்களில் அறுவடைக்குத் தயாராக இருந்த போது, எதிர்பாராவிதமாக 1984 பிப்ரவரியில் தமிழ்நாட்டில் பல பகுதிகளிலும், சென்னை மாநகரிலும் பெருமழை பெய்தது.

52. மேற்சொன்ன மழையினால் பயிர்கள் நீரில் மூழ்கின. குறிப்பிட்ட சில பகுதிகளில் வேர்க்கடலை, பருப்பு வகைகள் முதலிய பயிர் வகைகளும் பாதிக்கப்பட்டன. குடிசைகளுக்குச் சேதமேற்பட்டன. மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டு, உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. சாலைகளும், பாசனக் கால்வாய்களும் பாதிக்கப்பட்டன. இம்மழையால் இறந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆகும்.

53. தமிழ்நாடு முதலமைச்சர், சென்னை மாநகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்வையிட்டு, துயர் தணிப்புப் பணிகளை விரைவுபடுத்தினார். சென்னை மாநகரிலுள்ள ஒவ்வொரு கோட்டத்தையும் மற்ற அமைச்சர்கள் சென்று பார்வையிட்டு, துயர் தணிப்புப் பணிகளை மேற்பார்வையிட்டனர்.

54. மேற்சொன்ன மழையால், மாவட்டங்களிலும், சென்னை மாநகரிலும் குடிசைகள், சாலைகள், பாசனக் கால்வாய்கள் முதலியவற்றிற்கு ஏற்பட்ட சேதம் குறித்து மதிப்பிடப்பட்டு வருகிறது.

55. மார்ச் மாதம் முதல் வாரத்தில் பெய்த மழையாலும், வெள்ளத்தாலும் இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான கிராமங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று உணவு அளிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட நிவாரணங்களான குடிசை மானியம், 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு புடவை, ஒரு வேட்டி ஆகியவை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டன. மிகப் பெரிய அளவில் நிலங்கள் பாதிக்கப்பட்டன. பொதுச் சொத்துக்களான சாலைகள், நீர்ப்பாசனங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டன.

56. மார்ச் திங்கள் 8-ந் தேதியிலிருந்து 10-ந் தேதி வரை ஹெலிகாப்டர் மூலமாகவும், ஊர்திகள் மூலமாகவும் முதல் அமைச்சர் அவர்கள் நேரிடையாக இராமநாதபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, உடனடியாக எடுக்க வேண்டிய வெள்ள நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்தினார்.





57. பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் அனைத்திலும் உடனுக்குடன் துயர் தணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விளைந்து நின்ற பயிர்கள், ஏனைய பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் ஆகியவற்றிற்கும் இம் மழையினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. உரிய துயர் தணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(இ) தீ விபத்து.—

58. தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கீழ்க்கண்ட முறையில் ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது:—

(1) குடிசையில் அதன் உரிமையாளரே வசித்து வந்து, அக்குடிசை தீ விபத்தில் எரிந்து போய்விட்டால், அவ்வாறு முழுதும் சேதமடைந்த குடிசைக்கு வழங்கப்படும் ரொக்க மானியத் தொகையான ரூ. 200 அல்லது பகுதி சேதமடைந்த குடிசைக்கு வழங்கப்படும் தொகையான ரூ. 50 குடிசையின் உரிமையாளருக்கே வழங்கப்படும்.

(2) அதே குடிசையில் அதன் உரிமையாளரும், வாடகைக்கு ஒருவரோ அல்லது பலரோ இருப்பின், அந்தக் குடிசை தீயில் எரிந்து போய்விட்டால், அதற்கு ரொக்க மானியமாக வழங்கப்படும் ரூ. 200 அல்லது ரூ. 50 குடிசையின் உரிமையாளருக்கும், வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(3) அக்குடிசையில் வாடகைக்குக் குடியிருப்போர், ஒருவரோ அல்லது பலரோ இருப்பார்களேயானால், அக் குடிசை தீயில் எரிந்து போய்விட்டால், அதற்கு வழங்கப்படும் ரூ. 200 அல்லது ரூ. 50 ரொக்க மானியம், அங்கு வாடகைக்குக் குடியிருப்பவர்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

(4) தீயிலோ, வெள்ளத்திலோ, புயலிலோ ஒரு குடிசை சேதமடைந்துவிட்டால், வழங்கப்படும் ரொக்க மானியத் தொகை ரூ. 200 அல்லது ரூ. 50 ஒரு குடிசைக்கு என்ற கணக்கில் வழங்கப்படும். அக்குடிசையில் குடியிருந்தவர்களுக்கு மேற்குறிப்பிட்டத் தொகை பிரித்துக் கொடுக்கப்படும்.

(5) மேற்குறிப்பிட்ட சலுகைகள், புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(6) அகவிலைப்படி மற்றும் இதர ஈட்டுப்படிகள் நீங்கலாக, மாத வருமானம் ரூ. 200-க்கு மிகைப்படாமல் பெறுவோர், மேற்படி ரொக்க மானியம் பெறத் தகுதியுடையவராகின்றனர்.

(7) மேற் குறிப்பிட்டவாறு ரொக்க மானியம் கொடுப்பதுடன், வெள்ளத்தாலும், புயலாலும், பாதிக்கப்படுபவர்களுக்கு இப்போது அளிக்கப்படுகிற நிவாரண உதவியை, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அரசு அளித்துள்ளது. அதன்படி, தீ விபத்தில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, 1 லிட்டர் மண்ணெண்ணெயும் (72 மணி நேரத்திற்கும் மேலாக மின்சார சக்தி தடங்கல் ஏற்படக் கூடுமாயின்) ஒரு, வேட்டி அல்லது லுங்கியும், ஒரு புடவையும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

59. ஒரு குடும்பத்தில் வருமானம் ஈட்டி குடும்பத்தைக் காப்பாற்றுபவர், தீ விபத்து, வெள்ளம், புயலால் உயிரிழந்து, அதனால் அவருடைய குடும்பம் வறுமைக்குள்ளானால், உயிரிழந்தவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, முதலமைச்சர் பொது துயர் தணிப்பு நிதியிலிருந்து ரூ, 1,000 வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது.

VI. நிலமற்ற ஏழை மக்களுக்கு நிலம் ஒப்படை செய்தல்.

60. நேரடியாக பயிர்த் தொழிலில் ஈடுபடக் கூடிய நிலமற்ற ஏழை மக்களுக்கு நீண்ட நாள் தரிசாகக் கிடந்த நிலங்கள் இக்கொள்கையின் கீழ் இலவசமாக வழங்கப்படும். 5 பேர் அல்லது அவர்களுக்குக் குறைவாக உள்ள ஒரு குடும்பத் தலைவருக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக வருமானமிருப்பின் அவர் '' ஏழை '' எனக் கருதப்படுகிறார். அவ்வாறே, ஒரு குடும்பத்தில் 5 பேருக்கு அதிகமாக இருப்பின் அவரது மாத வருமானம் ரூ. 250, அல்லது அதற்கு குறைவாக இருந்தால் '' ஏழை '' என்று கருதப்படுகிறார்.

61. பயிரிடத்தக்க நிலங்கள் தகுதியுள்ளவர்களுக்கு பின் வரும் முன்னுரிமை அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டு வருகின்றன.

(1) போரில் வீர மரணமடைந்த அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்கள்.

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர், பழங்குடியினர்.

2/(அ) பொதுக் காரியங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டதனால் பாதிக்கப்பட்டு, நிலச் சொந்தக்காரராகவோ, குத்தகைதாரராகவோ தாம் நேரடியாகப்பயிரிட்டு வந்த நிலங்கள் புன்செய் நிலமாயிருந்தால் 3 ஏக்கருக்குக் குறைவாக அல்லது நன்செய் நிலமாக இருந்தால் 1½ ஏக்கருக்குக் குறைவாக



வைத்துள்ளவர்கள், ஆனால், கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை செலுத்தப்பட்டிருப்பின் ஒப்படை செய்யப்படும் நிலத்தின் மதிப்பு அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

2/(ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு)ச் சட்டத்தின் (மத்தியச் சட்டம், 19/1976) இன் கீழ் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள்.

(3) முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினர், முன்னாள் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்.

(4) பர்மா, ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்,

(5) தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(6) முன்னாள் கள் இறக்குவோர்,

(7) ஏனைய நிலமற்ற ஏழை மக்கள்.

(8) விடுதலை செய்யப்பட்ட கைதிகள்.

62. பயிரிடுவதற்காக நிலம் ஒப்படை செய்யப்படுவதில் மேற்கூறிய முன்னுரிமை வரிசைப்படி, போரில் வீர மரணமடைந்த அல்லது ஏலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவத்தினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர் குடும்பங்களுக்கு அடுத்த உயர் முன்னுரிமை நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

63. கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் ஒருவருக்கு ஒப்படை செய்யப்படும் நிலத்தின் உயரளவு பரப்பும் அவர் ஏற்கெனவே வைத்திருக்கும் நிலப்பரப்பும் சேர்ந்து மொத்தம் 3 ஏக்கர் புன்செய் நிலமாக அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலமாக இருக்கும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலங்களின் விலை அதிகமானதால், அங்கு ஒருவருக்கு உயரளவு அரசு தரிசு புன்செய் நிலமாயிருந்தால் ஒரு ஏக்கர், புன்செய் நிலமோ, அரசு தரிசு நன்செய் நிலமாயிருந்தால் ½ ஏக்கர் நன்செய் நிலமோ ஒப்படை செய்யப்படுகிறது.

64. நிலம் ஒப்படை செய்யப்பட்டவர், அவ்வாறு நிலம் ஒப்படை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் அந்த நிலத்தில் பயிர் செய்ய வேண்டும். 10 ஆண்டு காலத்துக்குள் அந்நிலத்தை விற்கவோ அன்றி உரிமை மாற்றம் செய்யவோ கூடாது. ஆனால் பயிரிடுவதற்காக கடன் வாங்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கலாம். நிலம் ஒப்படை

செய்யப்பட்டவரே நிலத்தைப் பயிரிட வேண்டும் அல்லது அவருடைய குடும்ப உறுப்பினரோ, கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளரோதான் அந்த நிலத்தைப் பயிரிட வேண்டும். வேறு எவரும் அந்நிலத்தைப் பயிரிடக்கூடாது.

65. இப்பணியைக் கவனிக்கும் பொருட்டு ஒவ்வொரு பிரிவிலும் வட்டாட்சியர் ஒருவர், உதவியாளர் பதவித் தரத்தில் வருவாய் ஆய்வாளர்கள் இருவர், உதவியாளர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகிய சிறப்புப் பணியாளர்கள் அடங்கிய 13 பிரிவுகள் அமைக்கப்பட்டன. அது பற்றிய விவரம் வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | பிரிவுகளின் எண்ணிக்கை. | பிரிவு ஒன்றுக்கு திங்கள் ஒன்றுக்கு உரிய இலக்கு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. செங்கற்பட்டு .. .. | 1 | 250 ஏக்கர் அல்லது 200 இனங்கள். |
| 2. திருச்சிராப்பள்ளி .. .. | 2 | ஷை |
| 3. மதுரை .. .. .. | 1 | ஷை |
| 4. தருமபுரி .. .. .. | 3 | ஷை |
| 5. இராமநாதபுரம் .. .. | 2 | ஷை |
| 6. தென் ஆர்க்காடு .. .. | 1 | ஷை |
| 7. புதுக்கோட்டை .. .. | 2 | ஷை |
| 8. கன்னியாகுமரி .. .. | 1 | 150 இனங்கள். |
| மொத்தம் .. | 13 | |





66. மேற்கூறிய சிறப்புப் பணியாளர்கள் அடங்கிய 13 பிரிவுகளில் 10 பிரிவுகள் ஏற்கெனவே கலைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 3 பிரிவுகள் புதுக்கோட்டை, திருச்சி, மதுரை மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் 1 பிரிவு வீதம் பணி புரிய 1984 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் வரையிலோ அல்லது அப்பணி முடிவுறும் வரையிலோ எது முன் நிகழ்கிறதோ அது வரையில் பணித் தொடர்ச்சி நீட்டிக்கப்படும். மாவட்டவாரியாக நிலைமை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1—4—1983 முதல் 31—1—1984 வரை ஒப்படை செய்யப்பட்ட சாகுபடி நிலங்களின் பரப்பைக் காட்டும் விவர அறிக்கை :

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை. | | ஒப்படை செய்யப்பட்ட மொத்தப் பரப்பு |
|---|---|---|---|
| | ஆதிதிராவிடர்/பழங்குடியினர். | ஏனையோர். | ஏ. செ. |
| (1) | (2) | (3) | (4) |
| 1. செங்கற்பட்டு .. | 18 | 221 | 227.60 |
| 2. தஞ்சாவூர் .. | 1 | 145 | 222.32 |
| 3. சேலம் .. .. | 81 | 738 | 1,174.34 |
| 4. திருச்சிராப்பள்ளி .. | 499 | 1,046 | 1,285.90 |
| 5. கோயம்புத்தூர் .. | .. | 10 | 1.70 |
| 6. மதுரை .. .. | 57 | 984 | 2,333.29 |
| 7. தருமபுரி .. | 10 | 214 | 323.89 |
| 8. இராமநாதபுரம் .. | 123 | 983 | 1,304.11 |
| 9. திருநெல்வேலி .. | 43 | 353 | 257.08 |
| 10. வடஆற்காடு .. | 219 | 999 | 1,610.66 |
| 11. தென்ஆற்காடு .. | 2 | 128 | 213.59 |
| 12. கன்னியாகுமரி .. | 58 | 189 | 99.41 |
| 13. நீலகிரி .. .. | .. | .. | .. |
| 14 புதுக்கோட்டை | 9 | 345 | 232.63 |
| 15. பெரியார் .. | .. | 1 | 0.50 |
| மொத்தம் .. | 1,120 | 6,356 | 9,287.02 |

[1984 மார்ச் 26

67. தகுதியற்றவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்பட்டிருப்பதையும் நிலம் ஒப்படை செய்தபோது விதிக்கப்பட்ட, நிபந்தனைகள் மீறப்பட்டுள்ள ஒப்படைகளையும் ரத்து செய்யும் நோக்கத்துடன் மாவட்டங்களில் செய்யப்பட்டுள்ள நில ஒப்படைகள் மறு ஆய்வு செய்யப்படுகின்றன. இப்பணியை மேற்கொள்வதற்காக 24 தனிப் பணியாளர் பிரிவுகள் அமைக்கப்பட்டன. அவை ஒவ்வொரு பிரிவிலும் துணை வட்டாட்சியர் ஒருவர், வருவாய் ஆய்வாளர்கள் இருவர் (உதவியாளர் பணித்தரத்தில்), உதவியாளர் ஒருவர், தட்டச்சர் ஒருவர், அடிப்படைப் பணியாளர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். அவற்றுள் செங்கல்பட்டு, புதுக்கோட்டை, மதுரை, தருமபுரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டத்தில் செயல்பட்டு வந்த 12 தனிப் பணியாளர் அலகுகள் கலைக்கப்பட்டுவிட்டன. எஞ்சிய 12 தனிப் பணியாளர் அலகுகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை பணி புரிய பணித் தொடர்ச்சி செய்யப்பட்டுள்ளன.

| மாவட்டத்தின் பெயர். | அலகுகளின் எண்ணிக்கை. | ஒப்பளிப்பு செய்யப் பட்ட அரசாணை. | தற்போதைய ஒப்பளிப்பின் கால அளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. தஞ்சாவூர் .. | 2 | 23-2-1984 நாளும் 270 (நிலை) எண்ணு மிட்ட அரசாணையில். | 1-1-1984 லிருந்து 31-3-1984 வரை. |
| 2. இராமநாதபுரம் .. | 2 | | |
| 3. சேலம் .. .. | 2 | | |
| 4. திருச்சிராப்பள்ளி .. | 2 | | |
| 5. தென்ஆற்காடு .. | 2 | | |
| 6. வட ஆற்காடு .. | 2 | | |

1984 ஜனவரி முடிய 2,30,695 நில ஒப்படை இனங்கள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் நில ஒப்படைகள் செய்ததில் முறைகேடுகள் காரணமாக ஒப்படை ரத்து செய்யப் பட்டவையும், இதர காரணங்களுக்காக மற்றவகையில் முடிவு



1984 மார்ச் 26]

செய்யப்பட்டவையும், 1,30,400 இனங்கள் ஆகும். எஞ்சிய நிலஒப்படைகள் குறித்து மேலும் ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட வாரியான விவரங்கள் பின் வருமாறு :—

| மாவட்டத்தின் பெயர். | ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இனங்கள். | ரத்து செய்யப் பட்ட இனங்கள் மற்றும் இதர காரணங் களுக்காக மற்ற வகையில் முடிவு செய்யப்பட்ட இனங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. செங்கற்பட்டு .. .. | 9,250 | 2,806 |
| 2. தஞ்சாவூர் .. .. | 17,522 | 9,615 |
| 3. சேலம் .. .. | 30,742 | 28,476 |
| 4. திருச்சிராப்பள்ளி .. .. | 13,962 | 2,955 |
| 5. மதுரை .. .. | 23,884 | 1,574 |
| 6. தருமபுரி .. .. | 1,200 | 936 |
| 7. இராமநாதபுரம் .. .. | 18,359 | 17,897 |
| 8. திருநெல்வேலி .. .. | 9,332 | 8,726 |
| 9. வட ஆற்காடு .. .. | 15,497 | 6,636 |
| 10. தென் ஆற்காடு . | 43,719 | 32,666 |
| 11. பெரியார் .. .. | 16,872 | 896 |
| 12. புதுக்கோட்டை .. | 26,249 | 15,856 |
| 13. கோயம்புத்தூர் .. .. | 4,107 | 1,361 |
| மொத்தம் .. | 2,30,695 | 1,30,400 |

## VIII. வீட்டு மனை ஒதுக்குதல்.

68. வீட்டு மனை ஒதுக்கும் திட்டமானது, நத்தம் மற்றும் ஏனைய புறம்போக்குகளில் ஆட்சேபனையற்ற ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துவதின் மூலமாக பரந்த அளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'ஏழை' என்ற சொல்லின் பொருள் பயிரிடத்தக்க தரிசு நிலங்களுக்கு பின்பற்றப்படுகிறபடியே வீட்டு மனைகளுக்கும் பின்பற்றப்படும். வீட்டுமனைகள் ஒப்படை செய்யும்போது, கீழ்க்கண்ட முன்னுரிமையின்படி அளிக்கப்படுகின்றன :—

(1) போரில் வீர மரணம் அடைந்த அல்லது ஏலாமையுற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்கள்; நாட்டு எல்லைப் பாதுகாப்புப் படையினரும் பிராந்திய இராணுவப் படையினரும், அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினரும் இதில் அடங்குவர்.

1. (அ) சுதந்திரப் போராட்ட வீரர்களும் அவர்களின் சட்ட பூர்வமான வாரிசுதாரர்களும்.

(2) நிலமற்ற ஏழை ஆதி திராவிடர்கள்/பழங்குடியினர்.

2. (அ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு)ச் சட்டத்தின் கீழ் (மத்திய சட்டம் 19/1976) விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்.

(3) போர் முனைகளில் பணியாற்றுவோர்; இதில் எல்லைப் பர்துகாப்புப் படையினரும் அடங்குவர்.

(4) முன்னாள் இராணுவ வீரர்கள் ; இதில் முன்னாள் எல்லைப் பாதுகாப்புப் படையினரும் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினரும் அடங்குவர்.

(5) பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்கள்.

(6) தங்கக் கட்டுப்பாடு ஆணையினால் வேலையிழந்த பொற்கொல்லர்கள்.

(7) நிலமற்ற பிற ஏழைகள்.

69. 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் நாள் வரை 1,64,160 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட 79,035



வீட்டு மனைகளும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட 3,928 வீட்டு மனைகளும் இதில் அடங்கும், அதன் விவரம் பின்வருமாறு :—

| மாவட்டம். | ஆதி திராவிடர். | பழங் குடியினர். | ஏனையோர். | வழங்கப் பட்ட மொத்த வீட்டு மனைகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. செங்கற் பட்டு. | 2,378 | 25 | 838 | 3,241 |
| 2. தஞ்சாவூர் | 9,843 | 10 | 6,497 | 16,350 |
| 3. சேலம் | 13,431 | 1,710 | 4,899 | 20,040 |
| 4. திருச்சி ராப்பள்ளி. | 21,770 | 2,010 | 20,035 | 43,815 |
| 5. கோயம் புத்தூர். | 2,127 | 68 | 4,243 | 6,438 |
| 6. மதுரை | 7,758 | .. | 12,472 | 20,230 |
| 7. தருமபுரி | 322 | .. | 2,475 | 2,797 |
| 8. இராம நாதபுரம். | 541 | 3 | 6,096 | 6,640 |
| 9. திருநெல் வேலி. | 2,115 | .. | 4,922 | 7,037 |
| 10. வட ஆற்காடு. | 10,195 | 61 | 6,359 | 16,615 |
| 11. தென் ஆற்காடு. | 1,945 | 32 | 7,203 | 9,180 |
| 12. கன்னியா குமரி. | 37 | .. | 129 | 166 |
| 13. நீலகிரி | 223 | 9 | 448 | 680 |
| 14. புதுக் கோட்டை, | 1,550 | .. | 3,181 | 4,731 |
| 15. பெரியார் | 4,800 | .. | 1,400 | 6,200 |
| மொத்தம் .. | 79,035 | 3,928 | 81,197 | 1,64,160 |

70. சென்னை. நகரத்தில் ஆதி ஆந்திரர்கள் செய்துள்ள ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்தும் தனித் திட்டத்தின்படி 750 சதுர அடி உள்ள ஒரு மனைக்கு 3,000 ரூபாயும், 750 சதுர அடிக்கு மேற்பட்ட நிலத்திற்கு இரண்டு மடங்கு விலையும் செலுத்துவதின் பேரில் ஆதி ஆந்திரக் குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்யப்படுகின்றது. இத்திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்படுகிறது. 2,237 ஆதி ஆந்திரர் கள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளனர். இதில் 1,335 ஆக்கிர மிப்புகள் இதுவரை முறைப்படுத்தப்பட்டுள்ளன.

71. சென்னை மாநகரத்தில் குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் அறிக்கையிடப்படாத பல்வேறு குடிசைப் பகுதிகளில் உள்ள குடிசைகள் ஆக்கிரமிப்பை முறைப்படுத்துவது பற்றிய பிரச்சினையை அரசு பரிசீலித்து, சென்னை மாநகரத்தில் ஆங்காங்கே விரவிக் கிடக்கின்ற ஆட்சேபனையற்ற குடிசைப் பகுதிகளைத் தவிர ஏனைய எல்லாக் குடிசைப் பகுதிகளும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின்கீழ் மேம்படுத்துவதற்காக அறிக்கை யிடப்பட வேண்டுமென்றும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விலை ஏதுமின்றி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் ஆணையிடப்பட்டுள்ளது. குடிசை மாற்று வாரியம் இப்பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு அனுபோகதாரரிடமிருந்து மனை ஒன்றுக்கு ரூ. 7,700-ம், மேம்பாட்டு செலவு ஏதேனுமிருந்தால் அதனையும் பெற்றுக் கொண்டு குத்தகை பத்திரம் எழுதிக் கொடுக்கும் நிலத்தின் விலையை ஐந்து ஆண்டுகளில் தவணை முறையில் வசூலிக்கக் கருதப்படுகிறது. நிலத்தின் பரப்பு 750 சதுர அடிக்கு அதிகமாயிருந்தால், உயர் அளவு, அரை மனை என்ற வரையறைக்குட்பட்டு, அந்த இடம் எப்படி உள்ளதோ அதே நிலையில் கொடுத்து விடுவது என்ற அடிப்படையில் நில ஒப்படை செய்யப்படும். தமிழ்நாடு குடிசைப் பகுதி மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேம்படுத்து வதற்காக அறிக்கையிடப்படாததும், ஆட்சேபனையற்றதும், ஆங்காங்கே விரவிக் கிடப்பதுமான ஆக்கிரமிப்புகளைப் பொறுத்த வரையில், மனை ஒன்றுக்கு ரூ. 7,700 வசூலித்து வீட்டுமனை ஒப்படை செய்யப்படும். மனையின் உச்ச வரம்பு 750 சதுர அடியாக இருக்கும்.

72. '' வீட்டுக்கு ஒரு மரம் வளர்த்தல் '' திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக அரசு நிலங்களில் வீட்டு மனை அளிக்கப்பட்ட ஒவ்வொருவரும் வீட்டின் முன் பக்கத்தில் அல்லது புறக்கடையில் குறைந்தது ஒரு மரமாவது வளர்க்க வேண்டும் என்ற நிபந்தனை கொண்டு வரப் பட்டுள்ளது.



VIII. வளர்ச்சியை ஊக்குவிக்க அளிக்கப்பட்ட அரசு நிலங்கள்.

73. மதுரை மாவட்டம் வடக்கு மதுரை, தல்லாகுளம் கிரா மத்தில் 5 ஏக்கர் நிலத்தை சட்டக் கல்லூரி கட்டிடம் கட்டு வதற்கென சட்டக் கல்வித்துறைக்கு இலவசமாக மாற்றம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

74. தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டிணம் வட்டம் அந் தணப்பேட்டை கிராமத்தில் 3 ஏக்கர் நிலத்தை புயல் நிவாரண பண்டகசாலை கட்டுவதற்கென இந்திய செஞ்சிலுவைச் சங்கத் திற்கு இலவசமாக அளிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

75. தென்னார்க்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், வளை ராயபுரம் கிராமத்தில் 26.28.5 ஹெக்டேர் நிலத்தை, நிலக் கிரயம் வசூலித்துக்கொண்டு தற்போதுள்ள முதற் சுரங்கம் மற் றும் குப்பைக் கிடங்கை விரிவுபடுத்துவதற்கென நெய்வேலி லிக் னைட் கார்ப்பரேஷனுக்கு அளிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

76. தென்னார்க்காடு மாவட்டம், பண்ருட்டி வட்டம், வடக்கு மேலூர் கிராமத்தில் 0.59.0 ஹெக்டேர் நிலத்தை தற் போதுள்ள முதற் சுரங்கம் மற்றும் குப்பைக் கிடங்கை விரிவு படுத்துவதற்கென நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனுக்கு அளிக்குமாறு அரசு ஆணையிட் டுள்ளது.

77. செங்கற்பட்டு மாவட்டம், திருத்தணி வட்டம், பழைய னூர் மற்றும் திருவாலங்காடு கிராமங்களில் 13.71 ஏக்கர் நிலத்தை நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கட்டிடம் கட்டுவதற்கென அளிக்குமாறு அரசு ஆணையிட்டுள்ளது.

78. 400 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்காக செங்கற்பட்டு மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம் பென்னலூர் கிராமத்தில் உள்ள 174.38 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிலக்கிரயம் வசூலித்துக்கொண்டு உரிமை மாற்றம் செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

IX. மாநில அரசின் நிலங்களை மத்திய அரசின் துறைகளுக்கு மாற்றம் செய்தல்.

79. மாநிலம், நாடு ஆகியவற்றின் பொருளாதார முக்கியத் துவத்திற்கு இணங்க தொழில்கள், தொழிற்சாலைகள் அமைப் பதை மேம்படுத்தும் பொருட்டு அரசு திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த அரசு மத்திய அரசு துறைகளுக்கும் மத்திய அரசு நிறு வனங்களுக்கும் இலவசமாக நிலங்களை ஒதுக்கி வந்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்தில் அமைந்துள்ள இந்தியக் கடற்படையின் " ஸ்கைலார்க் " திட்டத்திற்கு 633.28 ஏக்கர் புறம்போக்கு நிலத்தை இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்கு இலவசமாக மாற்றம் செய்தது. மேலும், 2,417.7 ஏக்கர் பட்டா நிலங்களைக் கையகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்காக நிலங்களை விரைவாக மாற்றம் செய்தது, கையகப்படுத்தியது குறித்து மத்திய அரசு பாராட்டு தெரிவித்துள்ளது.

80. செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டம் கரிமணல் வட்டாரத்தில் உள்ள 1,724.12 ஏக்கர் புறம்போக்கு நிலங்களை ஸ்ரீ ஹரிகோட்டா ஏவுகணை செலுத்தும் நிலையத்திற்கு " பாதுகாப்புப்பகுதி " யாகப் பயன்படுத்துவதற்காக மத்திய அரசின் விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கு மாற்றம் செய்ய உத்தரவிட்டுள்ளதில் உள்ளபடியாக ஒப்படைக்கப்பட்டதில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அரசு கண்காணித்து வருகிறது.

81. மாம்பலம்-கிண்டி வட்டத்தில் வெங்கடாபுரம் கிராமத்தில் 171 மனைகள் 2,135 சதுர அடி பரப்பிலான நிலங்களையும் மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், மயிலாப்பூர் கிராமத்தில் 72 மனைகள் 89 சதுர அடி பரப்பிலான நிலங்களையும், அனைத்து இந்திய வானொலி நிலையத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 (ஒரு ரூபாய் மட்டும்) என்ற பெயரளவில் குத்தகையை மட்டுமே வசூலித்து, மேற்சொன்ன நிலங்களுக்கு குத்தகைக் காலம் முடிவடையும் தேதியிலிருந்து மேலும் பத்து ஆண்டுகளுக்கு மட்டும் குத்தகையை நீட்டிப்பதற்கு அரசு 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அனுமதியளித்தது.

82. சென்னை மாநகரில் பயணிகளின் நெரிசலை வெகுவாகக் குறைக்கும் பொருட்டு விரைவு போக்குவரத்துப் பேருந்து திட்டம் ஏற்படுத்துவது தொடர்பாக் சென்னை மாநகர எல்லைக்குள் உள்ள 6.64 ஹெக்டேர் நிலத்தை தென்னக இரயில்வே சார்பாக, இந்திய அரசின் இரயில்வே அமைச்சகத்திற்குக் கொள்கை அளவில் இலவசமாக மாற்றம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

83. மீனம்பாக்கத்தில் அனைத்து நாட்டு விமான நிலையத்தை மேம்படுத்துவது தொடர்பாக செங்கற்பட்டு மாவட்டம், சைதாப் பேட்டை வட்டம், மீனம்பாக்கம் கிராமத்தில் 16 ஆம் எண் நி.அ, புலத்திலுள்ள 17.75 ஏக்கர் நிலத்தையும், 184 ஆம் எண் நி.அ. புலத்திலுள்ள 18.71 ஏக்கர் நிலத்தையும், அதன் மதிப்பை வசூலித்த பிறகு மாற்றம் செய்ய அரசு ஏற்கெனவே அனுமதி அளித்தது. சைதாப்பேட்டை வட்டம், மீனம்பாக்கம் கிராமத் தில் 16/2 ஆம் எண் நி.அ. புலத்திலுள்ள (0.39 ஏக்கர்) இடு காட்டு நிலங்கள், 184/3 ஆம் எண் நி.அ. புலத்திலுள்ள (0.63 ஏக்கர், இடுகாட்டு நிலங்கள் உட்பட சில நிலங்களை உடனடியாகத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று





அனைத்து நாட்டு விமான நிலைய அதிகாரக் கழகம் விரும்பியது. இந்த நிலங்களை ஒப்படை செய்வதிலும் ,இடுகாட்டு நிலத்தை பல்லாவரம் கிராமத்தின் 4/1 ஆம் எண் நி.அ. புலத்திலுள்ள (0.64 ஏக்கர்) புதிய இடத்திற்கு மாற்றுவதிலும் உள்ள இடர்ப் பாடுகள் குறித்து இந்திய நாட்டின் அனைத்து நாட்டு விமான நிலைய அதிகாரக் கழகத்தின் பொது மேலாளருடன் தொடர்ந்து பேசித் தீர்வு காணப்பட்டது. இது குறித்து அரசின் இறுதி ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும். மாநில அரசு நிலங்களை இந்திய நாட்டின் அனைத்து நாட்டு விமான நிலைய அதிகாரக் குழுவிடம் ஒப்படை செய்த உடனே அவர்கள் மீனம்பாக்கத்தில் அனைத்து நாட்டு விமான நிலையம் கட்டும் பணியை பூர்த்தி செய்யும் நிலையில் இருப்பர். இது அனைத்து நாட்டு விமான நிலையத்தின் வரைபடத்தில் இடம் பெறும்.

84. மாநில அரசு, சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத் திடமிருந்து பரிமாற்றத் திட்டத்தின் கீழ், சென்னை மாவட்டம், கோட்டை-தண்டையார் பேட்டை வட்டம், வேப்பேரி கிராமத் தின் 1802/2 ஆம் எண் நி.அ. புலத்திலுள்ள 5.2 ஏக்கர் பரப்பி லான நிலத்தைப் பெறுவது குறித்து, மத்திய அரசின் கடற் கரை பாதுகாப்பு நிறுவனத்திற்கு தலைமையிடம் கட்டும் பணிக் காக ஒப்படைப்பதற்கு, கலந்து பேசி முக்கிய பங்கை ஆற்றியது.

## X. பொதுமக்கள் தொடர்புத் திட்டம்.

85. பொதுமக்கள் தொடர்புத் திட்டமான " மனுநீதித் திட்டம் " குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை கிராமங்களுக்கு வருகை தரும் அதிகாரிகளினால் கிராம மக்களின் பிரச்சினைகளை அவ்விடத்திலேயே தீர்த்து வைக்க வாய்ப்பளிக்கிறது. இத் திட் டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத் தின் கீழ் 1—1—1983 முதல் 31—12—1983 வரை வரப் பெற்ற 1,41,106 மனுக்களில் 1,12,060 மனுக்கள் மீது நட வடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டன. அதாவது 80 சதவீத மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

86. இந்தத் திட்டம் இன்னும் நல்ல முறையில் செயல்படுத் தப்பட்டு, பொது மக்களின் குறைகளை அவ்வப்போது போக்கு வதற்கான நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தி மேலும் வெற்றி கரமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு வருவாய்த்துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்புத் தந்து இத்திட்டம் செம்மையான முறையில் செயல்பட வழி செய்யுமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் உட்பட எல்லாத் துறைத் தலைவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தன்னாட்சி நிறுவனங்களுக்கும் சமீபத்தில் அரசினால் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

## XI. தண்ணீர் கட்டண விதங்கள்.

87. இம்மாநிலத்திலுள்ள நிலங்கள் பொதுவாக நன்செய், புன்செய் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. மண் வளம், வேளாண்மை விளைபொருட்களின் விலை, அண்மையி லுள்ள பாசன வாயில்கள் ஆகியவற்றைப் பொறுத்து நன்செய், புன்செய் நிலங்களுக்கு வரி விதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது. நன் செய் நிலங்களுக்கு விதிக்கப்படும் வரியில் ஒரு பகுதி தண்ணீர்த் தீர்வையாகும். அரசு நீர்ப்பாசன வாயில்களிலிருந்து பாசனம் பெறும் புன்செய் நிலங்களைப் பொறுத்தமட்டில் அந்நிலங்களுக்கு விதிக்கப்பட்ட நிலவரியுடன் தண்ணீர்த் தீர்வையும் கூடுதலாக விதிக்கப்படுகிறது. தர வீதங்கள் முறையின் கீழ் நிர்ணயித்த ஏற்பாட்டின்படி தண்ணீர்த் தீர்வை விதிக்கப்படுகிறது. இது, பாசன வாயில்களின் வகையைப் பொறுத்து வேறுபடுகிறது. பெரிய பாசனத் திட்டங்கள், நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்புச் சிறு பாசனத் திட்டப்பணிகளினால் பாசனம் பெறும் பகுதிகளில் தனி தண்ணீர்த் தீர்வை வீதங்கள் நடை முறையில் உள்ளன.

88. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூடுதல் வரி விதிப்பு— கூடுதல் தண்ணீர் தீர்வை சட்டத்தின் கீழ், கூடுதல் நன்செய் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல்வரி முறையே நன்செய் நிலங்கள், இதர நிலங்களின் மேல் விதிக்கப்படுகின்றன.

89. மாநிலத்திலுள்ள தண்ணீர்த் தீர்வை வீத அமைப்பு முழு வதையும் சீரமைப்பது பற்றி ஆராய அரசு அமைத்த குழு தனது அறிக்கையை அரசிடம் கொடுத்துள்ளது. குழுவின் பரிந்துரை கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

## XII. வேளாண்மை வருமான வரி.

90. தமிழ்நாட்டில் வேளாண்மை வருமான வரி 1955 ஆம் ஆண்டிலிருந்து செயலிலுள்ளது. 1955 ஆம் ஆண்டு சென்னை மலைத் தோட்ட வேளாண்மை வருமான வரிச் சட்டம் செய லுக்குக் கொண்டுவரப்பட்டபோது, காபி, தேயிலை, ரப்பர், ஏலக் காய், சின்கோனா போன்ற மலைத் தோட்டப் பயிர்களுக்கு மட்டுமே வேளாண்மை வருமானவரி விதிக்கப்பட்டது. 1958 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் மாநிலம் முழுவதிலும் மலைத் தோட்டம் அல்லாத பயிர்களுக்கும் வேளாண்மை வரு மானவரி விதிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது வரிவிலக்கு வரம்பு ரூ. 10,000 ஆகும். வரி இணக்கத் திட்டத் தின் படி வரிவிலக்கு வரம்பு 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகும். மலைத் தோட்டப் பயிரைப் பொறுத்தவரை 100 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வரி இணக்க வசதி அளிக்கப்படுகிறது. மலைத்



தோட்டப்பயிரல்லாத ஏனைய பயிர்களுக்கு அத்தகைய வரம்பு ஏதுமில்லை. ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது அந்நிலத்தில் பயி ரிடப்படும் பயிரின் தன்மையைப்பொறுத்து கணிக்கப்படுகிறது.

91. முந்தைய ஆண்டின்(கணக்காண்டு)மொத்த வேளாண்மை வருமானத்தின் மீது ஒவ்வொரு நிதியாண்டிலும் வேளாண்மை வருமான வரி விதிக்கப்படுகின்றது. தற்பொழுது செயலில் உள்ள வருமான அடிப்படையிலான வரி வீதமும், நில வரம்பின் அடிப் படையிலான இணக்க வரி வீதமும் வருமாறு :—

### வருமான அடிப்படையிலான வரி வீதங்கள்.

1. மொத்த வேளாண்மை வருமானத்தில் முதல் ரூ. 8,000-க்கு .. .. வரி கிடையாது.
2. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 7,000-க்கு .. .. ரூபாய்க்கு 25 காசு.
3. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு .. .. ரூபாய்க்கு 30 காசு.
4. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு .. .. ரூபாய்க்கு 35 காசு.
5. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 5,000-க்கு .. .. ரூபாய்க்கு 45 காசு.
6. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 20,000-க்கு .. .. ரூபாய்க்கு 55 காசு.
7. மொத்த வேளாண்மை வருமானத்தில் அடுத்த ரூ. 50,000-க்கு .. .. ரூபாய்க்கு 60 காசு.
8. மொத்த வேளாண்மை வருமானத்தில் எஞ்சிய தொகைக்கு .. .. ரூபாய்க்கு 65 காசு.

ஆனால்,

(1) ரூ. 10,000-க்கு மேற்படாத மொத்த வேளாண்மை வருமானத்திற்கு வரி செலுத்த வேண்டியதில்லை ;

(2) மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000-க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 11,100-க்கு மேற்படாதபொழுது அது குறித்து செலுத்தத்தக்க வேளாண்மை வருமான வரியானது, மொத்த வேளாண்மை வருமானம் ரூ. 10,000 ஐ விட எவ்வளவு அதிகமாக உள்ளதோ, அத்தொகையில் எழுபது சதவீதத்திற்கு மேற்படக்கூடாது.

(3) மேலும் ஒவ்வொரு கம்பெனியைப் பொறுத்தவரையில் மொத்த வேளாண்மை வருமானம் முழுவதற்கும், உயரளவு வீதத்தில் வேளாண்மை வருமானவரி விதிக்கப்பட வேண்டும்.

நிலவரம்பின் அடிப்படையிலான இணக்க வரி வீதங்கள்.

| நிலப்பரப்பு. | | | ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒன்றுக்கு வரி வீதம். |
|---|---|---|---|
| | | | ரூ. பை. |
| 1. முதல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | வரி கிடையாது. |
| 2. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 15.00 |
| 3. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 20.00 |
| 4. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 30.00 |
| 5. அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 40.00 |
| 6. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 50.00 |
| 7. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 60.00 |
| 8. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 70.00 |
| 9. அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 80.00 |
| 10. எஞ்கிய ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு | .. | .. | 100.00 |

மேலும் ஒவ்வொரு கம்பெனியையும் பொறுத்த வரையில், 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் செலுத்தத்தக்க மொத்த வரி எந்த அளவு நிலப்பரப்புக்கு மேற்சொன்ன 65, 65-ஏ பிரிவுகளின் கீழ் வேளாண்மை வருமான வரியை இணக்கம் செய்துகொள்ள கம்பெனி அனுமதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நிலப்பரப்பு முழுவதுக்கும் உயரளவு வீதத்தில் விதிக்கப்படவேண்டும்.

92. வேளாண்மை வருமான வரி ஆணையர் வேளாண்மை வருமான வரித்துறையின் தலைவர் ஆவார். அவர் நிலச் சீர்திருத்த ஆணையாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளார்.



93. மலைத் தோட்டம் மற்றும் மலைத் தோட்டமல்லாதப் பகுதிகளில் வேளாண்மை வருமானவரியை வேளாண்மை வருமானவரி அதிகாரிகள் வசூல் செய்கின்றனர். இதற்காக வரி வசூல் சட்டத்தின் கீழ் வரி வசூல் செய்யும் அதிகாரிக்குள்ள அதிகாரமும், இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை வருமான வரியில் பெருமளவு வருவாய், மலைத் தோட்டப் பயிரிவிருந்து கிடைக்கின்றது. தற்பொழுது மொத்த வருவாயில் 90 விழுக்காடு இதிலிருந்து கிடைக்கின்றது. 1971-72 ஆம் ஆண்டு முதல் 1983-84 ஆம் ஆண்டு வரையிலான கேட்பு வசூல் மற்றும் நிலுவை குறித்த விவரம் வருமாறு :—

| வரிவிதிப்பு ஆண்டு. | | | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1971-72 | .. | .. | 271.34 | 215.37 | 55.97 |
| 1972-73 | .. | .. | 293.00 | 225.95 | 67.05 |
| 1973-74 | .. | .. | 270.83 | 225.37 | 45.46 |
| 1974-75 | .. | .. | 284.42 | 217.78 | 66.64 |
| 1975-76 | .. | .. | 373.05 | 252.59 | 120.46 |
| 1976-77 | .. | .. | 362.51 | 244.50 | 118.01 |
| 1977-78 | .. | .. | 697.29 | 524.67 | 172.62 |
| 1978-79 | .. | .. | 1,341.29 | 1,043.19 | 298.10 |
| 1979-80 | .. | .. | 1,003.28 | 697.96 | 305.32 |
| 1980-81 | .. | .. | 936.75 | 579.63 | 357.12 |
| 1981-82 | .. | .. | 724.65 | 447.95 | 276.70 |
| 1982-83 | .. | .. | 549.97 | 297.21 | 252.76 |
| 1983-84 | (31-12-1983 வரை). | | 627.11 | 319.72 | 307.39 |

94. 1980-81 முதல் 1983-84 (31—12—1983 வரை) வரையிலான வரி விதிப்பு ஆண்டுகளில் விளைச்சல் வருமானத்தின் அடிப்படையிலும் இணக்க வரியின் கீழும் வரி விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| ஆண்டு. | மலைத் தோட்டம். | | |
|---|---|---|---|
| | விளைச்சல் வருமானம். | இணக்க வரி. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1980-81 .. .. | 991 | 3,618 | 4,609 |
| 1981-82 .. .. | 1,020 | 3,550 | 4,570 |
| 1982-83 .. .. | 1,000 | 3,660 | 4,660 |
| 1983-84 (31-12-1983 வரை). | 960 | 3,695 | 4,655 |

| ஆண்டு. | மலைத் தோட்டமல்லாதவை. | | |
|---|---|---|---|
| | விளைச்சல். வருமானம். | இணக்க வரி. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| 1980-81 .. .. | 4,429 | 27,736 | 32,165 |
| 1981-82 .. .. | 3,992 | 28,621 | 32,613 |
| 1982-83 .. .. | 3,901 | 26,360 | 30,261 |
| 1983-84 (31-12-1983 வரை). | 3,811 | 26,622 | 30,433 |

95. இத்துறைக்குப் புதிதாக வந்த அனைத்து வேளாண்மை வருமானவரி உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை வரி அதிகாரிகளுக்கும் விரிவான பயிற்சித் திட்டம் ஒவ்வோர் ஆண்டும் தயாரிக்கப்பட்டு, வேளாண்மை வருமானவரி தொடர்பான பல்வேறு சட்டங்கள், கணக்குகள் குறித்து, 9 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பங்கு கொள்வோருக்கு பல் வேறு தொழில்களில் வல்லுநத்துவம் பெற்ற துறைகளிலிருந்து வரவழைக்கப்பட்ட வல்லுநர்கள் பயிற்சி வகுப்புக்களை நடத்துகின்றனர். ஏனைய உதவி ஆணையர்களுக்கும், வேளாண்மை





வருமானவரி அதிகாரிகளுக்கும் நினைவூட்டுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. வேளாண்மை வருமானவரி மதிப்பீட்டை முடிவு செய்வதற்கு இப்பயிற்சி அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது.

96. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்திலுள்ள சில குறைபாடுகளை அகற்றி, விதித்துறைகளை மேலும் தெளிவாக்கும் நோக்கத்துடன் 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமானவரி (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்ட முன்வடிவு எண் 61/81) சட்டமன்றப் பேரவையில் 22—8—1981 அன்று கொண்டுவரப்பட்டது. வரி ஏய்ப்பு செய்வதற்கான வாய்ப்பினைக் குறைக்க இச்சட்ட முன்வடிவு வகை செய்கின்றது. வரி விதிக்கப் பெறுபவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கவும் கருதப்பட்டுள்ளது. இச்சட்ட முன்வடிவு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## XIII. நகர்ப்புற நிலவரி.

97. முதன் முதலாகச் சென்னை மாநகரத்தில் நகர்ப்புற நிலவரி, சென்னை 1963 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டது. இச்சட்டம், பின்னர் தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டது. இந்த 1966 ஆம் ஆண்டு சட்டமே இப்பொழுது செயலிலுள்ளது. ரயத்துவாரி வரி, வீட்டு வரி, மனைவரி போன்றவற்றிற்குப் பதிலாக நகர்ப்புற நிலவரி விதிக்கப்படுகிறது. இச்சட்டம், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களிலும், மதுரை மாநகரிலும் 1—7—1971 ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தது. சென்னை மாநகர எல்லையோரப் பகுதியில் 1—7—1975 முதல் இச்சட்டம் செயலுக்கு வந்தது.

98. சென்னை, மாநகரில், தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம் செயலுக்கு வந்தபோது, 1—7—1963 அன்று இருந்த நிலத்தின் அங்காடி மதிப்பைக்கொண்டு அதில் 0.4 விழுக்காடு என்ற வீதத்தில் நகர்ப்புற நிலவரி கணக்கிடப்பட்டது. இச் சட்டம் அவ்வப்போது திருத்தப்பட்டது. 1—7—1975-லிருந்து சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளுக்கும் இச்சட்டத்தை நீட்டித்து 1—7—1971 அன்று இருந்த அங்காடி மதிப்பைக் கொண்டு நகர்ப்புற நிலவரியைக் கணக்கிடுவதற்கு வகை செய்து 1975இல் இச்சட்டம் இறுதியாகத் திருத்தப்பட்டது. 0.5 விழுக்காட்டிலிருந்து 1 விழுக்காடு வரை இருந்த வீதம் 0.7 விழுக்காட்டிலிருந்து 2.5 விழுக்காடு வரை உயர்த்தப்பட்டது. நகர்ப்புற நிலங்களைக் குடியிருப்பு நோக்கங்களுக்கும் குடியிருப்பு அல்லாத நோக்கங்களுக்கும், பயன்படுத்துவதில் வேறுபாடு கொண்டுவரப்பட்டு, வெவ்வேறு வீதத்தில் வரி விதிக்கப்பட்டது.

[1984 மார்ச் 26

99. நகர்ப்புற நிலவரி அதிகரிக்கப்பட்டதை எதிர்த்து முறையீடுகள் செய்யப்பட்டதன் பேரில், வருவாய்த் துறையின் 27—12—1976 ஆம் நாளிட்ட 2625 ஆம் எண் அரசாணையில் பல சலுகைகளை அரசு வழங்கியது.

தற்போது வரையறுக்கப்பட்டுள்ள வரிவீதம் வருமாறு :

சென்னை மாநகர எல்லையோரப் பகுதியைத் தவிர ஏனைய பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1 முதல் இரண்டு மனைகளுக்கு. | இல்லை .. .. | | இரண்டு மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 2 மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | 0.7 | டி |
| 3 மொத்தப் பரப்பு 5 மனைகளுக்கு மேற்பட்டு, ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | ஒரு | டி |
| 4 மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கு மேற்பட்டு, ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | 1.5 | டி |
| 5 மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | 2 | டி |



1984 மார்ச் 26]

சென்னை மாநகர எல்லையோரப் பகுதிகளிலுள்ள நகர்ப்புற நிலங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1 முதல் மூன்று மனைகளுக்கு. | இல்லை. .. .. | | மூன்று மனைகளுக்கு மேல் உள்ள பரப்புக்கு. |
| 2 மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | 0.7 | டி |
| 3 மொத்தப் பரப்பு 7 மனைகளுக்கு மேற்பட்டு, ஆனால் 10 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | ஒரு | டி |
| 4 மொத்தப் பரப்பு 10 மனைகளுக்கு மேற்பட்டு, ஆனால் 20 மனைகளுக்கு மேற்படாமல் இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | 1.5 | டி |
| 5 மொத்தப் பரப்பு 20 மனைகளுக்கு மேற்பட்டு இருந்தால். | அங்காடி மதிப்பில் விழுக்காடு. | 2 | டி |

100. ஏற்கனவே வழங்கப்பட்ட சலுகைகளை சட்டப்படி செல்திறனானவையாக்க தமிழ்நாடு அரசு தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த)ச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்தது. அப்போது சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்ட காரணத்தால், இச்சட்ட முன்வடிவு காலாவதியாகிவிட்டது. ஆகவே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த)ச் சட்ட முன்வடிவு, 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் சட்டமன்றப் பேரவையில் மீண்டும் கொண்டு வரப்பட்டது. சட்டமன்ற ஆய்வுக் குழுவிற்கு இது அனுப்பப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

101. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச்சட்டம் வருவாய்த்துறையின் 25—6—1981 ஆம் நாளிட்ட அரசாணை எண். 1465-இன்படி திருநெல்வேலி நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளுக்கும், கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி

ஆகிய நகரங்களிலுள்ள பிற பகுதிகளுக்கும் 1—7—1981 ஆம் நாளிலிருந்து நீட்டிக்கப்பட்டது. இதனால், மேற்சொன்ன புதிய பகுதிகளிலிருநது விளைச்சல் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 56 லட்சம் வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது.

102. 29—5—1978 ஆம் நாளும்,790 (நிலை) ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை எண்ணும் கொண்ட அரசாணையில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 38 கிராமங்களை உள்ளடக்கிய 12 ஊராட்சிகளை சென்னை மாநகருடன் இணைத்ததினால் இந்த கிராமங்களுக்கு தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரிச் சட்டத்தை நீட்டிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. மேற்சொன்ன பகுதிகளில் நகர்ப்புற நிலவரியாக எதிர்பார்க்கப் படும் வருவாய் விளைச்சல் ஆண்டிற்கு ரூபாய் 3 இலட்சமாகும்.

103. இந்த வரிவகையில் விளைச்சல் ஆண்டு ஒன்றிற்கு ரூபாய் 4.29 கோடி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83ஆம் ஆண்டில் ரூபாய் 2.93 கோடி வசூலாயிற்று. 1983-84இல் ரூபாய் 3.00 கோடி வசூலாகுமென எதிர் பார்க்கப்படுகிறது.

## XIV. நிலச் சீர்திருத்தம்.

தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/1961):

104. இச்சட்டம் 6—4—1960 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராக நிர்ணயிக்கப்பட்டது. ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும், ஆனால், அதுவும் சேர்த்து, மொத்த உச்சவரம்பு அளவான 60 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டது. இந்த உச்சவரம்பு குறைக்கப்பட்டு மூலச் சட்டத்தின் மூலம் அளிக்கப்பட்டிருந்த சில விதி விலக்குகள் 17/1970 ஆம் சட்டத்தினாலும், அடுத்து இயற்றப்பட்ட பிற சட்டங்களாலும் ரத்து செய்யப்பட்டன. இப்போது உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். குடும்பத்திற்கு உச்சவரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கராகும். 31—12—1983 ஆம் நாள் வரையில் நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு :—

| | ஏக்கரில் |
|---|---|
| (1) உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு (—) நிலத்தை அரசு எடுத்துக் கொள்ளுமுன்னரும் பின்னரும் ரத்து செய்யப்பட்ட பரப்பு. | 1,54,4[illegible] |





| | |
|---|---|
| (2) நிலத்தை அரசு வசம் எடுத்துக்கொள்ளு முன்னரும், பின்னரும் தடையாணையின் கீழ் உள்ள பரப்பு. | 23,633 |
| (3) (i) உபரி நிலம் அளிக்கப்படுவதன் கீழ் தகுதி வாய்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட பரப்பு. | 1,09,773 |
| (ii) தமிழ்நாடு சர்க்கரை கழகத்திடம் ஒப் படைத்த பரப்பு. | 4,041 |
| (iii) உபரி நில விநியோக விதிகளின் 13 ஆம் விதியின்கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டவை. | 8,681 |

| பயனடைந்தோர் எண்ணிக்கை. (1) | நபர்கள். (2) | பரப்பு. (3) |
|---|---|---|
| 1. ஆதி திராவிடர் .. .. | 36,782 | 41,071 |
| 2. பழங்குடியினர் .. .. | 26 | 18 |
| 3. ஏனையோர் .. .. | 48,449. | 68,684 |
| மொத்தம் .. .. | 85,257 | 109,773 |
| வழங்க வேண்டி இருக்கும் பரப்பு .. | | 8,324 ஏக்கர். |

105. தற்போதுள்ள ஆணையின்படி உயரளவு 3 ஏக்கர் புன் செய் நிலமோ $1\frac{1}{2}$ ஏக்கர் நன்செய் நிலமோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது.

106. நிலம் உச்சவரம்பினைச் செயல்படுத்துவதும் உபரி நிலங்களை வழங்குதலும் இருபது அம்ச திட்டத்தின் (எண். 4) ஒரு பகுதியாகும், நிலச் சீர்திருத்தங்களை விரைந்து செயல் படுத்துவதற்குப் பல இடையூறுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரிக்கப்பட்டு முடிக்கப்படுவதற்கு அதிகக் காலம் ஆவதேயாகும். ஆகவே, நில நடுவர் மன்றத்தில் தீர்ப்பை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளையும் பரிசீலனை மனுக்களையும் விசாரிக்க அதிகாரம் அளித்து, தனி மேல்முறையீட்டு நடுவர் மன்றத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டது. இது குறித்த சட்டமுன்வடிவு 1983 நவம்பர் திங்களில் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் இசைவு பெறப்பட்டு 1984 பிப்ரவரி 29 ஆம் நாளிட்ட தமிழ்நாடு (சிறப்பு) அரசிதழில் தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்டமான (தமிழ்நாடு சட்டம் 3/1984) வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள், ஆவணச் சட்டம் :

107. தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணச் சட்டத்தின் மூலம் (திருத்தச் சட்டம் 45/1981) மூலச் சட்டத்தில் சேர்த்துள்ள புதிய பிரிவு 5எ, வட்ட அளவில் ஆலோசனைக் குழு அமைக்க வகை செய்கிறது. இந்த ஆலோசனைக் குழுவில் ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளி ஒருவரும், ஒரு பயிரிடு குத்தகைதாரரும், மூன்று சமூகப் பணியாளர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு அவ்வட்டத்தைச் சேர்ந்த ஆவண அதிகாரிக்கு குத்தகை ஆவணங்கள் தயாரிக்கும் அலுவலில் உதவி செய்யும். இந்த ஆலோசனைக் குழுவின் முக்கிய அலுவல் வட்டத்திலுள்ள நிலச்சொந்தக்காரரின் பெயர், முகவரி, இடையாள், குத்தகைதாரரின் பெயர் முதலிய விவரங்களைச் சேகரிக்கவும் இச்சட்டத்தின் கீழ் குத்தகைதாரரைப் பதிவுசெய்ய ஆவண அதிகாரிக்கு பரிந்துரைப்பதும் ஆகும்.

108. இச்சட்டத்தின் கீழ், இதுவரை 4,39,464 குத்தகைதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமுள்ள மொத்தப் பரப்பு 6,36,513 ஏக்கராகும்.

109. தமிழ்நாட்டிலுள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் 30—6—1983 உடன் முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்கோ அல்லது அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுக்கோ நிலச் சொந்தக்காரருக்கும், பொதுப்பொறுப்புக் கழகங்களுக்கும் செலுத்த வேண்டிய குத்தகை பாக்கியை செலுத்தாமைக்காக நிலத்திலிருந்து அவர்களை வெளியேற்றுவதிலிருந்து 15—1—1984 வரை அரசு பாதுகாப்பளிக்க வகை செய்தது. இச்சட்டத்தை 15—1—1984-க்குப் பிறகும் தகுதியுடையவர்களுக்கு நீட்டிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை அளித்தல்) சட்டம்.

110. இதுவரை வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப் பட்டாக்கள் வருமாறு :—

| | |
|---|---|
| ஆதி திராவிடர் .. .. .. .. | 98,961 |
| பழங்குடியினர் .. .. .. .. .. | 244 |
| பிற்பட்டோர் .. .. .. .. .. | 48,777 |
| ஏனையோர் .. .. .. .. | 32,059 |
| மொத்தம் .. .. .. | 1,80,041 |



699 இனங்கள் விசாரணையில் உள்ளன. 139 வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

தமிழ்நாடு, 1976ஆம் ஆண்டு கிராமக் கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டம்.

(சட்டம் 38/1976)

111. இதுவரையில் வழங்கப்பட்டுள்ள குடியிருப்புப்பட்டாக்கள் வருமாறு—

| | |
|---|---|
| ஆதி திராவிடர் .. .. | 37 |
| பழங்குடியினர் .. .. .. | 15 |
| பிற்பட்டோர் .. .. .. | 203 |
| ஏனையோர் .. .. .. | 114 |
| மொத்தம் .. .. | 369 |

தமிழ்நாடு 1961ஆம் ஆண்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண் நிலங்களை முறைப்படுத்துதலும் நிருவாகமும்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/1961).

112. 9,552 பொதுப் பொறுப்புக் கழகங்கள்கீழ் உள்ள 66,637 குத்தகைகளின் வசம் உள்ள 1,59,325 ஏக்கர் நிலங்கள் இதுவரை சரிபார்க்கப்பட்டன. இவற்றைச் சரிபார்த்ததினால் 5,481 பினாமி குத்தகைகாரர்கள் 1,060 உழவர்கள் நில உச்சவரம்புக்கு மேல் அதாவது மொத்தத்தில் 16,604 ஏக்கர் நிலம் வைத்திருந்தது தெரியவந்தது. மேற்கண்டவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவு செய்யப்பட்டன. தனித் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய் நீதிமன்றம் மற்றும் பொதுப்பொறுப்புக் கழகங்கள்) பதவிகள் கலைக்கப்பட்ட பின்னர் இப்பொறுப்பு தொடர்புடைய கோட்டாட்சியர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டம்.

(இச்சட்டம், கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டும் பொருந்தும்.)

113. வருவாய்த் துறையின் 24-2-1979ஆம் நாளிட்ட 420ஆம் எண் அரசாணையின்படி (இது பின்னர் வருவாய்த் துறையின் 1-9-1981ஆம் நாளிட்ட 1900ஆம் எண் அரசாணை

யின் மூலம் திருத்தப்பட்டது). இதன்படி கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் வருமாறு :—

உரிய வயது வந்தோர்.

| | |
|---|---|
| (அ) உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், செப்பனிடுதல், கத்தரித்து ஒழுங்குபடுத்துதல், நிலங்களையும் வாய்க்கால்களையும் பராமரித்தல், விதைப்பதற்கும் நடவு நடுவதற்கும் நிலத்தை தயார் செய்தல், இடு பொருள்கள், விளை பொருட்களை ஆட்கள் மூலம் எடுத்துச் செல்லுதல். | நாள் ஒன்றுக்கு 7 லிட்டர் நெல்லும் ரூ. 2.80ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 9 வழங்கப்படும். |
| (ஆ) நாற்று நடுதல், களையெடுத்தல் அல்லது திட்டவட்டமாக குறிப்பிடப்படாத ஏனைய வேளாண்மைத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு. | நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல்லும் ரூ. 1.80ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 7 வழங்கப்படும். |

உரிய வயதடையாதவர்கள்.

| | |
|---|---|
| அனைத்து வகை வேளாண்மைத் தொழில்களுக்கும். | நாள் ஒன்றுக்கு 4 லிட்டர் நெல்லும் ரூ. 1.50ம் வழங்கப்படும் அல்லது நாள் ஒன்றுக்கு ரூ. 5 வழங்கப்படும். |

உழுதல் தவிர ஏனைய வேளாண்மைப் பணிகளுக்குரிய வேலை நேரம் நாளொன்றுக்கு 7 மணி நேரமாகும். உழவுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு 5 மணி நேரமாகும்.

## XV. நகர்ப்புற நில உச்சவரம்பு.

114. கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக, பல்வேறு காரணங்களால் நகர்ப்பகுதி மக்கள் தொகை பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணங்கள் வருமாறு :— கிராமங்களிலுள்ள மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற தொழிற்சாலைகளும், ஏனைய நிறுவனங்களும் நகர்ப் பகுதிகளில்- வளர்ந்து வருகின்றபடியால், கிராம மக்கள், கிராமங்களை விட்டு வெளியேறுகின்றனர். சிறு நகரங்கள், நடுத்தர நகரங்கள் ஆகியவற்றில் மக்கள் சென்று குடியேறுவதைவிட பெரு நகர்களிலும் அதிகப் பரப்பளவுள்ள மாநகர்களிலும் மக்கள் சென்று குடியேறுவது அதிகமாகும். இதனால், கட்டுக்கடங்காது குடிசைகள் பெருகி வருவதாலும், துப்புரவற்ற வாழ்க்கைச் சூழல்கள் பெருகி வருவதாலும் பொருளாதார சமூகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவே, அரிதாகக் கிடைக்கும்



நகர்ப் பகுதிகளைப் பயன்படுத்துவதை முறைப்படுத்தி, முறையாக மேம்படுத்துவதும் ஒரு சிலரிடமே நிலங்கள் குவிந்து, அதனால் ஊக வாணிகம் நடப்பதைத் தடுப்பதும் அவசியம் என்று கருதப்பட்டது.

115. நகர்ப் பகுதிகளிலுள்ள நிலங்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. இதன் பலனாக அரிதாக கிடைக்கும் மதிப்பு மிக்க நகர்ப்புற நிலங்களை வாங்கி முடக்கி வைப்பதும் பின்னர் அதிக விலைக்கு விற்க முயலும் ஊக வாணிகம் நடத்துவதும் பெருகிவிட்டது. தனிப்பட்ட ஒருவர் வைத்துள்ள நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கலாம் என்றும், நியாயமான அளவிற்கு அதிகமாக நகர்ப்பகுதி நிலங்களைச் சொந்தமாக வைத்திருப்பதைத் தடை செய்யலாம் என்றும், இவ்வாறு செய்தால் இச்சிக்கலுக்குத் தீர்வு காண முடியுமென்றும் கருதப்பட்டது. தனியாரின் உடைமையில் உள்ள நிலங்களின் அளவுக்கு உச்ச வரம்பு விதித்தும் வீடுகளின் அளவை வரையறுத்தும் நகர்ப்பகுதி நிலங்கள் அனைத்தையும் சமுதாய உடைமையாக்குவதே இதன் நோக்கமாகும். இந்நோக்கத்துடன் தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு, நகர்ப்பகுதி நிலச் (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 34/1976) இயற்றப்பட்டது.

116. இச்சட்டத்தின் மூன்று முக்கியக் கூறுகள் வருமாறு:

(அ) தனிப்பட்ட ஒருவர், ஒரு குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கம்பெனி அல்லது ஒரு குழு அல்லது தனிப்பட்டவர்கள் சேர்ந்த ஒரு கழகம் வைத்திருக்கின்ற வெற்று நிலத்தின் மீது உச்சவரம்பு விதித்தல் ;

(ஆ) எதிர் காலத்தில் கட்டப்படும் வீடுகளின் பரப்புக்கு உச்சவரம்பு விதித்தல் ;

(இ) நகர்ப்பகுதி சொத்தை உரிமை மாற்றம் செய்து கொடுப்பதை முறைப்படுத்துதல் ஆகியவையாகும்.

117. இச்சட்டத்தை செயலாக்கும் போது பொது மக்களுக்கு ஏற்பட்ட இடர்பாடுகள் குறித்து எண்ணற்ற முறையீடுகளும் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட செய்திகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பொது மக்களின் வேண்டுகோளை கருத்திற் கொண்டு குடியரசுத் தலைவரின் 1976ஆம் ஆண்டு 34ஆம் சட்டத்தை நீக்கிவிட்டு, தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு, நகர்ப்பகுதி நிலச் (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978) அரசு இயற்றியது. நகர்ப் பகுதி சொத்துக்களை அரசுடைமை ஆக்குவதென்ற குறிக்கோளை கடைப்பிடிக்கும் பொருட்டும் பழைய சட்டத்தின் இடர்பாடான விதித்துறைகளின் மூலம் பொது மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கும் பொருட்டும் இச்சட்டம் இயற்றப்பட்டது.

[1984 மார்ச் 26

118. தமிழ்நாடு, 1978ஆம் ஆண்டு நகர்ப்பகுதி நில (உச்ச வரம்பு-முறைப்படுத்தல்) சட்டத்தின் 14, 15, 20(3), 27, 48 ஆகிய பிரிவுகள் நீங்கலாக ஏனைய பிரிவுகள் 3-8-1976ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன. 14, 15, 20(3), 27, 48 ஆகிய பிரிவுகள் 17-5-1978 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வந்தன.

119. புதிதாக இயற்றப்பட்ட தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்பகுதி (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) சட்டத்தில் (தமிழ் நாடு சட்டம் 24/1978) சென்னை நகர்ப்புற கூட்டுப் பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டு உள்ளது. ஏனைய நகர்ப்புறக் கூட்டுப் பகுதிகளைப் பொறுத்த மட்டில், எல்லையோரப் பகுதிகளை நீக்கியதின் மூலம், அவை, மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியாகக் குறைந்துள்ளது.

120. இச்சட்டம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி நகரக் கூட்டுப் பகுதிகளில் செயலில் உள்ளது;

121. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நகர் கூட்டுப் பகுதி ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட ஒருவரோ, ஒரு குடும்பமோ, ஒரு தொழில் நிறுவனமோ நிலம் வைத்திருப்பதற்கு உச்சவரம்பு வருமாறு—

தமிழ்நாடு சட்டம் 24/1978.

| நகர் கூட்டுப் பகுதி. | வகைப் பாடு. | தனிப் பட்ட ஒருவர். | ஒரு குடும் பம். | தொழில் நிறுவனம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ச.மீ. | ச.மீ. | ச.மீ. |
| சென்னை .. .. | 1 | 500 | 2,000 | 2,000 |
| மதுரை .. ..<br>கோயம்புத்தூர் ..<br>திருச்சிராப்பள்ளி ..<br>சேலம் .. .. | 2 | 1,500 | 3,000 | 3,000 |
| திருநெல்வேலி .. | 3 | 2,000 | 4,000 | 4,000 |

122. இச்சட்டத்தின் செயல்வரம்பிலிருந்து, பயிரிடும் நிலங்கள் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன. பயிரிடப்படாத நிலமாகப் பெருந்திட்டத்தில் காட்டப்பட்டு அவை தொடர்ந்து பயிரிடும் நிலமாகப் பயன்படுத்தப்பட்டு வருமானால், அந்நிலங்களுக்கும்



1984 மார்ச் 26]

இச் சட்டம் பொருந்தாது. ஆனால், வேளாண்மை அல்லாத வேறு பணிகளுக்காக இந்நிலங்கள் பயன்படுத்தப்படுமானால், இச்சட்டம் அத்தகைய நிலங்களுக்குப் பொருந்தும்.

123. விற்பனைப் பத்திரம், ஏனைய பத்திரங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள நிலங்கள் வெற்று நிலங்களா அல்லது பயிரிடும் நிலங்களா என்பதை தகுதி வாய்ந்த அதிகாரிகள் சரிபார்க்க இயலும் வகையில், 1908ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்வதற்காகப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும்போது உரிமை மாற்றம் செய்து கொடுப்பவரும் செய்து கொடுக்கப்பெறுபவரும், எல்லா நேர்வுகளிலும் படிவம் XIII-இல் அமைந்த உறுதி மொழியை இரட்டையாகத் தாக்கல் செய்ய வேண்டும் என்று பத்திரப் பதிவு செய்யும் அதிகாரிகள் வலியுறுத்த வேண்டும் என்பதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

124. இச்சட்டம் செயலுக்கு வந்த நாளன்று உச்சவரம்பிற்கு மிகையாக வெற்று நிலம் வைத்துள்ள ஒவ்வொருவரும் அவ்வாறு கூடுதலாக வைத்துள்ள நிலம் குறித்த அறிக்கை ஒன்றை அப்பகுதியின் அதிகார வரம்பைப் பெற்றுள்ள தகுதி வாய்ந்த அதிகாரியிடம் தாக்கல் செய்ய வேண்டும். பொது மக்களும், நிறுவனங்களும், வர்த்தக சபைகளும் முறையீடு செய்ததின் காரணமாக, இந்தியக் குடியரசுத் தலைவரின் 1976ஆம் ஆண்டு 34ஆம் சட்டத்தின்படி 6(1) விவர அறிக்கையைத் தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் 697 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டது தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்புறப் பகுதி நில (உச்சவரம்பு முறைப்படுத்துதல்) சட்டத்தின் (சட்டம் 24/78) 7(1)ஆவது பிரிவின் கீழ் விவர அறிக்கை தாக்கல் செய்வதற்குரிய கடைசி நாள் 14-8-1978ஆம் நாளோடு முடிவடைந்தது. பொது மக்களும் வணிகப் பேரவைகளும் கேட்டுக் கொண்டதன் பேரில் இந்த விவர அறிக்கையைத் தாக்கல் செய்யும் கால வரம்பு ஒரு திங்கள் கால அளவிற்கு அதாவது 14-9-1978ஆம் நாள் வரையில் நீட்டிக்கப்பட்டது. 1976ஆம் ஆண்டுச் சட்டத்தின் 6(1)ஆம் பிரிவின் கீழும் 1978ஆம் ஆண்டுச் சட்டத்தின் 7(1)ஆம் பிரிவின் கீழும் 16,905 அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. 1978ஆம் ஆண்டுச் சட்டத்தின் விதித்துறைகளின்படி 14,120 அறிக்கைகள், உச்சவரம்பு அளவிற்குள் வருகின்றன என அறிவிக்கப்பட்டன. எஞ்சியுள்ள 2,785 அறிக்கைகள் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளையொட்டி கையகப்படுத்தக் கிடைக்கப்பெறும் மிகையாகவுள்ள காலி நிலங்களின் பரப்பளவு 3,729 எக்டர்கள் ஆகும். தகுதிவாய்ந்த அதிகாரிகள் அந்த விவர அறிக்கைகளைப் பரிசீலித்து வருகின்றனர். 529 எக்டர் 65 ஏக்கர் மற்றும் 61 சதுர மீட்டர் பரப்பளவுள்ள வெற்று நிலம் மிகையாகவுள்ளது என்று அறிவிக்க 502 அறிக்கைகள் மீது அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த அறிக்கைகள், தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப் படுத்தல்) சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு

அரசிதழில் வெளியிடப்படுவதற்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. 15-12-1983ஆம் நாள் வரையில் 353 இனங்களில் மிகையான 35,28,271 சதுர மீட்டர் பரப்பளவு வெற்று நிலம் குறித்த மேற்படி சட்டத்தின் 11(3)ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கைகள் வெளிடயிப்பட்டுள்ளன. 266 இனங்களைப் பொறுத்த மட்டில் 324 எக்டர் பரப்பளவுள்ள வெற்று நிலம் அரசின் கைவசம் வந்துள்ளது. தகுதிவாய்ந்த அதிகாரிகள் மேற்படி சட்டத்தின் 9 முதல் 11 வரையிலான பிரிவுகளின் கீழ் அறிக்கைகளைப் பரிசீலித்து வருவதால், கிடைக்கக்கூடிய மிகையான வெற்று நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதை இந்நிலையில் துல்லியமாக மதிப்பிட இயலாது.

125. நகர்ப்புறக் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றிலும் கையகப் படுத்தப்படும் மிகையான வெற்று நிலங்களுக்கு வழங்கப்படும் ஈட்டுத் தொகை குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| நகர்ப்புற கூட்டுப் பகுதி. (1) | தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு 24ஆம் சட்டம். வகை. (2) | வழங்கப்படும் தொகை. (3) |
|---|---|---|
| சென்னை .. .. | 1 | ஒரு சதுர மீட்டருக்கு 50 ரூபாய்க்கு மேற்படாமல். |
| மதுரை .. .. <br> கோயம்புத்தூர் .. <br> திருச்சி .. .. <br> சேலம் .. .. | 2 | ஒரு சதுர மீட்டருக்கு 25 ரூபாய்க்கு மேற்படாமல். |
| திருநெல்வேலி .. | 3 | ஒரு சதுர மீட்டருக்கு 15 ரூபாய்க்கு மேற்படாமல். |

126. இச்செயல் நோக்கத்திற்காக, இம்மாநிலத்திலுள்ள நகர்ப்புறக் கூட்டுப்பகுதி ஒவ்வொன்றும் முறையான நகர்ப்பகுதி வளர்ச்சிப் பணியையும், அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்காக, நகர்ப்புறக் கூட்டுப் பகுதியில் அப்பகுதி அமைந்துள்ள இடம், பகுதி, நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலுள்ள அந்நிலத்தின் பொதுப்பயன், நகர்ப்புறக் கூட்டுப் பகுதியிலுள்ள அந்நிலத்தின் பயன்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வெவ்வேறு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அரசு எடுத்துக் கொண்ட மிகையான வெற்று நிலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவது தொடர்பாக இது வரையில் 18.82 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.





127. அரசு வெற்று நிலத்தைக் கையகப்படுத்தும்போது அந்நிலத்திற்காக வழங்கத்தக்க மொத்தத் தொகையில் 25 விழுக்காட்டுத் தொகை அல்லது 25,000 ரூபாய் இவற்றில் எத்தொகை குறைவானதோ, அத்தொகையை உடனடியாக வழங்க வேண்டும். எஞ்சியுள்ள தொகையை, நிலத்தை அரசு எடுத்துக் கொண்டுள்ளதாகக் கருதப்படும் நாளிலிருந்து 15 ஆண்டு கால அளவில், ஆண்டு ஒன்றிற்கு 6 விழுக்காட்டு வட்டியுடன் சம ஆண்டுத் தவணைகளில் வழங்க வேண்டும். தமிழ் நாடு 1978ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு-முறைப்படுத்தல்) சட்டத்தின் பிரிவு 16(2) இன்படி முதலாவதாகக் கொடுக்கப்படும் 25 விழுக்காட்டு இழப்பீட்டுத் தொகையை மேற்சொன்ன பிரிவைத் திருத்துவதன்மூலம் உயர்த்துவதற்குரிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

128. மத்திய, மாநில அரசுகள், அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், அட்டவணையிடப்பட்ட வங்கிகள், வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள், சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்கள் முதலியவை வைத்துள்ள நிலங்களுக்கு இச்சட்டத்தின் விதித்துறைகள் பொருந்தாது.

129. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு 24ஆம் சட்டத்தின் 20ஆம் பிரிவைச் சேர்ந்த (3)ஆம் உட்பிரிவின் விதித்துறைகளை செயற்படுத்தியதில் நடைமுறை இடர்பாடுகள் இருந்தன. இவ் விடர்பாடுகளைக் களையும் பொருட்டு மேற்கூறிய 20ஆம் பிரிவைச் சேர்ந்த (3)ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக தமிழ் நாடு 1979ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு—முறைப் படுத்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 14/1979) திருத்தச் சட்டத்தின் மூலம் புதிய உட்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்புக் கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) எதுவும் உச்சவரம்புக்குக் கூடுதலாக உள்ள நிலங்களை, முழுமையாகவோ அவற்றில் ஒரு பகுதியையோ விற்பனை செய்தல், அடமானம் வைத்தல், தானமாக கொடுத்தல், குத்தகைக்கு விடுதல் ஆகியவற்றின் மூலமோ பிற வழிகளிலோ உரிமை மாற்றம் செய்யக்கூடாது என்றும், அவ்வாறு செய்யப் படும் உரிமை மாற்றம் சட்டப்படி செல்லாது என்பதற்கும் இச்சட்டம் வகை செய்கிறது. மேலும், பொது அறக்கட்டளைகள் அல்லது சமயப் பொறுப்புக் கழகங்கள் (வஃப் வாரியம் உட்பட) வைத்துள்ள நிலங்கள், பொது அறப்பணிகளுக்கு அல்லது சமயப் பணிகளுக்குத் தேவைப்படுவதும் பயன்படுவதும் அற்றுப் போகுமானால், மேற்கூறிய தமிழ்நாடு சட்டத்தின் விதித் துறைகள் அவற்றிற்குப் பொருந்தும். மேற்கூறிய தமிழ் நாட்டுச் சட்டத்தின் III ஆம் அத்தியாயத்தின் விதித்துறைகளுக்கிணங்க, அத்தகைய மிகையான நிலங்களை அரசு கையகப்படுத்தும்.

130. பொது நலன் கருதி அல்லது யாதொரு தனி நபருக்கும் இடர்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு விதி விலக்களிக்கும் அதிகாரம் அரசுக்கு உண்டு.

131. சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்குக் குடியிருப்புகள்
கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு ஏற்பளிக்கவும் அதன் பொருட்டு
மிகையாகவுள்ள வெற்று நிலங்களைத் தொடர்ந்து வைத்து
வருவதற்குரிய வரையறைகளையும் நிபந்தனைகளையும் வரை
யறுப்பதற்கும் உரிய செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில்
உள்ளன.

132. மேற்சொன்ன சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்
பட்ட மிகையான வெற்று நிலங்கள் மேற்சொன்ன சட்டத்தின்
24ஆம் பிரிவின் விதித்துறைகள், மேற்சொன்ன சட்டத்தின்
கீழ் இயற்றப்பட்ட விதிகளின் 23ஆம் விதி ஆகியவற்றின்படி
ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு 1978ஆம் ஆண்டு
நகர்ப்பகுதி நில (உச்ச வரம்பு-முறைப்படுத்துதல்) சட்டத்தின்
11 (3)ஆம் பிரிவின் கீழ் கையகப்படுத்தப்பட்ட வெற்று நிலங்களை
ஒதுக்கீடு செய்வதற்காக விண்ணப்பதாரர் பலருடைய தகுதி
குறித்து மதிப்பிடுவதற்காகவும் அரசுக்குப் பரிந்துரைப்பதற்காக
வும் அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

133. மேற்சொன்ன சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்ட
வெற்று நிலங்களில் 15-12-1983 வரை 26 எக்டேர், 65 ஏக்கர்,
35 சதுர மீட்டர் நிலங்களை அரசுத் துறைகள், அரசுக்
கழகங்கள், வீட்டு வசதி வாரியங்கள், நிறுவனங்கள் ஆகிய
வற்றிற்கு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

134. மேற்கூறிய சட்டம் செயலுக்கு வருவதற்கு முன்னர்
உள்ளாட்சி அதிகார மன்றங்களிடம் தாக்கல் செய்யப்பட்ட
மனைப்பிரிவு வரைபடங்கள் குறித்த விண்ணப்பங்களுக்கு, நகர்ப்
பகுதி நில உச்சவரம்புச் சட்டம் இயற்றப்படவுள்ளதால், ஒப்புதல்
அளிக்க வேண்டாம் என்று கூறி அரசு 1976 பிப்ரவரியில் கட்டளை
களைப் பிறப்பித்ததால், உள்ளாட்சி மன்றங்கள் ஒப்புதல் அளிக்க
இயலவில்லை. மனைப் பிரிவு வரை படங்களுக்கு ஒப்புதலைப்
பெறுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்
களுக்கு 1976 ஆகஸ்டுத் திங்கள் 3 ஆம் நாள் வரை
யில் தகுதி வாய்ந்த அதிகாரியால் ஒப்புதல் அளிக்கப்படாமல்
இருந்ததால், அவ்விண்ணப்பங்களைத் தாக்கல் செய்த விண்ணப்ப
தாரர்களுக்கு பல இடர்பாடுகள் ஏற்பட்டன. இதன் காரண
மாக, மனைப் பிரிவு வரை படங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்காப்
விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஒப்புதலளிக்க
படுகையில் அவ்விண்ணப்பதாரர், அக்காலி நிலத்தை வைத்
திருந்து இச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட உச்சவரம்
பிற்கு மிகாமல், மொத்தத்தில் நிலம் வைத்துள்ளவருக்கு, வீட்டு
மனையாக விற்பனை செய்வதற்கு வகை செய்ய 5 ஆம் பிரிவைச்
சேர்ந்த (3)-ஆம் உட் பிரிவைத் திருத்தக் கருதப்பட்டுள்ளது.
இதற்கான சட்ட முன்வடிவு, சட்டப் பேரவையில் கொண்டு
வரப்பட்டு பின்னர் இது பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்
டுள்ளது.



## XVI. வருவாய் அலுவலகக் கட்டிடங்கள்.

(i) பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கான அலுவலகம் இணைந்த
குடியிருப்புக்கள்—

135. வருவாய் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு
அண்மைக் காலங்களில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது
பிரிவினை காரணமாக புதிதாக உருவான வருவாய்க் கோட்ட
அலுவலகம், வட்ட அலுவலகம் ஆகியவற்றிற்கு கட்டிடங்கள்
கட்டுவது மட்டுமின்றி, வாடகைக் கட்டிடங்களில் இயங்கி
வரும் அரசு அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டவும்
முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

136. அதே சமயம் கிராம அளவில் இயங்கி வரும் கிராமச்
சாவடிகள், கால்நடைப் பட்டிகள் ஆகியவற்றைப் பழுது பார்க்க
வும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கிராமச் சாவடிகள், கால் நடைப்
பட்டிகள் தேவைப்படும் இடங்களில் படிப்படியாக புதிய கிராமச்
சாவடிகள், கால்நடைப் பட்டிகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்
டுள்ளது.

137. 1978-79 ஆம் ஆண்டிலிருந்து பிர்க்கா வருவாய்
ஆய்வாளர்களுக்கென அலுவலகம் இணைந்த குடியிருப்புகளைக்
கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் படிப்படியாக அரசு நிறை
வேற்றி வருகிறது. மாநிலத்தில் தற்போது 1,097 பிர்க்காக்
கள் உள்ளன. இதுவரை அனுமதி வழங்கப்பட்டுள்ள 958
குடியிருப்புகளில், 609 குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
எஞ்சியவை கட்டப்பட்டு வருகின்றன. சென்னை மாவட்டம்
நீங்கலாக இன்னும் குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட
வேண்டியுள்ள பிர்க்காக்கள் 119 ஆகும். 1984-85 ஆம் ஆண்டுக்
காலத்தில், 15 குடியிருப்புக்களைக் கட்டுவதற்கு அனுமதி வழங்க
அரசு கருதியுள்ளது.

(ii) வட்ட அலுவலகங்கள் :—

138. இம்மாநிலத்தில் 166 வட்டாட்சி அலுவலகங்கள்
உள்ளன. அவற்றுள் 156 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில்
இயங்கி வருகின்றன. அதில் சில மிகப் பழையன. புதிதாக
உருவாக்கப்பட்ட வட்டாட்சி அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள்
கட்டும் பணியுடன் பழுதடைந்த கட்டிடங்களை மாற்றும் பணி
யும் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை
காரைக்குடி, விருதுநகர், எழும்பூர்-நுங்கம்பாக்கம், புரசைவாக்
கம்-பெரம்பூர், பாலக்கோடு, கோத்தகிரி, இராஜபாளையம், நத்
தம், திருச்சுழி, பண்ருட்டி ஆகிய இடங்களில் வட்ட அலுவலகங்
களுக்கான புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
இராசிபுரம், பேராவூரணி, பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில்
வட்ட அலுவலகங்களுக்குப் புதிய கட்டிடம் கட்டும் பணி நடை

பெற்று வருகிறது. மேலும் 10 வட்ட அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். 1984–85 ஆம் நிதியாண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள குடவாசலில் புதிய வட்டாட்சி அலுவலகம் கட்டக் கருதப்பட்டுள்ளது.

(iii) கோட்ட அலுவலகக் கட்டிடம் கட்டுதல்:—

139. இம்மாநிலத்தில் 54 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. அவற்றுள் 51 அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. சொந்தக் கட்டிடங்களில்லாத கோட்டாட்சி அலுவலகங்களுக்குப் படிப்படியாகக் கட்டிடம் கட்டப்படவுள்ளது. இதுவரை, பாளையங்கோட்டை, சிவகங்கை, அருப்புக்கோட்டை, கடலூர், சங்கரி, தஞ்சாவூர் காஞ்சிபுரம், திண்டிவனம், மேட்டூர் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலகங்களுக்கான புதிய கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தாராபுரம், கடலூர், திருப்பூர் ஆகிய மூன்று கோட்டாட்சி அலுவலகங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். 1984–85 ஆம் நிதியாண்டில் திருப்பூரில் வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கக் கருதப்பட்டுள்ளது.

(iv) வருவாய் அலுவலகங்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தல்;—

140. இம்மாநிலத்திலுள்ள 236 வருவாய் அலுவலகங்களில். 19 அலுவலகங்கள், நவீன கழிப்பிட வசதிகள் இல்லாமல் உள்ளது. இந்த அடிப்படை வசதியை படிப்படியாகச் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 90 வருவாய் அலுவலகங்களில் நவீன கழிப்பிட வசதிகள் செய்து கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவற்றில், 73 கழிப்பிடங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. 19 வருவாய் அலுவலகங்களில் 21 கழிப்பிடப் பகுதிகளைக் கட்டுவதற்கு 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 5.56 இலட்சம் நிதி ஒதுக்க அரசு கருதியுள்ளது.

(v) கிராமச் சாவடிகள், கால்நடைப் பட்டிகள் :—

141. இவைதவிர, கால்நடைப் பட்டிகளைப் பழுது பார்ப்பதற்காக, 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சத்திற்கும், 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 15 இலட்சத்திற்கும் அரசு அனுமதி வழங்கியது. கிராமச் சாவடிகளைப் பழுது பார்ப்பதற்காக, 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 10 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியது. தேசீய கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராமச் சாவடிகள், கால்நடை பட்டிகள் புதிதாகக் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



142. 1979–80 ஆம் ஆண்டிலிருந்து 1983–84 ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் அனுமதிக்கப்பட்ட பல்வேறு வகைக் கட்டிடங்களின் விவரம் பின் வருமாறு :—

அனுமதி வழங்கப்பட்டவற்றின் எண்ணிக்கை.

| வகை. | 1979–80. | 1980–81. | 1981–82. | 1982–83. | 1983–84. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம். | 1 | .. | .. | .. | .. |
| 2 கோட்ட அலுவலகங்கள் | 4 | 3 | 3 | .. | 1 |
| 3 வட்ட அலுவலகங்கள் | 6 | 4 | 4 | .. | 4 |
| 4 வருவாய் அதிகாரிக்களுக்கான குடியிருப்புகள். | 13 | 67 | .. | .. | .. |
| 5 கூடுதல் கட்டிடங்கள் | .. | 29 | .. | .. | .. |
| 6 சைக்கிள் நிறுத்துமிடம் | .. | .. | .. | 3 | 10 |
| 7 பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கான அலுவலகம்-குடியிருப்பு. | 350* | 208 | 200 | 100 | 108 |
| 8 கிராமச் சாவடிகள் | .. | 48 | 40 | 13 | 20 |
| 9 கால்நடைப் பட்டிகள் | .. | .. | .. | 16 | .. |

* இதில், 1978-79 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட 200 குடியிருப்புகளும் அடங்கும்.

143. 1983-84 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களிலுள்ள புதிய கட்டிடங்களுக்கு அலுவலகம் மாற்றப்பட்டுள்ளது;—

| | தொடர் எண்ணும், அலுவலகத்தின் பெயரும். | இடம். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம். | ஈரோடு. |
| | வருவாய்க்கோட்ட அதிகாரி அலுவலகம். | தஞ்சாவூர். |
| 3 | வருவாய்க்கோட்ட அதிகாரி அலுவலகம். | திண்டிவனம். |
| 4 | வட்ட அலுவலகம் .. .. | இராஜபாளையம். |
| 5 | வட்ட அலுவலகம் .. .. | பெரம்பூர். |
| 6 | வட்ட அலுவலகம் .. .. | நத்தம். |
| 7 | வட்ட அலுவலகம் .. .. | திருச்சுழி. |
| 8 | வட்ட அலுவலகம் .. .. | எழும்பூர். |

144. வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத் தொகுதி ஒன்றை வேலூருக்கு அருகில் சத்துவாச்சேரி கிராமத்தில் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 14 ஏக்கர் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு, வாரியத்தின் மேம்பாட்டுத் திட்டத்திற்காக வாரியத்திற்கு அளிக்கப்பட்ட அரசு நிலங்களுக்கான மதிப்பைக் கழித்துக் கொண்டு, மீதி தொகை அளிக்கப்படும். கடலூர், தாராபுரம் ஆகிய இடங்களில் வருவாய்க் கோட்ட அலுவலகம் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்துவதைப் பொறுத்த நடைமுறைகள் விரைவில் முடிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(vi) மேஜை, நாற்காலி, முதலியன :—

145. பல்வேறு வட்ட அலுவலகங்களில் உள்ள பழைய, பழுது பார்க்க இயலாத மேஜை, நாற்காலி முதலியவற்றை எடுத்து விட்டு, புதியவற்றை படிப்படியாக வழங்குவதற்காக, 1983-84 ஆம் ஆண்டில் அரசு ரூ. 5 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.





(vii) மோட்டார் வண்டிகள் :—

146. வருவாய்த் துறையை அடிப்படையாக வைத்து மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டு வரும் சமூக-பொருளாதாரத் திட்டங்கள் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, சாதாரண மேம்பாட்டுப் பணிகளை விரைவாக நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். 1983-84-ஆம் ஆண்டில் வருவாய்த் துறைக்கு மொத்தம் ரூபாய் 10,61,000 செலவில் 11 ஜீப்புகள் வாங்கப்பட்டன.

## xvii. நிலவரி, செஸ்வரி முதலியன.

(அ) நிலவரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்தல் ;

147. 1,390-ஆம் விளைச்சல் (பசலி) ஆண்டிற்கு, சிறு உழவர்களிடமிருந்தும், வளவாய்ப்பு ஏதுமில்லாத வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் வாழும் உழவர்களிடமிருந்தும் வலுக் கட்டாயமாக நிலவரி வசூலிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்தது. இச்சலுகை 1391-ஆம் விளைச்சல் ஆண்டிலும் தொடர்ந்து அளிக்கப்பட்டது.

148. 1392-ஆம் விளைச்சல் ஆண்டிற்கும், சென்னை தவிர பிற எல்லா மாவட்டங்களைப் பொறுத்த மட்டில், கடந்த விளைச்சல் ஆண்டுகளில் சலுகை அளிக்கப்பட்ட அதே முறையிலேயே உழவர்களுக்கு நிலவரி, உள்ளூர் செஸ்வரி முதலியவற்றைத் தள்ளுபடி செய்வதென அரசு முடிவெடுத்தது.

149. 1393-ஆம் விளைச்சல் ஆண்டிற்கும், நிலவரி தண்ணீர்த்
தீர்வை, உள்ளூர் செஸ்வரி, கூடுதல் வரிவிதிப்பு, கூடுதல் தண்
ணீர்த் தீர்வை, தனி வரி விதிப்பு, தனி தண்ணீர்த் தீர்வை
முதலியவற்றை (1—7—1983 முதல் 30—6—1984 வரை) 1393
ஆம் விளைச்சல் ஆண்டிற்கென செலுத்தத் தக்கவை முழுமையாக
தள்ளுபடி செய்வதென அரசு முடிவெடுத்துள்ளது. இச்சலுகை,
இம்மாநிலத்தில் 1983 டிசம்பரில் ஏற்பட்ட பெருத்த மழையாலும்
வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள எல்லா
வகை நிலங்களிலும் ஏற்பட்ட மொத்த இழப்பு தொடர்பான
வருவாய் நிலை ஆணைகளில் குறிப்பிட்டதற்கேற்ப அளிக்கப்
படும். 1393-ஆம் நடப்பு விளைச்சல் ஆண்டிற்கு நிலவரி
செலுத்தப்பட்டிருக்கையில், நிலவரி நிலுவைத் தொகை, தண்
ணீர்த் தீர்வை, உள்ளூர் செஸ்வரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை,
கூடுதல் வரி விதிப்பு, தனி வரி விதிப்பு, தனி தண்ணீர்த் தீர்வை,
தக்காவிக் கடன் நிலுவைத் தொகை மற்றும் நடப்பு தவணைத்
தொகை ஆகியவற்றை வசூலிப்பதை 1394-ஆம் விளைச்சல்
ஆண்டிற்குத் தள்ளிப் போட வேண்டுமென்றும் அரசு உத்தரவிட்
டுள்ளது. இச்சலுகைகள், 1983-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெருத்த

மழையாலும் வெள்ளத்தாலும், கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அதனால் விளைந்து நின்ற பயிர்களுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ள பகுதிகளுக்கு மட்டுமே அளிக்கப்படும்.

(ஆ) நிலவரி, செஸ்வரி முதலியவற்றை வசூலித்தல் :

150. 1391-ஆம் விளைச்சல் ஆண்டிற்கு (அதாவது 1981 ஜூலை முதல் 1982 ஜூன் வரை) செஸ்வரி உட்பட (உள்ளூர் செஸ்வரி, உள்ளூர் செஸ் மேல்வரி முதலியவை) நிலவரி ரூ. 24,95,84,334 வசூலிக்கப்பட்டது. 1392-ஆம் விளைச்சல் ஆண்டிற்கு (அதாவது 1982 ஜூலை முதல் 1983 ஜூன் வரை) ரூ. 10,64,41,955 வசூலிக்கப்பட்டது. 1982-83-ல் பருவமழை பொய்த்ததால் மிகவும் பாதகமான பருவ நிலை இருந்ததன், காரணமாக வசூல் தொகையும் குறைந்தது. சுமார் ரூ. 12 கோடி அளவுக்கு அதிகமானதொரு தொகை தள்ளுபடி செய்யப்பட்டதாலும், வரி வசூலில் வலுக்கட்டாயமான முறைகளைப் பின்பற்றுவதைத் தவிர்க்கும்படி உத்தரவிடப்பட்டதாலும், 1392 ஆம் விளைச்சல் ஆண்டில் குறைவான தொகை வசூலிக்க நேர்ந்தது. சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையாளர், குறித்த காலத்திற்கொருமுறை, உத்தரவுகள் பிறப்பித்து அவை உரியவாறு பின்பற்றப்படுகின்றனவா என்று ஆய்வு செய்ததாலும், அவர் பயணம்மேற்கொள்ளுகையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அல்லது மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு நேரடியாக உத்தரவிட்டதாலுமே, மிகுந்த இடர்பாடுகளுக்கிடையில் மேற்குறிப்பிட்ட தொகையை வசூலிக்க முடிந்தது. கடந்த ஆண்டு இருந்த நிலையைத் கருத்தில் கொண்டு, 1983-84-ல் ரூ. 19,32,01,000 வசூலிக்க இயலுமென்று அரசு எதிர்பார்த்தது.

(இ) இரண்டு ஆண்டுகளுக்கான நிலவரி வசூல் விவரம் :

(i) 1981-82 (விளைச்சல் ஆண்டு 1391).

1—7—1981 முதல் 30—6—1982 வரை.

| | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| நிலுவை .. | 44,61,26,850 | 14,97,61,431 | 29,63,65,419 |
| நடப்பு .. | 22,87,02,542 | 9,98,22,903 | 12,88,79,639 |
| மொத்தம் .. | 67,48,29,392 | 24,95,84,334 | 42,52,45,058 |





(ii) 1982-83 (விளைச்சல் ஆண்டு 1392).

1—7—1982 முதல் 30—6—1983 வரை.

| | கேட்பு. | வசூல். | நிலுவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| நிலுவை .. | 46,21,12,429 | 5,93,41,091 | 40,27,71,338 |
| நடப்பு .. | 19,71,34,252 | 4,71,00,864 | 15,00,33,388 |
| மொத்தம் .. | 65,92,46,681 | 10,64,41,955 | 55,28,04,726 |

151. இம்மாநிலத்தில், ரூ. 50 கோடிக்கு அதிகமான நிலவரி வசூலிக்காமல் விடப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. நடப்பு விளைச்சல் ஆண்டிற்கான கேட்புத் தொகையும் சேர்க்கப்பட்டால் வசூலிக்க வேண்டிய தொகை ரூ. 60 கோடி அல்லது அதற்கு அதிகமாகும். இதுவரை செய்யப்பட்ட நிலவரி நிலுவை வசூல் மனநிறைவளிப்பதாக இல்லை. நடப்பு ஆண்டில் சம்பாப் பயிர் விளைச்சல் நன்றாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, வரி நிலுவையை வசூலிக்க, குறிப்பாக, நல்ல அறுவடை ஆகியுள்ள இடங்களில், வலுக்கட்டாய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், வசூலிக்க, தனி நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் நிருவாக அமைப்பை முடுக்கிவிடுமாறு அண்மையில் அரசு மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுள்ளது. 1983-84 ஆம் நிதி ஆண்டு முடிவடையும் முன்னர் இயன்ற வரை நிலுவைகளை வசூலிக்க முனைப்பான நடவடிக்கைகள் எடுக்குமாறு அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

xviii. இடைத் தரகர்களை ஒழித்தலும், இரயத்துவாரியாக மாற்றுதலும்.

152. அரசுக்கும், ஜமீன் இனாம், கீழ் காணி ஆட்சி உடைமைகளையும் இதர சிறப்பு உரிமம் முறைகளின் கீழ் நிலத்தை உழுபவருக்கும் இடையில் உள்ள இடைத் தரகர்களை ஒழிக்கும் பணி அரசால் பல்வேறு சட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்டு

[1984 மார்ச் 26

வருகிறது. இப்பணியின் பெரும் பகுதி முடிவுற்றுள்ளது. இது அரசால் மேற்கொள்ளப்பட்ட பெரிய வேளாண் சீர்திருத்தங்களில் ஒன்றாகும். விவரம் பின்வருமாறு :—

(அ) தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு உடைமைகள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் எண். XXVI/48)

| | மொத்த உடைமைகள் எண்ணிக்கை. | பரப்பு (சதுர கிலோ மீட்டரில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உடைமைகளின் மொத்த எண்ணிக்கை. | 5,134 | 29,931.21 |
| (2) 1—12—1983 வரை நிலவரித் திட்டம் செயல் படுத்தப்பட்ட பரப்பு. | 5,134 | 29,931.21 |
| (3) நிலுவை .. .. | இல்லை. | இல்லை. |

(ஆ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் உடைமைகள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26/1963)

| | மொத்த உடைமைகள் எண்ணிக்கை. | பரப்பு (சதுர கிலோ மீட்டரில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| )1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உடைமைகளின் எண்ணிக்கை. | 2,094 | 4,151.87 |
| (2) 31—12—1983 வரை நில வரித் திட்டம் செயல் படுத் தப்பட்ட பரப்பு. | 2,060 | 4,124.74 |
| **(3) நிலுவை** .. .. | **34** | **27'13** |

(இ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு இரயத்துவாரிகளாகமாற்றுதல்) சட்டம் (சட்டம் 30/63)

| | | |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உடைமைகள் மொத்த எண்ணிக்கை. | 13,565 | 4,049.02 |



1984 மார்ச் 26]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (2) 31-12-1983 வரை நிலவரித் திட்டம் செயல் படுத்தப்பட்ட பரப்பு. | 13,564 | 4,048.49 |
| (3) நிலுவை .. .. .. | 1 | 0.53 |

(ஈ) தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை நிலங்கள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 27/1963)

| | | |
|---|---|---|
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உடைமைகளின் மொத்த எண்ணிக்கை. | 13 | 83.20 |
| (2) நிலவரித் திட்டம் செயல் படுத் தப்பட்ட பரப்பு. | 13 | 83.20 |
| (3) நிலுவை | இல்லை. | இல்லை. |

(உ) தமிழ்நாடு 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் உடைமைகள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம், 24/1969) —

| | எஸ்டேட்டுகளின் மொத்த எண்ணிக்கை. | பரப்பு (சதுர கிலோ மீட்டரில்). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (1) அரசால் எடுத்துக் கொள்ளப் பட்ட உடைமைகளின் மொத்த எண்ணிக்கை. | 10 | 324.10 |
| (2) நிலவரித் திட்டம் செயல் படுத்தப்பட்ட பரப்பு. | 3 | 146.18 |
| (3) நிலுவை | 7 | 177.92 |

153. எஞ்சிய 34 இனாம் கிராமங்களில் (சட்டம் 26/83)
இதன் செயல் பாடுகள் டில்லி உச்ச நீதிமன்றம், சென்னை
உயர்நீதி மன்றம், பிற சிவில் நீதி மன்றங்களின் தடை ஆணை
கள் மூலம் நிலுவையில் உள்ளன. இதே போல் சட்டம் 30/63-ன்
படி நிலவரித் திட்டம் செயல் படுத்தப்பட வேண்டிய பரப்பு
று இனாம் உடைமைகளைப் பொறுத்தவரை உயர்நீதி

மன்றத் தடையாணை நீக்கத்தை எதிர்பார்த்து முடிக்க இயலாத நிலையில் உள்ளது. சட்டம் 24/69-ல் செயலாக்கம் குறித்த நிலை தனி பத்தியில் தரப்பட்டுள்ளது.

இரயத்துவாரிப் பட்டா வழங்குதலும், அதனால் பயனடைந் தோரும் :

154. 31-12-1983 வரை பல்வேறு சட்டங்களின் கீழான விதி முறைகளின்படி இரயத்துவாரிப் பட்டா வழங்க்ப்பட்டுள்ள பட்டாதாரர்களின் எண்ணிக்கை கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது :—

| சட்டத்தின் பெயர். | பயனடைந்தோர் எண்ணிக்கை. | பட்டா வழங்கப் பட்ட நிலப் பரப்பு. (ஹெக்டேரில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தமிழ்நாடு (1948 ஆம் ஆண்டு உடைமைகள் (ஒழிப்பு இரயத்து வாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26/48). | 23,33,840 | 18,17,390 |
| தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனாம் உடைமைகள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 26/1963). | 3,56,038 | 1,93,806 |
| தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு குத்தகை நிலங்கள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 27/1963). | 6,003 | 5,606 |
| தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு சிறு இனாம்கள் (ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 30/1963). | 5,11,150 | 3,23,246 |
| கூடலூர் ஜென்மம் (ஒழிப்பு இரயத் துவாரியாக மாற்றுதல்) சட்டம் (சட்டம் 24/1969). | 6,468 | 10,771 |





ஒழிப்புச் சட்டங்களுக்குப் புறம்பாக பட்டா வழங்குதல் :

155. தமிழ் நாடு (1948 ஆம் ஆண்டு, உடைமைகள் ஒழிப்பு இரயத்துவாரியாக மாற்றல்) சட்டம் அமுல் படுத்தப்பட்ட பின்ன ரும், பட்டா வழங்குவதைத் தளர்த்த அரசால் பின்னர் பிறப் பித்த நிருவாக ஆணையர்களின் பயனாகவும் அரசால், இச் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட உடைமைகளில் பல ஆண்டுகளாக நிலங்களைத் தங்களது அனுபோகத்தில் வைத் திருந்து அனுபவித்து வந்த பெரும்பான்மையானவர்களுக்கு அவர்கள் சட்டத்தின் பல விதிகளின் கீழோ அல்லது அரசின் ஆணைகளுக்குக் கீழோ வராமையால் பட்டா பெறும் வாய்ப் பை இழந்துள்ளனர் என்பது காணப்பட்டது. எனவே, அரசு 1971-ல் விளம்பரப்படுத்தப்பட்ட நாளுக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடர்ந்து நிலங்களை அனுபவத்தில் வைத்திருந்த நபர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்றும் ஆணை பிறப் பித்தது. இச்சலுகை, சட்டம் 26/63, 30/63-ன் கீழ் வரும் இனங்களுக்கும் பின்னர் நீடிக்கப்பட்டது. அதுபோன்று தகுதி யுள்ள நபர்கள் எஸ்டேட்டுகள் ஒழிப்புச் சட்டங்களின் செயல் வரம்பிற்கு வெளியே பட்டா கேட்டு விண்ணப்பிக்க இயலச் செய்யும் நோக்கத்துடன், விண்ணப்பம் செய்வதற்கான கடைசி நாளை அரசு அவ்வப்போது நீட்டித்தது. தென்னாற்காடு மாவட்டம் சின்ன கல்ராயன் மலைப் பகுதி நீங்கலாக மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் இக்கால அளவு நீட்டிப்பு கடைசியாக 31—3—1977 வரை கொடுக்கப்பட்டது. தென்னாற்காடு மாவட்டம், சின்ன கல்ராயன் மலைப் பகுதிக்கு மட்டும் இக்கால அளவு 31—12—1978 வரை நீட்டிக்கப்பட்டது.

156. இன்று வரை 22,527 பேர்கள் உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களின் செயல்வரம்பிற்கு அப்பால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளால் பயனடைந்துள்ளனர். 34,191 எக்டேர் நிலங் களுக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்திலுள்ள ஜென்மம் உடைமைகள் ஒழிப்பு :

157. நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டத்தில் மிகப் பெரும் பான்மை நிலப்பரப்பைக் கைவசம் வைத்திருந்த ஜென்மிகள், சாகுபடி உரிமைகளை வழங்கி குத்தகைக்கு விட்டுள்ளனர். அக்குத்தகை உரிமை 1929 ஆம் ஆண்டு மலபார் குத்தகைதாரர் சட்டத்தினால் ஏற்புடையதாக்கப்பட்டு, குத்தகைதாரர்கள் பயிரிடும் நிரந்தர உரிமையைப் பெற்றுவிட்டனர். ஜென்மம் உரிமை முறையை நீக்கி குத்தகைதாரர்களுக்கு அனுபோக உரிமையை வழங்க கூடலூர் (ஜென்மம்ஒழிப்பு) இரயத்துவாரியாக மாற்றுதல் சட்டம் 1969 (சட்டம் 24/1969) இயற்றப்பட்டது. இச்சட்டம் 27-11-1974 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்

பட்டது. அதன்படி 324.10 சதுர கிலோ மீட்டர் கொண்ட
நிலப்பரப்பு அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு, நில அளவைப்
பணி முடிக்கப்பெற்றுள்ளது. இப்பரப்பு முழுமைக்குமான
ரயத்துவாரி பட்டா வழங்குவதற்கான சட்டப்பூர்வ விசாரணை
பணியும் முடிக்கப்பட்டுவிட்டது. சில ஜென்மம் நில உரிமை
யாளர்கள் தாங்கள் வைத்திருக்கும் நிலங்களுக்கு இச்சட்டம்
செல்லுபடியாகாதென வாதிட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில்
செய்த ரிட் மனுக்கள், 23—9—1976 அன்று தள்ளுபடி செய்யப்
பட்டன. ஆனால், அவர்கள் டில்லி உச்ச நீதிமன்றத்திற்கு
மேல் முறையீடு செய்து தடையாணை பெற்றுள்ளனர். உச்சநீதி
மன்றத்தின் திருத்த தடையாணையின்படி கூடலூர் வட்டத்தில்
தடையாணைக்குட்பட்ட பகுதியில் சட்டபூர்வ விசாரணை
வரையிலான நிலவரித் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.
31—12—1983 வரை நிலவரித் திட்டம் 146.18 சதுர கிலோ
மீட்டர் பரப்பில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இரயத்துவாரிப்
பட்டாக்கள் 10,771 எக்டேர் நிலப்பரப்புக்கு 6,468 பேர்களுக்கு
வழங்கப்பட்டுள்ளன. 117.92 எக்டேரில் நிலவரித் திட்ட
அமுலாக்கம் உச்ச நீதி மன்றத்தின் தடையாணை நீக்கத்தை
எதிர்பார்த்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு வரையுள்ள நிலங்களின் மீது இரயத்துவாரி தீர்வை விதிக்கும் சட்டம்.

158. 1859 ஆம் ஆண்டிலிருந்து சில இரயத்துவாரி நிலங்கள்
அவற்றின் மீதான 20 தடவை ஆண்டுத் தீர்வையைச் செலுத்தி
விட்டு நிலவரி விதிக்கப்படாமல் வரியில்லாமல் உள்ளன.
வேறு சில நிலங்கள் நிலவரியைச் சலுகை விகிதத்தில் செலுத்திய
படி உள்ளன. இவை வரியற்ற நிலங்கள் என சொல்லப்
படுகின்றன. இவற்றிற்கும், மற்ற இரயத்துவாரி நிலங்களுக்கும்
உள்ள ஒரே வித்தியாசம் என்னவெனில் முன்னதில் இரயத்துக்கள்
ஆண்டுதோறும் தீர்வை செலுத்துகின்றனர். பின்னதில் சில
இனங்களுக்கு தீர்வையே கிடையாது. மற்றும் சில இனங்களுக்குச்
சலுகை விகிதத்தில் வசூலிக்கப்படுகிறது என்பதே. 1972 ஆம்
ஆண்டில் அத்தகைய வரியற்ற, வரி குறைந்த நிலங்களை ஒழித்து
அவற்றை ஏனைய இரயத்துவாரி நிலங்களுக்குள்ளது போன்ற
தீர்வை முறையை அமுல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்
பட்டது. அதன்படி இத்தகைய நிலங்களின் மொத்தப் பரப்பு
4,777.23 எக்டேர். இவை 12 மாவட்டங்களில் காணப்படு
கின்றன. இவை தவிர ''மோகினி இனாம்கள்'' என்ற பெயரில்
தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம், மயிலாடுதுறை, சீர்காழி
மற்றும் நன்னிலம் வட்டங்களில் மொத்தம் 231.56 எக்டேர்
நிலங்கள் உள்ளன. இவை பல்வேறு சமய நிறுவனங்களின்
பொறுப்பில் உள்ளன. இத்தகைய நிலங்களில் பழங்கால ராஜாக்
கள் வழங்கிய ரொக்கப்படிக்குப்பதிலாக ஆங்கிலேய அரசினால்
மேற்படி சமய நிலையங்களுக்கு மீதான தீர்வை ஒதுக்கப்பட்டது.



159. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு வரியற்ற நிலங்கள் மேல்
தீர்வை விதிப்புச் சட்டம் 1973 ஆம் ஆண்டு 31 ஆம் சட்டமாக
வெளியிடப்பட்டிருந்த போதிலும் கூட, இது 1979 ஆம் ஆண்டு
அக்டோபர் திங்கள் 16 ஆம் நாள் தான் செயலுக்குக் கொண்டு
வரப்பட்டது. இச்சட்டத்தின் இணைப்பிற்கான திருத்தப்
பட்டியல், 27—4—1983 நாளிட்ட அரசிதழில் அறிவிக்கை
செய்யப்பட்டது. 1972 ஆம் ஆண்டு சட்டத்தைச் செயல்
படுத்த இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் 4 மாவட்டங்களுக்கு
அறிவிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஏனையவை பரிசீலனை
யில் உள்ளன.

## பல்வேறு உடைமைகள் ஒழிப்புச் சட்டங்களின் கீழ் ஈட்டுத் தொகை மற்றும் அரசுக் கொடைகள்.

160. நில உடைமையாளர்கள், மற்றும் இனாம்தார்கள்
ஆகியோரிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களில் மேல்
முறையீடுகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இனங்
களைத் தவிர ஏனைய நிலங்களுக்குப் பல்வேறு ஒழிப்புச்
சட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படும் ஈட்டுத் தொகை நிர்ண
யிக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சமய
நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், அறக்கட்டளைகள் ஆகிய
வற்றின் வசமிருந்த உடைமைகளுக்கு நட்ட ஈட்டுத் தொகை
விளைச்சல் படியாக ஆண்டுதோறும் அச்சட்டங்களில் வகை செய்
துள்ளபடி நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

## வருவாய்த் தொடர்ப் பணி :

161. மாநிலத்தின் சில பகுதிகளில் காலப்போக்கில் அசல் நில
அளவை உருவழிந்துள்ளதாலும், இருக்கின்ற ஆவணங்களைக்
கொண்டு பராமரிப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள
இயலாமையாலும் அரசின் ஆணைபெற்று அப்பகுதிகளில் மறு
நில அளவை மேற்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து
அங்கு நில உடைமைகளை மேம்படுத்தி பராமரிப்புக்குகந்த
தாகச் செய்ய மறு நிலவரி ஏற்பாட்டுப் பணி மேற்கொள்வதற்குப்
பதிலாக வருவாய்த் தொடர்ப் பணி மேற்கொள்ளப்படுகிறது.
வருவாய்த் தொடர் பணிக்கும் மறு நிலவரி ஏற்பாட்டிற்கும்
இடையூான முக்கியமான வேறுபாடு மண் வகைப்பாடு, தீர்வை
விதிப்பு வீதம் ஆகியவை வருவாய்த் தொடர்ப்பணியில் மாற்றப்
படுவதில்லை என்பதே, மறு நில அளவை ஆவணங்களைக்
கொண்டு நில உடைமைகளை மேம்படுத்தியும் பழைய தீர்வை
விகிதங்களை அப்படியே வைத்துக் கொண்டும் ஒரு புது கிராம
ஆவணங்களின் தொகுப்பு தயாரிக்கப்படுகிறது.

162. வருவாய்த் தொடர்ப் பணி கீழ்க்காணும் வட்டங்களில் முடிக்கப் பெற்றுள்ளது :—

| மாவட்டம். | வட்டம். | பரப்பு. | பயனடைந்தோர் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1). | (2) | (3) | (4) |
| பெரியார் .. | கோபிச்செட்டி பாளையம். | 657.67 | 88,182 |
| ௸ | சத்தியமங்கலம் | 729.07 | |
| ௸ | பவானி .. | 699.17 | 47,202 |
| ௸ | ஈரோடு .. | 1,548.79 | 1,39,632 |
| தென்னாற்காடு | கடலூர் .. | 649.13 | 64,785 |
| ௸ | திண்டிவனம் .. | 1,404.14 | 41,476 |
| சேலம் .. | மேட்டூர் .. | 237.67 | 9,646 |
| மதுரை .. | கோடைக்கானல் | 392.10 | 16,687 |
| நீல்கிரி .. | கூடலூர் .. | 413.08 | 961 |

163. வருவாய்த் தொடர்ப்பணி நீலகிரி மாவட்டத்தில் உதக மண்டலம், கூனூர், கோத்தகிரி வட்டங்களிலும், வடார்க்காடு மாவட்டத்தில் மறுநில அளவை செய்யப்பட்ட திருவ்ண்ணாமலை, வேலூர், வாணியம்பாடி வட்டத்தில் உள்ள கிராமங்களி லும், பெரியார் மாவட்டத்தில் உள்ள காங்கேயம், தாராபுரம் வட்டங்களில் மறு நில அளவை செய்யப்பட்ட சில கிராமங் களிலும் நிலுவையில் உள்ளது.

164. வட ஆர்க்காடு மாவட்டம், திருவண்ணாமலை வட்டத் தில் 264.56 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள மறுநில அளவை செய்யப்பட்ட கிராமங்களில் வருவாய்த் தொடர்ப் பணி மேற் கொள்ள திருவண்ணாமலையில் 23—6—1983 அன்று ஒரு புது கிளை நிலவரி ஏற்பாட்டு அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகம் 31—12—1983 முடிய 15.93 சதுர கிலோ மீட் டர் பரப்புள்ள 12 கிராமங்களில் வருவாய்த் தொடர்ப் பணி முடித்துள்ளது. இது இதன் அதிகார வரம்பிற்குள் உள்ள பகுதி யில் நிலுவையில் உள்ள நிலவரி ஏற்பாட்டுப் பணிகளையும் மேற் கொள்கிறது. மேலும், இவ்வலுவலகத்தைக் கொண்டு வேலூர்,



வாணியம்பாடி வட்டங்களில் சில மறு நில அளவை செய்யப்பட்ட கிராமங்களில் வருவாய்த் தொடர்ப் பணி மேற்கொள்ளவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

165. பெரியார் மாவட்டம், தாராபுரம், காங்கேயம் வட்டங் களில் 715.67 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள 29 மறு நில அளவை செய்யப்பட்ட கிராமங்களில் வருவாய்த் தொடர்ப் பணி மேற்கொள்ள தாராபுரத்தில் 1—7—1983-ல் ஒரு புது துணை கிளை நிலவரி ஏற்பாட்டு அலுவலகம் துவங்கப்பட்டுள்ளது. 31—12—1983 வரை தாராபுரம் வட்டத்தில் 71.29 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள 4 கிராமங்களில் வருவாய்த் தொடர்ப் பணி முடிந்துள்ளது.

166. நீலகிரி மாவட்டத்தில் கூடலூரில் இருந்த கிளை நிலவரி ஏற்பாட்டு அலுவலகத்தினால் பழைய இரயத்துவாரி பரப்பான 413.06 சதுர கிலோ மீட்டரில் வருவாய்த் தொடர்ப்பணி முடிக்கப் பட்டது. இவ்வலுவலகம் 19—12—1983 முதல் கூனூருக்கு இட மாற்றம் செய்யப்பட்டது. அது தற்போது உதகமண்டலம் வட் டத்தில் (1,195.03 சதுர கிலோ மீட்டர்) 1969 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டம் தொடர்பான பணிகளுடன் வருவாய்த் தொடர்ப் பணி மேற் கொள்ளப்படுகிறது. 1984-85 நிதியாண்டில் இவ்வலு வலகத்தில் நில அளவை, ஏற்பாட்டுக் கூடுதல் பணியாளர் ஒப் பளிப்பு வழங்கி கூனூர், கோத்தகிரி வட்டங்களில் 502 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வருவாய்த் தொடர்ப் பணி தொடங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

167. சேலம், தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் எஞ்சிய நிலவரி ஏற்பாட்டுப் பணிகளை முடிக்க கிளை நிலவரி ஏற்பாட்டு அலுவலகங்கள் உள்ளன. 12—11—1983 முதல் கோயம்புத் தூரில் இயங்கி வந்த நிலவரி ஏற்பாட்டுத் தலைமை அலுவலகம் மூடப்பட்டு, 5 கிளை நிலவரி ஏற்பாட்டு அலுவலகங்களும், ஒரு நிலவரி ஏற்பாட்டு துணை கிளை அலுவலகமும் தற்போது தஞ்சா வூர் நிலவரி ஏற்பாட்டு அலுவலரின் மேற்பார்வைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

புதிய திட்டங்கள் :

168. 1984-85 இல், நில அளவைப் பயிற்சி நிறுவனம் ஒன் றைத் திறக்கக் கருதப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் வருவாய், நில அளவை, கூட்டுறவுத் துறைப் பணியாளர்களுக்கும் தகுதி காண் பருவ நிலை மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், மாவட்ட உதவி ஆட்சித் தலைவர்கள் ஆகியோருக்கும் நில அளவை பயிற்சி அளிப்பதற்குத் தேவையான பயிற்சி, தங்குமிட வசதிகள் இருக்கும். கணக்கிடும் பணியை விரைவுபடுத்துவதற்காக, மத்திய நில அளவை அலுவலகத்திற்கு நுண்கணக்குப் பொறி

வாங்கவும் கருதப்பட்டுள்ளது. மத்திய நில அளவை அலுவலகத்தில் பணியாளர்களுக்கு வசதியளிக்கும் வகையில் குளிர் சாதனப் பெட்டி ஒன்று வாங்கவும் கருதப்பட்டுள்ளது.

நில அளவைப் பதிவேடுகள் பராமரித்தல் :

169. நில அளவை மற்றும் நில அளவைப் பதிவேடுகளைப் பராமரிக்கும் பணி வட்டாட்சியரின் பொறுப்பில் அவருக்குக் கீழ் நிலையில் உள்ள நில அளவை, வருவாய்த் துறை அலுவலர்கள் உதவியுடன் செயல் பட்டு வருகிறது. இப்பணியை வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மேற்பார்வை செய்கிறார்கள். பராமரிப்புப் பணியின் முன்னேற்றத்தை மாவட்ட ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர்கள் நேர்முக உதவியாளர் அந்தஸ்தில் உள்ள நில அளவை உதவி இயக்குநர் உதவியுடன் பணி முன்னேற்றம் முறையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இப்பணி மாநில அளவில் நில நிருவாக ஆணையர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகிறது. பராமரிப்புப் பணியில் செய்யப்படும் பணிகள் முறையே பட்டா மாற்றம் இனங்கள், உட்பிரிவுகளும் உள்ள இனங்களே, அல்லது உட்பிரிவு இல்லாத மாற்றங்களாலே இருக்கலாம். புதிய உட்பிரிவுகள் உண்டாக்கக் கோரிய மனுக்கள், புல எல்லையைக் காட்டக் கோரும் மனுக்கள், எல்லைக் கற்கள், தணிக்கை மற்றும் காணாமல் போகும் கற்களை நடும் பணி இவைகள் யாவும் பராமரிப்புப் பணியில் நடை முறைப்படுத்தப் பட்டு வருகின்றன.

தீவிர உட்பிரிவுத் திட்டம் :

170. முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்பட்டு வந்த மறு நில அளவை மற்றும் மறு நிலவரித் திட்டங்களுக்கு இடையே ஏற்படும் மாறுதல்கள் உடனுக்குடன் ஆவணங்களில் பதியப்பட்டு பலவகையில் பராமரிப்பு பணி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. 1937-ல் மறு நிலவரி ஏற்பாடு கைவிடப்பட்டது. அதனால், மறு நில அளவைப் பணி எடுத்துக் கொள்ளப்படவில்லை. இக்காரணத்தினால் காலப் போக்கில் நிலப்பதிவேடுகள் வழக்கொழிந்தனவாக ஆகிவிட்டன. இதன் காரணமாக கூட்டுப் பட்டாக்கள் பதிவுகள் உருவாகின. இப்பதிவுகளுக்கும் நிலப்பதிவேடுகளுக்கும் புலத்திற்கும் ஒப்பிட்டு வரவில்லை. இந்த நிலையைச் சரி செய்யும் பொருட்டு 1968 ஆம் ஆண்டில் தீவிர உட்பிரிவுத் திட்டம் என்ற பணி துவங்கப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக, கணக்கில் கொண்டு வரப்பட்ட கூட்டுப் பட்டாக்களில் மட்டும் உட் பிரிவுகள் செய்யப்பட்டு பதியப்பட்டன. இத்திட்டம் 1977 ஆம் ஆண்டு வரை 44 வட்டங்களில் 28,783 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் செயல்பட்டு வந்தது.



மறு நில அளவை :

171. சில வட்டங்களில், நில அளவைப் பதிவேடுகள் பூமியில்
உள்ளவைகளைப் பிரதிபலிக்காமல் போய் விட்டதினாலும் இப்
பதிவேடுகளைப் பராமரிப்புப் பணிக்கு ஆதாரமாகக் கொண்டு
செயல்பட முடியாததாக ஆகிவிட்டதாலும் மறு நில அளவைப்
பணி எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்பணி பெரியார் மாவட்
டத்தில் கோபிசெட்டிபாளையம், சத்தியமங்கலம், பவானி,
ஈரோடு வட்டங்களிலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் கட
லூர், திண்டிவனம் வட்டங்களிலும், சேலம் மாவட்டத்தில் மேட்
டூர் வட்டம், மதுரை மாவட்டத்தில் கோடைக்கானல் வட்டம்,
நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வட்டத்திலும், செய்து முடிக்கப்
பட்டது. இவ்வட்டங்களில் வருவாய்ப் பின் தொடர்ப் பணிகள்
செய்யப்பட்டு புதிய நில அளவை ஆவணங்கள் வட்டாட்சியர்
களுக்கு வழங்கப்பட்டன. தற்சமயம், நில அளவைத் துறையில் நீல
கிரி மாவட்டத்தில், உதகமண்டலம், கூனூர், கோத்தகிரி வட்டங்
களிலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை,
வேலூர், வாணியம்பாடி வட்டங்களிலுள்ள சில கிராமங்களிலும்,
பெரியார் மாவட்டத்தில் தாராபுரம், காங்கேயம் வட்டங்களிலும்
மறு நில அளவைப் பணி முடிக்க செயல்பட்டு வருகிறது.

நகர தெரு நில அளவை :

172. நகர எல்லையில் நிலப் பதிவேடுகள் நில அளவைத்
துறையினரால் தயாரிக்கப்படுகின்றன. நில அளவைப் பணிக்குப்
பின்பு நகர நில அளவைப் பதிவேடுகள் வருவாய்த் துறை
யினரால் பராமரிக்கப்படுகின்றன. உள்ளாட்சித் துறையினர் நகர
எல்லையின் நில அளவைப் பணியைக் கோரிய சமயம் நில
அளவைப் பணிக்கு உண்டாகும் செலவில் 2/3 பங்கு ஏற்க
சம்மதம் கொடுத்ததின் பேரில் அளவைப் பணி எடுத்துக்கொள்
ளப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் இப்பணி ஒரு நகரத்தில்
முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 37 நகரங்களில் பணி நடந்தேறி
வருகிறது.

173. ஊராட்சி எல்லைகளில் உள்ள தெருக்களிலும் அள
வைப் பணியை இத்துறை மேற்கொள்கிறது. இப்பணி துவக்கப்
படுவதற்கு முன்பு ஊராட்சிகள், நில அளவைப் பணிக்கு
உண்டாகும் செலவில் 1/3 பங்கு ஏற்க சம்மதம் அளித்த
பின்னரே அளவைப் பணி துவக்கப்படுகிறது. 1983 ஆம்
ஆண்டில் 33 ஊராட்சிகளின் பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும்
106 ஊராட்சிகளின் பணி நடந்தேறி வருகிறது.

நத்தம் நில அளவை :

174. கிராமங்களில் நத்தம் பகுதிகளில் இத்துறையினரால் விரிவான அளவை செய்யப்படவில்லை. நத்தம் புலன்களில் எல்லைகள் வரையறுக்கப்பட்டு முக்கியமான பொது

கட்டிடங்கள் மட்டுமே காட்டப்படுகின்றன. சட்டப் பேரவையில் பட்டா பாஸ் புத்தக மசோதாவின்படி வீட்டு மனைப் பட்டா வழங்க முடிவு எடுக்கப்பட்டதால் போதிய உட்பிரிவுகளை செய்ய நில அளவைப் பணி 1984 முதல் தொடங்க முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் :

175. முற்பகுதியில் கூறியபடி, மறு நில அளவை செய்வதில்லை என அரசு முடிவெடுத்ததின் காரணமாக, நில அளவை ஆவணங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்பது அவசியமெனக் கருதப் பட்டது. நாம் விரும்பும் அளவுக்குப் பணி செய்து முடிக்கவும், அதே நேரத்தில் குறுகிய காலத்திலும், குறைந்த செலவிலும், இப்பணியைச் செய்து முடிப்பதற்கென, 1979 ஆம் ஆண்டில் புதியதொரு திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி, கிராமங்களில் உள்ள எல்லா விவசாய நிலங்களையும் பழைய நில அளவையைத் துணை கொண்டு, துணை அளவை செய்ய திட்டமிடப்பட்டது. மறு நில அளவை, வருவாய்த் தொடர்ப் பணியின்போது மேற்கொள்ளும் நடைமுறைகளை, நில அளவைப் பணியாளர்களைக் கொண்டே, செய்து முடிக்க ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு நில அளவை ஆய்வாளரையும், தனி வட்டாட்சியரையும் தலைவராகக் கொண்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது. இப்புதிய திட்டத்தின்படி, ஒவ்வொரு புலமும் விசாரணைக்குட்பட்டு, அதில் காணாமல் போன சர்வே கற்கள் புதுப்பிக்கப்பட்டு, புதிய இட அமைப்பு ஆவணத்தில் பதியப் பட்டும் வருகிறது. அப்புலங்களில் உள்ள, புதிய உட்பிரிவுகள் தனியாக அளக்கப்பட்டும் பதிவு மாற்றங்கள், விசாரிக்கப்பட்டும், சம்பந்தப்பட்ட கிராம மூல ஆவணங்களான 'அ' பதிவேடு 'சிட்டா', கிராமப் புலப்படம், கிராம வரைபடம் புதிதாக தயாரிக்கப்படுகின்றன. இப்புதிய ஆவணங்களின்படி, நில உடைமையாளர்களுக்கு, புதிதாகப் பட்டா தயாரித்து வழங்கப் படுகிறது. அப்பட்டாக்களுடன், அதில் அடங்கிய புலங்களுக்கு, வரைபடங்களும் போட்டு காண்பிக்கப்படுகிறது. இவ்விதம் புலத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களின்படி, நில உடைமையாளர்களுக்கு, மறுப்புகள் எவையேனுமிருப்பின் அவைகள் வரவேற்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, முடிவடைந்தவுடன், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப்பட்டு, பராமரிப்புப் பணி செய்ய வகை செய்யப்படுகிறது. இப்புதிய எளிதான திட்டத்தினால், ஒவ்வொரு கிராமமும், பணி தொடங்கிய 7 மாத காலவரையறைக்குள் நில அளவை முடிந்து ஆவணங்கள் வட்டாட்சியரிடம் ஒப்படைக்க ஏதுவாகிறது. இதன்படி மறு நில அளவையும் வருவாய்த் தொடர்ப் பணியும், எடுத்துக் கொள்ள ஆகும் செலவிலிருந்து வெகுவாகக் குறைந்த செலவிலேயே செய்து முடிக்கப்படுகிறது.

176. இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட ஆவணங்கள் வருவாய்த் துறையினரால் அன்றாட பணி செம்மையாக நடைபெற வகை செய்கிறது. இத்திட்டம். இந்த அரசால் கொண்டு வரப்பட்



டுள்ள நில உரிமை பதிவேடு சட்டத்தை அமுல் செய்ய முன்னோடியாக உள்ளது. தற்போதுள்ள கூட்டுப் பட்டாக்கள் பிரிக்கப் பட்டு, தனிப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இப்புதிய பட்டாவின் துணை கொண்டு பட்டாதாரர்கள் தங்களது நிலத்தின் உடைமையை அறிந்து கொள்ளவும் அதன் மீது விவசாயச் சீர்திருத்தக் கடன்கள் பெறவும் வழி வகைகள் உண்டாகின்றன.

177. இத்திட்டம் கடந்த 1979 ஆம் ஆண்டில் 30 வட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரத்தில் நில அளவை இலாக்காவில் இருந்த ஊழியர்களை ஒன்று சேர்த்தும், ஒரு சில புதிய பதவிகளை அனுமதித்தும் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டப் பணியை 1982 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்துள்ளார்கள். இத்திட்டத்தினால், நில உரிமையாளர் பெறும் பயன்களை மனதில் கொண்டு, சென்ற செப்டம்பர் 1982-ல் கூடுதலான ஊழியர்களை அனுமதித்து தமிழகத்தில் எஞ்சியுள்ள பகுதிகளுக்கும் விரிவு படுத்தி, இதை அதிவிரைவுத் திட்டமாகச் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. தமிழகத்தில் உள்ள வனப் பிரதேசங்கள், மாநகராட்சிகள், நகராட்சிகள் அண்மையில் மறு நில அளவைக்குட்பட்ட பிரதேசங்கள் தீவிர உட்பிரிவு திட்டத்தின் கீழ் பணி முடிக்கப்பட்ட கிராமங்கள் போக, எஞ்சியுள்ள சுமார் 80,000 சதுர கிலோ மீட்டர் கொண்ட பரப்பளவு இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இத்திட்டப் பகுதி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், தருமபுரி, சேலம், பெரியார், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 98 வட்டங்களில் பரவியுள்ளது.

178. இத்திட்டம், 108 பிரிவு அலுவலகங்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அலகிற்கும், நில அளவை ஆய்வாளர், தனி வட்டாட்சியர் தலைவர்களாக இயங்கி வருகிறார்கள். இவர்களது பணி, தமிழகத்தில் உள்ள 15 உதவி இயக்குநர்களாலும், 12 சிறப்பு உதவி இயக்குநர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரும், மாவட்ட வருவாய் அதிகாரியும் தீவிரமாக பணி முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகிறார்கள். மேலும், தமிழகத்தை மூன்று மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மண்டலமும் ஒரு துணை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. இம்மண்டல துணை இயக்குநர் தலைமையிடம், சென்னை, மதுரை, மற்றும் கோயம்புத்தூர் ஆகும். மாநிலம் தழுவிய மட்டில் கூடுதல் இயக்குநர், இயக்குநர் இப்பணியை கண்காணித்து அரசுக்குப் பிரதி மாதமும் அறிக்கை அனுப்பி வருகிறார்கள். நில நிருவாக ஆணையரும், அரசு வணிக வரித் துறைச் செயலாளர் அவர்களும் அவ்வப்போது இத்திட்டப் பணியை மாவட்டங்களில் தணிக்கை செய்து வருகிறார்கள்.

[1984 மார்ச் 26

179. 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் இத்திட்டப் பணி முன்னேற்றத்தை அரசின் தலைமைச் செயலரும், தீவிரமாக சென்னையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் பரிசீலித்து, தக்க அறிவுரை வழங்கியுள்ளார்கள். இத்திட்டத்தை விரைவில் முடிக்க ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டன.

180. 1983 டிசம்பர் திங்களில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் திருச்சியில் ஆய்வுக் கூட்டம் நடத்தியுள்ளார் கள். இக்கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்து இத் திட்டத்தை இன்னும் சீரிய முறையில் குறைகளின்றி நடத்த அவர் களது ஆலோசனைகளையும் கேட்டுள்ளார்கள். இவ்வாய்வின் படி பொது மக்களும், குறிப்பாக, நில உடைமையாளர்களும், இத்திட்டம் நடத்தும் முறை பற்றி, திருப்தி அடைந்துள்ளார்கள் என்பது தெரிய வந்துள்ளது. ஆய்வில் ஒரு சிலர் நல்ல கருத்துக் களும் எடுத்துரைத்துள்ளார்கள். இக்கருத்துக்க்ள் அரசு மட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

181. இத்திட்டம் தற்போது அதிவேகமாக நடந்து வருகிறது. திட்டப் பணியை 30-9-1985-க்குள் முடிக்க எல்லாவித ஏற் பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக அரசு அனு மதித்துள்ள புதிய பதவிகளினால் 30-9-1985 வரை ஆகும் செலவு ரூ. 17.36 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. அது தவிர நில அளவைத் துறையிலிருந்து இத்திட்டத்திற்கு மாற்றப் பட்டு பணியாளர்களுக்காகும் செலவையும் புலக் கற்கள் நடுவதினால் ஆகும் செலவினையும் சேர்த்து, சுமார் ரூ. 33.05 கோடி செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில் சுமார் 25 கோடி ரூபாய் நில உடைமையாளர்களிடமிருந்து பணி முடிந்தபின், நில அளவைச் செலவாக வசூலிக்கப்படும்.

182. இத்திட்டத்தில் சென்ற 30-11-1983 வரை செய்து முடித்த பணியின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| (1) | கிராமங்கள். (2) | பரப்பு (ச.கி. மீட்டர்) (3) |
|---|---|---|
| பணிமுடிக்கப்பட வேண்டிய பரப்பு .. | .. | 80,000 |
| (1) அளவைப் பணி முடிக்கப்பட்ட மொத்த கிராமங்கள்/பரப்பு. | 3,663 | 23,066 |
| (2) பட்டாக்கள் வழங்கப்பட்ட கிராமங்கள்/பரப்பு. | 2,578 | 14,110 |



1984 மார்ச் 26]

| (1) | கிராமங்கள். (2) | பரப்பு (ச.கி. மீட்டர்.) (3) |
|---|---|---|
| (3) புதிய கணக்குகள் தயாரித்து வட்டாட்சியரிடம் ஒப்படைக்கப் பட்ட கிராமங்கள்/பரப்பு. | 2,241 | 11,708 |
| (4) 13-வது பிரிவு இறுதி விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்ட கிராமங் கள்/பரப்பு. | 1,671 | 8,667 |
| (5) மூல ஆவணங்கள் தயாரித்து மத்திய நில அளவை அலுவல கத்திற்கு அனுப்பப்பட்ட கிராமங்கள்/பரப்பு. | 1,308 | 6,452 |
| (6) அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை. | .. | 32,19,774 |
| (7) புதுப்பிக்கப்பட்ட கற்கள் | .. | 13,01,772 |
| (8) கண்டுபிடிக்கப்பட்ட ஆக்கிர மிப்புக்கள். | .. | 63,211 |
| (9) புதியதாக அளிக்கப்பட்ட இட அமைப்பு படத்தில் காண்பிக்கப் பட்டவை. | .. | 2,78,097 |
| (10) முடிக்கப்பட்ட ஆட்சேபனை மனுக்கள். | .. | 44,787 |
| (11) மாற்றம் செய்யப்பட வேண் டிய வகைப் பாடுகள் குறித்து வட்டாட்சியருக்குத் தெரிவிக்கப் பட்டவை. | .. | 2,359 |
| (12) திட்டத்தின் கீழ் கொடுக்கப் பட்ட பட்டாக்களின் எண் ணிக்கை. | .. | 14,72,291 |
| (13) திட்டத்தினால் பயனடைந் தோரின் எண்ணிக்கை. | .. | 21,97,817 |

(14) திட்டத்தின் பயன் :

| திட்டத்தின் பயன். | தனிப் பட்டா. | கூட்டுப் பட்டா. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| திட்டத்திற்கு முன்பு. | 6,50,863 | 4,27,413 | 10,89,276 |
| திட்டத்திற்கு பின்பு. | 10,91,090 | 3,81,201 | 14,72,291 |

## XIX. நில உரிமைப் பதிவேடு வழங்கல் திட்டம்.

183. நிலப்பட்டாதாரர்கள் தங்களிடம் உள்ள நில உடைமைகளின் நாளது வரையிலான விவரங்களைக் கொடுத்து அதன் மூலம் நில உரிமைப் பதிவேடுகளைப் பெறவும், வருவாய்த் துறை நிர்வாகத்திற்குப் பயனுள்ள ஒரு புத்தகமாக விளங்கவும் இந்நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டம் 1972-ல் செலவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், இத்திட்டம் சட்டரீதியில் கொண்டுவரப்பட்டதல்ல. மேற் சொன்ன திட்டம் நடைமுறை யில் செயல்படுவதில் சில குறைபாடுகள் புலப்பட்டதால் நிதித் துறையைச் சேர்ந்த மதிப்பீடு செய்முறை ஆராய்ச்சித் துறை முன்னோடி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. அதன்படி நில உரிமைப் பதிவேடு திட்டத்தைத் திறமையான முறையில் செயல் படுத்துவது பற்றி ஆய்வு செய்ய முன்னாள் வருவாய் வாரியத் தின் நில வரி ஆணையாளரின் கீழ் குழு ஒன்று ஏற்படுத்தப் பட்டது. உழவர்கள் பயனடையும் வகையில் நில உரிமைப் பதிவேடு அடங்கல் புத்தகமாக ஆக்க அதனை மாற்றி அமைக்க வேண்டுமென இக்குழு கருத்து தெரிவித்தது. நிதி உதவும் நிறுவனங்கள், கடன் வழங்கும் நிறுவனங்கள் ஆகியவை நில உரிமைப் பதிவேட்டைத் தாக்கல் செய்தவுடன் கடன்கள் வழங்க இயலும் வகையில் நில உரிமைப் பதிவேட்டைச் சட்டப் பூர்வமானதாகச் சட்டமியற்றவும் பதிவு அலுவலகங்களில் விற்பனை, அடமானம் போன்ற சொத்து மாற்றம் பற்றிய ஆவணங்களைப் பதிவு செய்யும் போது பதிவுகளைச் செய்வதற் காகவும் நில உரிமைப் பதிவேடு கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத்தப்படவும் குழு பரிந்துரை செய்தது.

184. தமிழ்நாடு நில உரிமைப் பதிவேடு வழங்கல் சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு எண். 49/81) 1981-ஆம் ஆண்டு மே திங்களில் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இச் சட்ட முன்வடிவு, கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. கூட்டாய்வுக் குழுவின் பரிந்துரைகளின் படி திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு, நிலத்தின் உரிமையாளர் ஒவ்வொருவருக்கும், அவர் சொந்தமாக வைத்துள்ள நிலத்திற்கு விண்ணப்பிக்கும்



போது நில உரிமைப் பதிவேடு ஒன்றை வட்டாட்சியர் வழங்க வகை செய்கிறது. இச்சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட்டு செயலுக்குக் கொண்டுவரும்போது ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரும் நில உரிமை பதிவேடு விண்ணப்பிக்க வேண்டும் என்று வட்டாட்சியர் அறிக்கை ஒன்றினை வெளியிட வகை செய்யப்பட்டுள்ளது. விற்பனை, கொடை, அடமானம், பரிவர்த்தனை, செட்டில் மென்ட் மூலமாக அல்லது வேறு வகையில் ஏதேனுமொரு நிலத்தை உரிமை மாற்றம் செய்வதற்காகத் தாக்கல் செய்யப்படும் பத்திரம் எதையும் அந்நிலம் தொடர்பான நில உரிமைப் பதிவேட்டைத் தாக்கல் செய்தாலன்றி மற்றபடி பத்திரப் பதிவு செய்யும் அலுவலர் பதிவு செய்யக் கூடாது. வீட்டுமனை நிலங்களுக்கும் நில உரிமைப் பதிவேடு வழங்க இச்சட்ட முன்வடிவு வகை செய்கிறது.

185. இச்சட்ட முன்வடிவு 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடந்த சட்ட மன்றக் கூட்டத்தொடரில் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு இந்தியக் குடியரசுத் தலை வரின் இசைவை எதிர்நோக்கியுள்ளது. இச்சட்ட முன்வடிவு சட்டமாக்கப்பட்ட பின்னர் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய விதிகளை அரசு இயற்றும்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

2315 | ஆ ஜா | 85
2784

வெளியீடு 21-2-85]

[Issued 21-2-85
தமிழ்நாடு
2 . MAR .
தமிழ்நாடு

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 27, 1984 - தொகுதி LXIII எண் 4
Tuesday the 27th March 1984 - Volume LXIII No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்/ [Price Rs. 3-50 paise

உள்ளடக்கம்.

27—3—1984


பக்கங்கள்.

1. இரங்கல் குறிப்பு :

முன்னாள் உறுப்பினர் திரு. பாலகங்காதரன் மறைவு .. .. .. .. .. 773

2. வினாக்கள்-விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 774—813

3. தகவல் கோரல் :

சட்டமன்ற விடுதி வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்து .. .. .. .. .. 813— 814

4. கவன ஈர்ப்புகள் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குட்டக்குழி ஆரம்பச் சுகாதார நிலைய ஜீப் விபத்திற் குள்ளானது .. .. .. .. 814—821

(ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் முதி யோர், விதவைகள், ஊனமுற்றோர் ஆகி யவர்களுக்கு வழங்கப்பெறும் அரசு உதவித் தொகை .. .. .. .. .. 821—824

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1984 .. .. .. .. 825

(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1984 829

(இ) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1984 .. 894

6. அறிவிப்புகள் :

(அ) 1984-85 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் (ஆ.இ.) .. 825

(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவு 1984 (ஆ.இ.) .. .. .. .. .. 829

(இ) 1983-84 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் (ஆ.இ.) .. .. 830

(ஈ) நிதிஒதுக்க சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.) .. .. .. .. .. 893

| | பக்கங்கள் |
|---|---|
| 7. முன்பண மானியக் கோரிக்கைகள் 1984-85. | 826—829 |
| 8. இறுதி துணை நிதி அறிக்கை 1983-84, பொது விவாதமும், வாக்கெடுப்பும் : | 830—893 |
| திரு. எல். இளையபெருமாள். | 830—839 |
| திரு. கே. உச்சி. | 840—843 |
| திரு. அ. ரகுமான்கான். | 844—854 |
| திரு. எம். சின்னசாமி. | 855—857 |
| திரு. கே. ஆர். சுந்தரம். | 857—863 |
| திரு. ஆர். ரங்கசாமி. | 863—868 |
| திரு. ஏ. டி. கருப்பையா. | 868—873 |
| திரு. ப. நெடுமாறன். | 873— 879 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 879—888 |
| 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 894 |


# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

**1984 மார்ச் 27, செவ்வாய்க்கிழமை**

**பங்குனி 14, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.''

பொருள் வரும் வழிகளை மென்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்.

## 1. இரங்கல் குறிப்பு.

(முன்னாள் உறுப்பினர் திரு. பாலகங்காதரன் மறைவு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஏ.எம்.பி.எஸ். பாலகங்காதரன் அவர்கள் 25—3—1984 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.எம்.பி.எஸ். பாலகங்காதரன் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை, தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

[1984 மார்ச் 27

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறிட்ட வினாக்கள்

### மாநில மின் உற்பத்திக் கழகம் அமைப்புத் திட்டம்.

467—(*வினா எண் 21139) திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தின் மின் உற்பத்தியைக் கவனிக்கவென்று ", மாநில மின் உற்பத்திக் கழகம் '' ( Power Generation Corporation ) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்தில் 2, 3 ஆண்டுகளாக மின் உற்பத்திக்கு என்று ஏராளமான அளவில் மாநில அரசு தொகையை ஒதுக்கி செலவு செய்துகொண்டிருக் கிறது. மின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக கர்நாடக மாநில அரசு கூட இப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தி அது திறன்பட செயல்பட்டு வருகிறது. அதாவது மின் உற்பத்திக் காக மட்டும் தனிக் கழகமே ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி ஏராளமான அளவில் மின் உற்பத்திக்காக மின் வாரியம் செலவு செய்து வருவதால், மின் உற்பத்தியை திறம்பட செய்வதற்காக, மின் உற்பத்திக்காக மட்டுமே நம்முடைய மாநிலத்திலும் தனியாக கழகம் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியம் மின் உற் பத்தியைச் செய்வது போல, மாநிலத்தில் உள்ள தனிப்பட்டவர் கள் மின் உற்பத்தியை செய்வதற்கு முன்வந்தால், அவர்களை அனுமதிப்பதற்கான அனுமதியை மாநில அரசு மைய அரசிடம் கோரியிருக்கிறதா ? அப்படி என்றால் அதனுடைய விவரங்கள் தெரிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இந்தக் கேள்விக்கான பதில் இங்கேயே அளிக்கப்பட்டிருக் கிறது



1984 மார்ச் 27]

### சூரிய சக்தியைப் பயன்படுத்தித் தெருவிளக்குகளை எரியச் செய்யும் திட்டம்.

468—(*வினா எண் 22566) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 25 கிராமங்களில் சூரிய சக்தியைப் பயன் படுத்தித் தெரு விளக்கு எரியச்செய்ய பாரத கனரக மின் கழகத் தொழிற்சாலை ஏற்பாடு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) பழங்குடியினர் வாழும் கல்ராயன்மலை, பச்சைமலை போன்ற மலைப்பகுதிகளில் உள்ள 17 கிராமங்களில் சூரிய சக் தியை மின் சக்தியாக மாற்றவல்ல போட்டோ வோல்ட்டேக் அமைவுகளை நிறுவி தெருவிளக்கு வசதி அளிப்பது பற்றிய சாத் தியக் கூறுகளை ஆய்வு செய்து ''பெல்'' நிறுவனம் அறிக்கை சமர்ப்பித்தது. இந்த நவீன திட்டம் இந்தியாவில் முதன் முறை யாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படுவதால் 5 கிராமங்களுக் குத் தேவையான ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள போட்டோ வோல் டேக் கருவிகளை இலவசமாக வழங்கும்படி சென்ட்ரல் எலக்ட் ரானிக் நிறுவனத்தை மத்திய அரசு பணித்துள்ளது. இந்த 5 கிராமங்களைப் பொறுத்த வரையில் இத் திட்டம் தமிழ்நாடு மின் வாரியத்தின் ஒத்துழைப்புடன் நடப்பு நிதி ஆண்டிலேயே (31—3—1984க்குள்) நிறைவேற்றப்படும்

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே 25 கிராமங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், 5 கிராமங்களிலேதான் 31—3—1984க்குள் இது முடி வடையும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது ஏற்கெனவே இந்தியாவிலே வேறு மாநிலத்திலே ஏதாவது பரிட் சார்த்தமாக செய்து பார்த்திருக்கிறார்களா ? அல்லது நம் முடைய மாநிலத்திலேதான், இது முதன் முதலிலே ஏற்படுத்தப் படுகிறதா ? அப்படி என்றால், இது வெற்றிகரமாக நடை பெறும் என்ற நம்பிக்கை உள்ளதா? அப்படி வெற்றி பெற்றால் எல்லாக் கிராமங்களிலும், இதை அமுல்படுத்தும் வகையில் அர, சாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மரபு வழிப்படா சக்தி மூலங்களுக்கான துறை Department of Non-Conventional resources of Energy. அவர்கள் ஒரு திட்டம் வகுத்துள்ளார்கள். அதாவது எளிதாக

[1984 மார்ச் 27

சென்று அடைய முடியாத மலைப் பகுதிகளிலே மலைவாழ் மக்
கள் இருக்கின்ற பகுதிகளிலே இத்தகைய முயற்சிகள் மேற்
கொள்ளப்பட வேண்டும் என்பது. இங்கே 85 கிராமங்களிலே
அத்தகைய திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்பி
னோம். இருந்தாலும், 17 கிராமங்களுக்காவது தரவேண்டு
மென்று நாம் இந்திய அரசைக் கேட்டோம். அவர்கள் 5 கிராமங்
களுக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று அனுமதி வழங்கியிருக்
கிறார்கள். இது முதன்முதலாக சோதனை அடிப்படையில்
செய்யப்படுகிறது. அதன் விளைவுகளைப் பொறுத்து இருந்து
பார்த்துத்தான் வெற்றிகரமான திட்டமா இல்லையா என்
பதை அறிய வேண்டும்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, என்
னுடைய தொகுதியிலே கரந்தா மலைப் பகுதியிலே அந்த மலை
உச்சியிலே 1,500 மக்கள் வாழ்கிறார்கள். ஆகவே, இந்தத்
திட்டத்தை அரசாங்கமே அங்கே செயல்படுத்த பரிசீலனை செய்
யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
தற்போது, 5 கிராமங்கள், கன்னூர், கள்ளிப்பாறை, உண்டக்கல்
வளைவு, அக்காரப்பட்டி, மேல்நாடு மன்னூர், தென் ஆற்காடு,
சேலம் மாவட்டத்திலே உள்ள கல்ராயன் மலைப் பகுதியிலே
உள்ள இந்தக் கிராமங்களுக்கு 31—3—1984-க்குள் அமல்படுத்தக்
கூடிய திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற
திட்டம் பற்றிய பதில் என்னிடத்தில் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, சூரிய
ஒளி பகலில் தான் இருக்கிறது. அப்படியிருக்கிறபோது, இரவு
நேரத்திலே சூரிய ஒளியில் எப்படி மின்சாரத்தைத் தயாரிக்க
முடியும் ? நிலா வெளிச்சத்திலிருந்தோ அல்லது நட்சத்திர
வெளிச்சத்திலிருந்தோ மின்சாரம் தயாரிப்பதற்கான நட
வடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
சூரிய வெளிச்சத்திலிருந்து தான் மின்சாரம் பெறப்படுகிறது.
பகலில் அதை சேமித்து வைத்து இரவிலே பயன்படுத்துவதுதான்.
எப்படி டார்ச் லைட்டிலே சேமித்து வைத்துக் கொண்டு அவ்
வப்போது பயன்படுத்துகிறோமோ அதைப் போன்றதுதான்
இது. நிலா வெளிச்சம், நட்சத்திர வெளிச்சம் எல்லாம் அவ்வளவு
எளிதானதல்ல.



1984 மார்ச் 27]

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்திற்கு சொந்தமான நிலங்கள்.

469—(*வினா எண் 11614) திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு எவ்வளவு நிலங்கள் உள்ளன ?

(ஆ) இந்நிலங்களை அனுபவித்து வருபவர்கள் யார், யார்?

(இ) இந்நிலங்களை அனுபவித்து வருபவர்கள் குத்தகைகளை முறையாகச் செலுத்தி வருகின்றனரா ?

(ஈ) பாக்கிகளை வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்திற்கு—மொத்தம் 187.22 ஏக்கர் நிலம் உள்ளது. நஞ்சையாக 140.49 ஏக்கர் நிலமும், புஞ்சையாக 46.73 ஏக்கர் நிலமும் உள்ளது.

(ஆ) அந்நிலங்களுக்கு கீழ்க்கண்டவர்கள், குத்தகைதாரர்களாக இருக்கின்றார்கள் :—

| பெயரும், ஊரும். (1) | நிலத்தின் விஸ்தீரணம். (2) | | |
|---|---|---|---|
| | நஞ்சை. | புஞ்சை. | மொத்தம் |
| 1. திரு. ஈ. ராஜேந்திரன், பாலூர் .. | 11.78 | 2.08 | 13.86 |
| 2. திரு. பி. எஸ். ஞானமணி, பொடவூர் .. | 1.86 | .. | 1.86 |
| 3. திரு. வரதன், ஆரியபெரும்பாக்கம் .. | 1.82 | .. | 1.82 |
| 4. திரு. எத்திராஜலு நாயுடு, மஹாஜனம்பாக்கம் | 1.32 | .. | 1.32 |
| 5. திரு. கன்னியப்ப நாயகர், அகரம், கோவிந்தவாடி | 5.84 | .. | 5.84 |
| 6. திரு. முருகன், செட்டித்தாங்கள் | .. | 4.74 | 4.74 |

[1984 மார்ச் 27

| பெயரும், ஊரும். (1) | நிலத்தின் விஸ்திரணம். (2) நஞ்சை, | புஞ்சை, | மொத்தம். |
|---|---|---|---|
| 7. திரு. சி. வி. எம். இளஞ்செழியன், த/பெ. சி.வி.எம். அண்ணாமலை, லாலாதோட்டம், காஞ்சிபுரம் | .. | 9.95 | 9.95 |
| 8. லேட் சி. வி. எம். சுகுமாரன், பா/பெ. துரை அம்மாள், திருமல்ராயன் தோட்டம், காஞ்சிபுரம் .. .. | .. | 6.49 | 6.49 |
| 9. திரு. கன்னியப்பன், தாதிக்கார தோட்டம், காஞ்சிபுரம் .. .. | .. | 2.27 | 2.27 |
| 10. திரு. வடிவேலு, வெங்கடகிரிராஜா தோட்டம், காஞ்சிபுரம் .. .. | .. | 2.00 | 2.00 |
| 11. திரு. மு. ஆறுமுக முதலியார், பிரதோஷ தோட்டம், காஞ்சிபுரம் .. .. | .. | 1.58 | 1.58 |
| 12. வார குத்தகையாக 90 நபர் களுக்கு விடப்பட்டுள்ளது | 82.64 | 12.91 | 95.55 |
| 13. திரு. கே. முனுசாமிப் பிள்ளை, நரப்பாக்கம் .. .. | 21.82 | 4.71 | 26.53 |

மேற்கண்ட 13 குத்தகைதாரர்களை தவிர, ஆமூர் கிராமத்தில் உள்ள 13.41 ஏக்கர் நஞ்சை நிலத்தை சிலர் ஆக்கிரமிப்பு செய்து உள்ளனர்.

(இ) 13 குத்தகைதாரர்களில் ஐந்து பேர்கள் முன் பசலி களிலிருந்து குத்தகை பாக்கி வைத்துள்ளனர். மற்றவர்கள் நடப்பு 1391 ஆம் பசலிக்கான குத்தகை மட்டும் செலுத்த வேண்டியுள்ளது.

(ஈ) குத்தகை பாக்கிகளை 1391 ஆம் பசலிக்குள் வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. மேலும் பாக்கிகளை வசூலிக்கவும் நிலத்தை திரும்பவும் ஆலய வசம் ஒப்படைக்கவும் நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டும், நில குத்தகைதாரர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு நடந்து வருகின்றன.



1984 மார்ச் 27]

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, தற்போது
கோயில் சொத்துக்கள் நீண்ட காலக் குத்தகையின் அடிப்படை
யில் குறைந்த தொகைக்கு விடப்பட்டு அந்தச் சொத்துக்களை
அனுபவித்து வருகிறவர்கள் அதையும் சரியாகச் செலுத்தாமல்
இருந்து வருகிற நிலைமை இருக்கிறது. தற்போது மார்க்கட்
நிலவரத்தின்படி பார்த்தால் கூட, ஏற்கெனவே நிர்ணயித்துள்ள
தொகை மிகவும் குறைவாக உள்ளது. கோயில் சொத்துக்கள்
அதிக அளவில் இருந்தாலும் வருமானத்தைப் பெருக்குகிற
காரியங்களில் அமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும் இப்
போது உள்ள நிலவரப்படி அந்தத் தொகையை வசூலிக்க முடியா
மல் இருக்கிறது. ஏற்கனவே குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும்
அமைச்சர் அவர்கள் அந்தக் குத்தகைகளை எல்லாம் ரத்து செய்து
ஏற்கனவே இருக்கிறவர்களிடமிருந்து கோயில் சொத்துக்களை
மீட்பதற்காகவும், கோயில்களுக்கு வருமானத்தைப் பெருக்கு
வதற்காகவும், சட்டப்படி ஏதாவது முயற்சிகளை மேற்கொள்
வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே
தமிழகம் முழுவதும் ஆலயங்களுக்குச் சொந்தமான மனைக்
கட்டுகள் கட்டடங்கள் குறிப்பாக காலியிடங்கள் மிக நீண்டகாலக்
குத்தகைக்கு மிகக் குறைந்த கட்டணத்திலே கொடுக்கப்பட்
டிருக்கிறது. அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்கள் பல
லட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமானம் உள்ள கட்டடங்களைக்
கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அல்லது உள் குத்தகைக்கு
விட்டிருக்கிறார்கள். பல இடங்களிலே மற்றவர்களுக்கு விற்
றும் இருக்கிறார்கள். குறிப்பாக இந்த ஆலயத்தைப் பொறுத்த
வரையில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்தைப் பொறுத்த
வரையில் இதற்கு பெரிய மதிப்புள்ள மனைக்கட்டுகள் சென்னை
யில் பெரியார் ஈ. வே. ரா. சாலை என்று அழைக்கப்படுகிற
முன்னாலே பூந்தமல்லி நெடுஞ்சாலை என்று அழைக்கப்பட்ட
சாலையில் ஏறத்தாழ 150 மனைகட்டுகள் நீண்டகால குத்த
கைக்கு 99 ஆண்டுகள், 75 ஆண்டுகள் என்று 4 அணா
8 அணா என்று ஒரு காலத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. இன்
றைக்கு அந்த இடத்திலே ஒரு மனையை 5 லட்ச ரூபாய் மதிப்பாக
இருந்து வருகிறது. அதைப் போல சென்னை நகரம் முழுவதும்
பல ஆலயங்களுடைய மனைக்கட்டுகள் எந்த அளவுக்கு
குறைந்த வாடகைக்கு 1, 2, 10 ரூபாய்க்கு எடுத்துக்கொண்டு
நல்ல வசதி மிக்கவர்களால் கட்டடங்கள் அங்கே எழுப்பப்
பட்டிருக்கின்றன, மற்றவர்களுக்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருக்
கின்றன. ஆகவே, நீண்டகால குத்தகைக்கு குறைந்த
வாடகைக்கு அல்லது குறைந்த தொகைக்கு ஆலய இடங்களை
அவர்கள் உரிமைப்படுத்தியிருப்பது செல்லத்தக்கதாக இல்லை
என்று சட்ட அடிப்படையில் அறிவிக்க அதைப் பரிசீலனை செய்து
—காரணம் மைனர் சொத்துக்களை அறங்காவலர்களாக இருப்
பவர்கள் மைனர்களுக்கு விரோதமாக முறைகேடாக நட்டம்

ஏற்படுகிற வகையில் செய்தால் அது செல்லாது என்று அந்தச் சட்டத்தின் அடிப்படையில் சட்டத் திருத்தம் கொண்டுவந்து இவைகளை முறைப்படுத்தவும், நீண்டகாலக் குத்தகைகளை ரத்து செய்து அதற்குரிய கட்டணங்களை வசூலிக்கவும், ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வருவதற்காக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி எல்கிற சொரணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோயில் நிலங்கள் சுமார் 90 பேருக்கு தான் வார குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் அதை ஏலத்திற்கு எடுத்து அவர்கள் பலருக்குக் குத்தகைக்குக் கொடுக்கிற நிலைமை எல்லாம் இருக்கிறது. அவைகள் பூராவையும் ரத்து செய்துவிட்டு யார் பயிர் செய்கிறார்களோ அவர்களுக்கே நேரடியாக குத்தகைக்குக் கொடுத்து 75-க்கு 25 என்று சட்ட அடிப்படையில் அரசே நேரடியாக அதை வசூல் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் பயிர் செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை புதுப்பிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால், சில பேர் இதிலே அவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டு இருக்கிறவர்கள் அல்லது குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறவர்கள். குத்தகைக் காலம் முடிந்த பிறகும் கூட அதை ஆலயத்திற்கு திருப்பிக் கொடுக்காமல், அதை திருப்பிக் கொடுக்கும்படி கேட்டால் வழக்கு மன்றத்திற்கு போய் தடை ஆணை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். ஆக அந்த அடிப்படையில் வழக்கு மன்றம் போனதால் பல நடவடிக்கை நிலுவையில் இருக்கின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் 13 பேர் சாகுபடி செய்து வருவதாகவும் அவர்களில் 5 பேர்கள் முன் பசலிகளிலிருந்து குத்தகை பாக்கி வைத்துள்ளனர் என்றும் விவர அறிக்கையில் இருக்கிறது. இந்த 5 நபர்கள் யார் ? யார் ? அவர்கள் எந்த பசலியிலிருந்து பாக்கி கொடுக்க வேண்டும் ? ஒவ்வொருவரும் எவ்வளவு பாக்கி ஆலயத்திற்கு செலுத்த வேண்டும் ? என்பதை தெரிந்துகொள்வதோடு குத்தகை உரிமை ஒருவர் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் வைத்



துக்கொள்ள உரிமை இல்லை. இருந்தாலும் கூட இந்த விவர அறிக்கையில் 3 நபர்கள் 13.86 ஏக்கரும், 9.95 ஏக்கரும், 26 53 ஏக்கரும் குத்தகை வைத்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. அப்படி ஆனால், அந்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்துக் கொள்ளக்கூடாது என்ற அந்த உரிமையை அவர்கள் மீறியிருக்கிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஏழை எளிய மக்களுக்கு நிலத்திலே இறங்கி விவசாயம் செய்து அந்த நிலத்தை வைத்து பாடுபட்டு வாழ்க்கை நடத்துகிறவர்களுக்கு இந்த நிலங்கள் எல்லாம் பயன்பட வேண்டும் என்று கருதித்தான் 3 ஏக்கராகவே குறைத்து இருக்கிறோம். 5 ஏக்கர் என்று இருந்ததை பின்னால் 3 ஏக்கர் என்று குறைத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் அதிக நிலங்களை வைத்துக் கொண்டு இருக்கிறவர்களிடம் அந்த குத்தகைக் காலம் முடிந்த உடனே ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று கேட்டபோது அப்படி பல பேர் ஒப்படைப்புச் செய்யாமல் வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டது 5 பேர் பாக்கி வைத்து இருப்பது யார் என்ற விவரத்தைக் கேட்டார்கள். அதிலே பி. எஸ். ஞானமணி என்பவர், மிக குறைந்த குத்தகை தான். அவைகளுக்கு எல்லாம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்த 75-25 என்ற வார அடிப்படையில் கூட அல்ல. அப்படி வைத்து இருக்கிற அந்த குத்தகைக்கு கூட 6 ஆண்டுகளுக்குமேல் பாக்கி வைத்திருக்கிறார். 5 ஆண்டுகள் வரை இருக்கிற கணக்கு 1,750 ரூபாய். திரு. கன்னியப்ப நாயகர் 5 ஆண்டுகளுக்கு 2,400 ரூபாய். திரு. வடிவேலு என்பவர் 6 ஆண்டுகளுக்கு 5,417 ரூபாய்-முனுசாமிப்பிள்ளை 2 ஆண்டுகளுக்கு 1,300 ரூபாய். சரி, இந்த நிர்ணயித்த அளவுக்கு மேல் வைத்து இருக்கிறார்களே நடவடிக்கை எடுத்தீர்களா என்று கேட்டார்கள். அது பற்றி ஒரு விவரத்தைச் சொன்னால் நமக்கு பயன் உள்ளதாக இருக்கும். அப்படி வைத்துக்கொண்டு இருக்கிறவர்களில் முன்னாள் அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்களின் குமாரர்கள் பெயரில் 2 நிலங்கள் இருக்கின்றன, அது 9.95 ஏக்கர், 6.49 ஏக்கர் ஆகும். அவர்கள் குத்தகைக் காலம் முடிந்து ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டபோது ஒப்படைக்காமல் அவர்கள் நீதி மன்றத்திற்கு போய் வழக்கை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட வில்லங்கங்களினால் அப்படி அதிகமான நிலங்கள் வைத்து இருக்கிறவர்கள் இடமிருந்து பெற முடியாமல் ஏழை எளிய மக்களுக்கு அதை பிரித்துக் கொடுக்க முடியாமல் ஆலய நிர்வாகங்கள் சங்கடப்பட்டுக்கொண்டு இருக்கின்றன.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்து வருகிறவர்கள், ஏழை விவசாயிகளுக்காக கொண்டுவரப் பட்ட குத்தகை பாதுகாப்புச் சட்டத்தில் தான் அவர்கள் புக லிடம் தேடிக் கொள்கிறார்கள். ஆகவே, குத்தகை வசூல் செய்ய முடியாததற்குக் காரணம் அந்தச் சட்டத்தில் நியாயமற்றமுறை யில் அவர்கள் பாதுகாப்புப் பெறுவது தான். ஆகவே, குத்தகை பாதுகாப்புச் சட்டத்தில் கோயில் நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க அரசு முன்வருமா என் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வரவர்களே, ஏழை எளிய விவசாயிகளுக்கு, வெள்ளத்தினா லேயோ அல்லது வறட்சியினாலேயோ விளைச்சல் இல்லாமல் இருந்து அவர்கள் அந்தக் குத்தகை நெல்லையோ அல்லது தொகை யையோ கொடுக்க முடியாமல் இருந்தால் அரசாங்கமே அனுமதி அளித்து வஜா செய்கிறது. ஆனால், இதைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய அளவில் பல பேர்களில் இந்த நிலங்களைக் குத்தகைக்கு வைத்துக்கொண்டிருப்பவர்கள், இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, ஆலயங்களுக்குத் தர வேண்டிய அந்த 25 சத வீதம் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகை இருக்கிறதே அதைக் கூடத் தராமல் நீண்டகாலமாக இப்படிப் பாக்கி வைத்துக்கொண் டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து, இப்படிப்பட்ட ஆலயங்களின் நிர்வாகத்தைக் காப்பாற்றுவதற்காக, இப்படிப் பட்ட ஆலயங்களுக்கு நிதி ஒழுங்காக வந்து சேருவதற்காக இதற்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்று மாண்புமிகு முதல்வரவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதற்கான சட்ட முன் வடி வைக் கொண்டு வருவதைப் பற்றிச் சட்டத்துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

## இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் கீழுள்ள நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்கான கட்டணம்.

470 —(*வினா எண் 11949) திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை யின் கீழ் உள்ள நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்குத் தணிக்கைக் கட்டணம் எவ்வாறு வசூலிக்கப்படுகிறது ?

(ஆ) தற்போது நிலுவையில் உள்ள தணிக்கைக் கட்டணத் தொகை எவ்வளவு ?

(இ) நிலுவையை வசூலிக்க அரசு மேற்கொண்ட நட வடிக்கை யாது ?



மாண்புமிகு திரு. ஆர். எம். விரப்பன் : (அ) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய சட்டம் 1959 பிரிவு 92(2)ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் ரூபாய் ஆயிரத் திற்கு மேல் ஆண்டு வருமானமுள்ள, இந்து சமய நிறுவனங் களிடமிருந்து ஆண்டொன்றிற்கு $1\frac{1}{2}$ சதவீதம் வீதம் கேட்பு பிறப்பித்து சம்பந்தப்பட்ட உதவி ஆணையரால் சரக ஆய்வர் மூலமாக ஆலய நிர்வாகிகளுக்கு சார்வு செய்யப்பட்டு தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) நிலுவையில் உள்ள தொகை (31—12—1983 நிலவரப்படி) ரூ. 47,10,768.

(இ) அவ்வப்போது ஆணையரால் உதவி ஆணையர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டும், முகாம் செல்லும்போது நேரில் அறிவுறுத்தப்பட்டும், மாதவாரியாக அறிக்கை கேட்கப்பட்டும், அவைகளின் திறனாய்வு செய்து, தக்க நடவடிக்கை எடுத்து வசூல் செய்ய அறிவுரைகள் வழங்கப்பட்டும், தீவிர வசூல் இயக் கம் மூலமாகவும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

## திருவரங்கத்தில் அறநிலையத் துறையின் சார்பில் வாடகைக்கு விடுதிகள் கட்டித் தரும் திட்டம்

471 —(*வினா எண் 17964) திரு. மே. அ. இராசகுமார் : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி மாவட்டம் திருவரங்கத்தில் அறநிலையத்துறை யின் சார்பில் வாடகைக்கு விடுதிகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

(இ) அதன் திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இவ் வினா எழவில்லை.

[1984 மார்ச் 27

அடையாறு பகுதியிலுள்ள அருணாசலபுரத்தில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு.

472 —(*வினா எண் 18027) —திரு. த. வேணுகோபால் :
மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா —

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்
திற்குச் சொந்தமான சென்னை, அடையாறு பகுதியிலுள்ள,
அருணாசலபுரம் என்கிற இடத்தைத் தனியார் ஆக்கிரமித்துள்ளது
அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :
மாவட்டம் திருவண்ணாமலை அருள்மிகு வடஆற்காடு
திருக்கோவிலுக்குச் சொந்தமான, அருணாசலேஸ்வரர்,
கிராமத்தில் அருணாசலபுரத்தில் சென்னை, அடையாறு, ஊரூர்
குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 13 கிரவுண்ட் 133½ பெரும்பாலும்
நிலம் மட்டுமே 33 நபர்களால் ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டுள்ளது. சதுர அடி

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர்
ஆலயத்துக்குச் சொந்தமான சென்னை, அடையாறு பகுதியில்
உள்ள அந்த நிலங்கள் எத்தனை ஆண்டு குத்தகைக்கு விடப்பெற்
றது ? அதிலிருந்து கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ?
அங்கே ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களை அகற்றுவதற்கு அரசு
எடுத்த நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவ
ரவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர்
ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் சென்னை நகரத்தில் 315
கிரவுண்ட் மற்றும் 1,109½ சதுரஅடி மனை அடையாறு, ஊரூர்பகுதி
யில் இருக்கின்றன. அதிலே பலருக்குக் குத்தகைக்கு விட்டிருக்
கிறார்கள். நீண்ட காலக் குத்தகைக்கெல்லாம் கூட விட்டிருக்
கிறார்கள். அதைப்பற்றி விவரமான அறிக்கை வேண்டுமானால்,
தனியாகக் கேள்வி கேட்டால்தான் விவரங்களை வைக்க முடியும்.
அது நீண்ட பதில். இந்த, 13 கிரவுண்ட் 133½ சதுர அடி நிலம்
33 நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அநேக
மாக, பெரும்பாலும் ஆதிதிராவிட மக்கள் அதில் குடிசைகள்
போட்டு, வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, அவர்களை அப்
புறப்படுத்துவது அவ்வளவு சரியாக இருக்காது என்ற காரணத்
தினால், அவர்களுக்கெல்லாம் குறைந்த வாடகை நிர்ணயிக்கப்
பட்டு அதைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்
கிறோம். அதற்கான தவணைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.
அப்படி அதை ஒப்புக்கொண்டு சிலர் வாடகை செலுத்திக்கொண்டு
வருகிறார்கள் ; சிலர் செலுத்தாமல் இருக்கிறார்கள். இருந்தா



1984 மார்ச் 27]

லும், அவர்களுக்கு தவணைகொடுத்து, காலவரையறை நிர்ணயித்து, அந்தக் குறைந்த வாடகையைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதிலே ஆக்கிரமிப்பு செய்து குடிசைகளைக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் பெரும்பாலும் ஆதி திராவிட மக்கள் என்பதாலும், அவர்கள் வீடுகள் இல்லாதவர்கள் என்பதாலும் அந்த அடிப்படையில் ஆலயம் இதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது.

(முற்பகல் 9-20)

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, அங்கே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகள் அல்லாமல் மற்ற பகுதிகள், அதாவது வீடுகள் இல்லாமல் காலியாக உள்ள மற்ற பகுதிகளும் ஆக்கிரமிப்புக்கு உட்படாத வகையிலே அந்த காலி இடங்களை ஆலயத்திற்கே சொந்தமாக்குகின்ற வகையிலே அப்படி ஒரு பாதுகாப்பு கொடுப்பதற்குரிய நடவடிக்கை அரசு எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படி குடிசைகள் போடப்படாமல் ஆக்கிரமிப்பு செய்யப்படாமல் இருக்கின்ற காலி மனைகளைப் பாதுகாக்கின்ற வகையிலே நடவடிக்கை எடுத்து அவற்றை ஆலயத்தின் வசத்திலேயே வைத்திருக்க வேண்டும் என்று கடுமையாக அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான இடத்தை ஆதிதிராவிட மக்கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்க வேண்டும் என்ற அடிப்படையிலே அரசாங்கத்தின் செலவிலே வீட்டு மனைகளை வாங்கி வழங்குகிறார்கள். ஆகவே, அது போன்று இந்த இடத்தைப் பொறுத்த வரையில் அந்தக் கோயிலுக்கு, உரிய பணத்தை அரசாங்கமே கொடுத்து அந்த நிலத்தை வாங்கி அந்த மக்களுக்கு வழங்கினால் அந்த மக்களுக்கும் நன்மை ஏற்படும். கோவிலுக்கும் ஒரு வருமானம் வரும். ஆகவே, அந்த வகையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். இன்னும் ஏராளமான இடங்கள் இப்படி பல வசதி படைத்தவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் நேரிலே பார்த்ததில்லை. அவைகளையும் இன்றைய மார்க்கெட் விலைக்கு அரசாங்கம் விற்பனை செய்து அந்தப் பணமும் கோவிலுக்குச் சேர வழிவகையினைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 27

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
இந்த இடத்தைப் பொறுத்த வரையில் நீண்ட காலமாக ஆதி
திராவிட மக்கள் அங்கே ஆக்கிரமிப்பு செய்து குடிசைகளைப்
போட்டுக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். குடிசைப்பகுதி
மாற்று வாரியம் இப்படிப்பட்ட பகுதிகளை எடுத்துக் கொண்டு
அவற்றிலே வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டங்களை வகுத்துக்
கொண்டிருக்கிறார்கள். அப்படி சென்னை நகரத்திலேயும்,
ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை எல்லாம் அதாவது
ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களை எல்லாம் குடிசைப்பகுதி
மாற்று வாரியம் தனது சொந்தப் பொறுப்பிலே எடுத்துக்
கொண்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற வகையிலே அரசாங்
கமே ஒரு குறைந்த விலையினை அதாவது ஒரு மனைக்கு 7 ஆயிரம்
ரூபாய் கொடுத்தால் போதும். அப்படிப்பட்ட ஆலய நிலங்
களுக்கு என்ற வகையிலே அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்றது.
அந்த வகையிலே இந்தப் பகுதிகளையும் எடுத்துக் கொண்டு
குடிசை மாற்று வாரியம் கட்டிடம் கட்ட முன்வருவார்களே
யானால் அவர்களிடமே ஒப்படைக்க அறிவுரை வழங்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட நிலங்கள்,
சென்னை நகரத்திலே அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குச்
சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்திருப்பது பற்றிக் குறிப்
பிட்டிருக்கிறார்கள். அவை 315 கிரவுன்ட்ஸ் நிலங்கள். அவற்
றின் மதிப்பு கோடிக்கணக்கான ரூபாய் என்ற அளவுக்கு இப்
போது உயர்ந்திருக்கின்றது. 200 கிரவுண்ட் பகுதிகளை 27 நபர்
களுக்கு 50 ஆண்டுக் காலத்திற்கு அதாவது ஒரு நீண்ட காலக்
குத்தகைக்கு வழங்கி இருக்கிறார்கள். மிகக் குறைந்த வாடகைக்
குத்தான் வழங்கி இருக்கிறார்கள். 21 கிரவுண்ட் அடையாறு
ஔவை இல்லத்திற்கு வழங்கப்பட்டு இருக்கின்றது. 78 கிரவுண்ட்
60 நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இதைப் போல
தான் ஏகாம்பர நாதர் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள்
பற்றியும் நான் முன்னாலேயே சொன்னேன். ஒரு கிரவுண்ட்
2 இலட்சம் ரூபாயிலிருந்து 5 இலட்சம் ரூபாய் வரை விலை
மதிப்பு இன்றைக்கு இருக்கின்றது. இன்றைக்கு விற்பனை விலை
அந்த அளவுக்கு இருக்கின்றது. ஆனால் அதற்கான வாடகையோ
10 ரூபாய் அல்லது 15 ரூபாய்தான் தருகிறார்கள். மேலும்,
அந்த நிலங்களிலே இலட்சக் கணக்கான மதிப்புள்ள வீடுகளையும்
அமைத்து இருக்கிறார்கள் வசதி மிக்கவர்கள். ஆகவேதான்,
அரசாங்கம் இன்றைக்கு அவர்கள் அந்த நிலங்களை ஒன்று,
நியாயமான விலைக்கு அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும்
அல்லது அந்த இடங்களை ஆலயத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.
இல்லை என்றால் அந்த நீண்டகாலக் குத்தகை செல்லாது என்
கின்ற அளவில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது பற்றி மிகவும்
தீவிரமாக பரிசீலனையில் ஈடுபட்டிருக்கின்றது. ஆனால் இதிலே
ஒரு சின்ன சட்டச் சிக்கல் இருந்தது. மைனர் சொத்து என்ற
வகையிலே சூட் போட வேண்டும் என்றால் அதற்கு டைம் லிமிட்



1984 மார்ச் 27]

இருக்கின்றது ஆக்டிலே. அதாவது 18 வயது ஆனதற்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திலே மைனர் மேஜராக ஆகிறார். அப்போது மைனர் சொத்துக்கள் எப்படி, எப்படி பராதீனம் செய்யப்பட்டிருக்கின்றது, எப்படி தன்னுடைய நலனுக்கு விரோதமாக யார், யாருக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றது என்று அவர் சூட் போடலாம். அப்படி சூட் போடுவதற்கு டைம் லிமிட் இருக்கின்றது என்று ஆலய நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் சொல்கிறார்கள். ஆனால், ஆலயத்தினுடைய வாதம் எப்படி என்றால் மைனர் 18 வயதுக்குப் பிறகு மேஜர் ஆகிறார் ; ஆனால் ஆண்டவன் என்றைக்குமே மைனராகத்தான் இருக்கிறார் ; அவர் அறங்காவலரின் பாதுகாப்பிலேதான் இருக்கிறார் ; எனவே, அவர் என்றைக்குமே மேஜராக ஆவதில்லை ; ஆகவே, கால வரையறை, டைம் லிமிட் இதற்குச் செல்லாது என்று சொல்கிறோம். அதனால் என்றைக்குமே அது அந்த ஆலயத்தினுடைய நன்மைக்கு விரோதமாக குறைந்த குத்தகைக்கு குறைந்த வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற நிலைமை சரியல்ல என்ற வகையில் அவ்வாறு குறைந்த குத்தகைக்கும், குறைந்த வாடகைக்கும் கொடுக்கப்பட்டிருப்பது செல்லாது என்று சொல்வதற்கு சட்டத்திலே இடம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அந்தச் சட்டம் வந்தால் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ நூறு கோடி ரூபாய்க்கு மேல் பெறுமானமுள்ள சொத்துக்கள் இந்த ஆலயங்களுக்குக் கிடைக்கும். அல்லது அவர்கள் விலைக்கு எடுத்துக்கொண்டால் தொகையாவது கிடைக்கும். ஆகவே, அந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதுபற்றி மிகுந்த தீவிரமான பரிசீலனையில் சட்டத்துறை ஈடுபட்டிருக்கிறது.

## கீரிப்பாறை ரப்பர் பதனிடும் தொழிற்சாலைக்குப் பக்கத்திலுள்ள தென்னை மரங்கள்

473 —(*வினா எண் 18273) திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) அரசு ரப்பர் தோட்டத்தில் கீரிப்பாறை ரப்பர் பதனிடும் தொழிற்சாலை பக்கத்தில் உள்ள தென்னை மரங்களைக் குத்தகைக்கு விட்டதில் 1980, 1981, 1982 ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருமானம் என்ன ?

(ஆ) இதே தொழிற்சாலைக் காம்பவுண்டினுள் உள்ள நிலத்தில் வாழை பயிரிட குத்தகைக்கு விட்டதில் 1980, 1981, 1982 ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருமானம் என்ன ?

[1984 மார்ச் 27

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தென்னை மரங்கள் குத்தகைக்கு விடப்படவில்லை.

(ஆ) வாழை பயிரிட நிலம் குத்தகைக்கு விடப்படவில்லை.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, இந்த கீரிப்பாறை பாக்டரி இருக்கிற இடத்திற்கு பக்கத்தில் பல தென்னைகள் இருக்கின்றன. அதை யார் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள், அது குத்தகைக்கு விடப்படவில்லையென்றால் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, கீரிப்பாறை ரப்பர் பதனிடும் தொழிற்சாலை பக்கத்தில் 1974-75ல் நடப்பட்ட 16 தென்னை மரங்கள் தொழிற்கூடத்தில் இருந்து அமிலம் கலந்த தண்ணீர் வரும் இடத்திற்கு அருகாமையில் உள்ளதால் மிகக் குறைந்த அளவு காய்களைத்தான் அது தருகிறது. இந்த 16 மரங்களில் ஒரு சில சிறிய அளவு காய்த்து வருகிறது. அப்படி காய்த்து வருகிற மரங்களிலிருந்து கிடைக்கக் கூடியவற்றை அங்கு வருகிற பார்வையாளர்கள் அல்லது நம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்ற வி.ஐ.பி. கள் விருந்தினர்களாக வந்தால் அந்த இளநீர் வெட்டப்பட்டு அவர்களுக்கு பரிமாறுகிறோம் என்ற தகவலைத் தந்திருக்கிறார் கள். பெரிய அளவிற்கு காய்க்க இல்லை, இளநீர் கிடைக்கா தால் குத்தகைக்கு விடவில்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 43 தென்னங் கன்றுகள் 1973-74ல் வைக்கப்பட்டிருப்பதால் அவை காய்ப்புக்கு வரவில்லை. வாழை இன்னும் போதுமான அளவிற்கு காய்ப்புக்கு வரவில்லை. அதை பொது ஏலத்தில் விடவில்லை. இனிமேல் இதையும் ஏலத்தில் விட்டு ஏதாவது வருமானம் வருகிற விதத்தில் செயல்பட அந்தத் துறைக்கு நாம் அறிவுறுத்தியிருக்கிறோம்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கீரிப்பாறை பாக்டரி யில் உள்ள அந்தத் தோட்டங்களில் வேலை செய்கிற பணியாளர் கள் குடியிருப்புகள் பக்கத்தில் பலன் தரும் மரங்கள் பல இருக் கின்றன. கீரிப்பாறை பாக்டரி அருகாமையில் தொழிலாளர்கள் குடியிருப்புகள் அருகில் காலியாக இருந்த பத்து ஏக்கர் தொழி லாளர்களுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறதா அல்லது வேறு யாருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது ? வேறு யாருக் காவது அப்படி குத்தகைக்கு விடப்பட்டிருந்தால் அதை தொழி லாளர்களுக்கு குத்தகைக்கு விட அரசாங்கம் நடவடிக்கை எடுக் குமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்த விவரம் என்னிடமில்லை. அது பற்றி அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை கள் எடுக்கும்.



1984 மார்ச் 27]

**புதிய தொழில்கள் துவங்க சலுகைகள் வழங்க மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டம்.**

355 —(*வினா எண் 16745) திரு. செ. செம்மலை : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) புதிய தொழில்களைத் துவங்குவதற்குச் சலுகைகளை வழங்க, மத்திய அரசு, தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தையாவது தேர்வு செய்துள்ளதா ?

(ஆ) அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) தற்போது மைய அரசு தொழில்கள் இல்லாத மாவட்டங்கள் என சில பகுதிகளை அறிவித்து அவைகளுக்கு 25 சதவீத மானியம் அல்லது ரூ. 25 இலட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அதை கொடுத்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைய தமிழ்நாட்டில் உள்ள எந்த மாவட்டமும் தகுதி பெறவில்லை. மற்ற ஐந்து மாவட்டங்களில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப் பட்ட 30 வட்டங்களில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் மானியத் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரு கிறது. மற்றும் 9 மாவட்டங்களில் துவங்கப்படும் புதிய தொழில்கள் அவைகளில் நிலையான மூலதனத்தில் 10 சதவீதம் அல்லது 10 இலட்சம் இதில் எந்தத் தொகை குறைவோ அதை மானியமாகப் பெற தகுதி பெறும்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இதுமாதிரி பின்தங்கிய தாலுக்காக்களாக சில தாலுக்காக்களை தமிழ் நாட்டில் மத்திய அரசு அறிவித்து தொழில் தொடங்க மானியம் அளிக்க முன்வந்திருக்கிறது. அதேபோல் நம் அரசாங்கமும் சில சலுகைகளை சில நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்வு செய்து மானியம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது மத்திய அரசு ஏற்கனவே தேர்வு செய்த சில தாலுகாக்களும் நம்முடைய அரசு தேர்வு செய்த அந்த இடமும் ஒன்றாக வந்து விடுகின்றன. எனவே நம்முடைய உதவி அந்தத் தாலுகாக்களைப் பொறுத்தவரையில் அதற்குக் கிடைக்காமல் போகக்கூடிய சூழ்நிலை வருகிறது. எனவே, மற்றப் பகுதிகளில் தொழில் முன்னேற்றம் ஏற்படக்கூடிய வகையில் ஏற்கனவே மத்திய அரசு தேர்வு செய்த பகுதிகள் நீங்கலாக வேறு பகுதி களுக்குக் கிடைக்கிற வகையில் நம் அரசு மற்ற தாலுகாக்களை பின்தங்கிய தாலுகாக்கள் என தேர்வு செய்து, அந்த உதவிகள் அந்தப் பகுதிகளுக்குக் கிடைக்கத் தக்க வகையில் தொழில்கள் தொடங்குவதற்கு வசதி செய்து மானியங்கள் வழங்க, உதவிகள் செய்ய அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே மைய அரசைப் பொறுத்த வரையில் 15 சதவீதம் மானிய உதவித் தொகை என 30 வட்டங்களைத் தேர்ந்தெடுத்தது ஆரம்பக் கட்டத்தில். அதில் 15 சதவீதம் subject to a maximum of 15 lakhs என்ற முறையில் மானியம் தர, உதவித் தொகை அளித் திருக்கிறது.

(முற்பகல் 9-30)

அதையொட்டி மைய அரசு 9 மாவட்டங்களை, அதாவது தர்மபுரி, கன்னியாகுமரி, மதுரை, வட ஆற்காடு, இராமநாத புரம், தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு 10 சதவீதம் subject to a maximum of 10 lakhs என்ற முறையிலே சலுகையை அறிவித்தது. அதைப்போலவே, அந்த மாவட்டப் பகுதிகளில் தொழில்கள் துவங்க முன்வருகிற வர்களுக்கு குறைந்த வட்டியில் அதாவது 12½ சதவீத வட்டியில் கடன் பெறக் கூடிய சலுகையை அறிவித்திருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், கிட்டத்தட்ட ஆரம்பக் கட்டத் தில் 24 வட்டங்களையும், பின்னர் 9 வட்டங்களையும் மாநில அரசின் சலுகையின் கீழ் அதாவது 15 சதவீதம் subject to a maximum of 15 lakhs என்ற முறையிலே சலுகையை அறி வித்தது. இப்படி மாநில அரசு அறிவித்த நேரத்தில், மாநில அரசினுடைய உதவியையும், மத்திய அரசினுடைய உதவியை யும் பெறுகின்ற வட்டங்கள் 22 ஆக இருப்பதினால், நடைமுறை யில் மைய அரசின் சலுகையை பெறுகின்ற வட்டங்களுக்கு மாநில அரசு கொடுக்க வேண்டியதில்லை என்று முடிவு எடுக்கப் பட்டது. மைய அரசின் சலுகையையும் எடுத்துக் கொண்டால், அது 30, 35 சதவீதம் சப்சிடி வந்துவிடும். மாண்புமிகு உறுப் பினர் ஒரு நல்ல ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையின் அடிப்படையில், எந்தெந்தப் பகுதிகளுக்கு மைய அரசு சலுகை தருகிறதோ, அந்தப் பகுதிகள் நீங்கலாக உள்ள மற்ற பகுதிகளுக்கு மாநில அரசு சலுகை நீட்டிப்பது குறித்து அரசு ஆய்ந்து நடவடிக்கையை மேற்கொள்ளும்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக தமிழ்நாட்டில் ஒரு மாவட்டம் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று அமைச் சர் அவர்கள் அறிவித்தார்கள். மத்திய அரசு அப்படி தேர்வு செய்கிறபோது, மாவட்டத்தை ஒரு யூனிட்டாக அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படி கணக்கிட்டுப் பார்க்கிறபோது, தமிழ்நாட்டிலே ஒரு மாவட்டம் கூட பின் தங்கிய மாவட்டமாக அறிவிக்க முடியாத நிலைமை ஏற்படு கிறது. இந்த நிலைமையை மாற்ற ஒரு தாலுக்கா அல்லது யூனியன் என்ற அளவிலேஒரு யூனிட்டாக கருத்தில் கொண்டால்,



நமக்கு மைய அரசின் உதவி அதிகமாகக் கிடைக்கும். அந்த அளவில் மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறதா? நம்முடைய கருத்தை மைய அரசு ஏற்றுக் கொண்டதா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசைப் பொறுத்தவரைக் கும் 'No Industry District' என்ற ஒரு கருத்தைக் கொண்டு வந்து, ஒரு மாவட்டத்திலே தொழிலே இல்லை யென்றால், 25 சதவீதம் சலுகை அளிப்பதாக அறிவித்திருக் கிறது. இது உண்மையிலேயே, தமிழ்நாட்டை மட்டுமல்ல ; பல்வேறு தென் மாநிலங்களை பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று மைய அரசை, மாநில அரசு வற்புறுத்தியிருக்கிறது. 'Taluk should be, treated as a basic unit என்ற முறையில் இது மிகவும் உகந்ததாக இருக்கும் என்பதால், அந்த முறையிலே இந்தப் பிரச்சினையை மாநில அரசு அணுகு கிறது. அதைவிட ஒரு முக்கியமான பிரச்சினை. மைய அரசு ஏற்கெனவே 33 வட்டங்களை பின்தங்கிய வட்டங்களாகத் தேர்ந் தெடுத்து, அதற்கான சலுகையை அறிவித்திருக்கிறது. 30 கோடி ரூபாய் டோடல் இன்வெஸ்ட்மெண்ட் ஆகிவிட்டால். அது பின்தங்கிய பகுதியிலிருந்து எடுக்கப்பட்டு விடுகிறது, அவைகளுக்கு இந்தச் சலுகை கிடைக்காது. ஏற்கெனவே அப்படி வளர்ந்துவிட்ட நகரங்களாக ஒசூர், வாணியம்பாடி, வாலாஜா பேட்டையில் 30 கோடிக்கு மேல் மூலதனம் தாண்டிவிட்ட காரணத்தினால், ஒரு சிறு தொழில் ஆரம்பிக்கக்கூட not eligible for these concessions என்ற முறையில் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, வட்டத்தை அளவாக எடுத்து, அந்த அடிப்படையில் மத்திய அரசின் சலுகை கிட்ட வேண்டு மென்று மாநில அரசு கருதி, அதை வற்புறுத்தி தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு மத்திய அரசு அனுமதியளிப்பதைப் பற்றிச் சொன்னார்கள். மாநில அரசோ அல்லது அதனுடைய நிறுவனங்களோ தொடங்கிய அல்லது தொடங்க இருக்கிற தொழில்களுக்கு மத்திய அரசு உதவி அளித்திருக்கிறதா ? அப்படியானால், எந்தெந்தத் தொழில்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. இன்னும் எந் தெந்த தொழில்களுக்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்று விண்ணப்பம் போட்டிருக்கிறீர்கள் ? அதைப்பற்றிய விவரத்தை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்த வரைக் கும் ஸ்டேட் செக்டார், ஜாயிண்ட் செக்டார் என்ற முறையில்

[1984 மார்ச் 27

பல தொழில்களை அமைக்க ஏற்கெனவே நடவடிக்கையை மேற்கொண்டு, மைய அரசுக்கு உரிமங்கள் பெற அனுப்பப் பட்டிருக்கின்றன. பலவற்றுக்கு உரிமங்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் சிலவற்றிற்கு உரிமங்கள் கிடைக்கும் நிலையில் இருக் கின்றன. நாம் கொடுக்கின்ற கோரிக்கைகளுக்கு தற்போது செவி சாய்த்து வருகின்ற அறிகுறிகள் தென்படுகின்றன. அந்த உரிமங்கள் எல்லாம் கிடைக்கும் என்று நம்புகிறோம்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு இந்தத் தொழில்களுக்கு மானியம் அளிக்கும்போது "சீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட்" இந்தியா பூராவும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். அப்படிப் பார்க் கும்போது நம்முடைய மாநிலம் பாதிக்கப்படுகிறது. உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் சிறிய மாவட்டங்கள் இருக்கிற காரணத்தாலே, அவர்களுக்கு அந்தச் சலுகை கிடைக்கிறது. ஆகவே, இப்படி இந்தியா பூராவும் ஒட்டு மொத்தமாகப் பார்க்காமல் மாநிலத்திற்கு இவ்வளவு மாவட்டங்கள் "சீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட" என்று அப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று மாநிலத்திற்கு மட்டும் அப்படிப்பட்ட சலுகைகள் வேண்டுமென்று நமது அரசு மைய அரசை வற் புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு மாநிலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களில் "சீரோ இண்டஸ்ட்ரீஸ்" எடுக்க வேண்டுமென் றாலும்கூட தமிழகம் அந்தத் தகுதியைப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். எனவேதான் வட்டார அளவு என்று எடுத்தால்தான் நமக்குச் சலுகையாக அமையும்

Thiru T. VENKATA REDDY : Hon. Speaker, Sir, the Hon. Minister has announced that in Hosur already 30 crores of rupees have been invested and therefore the question of giving subsidy has been discarded. Is the Hon Minister aware of the fact that the State Government has already taken 600 acres of lands for development of plots under the II phase of SIPCOT Development Programme and many industrialists have applied for the allocation of plots and for the subsidy either from the State Government or from the Central Government? If subsidy is not given on the basis that it is a developed area, then these 600 acres will become useless since the industrialists will not come forward to start industries. There will not be further development in that area. Therefore, will the Government take necessary steps to give subsidy from the State Government for the allocation of plots under the II Phase of SIPCOT Development Programme so that the developed area can be still developed?



1984 மார்ச் 27]

Mr. SPEAKER : It is Question Hour, the hon. Member must know. The hon. Member can ask the question in a simple way. The hon. Member can ask : Whether it is possible for the Government to give subsidy for these plots in 600 acres of land to be developed ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ரூ. 30 கோடி என்ற மூலதனம் மைய அரசு அறிவித்து இருக்கிற அந்த 25 per cent subsidy subject to a maximum of Rs. 25 lakhs. என்ற சலுகையைப் பெறு வதற்குத்தான் கேட்டதே ஒழிய மாநில அரசினுடைய சப்சிடி யான 15 சதவீதம் சப்சிடி என்ற சலுகையைப் பெறுவதற்கும் சில பிரத்தியேகமான தொழில்களான, Electronics, Pharmaceuticals, Solar energy based industries, automobile ancillaries, போன்ற தொழில்களைத் துவக்குவதற்கு உள்ள சலுகைகளைப் பெறவும் எந்தத் தடையும் இல்லை. மாநில அரசினுடைய சலுகைகள் அந்தப் பகுதிகளுக்குக் கிட்டும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தொழில் தொடங்குவதற்கு மத்திய அர சிடமிருந்து வரக் கூடிய சலுகைகள் சம்பந்தமாகவும், மாநில அரசுக்கு எவ்வாறு சலுகை செய்ய வேண்டுமென்பதைப் பற்றி யும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற் கெனவே தொழில் தொடங்கி மூடப்பட்டு கிடக்கக் கூடிய அந்தத் தொழிற்சாலைகளைத் துரிதமாக நடவடிக்கை எடுத்து, திறப் பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தி. கா. நல்லப்பன் வேண்டுகோள்தான் விட்டிருக்கிறார். வேண்டுகோள் எல்லாம் கேள்வி நேரத்தில் கிடையாது.

திரு. டி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்கள் தமிழ்நாட்டில் பிரிக்கப்பட்டுள்ளதால், தொழிலே இல்லாத மாவட்டங்கள் உருவாகியுள்ளன என்பதை மத்திய அரசுக்குச் சொல்லி, சலுகை பெற மாநில அரசு முய லுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உருவாக்கப்பட இருக் கிற மாவட்டங்கள் தொழில் இல்லாத மாவட்டங்களாக, அந்த ஏரியா அப்படிப் பார்த்து அமைக்கப்படுமானால், அந்தச்

சலுகையையும் மைய அரசு தரும். ஆனால் நமது கோரிக்கை எல்லாம் Taluk should be treated as a unit and not the District.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசு தொழில்களுக்கு வழங்கக் கூடிய சலுகைகளை சப்சிடி என்கிற முறையில் கிடைக்கக்கூடிய விவரங்களை எல்லாம் முழுமையாகத் தந்தார்கள். அண்மையில் வேலையற்ற மாணவர்களுக்கு என்று புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களின் கீழ் கடன் ஏராளமாகக் கொடுக்கிறார்களே, அந்தக் கடனை கொடுப்பதற்கு ஆரம்பத்தில் ஜாமீன் இல்லை, அவர்களுக்கே கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்பொழுது ஜாமீன் கொடுத்தால்தான் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறதே, அதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, செல்ப்-எம்ப்ளாய்மென்ட் லோன் அதாவது சுய வேலை வாய்ப்புக் கடன்களைப் பொறுத்தவரையில் துவக்கப்படுகிற தொழில்களை பொறுப்பாக வைத்துத்தான் கொடுக்கப்படுகிறது ; சொத்து ஜாமீன் கேட்கப்படுவதில்லை. நபர் ஜாமீன் கேட்கப்படுவது தவறில்லை என்று நான் கருதுகிறேன்.

**சூரியவிசையைப் பயன்படுத்த முன்வரும் தொழில் அதிபர்களுக்கு உதவியளிக்கும் திட்டம்.**

*356 —(வினா எண். 19005) திரு. பெ. சு. திருவேங்கடம் :— மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சூரிய விசையைப் பயன்படுத்த முன்வரும் தொழில் அதிபர்களுக்கு உதவி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் மைய மற்றும் மாநில அரசு மூலதன மானியத் திட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் துவக்கப்படும் தொழில்கள் அனைத்தும் அவைகளின் நிலையா மூலதனத்தில்



15 சதவீதத்தை மானியமாகப் பெறத் தகுதியுடையவையாகும். இந்தப் பகுதிகளில் சூரிய விசையைப் பயன்படுத்தும் கருவிகள் இயந்திரங்கள் போன்றவைகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டால் 15 சதவீதம் மானியம் அளிக்கப்படும். இவை தவிர, பிற பகுதிகளில் இதற்கான தொழிற்சாலை நிறுவப்பட்டால் அவைகளுக்கு 10 சதவீத மூலதன மானியம் வழங்க அரசு முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சூரிய விசையைப் பயன்படுத்த எத்தனை தொழில் அதிபர்கள் முன்வந்திருக்கிறார்கள் ? இதற்கு எவ்வளவு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது ? அதற்கு மத்திய, மாநில அரசுகள் அளிக்கிற உதவி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்த வரையில் ஒரு சலுகையை அறிவித்து இருக்கிறது. தமிழகத்தினுடைய எந்தப் பகுதியில் சோலார் பேஸ்ட் இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கப்பட்டாலும் 10 சதவீதம் மானியம் subject to a maximum of Rs. 10 lakhs. அதைப்போலவே சேல்ஸ்-டாக்ஸ் - எக்சம்ப்ஷன் ; விற்பனை வரியிலிருந்து முழுவதும் விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற முறையில் ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் எந்தப் பகுதியில் இதுபோன்ற தொழில்களைத் துவக்கினாலும் அவர்களுக்கு விற்பனை வரி கிடையாது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே நான்கு தொழிற்சாலைகள் இருக்கின்றன. சென்னையிலிருக்கிற யூனியன் மோட்டார்ஸ் கம்பெனி என்பது Solar Water Heaters and Devises செய்கிறார்கள் ; அதைப்போல Pambanadu Energy Systems Private Limited என்று ஒரு அமைப்பு Solar Wat r Heaters செய்கிறார்கள். G mini Srives என்ற ஒரு அமைப்பு Sol r Water H atexs செய்கிறார்கள். Thermal Equipment, Madras என்ற அமைப்பு Solar Collectors and accessories என்று சொல்லக்கூடியவைகளைச் செய்கிறார்கள். மத்திய அரசு இதற்கு பல சலுகைகளை பிரத்தியேகமாக அறிவித்திருக்கிறது. மத்திய அரசின் சலுகைகளைப் பொறுத்தவரையில் சோலார் எனர்ஜியில் செய்யக்கூடிய தொழிற்சாலைகள். துவக்கப்படுமேயானால் முதல் ஆண்டிலேயே எந்தப் பொருள்களை வாங்குகிறார்களோ, அந்த மெஷினரிகளைப் பொறுத்த வரையில் 100 சதவீதம் டெப்ரிசியேஷன் உண்டு. மெஷினரிகளில் போடுகிற முதலீட்டை முதல் ஆண்டிலேயே எடுத்துவிடுகிற அளவுக்கு 100 per cent depreciation benefit is allowed by the Government of India. அதைப்போலவே அந்தப் பொருள்களை ஒருவேளை இறக்குமதி செய்கிறார்கள் என்ற நிலை ஏற்படுகிறபோது அவர்களுக்கு டியூட்டி ப்ரீயாக தருகிறார்கள். அதைப்போலவே டெர்ம்

லோன்ஸ், அவர்களுக்கு கொடுக்கப்படுகிற கடனை பொறுத்த
வரையில் சலுகைக் கடனாக 12½ சதவீதத்தில் கொடுக்கலாம்
என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அப்படி சோலார்
எனர்ஜி பேஸ்ட் தொழிற்சாலை எந்தத் தொழிலை ஆரம்பித்
தாலும் அதற்கு உரிமம் பெற வேண்டியதில்லை. யார் வேண்டு
மானாலும், எங்கே வேண்டுமானாலும், எப்போது வேண்டுமா
னாலும் ஆரம்பிக்கலாம் என்ற சலுகையை மத்திய அரசு அறி
வித்திருக்கிறது. அதைப் போல கன்ஸ்யூமர்ஸ் சப்சிடி என்ற
முறையில் சோலார் குக்கர்ஸ் போன்ற டொமஸ்டிக் புராடக்ட்ஸ்
எதுவாக இருந்தாலும் அதற்கு 33 1/3 சதவீதம் சப்சிடி தரவேண்டு
மென்றும் மத்திய அரசு அறிவித்திருக்கிறது. அதைப்போல
நம்முடைய ஐ.ஆர்.டி.பி.யில் இருக்கிற ஸ்கீம் மூலமாக கிராமப்
பகுதியில் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு அந்த மோட்
டாரைப் பொறுத்தவரையில் அதற்கு சப்ஸ்டிடியூட்டாக சோலர்
எனர்ஜி பேஸ்ட் சிஸ்டத்தைக் கொண்டு வருவோமேயானால்
அதற்கும் சிறு உழவர்களுக்கு 25 சதவீத சலுகையும், குறுநில
உழவர்களாக இருப்பார்களேயானால் 33 1/3 சதவீத சலுகையும்
சப்சிடியாக தரவேண்டுமென்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

உறுப்பினர் அவர்கள் இதற்கு வேண்டிய மூலதனம் பற்றி
கேட்டார்கள். இதற்கு வேண்டிய மூலதனத்தைப் பற்றி சரியாகச்
சொல்ல முடியாது. காரணம் ஓட்டல்களில் தண்ணீர் காயவைப்
பதற்கு இதைப் பயன்படுத்தலாம்; ஆஸ்பத்திரிகளில் துணி
துவைக்க ஸ்டெர்லிசேஷன் போன்ற வேலைகளுக்கு பயன்படுத்த
லாம்; அதைப் போல டெக்ஸ்ட்டைல் இண்டஸ்ட்ரீஸ்
பொறுத்தவரையில் Hot water requirements என்னென்ன
தேவைப்படுகிறதோ அதற்கெல்லாம் பயன்படுத்தலாம். தோல்
பதனிடும் தொழிற்சாலைகளில்கூட லெதர் புராசசிங்கிற்கு பயன்
படுத்தலாம். அதைப்போல Food Industries Dairies and Brewaries
போன்ற பணிகளுக்கு பயன்படுத்தலாம். அதைப் போல
Sterilisation of equipments, vessels and bottles க்கு இதைப் பயன்
படுத்தலாம். Chemicals and Pharmaceuticals இதுபோன்ற பல
துறைகளில் இதைப் பயன்படுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீண்ட பதில் என்றால்
அறிக்கை வைத்து விடவேண்டும். ரொம்பவும் விரிவாகப் பதில்
சொன்னால் சூரிய அடுப்பைக் கொண்டு வந்து டெமான்ஸ்டிரேட்
செய்யச் சொல்லி விடுவார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தலைவர் அவர்
களே, அமைச்சர் அவர்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம்
என்று சொன்னார்கள். ஒரு விவசாயி 5 குதிரை ஓட்டமுள்ள
மோட்டார் எவ்வளவு மின்சாரம் எடுத்துக் கொள்ளுமோ அந்த



அளவிற்கு சூரிய விசையைப் பெற வேண்டுமானால் அதற்கு ஆகும் தொகை, எஸ்டிமேட்டட் காஸ்ட் எவ்வளவு ஆகிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டேன். அந்த விவரங்களை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோட்டார் ஆயில் இன்ஜின் அல்லது எலக்டிரிக் பம்ப் ஆகியவற்றிற்கு ஆகும் செலவை விட குறைந்த செலவு ஆகும் என்றே கணக்கிடப்பட்டு இருக்கிறது.

### தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கான உச்சவரம்பு.

*357—(வினா எண். 20473) திரு. சி. கணேசன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கு, உயர்ந்த பட்ச முதலீட்டுத் தொகையை அரசு வரையறுத்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; (அ) மற்றும் (ஆ): தொழில் இணையத்தில் முதலீடு செய்து மானியம் பெறுவதற்கு முதலீட்டுத் தொகைக்கு உயர்ந்த பட்ச வரையறை இல்லை. தமிழகத்தில் மைய மற்றும் மாநில அரசு மூலதன மானிய திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் துவங்கப்படும் தொழில்கள் அனைத்தும் அவைகளின் நிலையான மூலதனத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 15 இலட்சம் இவற்றில் எது குறைவோ அதை மானியமாகப் பெறத் தகுதியுடையவையாகும். இது தவிர, இன்னும் 52 வட்டங்களில் மைய அரசு 10 சதவீத மானியம் அளிக்கிறது. இதற்கான உச்சவரம்பு ரூ. 10 இலட்சம் ஆகும்.

### சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைக்கு ஊதியம் வழங்கும் திட்டம்.

*358—(வினா எண். 21178) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைகளுக்கு அரசு ஊதியம் ஏதும் வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில், எப்போது அவ் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது?

[1984 மார்ச் 27

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) இம்மாநிலத்தில் உள்ள சிறைகளில் கைதிகள் செய்யும் வேலைக்கு அரசு ஊதியம் வழங்கும் திட்டம் பஞ்சாப் மற்றும் டெல்லி சிறைகளில் உள்ள திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டது. 1973 ஆம் ஆண்டில் சேலம் மத்திய சிறையில் முதலாவதாக இந்த ஊதிய ஈட்டுத் திட்டம் தொடங் கப்பட்டது. மேற்படி திட்டத்தின் கீழ் வேலை செய்த சிறை வாசிகளுக்குக் கீழ்க்கண்டவாறு ஊதியம் வழங்கப்பட்டது :

1. தேர்ச்சி பெற்றவர்கள்—40 பைசா ஒரு நாள் வேலைக்கு.

2. அரைத் தேர்ச்சி பெற்றவர்கள்—20 பைசா ஒரு நாள் வேலைக்கு.

3. தேர்ச்சி பெறாதவர்கள்—10 பைசா ஒரு நாள் வேலைக்கு.

தமிழ்நாடு சிறைச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்படியும், ஏழாம் நிதிக் குழுவின் கீழ் மத்திய அரசு வழங்கிய நிதியுதவியைக் கொண்டும், அரசு ஆணைப்படி 1982-ல் ஊதிய ஈட்டுத் திட்டம் சென்னை, வேலூர், திருச்சி, கோவை, மதுரை, கடலூர் மற்றும் பாளையங்கோட்டையில் உள்ள பிற மத்திய சிறைகளுக்கும் மற்றும் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும் விரிவு படுத்த பட்டது. மேற்படி சிறைகளில் இத்திட்டம் 1—11—1982 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அரசு இந்த ஊதியத்தை 17—7—1982 ஆம் நாளிட்ட ஆணையில் கீழ்க்கண்டவாறு உயர்த் தியுள்ளது :

| | |
|---|---|
| தேர்ச்சி பெற்றவர்கள் .. | ரூ 1.00 ஒரு நாள் வேலைக்கு. |
| அரை தேர்ச்சி பெற்றவர்கள்.. | ரூ 0.50 ஒரு நாள் வேலைச்கு. |
| தேர்ச்சி பெறாதவர்கள் .. | ரூ. 0.25 ஒரு நாள் வேலைக்கு. |

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த ஊதிய விகிதங்கள் மீண்டும் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ? சிறையில் இருந்து அவர்கள் வெளியே வந்தபிறகு அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக தனியார் நிறுவனங்கள் ஏதேனும் செயல்படு கிறதா ? அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு அரசு ஏதேனும் உதவி செய்கிறதா ?



1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இந்த ஊதிய விகிதங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக் கையின் அடிப்படையில் தான் 17—7—1982 முதல் அந்த அள விற்கு அது உயர்த்தப்பட்டிருக்கிறது. சிறையில் இருந்து விடு தலை பெற்று வருகிற குற்றவாளிகளுக்கு மறுவாழ்வு அளிப்பதைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு அரசின் நிறுவனங்கள் மூல மாகவும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும், கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் கடன் உதவித் தொகை 'பார் செல்ப்-எம்ப்ளாயின்ட்மெண்ட்' என்ற அடிப்படையில் தரப்படுகிறது. இந்த வகையில் அரசு அவர்களின் பிரச்னையை அணுகி செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, சிறையில் கைதிகள் தண்டனை அனுபவிக்கிறபோது, அவர்களுக்கு உணவு மற்றும் இதர வசதிகளைக் கொடுப்பது அரசின் பொறுப்பு. ஆனால் அவர்கள் சிறையில் உழைப்பு நல்கினால் அவர்கள் வெளியே அத்தகைய பணிகளைச் செய்தால் எந்த அளவிற்கு ஊதியம் கொடுக்கப்படுமோ அந்த அளவிற்கு சிறையிலும் அவர் களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சமீபத்தில் உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்து இருக்கிறதே, அதை அரசு பரிசீலனை செய்து, அந்த அடிப்படையில் கூலியை உயர்த்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அளவிற்கு வெளியில் பெறுகின்ற கூலியைப் பெறும் அளவிற்கு அந்தப் பணியின் தன்மையும் உயர்ந்து இருக்க வேண்டும். There is no adequate infrastructural faciliti s என்ற காரணத்தால் தற்போது அதைப் பரிசீலிக்க முடியாது. ஆகவே, அவர்களுடைய பணியை இன்னும் அதிகமாக ஆக்கி அந்த அடிப்படையில் இன்னும் ஊதியம் உயர்த்திக் கொடுக்க முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, சிறை கைதிகளுக்கு மறுவாழ்வு செய்வது குறித்து நல்ல எண்ணத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிறைக் கைதிகள் விடு தலைப் பெற்று வெளியே வருகின்றபோது சிறையில் இருந்து நற்சான்றிதழ் பெற்று வருகிறார்கள். ஆனால் அவர்கள் அர சாங்கத்தின் மூலம் வேலை பெறுகிறபோது மறுபடியும் அவர் களை விசாரிக்க காவல் துறைக்கு அனுப்பப்படுகிறது. அங்கே அவர்களைப் பற்றி ஏற்கனவே உள்ள குறிப்பின் அடிப் படையில் அவன் கேடி, சிறையில் இருந்தவன், ஆகவே, மறு படியும் தவறு செய்யக்கூடும் என்று அறிக்கை தருவதால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, சிறையில் இருந்து நற்சான்றிதழ்

பெற்று வந்தாலே போதும், மறுபடியும் அவர்களைப் பொறுத்த வரையில் போலீஸ் வெரிபிகேஷன் தேவையில்லை என்று அரசு உத்தரவு வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் நல்ல யோசனையை அரசு ஏற்கனவே ஆய்ந்து நடைமுறைக்குக் கொண்டு வர உள்ளது.

(முற்பகல் 9.50)

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, சிறையிலிருந்து கைதிகளை கோர்ட்டுக்கு அழைத்து வரும்போது அவர்களுக்கு ஒரு வேளைக்கு 75 காசுதான் உணவுக்காகக் கொடுக்கப்படுகிறது. விலைவாசி உயர்ந்திருக்கிற இந்த நாளில் விலைவாசிக்கு ஏற்ப 75 காசு என்பதை உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(பதில் இல்லை).

**பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி பகுதிகளைத் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கும் திட்டம்**

*474—(வினா எண். 18287) திரு. பூ. மு. நரசிம்மன் : மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி பகுதிகள் தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட வட்டங்களாக அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

திரு. பூ. மு. நரசிம்மன் : தலைவரவர்களே, பள்ளிப்பட்டு வட்டத்தில் 5 பேர்கள் சேர்ந்து செய்யக்கூடிய தொழில் ஒன்றும் இல்லை என்பதை அரசு நன்கு அறியும். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கூட பள்ளிப்பட்டு, திருத்தணி வட்டங்களை பிற்பட்ட பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே அரசு இதை மறுபரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் கூறும்போது குறிப்பிட்டதைப்போல மத்திய அரசு மானியமும், மாநில அரசு மானியமும் ஒருங்கே வரக்கூடிய பகுதிகள் சிலவற்றை மத்திய அரசு மானியத்திற்கு மட்டும் தகுதி உடையவை என்று அறிவித்து, மாநில அரசு மானியத்தை மற்ற பகுதிகளுக்கு விரிவுபடுத்தும் செயற்குறிப்பு பரிசீலனையில்



இருக்கிறது. அப்படி விரிவுபடுத்தும்போது மேலும் ஏறத்தாழ 22 வட்டங்கள் பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டு சலுகைகள் பெற தகுதி உடையவை ஆகும். அப்படி அறிவிக்கப்பட்டிருக்கிற வட்டங்களில் பள்ளிப்பட்டு வட்டம் வருமா, அதற்குப் பொருந்துமா என்பதை ஆராய்ந்துப் பார்த்து, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் எந்த எந்த வட்டங்கள் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ''பிரையாரிட்டி இன்டஸ்ட்ரீஸ்'' என்று சொல்லப்படுகின்ற எலெக்ட்ரானிக்ஸ், ஷெட்யூல்டு டிரக்ஸ், ஆட்டோமோபைல் ஆன்சிலரி இன்டஸ்ட்ரீஸ், சோலார் எனர்ஜி பேஸ்டு இன்டஸ்ட்ரீஸ் போன்றவை எந்தப் பகுதியில் ஆரம்பித்தாலும் அவற்றிற்கு சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. மதுராந்தகம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி வட்டங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

**போளூர் ஒன்றியத்திலுள்ள படைவீடு, கேசவபுரம் பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.**

*475—(வினா எண் 7234) திரு. இல. பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு போளூர் ஒன்றியப் படைவீடு, கேசவபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

(ஆ) இதன் பேரில் எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆணைப் பிறப்பிக்கவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1984 மார்ச் 27

'டானிடா' திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்திற்கு விஸ்தரிக்கும் திட்டம்.

*476—(வினா எண் 21107) திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 'டானிடா' திட்டம் விஸ்தரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயலுக்கு வரும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ் டி. உகம்சந்த் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் 'டேனிடா' திட்டம் எங்கெங்கே செயல்படுகிறது ? அதற்கு நம்முடைய அரசு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்த டேனிடா திட்டத்தைப் பொறுத்தவரையில் 1-8-1981 லிருந்து 31-7-1986 வரையிலான ஐந்தாண்டுத் திட்டமாக இதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். 14.40 கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டுகளில் செலவிடப்படும். டென்மார்க் என்ற நாட்டின் உதவி 12.72 கோடி ரூபாய், மீதமுள்ள பணத்தை தமிழக அரசு செலவிடும். சேலம் மாவட்டத்திலும் தென்னாற் காடு மாவட்டத்திலும் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

ஈரோடு நகரத்தின் சுற்றுவட்டாரத்திலுள்ள சாயப்பட்டரைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர்..

*477—(வினா எண் 19660) திரு. கு. ரமணி : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஈரோடு நகரத்தில் சுற்று வட்டாரத்தில் சாயப்பட்டரைகள் ஏராளமாக உள்ளதிலிருந்து வெளிவருகிற இரசாயனப் பொருள் கலந்த கழிவுநீர் தேங்கி நின்று நிலத்தடி நீரைக் கெடுத்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் கழிவு நீரை வெளியே அகற்றி சுகாதாரத்தைப் பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?



1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நான் கேட்ட கேள்வியில் என்னென்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டிருக்கிறேன். அந்த நடவடிக்கை விவரங்களை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவரவர்களே, இந்தக் கழிவுநீரை வெளியேற்றும் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் இந்த வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என்றும், பதிவு செய்ய வேண்டும் என்றும் சொல்லி அதற்கான காலவரையறை வகுக்கப்பட்டிருக்கிறது.

அது அனுமதிபெற்றோ அல்லது பதிவு செய்த பின்னர், கழிவு நீரை எப்படி வெளியேற்றவேண்டுமென்று அவர்களுக்கு அறிவுரை கொடுக்கப்பட்டும், அறிவுரையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அந்தத் தொழிலதிபர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அந்த அடிப்படையில் இந்தத் தொழிற்சாலைகள் தனித்தனியாக பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அது சரியான முறையில் கழிவு நீரை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. அப்படிச் செய்யாவிட்டால், அந்தத் தொழிற்சாலைகளின் உரிமம் புதுப்பிக்கப்படுகின்ற நேரத்தில், வாரியத்தின் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்ற பிறகு, மீண்டும் அந்தத் தொழிற்சாலை இயங்க வேண்டிய காரணத்தினால், கழிவு நீரை நன்நீராக மாற்றாமல் விட்டுவிட்டால், அந்தத் தொழிற்சாலைக்களுக்கான உரிமத்தைப் பறிக்கக் கூடிய நிலை எற்படும். அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி ; தலைவர் அவர்களே, ஈரோட்டு நகராட்சிக்குள்ளே, இப்படிப்பட்ட பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதனுடைய எண்ணிக்கைகூட அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நகராட்சியைச் சுற்றியுள்ள பெல்ட் ஏரியாக்களிலும் மேஜர் பஞ்சாயத்துக்களைச் சுற்றிலும் எக்கச்சக்கமான தொழிற்சாலைகள் சாயப் பொருள்களை உபயோகப்படுத்தி அங்கே வேலைகள் நடந்து வருகின்றன. அப்படியானால், இப்படிக் கழிவு நீரை வெளியேற்றாமல் இருப்பதனால், அங்கேயுள்ள கிணற்று நீர் கெட்டுப்போய்விடுகிறது. அதை ஒழுங்குபடுத்துவதற்கும், சுத்தப்படுத்துவதற்கும் பல இயந்திரங்கள்

வைத்திருப்பதாகத் தெரியவில்லை. நானே அந்தத்தொழிற்சாலை களைப் பார்த்திருக்கிறேன். இது ஒரு பெரிய நியூசன்ஸ் என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். பெரும் வியாதிகள் பரவக் கூடிய தன்மை இருக்கிறது. உருப்படியான நடவடிக்கைகள் எத்தனை தொழிற்சாலைகளில் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, ஈரோட்டைப் பொறுத்தவரையில், சுற்று வட்டாரத் தில் அமைந்துள்ள பேருராட்சிகளில் உள்ள சாயப்பட்டரை களின் விவரம் பின்வருமாறு :—

| | |
|---|---|
| வீரப்பன்சத்திரம் .. .. .. .. | 74 |
| சித்தோடு .. .. .. .. | 4 |
| பெரிய செம்மூர் .. .. .. .. | 16 |
| நசியானூர் .. .. .. .. | 1 |
| சூரியம்பாளையம் .. .. .. .. | 19 |
| பிராமண பெரிய அக்ரஹாரம் .. .. | 8 |
| காசிபாளையம் .. .. .. .. | 15 |
| ஈரோடு ஊராட்சி ஒன்றியம் .. .. | 72 |

மேற்கூறப்பட்ட தொழிற்சாலைகளில் சில தொழிற்சாலைகள் தங்கள் கழிவு நீரை எந்தவித சுத்திகரிப்புமின்றி தொழிற்சாலைகளுக்குச் சொந்தமான நிலங்களில் வெளியேற்றுகின்றன. தொழிற்சாலைகள் பொது வடிகால்களிலும், ஓடைகளிலும் கழிவு நீரை வெளியேற்றுகின்றன. ஆனால், கடைசியாக இந்தக் கழிவு நீரானது காவிரியாற்றில் கலக்கிறது. ஆகவே இது சம்பந்தப் பட்ட நடவடிக்கைகளை வாரியம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த வாரியம் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், நச்சுநீர் காற்றிலே மாசுபடுத்தப்படுவதை உடனடியாக செய்துவிட முடியாது. காரணம் தமிழ்நாடு முழுவதும் பரவியிருக்கிறது. ஏறக்குறைய 8000-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படு மேயானால், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். தொழிற் சாலைகளும் பாதிக்கப்படும். அதே போல் நிலம், நீர் காற்று மாசு படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



### கும்பகோணம் புகைவண்டி மேம்பாலம் அருகிலுள்ள தோல்பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீர்.

478—(*வினா எண் 21573) திரு. செ. இராமலிங்கம் : மாண்பு மிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் புகைவண்டி மேம்பாலம் அருகில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் அருகில் உள்ள குளத்தில் கலந்து விடுவதால், பொது மக்களுக்குப் பல வியாதிகள் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இத்தோல் தொழிற்சாலை இடமாற்றம் செய்து கொள்ள அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) கும்ப கோணம் புகைவண்டி மேம்பாலம் அருகில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இல்லை. ஆனால் தோல் சேமிப்பு மற்றும் விற்பனைக் கிடங்குகள் மூன்று உள்ளன.

(ஆ) இந்தத் தோல் சேமிப்பு கிடங்குகளை நகர எல்லைக்கு வெளியே இடமாற்றம் செய்ய எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பரிசீலனையிலுள்ளது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அதைச் சேமித்து வைக்கின்ற கிடங்குகள் அங்கே இருக் கின்றன என்பது உண்மைதான். ஆனால் அங்கே தோல்கள் எல்லாம் கழுவப்பட்டு, அதனுடைய நீர் அருகாமையில் உள்ள அந்தக் குளத்தில் தற்போது கலந்து கொண்டிருக்கின்றன. அங்கே குடியிருப்பவர்களுக்கு, அந்தக் குளம்தான் குளிப்பதற்கும், மற்றும் உள்ள உபயோகங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வரு கின்றது. எனவே அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து உடனடி யாக அந்தச் சேமிப்புக் கிடங்கை இடமாற்றம் செய்ய ஆவன செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

[1984 மார்ச் 27

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த இடத்திலே தொழிற்சாலைகள் இல்லாவிட்டாலும், சேக்தாவுத் அன்ட் சன்ஸ், ஜமால் முகமது அன்ட் சன்ஸ் என்ற இரண்டு கிடங்குகளில் தோல் சேமித்து வைக்கப்படுகின்றன. இதைத் தவிரவும் எலும்புகள் மற்றும் மாட்டுக்கொம்புகள் சேமித்து வைக்கப்படுகின்றன. இந்த எலும்புகளின் கழிவு நீர் சுத்திகரிப்பு எதுவுமின்றி அருகாமையில் தேங்கி குட்டையை அடைகிறது. மேற்கண்ட கிடங்கு, குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ளதாலும் தோல் மற்றும், எலும்புகளை ஒட்டியுள்ள அங்கப்பொருட்கள் விற்பனைக்காக சேமித்து வைப்பதால், அழுகி துர்நாற்றம் வீசுவதாலும் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப் போதுமான இடங்கள் இல்லாததாலும், இந்தக் கிடங்குகளை நகர எல்லைக்கு வெளியே இட மாற்றம் செய்ய நகர ஆணையருக்குப் பரிந்துரை செய்வது சம்பந்தமாக வாரியம் தொடர்ந்து பரிசீலனை செய்யும்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடமாற்றம் செய்வதற்கு நோட்டீஸ் ஏதாவது முனிசிபாலிட்டி மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறதா? அப்படி என்றால் எந்தத் தேதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தப்பட்ட குறிப்புகள் என்னிடம் இல்லை. வாரியம் கண்டிப்பாக, நகர ஆணையருக்கு பரிந்துரை செய்து தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்.

அரசு ஊழியர்கள் வீடுகட்ட வாங்கும் கடன் தொகையின் உச்சவரம்பை அதிகரிக்கும் திட்டம்.

479—(*வினா எண் 12571) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் வீடுகட்ட வாங்கும் கடன் உதவியின் உச்சவரம்பை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?



1984 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) மற்றும் (ஆ) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 24—9—82 நாளிட்ட அரசு ஆணை வீடுகட்ட வழங்கப்படும் கடனுதவியின் உச்ச வரம்பு ரூ. 1,00.000 லிருந்து ரூ. 1,50,000 ஆகவும் 21—12—1982 நாளிட்ட அரசு ஆணைப்படி வீட்டினை விரிவு படுத்துவதற்காக வழங்கப்படும் முன்பணத்தின் உச்சவரம்பு ரூ. 25,000லிருந்து ரூ. 50,000 ஆகவும் உயர்த்தப்பட்டன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படும் உதவித் தொகை உயர்த்தியிருப்பதாகச் சொன்னார்கள். அதை ஒரே தவணையில் கொடுக்கப்படுமா அல்லது 2, 3 தவணைகளாகப் பிரித்து கொடுக்கப்படுமா ? என்பதை அறியவிரும்புகிறேன். அத்தோடு பல அரசு அதிகாரிகள் பல இடங்களில் வீடு கட்டிவிட்டு, எனக்கு வீடே இல்லை என்று சொல்லி, பொய்ச் சான்றிதழ் கொடுத்து, கடன் வாங்குகிறார்கள். அதைக் கண்காணிக்க அரசு ஏதாவது கண்காணிப்பு ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடன் வழங்குவதற்கான முறைகளில் அவர்கள் கேட்கின்ற அளவிற்கு பணம், திருப்பிச் செலுத்துவதற்கான நிலையை தெரிந்து கொண்டு, அவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது. ஆனால் பல்வேறு இடங்களில் அரசு ஊழியர்கள் வீடுகள் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய திறமையை வைத்துக்கொண்டு, அதைக் கண்டுபிடித்து அரசுக்கு தெரிவிப்பார்களானால், அப்படி வாங்கியவர்கள் மீது, அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் வீடு கட்ட, அரசு கடன் கொடுக்கிற அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பென்சன் கொடுக்கப்படுகிறது. அந்தப் பென்சன் தொகையை வைத்துக் கொண்டு எவ்வளவு தூரம் கடன் கொடுக்க முடியுமோ அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள்,ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், மாஜிமந்திரிகள், தற்போதுள்ள மந்திரிகள் ஆகியோருக்கு இந்த வீடு கட்ட கடன் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், அவருக்கே உரியமுறையில் இந்தக் கேள்வியை அமைந்திருக்கிறார்.

யாரையும் இங்கேவிடாமல், அத்தனை பேர்களையும் சொல்லி விட்டார்கள். பத்திரிகைக்காரர்களை மட்டும் விட்டுவிட்டார். அவர்களையும் சேர்த்து இருந்தால், அத்தனை பேர்களுக்கும் கடன் கொடுக்கின்ற ஒரு வேலையைப் பார்க்கிற ஒரு நிலையாக இருந்து இருக்கும். தாமரைக்கனியினுடைய சிந்தனை நிச்சய மாக காலத்தாலே ஏற்றுக்கொள்ளப்படும். அந்தச் சிந்தனை வளர வேண்டிய சிந்தனை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் தங்களுக்கு வீடு கட்ட மனுச் செய்கின்ற நேரத்தில், அந்தக் கடன் அவர்களுக்கு சாங்க்சன் செய்வதற்கு பல ஆண்டு கள் ஆகிறது. ஆகவே அப்படி காலதாமதம் ஆகிற நேரத்தில், அவர்கள் காலத்தே கொடுத்த, எஸ்டிமேட் தொகையைவிட அதிகமாகச் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலை வருகிறபோது அரசு ஊழியர்களுக்கு கடன் அளிக்கும்போது அவர்கள் கேட்ட தொகையைவிட 20 சதவிகிதம் அல்லது 10 சதவிகிதம் அதிகமாகக் கடன் கொடுக்கப்படுமா? அதோடு கடந்த ஆண்டு கொடுக்கப்பட்ட கடன்கள் பாதிவரை தான் கொடுக்கப்பட்டு இப்போது நிறுத்தப்பட்டதாகத் தெரி கிறது. அப்படி நிறுத்தப்பட்ட தொகையை தற்போது அளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடன் வழங்குவதிலே காலதாமதம் என்பது நிச்சய மாக ஏற்படுவதில்லை. ஆனால் கடன் வழங்குவதற்கு முன் னாலே பார்க்க வேண்டிய பல்வேறு பரிசீலனைகள் இருக்கிற காரணத்தாலே, பல்வேறு இடங்களிலேயிருந்து வருகிற அந்த மனுக்கள் முதலிலே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பரிசீலிக்கப்பட்டு அதற்குப் பிறகு அரசுக்கு வருகிற காரணத் தாலே, அதை முறைப்படுத்தி வைத்து, அவர்களுக்குரிய கடன் களைத் தருகிறோம். இப்படிப்பட்ட கடன்களை அளிக்கின்ற நேரத்திலே அதை ஆண்டுக்காண்டு அதிகப் படுத்தித்தான் தரு கிறோம். அது தற்போது 50,000லிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் வரை உயர்த்தப்பட்டிருக்கிறது. விலை வாசி உயர்கிற அளவிற்கு கடன் தொகையும் உயர்த்தப்படுகிறது. தாமதம் இருக்கிறது என்கிற நிலை கிடையாது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வளவு பணம் கடன் தரவேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு ஒதுக்கப் படுகிறது. இந்த ஆண்டு 9 கோடி ரூபாய் கடன் தரவேண்டும் என்று உச்ச வரம்பு விதிக்கப்பட்டது. அந்தத் தொகை அத்த னையும் செலவழிக்கப்பட்டிருக்கிறது.





## கோபிச்செட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதியில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

*480—(வினா எண் 22657) திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கோபி சட்டமன்றத் தொகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) அப் பணி எப்போது துவங்க உள்ளது ?

(ஈ) பெரியார் மாவட்டத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன ?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ), (ஆ) மற்றும் (இ) பெரியார் மாவட்டம் கோபி சட்டமன்றத் தொகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டும் திட்டம் இல்லை. எனினும் கோபி பகுதி முடிச்சூர் கிராமத்தில் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான ''ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத் தித்திட்டத்தின்'' கீழ் ரூ. 18.57 இலட்சம் மதிப்பீட்டிலும் 10.08 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்த திட்டமிட்டு 3.76 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டு ரூ. 6.05 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 73 மனைகள் மேம்படுத்தப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும். மீதமுள்ள நிலப் பரப்பு, இந்து அறநிலையத்துறையிடம் இருந்து கையகப் படுத்தி மனை மேம்பாட்டுத் திட்டத்தில் செயல்படுத்தப்படும்.

(ஈ) பெரியார் மாவட்டம் ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடைப் பகுதியில் குடிசை மாற்று திட்டத்தின் கீழ் 624 குடியிருப்பு களும் கருங்கல்பாளையத்தில் 288 குடியிருப்புகளும் கட்டப்பட உள்ளன. இது தவிர ''நில ஆர்ஜிதம் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்'' கீழ் ஈரோடு கொல்லம்பாளையத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பும், நசியனூர் சாலைப்பகுதியில் 188 ஏக்கர் நிலப் பரப்பும், பவானியில் 26.43 ஏக்கர் பரப்பும் மற்றும் தாரா புரத்தில் 336·30 ஏக்கர் நிலப்பரப்பும் ஆர்ஜிதம் செய்யும் திட்டம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் செயல்படுத் தப்படஉள்ளது.

1984 மார்ச் 27]

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, கோபி தாலுக்காவிற்கு உட்பட்டதுதான்
முடிச்சூர் கிராமம் என்பது. அங்கே வீடுகள் கட்டும் திட்டம்
இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அதனுடைய மதிப்பீட்டுத் தொகையைக் கூடச் சொல்லியிருக்
கிறார்கள். ஒவ்வொரு வீட்டினுடைய மதிப்பீட்டுத் தொகை
என்ன? அந்த வேலைகள் எப்போது முடிவு அடையும் என்பதை
அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர்
அவர்களே, இப்போது நிலம் கையகப்படுத்தப்பட்டு, பிறகு
அந்த நிலங்கள் மனை மேம்பாடு திட்டத்தின் அடிப்படையில்
தரப்படுகிறது. தற்போது 73 மனைகள் தரப்படுகின்ற நிலை
யிலே இருக்கிறது. அதற்கு முன்னால் நிலம் கையகப் படுத்தப்
பட வேண்டிய நிலை இருக்கிறது. அறநிலையத் துறையிட
மிருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டதும், வீடு கட்டுவதற்கு
ஏற்பாடு செய்யப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, அறநிலையத்துறையிடமிருந்து கையகப்படுத்துவதில்
ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்?
அத்தோடு பெரியார் மாவட்டத்தில் எந்தெந்த தாலுக்காக்
கள் இந்த வீடு கட்டும் திட்டத்தின் மூலமாக எடுக்கப்பட்டி
ருக்கிறது? இது அந்த கிராமத்திற்கு தேவைதானா? அதாவது
தாராபுரத்திற்கு தேவைதானா என்பதையும் பார்க்க வேண்டும்.
எடுக்கப்படுகிற நிலங்களை முதலிலே அதிகமாக எடுத்துவிடுவதும்
பிறகு அது வேண்டாம் என்று விடப்படுவதும் போன்ற நிலைமை
இல்லாமல் எத்தனை ஏக்கர்கள் தேவைப்படுகிறதோ, அதை
மட்டும் அராய்ந்து அறிந்து எடுப்பதற்கான முறையில் அரசு
நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோபிச்செட்டிப்பாளை
யத்திலிருந்து தாராபுரத்திற்கு போகிறது கேள்வி.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே,
பெரியார் மாவட்டம் ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடைப்
பகுதியில் குடிசை மாற்றுத் திட்டத்தின்கீழ் 624 குடியிருப்பு
களும் கருங்கல்பாளையத்தில் 288 குடியிருப்புகளும் கட்டப்பட
உள்ளன. இதுதவிர நில ஆர்ஜித மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்
ஈரோடு கொல்லம்பாளையத்தில் 82 ஏக்கர் நிலப்பரப்பும்,
நசியனூர் சாலைப் பகுதியில் 188 ஏக்கர் நிலப்பரப்பும், பவானி
யில் 26.43 ஏக்கர் நிலப்பரப்பும் மற்றும் தாராபுரத்தில் 336.30
ஏக்கர் நிலப்பரப்பும் கையகப்படுத்தப்படுவதற்கான திட்டங்கள்



1984 மார்ச் 27] [மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா]

இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல்
தாராபுரத்தைப் பொறுத்தவரையில் 336.30 ஏக்கர் நிலம்
தேவைதானா என்ற கேள்வி சட்டமன்றத்திலே எழுப்பப்பட்ட
பிறகு அதை பரிசீலனைக்கு எடுத்து அதிகமான நிலங்களை கைய
கப்படுத்திக்கொண்டு பின்னால் கைவிடுகின்ற நிலைமை இல்லா
மல் எந்த அளவுக்கு தேவையோ அந்த அளவுக்கு மட்டும்
கையகப்படுத்தியதற்குப் பிறகு வீடுகள் கட்டுவதற்கு முயற்சிகள்
மேற்கொள்ளப்படும்.

திரு. நி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, ஈரோடு
கருங்கல்பாளையத்திலே 288 வீடுகள் கட்டப்பட இருப்பதாக
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதேபோல்
ஈரோடு நகரத்திலே நெருப்புப் பிடித்து பல குடிசைகள் எரிந்து
போனதே அதையும் அந்த வீடுகட்டும் திட்டத்தில் சேர்த்து
வீடுகள் கட்டப்படும் என்று அங்கே இருக்கிறவர்கள் குறிப்பிடு
கிறார்கள். அந்தத் திட்டம் செயல்பாட்டில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே,
கருங்கல் பாளையத்தில் 288 வீடுகள் கட்டப்பட உள்ளன.
அங்கே புதிய திட்டங்களையும் எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்
கப்பட்டு வருகிறது. அந்த முயற்சியும் வெற்றிதரக்கூடிய
அளவுக்கு இருக்கிறது. புதிதாக வீடுகள் கட்டவும் முயற்சிகள்
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்னையில் கதர்க் கடைகள் திறக்கும் திட்டம்.

*481—(வினா எண் 20648) திரு. பெ. சு. திருவேங்கடம் :
மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர்த்தொழில் வாரியம் இளைஞர் சுய
வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் சென்னையில் கதர்க் கடை
களைத் திறந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதனால் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளவர்கள்
எத்தனைபேர் ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (அ) இல்லை

(ஆ) மற்றும் (இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதற்காக கடைகளை திறப்பதாக எனக்கு ஒரு செய்தி கிடைத்ததால்தான் நான் இந்தக் கேள்வியை கேட்டேன். இல்லை யென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இல்லை யென்றால் இனிமேலாவது ஆரம்பிப்பதற்கு துறையிடம் குறிப் புள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டபடி இங்கே கடைகள் இருக்கின் றன. இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட கதர் கடைகள் அல்ல. வாரியத்தின்மூலமாக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களிலே உள்ள கை வினைஞர்களுக்கும் படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் திட்டத்தில் 20 நவீனக் கூடங்கள் சிறப்புத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தக் கூடங்களின் வண்ண அமைப்பு ( N ti nal Institute of Des gns ) என்ற நிறுவனத்தால் அமைக்கப்பட்டது. அந்தக் கூடங்கள் 14-3-1984 அன்று திறக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, 20 கூடங்கள் திறந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 20 கூடங்களிலே எவ்வளவு பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன? எல்லா மாவட்டத் தலை நகர்களிலேயும் இந்த வேலைவாய்ப்பு ஏற் பாடுகளைச்செய்ய துறை நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு கூடமும் ஒவ்வொரு நபருக்கு அளிக்கப் பட்டு வருகிறது. அதைப்போல் பலவிதப் பொருள்கள் விற் பனைப் பொருள்கள் கிராமத் தொழில் உற்பத்தியை அதிகப் படுத்தவும் கிராமத் தொழில் பொருட்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளதால் கிராமத் தொழில் உற்பத்தியை ஏற்படுத்து வதற்கு ஏதுவாக கிராமங்களிலே வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறவர்களுக்கு அதிக வேலை கொடுப்பதற்காகவும் பெட்டிக் கடைகளை ஏற்படுத்துவதற்கு வேலையில்லாமல் இருக்கிற இளை ஞர்களை நியமித்து ஒவ்வொருவருக்கும் ஒரு கடை கொடுக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**விசைப்படகுதாரர்கள் கடலில் மீன் பிடிப்பதை வரன்முறைப்படுத்துவதற் கான சட்டம்.**

*482—(வினா எண் 20889) திரு. சி. கணேசன் : மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விசைப்படகுக்காரர்கள் கடலில் 3 மைல் தள்ளிச் சென்று மீன்பிடிக்க வேண்டியதை வலியுறுத்தி அதற்கான புதிய சட்டத்தை உருவாக்க அரசு எடுத்துக்கொண்ட முயற்சி இப் போது நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு இரு. க. கலைமணி : (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப் படுத்தல் சட்டம், சனவரித் திங்கள் 6 ஆம்நாள் அன்று செயலுக்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 5 (3) மற்றும் அதன் விவர அட்டவணையின்படி விசைப் படகுகள் கடலில் 3 கடல் மைல்களுக்கு அப்பால்தான் மீன்பிடிக்க வேண்டும். ஆனால் இப் பிரிவு அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூறி விசைப்படகுதாரர்கள் சென்னை உயர்நீதி மன்றத் தில் ரிட் மனுக்களை சமர்ப்பித்தார்கள். அதன் பேரில் சட்ட பிரிவு 5 (3) உள்ள நிபந்தனைகளை நிறுத்தி வைக்கும் இடைக்கால தடையாணையை உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ளதால், சட்டம் நடைமுறைப்படுத்துவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 3. தகவல் கோரல்

**சட்டமன்ற விடுதி வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்து.**

திரு. ந. சிவஞானம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு 8 மணி அளவில் சென்னை சட்டமன்ற விடுதி வளாகத்திற்குள் தீ விபத்து ஏற்பட்டு இதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பீதியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படாமல் தடுப்பதற்கு தலைவர் அவர்கள் தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்குள்ள பெட்டிக்கடை ஒன்றில் பீடிபற்ற வைப்பதற்கு ஒரு விளக்குவைத்திருக்கிறார்கள். விளக்கை அணைக்காமல் போயிருந்திருக்கிறார்கள்; அது எரிந்து போய்விட்டது. அதனால் எந்தவிதமான பதட்டமும் இல்லை. எரிந்தது சட்டமன்ற விடுதிக்கு பக்கத்தில் என்பதுதான் பீதியும் முக்கியத்துவம். வேறு எதுவும் இல்லை.

## 4. கவன ஈர்ப்புகள்

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குட்டக்குழி ஆரம்பச் சுகாதார நிலைய ஜீப் விபத்திற்குள்ளானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி, ரா. கிருஷ்ணன், ப. பொன்னுரங்கம், பொ. விஜயராகவன், ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் மற்றும் ரா. உமாநாத் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கோதையாற்றில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திலிருந்து திரும்பும்போது ஜீப் விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 4 பேர்கள் இறந்தது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

12—3—1984 அன்று குலசேகரம் அரசு மருத்துவமனையில் நடக்க இருந்த குடும்பநல லேபராஸ்கோப் அறுவை சிகிச்சைக்கு விருப்பம் உள்ளவர்களை அழைத்துவர கன்னியாகுமரி மாவட்டம், குட்டக்குழி ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த பொதுச் சுகாதார ஜீப் எண்.டி.என்.கே. 233 கடந்த 11—3—1984 அன்று பயன்படுத்தப்பட்டது. கீழ்க் குறிப்பிட்ட நபர்கள் ஜீப்பில் பயணம் செய்தனர் :—

1. திரு. ராமசாமி, ஓட்டுநர், ஆரம்ப சுகாதார நிலையம், குட்டக்குழி.

2. திரு. சூசை அந்தோணி, சுகாதார உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம், குட்டக்குழி.



3. திரு. ஸ்ரீகண்டபிள்ளை, அடிப்படை சுகாதார பணியாளர் ஆரம்ப சுகாதார நிலையம், குட்டக்குழி.

4. திரு. பகவதிபெருமாள் பிள்ளை, மருந்தாளுநர் மின் வாரியம் (மோடிவேட்டர்)

5. திரு. சிவலிங்கம், ரப்பர் தோட்டக்கூலி (மோடிவேட்டர்

6. திரு. பரமசிவம், தன் மனைவியை குடும்பநலச் சிகிச்சைக்கு அழைத்துவர ஜீப்பில் சென்றவர்.

7. திருமதி காளிகுட்டி வயது 25—சிகிச்சைக்கு விருப்பப் பட்டவர்.

8. திருமதி பார்வதி, வயது, 40 திருமதி காளிக்குட்டியின் தாயார்.

9. 2½ வயது நிரம்பிய திருமதி காளிக்குட்டியின் குழந்தை.

10. திரு. வேலாயுதம், வயது 35 ரப்பர் தோட்டக்கூலி. பிற்பகல் சுமார் 6.30 மணியளவில் கொடையார் இரண்டாம் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ( Power House ) கீழே வரும் வழியில் குறுகிய பாதையில் ஜீப் திரும்பும்போது பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியது. ஓட்டுனரின் வாக்கு மூலப்படி பிரேக் இயங்கவில்லை என்று தெரியவருகிறது. இவ் விபத்து குடும்பக்கட்டுப்பாடு நிலையத்திற்கு வரும்போது ஏற்பட்டதே தவிர, தீர்மானத்தில் கூறியபடி திரும்பச் செல்லும் போது ஏற்படவில்லை. இருப்பினும் இந்த விபத்துபற்றி காவல் துறையினர் ஆய்து செய்து வருகின்றனர். ஜீப்பில் பயணம்செய்த 10 நபர்களில் கீழ்க் குறிப்பிட்ட நான்கு நபர்கள் இறந்து விட்டனர்.

1. திரு. சூசை அந்தோணி—சுகாதார உதவியாளர்.

2. திருமதி காளிக்குட்டி—சிகிச்சைக்கு விருப்பப்பட்டவர்.

3. திரு. வேலாயுதம்—கூலி.

(மேற்குறிப்பிட்ட மூவர் விபத்து நடந்த இடத்திலேயே இறந்துவிட்டனர்)

4. திருமதி பார்வதி—(திருமதி காளிக்குட்டியின் தாய்)
நாகர்கோயில் அரசு தலைமை மருத்துவமனையில் அனுமதித்த
வுடன் இறந்துவிட்டார்.

மீதி நபர்கள் நாகர்கோயில் அரசு தலைமை மருத்துவமனை
யில் சிகிச்சை அளிக்கப்பட்டு உடல் நலம் தேறி வருகிறார்கள்.

2½ வயது குழந்தை காயமின்றி தப்பியது.

கன்னியாகுமரி மாவட்ட சுகாதார அலுவலர் இறந்துபோன
சுகாதார உதவியாளரின் உடல் அடக்கம் செய்ய ரூ. 1,000
அவசர நிவாரணத் தொகையாக அளித்தார். கன்னியாகுமரி
மாவட்ட ஆட்சியாளர் மேற்குறிப்பிட்ட ஒன்பது நபர்களுக்கும்
தலா ரூ. 150 வீதம் நிவாரணத் தொகை அளித்துள்ளார்.

திரு. ப. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இந்த விவர அறிக்கையிலே சொல்லியிருக்கின்ற விவரங்களைப்
பார்க்கிறபோது ஏற்கனவே ஓட்டுநர் ஒருவர் அரசாங்க ஊழியர்
இறந்து உள்ளதாகவும் அதேபோல் தோட்டத்தில் பணியாற்று
கின்ற மூன்று தொழிலாளர்கள் இறந்து உள்ளதாகவும் அதிலே
2 பேர் பெண் பணியாளர்கள் ஆதி வாசி பழங்குடியினர்,
எனவே இந்த இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்கு போது
மான நிதி என்று சொல்கிறபோது ஏற்கனவே இவர்களுக்கு முன்
நிதியாக 180 ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஓட்டு
நருக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அது போது
மானது இல்லை. ஆகவே அவர்கள் குடும்பத்தை பாதுகாக்கிற
முறையில் அந்த தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சம் 5
ஆயிரம் ரூபாயும் அந்த குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு
அரசு ரப்பர் தோட்டத்தில் வேலை தரவும் அரசு நடவடிக்கை
எடுக்குமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கொஞ்சம் உயர்த்திக்
கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது
அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த குடும்ப கட்டுப்பாட்டுக்காக சென்று விபத்
துக்கு உள்ளாகி இறந்து போனவர்களுக்கு ஏற்கனவே இதற்கு
முன்பு இந்த மாதிரி குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமாக அதன்
தொடர்பாக இறந்து போனவர்களுக்கு நிதி வழங்கப்படவில்லை
என்று ஒரு குறைபாடு இருக்கிறது. இது ஒரு ஆக்சி





டெண்டு. இதிலே இந்த அரசு எந்த அளவுக்கு உதவி கொடுப்
பதற்கு தயாராக இருக்கிறது? எவ்வளவு தொகை நிர்ணயிப்
பதற்கு தயாராக இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, அது வேறு. இது வேறு. இது
ஜீப்பிலே போகிற நேரத்தில் ஏற்பட்டு இருக்கக்கூடிய விபத்து.
இப்போது மாண்புமிகு உறுப்பினர் கேள்விக்கு பதில் சொன்னது
மாதிரி ஏற்கனவே கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். அதிக
மான தொகை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டி
ருக்கிறார்கள். அது அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம்; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அறிக்கையில் பிரேக் பெயிலூர் ஆனதாக
பிரேக் சரியாக வேலை செய்யாததால் ஆக்சிடெண்டு ஆனதாக
இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்
பிற்பகல் 6-30 மணிக்கு ஜீப்பில்போய் விரும்புகிறவர்களை
அழைத்து வர போகிறார்கள். நீங்கள் இதில் போட்டு இருப்பது
பிற்பகல் 6-30 மணி. மாலை இல்லை. பிற்பகல் என்று போட்டு
இருக்கிறீர்கள். ஆனால் ஏதோ ஒன்றை மறைப்பதற்காக இப்படி
போட்டு இருக்கிறீர்கள். 'மோர் ஓவர்' ஒரு ஜீப்பில் 10 பேர்
டிராவல் செய்து இருக்கிறார்கள். அதுவும் மலைப் பகுதி. மலைப்
பகுதியில் போய் கன்சர்ன்டு பர்சனை அழைத்து வருவதற்கு 10
பேர் போகிறார்கள். அதில் ஒரு குழந்தை இருக்கலாம் அதில்
2 பெண்கள் தான் போய் இருக்கிறார்கள். அழைத்து வருவதற்கு
டிரைவர் ஒரு அசிஸ்டெண்டு போனால் போதும் மற்றும் அந்த
பெண் அவர் கணவர் 4 பேர் போகலாம். இப்படி 10 பேர்
வராவல் செய்து இருக்கிறார்கள். அதற்குதான் போனார்களா
அல்லது வேறு ஏதாவது விவகாரத்திற்கு போனார்களா என்பதை
நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, இது நல்ல கேள்வி. இதற்கு நான்
முதலிலே பதில் சொல்லி விடுகிறேன். இது நியாயமான கேள்வி.
இந்தக் கேள்வியைத்தான் நானும் அந்த அதிகாரியிடத்தில் கேட்
டேன். ஏனென்றால், பத்து பேர்கள் போவது என்பது மிகவும்
தண்டிக்கத் தக்கது என்பதில் சந்தேகமில்லை. உடனடியாக
இதற்கு யார் காரணம் என்று என்கொயரி வைத்து கடும் நட
வடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இதற்குப் பதில் சொல்கிறேன் என்று குறுக்கிட்டு விட்டதால் நான் உட்கார்ந்தேன். என்னுடைய கேள்வியை இன்னும் நான் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கமாக கவன ஈர்ப்பில் ஒரு உறுப்பினருக்கு ஒரு கேள்வி கேட்க அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார்கள் ; அதற்கு அமைச்சரவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறுக்கிட்டு எழுந்தபோது நான் உட்கார்ந்தது தப்பா? இனிமேல் மந்திரி குறுக்கிட்டால் உட்காருவது தப்பு என்ற நிலைமை ஏற்பட்டு விடுமே. இது ஒரு முன்மாதிரியாக அமையக் கூடாது. இது கேள்வி நேரம் இல்லை. கவன ஈர்ப்புத் தீர்மானம். பார்லிமெண்டிலேகூடப் பார்த்திருக்கிறோம். அங்கெல்லாம் விவாதம் மாதிரி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பத்து வருடங்கள் பார்லிமெண்டில் இருந்திருக்கிறேன், அப்பொழுதெல்லாம் அப்படி நடக்கவில்லை. இப்பொழுது உறுப்பினர் ஒரு கேள்வி கேட்டார், அதற்கு அமைச்சர் பதில் சொல்லி விட்டார். அடுத்த உறுப்பினர் கேள்வி கேட்க வாய்ப்பு தர வேண்டும். எனவே, அடுத்து, அடுத்து என்று ஒரே உறுப்பினர் இரண்டு மூன்று கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்பொழுது, அதிகமான பணத்தைக் கேட்டு விண்ணப்பித்திருக்கிறார்கள், கோரியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு அதிகமாகப் பணம் வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது? அது மட்டுமல்லாமல், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, இறந்தவர்களின் அந்தக் குடும்பங்களுக்குக் குறைந்தபட்சம் ஐயாயிரம் ரூபாய் தருவதற்கான முயற்சியை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான்கு பேர்கள் இறந்திருக்கிறார்கள். கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஆகவே, நிதி நிலைமைக்கேற்ப நாம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். எவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்பதைப் பிறகு தெரிவிக்கிறேன்.



திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பத்து நபர்கள் அந்த ஜீப்பிலே பிரயாணம் செய்தது சம்பந்தமாகத் தகவல் கோரியிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், இறந்த அந்த மூன்று தொழிலாளிகளும் —அதாவது காளிக்குட்டி, பார்வதி, வேலாயுதம் ஆகியவர்கள் அரசு இரப்பர் தோட்டத்தில் வேலை செய்தவர்கள். அவர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு அழைத்த நேரத்தில், கோதையாறு மருத்துவ பார்மசிஸ்ட், அவர் இவர்களை அனுப்பி வைக்க உத்தரவாதம் எடுத்துக்கொண்டால்தான் தாங்கள் வருவோம் என்று சொன்னதால், இப்படி மூன்று பேர்களும், அதற்கு மேலே கோதையாறில் உள்ள பார்மசிஸ்ட் ஆகிய எல்லோரையும் ஏற்றிக்கொண்டு வர வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதற்குமேல் பத்து பேர் பிரயாணம் செய்வது கஷ்டம் என்று கருதி, அங்கேயுள்ள ரப்பர் பிளான்டேஷன் அதிகாரியிடத்திலே வெகிகிள் வேண்டுமென்று கேட்டுக்கொண்ட நேரத்தில், அதை அவர்கள் கொடுக்காததால்தான் பத்து பேர்களும் ஒரே ஜீப்பில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. மிக ஸ்லீப்பான பகுதியிலே அந்த ஜீப் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படி அந்த அரசு இரப்பர் தோட்ட அதிகாரிகள், பேமிலி பிளானிங்கிற்கு ஒத்துழைக்காத காரணத்தால் ஏற்பட்ட விபத்து இது என்றுதான் கொள்ள வேண்டும். இப்படி அவர்கள் இறந்த பிறகுகூட அவர்களை அடக்கம் செய்வதற்கோ அல்லது மற்ற ஏற்பாடுகள் செய்வதற்கோகூட அரசு இரப்பர் தோட்ட அதிகாரிகள் எந்தவிதமான ஒத்துழைப்பும் கொடுக்கவில்லை. இம்மாதிரி பேமிலி பிளானிங்கிற்கு ஆட்களைக் கூப்பிடும்பொழுது, மற்ற டிபார்ட்மெண்டுகளின் கீழே வேலை செய்யும் தொழிலாளர்களை அழைத்து வருவதற்கு இன்டர் டிபார்ட்மெண்ட் ஏற்பாடு செய்ய வேண்டாமா? அப்படிச் செய்யாததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்ற முறையில் இதைக் கவனிக்க வேண்டும். அரசு இரப்பர் தோட்டத்தில் தொழிலாளர்களாக இருந்தவர்களில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்த..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னியாகுமரி மாவட்டத்தில் நடந்தது என்ற காரணத்தினால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் எல்லா விஷயங்களையும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். இப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால், உறுப்பினர் பேசிய பிறகு அமைச்சர் பதில் கொடுப்பதை நிறுத்த வேண்டியிருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில புதிய தகவல்களைக் கொடுக்கிறார்கள். (குறுக்கீடு) உங்களுக்குச் சாதகமாகத்தான் நான் பதில் சொல்கிறேன். எனவே, என்னுடைய பதிலைக் கொஞ்சம் கேளுங்கள். விசாரணை செய்து யார் யார் குற்றவாளி என்றும் எதற்காகத் தவறுகள் நடந்திருக்கின்றன என்றும்

கண்டுபிடிக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். 6.45 பி.எம். என்று கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதைப் பார்த்ததிலே உண்மை என்று தெரிந்து கொண்டோம். அதிலே 10 பேர் ஜீப்பிலே போய் இருக்கிறார்கள். அது தவறு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது சில புதிய தகவல்களைக் கொடுக்கிறார்கள். நாங்கள் இதுபற்றி விசாரணை செய்ய வேண்டும் என்று உத்தரவு கொடுத்து இருக்கிறோம். மேலும் புதிய தகவல்கள் ஏதேனும் உங்களிடத்திலே இருந்தாலும்கூட, அதை எங்களுக்கு அனுப்பினால் விசாரணைக்கு அவை உதவிகரமாக இருக்கும். யார் யார் குற்றவாளி என்று கண்டுபிடித்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை அரசாங்கம் எடுக்கும் என்பதை ஒரு வாக்குறுதியாகவே இங்கே நான் தருகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, இந்த விபத்திலே தாயும் மகளும் இறந்திருக்கிறார்கள். ஆகவே, குறிப்பிலே கொடுத்திருப்பதைப் பார்த்தால் அறுவை சிகிச்சை செய்யப்படுபவருக்குப் பாதுகாப்புக்காகத் தாயும் போய் இருக்கிறார். நல்லவேளையாக குழந்தை காயமின்றித் தப்பி இருக்கின்றது. அப்படி இரண்டுபேரும் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டஈடும் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற இலக்குக்கு அதிகமாக நபர்களைக்கொண்டுவரவேண்டும் என்ற நிர்பந்தத்தின் காரணமாகத்தான் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்த விபத்திலே இறந்தவர்களைப் பொறுத்த வரையில் அரசு ஊழியருக்கு ஒருவிதமான தொகையும், அதே நேரத்தில் மற்றவர்களுக்கு வேறு தொகையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்திற்கு உதவுகின்ற வகையிலே வந்ததன் காரணத்தால் அவர்களுக்கும் உரிய தொகை வழங்கப்பட வேண்டும். ஆகவே, அரசு ஊழியர் இறந்தால் எந்த அளவுக்கு கொடுக்கப்படுகின்றதோ அதே தொகை இறந்துவிட்ட மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். ஏனென்றால் தாயும், மகளுமே இறந்திருக்கிறார்கள் இந்த விபத்திலே,



ஆகவே, அவர்களுக்கும் அரசு ஊழியர் அளவுக்கு உதவித் தொகை கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இங்கே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த நான் விரும்புகிறேன். இலக்கிற்கும், இதற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அந்த டார்கெட் என்பது வேறு. ஆனால், இந்த விபத்து நடந்தது ஒரு கவனக் குறைவால் ஏதோ தவறு நடந்திருக்கின்றது. ஒரு ஜீப் கிடைத்திருக்கின்றது. அதிலே 10 பேர் ஏறி இருக்கிறார்கள். அது தவறான செயலாக இருக்கின்றது. ஆனால், இலக்கையும், இதையும் தொடர்புபடுத்திப் பேசுவது இலக்கைப் பாதிக்கும் என்பதைத் தெரித்துக்கொள்கிறேன். இலக்கு என்பது ஒரு நல்ல நோக்கம் ; அகில இந்திய ரீதியாக அதை நாம் நிர்ணயித்திருக்கிறோம். ஆகவே, அதற்கும் இதற்கும் தொடர்பு இல்லை. ஆனால், ஒரு ஜீப்பிலே ஏன் இத்தனை பேர் ஏறவேண்டும் என்று திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே, இந்த வகையிலே எந்த புதிய தகவல் கிடைத்தாலும் அதை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசாங்கம் அதன் மீது நடவடிக்கை எடுப்பதிலே தயவு தாட்சணியம் காட்டாது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஆ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் முதியோர் விதவைகள் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு வழங்கப்பெறும் அரசு உதவித் தொகை

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் தொகுதியிலுள்ள ஹாடனேரி, துலுக்கப்பட்டி, முத்துக்குமார்புரம், அய்யனார்புரம், கீழ்நாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள முதியோர், விதவைகள், ஊனமுற்றோர் ஆகியோர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்க உத்தரவிட்டும், இதுவரை உதவித் தொகை கிடைக்காதது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்;** தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் குறிப்பிட்டுள்ள கிராமங்களில் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.—

| வரிசை எண்ணும் கிராமமும். | | முதியோர். | விதவைகள். | உடல் ஊன முற்றோர். | விவசாயிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 ஹாடனேரி | .. | 6 | 3 | 6 | .. | 15 |
| 2 துலுக்கப்பட்டி | .. | 1 | .. | .. | .. | 1 |
| 3 முத்துக்குமார்புரம் | .. | .. | .. | .. | .. | 2 |
| 4 அய்யனார்புரம் | .. | .. | .. | .. | .. | .. |
| 5 கீழ்நாயக்கன்பட்டி | .. | .. | .. | .. | .. | .. |

உதவித் தொகை விதிகளின்படி ஒரு மாதத்திற்கான உதவித் தொகை அந்த மாதம் முடிந்தபிறகு அடுத்த மாதம் முதல் வாரத்தில் உதவித் தொகை பெறும் நபர்களுக்கு அஞ்சல் வழியனுப்பல் மூலம் பணம் அனுப்பி வைக்கப்படுகிறது. பணம் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி (Acknowledg ment) வரப் பெற்றால்தான் அடுத்த மாதம் பணம் அனுப்பப்படும். பணம் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சி, பணம் அனுப்பிய 30 நாட்களுக்குள் கிடைக்கவில்லையென்றாலும், பணம் வழங்கப்படவில்லை என்ற புகார் கிடைக்கப் பெற்றாலும் உடனடியாக சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் தபால் தந்தி இலாகாவினருடனும் தனது துறை அலுவலர்கள் மூலமாகவும் தேவையான விசாரணை மேற்கொள்வார்.





3. மேலே பத்தி 1 இல் கூறப்பட்டுள்ள 18 உதவித் தொகை பெற்றுவரும் நபர்களுக்கு 1984 ஆம் ஆண்டு ஜனவரி திங்களுக்கான உதவித் தொகை வழங்கப்பட்டு விட்டது. பிப்ரவரி திங்களுக்கான உதவித் தொகையும் 16–3–1984 அன்று அனுப்பப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த பெருமழையால், இராமநாதபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் வெள்ளத்தால் மிகுந்த சேதம் ஏற்பட்டது. வருவாய்த்துறை அலுவலர்கள் அனைவரும் வெள்ள நிவாரணப் பணிகளை யுத்தகால நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டியிருந்ததால், மார்ச் மாதம் முதல் வாரத்தில் அனுப்ப வேண்டிய பிப்ரவரி மாதத்திற்கான முதியோர் உதவித் தொகை 16–3–1984 இல் அனுப்பப்பட்டது. எனவே உதவித் தொகை வழங்க உத்திரவிடப்பட்டு, உதவித் தொகை கிடைக்கப் பெறவில்லை என்பது சரியல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் சில விவரங்கள் விட்டுப்போய் இருக்கின்றன. அதாவது அரசாங்கம் உதவித் தொகை அனுப்பி இருக்கின்றது. ஹாடனேரி போஸ்ட் ஆபீஸில் உள்ளவர்கள், விதவைகள், ஊனமுற்றோர், முதியோர் ஆகியோருக்குக் கொடுக்கப்பட வேண்டிய அந்தப் பணத்தைக் கையாடல் செய்து கொண்டு விட்டதன் காரணத்தால் உரியவர்களுக்குப் பணம் போய்ச் சேராமல் இருக்கின்றது. இதற்காக சிலர் சஸ்பென்ட் செய்யப்பட்டு, வழக்கும் தொடரப்பட்டிருக்கின்றது. அந்த வழக்கு முடிந்ததற்குப் பிறகுதான் பணத்தைக் கொடுப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆகவே இந்த அரசு ஒரு முன் தொகையைக் கொடுத்துவிட்டுப் பிறகு வழக்கு முடிந்தவுடன் அந்தத் தொகையை வாங்கிக் கொள்கின்ற வகையில் அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய விவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. என்னிடம் உள்ள குறிப்புப்படி உதவித் தொகை விதிகளின்படி ஒரு மாதத்திற்கான உதவித் தொகை அந்த மாதம் முடிந்த பிறகு அடுத்த மாதம் முதல் வாரத்தில் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றது.

(முற்பகல் 10–30)

இருந்தாலும் பணம் பெற்றுக் கொண்டதற்கான அத்தாட்சியும் வரப்பட்டால்தான் அடுத்த மாதம் பணம் அனுப்பப்படும் என்று விவர அறிக்கையிலே மிகவும் விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி அத்தாட்சி 30 நாட்களுக்குள் கொடுக்கப்படவில்லையென்றால், பணம் வரப்படவில்லையென்றாலும், அல்லது

புகார் கிடைக்கப் பெற்றாலும் உடனடியாகச் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் தபால் தந்தி இலாகாவினரோடும் தனது துறை அலுவலர்கள் மூலமாகவும் தேவையான விசாரணை மேற்கொள் வார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களுக்கான உதவித் தொகை பெற்றிருக்கிறார்கள் என்று விவர அறிக்கையில் மிகவும் விளக்கமாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. பிப்ரவரி மாதத்திற்கான உதவித் தொகை 16—3—1984 அன்றுதான் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்னவென்றால், மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பெரு மழை பெய்ததால் வெள்ளம ஏற்பட்டது. அந்தத் தாமதத்தின் காரணமாக, வருவாய்த் துறை அலுவலர்கள் வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் மார்ச் மாதம் முதல் வாரத்தில் அனுப்ப வேண்டிய பிப்ரவரி மாதத்திற்கான முதியார் உதவித் தொகை 16-3-1984 இல் அனுப்பப்பட்டிருக்கிறது. வேறு ஒன்றும் தவறான நடவடிக்கை கள் ஸ்ரீவில்லிபுத் தூரில் நடைபெறவில்லை. அப்படிப்பட்ட தக வல்கள் எனக்குக் கொடுக்கவும் இல்லை. அப்படித் தவறுகள் ஏதாவது நடந்திருந்தால் மறுபடியும் அதிகாரிகளை அனுப்பி விசாரணை செய்யும்படி இந்த அரசு நடவடிக்கை மேற்கொள் ளும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே சமீபத்தில் இந்தக் கிராமங்களுக்கெல்லாம் நான் சென்றிருந் தேன். சென்றிருந்த பொழுது பல பாட்டிகள், தாத்தாக்கள் எல்லாம் வந்து எங்களுக்குப் பென்ஷன் கிடைக்கவில்லை, போஸ்ட் மேன் கையாடல் செய்து விட்டார். உடனே ஆவன செய்து கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதில் ஒரு பாட்டியினுடைய படத்தைக் கூட நான் வாங்கி வந் திருக்கிறேன். சபாநாயகரிடம் கூட காட்டியிருக்கிறேன். மந்திரி அம்மாவிடம் அந்தப் பாட்டியின் படத்தைக் கொடுக்கின்றேன். தகுந்த நடவடிக்கை எடுத்து உடன் உத்தரவு போடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, முதியோர் தொகை வருகின்ற அந்த நேரத்தில் பாட்டியும் தாத்தாவும் அந்த இடத்தில் இல்லாமல் வேறு இடத்திற்குச் சென்றிருக்கலாம். அப்பொழுது அவர்களுக் குக் கிடைக்காமல் போஸ்ட்மேன் திரும்பிப் போவதற்கு வாய்ப் பிருந்திருக்கலாம். ஆனால் தவறான நடவடிக்கைகள் ஒன்றும் நடைபெறவில்லை என்ற தகவல்தான் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நிச்சயமாக அரசு ஏற்றுக் கொண்டு அதற்குரிய நட வடிக்கையை மேற்கொள்ளும்.



## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண் டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

## 6. அறிவிப்புகள்

### (அ) 1984-85 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கோர் அறிவிப்பு : 1984-85 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானிய கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிதல் குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது. —

In pursuance of Article 203 (3) of the Constitution of India, I, Srndarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving into the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Advance grants turing the year 1984-85.

## 7. முன்பண மானியக் கோரிக்கைகள், 1984-85.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1984-85 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23-3-1984 ஆம் தேதியிட்ப் பெற்ற அறிவிப்பில் இரண்டாவது பத்தியில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகையை, 1984-85 ஆம் ஆண்டிற்கான உடனடிச் செலவுகளுக்காக மொத்தமாக ரூபாய் ஐந்நூற்றுத் தொண்ணூற்றாறு கோடியே எழுபத்தெட்டு லட்சத்து எழுபத்தொன்பதாயிரத்திற்கு மேற்படாத தொகை அரசுக்கு முன்பணமாக வழங்கப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

### நிறைவேற்றப்பெற்ற 1984-85 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள்.

### ஏ. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| கோரிக்கை | 1 | —நிலவரித்துறை .. .. | 3,39,25 |
| கோரிக்கை | 2 | மாநில ஆயத்தீர்வைத் துறை | 94.80 |
| கோரிக்கை | 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் .. .. | 64.95 |
| கோரிக்கை | 4 | பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிர்வாகம் .. .... | 2,85,20 |
| கோரிக்கை | 5 | முத்திரைத் தாள்கள்-நிர்வாகம் | 24,70 |
| கோரிக்கை | 6 | பத்திரப் பதிவு .. .. | 1,32,85 |
| கோரிக்கை | 7 | மாநிலச் சட்டமன்றம் .. | 34,60 |
| கோரிக்கை | 8 | தேர்தல்கள் .. .. .. | 74,75 |
| கோரிக்கை | 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. .. | 6,37,62 |
| கோரிக்கை | 10 | பால் வழங்கு திட்டங்கள் .. | 32,03 |
| கோரிக்கை | 11 | மாவட்ட நிர்வாகம் .. .. | 7,14,88 |
| கோரிக்கை | 12 | தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. | 70,01 |





| | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|---|---|
| கோரிக்கை | 13 | நீதி நிர்வாகம் .. .. | 3,01,35 |
| கோரிக்கை | 14 | சிறைச் சாலைகள் .. .. | 1,80,64 |
| கோரிக்கை | 15 | காவல் துறை .. .. | 21,58,87 |
| கோரிக்கை | 16 | தீயணைப்புப் பணிகள் .. | 1,62,25 |
| கோரிக்கை | 17 | கல்வி .. .. .. | 1,00,58,51 |
| கோரிக்கை | 18 | மருத்துவம் .. .. .. | 24,82,77 |
| கோரிக்கை | 19 | பொதுச் சுகாதாரம் .. .. | 41,08,47 |
| கோரிக்கை | 20 | வேளாண்மை .. .. | 22,75,60 |
| கோரிக்கை | 21 | மீனளம் .. .. .. | 1,45,21 |
| கோரிக்கை | 22 | கால்நடை வளர்ப்பு .. .. | 5,99,42 |
| கோரிக்கை | 23 | கூட்டுறவு .. .. .. | 2,77,81 |
| கோரிக்கை | 24 | தொழில்கள் .. .. .. | 57,53 |
| கோரிக்கை | 25 | சின்கோனா .. .. .. | 76,98 |
| கோரிக்கை | 26 | கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. .. .. | 3,12,00 |
| கோரிக்கை | 27 | கதர்த் தொழில் .. .. | 57,25 |
| கோரிக்கை | 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும் | 52,23,91 |
| கோரிக்கை | 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. | 2,79,47 |
| கோரிக்கை | 30 | சமூக நலன் .. .. | 17,16,73 |
| கோரிக்கை | 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. | 12,00,80 |
| கோரிக்கை | 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் .. .. | 2,74,66 |
| கோரிக்கை | 33 | வீட்டு வசதி .. .. | 3,91,69 |
| கோரிக்கை | 34 | நகர்ப்பகுதி வளர்ச்சி .. | 6,80,44 |
| கோரிக்கை | 35 | நுகர்பொருள் வழங்கல் .. | 24,51,22 |
| கோரிக்கை | 36 | பாசனம் .. .. .. | 13,06,92 |
| கோரிக்கை | 37 | பொதுப் பணிகள் கட்டிடங்கள் | 93,46 |
| கோரிக்கை | 38 | பொதுப் பணிகள் - பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும் .. .. .. | 4,04,61 |
| கோரிக்கை | 39 | சாலைகளும், பாலங்களும் .. | 7,92,66 |
| கோரிக்கை | 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் | 1,08,33 |

[1984 மார்ச் 27

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| கோரிக்கை 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. | 3 |
| கோரிக்கை 42 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. .. | 11,29,56 |
| கோரிக்கை 43 | பல்வகை .. .. .. | 19,21,94 |
| கோரிக்கை 44 | எழுதுபொருள் அச்சுத்துறை .. | 3,79,08 |
| கோரிக்கை 45 | காட்டுவளத் துறை .. .. | 3,02,90 |
| கோரிக்கை 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 6,12,58 |
| கோரிக்கை 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. | 59,28 |
| கோரிக்கை 48 | ஊரகத் தொழில்கள் .. .. | 2,35,96 |
| | மொத்தம்—ஏ. வருவாய்க் கணக்கு .. | 4,63,26,55 |

பி—வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| கோரிக்கை 49 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. .. | 1,25,70 |
| கோரிக்கை 50 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு .. .. | 4,02,83 |
| கோரிக்கை 51 | பாசனம் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 14,40,74 |
| கோரிக்கை 52 | பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. | 12,21,19 |
| கோரிக்கை 53 | சாலைகள் - பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. | 6,93,43 |
| கோரிக்கை 54 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. | 33,92 |
| கோரிக்கை 55 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு .. .. .. | 4,34,38 |
| கோரிக்கை 56 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு .. .. | 32,34 |
| கோரிக்கை 57 | பல்வகை மூலதனச் செலவு .. | 3,32,73 |
| | மொத்தம்—பி. மூலதனக் கணக்கு .. | 47,17,26 |



1984 மார்ச் 27]

சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

(ரூபாய் ஆயிரத்தில்)

| | | |
|---|---|---|
| கோரிக்கை 58— | மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் .. | 86,34,98 |
| | பெரு மொத்தம் .. | 5,96,78,79 |

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்விற்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) 1983-84 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1983-84 ஆம் ஆண்டு கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளை பேரவையில் முன் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றிருக்கிறது.

Message :

" I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further grants for the year 1983-84 ".

பொது விவாதம் பிற்பகல் 1.00 மணிக்கு முடிவடைந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

8. இறுதித் துணை நிதி அறிக்கை, 1983-84, பொது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு. எல். இளையபெருமாள் மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் கொண்டு
வரப்பட்டிருக்கிற 1983—84 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை
மதிப்பீடுகள் சம்பந்தமாக நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துகளை சொல்ல
விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே
1,130·10 கோடிக்கு அதிகமாக தேவைப்படுகிறது என்று அவர்
களுடைய உரையில் சொல்லி இருக்கிறார்கள். இதில் வருவாய்
கணக்கில் ரூ. 220-24 கோடியும், மூலதன, கடன் கணக்கில்
ரூ. 909·86 கோடியும், வெள்ள துயர் துடைப்புப் பணிகளுக்காக
ரூ. 37·54 கோடியும், அதற்கு மேல் 7·64 கோடி ரூபாயும்,
பாலங்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 13·60 கோடியும்,
பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக முன்பு ஒதுக்கிய
தொகையை விட அதிகமாக 8 கோடி ரூபாயும், கல்விக்காக
ரூ. 6·19 கோடியும், தேவைப்படுகிறது என்று கோரி இருக்கிறார்
கள். இதில் நான் சொல்ல விரும்புவது கல்விக்காக அமைச்சர்
அவர்கள் கோரி இருக்கிற தொகையை விட இன்னும் அதிகமான
தொகையை அவர்கள் கோரி இருக்க வேண்டுமென்றே நான்
கருதுகிறேன். காரணம் நம்முடைய தமிழ் நாட்டின்
நிதி அறிக்கையிலே கொண்டு வந்திருப்பதில் கல்விக்காக
கூடுதலாக நாம் ஒதுக்கி இருக்கிறோம் என்று அமைச்சர்
அவர்கள் சொல்லி இருந்தாலும், இன்றைய நிலையில் பள்ளிக்
கூடங்களில் பள்ளிக்கட்டிடங்கள் நல்ல முறையில் இல்லை
மாணவர்கள் மரத்தடியில் உட்கார்ந்து படிக்கக் கூடிய நிலைமை
இருக்கிறது.





(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

(முற்பகல் 10-40).

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏழைக் குழந்தைகள்
கல்வி கற்க வேண்டும், அதற்கு வசதிகளைச் செய்ய
வேண்டும் என்ற வகையில் பள்ளிகளில் சத்துணவுத் திட்டம்
கொண்டு வந்து இருக்கிறார்கள். இது ஒரு நல்ல எண்ணத்
தோடு கொண்டு வரப்பட்ட திட்டம். ஆனால் இப்படிப்பட்ட
திட்டத்தில் பள்ளிகளில் படித்து, விட்டு கல்லூரி மட்டத்திற்கு
மாணவர்கள் வருகிறபோது அவர்களுக்கு ஹாஸ்டல் இல்லை,
அல்லது ஹாஸ்டலில் போதுமான வசதி இல்லை என்ற
காரணத்தால், பல்வேறு ஆதி திராவிட மக்கள், நூற்றுக்கணக்
கான பிற்படுத்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், நம்
முடைய அரசாங்கத்தின் வரிப்பணத்தின் மூலம் மக்களின் பணத்
தின் மூலம் பள்ளிகல்வி பெற்றவர்கள், கல்லூரிகளில் மேல் படிப்பு
படிக்க வாய்ப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஆதி திராவிட
மக்கள், பழங்குடி மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்லூரி
களில் படிக்க வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் ஆங்காங்கு அவர்
களுக்கு தங்கும் விடுதிகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். இந்த வசதிகள் இல்லாத காரணத்தால்
அவர்கள் தினமும் 5 ரூபாய் பஸ்சார்ஜ் செலவு செய்து கொண்டு
வீட்டிலிருந்து வந்து படிக்க வாய்ப்பு வசதி இல்லாததால் பலர்
நடுவிலேயே படிப்பை விட்டு விடுகிறார்கள். குறிப்பாக நான்
இடத்தை சொல்ல முடியும். தென்னாற்காடு மாவட்டத்தில்,
கடலூரில் உள்ள பெரியார் கலைக் கல்லூரியை எடுத்துக் கொண்
டால் அதற்கு ஹாஸ்டல் வசதி கிடையாது. அங்கே கிட்டத்தட்ட
300 மாணவர்கள் படிக்கிறார்கள். 9 ஆண்டுக்காலமாக அந்தக்
கல்லூரிக்கு விடுதி வேண்டும் என்று அந்த பிரின்ஸிபால் எழுதி
வருகிறார். டைரக்டர் எழுதி இருக்கிறார். மாணவர்கள்
3 முறை உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். அந்த நேரத்
தில் நம்முடைய அரசும் அதை நிச்சயமாக செய்து கொடுக்கிறோம்
என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கே கட்டிடம்
கட்ட வேண்டியதற்காக பணம் ஒதுக்கப்பட்டும், அந்த டிப்பார்ட்
மென்ட் அதைக் கட்டாமல் வைத்து இருந்த அவல நிலை இருந்
தது. உடனே பி. டபிள்யு.டி. அமைச்சர் (முன்னாலே அந்தப்
பொறுப்பிலே இருந்தவர்) அவரிடத்திலே சொல்லி, அவரும்
உடனடியாக அதற்காக நடவடிக்கை எடுக்கிறேன், ஏன் பணம்
ஒதுக்கப்பட்டும், கட்டப்படவில்லை என்பதை இன்ஜினீயரிடத்தில்
கேட்டு, உடனடியாக செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்து
வந்தார்கள். ஆனால் இன்னும் அந்த விடுதிக் கட்டிடம் கட்டப்
படவில்லை. அந்த மாணவர்கள் 3 முறை உண்ணாவிரதம்
இருந்தும், அதைக் கட்டித்தருவதாக அரசாங்கம் உறுதி அளித்து,
பணம் ஒதுக்கியிருந்தும் இன்னும் அது கட்டப்படாமல் இருக்கிறது.
இதன் காரணமாக குறிப்பாக ஆதித்திராவிட மாணவர்கள், பிற்

படுத்தப்பட்ட மாணவர்கள் , பழங்குடி மாணவர்கள் மிகவும்
கஷ்டப்படுகிறார்கள். ஆனால் இந்த ஆண்டிலே நம்முடைய
நிதி அமைச்சர் அவர்கள் ஒதுக்குகிற 6-19 கோடி ரூபாயில்,
குறிப்பாக அந்தக் கடலூர் பெரியார் கலைக் கல்லூரிக்கு ஒரு
விடுதிக் கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். ஏழை எளிய மக்கள் நல்ல முறையில், படித்து
பட்டம் பெற வேண்டும் என்ற முறையில் நல்ல எண்ணத்தோடு,
கல்வி கற்றால் நாடு முன்னேறும் என்ற அடிப்படையில் பிரச்சாரம்
செய்து, பாடுபட்ட பெரியார் அவர்கள் பெயரில் அந்தக் கல்லூரி
இருக்கிறது. அந்தக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் 20
மைல் 15 மைல் தூரத்தில் இருந்து கொண்டு இந்தக் கல்லூரிக்கு
வந்து படிக்க வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தால், அவர்கள்
ஒழுங்காக வந்து படிக்க முடியவில்லை. ஆகவே, இவற்றை
யெல்லாம் மனதிலே கொண்டு, அரசாங்கம் இதற்கு முக்கியத்
வம் கொடுத்து அந்த விடுதியைக் கட்டித் தர வேண்டும் என்று
மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்திலே பாசன வாயில்களை சீர்திருத்து
வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. நம்முடைய
வருவாய்த்துறைஅமைச்சர் அவர்களுக்குத்தெரியும். 15 ஆண்டுகள்,
25 ஆண்டுகள், 30 ஆண்டுகள் முன்பிருந்தே, கிராம மராமத்து
என்ற நிலைமை இருந்தது. தஞ்சை தென்னாற்காடு மாவட்டத்திலே
உள்ள கிராமத்தில் உள்ள ஏரி வாய்க்கால்களில் இந்த மராமத்து
செய்யப்படவில்லை. முன்பு இதற்கு முறை இருந்தது.. எந்
தெந்த ஆண்டு, எந்தெந்த வடிகால்களை, அல்லது வரத்து
வாய்க்கால்களை சில்ட் கிளியரன்ஸ் எடுக்க வேண்டும் என்ற
நிலைமை இருந்தது. அவர்கள் அதை கவனித்து நல்ல முறையில்
அதைச் செய்து வந்தார்கள் ஆனால் அந்த நிலைமையை மாற்றி
அரசாங்கமே அதைச் செய்வது என்று நல்ல மனதோடு கொண்டு
வந்தார்கள். அப்படி நல்ல எண்ணத்தோடு கொண்டு வருகிற
போது, இதுபோன்று வாய்க்கால்கள், வடிகால்களை சிமெண்ட்
குழாய் மூலம் அமைக்கலாம் என்ற திட்டத்தை அரசு கொண்டு
வந்தது. ஆனால் அது நல்ல முறையில் முழுமையாகச்
செய்யப்படவில்லை. பழைய முறைப்படி குடிமராமத்தும்
செய்யப்படவில்லை இதன் காரணமாக பல்வேறு இடங்களில்
அந்த வாய்க்கால்கள் மேடிட்டுப் போய் கிடக்கின்றன. ஏரி
களில் எல்லாம் கூட மண்வெட்டி எடுக்கப்படாததால் அவை
களும் மண்மேடிட்டு இருக்கின்றன என்பதை நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டத்திலே நிறைய பணம் ஒதுக்கு
கிறோம். மக்கள் குழு இல்லாத காரணத்தால் சட்டமன்ற உறுப்
பினர், நாடாளுமன்ற உறுப்பினர்களைக்கூட ஆலோசனைக் கேட்
பதில்லை; ஆனால் என்ன சொல்கிறார்கள்? குழு இருக்கிறது





என்று சொல்கிறார்கள். அங்கே போனாலும் குழு வரவில்லை.
பார்த்தாலும் விவரம் தெரிவதில்லை, வந்தார்கள் என்று ஏதோ
சொல்கிறார்கள். அமைச்சர்கள் இங்கே பதில் சொல்லும்போது
கூட ஏதோ சொல்கிறார்கள், 'எங்களுக்குக் கொடுத்திருக்கிற
தகவலின் படி, எங்களுக்குக் கொடுத்திருக்கிற குறிப்புப்படி'
என்றுதான் சொல்கிறார்கள். ஏனென்றால் உங்களுக்கும் வேறு
வழியில்லை. அதிகாரிகள் கொடுத்ததைத்தான் சொல்ல
வேண்டியிருக்கிறது. யார் வந்தாலும் இந்த நிலைதான், இதை
நான் குறையாகச் சொல்லவில்லை.

ஆனால் நாங்கள் சொல்லுகின்ற குறிப்பிட்ட குறைகளை
அரசாங்க காரியதரிசி மூலம் அல்லது கலெக்டர் மூலம் அல்லது
எந்த பிளாக் பற்றிச் சொல்லுகிறோமோ அந்த பிளாக் அதிகாரி
மூலம் விசாரணை செய்து, உறுப்பினர்கள் சொல்வதில் தவறு
இருந்தால் இந்த அவையிலே நீங்கள் அதைச் சொல்ல வேண்டும்
இந்த உறுப்பினர் இன்ன தகவலைக் கொடுத்தார். நாங்கள் இப்
படி விசாரித்தோம், தவறு இல்லை ; தவறான தகவல், மீண்டும்
இப்படிப்பட்ட தவறான தகவலைச் சொல்லக் கூடாது' என்று
இந்த அவையிலே சொல்ல வேண்டும். அதைப் போன்று கொடுக்
கின்ற தகவல் உண்மை என்றால் அதற்கு இன்ன நடவடிக்கை
எடுத்திருக்கிறோம் என்று இங்கே சொல்ல வேண்டும். அப்படி
யிருந்தால்தான் உறுப்பினர்களும் இங்கே தவறான தகவலைக்
கொடுக்க மாட்டார்கள், அதிகாரிகளும் அஞ்சுவார்கள். இப்படி
நீங்கள் அவையிலே அறிவித்தால் அரசியல் காரணம் அல்லது
பத்திரிகை விளம்பரத்திற்காக உங்களைக் குறைகூறாத நிலைமை
உருவாகும். அதிகாரிகள் அச்சத்தோடு செயல்படுவார்கள்,
சரியான தகவலைக் கொடுப்பார்கள்.

இப்போது அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் ஏதோ
நாங்கள் ஆறு மணி நேரம் இங்கே உட்கார்ந்து எதையோ சொல்
கிறோம், ஏதோ 50 ரூபாய்க்காகச் சொல்கிறோம், அரசாங்
கத்திற்கும் மக்களுக்கும் இடையில் ஏதோ சொல்ல வேண்டும்
என்பதற்காகச் சொல்கிறோம் என்று நினைக்கிறார்கள்.
உறுப்பினர்கள் என்ன சொன்னாலும், அதிமே உண்மை இருக்
கிறதா இல்லையா என்று விசாரித்துப் பார்ப்பது கிடையாது.
பிளாக் அதிகாரிகள் அச்சமற்ற நிலையில் அலட்சியமாக இருக்
கிறார்கள். ஆனால் நீங்கள் கோடிக் கணக்கில் பணத்தைப்
போட்டு, காரியங்களைச் செய்கிறீர்கள். அதைக் கண்காணிக்க
மக்கள் குழு இல்லை ; பிளாக்கிலே சேர்மேன் இல்லை ;
பஞ்சாயத்து இல்லை ; பஞ்சாயத்து போர்டு இல்லை ; தேர்தல்
இல்லை ; தலைவரும் இல்லை; பராளுமன்ற சட்டமன்ற உறுப்
பினர்கள் சொல்வதை யாரும் கேட்பதும் இல்லை. ஒருசில
நல்ல அதிகாரிகளைத் தவிர இன்றைக்கு நூற்றுக்கு 95 பேர்
ஏதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. அவர்கள் எல்லாம் ஏதோ

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 27

தேவலோகத்தில் இருப்பதாக எண்ணி கொண்டிருக்கிறார்கள். இது அமைச்சருக்கும் தெரியும். தெரிந்தும் நீங்கள் என்ன செய் தீர்கள், என்ன செய்கிறீர்கள், என்ன செய்ய இருக்கிறீர்கள்? நீங்களும் இப்படி உதாசீனமாக இருந்தால் நீங்கள் உங்கள் கடமையைச் செய்யத் தவறிவீட்டீர்களோ என்ற சந்தேகம் ஏற்படும். அதற்கு இடம் கொடுக்காமல் நீங்கள் காரியமாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் குறிப்பாக ஒன்றிரண்டை இப்போது குறிப்பிட்டுச் சொல் கிறேன். தன்னிறைவுத் திட்டத்திற்கு நிறைய பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள். எல்லா சுடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலை போட்டுவிட்டோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்னும் இணைப்புச் சாலை இல்லாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின் றன. தென்னாற்காடு மாவட்டத்திலே கூட குறைந்தது 100 கிராமங்கள் இருக்கும். அப்படி இருந்தாலும் நான் இப்போது குறிப்பாக மூன்றை மட்டும் சொல்கிறேன். சிதம்பரம் தாலுகா வில், கீரப்பன்பள்ளம் பஞ்சாயத்தில், பூரத்தன்குடி ஊரில் இன் னும் செய்யப்படவில்லை. 1957 இல் பிளாக் வந்தது. அன்றி லிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1984 வரையில் செய் யப்படவில்லை. அரிசன நல அதிகாரியும் செய்யவில்லை; பிளாக் அதிகாரியும் செய்யவில்லை; யாரும் செய்யவில்லை.

அதைப்போன்று வீராணம் ஏரி. வீராணம் ஏரி வெள்ளைக் காரன் காலத்திலிருந்தே இருக்கிறது. நான் இப்படிச் சொன்ன வுடனே காங்கிரஸ் ஆட்சியில் என்ன செய்தீர்கள்? தி.மு.க. ஆட்சியில் என்ன செய்தார்கள்? என்று நீங்கள் சொல்வதில் பய னில்லை. அவர்கள் எல்லாம் சரியாகச் செய்யவில்லை என்று மக்கள் கோபப்பட்டு, அதனால்தானே உங்களை இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள். நீங்களும் பழைய கதையையே சொல்லிக் கொண்டிருந்தால் என்ன பயன்? இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் நிர்வாகத்தில் சிறந்து வந்திருக்கிறது, அந்த சிறந்த நிர் வாகம் இன்றைக்கு சீர்கெட்டிருக்கிறது என்று சொன்னால் உடனே மத்தியப் பிரதேசத்தைப் பாருங்கள், யு.பி. யைப் பாருங் கள் என்று வாதத்திற்காக எதையோ சொல்கிறீர்கள். இது எதைப்போல இருக்கிறது என்றால் கிராமத்திலே மாசி மகத்தில் காமன் பண்டிகை கொண்டாடுவார்கள். அதைப் போல இருக் கிறது.

காமன் பண்டிகை அன்றைக்கு கிராமத்திலே எரிந்த கட்சி, எரியாத கட்சி என்று சண்டை வரும். இரவெல்லாம் அந்தக் கிராம மக்களைத் தூங்க விடாமல் செய்து விட்டு, காலையிலே காசை வாங்கிக் கொண்டு போய் விடுவார்கள். அந்த மாதிரி நீங்களும் காரியம் செய்து கொண்டிருந்தால் மக்கள் என்ன நினைப்பார்கள்?



1984 மார்ச் 27[ (திரு. எல். இளையபெருமாள்)

இந்த வீராணம் ஏரி 70 ஆண்டுகளுக்கு முன்னாலே வெட்டப் பட்டது. இப்போது மண் மேடிட்டிருக்கிறது. சில்ட் இதுவரை எடுக்கவில்லை. அதனால் கொள்ளளவு குறைந்து விட்டது. அதை சீர்செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

அதைப்போன்று வெல்லிங்டன் டாங்க் ஒன்று திட்டக்குடி பகுதியில் இருக்கிறது. அதுவும் தூர்ந்துபோய் இருக்கிறது. இந்த மாதிரி தஞ்சாவூர், தென்னாற்காடு, திருச்சி மாவட்டங்களில் நிறைய இருக்கிறது. அவை பற்றி அரசுக்கு பலமுறை எழுதி யாகிவிட்டது. கடந்த 30 ஆண்டு, 40 ஆண்டு காலமாக மராமத்து செய்யப்படாமல் இருப்பதால் நீரின் கொள்ளளவு பெருமளவுக்குக் குறைந்துவிட்டது.

அதைப்போன்று உடையார்பாளையம் தாலுகாவில் பொன் னேரி என்று ஒரு ஏரி இருக்கிறது. கிட்டத்தட்ட 90 ஏக்கருக்கு மேல் விஸ்தீரணம் உள்ளது. அதைக் கொஞ்சம் ஆழப் படுத்தி னால் வெள்ளம் வருகிற காலத்திலே தண்ணீரைத் தேக்கிவைத்து, பருப்பூர் பக்கத்திலே ஒரு ஹைலெவல் கனால் இருக்கிறது.

(முற்பகல் 10-50)

இந்தக் கனாலின் வழியாகத் தண்ணீரைத் திருப்பலாம். ஆகவே பாசன வசதிக்காக ரூ. 8 கோடியல்ல. ரூ. 80 கோடி கேட்டாலும் கூட, அமைச்சர் அவர்கள் தேவை என்று கருதி னால், அதற்கு வேண்டிய நிதி வாய்ப்பும் இருந்தால், அதைச் செய்வதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் ரூ. 8 கோடி, ரூ. 10 கோடி என்று கேட்டாலும், பழைய நிலையிலேயே, பழைய கதையையே பேசிக் கொண்டிருப்பது சரியல்ல. ஏதோ குற்றம் சாட்டுகின்ற எண்ணத்தோடு எங்களைப் பார்க்கக்கூடாது. இதில் உண்மை இருக்கிறதா, இல்லையா, நாங்கள் சொல்வதைச் செய்ய முடியுமா, முடியாதா என்பதையெல்லாம் பார்க்க வேண் டும். அல்லது முடியாது என்றால், இது முடியாது. இது அரசாங் கத்திற்கு பணத்தை நட்டப்படுத்தும். ஆகவே இது தேவை யில்லை என்று சொன்னால், நாங்கள் மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டிய நிலை வராது. ஆகவே பாசன வாயில்கள் கிராமக் குடி மராமத்திலும் இல்லை. தண்ணிறைவுத் திட்டத்திலும் ஒழுங்காகச் செய்யப்படவில்லை. ஆகவே இதை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கூட்டுறவு. கூட்டுறவிலே அதிகமாகக் கேட்டிருக் கிறீர்கள். அது நாட்டுக்கு நல்லது தான். ஆனால் கூட்டுறவு முறையை வைத்துக் கொண்டு, தனிப்பட்ட காண்ட்ராக்ட் சிஸ் டத்தை ஊக்குவிக்கிறோம். Co-operative Labour Contract Society என்றிருக்கிறது. ஒவ்வொரு பிளாக்கிலும் ஒரு சொசைட்டி வைத்து, மக்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று முதலமைச்சர்

அவர்கள் சொன்னார்கள். முன்னவர் அவர்களும் சொன்னார்கள். அமைச்சர் பெருமக்களும் செல்லும் இடங்களிலெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் தனிப்பட்ட காண்ட்ராக்ட்காரர்களுக்குக் கொடுக்கிறார்களே தவிர, இந்தக் கூட்டுறவு சொஸைட்டிக்குக் கொடுக்கவில்லை. எனவே இதில் அரசாங்கம் ஒரு தீர்க்கமான முடிவிற்கு வர வேண்டும். இப்படிப்பட்ட முறையே தேவையில்லை என்று வேண்டுமானாலும் சொல்லிவிடுங்கள். நீங்கள் சொல்லலாம். இளையபெருமாள் இங்குசொல்வதால் பயன் இல்லை. இதைநீங்கள் மத்திய அரசிற்குச் சொல்லிவிடுங்கள் என்று நீங்கள் சொல்வீர்கள். கொள்கை ரீதியாக அதிகாரிகள் நடக்கவில்லை. அந்த அதிகாரிகளைக் கண்டிக்க வேண்டும் அல்லது குறைகளைப் புரிந்து கொண்டு தீர்க்க வேண்டும். இல்லையென்றால், தனியார் துறைக்கு நாங்கள் கொடுக்கப் போகிறோம் என்று தைரியமாகச் சொல்லுங்கள். அதில் தவறில்லை. டெபுடி ரிஜிஸ்ட்ரார் ரெக்கமண்டு செய்து, செகரட்டரி ரெக்கமண்ட் செய்து, பி. டபிள்யூ.டி. இன்ஜினியர் ரெக்கமண்டு செய்து, சீஃப் இன்ஜினியர் ரெக்கமண்டு செய்து, இப்படி எவ்வளவோ பேர்கள் ரெக்கமண்டு பண்ணியும் கூட, நாங்கள் கூட்டுறவு சொசைட்டிக்கு கொடுக்க மாட்டோம். நாங்கள் தனிப்பட்ட மனிதனுக்குத்தான் கொடுப்போம் என்று சொன்னால், அந்த கோவாப்பரேடிவ் டிபார்ட்மெண்டு யாருடைய கண்ட்ரோலில் இருக்கிறது? அங்கே என்ன நடக்கிறது? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்—கொள்ளிடத்திலிருந்து, வல்லம் படுகைக்கும், வல்லம் படுகையிலிருந்து குமராட்சிக்கும் 11 வருஷமாக கூட்டுறவு டிபார்ட்மெண்டு மூலம் போட்டு, இன்றைய தினம் 18 மாதங்களாகியும் பணம் கொடுக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களிடம் சொல்லி அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு வழி செய்தேன். 11 வருஷமாக இப்படித் தொல்லைப் படுத்துகிறார்கள். 3 வருஷமாகத் தொல்லைப் படுத்துகிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? கோவாப்பரேட்டிவ் சொஸைட்டியிலே வைத்திருக்கிற காண்ட்ராக்ட்காரர்கள் ஏழை எளிய மக்கள். அவர்களால் அதிக அளவில் தனிப்பட்ட காண்ட்ராக்ட்காரர்கள் செய்வது போல் செய்ய முடியவில்லை. இந்த இடத்தில் அவர்களுடைய வேலையை முடக்கிப் போட்டுவிட்டால் அவர்கள் மற்ற இடங்களில் போட்டி போட மாட்டார்கள். அதனால் தங்கள் இஷ்டப்படி நடத்தலாம் என்று நினைக்கிறார்கள். கமிஷனர் தான் முக்கியமானவர். அவருக்குக் கீழே இன்ஜினியர் தான். அவருக்குக் கீழே கிராம சேவக். அந்த கிராம சேவக் தான் கடவுள். அந்தக் கடவுளின் சொல்படி அங்கே நடக்கிறது.

எல்லேரி என்ற கிராமத்தில் ஒரு வேலையைச் செய்வதற்கு அந்த ஏழை மக்களிடம் கொடுத்து. அவர்கள் மூலமாகச் செய்வதற்கு ரூ. 1 இலட்சம் சாங்ஷன் செய்தது. அப்படி சாங்ஷன் செய்து, 6 மாத காலமாகிறது. 6 மாதங்களாக அந்தப் பணிகள்



செய்யப்படவில்லை. கலெக்டர், ஆர்.டி.ஓ., கமிஷனர், டெபுடி கோஆப்பரேட்டிவ் ரிஜிஸ்ட்ரார் ஆகிய எல்லோரிடமும் சொன்னேன். முதலமைச்சரிடம் சொல்லி, உடனடியாக இதைச் செய்ய வேண்டுமென்று நான் எழுதிய கடிதத்திலேயே எழுதியிருக்கிறார்கள். நேற்று சென்று அதைப் பார்த்தேன். இன்று வரையிலும் அது நடக்கவில்லை. இதை மக்கள் மூலமாகச் செய்தார்கள். 200 ஆண்களும், பெண்களும் தாங்களாகவே மண்வெட்டிப் போடுகிறோம். எங்களுக்கு வேண்டிய அரிசியும், பணத்தையும் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இல்லை, இல்லை காண்ட்ராக்ட்காரர்கள் இடம்தான் கொடுப்போம் என்ற நிலைமை இருக்கிறது. காண்ட்ராக்ட்காரர்கள் என்று வந்தால், 3 அடிக்கு இரண்டு அடி தான் வெட்டுவார். ஆனால் 3 அடி என்று சொல்லி, இன்ஜினியரிடம் கையெழுத்து வாங்கிவிடுவார். கிராம சேவக்கிடமும் கையெழுத்து வாங்கி விடுவார். அது ரெக்கார்டுகளிலே சரியாகத்தான் இருக்கும். ஒரு கேஸ் கூட அதன் மீது எடுக்க முடியாது.

எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பிளாக்காவது எடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வதை விசாரித்து அது உண்மைதானா என்று பாருங்கள். அதில் நாங்கள் சொன்னது தவறு. நாங்கள் இந்த அரசாங்கத்தை குறை கூறுவதற்காகத்தான் சொல்கிறோம் என்று இருந்தால் அதையும் இந்த சட்டமன்றத்திலே பகிரங்கப் படுத்துவேன். அப்படி இல்லாமல்வாக்குவாதம்பண்ணுவதிலேபயனில்லை அரசாங்கத்திற்குக்கெட்ட பெயர், பிரதிநிதிகளுக்கும் கெட்ட பெயர். அதிகாரிகள் காலசந்தர்ப்பத்தை உத்தேசித்து இன்னும், குறைந்தபட்சம் 2 ஆண்டுக் காலம்தான், அதற்குள் செய்வதெல்லாம் செய்வோம் என்று திடமான முடிவிற்கு வந்துவிட்டார்கள், ஸ்பெஷல் அதிகாரிகள்.

கடைசியாக சென்னையில் என்னுடைய தொகுதியிலே அரசாங்கத்திற்குப் பணம் இருக்கிறது. அரசாங்கம் கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்று காலையிலேகூட அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்கம் ஆலயங்களின் இடங்களிலே குடியிருப்பவர்களுக்கு வீடு வாங்கிக் கொடுக்கும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே சேத்துப்பட்டு என்ற இடத்தில் வீடுகள் இடிந்திருக்கின்றன. தொழில் அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள்; வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்த்தார்கள்; எல்லோரும் பார்த்தார்கள். அந்த இடத்தைக் கொடுப்போம் என்று சொன்னார்கள். நம்முடைய வருவாய்த்துறைஅமைச்சர் அவர்கள் கருணையோடு சொன்னார்கள்30ஆண்டுக்கு மேலேமத்தியஅரசாங்கத்திற்குமாநில அரசாங்கம் இடம் தூக்கிக் கொடுத்தது, அதை மத்திய அரசாங்கம் பயன்படுத்தவில்லை. எனவே, நாமே எடுத்துக்கொண்டு, நம்

[திரு. எல். இளையபெருமாள்] [1984 மார்ச் 27

மக்களுக்கு உதவி செய்யலாம் என்ற உறுதியைக் கொடுத்தார்கள். ஆனால், இரண்டு ஆண்டுக் காலம் ஆகிவிட்டது. ஒன்றும் நடக்கவில்லை. அதுமட்டுமல்ல, கடன் கொடுத்து, வீடு கட்டிக் கொடுக்கும் என்று சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்தார்கள். ஆனால் இன்று வரையிலும் 1 ரூபாய் கூட கொடுக்கப்படவில்லை.

அதைப்போலவே சென்னை நகரத்திலே எங்கே பார்த்தாலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் நல்லமுறையிலே செய்யவேண்டும் என்று நாம் எண்ணினோம். அதற்கு பணம் ஒதுக்கினார்கள். சுகாதாரம் வேண்டும் என்று எல்லோரும் சொன்னார்கள். ஆனால் நடப்பது என்ன ? முன்பு கார்ப்பரேஷனில் அதிகாரிகள் பார்த்ததை இப்போது, மெட்ரோ வாட்டருக்கு என்று ஒரு பக்கம், அடுத்து டிரெயினேஜ் சானல் பார்ப்பவர்கள் ஒரு பக்கம், அது இல்லாமல் ஸ்டார்ம் வாட்டர் பார்ப்பவர்கள் ஒரு பக்கம் என்று பிரிந்து, இப்போது ஒருவருக்கும் ஆளும் தெரியவில்லை, இடமும் தெரியவில்லை. நகரம் மிக மோசமாக இருக்கிறது. இதைக் கேட்டால் சொல்வார்கள், உலக வங்கித் திட்டம் வருகிறது என்று உலக வங்கித் திட்டம், கடன் வாங்குவதிலே மத்திய அரசுக்கு சம்பந்தம் இருக்கிறது, இளையபெருமாள் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லவேண்டும் என்று அங்கே தள்ளுவார்கள். நான் சொல்கிறேன், மத்திய அரசாக இருந்தாலும் சரி, அது கடன் வாங்குகிற முறையாக இருந்தாலும் சரி—அந்த முறையை எல்லாம் வைத்துக்கொள்ளுங்கள்—நடைமுறையில் இந்த மூன்றும் ஒன்று சேர்ந்து கவனிப்பதற்கு, கோ-ஆர்டிநேசன், கோ-ஆப்பரேஷன் என்ற ஒரு நிலையை அதிகாரிகள் மத்தியில் வரவில்லை. ஆகவே, எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டும். இப்போது கார்ப்பரேஷனில் மேயர் இல்லை. கவுன்சிலும் இல்லை. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால், அரசாங்கம் பணத்தைக் கொடுத்தும், அந்தப் பணம் கடமையற்று, இருக்கிறது. இப்போது நகரம், நரசமாகிக்கொண்டு வருகிறது எனவே, இந்த நிலைமையை மாற்றுவதற்கு நம்முடைய அரசு. ஒன்று செய்யலாம். ஒரு அட்வைசரி கவுன்சில் என்று வைத்து, இந்த 3 டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்தவர்களும் மாதத்திற்கு ஒரு நாள் கூடி, மக்கள் பிரதிநிதிகள், சர்வகட்சியிலே உள்ளவர்களை அமைத்து, எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக இந்த நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு, இறந்து போகிறவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் சரியாக கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு செருப்பு கொடுக்கப்படவில்லை. சோப்புக் கொடுக்கப்படவில்லை. இதெல்லாம் சின்ன விஷயங்கள். நாம் பணம் கொடுக்கிறோம். பணத்திற்குப் பஞ்சம் இல்லை. கடன் வாங்கிக் கொடுக்கிறார்கள். நல்ல எண்ணத்



1984 மார்ச் 27] [திரு. எல் இளையபெருமாள்]

தோடு கொடுக்கிறார்கள். ஆனால், நடைமுறையில் சரியானபடி நடக்கவில்லை. ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். பேராசிரியர் அன்பழகன் தொகுதியில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. அதை எடுத்துவிட்டார்கள். நான் மிகவும் கஷ்டப்பட்டுச் சொல்லி, பள்ளிக்கூடம் கட்டினார்கள். 46 ஆயிரம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டார்கள். அந்தக் கட்டிடம் 60 அடி நீளம், 16 அடி அகலம். சவுக்குக் குச்சி, கீத்து, மூங்கிலைப் பிளந்து ஜன்னல், கதவு எல்லாம் போட்டார்கள், அங்கே பிள்ளைகள் உட்காருவதற்கு சேப்டி கிடையாது. ஆசிரியர்கள் எல்லோரும் பெண்கள். அவர்களுக்குத் தேவையான கழிப்பிடம் கிடையாது அவர்கள் ஒவ்வொரு வீடாகச் செல்லவேண்டியதிருக்கிறது. அங்கே வைத்திருக்கின்ற மேசைகள், நாற்காலிகள் எல்லாம் களவாடப்படுகின்றன. 46 ஆயிரம் ரூபாய் பணம் பாழாக்கப்படுகிறது. எனவே, அரசாங்கம், அதைக் கட்டிய என்ஜினீயர்கள் யார், கான்ட்ராக்டர் யார் என்று பார்த்து, அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். 46 ஆயிரம் ரூபாய் என்பது என்னுடைய தகவல். இதைப் பற்றி இன்ஜினீயரிடம் சொல்லிவிட்டேன். கமிஷனரிடம் சொல்லிவிட்டேன். ஸ்பெஷல் ஆபீசரிடம்சொல்லிவிட்டேன். ஒன்றும் நடக்கவில்லை. என்னுடைய, தகவல் 46 ஆயிரம் ரூபாய். உண்மைத் தகவல் எனக்குத் தெரியாது. எனவே, இதைப் பற்றி விசாரித்து, ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த கோரிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன பணம் கேட்டாலும் பரவாயில்லை. ஆனால், காரியங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

(முற்பகல் 11–00)

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டிற்காக நம்முடைய டாக்டர் நர்வலர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இறுதி துணை மதிப்பீடுகளை வரவேற்று என்னுடைய கருத்துக்ளைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த2 ஆண்டு காலமாக தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் முதலில் வறட்சியும், அதைத் தொடர்ந்து அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட இடைவிடாத மழையும், அதனால் ஏற்பட்ட பெருத்த சேதங்களும், உடனேயே காலம் தவறி பிப்ரவரி மார்ச் வரையிலும்கூட கடுமையான மழை பெய்ததால், நாட்டிலே எவ்வளவோ தொல்லைகளுக்கும், அல்லல்களுக்கும் ஆளாகி மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில், இந்த அளவில் மக்களுடைய நிலையை உணர்ந்து அவர்களுடைய நிலையை உயர்த்த, இந்தத்துணை மதிப்பீடுகளை கொண்டு வந்திருப்பதை நான் பாராட்டுவதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன்

நீலகிரி மாவட்டத்தில், இப்போது பெய்த மழையினால், அதிக அளவில் மக்கள் தொல்லைப் படவில்லை என்றாலும்

குறிப்பாக தேயிலைத் தோட்டக் காரர்கள் மிகவும் அனுபவசாலிகளாக இருந்து, பல இலாபங்களை இயற்றிக்கொண்டிருந்தாலும், நீலகிரிப் பகுதி மலைப் பகுதி. அங்குள்ள சாலைகள் ஏராளமாக பழுதடைந்துள்ளன. அந்த சாலைகளுக்கு ஒதுக்கிய தொகை போதாது, ஆகவே, நீலகிரி மாவட்டத்திற்கு என்று அதிக அளவில் நிதியை ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

அது மாத்திரம் அல்ல, நகரசபைகளுக்கு, சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட 5 கோடி ரூபாயில் 4.44 கோடி ரூபாயை மானியமாகவும், மீதம் 0.56 கோடியை மாத்திரம் கடனாகவும் அளித்துள்ளதற்காக இந்த சர்க்காரை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உதகை நகராட்சியும், குன்னூர் நகராட்சியுமாக அங்கே இரண்டு நகராட்சிகள் உள்ளன. ஏற்கெனவே சாலைகளை செப்பனிடக்கூடிய அளவிற்கு அந்த நகராட்சிகளுக்கு போதுமான பணம் இல்லை என்ற காரணத்தால், அந்த சாலைகள் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்திருக்கின்றன. ஆகவே, அவைகளுக்கு அதிக நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்லாமல், கிராமப்புற இணைப்புச் சாலைகளுக்காக, மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சம அளவில், 38க்கும் மேற்பட்ட கோடியும், மண் வள, நீர் வள பாதுகாப்பிற்காக 2.9 கோடியும் ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். கிராமப்புற சாலைகள் என்ற பொருளில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளையும் விட நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் உள்ள சாலைகள் மிகக் குறைந்த அளவிற்கே மழை பெய்தாலும் கூட, மிக விரைவிலேயே சேதம் அடையக்கூடிய நிலையில் உள்ளன. அந்தச் சேதங்களை கட்டுப்படுத்த நீலகிரி மாவட்டத்தில் உள்ள சாலைகளுக்கு, கிராமப்புற சாலைகள் என்ற பொருளின்கீழ் அதிக தொகையை கொடுப்பீர்களேயானால், அந்தச் சாலைகளை செப்பனிட முடியும்.

ஒரு காலத்தில் நீலகிரியில் உள்ள கிராமங்களில் கடும் விரைவுத் திட்டம் என்ற திட்டத்தின்கீழ் பல ஆயிரக்கணக்கான சாலைகள் மலைப் பகுதிகளில் போடப்பட்டும், அவ்வளவு சாலைகளும் இன்று எங்கேயிருக்கின்றன என்பது தெரியாத நிலையில் அடையாளம் தெரியாமல் குன்றிப் போய் இருக்கின்றன. ஆகவே அந்தகடும் விரைவு திட்டத்தின் கீழ் போடப்பட்ட சாலைகள்





முழுவதையும், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு கணக்கிலே கொண்டு, அவைகளைச் செப்பனிடவும் வழி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரம் அல்ல, ஊட்டி ஏரியை அழகுபடுத்த வேண்டும் என்பதற்காக, இந்த இறுதி துணை மதிப்பீட்டில் 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதையும், கூடலூர், எருமாடு பகுதியிலுள்ள, ஃபிராண்டியர் தேயிலைத் தொழிற்சாலைக்கு கிட்டத் தட்ட 11 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயை அரசு பங்குத் தொகையாக ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் ஃபிராண்டியர் தொழிற்சாலைக்கு 20 இலட்சம் ரூபாயை கடனாக கொடுத்து இருப்பதையும் நான் வரவேற்கிறேன். ஆனால், 20 இலட்சம் ரூபாய் கடனைத் தாங்கக்கூடிய அளவில், அந்தப் புதிய தொழிற்சாலை, ஈடுகட்டமுடியாத சூழ்நிலையில் இருப்பதன் காரணமாக, அந்த 20 இலட்சம் ரூபாயையும் அரசு பங்குத் தொகையாகவே ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூடலூர் தொகுதியில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் பணியர்கள் என்று சொல்லக்கூடிய மிகவும் மோசமாக, சமுதாயத்தில் அருவருக்கக்கூடிய அளவிற்கு பொருளாதாரத்தில் பின்தங்கிய இன மக்கள் வசிக்கிறார்கள். கிட்டத்தட்ட கொத்தடிமைகளாக இருக்கக்கூடிய அவர்களில் கிட்டத்தட்ட 500க்கும் குறைவான பணியர்களுக்கு, கப்பாலா என்ற இடத்தில் ஒரு தோட்டத்தில், தேவையான வீடுகளை அரசு கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் மீதம் உள்ள 4,500 பேர்களும் வாழ வழியின்றி சாலைகளிலும், காடுகளிலும் வசிக்கிறார்கள். அன்றாடம் வேலை செய்வதற்குக்கூட உடம்பில் தெம்பின்றி மிகவும் மோசமான நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பணியர்களுடைய வாழ்க்கையை நாம் வளமாக்க வேண்டுமானால், அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்களோ, அந்தந்தப் பகுதிகளிலேயே வீடுகளைக் கட்டிக்கொடுப்பதோடு, அங்கே சிறு தொழில்களையும் செய்ய வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர வேண்டும். இல்லையென்றால் அந்தப் பகுதிகளிலே உள்ள அரசு நிலங்களிலே தேயிலை பயிரிடக்கூடிய வாய்ப்புக்களை அவர்களுக்கு கொடுத்து அவர்கள் வேலைசெய்யக்கூடியவாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும், அங்கே போத்தர்களும் இருளர்களும்குறும்பர்களும் இருக்கிறார்கள். போத்தர்களைவிட மிகவும் பின்னணியிலே இருளர்களும் குறும்பர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று ஏதாவது திட்டத்தைத் தீட்டி அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லி அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவது வரவேற்புக்குரியது. அதைப்

[திரு கே உச்சி] [1984 மார்ச் 27

போலவே நேற்றையதினம் இங்கே பெரிய வட்டங்களை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதையெல்லாம் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். குன்னூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து குன்னூர் என்ற வட்டத்தையும் கோத்தகிரி என்ற புதிய வட்டத்தையும் ஏற்படுத்தி புதிய கட்டடத்தைக் கட்டி அது முடிவுற்று திறக்கும் தருவாயில் இருக்கிறது. அதற்காக நான் இந்த அரசை நீலகிரி மாவட்ட மக்களின் சார்பாக மனமாரப் பாராட்டுகிறேன். அதைக்காட்டிலும் மக்கள் தொகயிலும் பரப்பளவிலும் கூட குந்தா பெரியதாக இருகிறது. இரண்டு ஒன்றியங்களாகவும் 2 வட்டங்களாகவும் அதை பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே கூடலூர், பந்தலூர் ஆகிய வட்டங்களாக இரண்டு வட்டங்களாகவும் இரண்டு ஒன்றியங்களாகவும் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குன்னூர், கோத்தகிரி ஆகிய வட்டங்களைவிட கூடலூர், பந்தாலூர் வட்டங்களின் மக்கள் தொகை ஒன்றரை மடங்கு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்திலே சீஸன் காலங்களில் அங்கே விலைவாசி அதிகமாகிவிடுகிறது. காரணம் தமிழகத்திலிருந்து பல்வேறு பகுதிகளிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் இந்தியாவினுடைய பல பகுதிகளிலிருந்தும் உதகைக்கு மக்கள் வருகிறார்கள். அந்த நேரத்திலே விலைவாசி உயருகிறபோது அங்குள்ள மக்கள் அதிகமான கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். அவர்கள் பொருட்களுக்கு மிக அதிக விலை கொடுத்து வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அங்கே அந்த நேரத்திலே அரசு அலுவலர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் —அவர்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.—நீலகிரி மாவட்டத்திலே சீசன் காலங்களிலே சீசன் அலவன்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆயிரம் அடிகளுக்கு மேலே உள்ள பகுதிகளிலே உள்ளவர்களுக்கு விண்டர் அலவன்ஸ், குளிர்காலப்படி என்று முதலிலே கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இப்போது அது நிறுத்தப்பட்டிருக்கிறது. சில பகுதிகளிலே மட்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்களுக்கு மாத்திரம் கொடுக்கப்படவில்லை. அதையும் ஆசிரியர்களுக்கும் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூடலூர் பகுதியிலே உள்ள ஓட்டல் தொழிலாளர்கள் மிகவும் மோசமான நிலைமையிலே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பின்தங்கிய மக்களும் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று கோருகிறேன் கூடுமான வரையில் அரிசன நலத் துறையானாலும் சரி. பிற்பட்டோர் நலத்



1984 மார்ச் 27] [திரு. கே. உச்சி]

துறையானாலும் சரி அந்தப் பகுதியிலே படிக்கக் கூடிய மாணவர்களுக்கு அதிகமான விடுதிகளைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர் பகுதியிலே ஆதி திராவிடர் நலத்துறையில் கட்டப்படும் மாணவர்கள் விடுதி 2 ஆண்டு காலமாகியும் கட்டி முடிக்கப்படாமல் இருக்கிறது என்பதுக் வருந்தத்தக்கது அதை உடனடியாக கட்டி முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கடந்த முறை இந்த மாமன்றத்திலே வாக்குறுதி கொடுத்தார்கள், நிச்சயமாக நீலகிரி மாவட்டத்தை அரசு புறக்கணிக்காது என்று, அங்கே ஒரு செஷன்ஸ் கோர்ட் வேண்டுமென்று கோரிக்கை நீண்டநாட்களாக இருந்து வருகிறது. அது நிச்சயமாக பரிசீலனை செய்யப்படும் என்று அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். நீலகிரி மாவட்டத்திற்கு ஒரு பொதுக்கூட்டத்திற்கு வந்த நேரத்திலே கூட இந்த ஆண்டு செஷன்ஸ் கோர்ட் அங்கே தரப்படும் என்று சொன்னார்கள். அந்த மாவட்டத்தைப் புறக்கணிக்கிறார்கள் என்ற சொல்லுக்கு இடம் இல்லாமல் அங்கே செஷன்ஸ் கோர்ட் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-10)

திரு. அ. பெருமாள்கோன் : மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, 1130 கோடி ரூபாயும் அதைப் போலவே 10 லட்சம் ரூபாயும் இந்த தொகை சப்ளிமெண்டரி பட்ஜெட்டாக இறுதி மதிப்பீட்டிலே இந்த சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். எல்லா சர்க்காரும் சப்ளிமெண்டரி பட்ஜெட் போடுவது சகஜம்தான். ஆனால் திட்டமிடுவதாலே எதிர்பாராத செலவு என்ற காரணத்தாலே இந்த மாதிரி பிரச்சினைகள் வந்து விடுகிறது. எனவே தொகை கூடுதலாக்கப் படுகிறது. என்ற காரணம் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் புதிய திட்டங்கள் போடுவதால் தான் இந்தத் தொகை தேவைப்படுகிறது என்று சொல்கிறபோது நீங்கள் போடுகிற திட்டங்கள் எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணத்தை இங்கே நீங்கள் கொடுத்து இருக்க கூடிய அறிக்கையிலே இருந்தே நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மக்களுக்கு நலம் பயக்கும் திட்டம் போடுகிறோம் என்று சொன்னீர்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று சொன்னீர்கள். போன பட்ஜெட்டில் அதற்கு ஒதுக்கப்பட்டது 15 கோடி ரூபாய், இப்போது உண்டா என்றால் கிடையாது. எம்பிளாய்மெண்டு ஆபீஸில் 1 லட்சம் பேர் வேலை இல்லாமல் பதிவு செய்து இருக்கிறார்கள். வேலை உண்டா? கிடையாது. குடும்பக் கார்டுகள் ஒருகோடியே 20 லட்சம் இருப்பதாக பட்ஜெட்டிலே நம்முடைய நிதியமைச்சர்

அவர்கள் சொன்னார்கள். அப்படி என்றால் ஒரு கோடியே 20 லட்சம் குடும்பங்கள் இருப்பதாக பொருள்: அவர்களுக்கு வேலை வாய்ப்பு உண்டா என்றால் கிடையாது. பல தொழிற் சாலைகள் மூடியிருக்கின்றன வேலை வாய்ப்பு உண்டா என்றால் கிடையாது. ஆனால் வேலை கொடுக்கா விட்டாலும் பரவா யில்லை இருக்கிற வேலைகளும் பிடுங்கப்படுகின்றன. மாதவரம் பால் பண்ணையில் 1500 தொழிலாளர்கள் வேலை இல்லாமல் 3 வருடமாக தெருவில் இருக்கிறார்கள். அவுஸிங் போர்டில் ஆயிரம் பேர் வீட்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். நேற்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிற போது நல்ல தம்பி சினிமா படத்தில் சேலை வேட்டி கொடுப்பது போல் அந்த சினிமாப் படத்தை பார்த்தவுடனே சேலை வேட்டி வழங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டதே தவிர வோட்டுக்கு அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். நாடோடி மன்னன் சினிமா நான் கூட பார்த்து இருக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அதில் வருகிறார். வேலை கொடு, சோறு கொடு என்கிறார். வேலையும் கொடுக்கவில்லை, சோறும் போடவில்லை. நல்ல தம்பி அடிப்படையில் செய்கிறேன் என்றால் நாடோடி மன்னன் அடிப்படையில் செய்ய வேண்டாமா? என்பது தான் என்னுடைய கேள்விஅடுத்து நீங்கள் ஒரு அற்புதமான திட்டம் சொன்னீர்கள் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ன என்று கேட்டால் பாம்பு கடித்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் திட்டம் என்று ஒருதிட்டத் தை தருகிறீர்கள்1,200 பேரை நியமிக்கலம் என்றுசொல்லியிருக்கி றீர்கள். எத்தனை பேரை நியமித்து இருக்கிறீர்கள்? புள்ளி விவரம் தேவை? மாதம் 100 ரூபாய் சம்பளம் என்று சொல்லி யிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தை செயல்படுத்த 80 ஆயிரம் ரூபாய்க்கு குதிரை வாங்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர் கள். நான் ஒரு புள்ளி விவரத்தை உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு பாம்புகள் இருக்கின்றன. அரசிடம் புள்ளிவிவரம் உண்டா? சுமாராக பாம்புகள் வருடத்தில் எத்தனை பேரை கடிக்கும்? அரசின் இது பற்றிய அறிவிப்பு உண்டா? எவ்வளவு கிராமங்கள்? எவ்வளவு நகரங்கள், எவ்வளவு சிற்றூர்கள் இருக்கின்றன? இந்த 1,200 பேர் போதுமானதா? 100 ரூபாய் சம்பளம் போதுமானதா? இவர்கள் எல்லாம் யார் கீழ் பணியாற்றுவார்கள்? இவர்களுக்கு என்ன இலாக்கா? அடுத்து 1200 பேர் நியமிக்கப்படலாம் எனறு இருப்பதாலே சரியான புள்ளிவிவரம் தேவை. அடுத்து முக்கியமான கேள்வி இந்த திட்டத்திற்கும் குதிரைக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் கொடுத்து இருக்கக் கூடிய நிதிநிலை அறிக்கையை துணை மதிப்பீட்டு அறிக்கையை பைனான்ஸ் மெமோரண்டத்தை படித்துப் பார்த்தேன் ரொம்ப சிரமப் பட்டு,குதிரை இந்த திட்டத்திற்கு எதற்கு பயன்படுகிறது என்று இல்லை. பாம்பு கடிக்கும் குதிரைக்கும் என்ன சம்பந்தம் ஒரு வேளை குதிரையிலிருந்து பாம்பு கடிக்கு ஏதாவது மருந்து விஞ் ஞான பூர்வமாக இந்த அரசு ஏதாவது கண்டு பிடித்து இருக்கிறதா





விஞ்ஞான கண்டுபிடிப்பு உண்டா? இல்லை குதிரையில் சென்று பாம்பு கடிக்கு மருந்து கொடுக்கிறார்களா இது என்ன மன்னர் காலமா? அப்படி குதிரையில் போய் மருந்து கொடுக்க வேண்டும் என்றால் அவர்களுக்கு குதிரை ஓட்டத் தெரியுமா? அதற்கு பயிற்சியாளர்கள் உண்டா? அந்த பயிற்சியை கொடுப்பது யார்? பாம்பு கடிக்கு சிகிச்சை அளிக்க போகிறபோது குதிரையை ஓட்டு கிறவர் கீழே விழுந்தால் அவருக்கு யார் சிகிச்சை தருவது? குதிரைக்கு மெயின்டெனன்ஸ் ஏற்பாடு எப்படி வைத்து இருக் கிறீர்கள்? அது என்ன 80 ஆயிரம் ரூபாய்க்கு குதிரை வாங்கு கிறீர்கள். ஒரு குதிரை என்ன விலை? 80 ஆயிரம் ரூபாய்க்கு எவ்வளவு குதிரைகள் வாங்க முடியும். இந்த திட்டத்திற்கு அந்த குதிரைகள் போதுமானதா? எனவே தான் நான் கேட்கிறேன். எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. இது என்ன மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் ஆட்சியா அல்லது குதிரையை மீட்ட சுந்தர பாண்டியன் ஆட்சியா? என்ற ஒரு சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே: மாற்றுத் தலைவர் அவர்களே, கிங் இன்ஸ்டிடியூட் ஆப் கிண்டி என்ற ஒரு நிறுவனம் இருக்கிறது. அங்கே 'சீரம்' தயாரிக்கிறார்கள் 'சீரம்' தயாரிப்ப தற்கு குதிரை நமக்கு தேவைப்படுகிறது அதற்கு தான் கிங் இன்ஸ்டிடியுட்டில் Tetanus Arti,Venom Serum அந்த சீரம் தயாரிப்பதற்கு குதிரைகள் வாங்கப்படுகிறது. இதை தகவலுக் காகச் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாற்றுத் தலைவர் அவர்களே, இன்ன காரணத்திற்காக குதிரை வாங்கப்படுகிறது என்ற விளக்கம். இதில் சொல்லப்பட்டு இருந்தால் மகிழ்ச்சி அடைந்து இருப்பேன். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார் கள். அதிலிருந்து கேட்கிறேன் 80 ஆயிரம் ரூபாய்க்கு எவ்வளவு குதிரைகள் வாங்க முடியும்? பாம்பு கடிக்கு பல பேர் மாள்கிறார் கள். இதிலே மருந்து செய்கிற முயற்சியில் அரசு எப்படி ஈடுபட முடியும்? இந்த குதிரைகள் அதற்கு தான் பயன்படுகிறதா? அது போதுமானதா? இது தேவையை பூர்த்தி செய்யுமா? ஏன் தொகை அதிகமாக கொடுக்கக் கூடாது 80 ஆயிரம் ரூபாய்க்கு எவ்வளவு குதிரைகள் வாங்க முடியும்? அதில் என்ன செய்ய முடியும்? ஆக இதிலே இருந்து தெரிவது என்ன என்றால் இந்தக் குதிரையை வைத்து மருந்து செய்கிறோம் என்று சொல்வது கூட அது அவ்வளவு சரியாக பொருத்தமாக இருக்குமா என்று கூட எனக்குச் சந்தேகம் வருகிறது. ஏன் என்றால் எண்ணிக்கை போதாது. இன்னும் ஒன்றையும் நான் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சரவை விரிவு படுத்தியதிலே நிதி ஒதுக்கம் அதிகம் தேவைப்படுகிறது என்று இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1984 மார்ச் 27

நான் உங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்கிறேன். டெபுடி மினிஸ்டருக்குச் சம்பளம் கொடுக்கப் போவதாக மெமோரண்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு பதவி உண்டா ? மெமோரண்டத்திலேயும் படித்தேன். அடுத்து, கொடுத்திருக்கின்ற விளக்கக் குறிப்புகளையும் படித்தேன் Deputy Minister,s Salary என்று போடப்பட்டிருக்கிறது. அப்படி யாராவது டெபுடி மினிஸ்டர்கள் இருக்கிறார்களா? அந்தப் பதவி ஏற்கெனவே இருந்தது. ஆனால் இப்பொழுது அந்தப் பதவி இல்லை. அல்லது இந்தப்பதவி தற்போது இல்லாததை மறைத்து யாராவது சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்களா ? அவர்களுக்குச் சம்பளம் தரப் படுகிறதா ? புள்ளி விவரப்படி டெபுடி மினிஸ்டர்ஸ்க்குச் சம்பளம் கொடுக்கப்படுவதாகப் போடப் பட்டிருக்கிறது. எனவே இதுபற்றிச் சபைக்குத் தெரிந்தாக வேண்டும்.

அடுத்து, இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். இந்த அமைச்சரவை விஸ்தரிப்பு பற்றிச் சொன்னால், இங்கே உள்ள பலரும் அதற்குப் பல காரணங்களைச் சொல்லக் கூடும். அமைச்சரவையை விரிவு படுத்துவதற்கான அவசியம் ஏதாவது இருக்கிறதா ? வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று உங்களால் கொடுக்க முடியா விட்டாலும், உங்கள் கட்சிக்காரர் களுக்கு மந்திரி வேலையாவது கொடுக்கிறீர்கள், பரவாயில்லை. நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இங்கே அமைச்சர் ஒருவர் இருக்கிறார். அமைச்சர் சௌந்திரராஜன் அவர்களைத்தான் சொல் கிறேன். அவருக்கு என்று ஒரு இலாக்கா இருக்கிறதா ? அவருக்கு என்று அதிகாரிகள் இருக்கிறார்களா ? இங்கேயுள்ள எல்லா மந்திரிகளும்—பழைய மந்திரியாக இருந்தாலும் சரி, புதிய மந்திரியாக இருந்தாலும் சரி, வயதில் மூத்த மந்திரியாக இருந்தாலும் சரி, இளைய மந்திரியாக இருந்தாலும் சரி, சீனியர் மந்திரியாக இருந்தாலும் சரி, ஜூனியர் மந்திரியாக இருந்தாலும் சரி எல்லோரும் தங்கள் மானியத்திலே பேசுகிறார்கள் ; ஏதாவது ஒரு மானியக் கோரிக்கையிலே பேசுகிறார்கள். ஆனால் அவர் பதவி வகிக்கின்ற சத்துணவுத் துறைக்கு என்று, அவர் இலாக்கா விற்கு உட்பட்டு ஏதாவது தொகை மானியத்தில் தரப்படுகிறதா? அவருக்கு என்ன வேலை ? அவர் என்ன செய்கிறார் ? அவருக்கு எவ்வளவு சம்பளம் ? பயணப்படி எவ்வளவு ? டி.எ. எவ்வளவு? காரில் பயணம் செய்தால் எவ்வளவு செலவு ? இதன் மூலமெல் லாம் மக்களுடைய வரிப் பணம் வீணாகவில்லையா ?

ஆனால் அவர் ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். பத்திரிகைகளிலிருந்து அது தெரிகிறது. இருக்கின்ற ஆயாக்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார் தவறு செய்தால். ஆயா அஞ்சலை அகப்படாத காரணத்தினால் ஆயா உஷாவை சஸ்பென்ட் செய் திருக்கிறார். ஆகவே, இதற்காக ஒரு அமைச்சரா ? ஆயாக்களை பிடிப்பதற்காக ஒரு அமைச்சரா ?



1984 மார்ச் 27] [திரு. அ. ரகுமான்கான்]

எனவே, இந்தச் சர்க்காருக்கு ஏதாவது ஒரு காரியத்திலே, ஒரு கண்ணோட்டத்திலே ஒரு முறை உண்டு என்றால் அவருக்கு என்று ஒரு இலாக்கா வையுங்கள். வெளியிலே இன்னொன்றைக் கூடப் பேசுகிறார்கள். சாதிக்கு ஒரு அமைச்சர் என்று போடு வதாக. அப்படியானால் சர்வீஸ் கமிஷனில் உள்ள விவரப்படி பேக்வேர்ட் கிளாஸ் என்ற முறையில் கிட்டத்தட்ட 374 சாதிகள் வருகின்றன ; கிளைகள் வேறு வருகின்றன. அப்படி உள்ள எல்லா சாதியினருக்கும் கொடுத்து விட முடியுமா ?

சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாடினார் பாரதி. அதற்குக் கூட நம்முடைய நாவலர் அவர்களும், முதலமைச்சர வர்களும் சொல்லலாம், பாப்பாவுக்குத்தானே பாடினார் பாரதி, நமக்காகவா பாரதி பாடினார், பெரியவர்களுக்காகவா பாரதி பாடினார் என்று கூடக் கேட்கலாம். எனவே, வெளியிலே பிரச் சாரத்திற்காக இப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இங்கேயிருப்பவர்கள் சொல்லலாம், வேலைப் பளு அதிகமாக இருப்பதால் அதைக் குறைப்பதற்காகப் போட்டிருக்கிறோம் என்று. அமைச்சர்கள் அதிகமாக ஆகிவிட்டால் இந்தப் பிரச்சினை எப்படித் தீரும் ? அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கூட்டி விடு வதால் மட்டும் சிறப்பான நிர்வாகத்தைத் தந்து விட முடியுமா?

ஹைகோர்ட்டில் நீதிபதி மோகன் அவர்கள் ஒரு ஜட்ஜ்மெண் டைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஆணி கிடைக்காத காரணத்தினால் குதிரைக்கு இலாடம் அடிக்கவில்லையாம் ; அப்படிக் குதிரைக்கு இலாடம் அடிக்காத காரணத்தினால் போர் வீரன் குதிரை மீது ஏறி சவாரி செய்ய முடியவில்லை. குதிரையில் ஏறி குதிரை வீரன் போருக்குச் செல்லாத காரணத்தினால் போரில் வெற்றி பெற முடியவில்லை என்பதைப் போல், இந்த அரசாங்கத்தின் உத்தரவைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல் கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் விருத்தாசலத்திற்குப் பக்கத் தில் அரிசன மக்களுக்காக ஒரு சுடுகாடு தேவை என்பதற்காக சர்க்கார் நில ஆர்ஜிதம் செய்கிறது. அதில் அரிசன மக்களுக்காக நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது என்ற வார்த்தைகள் எழுதப் படாத காரணத்தினால்,—பாதிக்கப்பட்டவர்கள் கோர்ட்டுக்குப் போகிறார்கள்,—பெட்டிஷன் டிஸ்மிஸ் ஆகிவிட்டது. அரசாங்கத் தின் உத்தரவு செல்லாததாகிவிட்டது. இதைப் பற்றி அமைச்சர் பார்த்திருக்கிறார் ; பி.ஏ., பார்த்திருக்கிறார் ; அதிகாரிகள் பார்த்திருக்கிறார்கள் ; செக்ரட்டரி பார்த்திருக்கிறார்கள். இவ் வளவுக்கும் பிறகும் ஒரு நியாயமானக் கோரிக்கைக்காக ஒதுக்கப் பட்ட நிலம் பற்றிய விஷயம் ஹைக்கோர்ட்டில் அடிபடுகிறது.

எங்கள் பக்கத்தில் ஒரு பழமொழி சொல்லுவார்கள் ; அறுக்க மாட்டாதவன் இடுப்பிலே ஐந்தாறு அரிவாள் எதற்காக என்று. எனவே, இப்படி ஏகப்பட்ட ஆட்களைப் போடுகிறோம் என்று சொல்வது தவறான காரியமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்கள் இங்கே இருக்கிறார்கள். நான் உங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஒரு சகோதரர், அவர் ஒரு டாக்டர். அவருடைய பெயர் டாக்டர் ஜோதி இராமலிங்கம் என்பது. இவர் அமெரிக்காவில் டெக்சாஸ் நிறுவனத்தில் இதய சிகிச்சை பெறுவதற்காகச் சர்க்கார் ஒரு இலட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. அந்தக் கடனைக் காட்டி இந்த பட்ஜெட்டிலே கேட்கிறீர்கள். இந்த ஒரு இலட்சம் ரூபாயை இந்தச் சட்டசபை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். இந்த ஜோதி இராமலிங்கம் யார் ? இந்த ஜோதி இராமலிங்கத்திற்கு மட்டும் இந்தக் காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறதா ? இதுபோன்று எவ்வளவு பேர்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அமெரிக்கா, ஜெர்மனி, இரஷ்யா போன்ற இடங்களில் மருத்துவச் சிகிச்சைப் பெற வேண்டும் என்று அரசாங்க ஊழியர்கள் கேட்டால் அவர்களை நீங்கள் அனுமதிப்பீர்களா ?

(முற்பகல் 11-20)

மனுக்கள் வந்திருக்கின்றதா ? அனுமதித்திருக்கிறீர்களா? அதற்கு என்ன அடிப்படை? இந்த ஒரு இலட்சம் ரூபாயை எப்படித் திரும்பப் பெறுவீர்கள்? அது மக்களின் வரிப்பணம் இல்லையா? மற்றவர்களுக்குக் கொடுக்காமல் இவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டது என்றால் அது ஃபேவரிட்டிசம் இல்லையா? அதிகாரம் துஷ்பிரயோகம் இல்லையா ? ஆகவே இதை எல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். செயற்கை மழை என்று ஒன்றைச் செய்தீர்கள். அந்த செயற்கை மழை பற்றிச் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு அமெரிக்காவிலே உள்ள ஒரு கம்பெனியோடு ஒப்பந்தம் பண்ணி இருக்கிறீர்கள். அந்தக் கம்பெனிக்கு ஒப்பந்தம் என்ற வகையில் 10,60,350 ரூபாய் மட்டும் இந்தச் சர்க்கார் முதல் தவணையாகக் கொடுத்திருக்கின்றது. அதற்கு வக்கீல் ஃபீஸ் எவ்வளவு தெரியுமா ? 5 ஆயிரம் ரூபாய். ஆகவே நான் கேட்கிறேன். செயற்கை மழை பெய்விக்க அந்தக் கம்பெனியிடத்திலே என்ன பேசினீர்கள் ? எவ்வளவு தொகை ? எந்த ஊரிலே சோதனை செய்தீர்கள் ? சோதனை வெற்றி பெற்றதா ? ஆனால் மாண்புமிகு அமைச்சர் மரியாதைக்குரிய திரு. இராகவானந்தம் அவர்கள் குடையைத் தூக்கிக் கொண்டு குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் வாசித்தால் மழை வரும் என்று சொல்லிக் கொண்டு போனார்கள். குடை எதற்குத் தெரியுமா ? குன்னக்குடி வைத்தியநாதன் வயலின் வாசித்தால் திடீரென்று மழை வரும், அப்படி மழை வந்தால் அவர்கள் நனைந்து விடுவார்கள். அதற்காகத்தான் குடை கொண்டு போனார். அப்படி மழைக்காக குன்னக்குடி வைத்தியநாதனை நம்பிக் கொண்டிருப்பவருக்கு செயற்கை மழை என்ற கருத்து எப்படி வந்தது ? அதனால் மக்கள் பணம் வீண்தானே ? இந்தத் தொகைக்கு வரவு-செலவுக் கணக்கு என்ன ? விவரம் என்ன ? அதை சபைக்குக் கொடுங்கள். அந்த ஒப்பந்தம் பற்றிய விவரங்கள் சபைக்குத் தெரிய வேண்டும் என்ற வகையிலே அதை சபைக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து இன்னொரு மிக முக்கியமான பிரச்சினையை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். நான் ஆதாரம் இல்லாமல் பேசுகிறேன் என்று சொல்லக்கூடாது. அதற்காகத்தான் சொல்கிறேன். இங்கே இருப்பது நிதிநிலைக் குறிப்பு. 1984—85 ஆம் ஆண்டுக்கான குறிப்பு. பக்கம் 108. அதிலே ஊழல் சம்பந்தமாக அதாவது சாராயம் மற்றவைகள் சம்பந்தப்பட்ட ஊழல் சம்பந்தமாக விசாரணைக் கமிஷன்கள் போட்டதற்கான செலவுகளை எல்லாம் அதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதாவது சிறப்பு விசாரணை ஆணைக் குழுக்களுக்காக 1982—83 ஆம் ஆண்டிலே எவ்வளவு செலவு, 1983—84 ஆம் ஆண்டிலே எவ்வளவு செலவு, 1984—85 ஆம் ஆண்டிலே எவ்வளவு செலவு என்றெல்லாம் சொல்கிற போது 8 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய், 1982 ஆம் வருஷம்; 7 இலட்சத்து 99 ஆயிரம் 1983 ஆம் வருஷம்; இப்போது நீங்கள் கேட்டிருப்பது 4 இலட்சத்து 21 ஆயிரம் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நான் ஒன்றைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இப்படி பல்வேறு விசாரணைக் கமிஷன் போட்டீர்களே, நான் கேட்கிறேன். அப்சல்கான் என்கொயரி கமிஷன் ரிப்போர்ட் என்ன ஆயிற்று ? அர்பன்சிங் என்கொயரி கமிஷன் ரிப்போர்ட் என்ன ஆயிற்று ? போலிஸ் லாக் அப்பிலே 343 பேர் கொல்லப்பட்டு பல்வேறு நீதி விசாரணைக் கமிஷன்கள் எல்லாம் வைக்கப்படுவது பற்றி அறிவித்தீர்களே, அந்த விசாரணைக் கமிஷன்கள் என்ன ஆயிற்று ? வள்ளியூரிலே போடப்பட்ட விசாரணைக் கமிஷன் என்ன ஆயிற்று ? திருத்தணி கோயிலிலே வைரவேல் களவு போனது குறித்து திரு. நடராஜன், ஐ.ஏ.எஸ். அவர்களைத் தலைவராகக் கொண்ட கமிஷன் போட்டு அந்தக் கமிஷன் ரிப்போர்ட் கொடுத்து இரண்டு வருஷங்கள் ஆகின்றன. ஏன் அதைச் சபையில் வைக்கவில்லை? வைரவேல் என்ன ஆயிற்று ?

அந்த ரிப்போர்ட்டை ஏன் வைக்கவில்லை ? விசாரணைக் கமிஷன்களுக்காக இவ்வளவு பணம் செலவாகி இருக்கின்றதே, இதெல்லாம் மக்கள் பணம் தானே ? அதைப்பற்றிக் கேட்பதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இல்லையா ? மக்களுக்கு உரிமை இல்லையா? அதிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப் பற்றிக் கொடுக்க வேண்டாமா ?

* * * * *
* * * * *
* * * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தக் கமிஷன் அறிக்கை பற்றி விவாதிக்க ஒரு நாள் தனியாக ஒதுக்கியிருக்கிறோம். அன்றைக்கு இவைபற்றி எல்லாம் பேசலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஒவ்வொரு கமிஷனுக்கும் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறோம் என்று போட்டிருக்கிறார்கள், சார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ராம் பிரசாத் கமிஷன் அறிக்கை பற்றி விவாதிக்க தனியாக நாள் ஒதுக்கியிருக்கிறார்கள். அன்றைக்குப் பேசலாம், இப்பொழுது வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** துணை மானியக் கோரிக்கையிலே இதைப் பேசக் கூடாது. ஆகவே, இவையெல்லாம் நீக்கப்படுகின்றன.

**திரு. அ. ரகுமான்கான் :** கமிஷன் அறிக்கை வெளி வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * (குறுக்கீடு) இன்றைக்குத் துணை மானியக் கோரிக்கை விவாதத்திலே பேச முடியாது. ஆகவே, ராம் பிரசாத் அறிக்கை பற்றிய சமாச்சாரம் பூராவும் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) அதை விவாதிக்க தனியாக நாள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. அ. ரகுமான்கான் :** * குறிப்பாகச் சொல்கிறேன். சாராயம் முதலியவற்றைத் தயாரிப்பதற்குக்கொடுக்கப்படும் விற்பனை உரிமம் தொடர்பாக * நிதி ஒதுக்க வேண்டுமென்ற தலைப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கருத்துச் சொல்லலாமா, வேண்டாமா ?

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



அதற்கு ஒரு தீர்ப்புத் தேவை. நம்முடைய நிதி அமைச்சர் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்கள். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதை விவாதிப்பதற்கென்று தனியாக ஒரு நாள் வைத்திருப்பதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அப்பொழுது பிரச்சினைகளை எடுத்துச் சொன்னால், விரிவாகவும், தெளிவாகவும், விளக்கமாகவும், திட்பமாகவும் கூட, அதற்குப் பதில் வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆனால் இன்றைய தினம் எடுத்துப் பேசுவதன் காரணமாக, மற்றைய உறுப்பினர்களுக்கு இருக்கிற நேரம், எனக்கு இருக்கிற நேரம், ஆகியவற்றைக் கணக்கிட்டால், அதற்கேற்ற பதில் கிடைக்காது.

பொதுவாகச் சொல்லிக் கொண்டு போனார்கள். பிரச்சினைகளுக்கும் பதில் சொல்லுகின்ற வகையில், பொதுவாக சொல்லிக் கொண்டு போவதில் ஒன்றும் இல்லை. அதுபற்றி டீடெய்ல்சுக்குள் போகின்ற பொழுது பதில் கிடைக்காது. அது தவறு என்று நான் சொல்ல வரவில்லை. டீடெயில்சுக்குள் போவது இப்பொழுது தேவையில்லை. தனியாகவே, விரிவாகவே எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பிருந்தால், மற்றைய விஷயங்களில் கவனம் செலுத்துவார்களானால், நானும் ஓரளவுக்குக் கவனம் செலுத்த முடியும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாவலர் அவர்களும் நீங்களும் சொல்லியதற்கிணங்க தனியாக, ஆழமாக, நுணுக்கமாக, நுண்புலத்தோடு அதுபற்றி விவாதிக்கின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அப்பொழுது வைத்துக் கொள்ளலாம்.

ஆனால், நான் கேட்பது ஒரு கமிஷனுடைய ரிப்போர்ட் பற்றி, கோர்ட்டிலே ஸ்டே போடப்பட்டிருக்கிறது. ஸ்டே வெக்கேட் ஆகாதபொழுது எப்படி ஜட்ஜ்மெண்ட் எழுதலாம். அரசாங்கம் கேட்க வேண்டும்.

அடுத்து இன்னொன்று நான் தெரிவிக்க விரும்புவது, முக்கியமான பிரச்சினை. கோர்ட்டிலே 11 மணிக்குத் தீர்ப்புச் சொன்னார்கள். அவசரம் அவசரமாக இங்கே கொண்டு வந்து 11-30 மணிக்கு அவையில் தெரிவித்தார்கள். அதன் காப்பி கிடைக்கவில்லை. இந்த செஷன் முடிவதற்குள்ளாக அதைப் பற்றி விவாதிப்பதற்கு துணை சபாநாயகர் அவர்களே நீங்கள் ஒரு நாள் ஒதுக்கப் பெறும் என்கிற ஒரு வாக்குறுதி தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்கிறேன்.

பல பிரச்சினைகள் வாதிடப்படாமலே போய் விட்டன. ரமணன் கலைஞர் அவர்களுடைய கையை முறுக்கினார் என்ற குற்றச்சாட்டைச் சொன்ன போது விசாரித்துச் சொல்கிறேன் என்று சபையிலே சொன்னார்கள். விசாரித்து இருக்கிறாரா ? இதுபோல பல பிரச்சினைகள் போய் விட்டன. ஆகவே இதை வாக்குறுதியாக கருதி உறுப்பினர்களுக்கு அந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அந்த பாண்டியன் நெடுஞ்செழியன் தவறு இழைத்தான். நீங்கள் அப்படிச் செய்ய மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே அதை உங்களிடத்திலே விட்டு விடுகிறேன்.

(முற்பகல் 11-30)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அதனால் தான் நாம் விரிவாக எடுத்துப் பேசலாம் என்று சொன்னேன். இராமபிரசாத் அவர்கள் தீர்ப்பு எழுதக் கூடாது என்று ஸ்டே கொடுக்கவில்லை. தீர்ப்பு வெளியிடக்கூடாது என்று தான் ஸ்டே கொடுத்தார்கள். அதற்கிடையில் அதை எழுதி தயாராக வைப்பதற்கு எல்லா உரிமையும் நீதிபதிக்கு இருக்கிறது. ஆகவே நீண்ட நேரம், நீங்களும் பேசலாம். நானும் சொல்லலாம். ஆகவே அதற்கான வாய்ப்பு பின்னாலே இருக்கிறது. உங்களுக்கு முழு வாய்ப்பும் இருக்கிறது. தாராளமாக வாதிடுங்கள் ; நாங்கள் பதிலுரை தருகிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : அரசாங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் அந்த அரசாங்க அதிகாரிகள் பழி வாங்கப்படுகிற காரணங்கள் நடக்கக் கூடாது. பெரியார் நூற்றாண்டு விழா பெண்கள் பாலிடெக்னிக்கில் உங்களுடைய கொள்கைப் பரப்புச் செயலாளரை குறித்து ஏதோ ' மாக்-பார்லியமெண்டில் ' கேவலமாக, அல்லது நகைச்சுவையாக பேசிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக அந்த கல்லூரியின் பேராசிரியர் டிஸ்மிஸ் செய்யப்பட்டு என்குவயரி நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி சினிமாவிலே விமர்சிக்கிறார்கள். படித்தவர்களுக்குத் தெரியும். மாக்-பார்லியமெண்ட் என்பது சாதாரணமாக எல்லோரையும் கிண்டல் செய்து, கேலி செய்து, நகைச்சுவையோடு சொல்வது ; அரசியல்வாதிகள் அதை எளிதாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தினர் கொடுத்த மெமோரண்டத்தை திரு. வையாபுரி இங்கே அனுப்பி வைத்து விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அதற்கு விளக்கம் சொல்லி இருக்கிறார்கள். மன்னிப்பு கேட்டிருக்கிறார்கள். ஒரு ஆசிரியர் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். 11 மாணவர்கள் மீது நடவடிக்கை உண்டு ; இவ்வளவுக்கும் மேல் அந்த



கல்லூரியினுடைய முதல்வர் ஒரு பெண்மணி ; நீங்கள் இப்படி செய்வது சரியா ? இது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா ? முறைகேடு இல்லையா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 20 நிமிடம் ஆகி விட்டது. முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை. இதோடு முடித்துக் கொள்கிறேன். டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷனாக திரு. வையாபுரி இருந்தார். இப்போது வேறு இடத்திற்கு மாற்றி விட்டார்கள். அவருக்குப் பதிலாக அந்த இடத்திற்கு வரவேண்டிய எல்லா தகுதியும் பெற்றிருக்கிறார் ஒருவர் ; —நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் ; என்னுடைய தலைவர்கள் கலைஞர், அண்ணா, பெரியார் தான் ; ஒரு சிறுபான்மைச் சமுதாயம் எவ்வளவு புறக்கணிக்கப் படுகிறது என்பதற்காகச் சொல்கிறேன். இதுவரையில் நான் சபையில் எங்கேயும் பேசியதில்லை. ஒரு நியாயத்திற்காக கேட்கிறேன். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர் ; எல்லா தகுதியும் பெற்றிருக்கிறார் ; அவருக்கு இடம் கொடுக்காமல் அந்த இடத்தை இன்றைக்கு வேகண்டாக வைத்திருப்பதாக சொல்கிறார்கள். அது சரிதானா என்று கேட்கிறேன். முஸ்லிம் சமுதாயத்திற்கு காரியங்களைச் செய்வதாக நம்முடைய முதல்வர் சொல்கிறார். இது சரிதானா என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக சத்துணவுத் திட்டத்தைப் பற்றி சுருக்கமாக இரண்டு நிமிடத்தில் சொல்லி முடித்து விடுகிறேன். இப்போது ' தாரா ' என்ற நிறுவனம், ' தமிழ்நாடு ரூரல் ரீ-கான்ஸ்டிடியூஷன் அசோஷியேஷன் ' என்று ஒரு பிரிவு. இதிலே நன்கொடையாக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்கு வாங்கப்படுகிறது. யார் நன்கொடை கொடுக்கிறார்களோ அவர்கள் வருமான வரி கட்டத் தேவையில்லை ; 100 பெர்சண்ட் ரிபேட் ; ஆகவே மத்திய அரசிற்கு போக வேண்டிய வரியை, இன்கம்டாக்சை இங்கே கொடுத்து விடலாம். அவர்களுக்கு இன்கம் டாக்ஸ் கிடையாது. அதைப் போல முதலமைச்சர் நிவாரண நிதியிலும் வருமான வரி விலக்குக் கொடுக்கப்படுகிறது. நான் கேட்க விரும்புவது, நம்முடைய நாவலர் அவர்கள் இங்கே சொன்னார்கள் ; இந்தத் தொகையை எல்லாம் வசூலிக்கக் கூடிய காரியத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தாசில்தார்கள் எல்லோரும் அனுப்பப்படுகிறார்கள் என்று ; இப்போது எலக்ட்ரிசிட்டி போர்டில் நஷ்டம் வருகிறதென்றால் அந்த நஷ்டத்தை வசூலிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரையும், தாசில்தாரையும் ஒவ்வொரு ஊருக்கும் அனுப்புவீர்களா ? ஆகவே இதற்கு என்ன அர்த்தம் ? நன்கொடை என்றால் இன்டேரக்ட் டாக்ஸ் என்று தான் அர்த்தம்

இந்த வரியை விதிக்கிற அதிகாரம் சட்டமன்றத்திற்குத் தான் உண்டு. இன்னும் சொல்லப் போனால் நன்கொடை என்ற பெயரால் வந்த கணக்கு சபையிலேவைக்கப்படுவதாகச்சொன்னார்கள் எவ்வளவு வசூல் தாரா மூலமாக, எவ்வளவு வசூல் முதலமைச்சர் நிவாரண நிதி மூலமாக, என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கணக்கை தணிக்கை செய்கிற உரிமை வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை. நம்முடைய கலெக்டர் அவர்கள் ஜனவரி மாதத்தில் 1,000, 500, 50 என்று சொல்லி பல லட்சக்கணக்கான ரூபாய் வசூலித்து இருக்கிறார்கள். என்ன சொல்லி வசூலித்து இருக்கிறார்கள் என்றால், தேதி சொல்லி, மாதம் சொல்லி, வசூலித்து இருக்கிறார். ஜனவரி மாதம் நட்சத்திரங்களைக் கொண்ட கலை நிகழ்ச்சி ஒன்று நேரு ஸ்டேடியத்தில் இந்தச் சத்துணவுத் திட்டத்திற்காக நடத்தப்படும் என்று சொன்னார்கள். இதே மாதிரி கோயம்புத்தூரில் நம்முடைய முதல் அமைச்சர் உட்பட பலர் கலந்துக் கொள்வார்கள் என்று சொல்லி பணம் வசூலித்து, அந்த விழா நடத்தாத காரணத்தால், பணம் கொடுத்தவர்கள் எல்லாம் கொடுத்த புகாரின் பேரில் சீட்டிங் கேஸ் போட்டு உள்ளே தள்ளினார்கள். தனி நபர் என்றால் சீட்டிங் கேஸா ? சர்க்கார் செய்து இருக்கிறது என்றால், என்ன நிலைமை ? பணம் கொடுத்தவர்கள் கேட்கிறார்கள் ? என்ன பதில் சொல்கிறீர்கள். இது மக்களை ஏமாற்றுவது தானே. இது சர்க்கார் செய்த சீட்டிங் இல்லையா ? சர்க்கார் இப்படி சீட்டிங் செய்யலாமா ? ஆகவே, தாரா மூலமாக வசூலித்தது எவ்வளவு ? முதலமைச்சர் நிதிக்கு வசூலித்தது எவ்வளவு ? இந்த விவரங்களையெல்லாம் இங்கே தர வேண்டும்.

இன்னொன்றையும் முக்கியமாக நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தி ஆதிக்கத்திற்கு எதிராக பாடுபட்ட வீரர்களுக்கு உடனடியாக நிதி கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஏன் தயக்கம் ? இன்னும் ஏன் கொடுக்கவில்லை ? இங்கே கூட மசோதா கொண்டு வரப்பட்டதே ? அதை ஏன் மறுக்கிறீர்கள் ? என்ன காரணம் ? அந்தத் தொகை 10 நாளைக்குள் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டதே, ஏன் தரவில்லை. ஆகவே, அதைத் தரவேண்டும் என்று கேட்டு, அதற்கான அறிவிப்பை சபையில் தர வேண்டும் என்று சொல்லி, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் இந்த அவை முன் தாக்கல் செய்யப்பட்டு இருக்கிற இறுதித் துணை மதிப்பீட்டின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பல்வேறு





துறைகளுக்கு நிதி ஒதுக்கம் செய்யக் கேட்டு இருக்கிறார்கள். மொத்தமாக 1,130.10 கோடி கேட்டு, அதிலே வெள்ள நிவாரணத்திற்காகவும், கல்வித் துறைக்காகவும், கோவாப்டெக்ஸ் நிறுவனத்திற்காகவும் அதே நேரத்திலே கிராமப்புற வேலை வாய்ப்பு திட்டத்திற்கும் இங்கே நிதி ஒதுக்கம் கேட்டு இருக்கிறார்கள்.

இதிலே கல்விக்காக 6 கோடியே 19 இலட்சம் கேட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு உயர்நிலைப் பள்ளிகளுக்கு சரியான கட்டிடங்கள் இல்லை. அதே நேரத்தில் மாணவர்கள்-ஆசிரியர்கள் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப அதிக ஆசிரியர்கள் வேண்டும் என்று அந்தத் துறையினர் அரசாங்கத்திற்கு எழுதுகிறபோது அங்கே நிதித் துறையில் போதுமான ஆசிரியர்கள் கொடுப்பதற்காக நிதி ஒதுக்கம் இல்லை, ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, கல்விக்காக அதிகம் செலவழிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கோவாப்டெக்ஸ் நிறுவனமும் நாட்டிலே இருக்கிற பிரதான நெசவாளர் கூட்டுறவுச சங்கங்களும் கொள்முதல் செய்ய இருக்கும் துணிகளுக்கு மொத்தமாக பணம் செலுத்தாத காரணத்தால் இன்று துணைச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு கூலி கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே அதற்கும் அதிமான நிதியை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 8.90 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே சாலைக்காக ரூ. 3 கோடியும், பாசனத்திற்காக ரூ. 3 கோடியும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இன்று பாசனத்தைப் பொறுத்தவரையில், இந்த 3 கோடி ரூபாய் போதாது. காரணம் என்னுடைய தொகுதியில் இருக்கும் 7—8 கால்வாய்கள் பழுதுபார்க்க வேண்டும் என்று பொதுப்பணித்துறையிடம் கேட்டபோது அவர்கள் நிதிஒதுக்கீடு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, பாசனத்திற்காக, அதிக நிதி ஒதுக்கினால்தான், இப்படிப்பட்ட கால்வாய்த் திட்டங்களை சீர்படுத்திக் கொடுக்க வசதியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(முற்பகல் 11-40)

அதைப்போலவே 31 நகராட்சிகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்திற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு நகராட்சிகளைப் பொறுத்தவரையில் குடிநீர் வசதிக்காகவும், சாலை வசதிக்காகவும் மற்ற அடிப்படை பணிகளுக்காகவும் ஏராளமாகப் பணம் தேவைப்படுகிறது. நகராட்சிச் சாலைகளைச் செப்பனிடுவதற்கு ஒப்பந்தக்காரர்கள் முன்வர மறுக்கிறார்கள். காரணம் பழைய முறையிலேயே இன்றைக்

[திரு. எம். சின்னசாமி) [1984 மார்ச் 27

கும் ஒப்பந்த நடைமுறைகள் இருக்கின்றன. அதனால், எங் களுக்குக் கட்டுப்படியாகவில்லை என்று ஒப்பந்தக்காரர்கள் சொல் கிறார்கள். கரூர் நகராட்சியிலே கூட பல்வேறு சாலைகள், போடப்படவில்லை. காரணம் போதுமான பணம் இல்லை என்று தனி அதிகாரியும், நகராட்சி கமிஷனரும் சொல்கிறார்கள். ஆகவே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் இருக்கிற நகராட்சி களுக்கு இன்னும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை).

என்னுடைய தொகுதியில் நொய்யல் திட்டம் 25 ஆண்டு காலத்திற்கு மேலாக நிலுவையில் இருந்தது. இன்றைய தினம் முதல் பகுதி வேலை 8 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட்டிருக் கிறது. அதைப்போன்று என்னுடைய தொகுதியில் இன்னும் 10,000 ஏக்கர் புதிதாக பாசனம் பெறக்கூடிய இரண்டாம் கட்டப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அதற்கு 10 கோடி ரூபாய் தேவை என்று கேட்டிருக் கிறார்கள். அந்தத் தொகையை ஒதுக்கி, முதல் கட்டப் பணி யையும் இரண்டாம் கட்டப் பணியையும் சேர்த்து நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியில் கரூர் நகரில் ஒடு கின்ற அமராவதி ஆற்றில் ஒரு பாலம் 100 ஆண்டு காலத்திற்கு முன்னால் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பாலம் இப்போது போக்குவரத்திற்கு லாயக்கு இல்லை என்று பொறியியல் வல்லு நர்கள் அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு 3 கோடி ரூபாய் தேவை என்று என்ஜினீயர்கள் சொல்லியிருக்கிறார்கள். நகராட்சியிலும் அதற்கு மதிப்பீடு செய்து, அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தொகையை இந்த ஆண்டு ஒதுக்க முடியாது என்று பதில் வந்திருக்கிறது. இந்த ஆண்டு பணம் ஒதுக்கி வேலை ஆரம்பிக்கப்படவில்லை என்றால் திடீரென்று அந்தப் பாலம் பழுது அடைந்து விட்டால் கரூா நகரத்தைத் தாண்டி அந்தப் பக்கம் போக முடியாத அளவுக்கு பெரும் இடையூறு ஏற்படும் என்பதைச் சொல்லி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவையான நிதியை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று கரூர் நகரில் இருக்கிற அரசு அலுவலகங்கள் பல்வேறு இடங்களில் இருக்கின்றன. திருச்சியில் இருப்பது போன்று அனைத்து அலுவலகங்களும் ஒரே இடத்தில் வருகின்ற அளவுக்குத் தேவையான கட்டிடத்தைக் கட்டித்தர வேண்டும், அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 27] [திரு. எம். சின்னசாமி]

அடுத்து என்னுடைய தொகுதியில் மண்மங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 30-க்கு மேற்பட்ட கிராமங்கள் அமராவதி ஆற் றுக்கும் காவேரிக்கும் இடையே புன்செய்ப் பகுதியில் இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் நல்ல குடிநீர் கிடைக்காமல் கஷ்டப்படு கிறார்கள். அங்கே ஒரு கூட்டு குடிநீர்த் திட்டம் வேண்டுமென்று சொல்லி, அதற்கு மதிப்பீடு எல்லாம் தயார் செய்து, குடிநீர்- வடிகால் வாரியத்திற்கு அனுப்பியபோது, அதற்கு இந்த ஆண்டு நிதி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்குத் தேவை யான நிதியை ஒதுக்கி, இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருச்சியிலிருந்து கரூர் செல்கின்ற அந்தச் சாலை அதிகமாக பழுதுபட்டிருப்பதால் போக்குவரத்திற்கு பெரிய இடைஞ்சலாக இருக்கிறது. திருச்சியிலிருந்து கரூருக்குப் போக வேண்டுமென்றால் ஏறத்தாழ 47 மைல் தூரத்தைக் கடப்பதற்கு இரண்டு மணி நேரத்திற்கு மேலாகிறது. அந்த அளவுக்குச் சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, சாலைகளுக்கு என்று ஒதுக்கியிருக்கிற நிதியில் திருச்சி-கரூர் சாலைக்கு அதிகமாக ஒதுக்கி செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலாயுதம்பாளையம் முதல் நொய்யல் வரை உள்ள சாலையும் மிகவும் மோசமாக இருக்கிறது. அதையும் செப்பனிட வேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. சே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, 1983-84 ஆம் ஆண்டிற்கான துணைமானியக் கோரிக் கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த மானியக் கோரிக்கையில் எதிர்பாராமல் ஏற்பட்ட வெள்ளம், வறட்சியை சமாளிப்பதற்காகவும் இதர பணிகளுக்காகவும் நிதி ஒதுக்கீடு கோரப்பட்டிருக்கிறது. வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பது சம் பந்தமாக ஏற்கெனவே இந்தச் சபையில் பேசியிருக்கிறோம். வீடு இடிந்தவர்களுக்கு 200 ரூபாய் உதவித் தொகை கொடுப்பது போதாது, அதை 500 ரூபாயாக உயர்த்த வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலச்சுவான்தார்களுக்குப் போதிய நஷ்டஈடு கொடுக்க வேண்டும். வெள்ளத்தால் பாதி கப்பட்ட இடங்களில், அதைப்போன்று வறட்சியால் பாதிக்கப் பட்ட இடங்களில் நிலவரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; குத்தகைப் பாக்கியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; விவ சாயிகள் பெற்றிருக்கிற கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1984 மார்ச் 27

விவசாயிகள் மீண்டும் விவசாயம் செய்வதற்கு கடன் கொடுத்து உதவ வேண்டும். விதை, இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்றவைகளை இலவசமாக அளிக்க வேண்டும்.

சாலைகளைப் பராமரிப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வெள்ளத்தால் ஆறு மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டங்களில் சாலைகளை சீராக்குவதற்கும் பாலங்களைக் கட்டுவதற்கும் ஒதுக்கியிருக்கிற நிதி போதுமானதாக இல்லை. இந்த நிதி ஒதுக்கீட்டை மேலும் உயர்த்த வேண்டும். அவைகளைப் பராமரிக்கின்றபோது அடுத்தவர் பாதிக்கப்படாமல் சரியாகப் பராமரிக்க வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வத்திராயிருப்பு, பூமாப்பட்டி பகுதிகளை நான் நேரிலே பார்த்தேன். அங்கே சாலையைப் பராமரிப்பதற்காக அடியிலே உள்ள மண்ணை எடுத்து மேலே கொட்டி தற்காலிக ஏற்பாடு செய்தார்கள். அப்படி செய்யப்பட்டாலும், நிரந்தரப் பலன் கிடைக்கின்ற வகையில், இரு பக்கங்களிலும் ரிவட்மெண்டு போட வேண்டும்.

அதைப்போல பாதைகளைச் சரியான முறையில் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிகொண்டா பாலாற்றில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்று கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. அதைக் கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல காட்பாடி இரயில் நிலையத்தில் ரயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்று சொல்லி அரசு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்தாலும், இன்னும் அது கட்டப்படவில்லை. ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்கள் அந்தப் பகுதியில் செல்வதால், அந்த ரயில்வே மேம்பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல, பாசன வாய்க்கால்களை கட்டுவதற்காக ரூ. 8 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாசன வாய்க்கால்களைப் பழுது பார்க்கிற நேரத்தில், இரண்டு கரைகளையும் பலப்படுத்தவேண்டும். மதுரையிலே பெய்த மழையால், வைகையிலே தடுப்புச் சுவர்கள் இல்லாத காரணத்தினால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தஞ்சையிலும், திருச்சியிலும், காவிரியின் இரண்டு கரைகளையும் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இந்தப் பாசன வசதிகளைப் பொறுத்தமட்டில், எங்கள் மாவட்டத்தில் குறிப்பாக இந்த அரசு ஏற்பட்ட பின்னர், கடந்த 7 ஆண்டுகளாக எந்தவித பாசனத் திட்டங்களையும் நிறைவேற்றவில்லை. வடாற்காடு மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதோ என்ற அச்சம் கூட எனக்கு ஏற்படுகிறது. எங்கள் மாவட்டத்தில் நீண்டகாலமாக மோதனாறு, ஆண்டியப்பனூர், ராஜாதோப்பு, வத்ரப்பள்ளி போன்றவைகளில் அணைகளைக் கட்டவேண்டிய நிலையிருக்கிறது. அவைகளை உடனடியாக கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 மார்ச் 27] [திரு. கே. ஆர். சுந்தரம்]

திருப்பத்தூர்ப் பகுதியில், இலகம்பாறை அணை கட்ட வேண்டுமென்று நீண்ட காலப் பரிசீலனையில் இருக்கிறது. தஞ்சைக்கு அடுத்தபடியாக உணவு உற்பத்தியில் சிறந்திருப்பது எங்கள் மாவட்டம். அங்கே நிலத்தடி நீரையே நம்பியிருக்கிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட வறட்சியால் அந்தப் பகுதிகளில் வெகுவான பாதிப்பு ஏற்பட்டது. அங்கே நிலத்தடி நீரைப் பெருக்கி, நீர்க் கசிவுக் குட்டைகளை அமைப்பது போன்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கருணை அடிப்படையில், மக்களுக்கு உதவி செய்வதற்காக ரூ. 15.26 கோடி கேட்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பள்ளமான இடங்களிலே வசிக்கின்ற மக்களுக்கு மேடான இடங்களில் வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய இடங்களைத் தேர்ந்தெடுத்து, இலவசமாக அவர்களுக்கு வீடுகளைத் கட்டித் தரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நகராட்சிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளில் உள்ள ரோடுகளைப் பராமரிக்கும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் குறிப்பிலே இருக்கிறது.. இதர வேலைகளைச் செய்வதற்கும் நிதி ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி குடியாத்தத்தைப் பொறுத்த வரையில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ரோடுகளைப் பராமரிப்பதற்காக, ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், இடையிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. இதர நகராட்சிகளின் ரோடுகளைப் பராமரிப்பதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போல கல்வியைப் பொறுத்த வரையில், மாணவர்களுக்கு அளிப்பதற்கு முக்கிய முயற்சி எடுத்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அண்ணா போக்குவரத்துக் கழகத்திலும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலும், மாணவர்கள் செல்வதற்கு இலவசமாக மான்யத் தொகை அளிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோல மாநிலம் முழுவதும் இருக்கிற அரசுப் போக்குவரத்திலே அந்த மாணவர்கள் செல்வதற்கு மானியத் தொகை அளிக்க வேண்டும். ஏழை மாணவர்கள், உயர்நிலைப் பள்ளி, கல்லூரி போன்றவைகளுக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய காரணத்தினால், அவதிப்படுகிறார்கள். போதிய ஹாஸ்டல் வசதி இல்லாத காரணத்தினால், அவர்கள் வீட்டிலிருந்து செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, எப்படி அண்ணா போக்குவரத்து, பல்லவன் போக்குவரத்துக் கழகங்களிலே உதவி தரப்படுகிறதோ; அதுபோலத் அரசுத் துறையிலே உள்ள அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் மானியம் கொடுத்து, மாணவர்கள் செல்வதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1984 மார்ச் 27

கல்விக் கூடங்களைப் பொறுத்த வரையில், உயர்நிலைப்பள்ளி, ஆரம்பப்பள்ளி, ஆகியவைகள் போதிய கட்டிட வசதி இல்லாமலும், ஹாஸ்டல் வசதி இல்லாமலும் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் அந்த வசதிகளைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குடியாத்தம் நகராட்சியில் மேல்நிலைப் பள்ளிக்கு போதிய நிதி வசதி இல்லாத காரணத்தினால், ஆசிரியர்களுக்கு முறையான சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. அரசே குடியாத்தம் மேல்நிலைப்பள்ளியை ஏற்க வேண்டும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு ரிபேட் அளிப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கைத்தறி நெசவாளர்களுக்கு இதுவரை ரிபேட் கொடுக்கப்படவில்லை.

(முற்பகல் 11.50)

அதுமட்டுமல்ல. ஆரம்ப கைத்தறிச் சங்கங்கள் இடத்திலேயிருந்து கோ-ஆப்டெக்ஸ் இன்றைக்கு உற்பத்தி செய்கின்ற சரக்குகளை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு காலாகாலத்தில் பணம் கொடுக்காத காரணத்தால் நூற்றுக்கணக்கான கைத்தறி கூட்டுறவுச்சங்கங்கள் தொழிலை நடத்த முடியாமல் உற்பத்தியைச் செய்ய முடியாமல், கூலி கொடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, காலாகாலத்தில் ரிபேட் தொகையை கோ-ஆப்டெக்ஸ் அந்த பணத்தை உடனடியாக அவர்களுக்கு வழங்க வேண்டும். கோ-ஆப்டெக்ஸ் கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்து வாங்கி அவைகளை விற்பனை செய்கின்ற நேரத்தில் 35 சதவீதம் லாபம் வைத்து விற்பதாகத் தெரிகிறது. அந்த லாப வீதத்தைக் குறைத்தால்தான் மக்களுக்குக் குறைந்த விலையில் துணிகள் கிடைக்கும். விற்பனையை அதிகப்படுத்த முடியும். ஆகவே, அந்த முறையிலே லாப சதவீதத்தைக் குறைத்து, தரமான துணிகள் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்ய வேண்டும். 4 முழ வேஷ்டி, 8 முழ வேஷ்டி, சேலைகள் மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு வேண்டிய சாயப் பொருள்களை மலிவு விலையில் வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நவீன டிசைன்கள் உற்பத்தி செய்து மக்களைக் கவருகின்ற வகையில், அவைகள் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அதைப் போலவே, அதிகப்படியான நெசவுத் தொழிலாளர்களை கூட்டுறவுக்கு உள்ளே கொண்டுவர வேண்டும். சென்ற கூட்டத்திலே கூட சொன்னார்கள். 25 ஆயிரம் நெசவாளர்கள் கூட்டுறவுக்குள்ளே கொண்டு வரப்படுவார்கள் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் இந்திரா நகர் கூட்டு



1984 மார்ச் 27] [திரு. கே. ஆர். சுந்தரம்]

றவுச் சங்கம் அமைப்பதற்கு அந்தக் கைத்தறியாளர்கள் கேட்டு இருக்கிறார்கள். எனவே, அங்கே சங்கம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை மாநிலம் முழுவதும் அமுல்படுத்த வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களே அந்தக் குறைந்தபட்சக் கூலியை அமுல்படுத்தாமல் இருக்கிறார்கள். தனியார் ஜவுளி உற்பத்தியாளர்கள்கூட, அந்தக் குறைந்தபட்சக் கூலியை கொடுக்கவில்லை. எனவே, கைத்தறி நெசவாளர்கள் பாதுகாப்பிற்காகக் கொண்டு வரப்படும் சட்டம், இன்றைக்கு உயர்நீதி மன்றத்திலே அதற்கு தடை வாங்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கை அரசு சரியான முறையில் நடத்துவதற்கு முயற்சிக்கவில்லை. சரியான வக்கீல்களை அமைக்கவில்லை என்ற புகார் இருக்கிறது. எனவே, அந்த வழக்கை துரிதமாக நடத்தி, இந்தச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு வழிவகைகளைக் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புறத் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கு வேண்டிய பல திட்டங்களை அரசாங்கம் இன்றைக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அவைகளின் மூலமாக கிராம மக்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கிடைக்கின்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நீர்த் தேக்கக் குட்டைகள், இணைப்புச் சாலைகள் அந்தந்த மக்களிடத்திலே ஒப்படைக்க வேண்டும் என்ற முறையிலே செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யபடுகிறது. அந்த இடத்திலே வேலை செய்யும் ஊழியர்களுக்கு 150 ரூபாய், 60 ரூபாய், 30 ரூபாய் என்று சம்பளம் இருக்கிறது. அந்த ஊதியத்தை உயர்த்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தனியார் பள்ளிகளிலே இந்தச் சத்துணவுத் திட்டத்தை, பள்ளி விடுமுறை நாட்களிலே போடுவதில்லை என்ற ஒரு புகார் இருக்கிறது. எனவே, இதைப் பரிசீலித்து, அந்த மாணவர்களுக்கு விடுமுறை நாட்களிலேயும், உணவு கிடைக்கக் கூடிய முறையில் செய்ய வேண்டும்.

கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 20 வீடுகள் கட்ட அரசு அனுமதி அளித்திருப்பதாகத் தெரிகிறது. மேலும் அதிகப்படியான வீடுகளைக் கட்டுவதற்கும், சத்துணவு மையங்களைக் கட்டுவதற்கும், பள்ளிகளை ரிப்பேர் செய்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அடுத்து மாநிலம் முழுவதும் பார்த்தால், இன்றைக்கு விவசாயிகள் நெல்லை அடிப்பதற்கு போதிய களம் இல்லாத காரணத்தால், ரோடுகளில் நெல்லை அடிக்கிறார்கள். அதனால் அதிக

மான அளவில் ஆக்சிடென்ட்டுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவர்கள் ரோடுகளில் வைக்கோல், நெல்லைப் போடுகிறார்கள், போதிய களம் இல்லாததால். எனவே, தேவையான களம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று ஆழ் குழாய்க் கிணறுகளைப போடுகின்ற கருவிகளை அரசாங்கமே வாங்க வேண்டும். வறட்சிக் காலத்திலே தனியார்கள் அதை கான்ட்ராக்ட்டுக்கு விட்டு நிறைய லாபம் சம்பாதிக்கிறார்கள். குடிநீர் வடிகால் வாரியம் போன்றவைகள் தாங்களாகவே அந்தக் கருவிகளை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கப்பல் போக்குவரத்தை அரசே நடத்துகிறார்கள். அவைகளை கரை ஓரங்களில் வியாபாரத்திற்கும், மக்களுடைய போக்குவரத்திற்கும் பயன்படுத்துகிற வகையில் அதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு விவசாயத்திற்கு வேண்டிய கடன் அளிப்பதற்கு உதவி செய்வதாக சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு உள்ள கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும். புதிய கடன்கள் செய்து தரவேண்டும்.

தன்னிறைவுத் திட்டத்தில் எல்லா நகராட்சிகளையும் எடுக்க வேண்டும். இந்தத் திட்டத்தின் மூலமாகத்தான் நகராட்சிகள் இன்றைக்கு வளம் பெற முடியும். ஆகவே, குடியாத்தம் நகராட்சி யையும் இந்தத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்.

சாராய உற்பத்தியையும், அந்நிய மது வகைகள் உற்பத்தி யையும் அரசே ஆரம்பிக்கிற முறையிலே, தொழிற்சாலைகளை ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வைத்திய வசதிகளைப் பெருக்க மாவட்டங்கள் தோறும், வட்டங்கள்தோறும், அவைகளை அதிகப்படுத்த வேண்டும். 10, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே அமைக்கப்பட்ட வைத்திய சாலைகள் அவைகள். இப்போது மக்கள் தொகை பெருக்கத்தின் காரணமாக போதியதாக இல்லை. எனவே, அவைகளை விஸ் தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, ஜவுளி தொழில் வளர்ச்சிக்காவும் மானியம் கேட்கப்படுகிறது. டான்சியிலே 50-க்கும் மேற்பட்ட தொழிற் சாலைகள் உள்ளன. அவைகளில் 15 தொழிற்சாலைகள் மூடப் படுகின்ற நிலைமை இருக்கிறது. அவைகளை தொடர்ந்து நடத்தக்கூடிய முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்



அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும்போது, 5 ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் ஓய்வு பெறு கின்றபோது, முன்கூட்டியோ, அல்லது உடல்நலக் குறைவுக் காரணமாக ஓய்வு பெற்றாலோ, அரசாங்க மருத்துவர்கள் சான் றிதழ் வழங்கினால், அவர்களுக்கும் ஓய்வு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தம் வட்டத்தை தனி யாகப் பிரித்து, காட்பாடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி வட்டத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அதேபோல, பீடித் தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு 6 நாள் வேலை; ஃபால்பேக் வேஜஸ் மற்றும் பிராவிடண்ட் நிதி சட்டம், வீட்டு வசதி ஏற்பாடு முதலியவற்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீதித் துறையைப் பொறுத்த வரையில் குடியாத்தம் நகரில், (மணியடிக்கப்பெற்றது) முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்த வேண் டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த துணை மதிப்பீடுகளை வரவேற்று நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு சிறப்பாக பல திட்டங்களைத் தீட்டி அவைகளைச் செயல் படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்கள் எல்லாம் அரசு எண்ணிய படி நிறைவேற்றுவதற்கு முடியாத சில சூழ்நிலைகள் மத்திய அரசால் ஏற்படுத்தப்படுகிறது என்ற என்னுடைய அந்த வருத் தத்தை, எண்ணத்தை முதலிலே சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

குறிப்பாக சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆதி திராவிட பழங்குடி மக்களுக்காக எத்தனையோ சிறப்புத் திட் டங்களை தீட்டி வருகிறது நமது அரசு. அவர்களுக்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சாலைகள் அமைத்துக் கொடுக்கவும், மின் இணைப்பு ஏற்படுத்தவும், வீடுகள் கட்டிக் கொடுக்கவும், சுய வேலை வாய்ப்பு அளிப்பதும் போன்ற திட் டங்களை நமது அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. அரிசனங்கள் வாழ்கின்ற பகுதியில் அவர்களுக்கு பள்ளிக்கூடங்களை கட்டிக் கொடுப்பதும், குழந்தைகளுக்கு காப்பகங்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் போன்ற சிறப்பான திட்டங்களையும் நம்முடைய அரசு செயல்படுத்தி வருகிறது. இது வரையில் வனத்துறை சம்பந்தப்பட்ட எல்லாமே தமிழக அரசினுடைய நிர்வாகத்

திலே இருந்து வந்தது. ஆனால் மத்திய அரசின் அனுமதியைப் பெற்றுத்தான், வனத்துறையிலே எந்தவித காரியங்களையும் செய்ய முடியும், வனத்துறை நிலங்களைப் பயன்படுத்த முடியும் என்ற வகையில்? இப்போது அவர்கள் ஒரு சட்டத்தைப் போட்டதன் காரணமாக, இன்றைய தினம் நம்முடைய முன்னேற்றப் பணிகள், வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே முதலிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே கூட, பன்னாரி மாரியம்மன் திருக்கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அது வனத்துறையின் இடத்திற்கு அருகிலே இருக்கிறது. நாம் அங்கே ஒரு பயணியர் விடுதி கட்டுவதற்காக 4 ஆண்டுகளுக்கு முன்னால் திட்டமிட்டு, அதற்காக 5 சென்ட் நிலத்தை ஒதுக்கி, அதிலே கட்டுவதற்காக அனுமதி கேட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி, இன்னமும் அது வராத சூழ்நிலையில் இருந்துக் கொண்டிருக்கிறது. 5 லட்சம் ரூபாயிலே 5 ஆண்டுகளுக்கு முன்னாலே கட்ட வேண்டிய அந்தக் கட்டிடம் இன்னும் நமக்கு அனுமதி கிடைக்காமல் இருக்கிற சூழ்நிலையின் காரணமாக, அந்தப் பகுதியின் முன்னேற்றமும் பாதிக்கப்படுகிறது ; நமக்குத் தேவையான கட்டிடம் கட்டுவதற்கான செலவுகளும் அதிகரிக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல நீர்ப்பாசன திட்டங்கள், சத்தியமங்கலம் தொகுதி மலை அடிவாரத்தை ஒட்டியிருக்கிற தொகுதியாக இருக்கிற காரணத்தால், மழை நாட்களில அங்கே கட்டற்ற வெள்ளம் பெருக்கெடுத்தோடி, வீணாக அந்த தண்ணீர் கடலிலே கலக்கிற சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட வெள்ளத்தைத் தடுத்து விவசாயிகள் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துகிற முறையில் திட்டங்களை நம்முடைய அரசாங்கம், தமிழக அரசு, ஆய்வு செய்திருக்கிறது. அப்படி ஆய்வு செய்கிறபோது, வனத்துறை சம்பந்தப்பட்ட நிலம் அதிலே கொஞ்சம் வருகிற காரணத்தால், மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியை பெற வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டது.

அதேபோல, என்னுடைய தொகுதியில் போலிக்குளம் திட்டம் என்ற ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது. அந்தப் போலிக்குளத்திற்கு அருகாமையிலே வாழ்கிற அந்த மக்கள், பல ஏக்கர் வளமான நிலங்களை, பவானி சாகர் அணைக்காக, அந்த அணையைக் கட்டுவதற்காக, அந்த நிலங்கள், பவானி சாகர் அணைப் பகுதியில் வருகிறது என்பதற்காக, விட்டுவிட்டு வேறு இடத்திற்கு குடியேறியவர்கள். அந்த மக்களுக்கு தண்ணீர் வழங்குகிற திட்டமாக இந்தப் போலிக்குளம் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு 60 ஏக்கர் நிலம் வனத்துறையினுடைய நிலமாக இருக்கிற காரணத்தால், மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்று சொல்லி, அது இன்னும் கிடைக்கப் பெறாத சூழ்நிலையில் அப்படியே இருக்கிறது. 24 லட்சம் ரூபாய் செலவில் முதலிலே போடப்பட்ட அந்த திட்டம் இன்றைய தினம் 90 லட்சம் ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்து, இன்னமும் அந்த அனுமதி கிடைக்காத ஒரு சூழ்நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது.





அதேபோலத்தான் கணக்கன்பாளையத்திலே ஒரு திட்டமும், உய்யம்பாளையனூர் பெரும்பள்ளத் திட்டம் என்று ஒரு திட்டமும் வனப் பகுதிக்கு அருகிலே இருக்கிற காரணத்தால், அந்தப் பகுதி வாழ் மக்களின் முன்னேற்றத்திற்கு தடையாக இந்த மத்திய அரசினுடைய சட்டம் இருக்கிறது என்பதைத் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

தமிழக அரசு அதிகாரிகளை வைத்து வனத்துறையைப் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறது. ஆனால் மத்தியிலிருந்து ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டு ஏதோ நாட்டாண்மை உத்தியோகம் பார்த்து அதை பார்க்கவேண்டுமென்று நினைப்பது ஒரு தவறான கொள்கை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே 1980 ஆம் ஆண்டு தீயணைப்பு நிலையம் அமைப்பதற்காக பரிசீலனை செய்யப்படுகிறது என்று அரசு அறிவித்திருக்கிறது. 5 லட்சம் ரூபாயிலே மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பொதுப் பணித்துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு அதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

வட்ட மருத்துவமனை ஆங்கிலேயன் காலத்திலிருந்து மூன்றே மூன்று படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக சத்தியமங்கலத்திலே இருந்தது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சியிலே இன்றைய தினம் 44 லட்சம் ரூபாயிலே மருத்துவ மனை அனுமதிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பிட்ட காலத்திலே வேலைகள் முடிகிற அளவுக்கு வேலைகள் வேகமாக நடைபெறுகின்றன. அந்த அளவுக்கு இந்த ஆண்டு அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் பவானியாற்றுப் பாலம் 68 லட்சம் ரூபாயிலே பணிகள் துவங்கி நடைபெற்று வருகின்றன. அதற்கும் தேவையான நிதியை ஒதுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். ரங்கசாமி] [1984 மார்ச் 27

தாளவாடி மலைப் பகுதியிலே சுமார் 22 கிலோ மீட்டர் தூரம் அடர்ந்த காடுகளிலேவனப் பகுதியிலே வாழ்கிற மக்கள் நடந்துவருகிற சூழ்நிலை இருந்தது. தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக 22 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார் சாலை இன்றைக்கு போடப்பட்டு வருகிறது. தன்னிறைவுத் திட்டமா அது இருக்கிற இடம் தெரியவில்லை என்று கேலி பேசுகின்ற எதிர்க்கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நயன் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதிக்கு அவர்கள் வருவார்களானால், 22 கிலோமீட்டர் தார் சாலையை நான் அழைத்துச் சென்று காட்டத் தயாராக இருக்கிறேன். அந்த அளவுக்குத்தன்னிறைவுத் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அதைப் போலவே, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலே வனப் பகுதியான கடம்பூரிலிருந்து அணைக்கரை வரை 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு தார் சாலை அமைத்துவிட்டால் தாளவாடி யிலிருந்து சத்தியமங்கலத்திற்கும், சத்தியமங்கலத்திலிருந்து தாளவாடிக்கும் வனப் பகுதியிலே பேருந்துகள் செல்கிற வாய்ப்புகள் ஏற்படும். ஆகவே, கடம்பூரிலிருந்து பசினாபுரம் வரையிலே பசினாபுரத்திலிருந்து அணைக்கரை வரையிலே 15 கிலோமீட்டர் தூரத்திற்கு தார்சாலையை சத்தியமங்கலத்திற்கு வனப்பகுதி என்ற காரணத்தினால் 2 ஆம் நிலையாக இருக்கிற காரணத் தினால் அதற்குப் நிதி ஒதுக்கி அந்தச் சாலை முழுமையும் ஏற்படுத்தித் தர வேண்டும். அதை அந்த மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடம்பூர் வரை இன்றைய தினம் 57 லட்சம் ரூபாயில் என்.எச். ரோடு போடப்படுகிறது. அந்த ரோடை மார்க்கம்பாளையம் வரையில் இன்னும் 10 கிலோ மீட்டர் நீட்டித்தால் அது கர் நாடக எல்லையை அடையும். அதன் காரணத்தினால் நம்மு டைய மாநிலமும் கர்நாடக மாநிலமும் கொல்லேகாலம் பகுதி யும் இணைக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இங்கே பேசியபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற திட்டங்களால் யாருக்கும் வேலை இல்லை நாடோடி மன்னன் திரைப்படத்தில் வேலை கொடு இல்லையேல் சோறு போடு என்று சொன்னீர்களே; முதலமைச்சர் இன்றைய தினம் சோறு கொடுக்கிறார்களா என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். 5, 6 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்தின் சுவர்களிலே நீங்கள் பார்த்தீர்களானால் வேலை கொடு, இல்லையேல் சோறு போடு என்ற வாசகத்தைப் படித்திருப்பீர்கள். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு வேலையும் உண்டு, சோறும் உண்டு என்ற வகையிலே ஊரக திட்டத்தின் மூலமாக



1984 மார்ச் 27] [திரு. ஆர். ரங்கசாமி]

பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து கிராமப் புறங் ளிலே சாலைகள் போடுவதற்கும் பள்ளிக் கூடங்களுக்காக கட்டடங்கள் கட்டுவதற்கும் மக்கள் நாள்தோறும் வேலை வாய்ப் பைப் பெறுகின்ற வகையிலே செயல்பட்டு வருகிறார்கள். அவர் கள் பேசியது எல்லாம் சத்துணவுத் திட்டத்திற்கு நன்கொடை வசூல் செய்தீர்களே, அந்த நன்கொடைக்கு முறையாக கணக்கு வைத்திருக்கிறீர்களா என்று பல முறைகள் இந்த சட்டமன்றப் பேரவையிலேயே எழுப்பியிருக்கிறார்கள். அதிகாரிகள் வசூல் செய்வது முதலமைச்சர் நிவாரண நிதியில் சேர்க்கப்படுகிறதா என்று சந்தேகப்படுகிறவர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.

உங்கள் ஆட்சிக் காலத்திலே பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி என்ற ஒரு நிதியை ஒரு ரூபாய்க்கு ஒரு அட்டையை அதிலே சீரியல் நம்பர் இல்லாமல் எல்லோரிடத்திலும் பொது மக்களிடத் திலும் கட்சிக்காரர்களிடத்திலும் சீரியல் நம்பர் இல்லாமல் * * நீங்கள் முறையாக கணக்கு வைத்திருக்கிற நம்முடைய புரட்சித் தலைவரின் ஆட்சியைப் பார்த்து இது போன்ற அவதூறுகளைக் கிளப்புவது சரிதானா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : சீரியல் நம்பர் இல்லாமல்

* * * * *

என்று சொன்னார்கள். அதுவும் ரிக்கார்டைக் கையிலே வைத்து கொண்டு தங்களிடம் அனுமதிவாங்கித்தான் பேச வேண்டும். அவர் பேசுவதற்கு ரிக்கார்ட் இருக்கிறதா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : அவர் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு அப்படி நடந்ததாக சொல்கிறார் * * என்ற வார்த்தை வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

திரு. ப. பொன்னுரங்கம் : பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்திற்கு * * * * * தி.மு.க. ஆட்சிக் காலத்தில் * * * என்று சொல்லியிருக்கிறார்கள். நம்பர் இல்லாத அட்டை ஒன்று காட்டச் சொல்லுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[1984 மார்ச் 27

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, லட்சக்கணக்கான டிக்கட்டுகள் அடிக்கிற போது சிலபல டிக்கட்டிலே நம்பர் விழாமல் இயற்கையாகப் போவதும் 2, 3 வகைகளில் நம்பர் விழுவது என்பது இயற்கை யாக எல்லா இடங்களிலும் எல்லா வகைகளிலும் உண்டு அது சாதாரணமாக பேருந்து டிக்கட்டுகள் அச்சடிக்கும் போது அப்படி பட்ட தகராறுகள் ஏற்படுகின்றன. ஆனால் எதிர்பாராத வகை யில் சில பல வகையில் எல்லா நிலைகளிலும் ஏற்படுவதுண்டு. ** ** ** ** **

அந்தச் சொற்றொடர் தேவையில்லை.
** ** **

என்பதை எடுத்து விட்டு இப்படிப்பட்ட நிலைமைகள் எப்போதும் இருந்திருக்கின்றன என்று பொதுத் தன்மைகளை மட்டும் வைத் துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், : ** என்பது நீக்கப்படுகிறது.

திரு. ஆர். ரங்கசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஆதாரம இல்லாத குற்றச்சாட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அடுக்கடுக்காக எடுத்துவைத்தார்கள். அதனால் தான் உண்மையான சம்பவத்தை சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் ஏதோ கிண்டலாகச் சொன்னார், அறுக்க முடியாதவர்களுக்கு 5, 6 அரிவாள்களா என்று. அறுக்க முடியாதவர்கள் அவர்கள் என்பதற்கு நான் ஒரு உதாரணத்தைச் சொல்லவிரும்புகிறேன்.

சத்தியமங்கலத்தில் உள்ள சிக்கரசம்பாளையத்தில் 1974-இல் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்த திரு அன்பழகன் அங்கே ஒரு பாலம் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டினார். தேதி யும் அவருடைய பெயரும் அங்கே அப்படியே இருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவர் வந்ததற்குப் பிறகுதான் தன்னிறை வுத் திட்டத்தின் மூலமாக அதற்கு ஒரு லட்சம் ரூபாயை ஒதுக்கி அந்தப் பாலத்தை கட்டி முடித்தோம். இந்த நாட்டு மக்கள் புரிந்து கொள்ளட்டும் அறுக்க முடியாதவர்கள் யார் என்பதை. அவர்கள் அறிந்திருக்கின்ற காரணத்தினால்தான் ஆட்சியிலிருந்து மக்கள் இறக்கினார்கள் என்பதை தெரிவித்துக் கொண்டு இந்த துணை மானியக் கோரிக்கைகளை வரவேற்று முடித்துக் கொள் கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கிற துணை பட்ஜெட்டின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



1984 மார்ச் 27] [திரு. ஏ. டி. கருப்பையா]

(பிற்பகல் 12-10)

1983-84 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகளை மாமன்றத்தில் வைத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

''1983-84 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவு திட்ட மதிப்பீடு களில், எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும், வறட்சி, வெள்ளம் போன்ற தவிர்க்க முடியாத சூழ் நிலைகள் உருவானதாலும், தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சிலவற்றில் அதிகச் செலவு ஏற்பட்டுள்ளதாலும், மக்களின் நலனுக்காகச் சில புதிய திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளதாலும், இந்தத் துணை மதிப்பீடுகளை தற்பொழுது அவைமுன் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது '' என்று இந்த பட்ஜெட்டிலே மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் குறிப்பிட்டி ருக்கிறார்கள். மேலும், ''இவற்றில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தம் ரூ. 1,130·10 கோடியில், ரூ. 220.24 கோடி வருவாய்க் கணக் கிலும், ரூ. 909·86 கோடி மூலதன கடன் கணக்கிலும் வரு கின்றன'' என்றும் சொல்லியிருக்கிறார்கள். மேலும், அதிலே, ''தமிழ்நாட்டின் வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஏற் பட்ட கடும் வறட்சியிலிருந்து இம்மாநிலம் விடுபட்டு வரும் நிலை யில், டிசம்பர் திங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தாலும், பிப்ரவரி, மார்ச்சு திங்களில் பெய்த பெருமழை காரணமாகவும் இம்மாநிலம் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டது. இந்நிலையைச் சமாளிக்க மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது. வெள்ளத் துயர்தணிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு, அரசு ஏற்கெனவே ரூ. 37·54 கோடி செல விட அனுமதி வழங்கியுள்ளது. இத்துடன் மேற்கொண்டும் ரூ. 7.64 கோடி செலவிட அரசு இப்பொழுது அனுமதி வழங்கி யுள்ளது '' என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் சாலைகளை யும் பாலங்களையும் பழுது பார்ப்பதற்காக ரூ. 13·60 கோடியும், பாசன வாயில்களைப் பழுது பார்ப்பதற்காக ரூ. 8,00 கோடி யும் கேட்கப்பட்டிருக்கிறது.

வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் சாதாரணமான ஏழை எளிய, அன்றாடம் கூலி வேலை செய்யும் விவசாயிகளும், உழைப்பவர்களும்தான் என்பதை இந்த நேரத்தில் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் இன்றைக்கு வீட்டையிழந்து, ஆடு மாடுகளை இழந்து, பயிர் பச்சைகளை இழந்து, நிர்க்கதியாக இருக்கின்ற சூழ்நிலையில் அவர்களுடைய புனர்வாழ்வுக்காக அளிக்கும் வகையில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற ரூ. 15·26 கோடி என்பது மிகவும் குறைவானது. அதை அதிகப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைகளும், பாலங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன; நஞ்சை, புஞ்சைகளெல்லாம் இன்றைக்கு அழிந்து போயிருக்கின்றன. இந்த நேரத்திலே அதிகமான நிதியை ஒதுக்கி, வறட்சியாலும், வெள்ளத்தினாலும், மழையினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சிப் பகுதியில் உள்ள மணப்பாறை நகராட்சியில் வசிக்கின்ற மக்களுக்குத் தொடர்ந்து குடிநீர்ப் பஞ்சம் உள்ளது. குளித்தலையிலிருந்து காவிரியாற்றின் மூலமாக அங்கே குடிதண்ணீர் கொண்டு வந்து கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியாகிய வால்பாறை தொகுதியில், மருத்துவ மனைகள் இருக்கின்றன. வேட்டைக்காரன்புதூர், கோட்டூர் மலையாண்டிப்பட்டணம், ஆழியாறு ஆகிய இடங்களில் மருத்துவமனைகள இருக்கின்றன. அங்கே வருகின்ற நோயாளிகளுக்கு முறையாக மருத்துவம் செய்வது என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. அங்கேயுள்ள மருத்துவ அதிகாரிகள் தட்டிக் கழிக்கிறார்கள். அதனால் பெரும்பாலான மக்கள் தனியார் மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெற ஏராளமான பணத்தைக் கொடுத்து மருத்துவம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்கு இந்த நேரத்தில் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான கீழ்ப் பகுதியில் அர்த்தநாரீஸ்வரர்பாளையம், பருத்தியூர், பெத்தநாயக்கனூர், சோமந்துார், சித்துார், வேடசந்துார், ரமணிமுதலிபுதுார், பொங்கலியூர் அங்கலக்குறிச்சி, புழிச் சின்னாம்பாளையம் ஆகிய ஊர்களில் எல்லாம் சுடுகாடு என்பதே கிடையாது. நானும் பல தடவை டி.டி.சி. மீட்டிங்கிலே சொல்லிப் பார்த்து விட்டேன். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாகக் கட்டப்பட்ட பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்கள் இல்லை. ஒன்றிரண்டு பேர் தான் ஆசிரியர்கள் அங்கே பள்ளிகளுக்கு வந்து பிள்ளைகளுக்கு கல்வி கற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். போதுமான ஆசிரியர்கள் இல்லை. அதனால் பல நேரங்களில் பிள்ளைகள் கூட சரியாக வருவது இல்லை. அங்கே போதிய பெஞ்சு, நாற்காலி கூட இல்லை. ஆகவே இந்த நிலைமைகளைப் போக்க வேண்டும். போதிய ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

சத்துணவுக் கூடத்திற்காக பல ஊர்களில் கட்டிடமே இல்லை. பல கிராமங்களில் கோயில்களைச் சத்துணவுக் கூடமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன்காரணமாக பக்தர்கள் வேதனைப் படுகிறார்கள். எனவே கிராமங்களிலே சத்துணவு மையங்களைக் கட்டி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். வேட்டைக்காரன் புதூரிலே இரண்டு கோயில் களிலே தான் சத்துணவுக்கூடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.





காளியாபுரம், அரிசனக் குடியிருப்பு மற்றும் காந்தி நகரிலே தீ பிடித்து எரிந்து கிட்டத்தட்ட 50, 60 குடிசைகள் நாசமாகி இருக்கின்றன. காளியாபுரம் பகுதியிலே இருப்பது அரிசன மக்களின் குடியிருப்பு. அந்த மக்கள் எல்லாம் வீடு இல்லாமல் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசு உரிய நிதியினை வழங்கிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறையிலே இருக்கக்கூடிய நகரியக் குழுவைக் கலைக்க வேண்டும். வால்பாறை நகரியக் குழு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்டது. அது தி.மு.க. ஆட்சியிலே இருந்து, இப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் இருக்கின்றது. ஜனநாயகத்தை நாங்கள்தான் பாதுகாக்கிறோம். எங்கள் கையில்தான் ஜனநாயகமே இருக்கின்றது என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லிக் கொண்டிருக்கின்றதே, அப்படியானால் உடனடியாக அந்த நகரியக் குழுவினைக் கலைத்துவிட்டு உடனடியாக நகரசபையாக ஆக்கி தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வால்பாறையிலே சுப்பிரமணியர் கோயிலிலே உள்ள கல்யாண மண்டபத்தில் நீதிமன்றம் நடக்கிறது. அங்கே குற்றவாளிகளும், பல்வேறு வகையான சமூக விரோதிகளும் கொண்டு வரப்பட்டு, விசாரிக்கப்படுகின்ற நிலைமை கோயிலுக்குள்ளே இருக்கின்றது. வாரம் ஒரு முறை அந்தக் கோயில் கல்யாண மண்டபத்திலே நீதிமன்றம் நடக்கின்றது. ஆகவே அந்தக் கல்யாண மண்டபத்திலே நடக்காமல் வேறு ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்து, அங்கே தினமும் கோர்ட் நடப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

வால்பாறை பகுதியில் ஆழியாறுக்கு அருகாமையில் குரங்கு அருவி என்ற அருமையான நீர்வீழ்ச்சி இருக்கின்றது. அந்த நீர் வீழ்ச்சியிலே குரங்குகள் எல்லாம் விளையாடுகின்றன. அந்த இடத்திற்கு அதிகாரிகள் எல்லாம் வந்து பார்வையிட்டார்கள். நிதி ஒதுக்கினார்கள். பிறகு அதை அப்படியே விட்டு விட்டார்கள். அப்படி கைவிட்டு விட்ட நிலைமையை மாற்றி மீண்டும் அந்தத் திட்டத்தைப் போட்டு குரங்கு அருவியை சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. டி. கருப்பையா] [1984 மார்ச் 27

தமிழ்நாடு முழுவதும் உள்ள தனியார் தேயிலைத் தோட்டங்களை சர்வே செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆயிரக்கணக்கான தேயிலைத் தோட்டங்களை அரசுக்குத் தெரியாமல் வைத்திருக்கிறார்கள். புறம்போக்கு நிலங்களில்கூட தேயிலை, காப்பி ஆகியவற்றை உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் உடனடியாக சர்வே செய்து, தமிழ்நாடு முழுவதும் எத்தனை ஏக்கர் நிலங்களில் அரசுக்குத் தெரியாமல் அவ்வாறு மறைத்து வைத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்படி மறைத்து வைத்திருக்கக்கூடியவர்கள் மீதும், தேயிலை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேயிலைத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 2½ இலட்சம் பேர் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கின்ற முதலாளிகள் சொந்தமாக மருத்துவ மனைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த மருத்துவ மனைகளிலே, இந்தப் பணியாளர்கள் சென்றால் அவர்களுக்குப் போதிய சிகிச்சை அளிப்பதில்லை. அங்கே போதிய

(பிற்பகல் 12-20)

மருந்து கிடையாது. லேடி டாக்டர்கள் கிடையாது. தொழிலாளிக்கு ஒரு நோய் ஏற்பட்டால் கோயம்புத்தூருக்குத் தள்ளி விடுகிறார்கள். இங்கு கஷ்டப்பட்டுக் கொண்டு திரும்பி வந்து விடுகிறார்கள். முறையாகக் கவனிக்கப்படுவதில்லை. ஆகவே, தோட்ட நிறுவனங்களுடைய மருத்துவ மனைகளை அரசாங்கம் கவனித்து, தவறுகளைக் களைந்தெறிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஒன்றிரண்டு குறிப்பிட்ட மருத்துவ மனைகளுடைய பெயரை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.. கோத்தாரி வாட்டர் பால்ஸ், வால்பாறை, தாகிசா மகாவீர் கம்பெனி பாரஸ்ட் கார்ப்பரேசன், மூடிஸ் பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷன், பெரிய கராமலை, ஜெயஸ்ரீ பிர்லா, சாலையார், இப்படிப்பட்ட கம்பெனிகள் மூலமாக நடத்தப்படுகிற மருத்துவ மனைகளிலே தொழிலாளர்களுக்கு ஒழுங்காக மருத்துவம் செய்யப்படவில்லை. மருந்துகளும் தரப்படவில்லை. அதை கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் வாழ்கிற, நெகமலை, டாப்ஸ்லிப், துண்டுக்காய் பகுதி, சேத்துமடை போன்ற பகுதிகளில் ரோடு வசதி கிடையாது. சுடுகாடு செல்ல பாதை கிடையாது. குடிநீர் கிடையாது. இதற்கெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும்போது ரூ. 5,000 வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. 30 வருஷங்கள் வேலை செய்து தானே வேலையிலிருந்து ஓய்வு பெற்றாலும் அல்லது உடல்



1984 மார்ச் 27] [திரு. ஏ. டி. கருப்பையா]

நிலைக் கோளாறு காரணமாக வேலை செய்வதற்குத் தகுதி யற்றவர் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கினாலும், அப்படிப் பட்ட அரசு ஊழியர்களுக்கும் ரூ. 5,000 வழங்குகின்ற வகையில் அரசு மறு பரிசீலனை செய்து ஆணையிட வேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். பாரதிதாசன் பல்கலைக் கழகம் என்ற பெயரிலே—நம்முடைய புரட்சிக் கவிஞர் அவர்கள் பெயரிலே—ஒரு பல்கலைக் கழகத்தை அமைத்து இரண்டு ஆண்டுக்காலம் ஆகிறது. இரண்டு ஆண்டு காலம் ஆகியும்கூட அதிலே தமிழுக்கென்று ஒரு துறை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்பது ரொம்பவும் வருந்தத்தக்க ஒன்றாகும்.

அது மட்டுமல்ல, அங்கேயிருக்கிற தமிழுக்கான போர்ட் ஆப் ஸ்டடீஸ் என்பது ஓராண்டுக் காலமாக கூடவே இல்லை. எந்த முடிவும் எடுக்க முடியாத நிலைமையிலே இருக்கிறது. இந்த அளவில் ஏப்ரல் 16 ஆம் தேதி அன்று அந்தப் பல்கலைக் கழகத் திலே தேர்வுகள் ஆரம்பமாக இருக்கின்றன. அந்தத் தேர்விலே தமிழில் இரண்டாவது ஆண்டு மாணவர்களுக்கு மாடல் வினாத் தாள் இன்னமும் வரவில்லை. பல்வேறு கல்லூரி முதல்வர்கள் பல்கலைக் கழகத்திற்கு எழுதிய பொழுது அந்தப் பதிவாளரிட மிருந்து ஒரு பதில் வந்திருக்கிறது.

In this connection, I am, by direction, to inform you that unless and otherwise specified, the question papers will be set on the same pattern as for the previous year.

என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே வேடிக்கை என்னவென்றால், இதற்கு முந்தைய ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வை அந்த மாணவர்கள் எழுதியிருக்கிறார்கள். இந்த ஆண்டு பாரதிதாசன் பல்கலைக் கழகத்திலே அந்த மாணவர்களுக்கான பாடத் திட்டங்கள் வேறு, சென்னைப் பல்கலைக் கழக மாதிரி வினாத் தாளை வைத்துக் கொண்டு அவர்கள் தேர்வு எழுத முடியாது என்பது கூட தெரிந்துக் கொள்ள முடியாத நிலைமை யிலே பல்கலைக் கழக நிர்வாகம் இருக்கிறது. சென்னைப் பல்கலைக் கழகத்திலே செமஸ்டர் முறையிலே தேர்வு நடக்கிறது. அதன்படி மாதிரி வினாத் தாள்கள் தயாரிக்கப்படுகின்றன. பாரதி தாசன் பல்கலைக் கழகத்திலே நான்-செமஸ்டர் முறையிலே தேர்வு நடக்கிறது. ஆகவே, ஏப்ரல் 16 ஆம் தேதி ஆரம்பிக்கப் பட இருக்கிற தேர்வுக்கு எந்த மாதிரி வினாக்கள் வரும் என்பது கூட தெரியாத நிலையிலே அந்தப் பல்கலைக் கழகத்திலே

ஆசிரியர்களும் மாணவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதிலே அரசு உடனடியாகத் தலையிட்டு இந்தக் குறையைப் போக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் வீணாகும் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உயர்நீதிமன்றத்திலே ஆயிரக்கணக்கான வழக்குகள் இன்னும் பைசல் ஆகாமல் இருக்கின்றன. போதுமான நீதிபதிகள் இல்லையென்பது குறை. 25 நீதிபதிகள் பதவிகளிலே கடந்த 1½ ஆண்டுக் காலமாக, 7 பதவிகள் இன்னமும் காலியாக இருக்கின்றன. எதனாலே இந்த நிலைமை என்பதை ஆராய்ந்தால் நீங்கள் அதிர்ச்சி அடைவீர்கள். தலைமை நீதிபதி சிபாரிசு செய்து, அதற்கு அமைச்சரவை ஒப்புதல் கொடுத்து, அது மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்படாமல் இன்னமும் அப்படியே இருக்கிறது. இது எந்த மட்டத்திலே அப்படியே வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவை அறிய வேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசிடமிருந்தும் உச்ச நீதிமன்றத்திலிருந்தும் ஏராளமான கடிதங்கள் அதை நினைவூட்டி அனுப்பப்பட்டும் கூட இன்னமும் அந்த 7 பதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்கான பெயர்களை மத்திய அரசிற்கு அனுப்பவில்லை. இதன் விளைவாக உயர் நீதிமன்றத்திலே ஒரு தேக்கநிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உடனடியாக அரசாங்கம் தலையிட்டு எந்த மட்டத்திலே இந்தப் பெயர்கள் டெல்லிக்கு அனுப்பாமல் இங்கே இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். அமைச்சரவை ஒப்புதலுக்குப்பின்னாலும் கூட அதைத் தடுத்து நிறுத்துகிறவர்கள் யார் என்று அறிய விரும்புகிறேன். அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

இன்னொன்றும் இந்த நீதித் துறையில் இருக்கிறது. கோர்ட் கட்டணங்களை குறைக்க வேண்டும் என்று நீண்ட காலமாக எல்லோரும் வற்புறுத்தி வருகிறோம். ஆனால் இதைப் பற்றி 5 ஆண்டுகளுக்கு முன்னாலே உயர்நீதி மன்றத்திலே ஒரு தீர்ப்பு கொடுத்தார்கள். அதை எதிர்த்து அரசாங்கம் உச்ச நீதிமன்றத்திற்குப் போய் இருக்கிறது. உச்ச நீதி மன்றத்தில் தீர்ப்பு வருகிற அந்த இடைக்காலத்தில் முன்பு போலவே அதிகமான கட்டணங்களை வசூலிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஆனால் உச்ச நீதிமன்றத்தில் இதற்கு எதிரான தீர்ப்பு வருமானால் இந்த இடைக் காலத்தில் அதிகமாக கட்டணம் கட்டியவர்களுக்கு அரசாங்கம் பணத்தைத் திருப்பிக் கொடுக்குமா? இதுபோன்ற சிக்கல்கள் வருகிற நிலையில், இதை அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வருகிற வரையில் குறைந்த கட்டணம் வாங்க வேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்,



அதைப்போல இன்னொரு முக்கியமான விஷயம். நம்முடைய அரசு குடும்ப நலத் திட்டத்தை அமல் நடத்துகிற முறையில் இருக்கிற ஒரு குறையை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். லெப்ரோஸ்கோப் முறையில் குடும்பக் கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை எல்லா இடங்களிலும் செய்வதற்கு திட்டமிட்டு செய்கிறோம். இந்த லெப்ரோஸ்கோப் முறையில் ஒரு டாக்டர் ஒரு நாளைக்கு 7, 8 மணி நேரம் வேலை செய்தால் 50 பேருக்கு அறுவை சிகிச்சை செய்ய முடியும். இரண்டு டாக்டர்கள் செய்தால் 100 பேருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய முடியும். நம்முடைய தமிழ்நாட்டில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் யாருக்கும் இந்த லேப்ரோஸ்கோப் முறையில் அறுவை சிகிச்சை செய்வதற்கு எந்தத் தகுதியும் இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன். பம்பாய் மாநிலத்திலிருந்து டாக்டர் இரானி என்பவர் இதற்காக அழைக்கப்படுகிறார். அவரோடு ஒரு உதவியாளரும் வருகிறார். அவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. டாக்டர் இரானி அறுவை சிகிச்சை செய்கிறார். ஒரு நாளைக்கு ஒரு டாக்டர் 50 பேருக்கு மேலே செய்ய முடியாது. ஆனால் இரானியும் அவருடைய உதவியாளரும் சேர்ந்து ஒரு நாளைக்கு 300 லிருந்து 500-க்கு மேலே அறுவை சிகிச்சைகளை செய்வதாகக் குற்றச்சாட்டு வந்திருக்கிறது. ஒரு அறுவை சிகிச்சைக்கு 25 ரூபாய் வீதம் அவர்களுக்கு அரசாங்கம் அளிக்கிறது. அப்படியானால் பல்லாயிரக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இதை தமிழ்நாட்டில் அரசுத் துறையில் இருக்கிற டாக்டர்கள் செய்ய முடியாதா? எதற்காக பம்பாயிலிருந்து டாக்டர்களை வரவழைக்க வேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, பல்வேறு மாநிலங்களிலிருந்து இங்கு வருகிறார்கள். நம்முடைய மாநிலத்திலிருந்து பல்வேறு மாநிலங்களுக்கும் செல்கிறார்கள். இதை ஒரு டீமாக இருந்து செய்கிறார்கள். டாக்டர் இரானியோடு நம்முடைய டாக்டர்களும் சிகிச்சை அளிக்கிறார்கள். இதில் ஒருவர் மட்டுமே ஆப்பரேஷன் செய்வது கிடையாது. ஒருவர் இன்சிஷன் போடுவார்கள்; லெப்ரோஸ்கோப் இண்ட்ரடியூஸ் செய்வதை இன்னொருவர் செய்வார்கள்; இப்படி ஒரு டீமாக அவர்கள் அதைச் செய்கிறார்கள். அவ்வளவு வேகம் தேவையில்லை என்று நாமும் சொல்லி இருக்கிறோம். இப்படி வேகமாகச் செய்வதில் எந்தவிதமான ஆபத்தும் ஏற்படவில்லை; இருந்தாலும் தவறான பிரச்சாரத்திற்கு இடம் கொடுக்கும் என்பதால் அது தேவையில்லை என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே அவர்கள் நல்லவகையில் அறுவை சிகிச்சையை செய்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த இன்செண்டிவ்னால் நாம் நம்முடைய இலக்கை எட்ட முடிகிறது. சென்ற

ஆண்டு நம்முடைய இலக்கை எட்ட முடியவில்லை. பம்பாய் மாநிலம் 1½ மடங்கு செய்து இருக்கிறார்கள். இப்போது மகாராஷ்டிரா மாநிலத்திற்கும் நமக்கும் ஒரு போட்டி இருக்கிறது.

திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, நான் அறிய விரும்புவது, வெளி மாநிலங்களில் இருந்து வந்திருக்கும் டாக்டர் இரானி அவர்களுக்குத்தான் இந்த அறுவை சிகிச்சை செய்ய முழு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது, அவர்கள்தான் செய்கிறார்கள், நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் இதைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை என்பதுதான் குற்றச்சாட்டாக இருக்கிறது.

(பிற்பகல் 12-30)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நம்முடைய டாக்டர்களும் அதைச் செய்கிறார்கள். தருமபுரி, செங்கல்பட்டு, ஆகிய இடங்களில் நம்முடைய டீம்கள் இருக்கின்றன. இப்படி பல்வேறு இடங்களில் டீம்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி முகாம் நடக்கிறபோது, இந்த டீம் வந்தால் நல்லது என்று கலெக்டர்கள் எழுதுகிறார்கள். அந்த வகையில் நாம் ஒவ்வொரு டீமையும் அனுப்புகிறோம். இங்கேயிருக்கிற டீம் அங்கே போவதும் உண்டு. அங்கேயிருப்பவர்கள் இங்கே வருவதும் உண்டு. நாம் அந்த மாவட்டத்திற்கு என்று வைத்துள்ள டார்ஜெட்டை ரீச் ஆகவேண்டும் என்று சொல்கிறபோது, கூடுதலாக டீம் வந்தால் நல்லது என்ற நிலைமையில் இப்படி கூடுதலாக அனுப்புகிறோம். 3, 4 டாக்டர்கள் சேர்ந்து ஒரு டீமாகத்தான் இதைச் செய்ய வேண்டும். ஆகவே, இதிலே எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : இன்னொன்றையும் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் துணை மானியக்கோரிக்கையிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகள் மொத்த விற்பனையை அரசே மேற்கொள்வது என்ற முடிவுக்கு வந்துள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். மதுவிலக்குக் கொள்கையில் பரிபூரணமாக அது அமல் நடத்த வேண்டும் என்ற கொள்கையைச் சேர்ந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் நான். ஆனால், நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வெளிநாட்டு மது வகைகளால் மட்டுமல்ல, இங்கே சாராய மொத்த விற்பனை என்பது வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்டதன் மூலமாகக் கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய் இந்த மாநிலத்தை விட்டு வெளியே போய்க்கொண்டிருக்



கிறது. ஏற்கெனவே, லாட்டரிச் சீட்டு மூலமாக வெளி மாநிலங் களுக்குக் கோடிக்கணக்கில் சுமார் 200 கோடி அளவில் வெளியே போய்க்கொண்டு இருக்கிறது. ஆகவே, கிட்டத்தட்ட 1,200 கோடி ரூபாய் நம் மாநிலத்தை விட்டு வெளியே போய்க்கொண் டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளைக் கட்டாயம் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் புதிதாக வரிகளை விதிக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது என்பதையும் நான் நிதியமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அந்தமான் போன்ற தீவுகளில் இன்னும் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக நம்முடைய அண்டை மா நிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா போன்ற மாநிலங் களில் தமிழ் மக்கள் ஏராளமாக வாழ்கிறார்கள். பம்பாயில் ஏராளமாக தமிழர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய குழந் தைகள் தமிழ் படிக்க வேண்டும் என்பதற்காக ஆங்காங்குள்ள தமிழர்களே ஒன்று சேர்ந்து பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து இருக் கிறார்கள். அவற்றை மிகுந்த சிரமத்திற்கிடையே நடத்திக் கொண்டு வருகிறார்கள். அந்தப் பள்ளிகளில் படிக்கிற—தமிழ் படிக்கிற—மாணவர்களுக்கு தமிழ் பாடப் புத்தகங்களை நம்மு டைய அரசாங்கம் இலவசமாக அளிக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.

ஏற்கெனவே, அந்தமானில் உள்ள வங்காள மொழி குழந்தை களுக்கு மேற்கு வங்க அரசாங்கம் வங்காள மொழி பாடப் புத்த கங்களை இலவசமாகக் கொடுக்கிறது. அதே போல் நம்முடைய தமிழ் மொழி படிக்கும் மாணவர்களுக்கும், அந்தமானில், மற்றும் பல்வேறு மாநிலங்களில், அண்டை மாநிலங்களான கருநாடகா, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களிலும், படிக்கும் தமிழ் மாணவர்களுக்கு, தமிழ் பாடப் புத்தகத்தை இலவசமாகக் கொடுக்க அரசு முன் வர வேண்டும். அதற்காக நிதி ஒன்று அதிகமாகச் செலவாகி விடாது. அது மட்டுமல்லாமல் அவர் களுக்கு நம்முடைய பாடத்திட்டங்கள் என்ன என்பது தெரியாமல் இருக்கிறது. இப்படி பாடப்புத்தகங்களைக் கொடுப்பதன் மூலம் அவர்களுக்கு நம்முடைய மாநிலத்தில் உள்ள பாடத்திட்டத்தைப் பற்றித்தெரிந்து கொள்ள முடியும். ஆகவே, அரசாங்கம் இதற் கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

இங்கே நம்முடைய மாநிலத்திலே பேக்வார்ட் கிளாஸ், ஷெட் யூல்ட் காஸ்ட், ஷெட்யூல்ட் டிரைப் என்று இருக்கிறார்கள். அவர்களுக்கு சட்டப்படி இங்கே சலுகைகள் கொடுக்கப்படுகின் றன. ஆனால், அவர்கள் இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்குச் சென்று வாழ்கிறபோது அவர்களுக்கு இத்தகைய சலுகைகள்

வழங்கப்படுவது இல்லை. தமிழ் நாட்டில் இருந்து அவர்கள் அங்கே சென்று பல தலைமுறையாக வாழ்ந்துகொண்டு வருபவர்கள். அவர்கள் தமிழ்நாட்டில் ஆதி திராவிடர்களாக இருந்தாலும் மராட்டிய மாநிலத்தில் அல்லது கருநாடக மாநிலத்தில் அல்லது ஆந்திர மாநிலத்தில் வசிக்கின்ற காரணத்தால், அங்கே அவர்களுக்கு இத்தகைய சலுகைகள் இல்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுக்குச் சொந்த மாநிலமாக உள்ள, தமிழ் நாட்டில் எத்தகைய சலுகைகள் அளிக்கப்படுகிறதோ அத்தகைய சலுகைகளை அங்கேயும் அளிக்க முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் அங்கே கடைப்பிடிக்கின்ற முறைகள் அரசியல் சட்டத்திற்கு முரணானது. மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட முடியாது. ஆகவே, அவர்கள் அனுசரித்து வரும் தவறான அணுகு முறையை அரசியல் சட்டப்படி தவறு என்று சுட்டிக் காட்டி, இந்த மாநிலத்தில் எஸ். டி., எஸ். சி. மற்றும் பி.சி. பட்டியலில் யார் யார் இருக்கிறார்களோ அவர்களை அந்த மாநில பட்டியலில் சேர்த்து அந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு வற்புறுத்த வேண்டும். இந்த அரசு அதற்கு ஆவன செய்யும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே வெள்ள நிவாரணம் அளிப்பதற்கு மீண்டும் அதிகத் தொகை வேண்டுமென்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். ஏற்கெனவே. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருச்சி, தஞ்சை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வெள்ள நிவாரண வேலை என்பது சரிவர நடக்கவில்லை. அதிலும் குறிப்பாக விவசாயிகளுக்குப் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அவர்களின் நிலங்களிலே ஆற்றுநீர் பாய்ந்து மண் அடித்திருக்கிறது. அதை வெட்டி, எடுத்து, அப்புறப்படுத்தினால் ஒழிய மீண்டும் விவசாயம் செய்ய முடியாது. தஞ்சை மாவட்டத்தில் இன்னும் பல பகுதிகளில் அந்த வேலை ஆரம்பிக்கப்படவில்லை.

அதைப்போன்று சாலைகளைச் சீர் செய்தல், பாலங்கள் கட்டுதல் போன்ற வேலைகளும் இன்னும் நடக்கவில்லை. இராணுவத்தினர் கட்டிய பாலங்களைக்கூட குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னால் அவர்கள் பிரித்து எடுத்துச் சென்றுவிட்டார்கள். அங்கே புதிய பாலங்கள் கட்டும் வேலை தொடங்கவில்லை. ஏன் இன்னும் இப்படிப்பட்ட வேலைகள் தொடங்கப்படவில்லை என்று கேட்டால் மேலே இருந்து இன்னும் பணம் வரவில்லை; பணம் வந்தால்தான் வேலை செய்ய முடியும் என்று தல அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகையே சரிவர விநியோகிக்கப்பட்டிருக்கிறதா? சரிவர பயன்படுத்திச் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்திருக்கிறார்களா என்பதை அறியாத நிலையில் மீண்டும் மீண்டும் தொகை கேட்பது சரியல்ல என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.





அதைப்போன்று இங்கே மற்ற நண்பர்கள் எல்லாம் பேசும் போது சொன்னார்கள். குறிப்பாக விவசாயிகளுக்கு டீசல் எண்ணெய் விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நானும் அந்தக் கோரிக்கையை வற்புறுத்துகிறேன்.

இறுதியாக, இந்த அரசின் சார்பிலே இரண்டாண்டுகளுக்கு முன்னால் இந்த மாநில அரசின் ஆஸ்தான கவிஞராக இருந்த கண்ணதாசன் அவர்களுக்கு காரைக்குடியில் மணிமண்டபம் கட்டப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இரண்டாண்டுகள் ஆகியும் இன்னும் அந்த வேலை ஆரம்பிக்கப்படவில்லை, என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, 1983–84ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கிற கோரிகைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக பல்வேறு கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிற கருத்துக்கள் அத்தனைக்கும் சுருங்கச் சொல்லியாவது விளங்க வைக்க முடியுமா என்ற நிலையில்தான் நான் இப்போது பதில் சொல்ல இருக்கிறேன். காலத்தைக் கருதி சுருங்க வேண்டுமென்றாலும் விளங்க வைக்க முடியுமா என்பது ஐயப்பாடாகத்தான் இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் நடைபெற்று முடிந்த பல்வேறு பணிகளையும் நடந்துகொண்டிருக்கிற பல்வேறு பணிகளையும் இனி நடைபெற வேண்டிய பல்வேறு பணிகளையும் பல்வேறு துறைகளிலே சுட்டிக்காட்டி, பொதுப்படையாக மேலெழுந்தவாரியாக இங்கே கூறினார்கள். நானும் அப்படி மேலெழுந்தவாரியாக பொதுப்படையாக முடிந்த அளவுக்கு பதில் அளிக்கலாம் என்றாலும் அதற்கும் காலம் போதாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தக் கருத்துக்களைத் பொறுத்தவரையில், அத்தனைக் கருத்துக்களையும்-அந்தந்தப் துறையைச் சேர்ந்தவர்கள் அந்தந்தத் துறையில் எடுத்துச் சொன்னக் கருத்துக்களைக் குறித்துக்கொண்டு, என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்; அவற்றைப் பெற்று, நேரடியாகப் பார்த்து, இந்த அவைக்குத் தர வேண்டிய விளக்கத்தை உரிய நேரத்தில் உரிய அமைச்சர் மூலமாக அந்தந்த துறையின் அவைக்கு அளிப்பார்கள் என்று பொதுப்படையாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் இங்கே நாம் 1,130 கோடி ரூபாய் என்று போட்டிருந்தாலும் இதில் ஒரு விளக்கத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் துணை மதிப்பீட்டிலே இவ்வளவு பணம் கோரியிருக்கிறோம் என்ற கருத்து சிலருக்கு இருக்கிறது, எல்லோருக்கும் அல்ல. வருவாய்க் கணக்கிலே செலவு என்ற கணக்கின் அடிப்படையில் நாம் 203,60,13,000 ரூபாயும், வருவாய்க் கணக்கில் வராத மூலதனச் செலவு என்ற கணக்கின் அடிப்படையிலே 41,49,68,000 ரூபாயும் கடன்களும் முன் பணங்களும் என்ற வகையில் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற வகையில் 99,35,43,000 ரூபாயும் ஆகக்கூடி 344,45,24,000 ரூபாய்க்குத்தான் இந்தத்துணை மதிப்பீடுகள் என்ற முறையிலே இந்த அவையின் முன்னால் அனுமதி பெறுகிறோம்.

வரவு-செலவுத் திட்டம் என்ற வகையில் வைத்திருக்கிற, முறைப்படி இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் முறைப்படியும், மாநில கணக்காய்வுத்துறைத் தலைவர் கூறுகின்ற வகைப்படியும் நாம் மிகைப்பற்று வாங்குகிற போது நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய கணக்கையும் கொண்டுவந்து அவையினுடைய அனுமதியைப் பெற வேண்டுமென்ற காரணத்தால் தான் நாம் மிகைப்பற்று வாங்கிய கணக்கையும் இதோடு சேர்த்துக் சொல்லியிருக்கிறோம்.

(பிற்பகல் 12-40)

ஆனால், உள்ளபடியே செலவினம் என்று வருகின்ற போது, ரூ. 3,44,45,24,000 வரும். 1983-84 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கி 1984 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் நாள் முடிய நாம் மிகைப் பற்றாக ரூ. 687.24 கோடி விட்டு விட்டு வாங்கியிருக்கிறோம். ஆனால், அப்படி வாங்குகின்றபோது, அவ்வப்பொழுது திருப்பியும் செலுத்துகிறோம். இன்றைக்கு ரூ. 6 கோடி மிகைப்பற்று வாங்கினோம் என்றால், நாளை கையில் பணம் வந்தவுடன் ரூ. 5 கோடி ரூ. 4 கோடி என்று திருப்பிச்செலுத்துகிறோம். நாம் இப்படி வாங்கியது சென்ற ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கி இந்த ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி வரையில் ரூ. 687,24,00,000 திருப்பி செலுத்தியது ரூ. 612.96 கோடி. சென்ற டிசம்பர் திங்கள் வரையில் ரூ. 113 கோடி மிகைப் பற்று என்று வந்தாலும், இந்த மார்ச் 31 ஆம் தேதி வரையில் ஓரளவிற்கு கட்டுப்பாடு செய்து, இந்தியாவினுடைய நிதியமைச்சர், பிரணாப் முகர்ஜி அவர்கள் இருக்கின்ற நிலைமைகளைச் சொல்லி, ரூ. 60 கோடிக்காவது நிற்க வேண்டுமென்று அவர்கள் சொல்லியதற்குப் பிறகும், மேற்கொண்டு 4 மாநிலங்களில் மிகைப்பற்று வாங்கும் நிலையிலே, அந்தந்த மாநிலங்கள், நிதியமைச்சரோடு ஓர் உடன்பாட்டிற்கு வந்ததன் அடிப்படையில் குறிப்பிட்ட தொகை வரையில், மிகைப்பற்று





இருக்கலாம், என்று சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் , மார்ச் 31 ஆம் தேதிக்குள் இப்படி மிகைப் பற்று ரூ. 113 கோடியாக இருப்பதை ரூ. 60 கோடியாக கொண்டுவரமுடியும், அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துச் கொள்ளும் என்ற உறுதியின் பேரில் அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

அப்படி மார்ச் 31 ஆம் தேதிக்குள் ரூ. 60 கோடியாக கொண்டு வந்து நிறுத்துவதில் இந்த அரசு வெற்றிபெறும். அப்படி கொண்டு வந்துவிட்டால், ரூ. 60 கோடி மிச்சத்திலே நிறுத்தலாம். மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் இப்படிப்பட்ட வகைகளுக்கு கடன் உதவி செய்வதற்காக ரூ. 500 கோடியை ஒதுக்கியிருக்கிறது. எனவே, இந்த ரூ. 60 கோடி மிகைப் பற்றை கடனாக மாற்றித்தரும் சூழ்நிலையில் அவர்கள் ஒதுக்கியுள்ள அந்தப் பணத்திலிருந்து தந்தால், பற்றாக் குறையில் ரூ. 60 கோடி குறையும். மிகைப் பற்று என்று இருந்து, உடனே கட்டவேண்டும் என்று இல்லாமல், கடன் என்று அமையுமானால், சில பல ஆண்டுகளில் மத்திய அரசு வசூலிக்கின்ற விதிகளின் அடிப்படையில், அவற்றை வைத்துக் கொள்ளலாம். நான் அடிக்கடி எடுத்துச் சொல்வதைப் போல, இந்த மிகைப்பற்று கூட, சமீப காலம் வரை வாங்க வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு மாநில நிதி நிலைமைகள் சீர்படுத்தப்பட்டு, செம்மைபடுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் எதிர்பாராத வகையில், பல்வேறு செலவுகள் ஏற்பட்டுவிட்டன. கடுமையான வறட்சி சென்ற ஆண்டுக்கு முன் ஆண்டு ஏற்பட்டாலும், அதனுடைய பளு முழுவதையும் தாங்க வேண்டியது இரண்டாவது ஆண்டில் வந்ததாலும் வறட்சிக்குப் பிறகு வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டு, கடுமையான சேதங்கள், உயிர்ச் சேதங்கள், உடமைச் சேதங்கள், பயிர்ச் சேதங்கள் ஆகியவைகள் ஏற்பட்டதாலும், நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வந்ததால், அதிகமாக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. வறட்சியை ஒரு பக்கத்தில் சமாளித்து இருக்கிறோம். வெள்ளப் பாதிப்பை ஒரு பக்கம் சமாளித்து இருக்கிறோம். இந்த ஆண்டு விலைவாசிப் புள்ளி உயர்ந்த காரணத்தினால், 4 தவணைகள் அகவிலைப்படி கொடுக்கப் பட்டது. ஒரு தவணையிலே நாம் அகவிலைப்படியை உயர்த்தினால், இந்த மாநில அரசிற்கு ரூ. 12 கோடி செலவாகும். சென்ற ஆண்டு 4 தவணைகள் உயர்த்த வேண்டியிருந்தது. அதற்காக ரூ. 43 கோடி கூடுதலாக ஆனது.

கிருஷ்ணா ஆற்று தண்ணீரைக் கொண்டுவருவதற்கு எதிர் பாராத வகையில், செலவு செய்ய வேண்டி வந்தது. ரூ. 30 கோடி செலவழிக்க வேண்டியிருந்தது. மற்ற வகைகளைப் பார்க்கும் பொழுது, மத்திய அரசு ரூ. 72 கோடி தான் நமக்கு அனுமதி தந்தார்கள். வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு நாம் நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக் காட்டியதைப் போல்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 27

ரூ. 114 கோடி நாம் செலவழிக்கின்ற வகையிலே மத்தியிலே
நமக்கு மானியமாக தந்தது. ரூ. 16 கோடிதான். மீதி முழு
வதையும் நாம்தான் தாங்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நாம்
அதிகமான விலை கொடுத்து, வாங்கி, குறைந்த விலையில்
கொடுத்த வகையில், அதை ஈடுகட்டுவதற்காக ரூ. 69 கோடி
கொடுக்க வேண்டி வந்தது. இதன் காரணமாக எதிர்பாராத
மிகைப் பற்று இந்த மாநிலத்திற்கு வரவேண்டிய அவசியம்
ஏற்பட்டது என்பதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.
மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கூறுகின்ற
போது, கல்விக்காக இன்னும் கூடுதலாக தொகை ஒதுக்கீடு செய்ய
வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் கல்விக்கு ஒதுக்கீடு
செய்தது போதும் என்று வாதாடவில்லை. ஆனால், இவ்வளவு
தான் முடியும் என்ற காரணத்தால், ஆண்டுக்காண்டு ஓரளவிற்கு,
20 சதவீதத்தில் இருந்து 24 சதவீதம் வரையிலும், மொத்தத்
திலே நாம் ஒதுக்கி இருக்கிறோம். ஆகவே, ஒவ்வொரு ஆண்டும்,
நாம் தொகையை ஒதுக்குகிறபோது, கல்விக்காகத்தான் நாம்
அதிகமாக ஒதுக்குகிறோம். அதனுடைய தேவையை நாம் உணர்
கிறோம். 'இன்வெஸ்ட்மென்ட் ஆன் எஜுகேஷன்' என்று சொல்
கிற அளவிற்கு கல்விக்காக நாம் எவ்வளவு கோடிகள் செல
வழித்தாலும், இந்தத் தலைமுறையிலேதான் இந்த ஆண்டு நாம்
இவ்வளவு கோடிகள் செலவழித்தாலும், அவற்றின் மூலம் இந்த
நாட்டினுடைய மாணவர்களும், மாணவியர்களும், பெறுகின்ற
அறிவுத் திறன், ஆற்றல் திறன், அறிவியல் ஆற்றல் திறன்,
தொழில்நுட்பத் திறன் எல்லாம் சேர்ந்து, இன்னும் ஒரு 10,
15 ஆண்டுகள் கழிந்து இந்த நாட்டுக்கு 5 ஆயிரம் அல்லது
10 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய பணிகளை நிறைவேற்று
கின்ற ஒரு தன்மைக்கு நாம் முதலீடு செய்கிறோம் என்ற அளவிலே
தான், 404 கோடி ரூபாயை இந்த ஆண்டிலே நாம் ஒதுக்கியிருக்
கிறோம். இதற்கு அடுத்தபடியாக சுகாதாரம், மருத்துவத்
திற்கு 236 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆனால் அவர்கள்
சொல்லுகின்ற அந்த உணர்வை நான் ஏற்றுக் கொள்கிறேன்.
என்றாலும், சட்டியிலே எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவு தான்
அகப்பையில் எடுத்துத் தரமுடியும். இருப்பதை பல்வேறு துறை
களுக்கு பகிர்ந்து அளிக்கும்போது, இதற்கு 404 கோடி என்று
வைத்திருக்கிறோம்.

கல்லூரி மாணவர்கள், மாணவியர்களுக்கு விடுதிகள் கட்ட
வேண்டும் என்ற கருத்தையும் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்
னார்கள். அந்த நோக்கத்தின் அடிப்படையிலே ஆண்டுக்காண்டு
நிதி வசதியைப் பொறுத்து, எவ்வளவு தொகை இதற்காக ஒதுக்க
வேண்டுமோ, அவ்வளவுக்கு ஒதுக்கி, இந்தக் கல்லூரிகளுக்கான
மாணவ, மாணவியர்களுக்கும், பள்ளிக்கான மாணவ, மாணவி



1984 மார்ச் 27] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

யர்களுக்கும், ஆதி திராவிட மாணவர்களுக்கும் என்று இல்லாமல்
குற்றப் பரம்பரைப் பட்டியலில் இருக்கின்ற மாணவர்களுக்கும்
சேர்த்துச்செய்கின்ற அளவிலே நாம் பணிகளைத் தொடர்ந்து
செய்துவருகிறோம்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள்.
378 ஊராட்சி ஒன்றியங்களிலே, இந்தத்திட்டத்தை நாம் ஓரள
விற்கு திட்டமிட்டு, வழக்கமாகக் கிடைக்கின்ற நிதி ஆதாரத்தின்
அடிப்படையில் இல்லாமல், அரசு தருகின்ற மானியம் ஒரு
பக்கம் இருந்தாலும், அந்தந்த ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்
கள் திரட்டுகின்ற வரிப் பணம் ஒரு பக்கம் இருந்தாலும், சர்-
சார்ஜ் போன்றவைகள் ஒரு பக்கம் இருந்தாலும், அவைகள்
எல்லாம் இல்லாமல், கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து ஒவ்வொரு
ஒன்றியமும் வளம் பெறவேண்டும், வசதிகள் பெறவேண்டும்,
அடிப்படை வசதிகள் நிறைவேற்றப் பெற வேண்டும் என்பதற்
காக இந்த 378 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நாம் 207 கோடி
ரூபாய், 1980-81, 1981-82, 1982-83 ஆகிய 3 ஆண்டுகளில்
நாம் செலவழித்திருக்கிறோம். 9 குறிக்கோள்களினுடைய அடிப்
படையில், அதிலே முதல் சலுகையாக நாம் குடிநீர் தரவேண்டும்,
இணைப்புச் சாலைகள் போட வேண்டும், சிறு பாலங்கள் கட்ட
வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள்
அவர்கள் தெரிவித்தார்கள். ஆதி திராவிடர்கள் வாழ்கின்ற
சேரிப் பகுதிகளுக்கு, மயானத்திற்குச் செல்வதற்கு ஏற்ற வகை
யில் மயானப் பாதைகள் எல்லாம் அமைக்க வேண்டும் என்று
கோரிக்கையை வைத்துத்தான், 40 லட்சம், 50 லட்சம், 60 லட்
சம், 65 லட்சம் என்று ஊராட்சி ஒன்றியங்களினுடைய தேவைக்கு
ஏற்ப நாம் ஒதுக்கித் தந்திருக்கிறோம். அவர்கள் சொன்ன மாதிரி
பல இடங்களில் அதை நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள்.
ஆனால் சில பல இடங்களில், இந்த மயானச் சாலைகள் நிறை
வேற்றப்படாமல் இருக்கக்கூடும். அதை அடுத்தடுத்து வருகின்ற
போது அந்தப் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது,
பாம்புக்கடி பற்றிப் பேசும்போது, மாண்புமிகு மக்கள் நல்
வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.
பாம்புக் கடிக்கு மருந்து தரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்
படையிலே, ஏராளமான அளவிலே பாம்புக் கடிகள் வருகின்ற
போது, அதை உடனடியாக, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்
ளாகவே அது தீர்க்கப்பட வேண்டும், இல்லாவிட்டால், உயிர்
போகும் என்ற அளவிற்குத்தான் - எல்லா மிருகத்தையும்விட
நாம் பயப்படுவது பாம்புக்குத்தான்; பாம்பு என்றால்
படையும் நடுங்கும் என்ற பழமொழி சொல்வார்கள் - இது செய்
யப்படுகிறது. மற்ற வேறு வகைகளிலே வருகின்ற நோயாக
இருந்தால், ஒரு நாள், அல்லது இரண்டு நாள் கூட வைத்து

சிகிச்சை அளிக்கலாம், ஆனால் இந்தப் பாம்பு கடிக்கு மட்டும் உடனடியாக சிகிச்சை செய்ய வேண்டும் என்ற முறையில், அதன் தன்மை அமைந்திருக்கிற காரணத்தால், நம்முடைய சித்த மருத்துவ முறையில் கூட அதற்கு மருந்துகள் எல்லாம் வைத்திருக்கிறார்கள் - அதற்கு நவீன மருந்துகள் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவேதான் இது பகுதி நேரமாக இருக்கிறதே தவிர, 8 மணி நேர உழைப்பு, 10 மணி நேரம் வேலை செய்ய வேண்டும் என்று அல்ல. ஆகவேதான், அவர்களுக்கு 100 ரூபாய் என்ற அளவிலே இருக்க வேண்டும் என்று நாம் தந்திருக்கிறோம்.

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இப்போது, 1,200 பேர்களை இந்தப் பாம்புக் கடிக்காக மருந்து வழங்கவோ, சிகிச்சை அளிக்கவோ பயிற்சியாளராக நியமிப்பதற்குப் பதிலாக, அவர்களுக்கு 100 ரூபாய் கொடுத்து நியமிப்பதற்கு பதிலாக, நாட்டிலே ஏராளமான பாம்பாட்டிகள் இருக்கிறார்களே, அவர்களை அரசாங்கமே அப்பாயிண்ட் பண்ணிவிடலாமே. ஒருவரைக் கடித்து விட்டால், அதற்குப் பயிற்சி கொடுத்து, மருந்து கொடுப்பதைக் காட்டிலும், நாடு முழுவதும் இருக்கின்ற பாம்புகளைப் பிடிக்கின்ற விதத்திலே அத்தனை பாம்பாட்டிகளையும் அரசாங்கத்தின் சார்பாக நியமித்துவிடலாமே ?

(பிற்பகல் 12.50)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற அந்தப் பணியும் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கிறது. இப்போது அமைச்சர்கள் வாழும் பகுதியிலே எல்லாம் 5 நாளைக்கு, இரண்டிரண்டு யாறு பகுதியிலே. ஆகவே, பாம்பு பிடிப்பதற்கும் ஆட்களை வைத்து பிடித்துக் கொண்டு இருக்கிறோம். மற்றொரு பக்கப் பாம்புகளைப் பிடித்து, ஏராளமான அளவுக்கு அதன் தோலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏராளமான அளவுக்கு தங்களுக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறது, பொருள் கிடைக்கிறது என்பதற்காக பாம்புகளை ஏராளமாகக் கொன்று பல லட்சக்கணக்கான ரூபாய்க்கு, கோடிக் கணக்கான ரூபாய்க்கு தோல்களை ஏற்றுமதி செய்தவர்களையெல்லாம், அண்மையிலே மத்திய அரசு பிடித்து, அவைகளைக் கைப்பற்றினார்கள். இப்போது தடை விதிக்கப்பட்டிருக்கிறது பாம்புத் தோலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடாது என்று.





ஏனென்றால், பாம்புகளைக் கொன்று விடுகிற அளவுக்கு பல்வேறு முயற்சிகளையெல்லாம் செய்கிறார்கள் என்று, அந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற கருத்தும் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்போது குடும்பக் கட்டுப்பாடு நிலைமையையும் வைத்திருக்கிறோம். குழந்தைகளைப் பெற வேண்டாம் என்று. பக்கத்திலே மகப்பேறு இல்லமும் வைத்திருக்கிறோம். ஏனென்றால், பெற்றுவிட்டால் என்ன செய்வது என்பதற்காக. பெற்றுவிட்ட மகப்பேறுகளை காப்பாற்றுவதற்காக மகப்பேறு இல்லங்களையும் வைத்திருக்கிறோம். ஆகவே, பாம்பு பிடிப்பதற்கும் ஓரளவிற்கு ஏற்பாடு செய்யலாம். பாம்பு கடியிலிருந்து காப்பாற்றுவதைப் பொறுத்த வரையிலும் இந்த ஏற்பாடுகள் செய்யலாம். அதற்காக, வேறு சிறந்த மாற்று ஏற்பாடுகள் ஏதாவது இருந்தால், யாராவது மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வார்களேயானால்....

**திரு. எல். இளையபெருமாள்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவையின் மூலமாக பாம்பு பிடிப்பதை இப்படி ஊக்கப்படுத்திவிட்டால்—விவசாயிகளுக்கு எலிகளினாலே தொல்லைகள் நிறைய இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரியும்—அந்த விவசாயிகள் நிலைமை என்ன ஆவது என்பதை அரசு ஏதாவது ஆராய்ந்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் சொல்வது போன்று ஒரு கருத்தும் உண்டு. ஆனால் இன்று இந்த பாம்பு சம்பந்தப்பட்ட வல்லுநர்கள் கூறுவது, எந்த வகை பாம்பு கடித்தாலும் விஷம் ஏறி செத்து விடுவோம் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் விஷம் ஏறி சாகக்கூடிய அளவுக்கு விஷம் இருக்கிற பாம்புகளின் எண்ணிக்கையே 25 சதவீதத்திற்குள்தான் இருக்கிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, வயலில் எலி பிடிக்கிற அந்தபாம்புகள் எல்லாம் விஷம் ஏறுகிற பாம்பு அல்ல. அது கடித்தாலும் விஷம் ஏறாது. அந்த வகையிலே அந்தப் பாம்புகளை பிடிப்பதும் இல்லை....

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சிலே முன்னாலேயே நான் சொன்னேன். 1,200 பேர்களை நியமிக்கலாம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று. அதில் எவ்வளவு பேர்களை இதில் நியமித்திருக்கிறீர்கள். எந்த அடிப்படையில் ? ஏதாவது கிராமம், கிராமம் ஆக போடுவது என்ற அடிப்படையிலா ? ஊர் ஊராக போடப்படுகிறதா ? அல்லது நகராட்சி அடிப்படையிலா என்று

தெரிய வேண்டும். இது ஒன்று. இரண்டாவது, ஒரு புள்ளி விவரத்தை நான் கேட்டேன். மொத்தம் எவ்வளவு பாம்புகள் இருக்கின்றன? அது எவ்வளவு பேரை கடிக்கும் என்று எதிர் பார்க்கிறீர்கள்? இதற்கு புள்ளி விவரம் என்ன? இதற்கு சிகிச்சை செய்ய 1,200 பேர்கள் போதுமா என்று விவரம் கேட்டேன்...

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சில பல விவரங்கள் பெற விரும்புகிறார்கள். அந்த விவரங்கள் பெற விரும்பியதை தவறு என்று நான் சொல்லவில்லை. அந்தத் துறையினுடைய அமைச்சர் வாய்ப்பு ஏற்படுகிறபோது சொல்வார்கள். உள்ளபடியே ஒட்டு மொத்தமாக ஊர் கணக்கு வைத்து, அனுபவத்தின் அடிப்படையிலே சில பல திருத்தங்களை திருத்திக் கொள்ள வேண்டிய நிலை வந்தாலும் வரலாம். ஆனால், எந்த அடிப்படையிலே எப்படி வந்தது எவ்வளவு பேர்கள் பாம்புக் கடியிலே இறக்கிறார்கள் என்ற ஸ்டேட்ஸ்டிக்ஸ் வேண்டும் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) ஒரு மணிக்குள் நான் முடித்தாக வேண்டும். இப்படிக் குறுக்கிட்டுக்கொண்டேயிருந்தால், பாம்புக் கடியோடேயே முடிந்து விடும். மற்றைய சங்கதிகளை சொல்ல முடியாது. ஆகவே, அது பற்றிய விவரங்களை வாய்ப்பு ஏற்படும்போது மக்கள் நல்வாழ்வுத்துறை ..........

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா பாம்புக்கும் ஒரே வகையான மருந்து அவர்களிடம் தரப்பட்டிருக்கிறதா? ஒவ்வொரு பாம்புக்கும் ஒவ்வொரு விதமான விஷத்தன்மை உண்டு. அதற்கேற்றாற்போல் பல்வேறு மருந்துகள் தரப்பட்டிருக்கின்றதா? அத்தோடு அவர்கள் அந்த ஊரில் இருக்கிறார்கள் என்பது மக்களுக்கு எப்படி தெரியும்? அவர்களுடைய ஹெட்குவார்ட்டர்ஸ் ஏதாவது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா? அவர்களுக்கு ஏதாவது பயிற்சிகள் கொடுக்கப்பட்டிருக்கிறதா? மருத்துவப் துறையிலே பெரிய பட்டப்படிப்பு படித்தவர்களே கூட, இந்தச் சிகிச்சையிலே நிதானமாகக் காரியம் ஆற்றுகிற நேரத்திலே, அதுவும் தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ்களிலே ஹாஸ்பிடல்களிலே தேவையான மருந்துகள் இருந்தும் கூட, அவர்களாலே கூட சில சமயங்களில் காப்பாற்ற முடியாமல் போய் விடுகிறது. அப்படி இருக்க, எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களை, அல்லது பி.ஏ. படித்தவர்களை, மெடிக்கல் லைனிலே எந்தவிதமான அனுபவமும் இல்லாதவர்களை இதிலே, போட்டால், அவர்கள் எப்படி மெடிக்கல் நாலெட்ஜ் இல்லாமல், யாருக்கு எந்த மருந்தைக் கொடுப்பார்கள். பாம்புகளுடைய வகைகளைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? எந்தப் பாம்பு கடித்தால் இவ்வளவு நேரத்தில் இவ்வாறு விஷம் ஏறும் என்பது





அவர்களுக்கு எப்படித் தெரியும்? இது எல்லாம் பெரிய விஷயம். அவர்களுக்கு இதில் எல்லாம் எப்படி நீங்கள் பயிற்சிக் கொடுக்கிறீர்கள்.?....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட ஐயப்பாடுகள் ஏற்படுவது தவறு என்று நான் சொல்லவில்லை. இப்படி முழு விவரத்தையும், அதனுடைய நோக்கம் என்ன? எந்த அடிப்படையில் போடப்படுவது? எந்த வகையிலே இது நிறைவேறும் என்று கருதப்படுகிறது, இதனால் ஏற்படும் சிறப்பு என்ன என்பதையெல்லாம் வாய்ப்பு ஏற்படும் போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விரிவாகவும், விளக்கமாகவும் சொல்வார்கள். அதற்கு பிறகும் உங்களுக்கு ஐயப்பாடு இருக்குமானால் அப்போது அதையும் கேட்டு கொள்ளலாம். இப்பொழுது அதனுடைய முழு விவரத்தையும் எடுத்துச் சொல்வதற்கு நேரமும் இல்லை. அதை தெரிவிப்பதற்குரிய விவரக் குறிப்புகளும் என்னிடத்தில் இல்லை.

டெபுட்டி மினிஸ்டர்ஸ் உண்டா, அவர்களுக்கு சம்பளம் தரப்படுகிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். இங்கே டெபுட்டி மினிஸ்ட்டர்ஸ் இல்லை. ஆனால் எப்பொழுதும் தொடர்ந்து பட்ஜெட் போடும் போது Council of Ministers and Deputy Ministers என்று ஒரு தலைப்பு இருந்துக் கொண்டேயிருக்கும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும், அமைச்சர்கள் இருக்கிறார்கள், துணை அமைச்சர்கள் இல்லை. ஆகவே, அமைச்சர்களுக்கு மட்டும் தான் சம்பளம். ஆனால் எப்பொழுதும் இப்படியேதான் போடப்படும். நீங்கள் தொடர்ந்து 25 வருட பட்ஜெட் விவரங்களைப் பார்த்தால் Council of Ministers and Deputy Ministers என்று தான் வரும். டெபுட்டி மினிஸ்டர் போடுகிற நேரத்திலே அந்த டெபுட்டி மினிஸ்டர் சம்பளம் சேரும். இல்லாவிட்டால் அந்தத்தலைப்பு மட்டும் அப்படியே இருக்கும். இப்போது அப்படி யாரும் இல்லை. அவர்களுக்கு கொடுக்கிற கணக்கு இதில் சேராது. அமைச்சர்களுக்கு மட்டும் தான் வருகிறது என்பதை கூற விரும்புகிறேன்.

அடுத்து, செயற்கை மழை அமெரிக்க வல்லுநர்கள் வந்து விட்டு போனது அதனுடைய குறிப்புகளை எல்லாம் முன்பு மாண்புமிகு திரு. இராகவானந்தம் அவர்கள் ஏற்கெனவே ஒரு முறை எடுத்து விளக்கி இருக்கிறார்கள். மீண்டும் வாய்ப்பு ஏற்படுகிறபோது அவர்கள் அதனால் ஏற்பட்ட செலவு, அதனால் ஏற்பட்ட பலன்கள் மற்றவைகளை எல்லாம் விளக்குகிறபோது மேலும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பல்வேறு விளக்கங்கள் கிடைக்கும் என்று கருதுகிறேன்.

சத்துணவுத் திட்டம் நிதி திரட்டுதல், நன்கொடை வசூல்
ஆகியவற்றை பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நாட்
டுக்கு சில பொது நன்மை என்று எல்லோரும் ஏற்றுக் கொண்டு
இன்றைக்கு அரசு கூடுமானவரையில் ஓரளவுக்கு செய்து கொண்டு
வந்தாலும் பொது மக்களுடைய ஈடுபாடும் அதில் இருக்கிறது
என்ற உணர்வை ஏற்படுத்துவது நல்லது. அது மட்டும்
அல்லாமல் இந்த நன்கொடை வசூல் ஆங்காங்கே சமையல் கூடங்
கள் மற்றவைகள் கட்டுவது மூலமாக இந்த மதிய சத்துணவு
திட்டத்திற்கு முழு செலவையும் நாம் ஏற்றுக் கொண்டு விடு
கிறோம். இன்று அந்தத் திட்டத்திற்கு செலவழிப்பது
154, 155 அல்லது 160 கோடிக்கு இருக்கிறது என்றாலும் இதன்
மூலமாக எவ்வளவு தான் நன்கொடை வழங்கினார்கள் என்றால்
2 கோடி அல்லது 3 கோடி அளவுக்கு தான் வரும். அந்த முழு
கணக்கையும் நான் பின்னால் தருகிறேன். நன்கொடை
வசூலிக்கின்ற அத்தகைய முறைகளில் நல்ல நோக்கத்
தினுடைய அடிப்படையில் செய்யப்படுகிறது. அது எப்
போதுமே எல்லா ஆட்சியிலும் காங்கிரஸ் ஆட்சியின் போதும்
சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும் சரி, இப்
போதும் சரி, இந்த முறைகளைச் செய்கிறோம். முதல் உலக
தமிழ் மாநாடு நடந்த போது கூட பேரறிஞர் அண்ணா அவர்கள்
அப்போது முதலமைச்சராக இருக்கும் போது பல்வேறு மாவட்டங்
களில் நட்சத்திரக் காட்சிகள் வைத்து தான் நாம் நிதி திரட்டி
னோம். திருச்சியில் மட்டும் அப்போது 29 லட்சம் ரூபாய்
திரட்டப்பட்டதற்கு பல்வேறு விதமா பல பேர் கேள்விகள்
கேட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்
சில பல குறைபாடுகள் ஆங்காங்கே இருக்கக் கூடும். ஒரு
சமயத்திலே பல லட்சக்கணக்கான மனுக்கள் எதிர்பார்க்கிற
போது சில பலதுகள் இருக்கக்கூடும். அதனுடைய ஒட்டு மொத்த
மான நன்மைகளை நாம் கவனிக்க வேண்டும். அந்தக்குறைபாடு
களை சுட்டிக்காட்டுகின்றபோது தெரிவிக்கப்படும் என்று எடுத்துச்
சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக
டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது
கூட போர் வந்த போது நம்முடைய மாநிலம் இந்தியாவில் இருக்
கின்ற மற்ற மாநிலங்களை விட அதிகமாக நிதி திரட்ட வேண்
டும் என்ற முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வெற்றிப் பெற்
றோம். 6 கோடி ரூபாய் நிதி வசூலித்துத் தந்தோம்.
6 கோடி ரூபாய் நிதி வசூலிக்கும் போது அதிகாரிகள் மற்றும்
எல்லோருடைய ஒத்துழைப்பின் பேரில் தான் திரட்டப்பட்டதே
தவிர, அதிகாரிகள் இல்லாமல் திரட்டப்படுகின்ற நிலை இல்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, நம்முடைய நாவலர் அவர்கள் சொல்கின்ற வாதத்
திலே ஒரு சந்தேகம், ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது படை
எடுக்கும் கட்டங்களில் அரசு நிதி திரட்டுவது தப்பு அல்ல.
இது அசாதாரண சூழ்நிலைகள். சில முக்கியமான பிரச்சினை



களுக்கு செய்வது சரி, ஆனால் இது நிரந்தரமான திட்டம்,
சத்துணவு போடுவது என்பது நிரந்தரமான திட்டம். ஆந்திராவில்
இருக்கக்கூடிய முதலமைச்சர் திரு. என். டி. ஆர். அவர்கள்
அதை பிளானில் போட்டு அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசிட
மிருந்து பணம் வாங்கிக் கொள்கிறார்கள். நீங்கள் ஏன் நிரந்தர
மாக பிளானில் கொண்டு வந்து பணம் வாங்கக் கூடாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
துணைத்தலைவர் அவர்களே, நோக்கம் என்று வருகின்ற போது
இப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறிய முறையிலே தவறு
நோக்கத்திலே அல்ல. அது வெளிநாட்டு படை எடுப்பாக
இருந்தாலும் சரி, உள் நாட்டு படை எடுப்பாக இருந்தாலும்
சரி அல்லது சத்துணவுத் திட்டமாக இருந்தாலும் நோக்கம்
நல்ல நோக்கம். வசூலிக்கின்ற முறையில் கட்டுப்பாடு இருந்தது
வேறு பல நிலைமைகள் இருந்தது என்று வேறு பல நிலைமை
கள் வருகிற போது தான் அது 6 கோடி வசூலிக்கும் போதும்
அந்த நிலை தான் வரும். 1 கோடி ரூபாய் வசூல் செய்யும்
போதும் அந்த நிலை தான் வரும். அல்லது 5, 10 லட்சம்
வசூலித்தாலும், யார் நட்சத்திர இரவு போட்டாலும் அந்த
நிலைகள் தான் வரும். அதைப்பற்றி நான் சொல்ல வரவில்லை.
ஆக பிளானில் நாம் கொண்டு வராததற்கு அப்போதே காரணம்
சொன்னேன். ஆக தனியாக வைத்து இது ஒரு தனி திட்டம்,
நாட்டுக்கு தேவையான ஒன்று, இதை பிளானில் சேர்க்காமல்
தனியாக ஒதுக்கித் தர வேண்டும் என்று வாதாடி பார்த்தோம்,
எடுத்துச் சொல்லிப் பார்த்தோம். தமிழகத்தினுடைய பாராளு
மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிப் பார்த்தார்கள். இது
பற்றி பரிசீலிக்கிறேன் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். இந்தியாவினுடைய பிரதமர் அவர்கள் கூட
இதை கருணை உள்ளத்தோடு பார்க்கிறேன் என்று சொன்னார்
கள். கடைசியில் திட்டக் குழு இதற்கு தனியாக ஒதுக்குவதற்கு
இல்லை என்று சொன்னார்கள். அப்படியே திட்டக் குழுவிலே
சேர்த்தால் கூட நாம் திட்டக் குழுவிலே எவ்வளவுக்கு எவ்வளவு
சேர்க்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு வேறு பல திட்டங்
களின் அளவு நமக்குக் குறையும்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆந்திராவில் சேர்த்து இருக்கி
றார்களே !

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆந்திர மாநிலம் அவர்
கள் போக்கில் போகிறார்கள். நாம் நம் போக்கில் போகிறோம்.
ஆக கடைசியிலே நம் போக்கு தான் சரியான போக்கு என்று
நாடு நகரங்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை
இருக்கிறது. ஆகவே நம்முடைய போக்குக்கு தான் நாம் பதில்
சொல்ல முடியுமே தவிர மாண்புமிகு திரு. என்.டி.ஆர். சார்பாக

நான் பதில் சொல்ல முடியாது. (குறுக்கீடு) நாம் தான் முதலில் கொண்டு வந்தோம். உள்ளபடியே பிளானில் சேர்க்காமல் தனியாக கொடுக்கிற ஒரு மனப்பான்மையில் கொடுத்து இருந் தால் நமக்கு இலாபம் தான். இப்பொது பிளானில் 40 கோடியை நான் சேர்த்தால் வேறு வகையில் இருக்கிறதை எடுப் பார்கள். அவர்கள் மொத்தத்தில் பிளானில் கொடுக்கும்போது 3,150 கோடிக்கு பிளானில் ஒதுக்குகிறார்கள் என்றால் நமக்கு மொத்தத்தில் அவர்கள் கொடுப்பது 600 கோடி தான். அதற்கு மேல் தரவே மாட்டார்கள். ஆகவே அவர்கள் வேறு பல வகை யிலே குறைக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே தான் இதற்கு கூடுதலாக தர வேண்டும் என்று கேட்டோம் என்பதை எடுத்துச் சொல்லி, மற்ற பல விளக்கங்களை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் தெரிவித்து இருந்தாலும் அவ்வப்போது அதற்கான தன்மைகள் வாய்ப்பு ஏற்படும் போது அளிக்கப்படும் என்று கூறி இந்த மானிய கோரிக்கையை ஏற்க வேண்டும் என்று இந்த பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரை யும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது பிற் பகல் 1 மணி. எனவே பேரவை விதி 204 உள் விதி 3-ன் படி விவாதம் முடிவுறுகிறது. வாக்கெடுப்பு.

பேரவை முன்னுள்ள கேள்வி—

''1983-84 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23-3-1984 நாளிட்ட அறிவிப்பில் 2 ஆவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும், அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை அந்தந்த இனங்களுக்கு 1983-84 ஆம் ஆண்டு கூடுதல் செலவுகளுக்காக அரசுக்கு வழங் கப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்ற 1983-84 ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

ஏ. வருவாய்க் கணக்கில் செலவு.

| கோரிக்கை— | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| 1 நில வரித் துறை .. .. .. | 5,54,54 |
| 2 மாநில ஆயத் தீர்வைத் துறை .. .. | 3,07,34 |



கோரிக்கைகள்—தொடர்ச்சி

| | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| 4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 1,26,54 |
| 5 முத்திரைத் தாள்கள் நிர்வாகம் .. | 12,78 |
| 7 மாநில சட்ட மன்றம் .. .. | 614 |
| 8 தேர்தல்கள் .. .. .. .. | 1,92,73 |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள். | 3,07,36 |
| 10 பால் வழங்கு திட்டங்கள் .. .. | 3,42 |
| 12 தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம். | 1,68 |
| 13 நீதி நிர்வாகம் .. .. .. | 42,22 |
| 14 சிறைச் சாலைகள் .. .. .. | 1 |
| 15 காவல் துறை .. .. .. .. | 7 |
| 16 தீயணைப்புப் பணிகள் .. .. | 38,01 |
| 17 கல்வி .. .. .. .. .. | 38,69,50 |
| 18 மருத்துவம் .. .. .. | 4,90,62 |
| 19 பொதுச் சுகாதாரம் .. .. .. | 11 |
| 20 வேளாண்மை .. .. .. | 15,61,30 |
| 21 மீனளம் .. .. .. .. | 1 |
| 22 கால்நடை வளர்ப்பு .. .. .. | 3 |
| 23 கூட்டுறவு .. .. .. .. | 39,15 |
| 24 தொழில்கள் .. .. .. | 4.41,99 |
| 25 சின்கோனா .. .. .. | 2,49 |
| 26 கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. | 14,07,79 |
| 27 கதர்த் தொழில் .. .. .. | 83 |
| 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 21,51,78 |

கோரிக்கைகள்—தொடர்ச்சி.

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | 64,71 |
| 30 | சமூக நலன் .. .. .. .. | 2 |
| 31 | பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 2,65,38 |
| 33 | வீட்டு வசதி .. .. | 1 |
| 35 | நுகர்பொருள் வழங்கல்.. .. .. | 22,14,13 |
| 36 | பாசனம் .. .. .. .. | 2,52,12 |
| 37 | பொதுப் பணிகள் கட்டிடங்கள் .. | 5,81 |
| 38 | பொதுப் பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும். | 98,25 |
| 39 | சாலைகளும் பாலங்களும் .. .. | 15,59,31 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 22,34 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 22,09,30 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும். | 15,85,99 |
| 43 | பல்வகை .. .. .. .. | 1 |
| 45 | காட்டுவளத் துறை .. .. | 2,21,84 |
| 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. .. | 2,31,93 |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 16,50 |
| 48 | ஊரகத் தொழில்கள் .. .. | 54,04 |
| | மொத்தம் ஏ. வருவாய்க் கணக்கு .. | 2,03,60,13 |



பி. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு.

| | | |
|---|---|---|
| 49 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 20,72 |
| 50 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 10,18,41 |
| 51 | பாசனம் குறித்த மூலதனச் செலவு .. | 4 |
| 52 | பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 9 |
| 54 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 9,09,34 |
| 55 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 1,63,88 |
| 56 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 85,94 |
| 57 | பல்வகை மூலதனச் செலவு .. .. | 19,51,26 |
| | மொத்தம்—பி. மூலதனக் கணக்கு .. | 41,49,68 |

சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் கோரிக்கை 58

| | |
|---|---|
| மாநில அரசு வழங்கும் கடன்களும். முன்பணங்களும் | 99,35,43 |
| பெரு மொத்தம் .. | 3,44,45,24 |

6. றிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ.) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1984 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு :

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க சட்ட முன் வடிவு 1984

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 28-3-1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

எதுவுமில்லை.

---

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008.
136245
D
V211,31 N84
N84.63-3 f4:1

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appai Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.